மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைபோன்ற ஒரு கோரிக்கை வந்தபோதுதான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு அது சென்றது. அதைப்பற்றி எங்கள் துறையினுடைய ஆய்விலே அதனைக் குறிப்பிட்டு அவர்கள் சொன்னார்கள். இதுபோல எங்கெங்கு இருக்கிறதோ அதையெல்லாம் உடனடியாகக் கட்டித் தருவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும். காரணம், அவை இடிகின்ற தருவாயில் இருக்கின்ற காரணத்தால் உயிருக்கு ஆபத்து எதுவும் வந்துவிடக் கூடாது என்று சொன்னார்கள். அந்த அடிப்படையிலேதான் ஏறத்தாழ 10 இடங்களிலிருந்து வந்த கோரிக்கைகளை வைத்து அவையெல்லாம் ஆய்வு செய்யப்பட்டிருக்கின்றன. இப்போது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்வது 11-வது இடம். எனவே, அதையும் சேர்த்து ஆய்வு செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கின்றோம். ஆனால், அதிலே நிறைய சிக்கல்களும் இருக்கின்றன. காரணம், அங்கே குடியிருப்பவர்கள், குறைந்தபட்சம் two third majority, அதற்கு ஒப்புதலைத் தர வேண்டியிருக்கிறது. அந்தச் சட்டத்தைக்கூட இப்போதுதான் நாம் கொண்டு வந்திருக்கிறோம். அதற்காக இப்போது விதிமுறைகள் உருவாக்கப்படுகின்றன. நீண்ட நாட்களாக இந்தக் கோரிக்கை செய்யப்படாமல் இருந்தது. நம்முடைய அரசு வந்த பின்னால்தான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன பின்பு அதற்கான தனிச் சட்டம் இயற்றி, இப்போது ஏறத்தாழ 5 இடங்களிலே அந்தப் பணிகளைத் துவக்குகின்ற தருவாய்க்கு நாங்கள் வந்திருக்கிறோம். எனவே, அதையும் விரைவாகச் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் நா. எழிலன் அவர்கள்.

2023 ஏப்ரல் 12]

டாக்டர் நா. எழிலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரம் விளக்கு தொகுதியில் அமைந்துள்ள இந்தக் குடியிருப்புப் பகுதியின் மக்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து, சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் அவர்களிடம் பேசி, அனைவரிடமும் ஒப்புதல் பெற்று, இந்தத் திட்டத்தை முழு வீச்சில் நடைமுறைப்படுத்துவதற்காக நான் முனைப்புக் காட்டுவேன் என்று உறுதியளிக்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 150, மாண்புமிகு உறுப்பினர் திரு. A. நல்லதம்பி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

150—

தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம்

***15277—திரு. A. நல்லதம்பி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு முழுவதும் செயல்பட்டு வரும் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்குக் கணினிப் பயிற்சி பெற்ற பணியாளரை நியமனம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கூட்டுறவுத் துறையின்கீழ் தமிழ்நாடு முழுவதும் செயல்பட்டுவரும் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு கணினிப் பயிற்சி பெற்ற ஒரு பணியாளரை தனியே நியமனம் செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A. நல்லதம்பி அவர்கள்.*

திரு. A. நல்லதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். தமிழ்நாட்டில் கணினி புரட்சிக்கு வித்திட்டவர்*

[*2023 ஏப்ரல் 12*

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் கைவிடப்பட்ட நிலையில், கிராமப்புறங்களில் வசிக்கும் விவசாயிகள், ஏழையெளிய மக்களுக்கு சேவையாற்றி வருவது தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளே ஆகும். இந்தச் சங்கங்கள் வாடிக்கையாளர்களின் சேவைகளைத் துரிதப்படுத்தவும், அரசின் நலத் திட்டங்களைக் கொண்டு செல்லவும், சங்கத்தின் நிதிநிலைகளை உடனுக்குடன் அறிந்து கொள்ளவும், பிற வங்கிகள், பிற நிதி நிறுவனங்களுடன் போட்டி போட்டு சங்கங்கள் வளர்ச்சியடையவும் கணினிமயமாக்கல், மின்னணு பரிவர்த்தனை மிகவும் அவசியமாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப்போல கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களுக்குக் கணினிப் பயிற்சி அளிக்கப்பட்டாலும், கணினி பற்றிய அடிப்படை கல்வி பயிலாத, கல்வித் தகுதி குறைவாக உள்ளதால் இப்பணியினை முழுமையாக அவர்கள் செய்ய இயலவில்லை. அதனால், இன்றுவரை தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்கள் முழுமையாகக் கணினிமயமாக்கப்படாமல் காகித நோட்டுகளில், தங்களது பணப் பரிவர்த்தனைகளைப் புரிந்து வருகின்றன. ஆகவே, கூட்டுறவுச் சங்கங்களில் கணினி அறிவியல் பட்டம் பெற்றவர்களைப் பணி நியமனம் செய்ய வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை வலியுறுத்தி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களில் கணினிப் பயிற்சி பெற்றவர்களை நியமிக்க வேண்டுமென்று நல்ல எண்ணத்தோடு சொல்லியிருக்கிறார். ஆனால், 2001 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தின் ஒரு தீர்ப்பின் அடிப்படையில் இப்போது பணிகளுக்கு வரன்முறை செய்யப்பட்டு, கணினிப் பயிற்சியில் பட்டயப் படிப்பு பெற்றவர்களாகத்தான் தேர்வு செய்கிறோம். குறிப்பாக, ஏவலர் பணியிடம் மற்றும் காவலர் பணியிடம் இவை தவிர்த்து மற்ற அனைத்துப் பணிகளிலும் நியமிக்கப்படுபவர்கள் அந்தக் கணினிப் பயிற்சி பெற்றவர்களாகவே இருக்கிறார்கள். ஆகவே, தனியாக அதற்கு ஒருவரை நியமிக்க வேண்டுமென்ற அவசியம் எழவில்லை.*

2023 ஏப்ரல் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A. நல்லதம்பி அவர்கள்.*

திரு. A. நல்லதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி பெரும்பான்மையாக மலை கிராமங்களை உள்ளடக்கிய பகுதியாகும். இப்பகுதியில் ஏழையெளிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் வேலைவாய்ப்பினைப் பெறும் வகையில், கூட்டுறவு மேலாண்மை பட்டயப் பயிற்சி நிலையத்தில் சேர்ந்து படித்திட சுமார் 100 கிலோ மீட்டர் தூரமுள்ள காட்பாடி பகுதிக்குச் செல்லவேண்டியிருப்பதால், திருப்பத்தூர் மாவட்டத்தைத் தலைமையிடமாகக் கொண்டு கூட்டுறவு மேலாண்மை பட்டயப் பயிற்சி நிலையம் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைக் கேட்டு அமர்கிறேன்.*

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையினுடைய நோக்கமே கிராமப் பகுதி மக்கள் அதிலும் குறிப்பாக விவசாயப் பெருங்குடி மக்கள், மலைவாழ் மக்கள் இவர்களுடைய பொருளாதார மேம்பாட்டுக்காக இயங்குகின்ற துறை. ஆகவே, அந்தத் துறையில், அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மக்கள் பணியாற்றுவதற்கான வாய்ப்பையும் உருவாக்குவதற்கு கூட்டுறவு மேலாண்மைப் பட்டயப் படிப்புகள் படிப்பதற்கான ஒரு பயிற்சி நிலையம் துவங்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டுகூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, இராமநாதபுரம் மாவட்டத்தில் அதேபோன்ற ஒரு பயிற்சி நிலையம் தொடங்கப்பட்டிருக்கிறது. தேவையேற்படின் ஆய்வு செய்து, எதிர்காலத்தில் நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

1. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஆ) பேரவையின் மாலை கூட்ட நேரத்தில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஏற்கெனவே முடிவு எடுக்கப்பட்டு பேரவையில் அறிவிக்கப்பட்டவாறு, இன்றைய நிகழ்ச்சிநிரலில் பேரவை இன்று மாலை 5-00 மணிக்குக் கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துகளை ஏற்று, இன்றும், நாளையும் பேரவை மாலையில் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டதற்குப் பதிலாக மாலை 4-00 மணிக்குக் கூடும் என்பதை பேரவையின் அனுமதியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

3. தகவல் கோரல்

(அ) கடலூர் மாவட்டம், விருத்தாசலம், புதுப்பேட்டை பள்ளிச் சிறுமி பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.*

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் நகரத்திலுள்ள Vaithialinga Nursery And Primary School*-ல் ஒன்றாம் வகுப்பு படிக்கின்ற 5 வயது பெண் குழந்தை வயிற்று வலியால் துடித்ததைத் தொடர்ந்து, அக்குழந்தையின் பெற்றோர் விருத்தாசலத்திலுள்ள தனியார் மருத்துவரிடம் காண்பித்துள்ளனர். அப்போது குழந்தையைப் பரிசோதித்த மருத்துவர், குழந்தையை பாலியல் துன்புறுத்தல் செய்துள்ளார்கள் என்பதால், அக்குழந்தையை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வலியுறுத்தியுள்ளார். அதைத் தொடர்ந்து அக்குழந்தை விருத்தாசலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளது. அங்கு குழந்தையைப் பரிசோதித்த அரசு மருத்துவர் குழந்தையின் நிலை குறித்து விருத்தாசலம் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்குத் தகவல் தெரிவித்துள்ளார். அதைத் தொடர்ந்து அக்குழந்தையை*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 12] [திரு. எடப்பாடி K. பழனிசாமி]

விசாரித்த காவல் துறையினரிடம், அக்குழந்தை பள்ளியின் உரிமையாளரும், விருத்தாசலம் நகராட்சி, 30 ஆவது வார்டு தி.மு.க. நகர மன்ற உறுப்பினரின் புகைப்படத்தையும் அடையாளம் காட்டியுள்ளதாகவும், அதைத் தொடர்ந்து காவல் துறையினர் அவரை மேல் விசாரணைக்காக நேற்று, 11–4–2023 இரவு 8–00 மணியளவில் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றுள்ளனர். குற்றவாளி என்று அடையாளம் காட்டப்பட்டவர் ஓர் அரசியல் இயக்கத்தைச் சார்ந்தவர் என்பதால், கொடுங்குற்றம்புரிந்த அவரை நேற்று இரவு காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று இதுவரை அவரை கைது செய்யாதது பெரும் சந்தேகத்தை எழுப்பியுள்ளது. பாதிக்கப்பட்ட 5 வயது குழந்தை இன்னும் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறது. இச்செய்தி அனைத்து ஊடகங்களிலும் வெளிவந்துள்ளது. இதனால் கடலூர் மற்றும் விருத்தாசலம் பகுதி மக்களிடத்தில் பெரும் கொந்தளிப்பும், பதற்றமும் நிலவுகிறது. பாதிக்கப்பட்ட குழந்தை பலமுறை இந்தப் பள்ளியினுடைய உரிமையாளரால் பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்ற செய்தி தற்போது கிடைத்துள்ளது. பள்ளியில் படிக்கும் பெண் குழந்தைகளுக்குப் பாதுகாப்பு இல்லாத ஒரு சூழ்நிலை நிலவுவது மிகுந்த வேதனையை அளிக்கிறது. கொடுங்குற்றம்புரிந்தவர்மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. R. ராதாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருத்தாசலம் தொகுதியைச் சார்ந்த ஓய்வுபெற்ற தலைமையாசிரியர் அந்தப் பள்ளியை நடத்திக் கொண்டிருக்கிறார். அந்தப் பள்ளியில் படிக்கின்ற 5 வயது சிறுமி தனக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக அவருடைய பெற்றோரிடம் சொல்லி, தற்போது அவரை பெற்றோர் hospital–ல் அனுமதித்துள்ளார்கள் என்பதை அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், விருத்தாசலம் சக்தி நகரில் இயங்கிவரக்கூடிய தனியார் மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளி ஒன்றில் யூ.கே.ஜி. பயின்று வரும் புதுப்பேட்டையைச் சேர்ந்த ஆறு வயது சிறுமி 11–4–2023 அன்று மாலை பள்ளி முடித்து வீட்டிற்குச் சென்ற பின்னர், தனக்கு வயிறு வலிப்பதாகப் பெற்றோரிடம் தெரிவித்துள்ளார். இதனையடுத்து, அந்தச் சிறுமியை அருகிலுள்ள தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று பரிசோதித்தபோது, அந்தச் சிறுமி பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாக மருத்துவர் தெரிவித்துள்ளார். இதனையடுத்து, அந்தச் சிறுமி விருத்தாசலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.*

முற்பகல் 11–15

இந்தச் சம்பவம் தொடர்பாக சிறுமியின் தாயார் விருத்தாசலம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் அளித்த புகாரின் அடிப்படையில், காவல் துறையினர் துரிதமாக நடவடிக்கை மேற்கொண்டதன் அடிப்படையில், அப்பள்ளியின் தாளாளரும், ஓய்வுபெற்ற பள்ளி ஆசிரியருமான பக்கிரிசாமி என்பவர்மீது உடனடியாக வழக்குப் பதிவு செய்யப்பட்டு, கைதும் செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் குறித்து மேலும் விசாரணை மேற்கொண்டு, பாரபட்சமின்றி கடுமையான நடவடிக்கை எடுத்திட நான் உத்தரவிட்டிருக்கிறேன்.

குற்றம் சாட்டப்பட்டுள்ள பக்கிரிசாமி, விருத்தாசலம் நகர மன்றத்தின் 30–வது வார்டு உறுப்பினராக உள்ளார் என்பதை அறிந்தவுடனேயே, அவரின் தி.மு.க.–வின் அடிப்படை உறுப்பினர் நிலை இரத்து செய்யப்பட்டு, கட்சியிலிருந்தும் நிரந்தரமாக நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இதுகுறித்து மாவட்ட குழந்தைகள் நல அலுவலரும் உரிய விசாரணையை மேற்கொண்டு வருகிறார்.

எங்களது அரசைப் பொறுத்தவரையில்,—"நான் செய்தியைக் கேள்விப்படவில்லை—தொலைக்காட்சியில்தான் பார்த்தேன்"—என்று நான் சொல்லத் தயாராக இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் செய்தியை அறிந்தவுடனேயே, சம்பந்தப்பட்ட

அதிகாரிகளோடு பேசினேன். சம்பந்தப்பட்டவரை உடனடியாகக் கைது செய்து, அது தொடர்பான செய்தியை எனக்குத் தந்தார்கள்.

இந்த அரசைப் பொறுத்தவரையில், குற்றச் செயல்களில் ஈடுபடுவோர், அதிலும் குறிப்பாக, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் மனித குலத்திற்கே ஓர் அவமானச் சின்னம் எனக் கருதுகிறோம். அந்த வகையில், இதுபோன்ற குற்றச் செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகள் எவராக இருந்தாலும், அவர்கள்மீது எந்தவித பாரபட்சமுமின்றி, கடுமையான நடவடிக்கையை துரிதமாக எடுத்திடுவோம் என்பதை இந்த அவையில் நான் உறுதியோடு பதிவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. கவன ஈர்ப்பு

(அ) பொள்ளாச்சி, மேற்குப்புறமாக புறவழிச் சாலை அமைக்கும் பணிகள், விரைந்து முடித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள். (குறுக்கீடுகள்) நான் முடித்துவிடுகிறேன். இதை எடுத்ததற்குப் பிறகு உங்களுக்குப் பேச வாய்ப்பு தருகிறேன். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். இதை எடுத்து முடித்ததற்குப் பிறகு உங்களுக்குப் பதில் வரும். (குறுக்கீடுகள்) நான்தான் பதில் சொல்கிறேன் என்கிறேன், உட்காருங்கள். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள்.*

***முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சி ஒரு முக்கியமான பிரதான வணிக நகரம். ஏற்கெனவே அங்கு போக்குவரத்து நெரிசல் அதிகம். கேரள மாநிலத்திலிருந்து கொச்சின் வழியாக பொள்ளாச்சி நகருக்கு வரும். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் இப்போது விரிவாக பேச முயல வேண்டாம். நிகழ்ச்சி நிரலில் இருப்பதை மட்டும் வாசியுங்கள். பிறகு உங்களுக்கு இரண்டு கேள்விகளுக்கு வாய்ப்புள்ளன.*

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொள்ளாச்சியில் மேற்கு புறவழிச் சாலைப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டியது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பொள்ளாச்சி நகருக்கு மேற்கு புறமாக அமைந்திருக்கின்ற பிரதான புறவழிச் சாலைக்கு மூன்றாண்டுகளுக்கு முன்பு மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள் காலத்திலே பணிகள் தொடங்கப்பட்டு இடையிலே நடைபெறாமல் தேங்கி நிற்கிறது. துரிதமாக அந்தப் பணியை நடத்தி, இடையிலே அமைந்திருக்கின்ற ஓர் இரயில்வே மேம்பாலம் ஏழரை கிலோ மீட்டர். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். (குறுக்கீடு) உங்களுக்கு இன்னும் இரண்டு கேள்விகளுக்கு வாய்ப்புத் தருவேன். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று மாண்புமிகு உறுப்பினர்களின் மேசையின் மேல் உள்ள சிறு கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிக்கை

அண்டை மாநிலமான கேரளாவிலிருந்து பொள்ளாச்சி வழியாக கோவை செல்லும் அனைத்து வாகன போக்குவரத்துகள் பொள்ளாச்சி நகரின் வழியாகச் செல்வதால் மிகுந்த வாகன நெரிசல் மற்றும் போக்குவரத்துத் தடைகள் ஏற்படுத்தி விடுகின்றன. இதனைத் தவிர்க்கும்பொருட்டு நகருக்கு மேற்குப் புறமாகப் புறவழிச் சாலை அமைக்க நிர்வாக அங்கீகாரம் ரூ.45.84 கோடிக்கு 8–11–2018 அன்று அரசினால் வழங்கப்பட்டது.

இப்புறவழிச் சாலையானது அவினாசி–திருப்பூர்–பல்லடம்–பொள்ளாச்சி–கொச்சின் சாலை (மா.நெ.19)–ல் கி.மீ. 81/0–ல் துவங்கி நல்லூர், தாளக்கரை மற்றும் ஆர். பொன்னாபுரம் வழியாக தே.நெ. எண் 83–ல் கி.மீ. 26/6 ஆச்சிப்பட்டியில் முடிவடைகிறது. சாலையின் மொத்த நீளம் 8.873 கிலோ மீட்டர், அகலம் 10 மீட்டர் ஆகும். இச்சாலைக்கு 16 மீட்டர் அகலத்திற்கு நில ஆர்ஜிதம்

2023 ஏப்ரல் 12] [திரு. எ.வ. வேலு]

மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இப்பணி 23–12–2020 அன்று துவங்கப்பட்டது. தற்போது வரை 33% பணிகள் முடிவடைந்துள்ளன.

இச்சாலையை அமைக்க ஜமீன் ஊத்துக்குளி, முத்தூர், தாளக்கரை, ஆர். பொன்னாபுரம் மற்றும் சங்கம்பாளையம் ஆகிய 5 கிராமங்களில் நில ஆர்ஜிதப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தன. இவற்றுள் முத்தூர், ஆர். பொன்னாபுரம் மற்றும் சங்கம்பாளையம் ஆகிய மூன்று கிராமங்களுக்கான பத்திரப் பதிவு பணிகள் நிறைவடைந்துள்ளன.

இதற்கிடையே நிலம் கையகப்படுத்தும் பணிகளுக்கு வழங்கப்பட வேண்டிய உரிய இழப்பீடுகளுக்கும் மற்றும் சாலையின் இரு புறங்களில் ஏற்கெனவே அமைந்துள்ள குடிநீர் குழாய்கள் இட மாற்றம் செய்யும் பணிகளுக்கும் தேவையான கூடுதல் நிதி ரூ.73.35 கோடி ஒதுக்கீடு செய்து திருத்திய நிர்வாக ஒப்புதல் 11–11–2022 அன்று அரசால் வழங்கப்பட்டது. அதனடிப்படையில் நில ஆர்ஜிதப் பணிகள் தனி மாவட்ட வருவாய் அலுவலர், கோவை அவர்களால் துரிதமாக நடைபெற்று வருகின்றன மற்றும் குடிநீர் குழாய்கள் இட மாற்றம் செய்யும் பணிகளும் துவங்கப்பட்டுவிட்டன.

நில ஆர்ஜிதப் பணிகள் மற்றும் குடிநீர் குழாய்களை மாற்றி அமைக்கும் பணிகள் நிறைவடைந்தவுடன் சாலைப் பணிகள் அக்டோபர் 2023–ல் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும்.

இப்புறவழிச் சாலையில் கி.மீ. 7/10–ல் 7 மீ. அகலத்துடன்கூடிய இரயில்வே மேம்பாலம் அமைந்துள்ளது. இதை விரிவாக்கம் செய்ய சாலைப் பணிகள் முடிக்கப்பட்ட உடன் போக்குவரத்து செறிவு கணக்கீடு செய்து, அதன் அடிப்படையில் இரயில்வே மேம்பாலப் பணி இரயில்வே துறையினருடன் ஆலோசித்து பணப் பகிர்வுடன் சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து இரயில்வே மேம்பாலம் விரிவாக்கம் செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள்.

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலை சுமார் 9 கி.மீ. நீளம் கொண்டது. கேரள மாநிலத்தில் உள்ள கொச்சின்

[முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்] [2023 ஏப்ரல் 12

துறைமுகம், பாலக்காடு போன்றவற்றுக்குச் செல்ல விரும்புவோர், கோவை வடக்குப் பகுதியில் இருப்பவர்கள் அந்தச் சாலையைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். இந்தச் சாலை வழியாக, ஜமீன் ஊத்துக்குளி, நல்லூரர், தாளக்கரை, ஆர். பொன்னாபுரம், ஆச்சிப்பட்டி ஆகிய ஐந்து கிராமங்களைச் சார்ந்த விவசாயிகளின் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் உள்ளன. இந்தச் சாலை அமைவதன்மூலம் பொள்ளாச்சி நகருக்குள் நெரிசல் குறையும். இந்தச் சாலைக்கு இடையில் ஏழு மீட்டர் அகலத்தில் ஓர் இரயில்வே மேம்பாலம் உள்ளது. இந்த இரயில்வே மேம்பாலத்தை 10 மீட்டராக அகலப்படுத்தும் பணியும் இத்துடன் சேர்த்து செய்து தரப்பட வேண்டுமென்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்புறவழிச் சாலைப் பணிக்காக 45.84 கோடி ரூபாய் நவம்பர் 2018–ல் நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்தப் புறவழிச் சாலையானது பல்லடம்-பொள்ளாச்சி-கொச்சின் சாலை SH–19 கி.மீ. 81/0–ல் துவங்கி ஜமீன் ஊத்துக்குளி, முத்தூர், தாளக்கரை, ஆர். பொன்னாபுரம் மற்றும் சங்கம்பாளையம் வழியாக NH–83–ல் ஆச்சிப்பட்டியில் முடிவடைகிறது. இந்தப் புறவழிச்சாலை 8.8 கி.மீ. நீளம். மொத்தம் 10 மீட்டர் அகலத்திற்கு சாலை அமைப்பதற்காக 23–12–2020–ல் இந்தப் பணி துவக்கப்பட்டது. தற்போது அதனுடைய பணிகள் 33 சதவிகிதம்தான் முடிவடைந்திருக்கின்றன. நில எடுப்பு மற்றும் குடிநீர் குழாய்கள் மாற்றியமைக்க, திருத்திய ஒப்புதல் தேவைப்பட்டது. அந்த அடிப்படையிலே, ரூ.73.35 கோடிக்கு, நவம்பர் மாதம் 2022–ல் தான் பெறப்பட்டது.

முற்பகல் 11–20

ஏற்கெனவே நில எடுப்புப் பணிக்காகக் கொடுக்கப்பட்ட அந்தத் தொகை போதாத காரணத்தால், இந்த ஆட்சி பொறுப்பேற்றதும், அதை செய்து முடிக்க வேண்டுமென்ற அடிப்படையில், 2022–ல் 73.35 கோடி ரூபாய்க்கு திருத்திய மதிப்பீடு Revised Administrative Sanction ஆன பின்பு, இப்போது ஜூன் மாதம் 30 ஆம் தேதிக்குள் அந்த நிலங்கள் முழுமையாக எடுக்கப்பட்டு, நில எடுப்பு முடிந்தவுடனேயே, அக்டோபர் மாதம் 2023–க்குள் அந்த மேற்கு சாலை போடப்படும்.

2023 ஏப்ரல் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி* V. *ஜெயராமன் அவர்கள்.*

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. இப்போது பொள்ளாச்சி–கோவை பிரதான சாலை ஆசியாவிலேயே மிகப் பெரிய* concrete *சாலையாக, சிறப்பான முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது. பொள்ளாச்சி– திருப்பூர் நான்கு வழிச்சாலையை ஆறு வழிச்சாலையாக மாற்றும் பணி, அண்ணன் எடப்பாடியார் அவர்களின் காலத்திலிருந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதற்கிடையிலே இருக்கின்ற பல்லாயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்களுக்கு பயன்தரத்தக்க வகையிலே, வெள்ளளூர், செட்டிபாளையம், மயிலேரிபாளையம், அரசம்பாளையம், கொண்டம்பட்டி, கோதவாடி, கோடங்கிபாளையம், நல்லெட்டிப்பாளையம், முள்ளுப்பாடி, காணியளயம்பாளையம், மேட்டுப்பாளையம் ஆகிய கிராமங்களை உள்ளடக்கி, 10 மீட்டர் அகலம் கொண்ட பாதை ஒன்று அமைய வேண்டும் என்பது விவசாயிகளின் நீண்டகாலக் கனவு, இதற்காக எங்களுடைய முன்னாள் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, சுருக்கமாகப் பேசுங்கள்.*

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: *நிதியை ஒதுக்கி, அரசாணையை வெளியிட்டு, ஒப்பந்தம், . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சுருக்கம், சுருக்கமாகக் கேள்வியை முடியுங்கள்.*

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: *நிதியை ஒதுக்கி, அரசாணை வெளியிடப்பட்டு, ஒப்பந்தம் கோரப்பட்டு, தேர்தல் வந்துவிட்டதால், பணி நின்றுவிட்டது. இதில் ஒரு துரதிர்ஷ்டம் என்னவென்றால், பொள்ளாச்சி–கோவை மாற்றுப்பாதை என்று அதற்கு யாரோ பெயர் வைத்துவிட்டார்கள். இது பொள்ளாச்சி– கோவைக்கு மாற்றுப்பாதை அல்ல. இடையிலே விவசாய நிலங்களுக்கான இணைப்புப்பாதை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் அந்தப் பணியைத் தொடங்கி, விவசாயிகளுடைய வாழ்வில் ஒளியேற்றி வைப்பதற்கான ஓர் ஏற்பாட்டைச் செய்ய*

[முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்] [2023 ஏப்ரல் 12

வேண்டும். அதாவது கிட்டத்தட்ட 50 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெறக்கூடிய சாலை, இதை ஏழரை மீட்டராக அமைக்காமல், அந்த வழியாக நிறைய coir industries, தென்னை நார் தொழிற்சாலை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், உங்கள் கேள்வியைப் புரிந்து கொண்டோம். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) முடியுங்கள்.

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: அந்த வழியில் agro based industries, தென்னை நார் தொழில்கள், பித்துக்கட்டி உருவாக்குவது போன்ற நிறைய தொழிற்சாலைகள் மற்றும் கோழிப்பண்ணைகள் இருக்கின்றன. அங்கே உற்பத்தி செய்கின்ற பொருட்கள் துறைமுகங்களுக்கு செல்கின்ற அளவிலே,— இப்போது மூன்று மீட்டர் சாலைதான் இருக்கிறது. எனவே, அந்த ஏழரை மீட்டர் சாலை என்பதை பத்து மீட்டராக மாற்றி, சாலைப் பணிகளை இந்த ஆண்டோ அல்லது வரும் ஆண்டோ முடித்துத் தருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள் குறிப்பிட்ட சாலை என்பது, 2018–ல் அவர்கள் ஆட்சியில் இருந்தபோது 4 கோடியே 10 இலட்சம் ரூபாய்க்கு நிலங்களை எடுப்பதற்காக ஓர் ஒப்புதல் வழங்கப்பட்டது. நிலங்கள் எடுப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட உடனேயே நிலங்களை எடுக்கவில்லை. 2019–ல் 65.89 கோடி ரூபாய்க்கு சாலைகள் போடவேண்டுமென்று, அப்போது ஒப்பந்தம் கோரப்பட்டது; ஆனால், நிலமே எடுக்கவில்லை. அதற்குப் பின்னால் 2020–ல் 23.68 கோடி ரூபாய்க்கு மீண்டும் நிலம் எடுப்பதற்காக திருத்திய மதிப்பீடு அரசின் சார்பாக வழங்கப்பட்டிருக்கிறது. அது வழங்கிய பின்பும் நிலம் எடுக்கவில்லை. அவர் குறிப்பிட்டதுபோல, பொள்ளாச்சிக்கும் கோயம்புத்தூருக்கும் இடையில் ஏற்கெனவே தேசிய நெடுஞ்சாலை 81–ல் NHAI மூலமாக நான்குவழிச் சாலையை concrete சாலையாக அமைக்க வேண்டுமென்ற அடிப்படையில் அந்தச் சாலையைச் செப்பனிட்டுக்கொண்டு இருக்கின்றபோதுதான், அவர் குறிப்பிடுகிற சாலையை, மாற்றுச்

2023 ஏப்ரல் 12] [திரு. எ.வ. வேலு]

சாலையாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள். அந்தச் சாலை என்பது ஒருவழிச் சாலை இல்லை. அதை மாநில நெடுஞ்சாலை என்றும் சொல்ல முடியாது. அது எப்படியிருக்கின்றது என்று சொன்னால், அந்தச் சாலையில் 800 மீட்டர் மட்டும்தான் மாநில நெடுஞ்சாலை; 8.20 கிலோ மீட்டர் இதர மாவட்ட சாலை; ஊராட்சி ஒன்றியச் சாலை 10.10 கிலோ மீட்டர்; அப்படி கிராமச் சாலையாகவும் இல்லாமல், ஊராட்சி சாலையாகவும் இல்லாமல், ஒன்றியச் சாலையாகவும் இல்லாமல் புதிய சாலையாக 4.50 கி.மீ. இருக்கிறது. அந்தச் சாலையைத்தான் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். அவர் சொன்னமாதிரி 11 கிராமங்கள் வழியாகச் செல்வது என்பது உண்மை. இப்படிப்பட்ட நிலையிலே NHAI *மூலமாக விரிவுபடுத்தப்பட்ட சாலையில் இப்போது அதில் போக்குவரத்து ஆரம்பித்துவிட்டார்கள். எனவே, அந்தச் சாலையில் முழுமையாகப் போக்குவரத்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.*

முற்பகல் 11–25

எந்தச் சாலையைப் போட வேண்டுமென்று கருதுகிறார்களோ, அந்தச் சாலை குறித்து இந்த ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடத்திலே சொன்னார்கள். ஏற்கெனவே பலமுறை கேட்டுக்கொண்டதற்கிணங்க, துறையின் சார்பாக அரசுச் செயலாளரை அழைத்து நான் பேசுகிறபோது, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், போக்குவரத்து சம்பந்தப்பட்ட ஒரு குழுவை அழைத்து, அந்தச் சாலையை அமைப்பதா, இல்லையா என்று கேட்கிறபொழுது, இல்லை, இல்லை, தற்போது IRC *விதிகளின்படி போக்குவரத்துச் செறிவு குறைந்துவிட்டது; ஆகவே, 10 மீட்டர் சாலை அமைக்க வேண்டிய அவசியம் இல்லை; ஏற்கெனவே இருக்கிற* NHAI *சாலையைப் பயன்படுத்திக்கொள்ளலாம்; ஆகவே, இப்பணியை இரத்து செய்யலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஏற்கெனவே ஒரு குறிப்பினை எழுதி துறைக்கு அனுப்பிவிட்டார்கள்.*

மாண்புமிகு உறுப்பினர் பேரவையின் முன்னாள் துணைத் தலைவராக இருந்தவர். தற்பொழுது பொள்ளாச்சி சட்டமன்ற உறுப்பினராக இருக்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தொடர்ந்து மீண்டும், மீண்டும் இந்தச் சாலை விவசாயிகளுக்குப் பயன்படும், தொழிற்சாலைகளுக்குப் பயன்படும் என்று குறிப்பிட்டதன் அடிப்படையில், இந்த அரசாங்கம் அதற்கு வேண்டிய முன்னெடுப்புகளையெடுத்து, கணக்கெடுத்துப்

[திரு. எ.வ. வேலு] [2023 ஏப்ரல் 12

பார்க்கிறபொழுது, போக்குவரத்து செறிவு மிகக் குறைவாக இருக்கிறது. ஆனால், அதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, 23 கிலோ மீட்டர் சாலையை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகின் மூலமாக எந்தளவுக்கு அகலப்படுத்த முடியுமோ அந்தளவுக்குக் கட்டாயம் அகலப்படுத்தி, செப்பனிடப்படும் என்பதை மீண்டும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)

3. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஆ) பேரவை நிகழ்ச்சிகள் முழுவதையும் நேரடி ஒளிபரப்பு செய்வது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தப் பிரச்சினையைச் சொல்லும்பொழுது, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முழுமையாக Screen-ல் இருந்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அதனை cut பண்ணிவிட்டார்கள் என்று என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தார்கள். நிச்சயமாக 100 சதவிகிதம் அதனை cut செய்யவில்லை. இன்றுதான் Digital House முதன்முதலாக முழுமையாக ஒளிபரப்பு செய்யப்படும் நிகழ்வு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கேள்வியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நீங்கள் பேசும்போது முழுமையாக உங்களுடைய படம் அதில் தெரிந்தது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) Screen-ல் தெரிந்தது. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு ஒளிபரப்பு செய்யப்பட்டது தெரியவில்லை என்று சொன்னால், அதனை நான் சரிசெய்யச் சொல்கிறேன். (குறுக்கீடு) Screen-ல் தெரிந்தது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். நான் சொல்கிறேன். (குறுக்கீடு) அடுத்த நிகழ்வு முடியட்டும்.

4. கவன ஈர்ப்பு—*தொடர்ச்சி*

(ஆ) களியக்காவிளை, அங்கன்வாடி மையம், இடம் மாற்றுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம்

2023 ஏப்ரல் 12] [பேரவைத் தலைவர்]

வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி அவர்கள்.

திருமதி S. விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "களியக்காவிளை துணை சுகாதார நிலையம் அருகே செயல்பட்டுவரும் அங்கன்வாடி மையத்தை அரசு உயர்நிலைப் பள்ளி வளாகத்திற்கு மாற்ற வேண்டியது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று உறுப்பினர்களின் மேசையின் மேலுள்ள சிறு கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிக்கை

கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை வட்டாரக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட களியக்காவிளை அரசு தொடக்கப் பள்ளியும், உயர்நிலைப் பள்ளியும் ஒரே வளாகத்தில் செயல்பட்டு வருகின்றன. அரசு உயர்நிலைப் பள்ளியில் 101 மாணவர்கள் பயின்று வருகின்றனர். இப்பள்ளியில் மாணவர்கள் பயில்வதற்குப் போதுமான அளவில் 8 வகுப்பறைகள் உள்ளன. மேலும், தொடக்கப் பள்ளியில் 65 மாணவர்கள் கல்வி பயில்வதற்கு 6 வகுப்பறைகள் போதுமானதாக உள்ளன. மேலும், இப்பள்ளி வளாகத்தில் 2 அறைகளை உடைய 1 CRC கட்டடம் நல்ல நிலையில் உள்ளது.

இந்நிலையில் இம்மாவட்டத்தின் மேல்புறம் வட்டாரத்திற்குட்பட்ட களியக்காவிளை அரசு ஆரம்ப சுகாதார நிலையம் வாடகையில்லாக் கட்டடத்தில் இயங்கிவருகிறது. மேற்படி களியக்காவிளை நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு களியக்காவிளை துணை சுகாதார நிலையம் அமைந்துள்ள இடத்தில் அதனை ஒட்டி 10 சென்ட் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேற்படி, இடத்தில் அங்கன்வாடி மையம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது. இந்த அங்கன்வாடி

மையமானது மிகவும் பழுதடைந்து மோசமான நிலையில் உள்ளது. எனவே, களியக்காவிளை நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய சொந்தக் கட்டடம் கட்டி முடிக்கும்வரையில் அவ்விடத்தில் செயல்பட்டுவரும் அங்கன்வாடி மையத்தை அருகாமையில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளி வளாகத்தில் மேற்குறிப்பிட்டுள்ள CRC மையக் கட்டடத்தில் செயல்பட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி அவர்கள்.

திருமதி S. விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். ஒரு நல்ல பதிலைத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இதில் சில விஷயங்களைத் தெளிவுபடுத்த வேண்டிய கட்டாயம் இருக்கிறது. குறிப்பாக, இப்பிரச்சினையில் 4 துறைகள் சம்பந்தப்பட்டிருக்கின்றன. ஒன்று, பள்ளிக் கல்வித் துறை; இரண்டாவதாக, அங்கன்வாடிக் கட்டடம் சம்பந்தப்பட்டதாக இருப்பதால், சமூக நலத் துறை; மூன்றாவதாக, துணை சுகாதார நிலையம் கட்ட வேண்டியிருப்பதால், மருத்துவம்–மக்கள் நல்வாழ்வுத் துறை; நான்காவதாக, பேரூராட்சி அலுவலகம் சம்பந்தப்பட்டிருப்பதால், நகர்ப்புர வளர்ச்சித் துறை ஆகிய நான்கு துறைகள் இதில் சம்பந்தப்பட்டிருக்கின்றன. நான் கேட்கின்ற கேள்வி simple ஆக இருப்பதுபோல் தெரியும். ஆனால், இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமென்பதால், 4 துறைகளும் சுமூகமாக இணைந்து செயல்பட்டால்தான் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். ஆகையால், இந்தக் கோரிக்கையை முன்வைக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) கன்னியாகுமரி மாவட்டம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு மற்றொரு கேள்வி கேட்க வாய்ப்பிருக்கிறது. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் இதற்கான பதிலைப் பெற்றுக்கொள்ளுங்கள். அதுதான் procedure. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு பதில் சொல்லிவிடுங்கள். பிறகு, மாண்புமிகு உறுப்பினர் இன்னொரு கேள்வியைக் கேட்பார்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை வட்டாரக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட களியக்காவிளை அரசு தொடக்கப் பள்ளியும் மற்றும் உயர்நிலைப் பள்ளியும் ஒரே வளாகத்தில் செயல்பட்டு வருகின்றன. அரசு உயர்நிலைப் பள்ளியில் 101 மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

2023 ஏப்ரல் 12] [திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி]

இப்பள்ளியில் மாணவர்கள் பயில்வதற்குப் போதுமான அளவில் 8 வகுப்பறைகள் உள்ளன. மேலும், தொடக்கப் பள்ளியில் 65 மாணவர்கள் கல்வி பயில்வதற்கு 6 வகுப்பறைகள் போதுமானதாக உள்ளன. மேலும், இப்பள்ளி வளாகத்தில் 2 அறைகளை உடைய 1 CRC கட்டடம் நல்ல நிலையில் உள்ளது.

இந்நிலையில், இம்மாவட்டத்தின் மேல்புறம் வட்டாரத்திற்குட்பட்ட களியக்காவிளை அரசு ஆரம்ப சுகாதார நிலையம் வாடகையில்லாக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மேற்படி களியக்காவிளை நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய சொந்தக் கட்டடம் கட்டுவதற்குக் களியக்காவிளை துணை சுகாதார நிலையம் அமைந்துள்ள இடத்தில் அதனையொட்டி 10 சென்ட் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் அங்கன்வாடி மையம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது. இந்த அங்கன்வாடி மையமானது மிகவும் பழுதடைந்து மோசமான நிலையில் உள்ளது. எனவே, களியக்காவிளை நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய சொந்தக் கட்டடம் கட்டி முடிக்கும்வரையில் அவ்விடத்தில் செயல்பட்டுவரும் அங்கன்வாடி மையத்தை அருகாமையில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளி வளாகத்தில் மேற்குறிப்பிட்டுள்ள CRC கட்டடத்தில் செயல்பட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி அவர்கள்.

முற்பகல் 11-30

திருமதி S. விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை வட்டாரக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட களியக்காவிளை அரசு தொடக்கப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி மற்றும் CRC–Cluster Resource Centre ஆகியவை ஒரே கட்டடத்தில் இயங்கி வருகின்றன. இந்த Cluster Resource Centre (CRC)–ல் அங்கன்வாடி மையத்தினை மாற்றியமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டடத்திலேயே நிரந்தரமாகச் செயல்பட ஒப்புதலை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இந்த 10 cent நிலத்தில் பழுதடைந்த துணை சுகாதார நிலையக் கட்டடம் அமைந்துள்ளது. அதற்கு அருகாமையில் மிகவும் பழுதடைந்த அங்கன்வாடி மையக் கட்டடமும் உள்ளது. இது விவர அறிக்கையிலும் கூறப்பட்டுள்ளது; மாண்புமிகு அமைச்சர்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அவர்களும் சொன்னார்கள். அந்தக் கட்டடத்தை இடித்தால்தான், தற்போது Urban PHC-க்கு allot ஆன fund-ஐக்கொண்டு அதனைக் கட்ட இயலும். அவ்வளவு இடம் தேவைப்படுகிறது. ஆகையால், அந்த அங்கன்வாடி மையத்தினை CRC கட்டடத்திலேயே நிரந்தரமாகத் தொடர வழிவகை செய்ய வேண்டும். இந்தப் பழுதடைந்த அங்கன்வாடி மையமானது, ஆரம்ப சுகாதார நிலையத்தின் 10 cent நிலத்தின் மையப் பகுதியில் உள்ளது. அதனை நீக்கினால்தான் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க இயலும். ஆகவே, ஆரம்ப சுகாதார நிலையமும் அவ்விடத்தில் இயங்க வேண்டும், துணை சுகாதார மையத்திற்கு ஏற்கெனவே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அந்த அனுமதியும் அரசிற்கு waste ஆகாத வகையில், களியக்காவிளை பேரூராட்சி அலுவலகத்தில் தற்போது இயங்கிவரும் Urban PHC-ஐ இந்தப் புதிய கட்டடம் கட்டப்பட்ட பிறகு நிரந்தரமாக மாற்றப்படும். எனவே, துணை சுகாதார நிலையம் பேரூராட்சிக் கட்டடத்திலேயே தொடருவதற்கு நகர்ப்புற வளர்ச்சித் துறை அனுமதி வழங்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனைத்துத் துறைகளின் பணிகளையும் இணைத்து அரசு கவனித்துக்கொள்ளும். விவர அறிக்கையில் அனைத்து விவரங்களும் வழங்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் கேள்வியை முடியுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு பதில் சொல்வார்கள்.

திருமதி S. விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கை 4 துறைகள் சம்பந்தப்பட்டதாக இருப்பதால், 4 துறைகளுக்கிடையே இணக்கமான தன்மையுடன் இதனைச் செயல்படுத்த வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 4 துறைகளுக்கிடையில் எந்தப் பிரச்சினையும் இல்லை. மாண்புமிகு அமைச்சர்கள் தெளிவாகப் பணிகளை மேற்கொள்வார்கள். மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பதில் சொல்லிவிடுங்கள்.

திருமதி S. விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை சுகாதார நிலையமும் தேவை, அங்கன்வாடி மையமும் தேவை, அனைத்துப் பணிகளும் தொடரப்பட வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை.

2023 ஏப்ரல் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உங்கள் கோரிக்கையினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புரிந்துகொண்டார்கள். மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர், பதில் சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் அவர்கள் கூறியதுபோன்று இந்தக் கோரிக்கை, நகராட்சி நிர்வாகத் துறை, பள்ளிக் கல்வித் துறை, சமூக நலத் துறை மற்றும் மருத்துவம் மற்றும் சுகாதாரத் துறை ஆகிய 4 துறைகள் சம்பந்தப்பட்டவை. நீங்கள் சொல்வதுபோன்று இந்தத் திட்டத்தைக் கொண்டு வருவதற்காக அந்தத் திட்டம் நிறுத்தப்படாமலும், இதனால் எந்தத் திட்டத்திற்கும் பாதிப்பு வராதவண்ணம், பள்ளி மாணவச் செல்வங்களாக இருந்தாலும் சரி, அந்தப் பகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பயன்படுத்துகின்ற பொதுமக்களாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும், யாருக்கும் எந்த ஒரு பாதிப்பும் இல்லாதவகையில் அந்தந்தத் துறை அமைச்சர்களிடம் அந்தந்த மாவட்டத்தின் அலுவலர்கள்மூலம் பேசி, இதனை அமைப்பதற்கு சுமூகத் தீர்வு காணப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

3. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(இ) மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான 20% இட ஒதுக்கீட்டில் வன்னியர்களுக்கு 10.5% உள் ஒதுக்கீடு நடைமுறைப்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி என்னவென்று சொல்லுங்கள். எதற்காக எழுந்து நிற்கிறீர்கள் என்று சொல்லுங்கள்.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கான 20 விழுக்காடு இடஒதுக்கீட்டில், வன்னியர்களுக்கு 10.5 சதவிகித. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் உட்காருங்கள். இப்போது நீங்கள் உட்காருங்கள். தேவையானால் நீங்கள் பேசுவதற்கு நான் வாய்ப்பு அளிக்கிறேன் (குறுக்கீடுகள்) இன்றைக்குதானே நீங்கள்*

அளித்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பதில் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன், நீங்கள் உட்காருங்கள். தயவுசெய்து நீங்கள் உட்காருங்கள், நான் வாய்ப்பு வழங்குகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்றைக்கு என்னிடம் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நான்தான் எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்கிறேன் அல்லவா? (குறுக்கீடுகள்) அதற்கு பிறகும் உங்களுக்கு வேறு என்ன வேண்டும்? மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்றைக்கு என்னிடம் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தற்போதுதான் கொடுத்திருக்கிறீர்கள். அதற்கான பதில்கள் தயாரிக்க வேண்டாமா? அதன்மீதான மானியக் கோரிக்கை நாளை வரவிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெளிவாகப் பேசுங்கள். மாண்புமிகு அமைச்சர்கள் தெளிவாகப் பதில் சொல்வார்கள். . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் பேசிய பிறகு மாண்புமிகு உறுப்பினர் எழுந்து நின்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நான் உங்களை அழைத்து, பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) நான் சொல்வதை நீங்கள் கேட்கமாட்டேன் என்கிறீர்கள். உட்காரச் சொல்கிறேன், (குறுக்கீடுகள்) நான் வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள் என்று சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள், நான் பதில் சொல்கிறேன் என்று சொல்கிறேன் அல்லவா? நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இன்று காலையில் கொண்டு வந்து அளித்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) அது மட்டுமானால், அது related ஆக உள்ளவற்றிற்கு நான் பதில் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுவது ஏதும் அவைக் குறிப்பில் ஏறாது. இன்று காலையில் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நான் எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்லியாயிற்று. (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் வேறு நோக்கத்தோடு வந்திருந்தால், (குறுக்கீடுகள்) நீங்கள் எது பேசினாலும் அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்) ஏதோ, நீங்கள் அரசியல் செய்ய வேண்டுமானால் வெளியே சென்று செய்யலாம். (குறுக்கீடுகள்) உள்ளே அரசியல் செய்ய வேண்டாம். இது அரசியல் செய்வதற்கான இடம் அல்ல. (குறுக்கீடுகள்) இது மக்களின் பிரச்சினைகளைப் பேச வேண்டிய இடம். (குறுக்கீடுகள்)

காலையில் 10–00 மணிக்கு ஒரு paper–ஐ என்னிடம் கொண்டுவந்து கொடுத்துவிட்டு, 11–30 மணிக்கு இங்கு வந்து பேசுவது நாகரிகம் அல்ல; (குறுக்கீடுகள்) அவை மரபு அல்ல; இது ஜனநாயக உரிமை அல்ல; தயவுசெய்து உட்காருங்கள், (குறுக்கீடுகள்) நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள் நான் எடுத்துக்கொள்கிறேன் என்று சொன்ன பிறகும் நீங்கள் இவ்வாறு செய்தால், அவையை மீறிய செயலாகும். அவையை மீறிய செயலை செய்யக் கூடாது. அரசியல் செய்கிற இடம் இது அல்ல. நீங்கள் அரசியலுக்காக பேச வேண்டிய இடம் இது இல்லை.

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்று ஏதோ பேசினர். உறுப்பினர் திரு. இரா. அருள் அவர்கள் இரண்டு கைகளையும் நீட்டி பேசினார்.)

முற்பகல் 11–35

அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள். தயவுசெய்து எல்லோரும் உட்காருங்கள் சொல்கிறேன். நீங்கள் மூத்த உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள். நன்றாக படித்தவர்கள். நீங்களும் ஆசிரியராக இருந்தவர். நீங்கள் காலையில் என்னிடம் கொடுத்துவிட்டு, உடனே இங்கு வந்து விவகாரம் செய்வது நியாயமில்லை. நீங்கள் பேசுவதில் ஏதோ நோக்கம் இருக்கிறது, எனக்குத் தெரியவில்லை. ஏதோ நோக்கத்துடன் பேசுகிறீர்கள். அரசியல் செய்ய வேண்டிய இடம் இந்தப் பேரவை அல்ல. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். உங்களுடையதை எடுத்துக்கொள்ள மாட்டேன் என்று அவர் சொல்லவில்லை. உங்களது உரிமையைக் கேட்பதற்கு உங்களுக்கு உரிமையுண்டு. ஆகையினால், நாளைக்கு அவர் எடுத்துக்கொள்கிறேன் என்கிறார். Demand இருக்கிறது. Demand–லும் எடுத்துக்கொள்கிறோம், தனியாகவும் பேச வாய்ப்புக் கொடுக்கலாம். இன்றைக்கு காலையில்தான் கொடுத்திருக்கிறீர்கள். உடனே செய்யுங்கள் என்றால் எப்படி முடியும்? நீங்களே சொல்லுங்கள். மற்றவர்கள் என்றால்கூட அவர்கள் புதியவர்கள் என்று சொல்லலாம். திரு. மணி, நீங்கள் பண்பட்டவர், எல்லாம் தெரியும் உங்களுக்கு. நீங்களே இப்படி செய்தால் எப்படி?

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) சென்னை மாநகரக் காவல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2023 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)*

3. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(இ) மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான 20% இட ஒதுக்கீட்டில் வன்னியர்களுக்கு 10.5% உள் ஒதுக்கீடு நடைமுறைப்படுத்துதல்—*தொடர்ச்சி*

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து நின்றுகொண்டு ஏதோ பேசினர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவைக்கு இடையூறு செய்யாதீர்கள். நீங்கள் உங்களுடைய எதிர்ப்பைப் பதிவு செய்ய வேண்டுமென்றால் நீங்கள் வெளிநடப்புச் செய்துகொள்ளலாம். அது உங்களுடைய விருப்பம். அது உங்களுடைய உரிமை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் எல்லோரும்.*

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து நின்றுகொண்டு ஏதோ பேசினர்.)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *எழுந்து நின்று அவைக்கு இடைஞ்சலாக இருப்பதை இந்த அவை ஒத்துக்கொள்ளாது. தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து நின்றுகொண்டு ஏதோ பேசினர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் எச்சரிக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)* Zero Hour *முடிந்து அடுத்த நிகழ்விற்கு வந்தாகிவிட்டது. உட்காருங்கள். அமைதியாக உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடு)*

2023 ஏப்ரல் 12] [பேரவைத் தலைவர்]

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து நின்றுகொண்டு ஏதோ பேசினர்.)

உட்காருங்கள் எல்லோரும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுந்தால் அனைவரும் உட்கார வேண்டும். தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுவதெல்லாம் அவைக் குறிப்பில் வராது. தயவுசெய்து அமைதியாக அமருங்கள்.

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—*தொடர்ச்சி*

(அ) சென்னை மாநகரக் காவல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2023—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2023 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2023 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

(ஆ) தொழிற்சாலைகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2023 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2023 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

6. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 41-வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

(ஆ) கோரிக்கை எண் 51-இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

(அ) கோரிக்கை எண் 41-வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2023–2024 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 41–வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

(பாரதிய ஜனதா கட்சி உறுப்பினர்கள் திரு. நயினார் நாகேந்திரன் மற்றும் திருமதி வானதி சீனிவாசன் ஆகியோர் எழுந்து நின்றனர்.)

நாளைக்கு தருகிறேன்; Zero Hour *முடிந்து அடுத்த* Subject—*ற்கு வந்தாகிவிட்டது. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள், நான் சொல்கிறேன். மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் வராது. நாளை பேசிக்கொள்ளலாம். மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.8,198,68,42,000/–, மூலதனக் கணக்கில் ரூ.71,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.40,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”

[திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்] [2023 ஏப்ரல் 12

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 166, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. ராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 260, மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா.

திரு. JMH. அசன் மௌலானா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,198,68,42,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.71,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 339, மாண்புமிகு உறுப்பினர் திரு. R. ராதாகிருஷ்ணன்.

திரு. R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,198,68,42,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.71,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1733, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3514, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார்.

திரு. S. பழனி நாடார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட

வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,198,68,42,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.71,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4854, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ்.

திரு. ஆர். கணேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,198,68,42,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.71,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6749, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,198,68,42,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.71,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7524, மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி.

திருமதி S. விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,198,68,42,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.71,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 365, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 760, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2549, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6406, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7029, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 688, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி.

முற்பகல் 11–40

திரு. அ. பண்ணாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,198,68,42,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.71,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 936, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன்.

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,198,68,42,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.71,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1409, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா.

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,198,68,42,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.71,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2390, மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி.

திரு. T.K. அமுல் கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,198,68,42,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.71,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3276, மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார்.

திரு. P.R.G. அருண்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,198,68,42,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.71,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3323, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். ஜெயராம்.

திரு. கே.ஆர். ஜெயராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,198,68,42,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.71,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3369, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று முற்பகல் இரண்டு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பெற்றுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். இன்று சரியாக இரண்டு மணிக்குள் விவாதத்தை முடித்து நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பதில் சொல்லி, பேரவையினுடைய காலை நிகழ்வுகள் சரியாக 2 மணிக்குள் முடிக்க வேண்டும். ஆகவே, பேச வருகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் தயவுசெய்து, குறித்த நேரத்திற்கு மிகாமல் பேச வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். இன்று மாலை மீண்டும் 4 மணிக்கு அவை கூட இருக்கின்ற காரணத்தினால், கண்டிப்பாக, கட்டாயமாக 2 மணிக்குள் அவையை முடிக்க வேண்டும். தயவுசெய்து பேச வருகின்றவர்கள், குறித்த நேரத்திற்குட்பட்டு பேச வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்கள்.*

நேரம் சரியாக 11–44. முதல் உறுப்பினருக்கு 15 நிமிடங்களும், ஏனைய உறுப்பினர்களுக்கு தலா 7 நிமிடங்களும் வழங்கப்படுகின்றது. சரியாக 12–00 மணிக்கு திரு. இரா. காமராஜ் அவர்கள் உரையை முடித்துத்தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்கள்.

முற்பகல் 11–45

திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“இருந்தாலும், மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும்,

இவர் போல் யார் என்று ஊர் சொல்ல வேண்டும்” என்கிற *(மேசையைத் தட்டும் ஒலி)* வரிகளுக்கேற்ப, ஊரும், உலகமும் போற்றுகின்ற அளவில் வாழ்ந்து மறைந்த தலைவர், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

“வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி, மக்களின் மனதில் நிற்பவர் யார்” என்ற ஒற்றைக் கேள்விக்கு ஒரே பதிலாம், எங்கள் குல தெய்வம், இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

[திரு. இரா. காமராஜ்] [2023 ஏப்ரல் 12

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா இந்த இருபெரும் தலைவர்களை உள்வாங்கி, தன்னுடைய உழைப்பால், விசுவாசத்தால், தொண்டர்கள்மீது வைத்திருக்கிற அசைக்க முடியாத நம்பிக்கையால், சாதாரண, சிலுவம்பாளையம் கிளைக் கழகச் செயலாளர் பொறுப்பிலிருந்து, (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்கிற மாபெரும் மக்கள் இயக்கத்திற்குப் பொதுச் செயலாளராக உயர்ந்திருக்கக்கூடிய (மேசையைத் தட்டும் ஒலி) முன்னாள் முதலமைச்சர், எந்நாளும் எங்கள் அன்பிற்குரிய அண்ணன், எதிர்கால, வருங்கால முதலமைச்சர், (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சித் தலைவர், அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி கொறடா, அருமைக்குரிய அண்ணன் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல் சட்டப் பேரவையின் தலைவரான தங்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், திருவாரூர் மாவட்ட மக்களுக்கும், என்னை மூன்றாம் முறையாக இந்த அவைக்கு அனுப்பி வைத்த, நன்னிலம் தொகுதியின் வாக்காளப் பெருமக்களான என்னுடைய எஜமானர்களுக்கும் வணக்கத்தை இந்த நேரத்தில் தெரிவிப்பதை தலையாயக் கடமையாகக் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதி சார்ந்த கோரிக்கைகளை எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் வைப்பார்கள். எனக்கும் தொகுதி சார்ந்த கோரிக்கைகள் இருக்கின்றன. அதில் சில கோரிக்கைகளை நான் உங்களிடத்தில் தந்து விடுகிறேன். நீங்கள் அவற்றைப் பதிவு செய்துகொள்ள வேண்டும். அதற்கு முன்னால் ஒரே ஒரு கோரிக்கை மட்டும் அவையில் வைப்பது என்னுடைய கடமை எனக் கருதி, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் 12-00 மணி வரைக்கும் எத்தனை கோரிக்கைகளை வேண்டுமானாலும் அவையில் வைக்கலாம். அத்தனை கோரிக்கைகளும் பதிவு செய்யப்படும்.*

2023 ஏப்ரல் 12]

திரு. இரா. காமராஜ்: கோரிக்கை என்னவென்று கேட்டால், எங்கள் தொகுதிக்கு ஒரு கல்லூரி வேண்டுமென்று எல்லா உறுப்பினர்களும் கேட்பார்கள். ஆனால், என்னுடைய கோரிக்கை வித்தியாசமானது. என்னுடைய தொகுதியிலே இருக்கிற கல்லூரி, என்னுடைய தொகுதியிலேயே இருக்க வேண்டும் என்ற கோரிக்கையை உங்கள் முன்னால் வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் இருக்கிற கல்லூரியை, என்னுடைய தொகுதியிலேயே இருக்க வேண்டுமென்கிற கோரிக்கையை உங்கள் மூலமாக வைக்கிறேன். ஏனென்று சொன்னால், அது அந்தக் கல்லூரியில் படிக்கின்ற மாணவ, மாணவிகள், பெற்றோர்களுடைய விருப்பம். குடவாசலில் அருமைக்குரிய அண்ணன் எடப்பாடியார் அவர்கள் 2017–ல் ஒரு கல்லூரியைத் துவக்கினார்கள். அக்கல்லூரியை வேறு இடத்திற்கு மாற்றம் செய்வதற்கு முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. கல்லூரி அமைப்பதற்கான உகந்த இடத்தை, அந்தப் பகுதி மக்கள் கொடுக்கின்றபோது, அது வருவாய்த் துறையினரால் நிராகரிக்கப்படுகிறது. எங்களுடைய திருவாரூர் மண் என்பது மனுநீதி சோழன் ஆண்ட மண்; நீதிபரிபாலித்த மண். எனவே, இந்த அவையில் நீதியாகக் கேட்கிறேன். அந்தப் பகுதி மக்களின் விருப்பத்திற்கேற்ப, மாணவ, மாணவிகளின் விருப்பத்திற்கேற்ப, குடவாசல் பகுதியிலேயே அந்தக் கல்லூரி இருக்க வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையை மீண்டும் வைக்கிறேன். பலமுறை இந்த அவையில் கேட்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் எடப்பாடியார் அவர்களும் கோரிக்கை வைத்தார்கள். இன்றைக்கும் அதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் விவாதத்தில் கலந்துகொண்டு பேசுவதற்காக நின்று கொண்டிருக்கிறேன். நான் உணவுத் துறை அமைச்சராக இருந்தவன். அதைப்போல கூடுதலாக இந்து சமய அறநிலையத் துறையின் அமைச்சராக ஒன்றரை வருடங்கள் இருக்கிற வாய்ப்பையும் நான் பெற்றிருந்தேன். இந்த அவையில் பெரிய பெரிய ஜாம்பவான்கள் எல்லாம் உணவுத் துறை அமைச்சர்களாக இருந்திருக்கிறார்கள். அவர்கள் இருந்த காலத்தைவிட கிட்டத்தட்ட ஒன்பதரை ஆண்டுகள் உணவுத் துறை அமைச்சராக இருக்கும் வாய்ப்பினை என்னுடைய தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களும், என்னுடைய அண்ணன் எடப்பாடியார் அவர்களும் எனக்கு வழங்கினார்கள். (மேசையைத்

தட்டும் ஒலி) இந்தக் காலங்களில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விலையில்லாத அரிசியை வழங்கி, பசியில்லாத தமிழகத்தை உருவாக்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் துறையை 9 ஆண்டுகள் கையாளுவதற்குரிய வாய்ப்பைப் பெற்றவன். அந்தக் காலங்களில், மக்களுக்குத் தரமான அரிசியை முறையாகக் கொண்டு சேர்த்திருக்கிறோம். அவர்களுக்குரிய குடும்ப அட்டைகளை உடனடியாக வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம்.

விவசாயிகள் விளைவிக்கின்ற நெல்லை உடனடியாகக் கொள்முதல் செய்திருக்கிறோம்; கொள்முதல் செய்த நெல்லுக்கு உடனடியாக விலையைக் கொடுத்திருக்கிறோம்; அதற்கான பணத்தைக் கொடுத்திருக்கிறோம்; அதுமட்டுமல்லாமல், கொள்முதல் செய்யப்பட்ட இடத்திலிருந்து உடனடியாகக் கிடங்குகளுக்கு நகர்வு செய்திருக்கிறோம்; நகர்வு செய்தது மட்டுமல்லாமல், கிடங்கு வசதிகளை அதிகப்படுத்தியிருக்கிறோம். விலைவாசியைக் கட்டுப்படுத்தியிருக்கிறோம். இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், உச்சபட்சமாக, அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்கள் வழங்கினார்களே, பொங்கல் தொகுப்பாக இரண்டாயிரத்து ஐநூறு ரூபாயும் (மேசையைத் தட்டும் ஒலி) எந்தவித புகாருக்கும் இடமில்லாமல் கொண்டு சேர்த்திருக்கிறோம்.

முற்பகல் 11–50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இன்றைக்கு உணவுத் துறையிலும், கூட்டுறவுத் துறையிலும் Smart card என்பது ஓர் அச்சாணியாக விளங்கிக்கொண்டிருக்கிறது. அதை அறிமுகப்படுத்தியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்; அதனை புழக்கத்திற்குக் கொண்டு வந்தவர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உணவுத் துறை என்பது ஒரு sensitive ஆன துறை. இந்தத் துறையில் ஏதாவது ஒரு பிரச்சினை என்று சொன்னால் ஆட்சிக்கே பிரச்சினை வந்துவிடும் என்று சொல்வார்கள். ஆனால், நாங்கள் உணவுத் துறையாக இருந்தாலும் சரி, வருவாய்த் துறையாக இருந்தாலும் சரி, மற்ற அனைத்துத் துறைகளையும் சிறப்பாகக் கொண்டு சென்றதால், 2016 ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித்

2023 ஏப்ரல் 12] [திரு. இரா. காமராஜ்]

தலைவி அம்மா அவர்கள் பொதுத் தேர்தலை சந்தித்தபோது, 32 ஆண்டுகளுக்குப் பிறகு ஆண்ட கட்சியே மீண்டும் ஆட்சிக்கு வருவதற்குக் காரணமாக இருந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல, 2021 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலிலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான கூட்டணி 75 சட்டமன்ற உறுப்பினர்களைப் பெற்று பிரதான எதிர்க்கட்சியாக இன்றைக்கு அமர்ந்திருக்கிறோம். எதற்காக இதைக் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், இங்கே பேச வருகின்ற சில உறுப்பினர்கள், முன்னர் இருந்த ஆட்சியில் என்ன நடந்திருக்கிறது என்பதை அறிந்து கொள்ளாமல், புரிந்து கொள்ளாமல், வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்று பேசிவிடக் கூடாது என்பதற்காகத்தான் நான் இதைப் பதிவு செய்ய விரும்புகிறேன். இதை எனது அருமை சட்டமன்ற உறுப்பினர்களிடத்தில் நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இன்று வருவாய்த் துறை மானியக் கோரிக்கையின்மீது—வருவாய்த் துறை என்பது அனைத்துத் துறைகளையும் ஒருங்கிணைக்கிற, அனைத்துத் துறைகளுக்கும் அச்சாணியாக இருக்கிற ஒரு துறையாக இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், ஒரு மனிதனை அடையாளப்படுத்துகின்ற துறை வருவாய்த் துறை. எனவே, வருவாய்த் துறை மானியக் கோரிக்கையில்—பேசுவதை நான் பெருமையாகக் கருதுகிறேன்.

சுதந்திர இந்தியாவில் வருவாய்த் துறையில் எத்தனையோ மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. வருவாய்த் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் என்று சொன்னால், அது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கொண்டுவரப்பட்ட மாற்றங்கள் என்பது, சமூக நீதியைப் பாதுகாத்த மாற்றங்கள் என்பதை இந்த நேரத்தில் ஆணித்தரமாக என்னால் குறிப்பிட முடியும். ஒன்றைச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், கர்ணம், முன்சீப் என்று அன்றைக்கு கிராமங்களைக் கட்டி ஆண்டுகொண்டிருந்தவர்களை ஒரே இரவில் 1980 ஆம் ஆண்டு வீட்டுக்கு அனுப்பிவிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) 11 ஆயிரம் படித்த இளைஞர்களை. சாதி, மதம், இனம் என்று பார்க்காமல், எல்லா சாதிகளைச் சேர்ந்தவர்களை, எல்லா மதத்தைச் சேர்ந்தவர்களை, எல்லா இனத்தைச் சேர்ந்தவர்களைத் தமிழகத்தில் கிராம நிர்வாக அதிகாரிகளாக நியமித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 1995 ஆம் ஆண்டு

கிராமத் தலையாரி என்று அழைத்துக் கொண்டிருந்தவர்களைக் கிராம உதவியாளர்கள் என பணி நிரந்தரம் செய்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்தில் நன்றியோடு நினைவுகூர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 69 சதவிகித இட ஒதுக்கீட்டைக் கொண்டு வந்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

அதைப்போல, 4 ஆண்டுகள், 2 மாதங்கள் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் தன்னை ஓர் எளிய முதலமைச்சராக நிலைநிறுத்திக் கொண்டு, சாதாரண மக்களுக்குப் பல்வேறு திட்டங்களைத் தந்தார்கள். அதில், குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அண்ணன் அவர்கள் ஆட்சியில், NEET தேர்வு நடைமுறைக்கு வந்தபோது, NEET தேர்வு தமிழக மாணவர்களை மிகப் பெரிய அளவில் பயமுறுத்திக் கொண்டிருந்தபோது, NEET தேர்வை எதிர்த்து மத்திய அரசிடம் போராடியும், சட்டமன்றத்தில் விவாதித்தும், நீதிமன்றங்களில் வாதாடிக்கொண்டிருந்த நேரத்தில், உடனடி நிவாரணம் வழங்க வேண்டுமென்பதற்காக அந்த மாணவர்களுக்கு, அதாவது, அரசுப் பள்ளிகளிலே படித்த மாணவர்களுக்கு மருத்துவப் படிப்பிற்கான சேர்க்கையில் 7.5 சதவிகித இட ஒதுக்கீட்டைத் தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், அவர்கள் படிப்புக்கான கட்டணத்தையும் அரசே வழங்கும் என்ற உத்தரவினைப் பிறப்பித்த தலைவர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் என்பதை இந்த நேரத்தில் நன்றியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வறட்சிக்கு நிவாரணம் கொடுத்தது மாண்புமிகு அம்மாவின் அரசு என்பதையும் நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினரான மூத்த குடிமக்கள், விதவைகள், மாற்றுத் திறனாளிகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், 50 வயதாகியும் திருமணமாகாத பெண்கள் ஆகியோருக்கெல்லாம் ஓய்வூதியம் தொடர்ந்து வழங்கிக் கொண்டிருந்தோம். ஆனால், அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கருணை உள்ளத்தோடு கூடுதலாக 5 இலட்சம் பேருக்கு ஓய்வூதியம் வழங்க உத்தரவிட்டவர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதில், 90 சதவிகித பேருக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டுவிட்டது என்பதை இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஐநூறு ரூபாய் ஓய்வூதியம்

2023 ஏப்ரல் 12] *[திரு. இரா. காமராஜ்]*

16 இலட்சம் பேருக்கு வழங்கப்பட்டது. அதற்காக ரூ.1,200/– கோடி ஒதுக்கப்பட்டது. ஆனால், ஐநூறு ரூபாய் என்பதை ஆயிரம் ரூபாயாக உயர்த்தி, பயனாளிகளின் எண்ணிக்கையை உயர்த்தி (மேசையைத் தட்டும் ஒலி) ரூ.4,200 கோடி; அதாவது இந்தத் திட்டத்திற்கு 3,000 கோடி ரூபாய் உடனடியாகக் கூடுதலாகக் கொடுத்த அரசு, மாண்புமிகு அம்மாவின் அரசு என்பதை இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இன்றைக்கு. . .

முற்பகல் 11–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய முதல்வர் கலைஞர் அவர்கள்தான் வெறும் 35 ரூபாயாக இருந்ததை ஐநூறு ரூபாயாக உயர்த்தினார்கள். அதற்குப் பிறகு, நீங்கள் ஐநூறு ரூபாயை ஆயிரம் ரூபாயாக உயர்த்தினீர்கள். வெறும் 35 ரூபாயை ஐநூறு ரூபாயாக்கியது கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்கள்.*

திரு. இரா. காமராஜ்: *நான் அதைச் சொல்லவில்லை. மாண்புமிகு அம்மா அவர்கள்தான் ஐநூறு ரூபாய் என்றிருந்ததை ஆயிரம் ரூபாயாக உயர்த்தினார்கள் என்று சொன்னேன். அதில் மிக வருத்தத்திற்குரிய விஷயம், இதற்கெல்லாம் சேர்த்தே மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டுகிறேன். அதாவது, தொடர்ந்து முதியோர் உதவித் தொகை வாங்கிக்கொண்டிருந்த ஏழரை இலட்சம் பேர் இன்றைக்கு வாங்க முடியாமல் தவிக்கிறார்கள். அவர்களுக்கு நிறுத்தப்பட்டிருக்கிறது. அவர்கள், ஏழைகள், எளியோர்கள், உழைக்க முடியாத நலிந்தவர்கள். முதியோர் உதவித் தொகை வாங்கிக்கொண்டிருந்த ஏழரை இலட்சம் பேருக்கு நிறுத்தப்பட்டிருக்கிறது. எனவே, இதனை உடனடியாக அவர்களுக்கு வழங்கிட வேண்டும். நீங்கள், கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் 34 இலட்சத்து 62 ஆயிரத்து 34 பேருக்கு கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்* short*–ஆகத்தான் பதில் சொல்வார்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *ஏழரை இலட்சம் பேரை நீக்கியாகிவிட்டது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். உங்களுடைய ஆட்சிக் காலத்தில் 2014–2015–ல் மட்டும் 4 இலட்சத்து 38 ஆயிரம் பேரை நீங்கள் நீக்கியிருக்கிறீர்கள். 2014–2015–லிருந்து 2020–2021 வரைக்கும் 7 வருடங்களில் மொத்தம் 15 இலட்சத்து 20 ஆயிரம் பேரை நீங்கள் நீக்கியிருக்கிறீர்கள். இந்த ஏழரை இலட்சம் பேரை நீக்கியிருப்பதென்பது, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்களுக்கும் தெரியும். வருடாவருடம் பார்த்தீர்களென்றால்,* double entry *இருப்பவர்கள், இறந்தவர்கள், 10 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமாக சொத்து வாங்குபவர்களையெல்லாம் கணக்கு எடுத்து, கழிப்பதும், கழித்த பிறகு அந்தப் பணம் அரசாங்கத்திற்கு வருவதில்லை. உடனே* seniority*–ல் யார் வரிசையில் இருக்கிறார்களோ, அவர்களுக்குக் கொடுத்துவிடுகிறோம். மூன்றரை இலட்சம் பேரை ஏற்கெனவே நாங்கள் கழித்தோம். அதில் 1 இலட்சத்து 60 ஆயிரம் பேருக்கு நாங்கள் திருப்பிக் கொடுத்துவிட்டோம். அதைக்கூட பார்த்தீர்களென்றால், கொடுக்கும்போது புதிதாக* application *வாங்காமல், அவர்களுடைய பழைய* application*–ஐ சரிபார்த்து,* VAO*–ஐ நேராகப் பார்த்து அதைக் கொடுங்கள் என்று கொடுக்கச் சொல்லியிருக்கிறோம். யாருக்கும் நிறுத்த வேண்டுமென்பது எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் எண்ணம் இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தகுதியுள்ள அத்தனைப் பேருக்கும் கொடுக்கச் சொல்லியிருக்கிறார். இந்த வருடமும் 1 இலட்சம் பேருக்கும் அதிகமாகக் கொடுக்கச் சொல்லியிருக்கிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

***திரு. எடப்பாடி K. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அண்ணா தி.மு.க. ஆட்சியில் இத்தனை ஆயிரம் பேருக்கு நீக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். முறையாக,* application *கொடுக்கவில்லை, எங்களுடைய சேலம் மாவட்டத்தில் ஒரே தொகுதியில் தேர்தல் வருவதற்கு முன்பாக, 20 ஆயிரம் பேருக்குக் கொடுத்திருக்கிறார்கள்.*

எந்தவொரு application-ம் வாங்கவில்லை. இப்படியெல்லாம் கொடுத்த காரணத்தால்தான் அது கணக்கெடுத்து நீக்கப்பட்டிருக்கிறது.

ஆனால், என்னுடைய ஆட்சிக் காலத்தில் முறையாக மனுக்கள் வாங்கப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, தகுதியுள்ளவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஏழையெளியோர்கள், உழைப்பதற்குத் திறனற்றவர்கள் ஆகியோருக்கு மாதந்தோறும் 1,000 ரூபாய் கிடைக்கும்போது, மருத்துவச் செலவுக்குப் பயன்படும். இன்னும் பல்வேறு வசதிகள் கிடைக்கும். அதனால்தான், சிறப்புக் கவனம் எடுத்து, சட்டப் பேரவை விதி எண் 110-ன்கீழ் சுமார் 5 இலட்சம் பேருக்குக் கொடுப்பதாக அறிவிக்கப்பட்டு, 90 சதவிகிதம் பேருக்குக் கொடுத்தோம். அதனால்தான் எங்களுடைய மாண்புமிகு உறுப்பினர், ஏழுரை இலட்சம் பேருக்கு தற்போது நிறுத்தப்பட்டதாக சொல்கிறார்கள். அதையெல்லாம் மீண்டும் பரிசீலியுங்கள். அந்த விண்ணப்பத்தைப் பாருங்கள். அரை ஏக்கர், முக்கால் ஏக்கரில் ஒரு சுவர் இருந்தாலும் அதைச் சுட்டிக்காட்டி நீக்கிவிடுகிறார்கள். அதனால் எந்தவொரு வருமானமும் பெறமுடியாது. அரை ஏக்கர், முக்கால் ஏக்கர் நிலத்தை வைத்துக்கொண்டு, அந்த முதியோர்கள் பயன்பெற முடியாது. ஆகவே, அப்படிப்பட்டவற்றையெல்லாம் நீங்கள் பரிசீலித்து வழங்க வேண்டும் என்பதுதான் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பதிலைக் கேளுங்கள்.*

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *நான் அமைச்சராக இருந்தபோது, சேலத்தில் 2010 ஆம் ஆண்டு 20 ஆயிரம் பேருக்கு application-ஏ இல்லாமல் கொடுத்துவிட்டோம் என்று சொன்னார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, நீங்கள் முன்னாள் முதலமைச்சராக இருந்திருக்கிறீர்கள், அதற்கென்றே ஒரு தாசில்தார் இருக்கிறார். எங்களுடைய ஆட்சிக் காலத்தில் மனுக்கள்*

பெறப்பட்டு, அதாவது மகன் இருந்தாலும் கொடுக்கக் கூடாது என்றிருக்கிறது. வீடு இருந்தாலும், நிலம் இருந்தாலும் கொடுக்கக் கூடாது என்றிருக்கிறது. ஆனால், இந்தியாவிலேயே முதன்முதலாக இந்த அத்தனை conditions-ஐயும் எடுத்துவிட்டு, பெற்ற பிள்ளை சோறு போடவில்லையென்றாலும், நான் போடுவதற்குத் தயாராக இருக்கிறேன் என்று 60 வயதானவர்கள் அத்தனை பேருக்கும் கொடுக்கச் சொல்லி உத்தரவு போட்டவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். அந்த அடிப்படையில் கொடுக்கப்பட்டது.

நண்பகல் 12–00

ஏனென்றால், நாங்கள் கொடுத்ததில் வயதுதான் வரம்பு. வேறு எந்த வரம்பும் கிடையாது. வேண்டுமானால் நீங்கள் எடுத்துப் பாருங்கள். முன்னாள் வருவாய்த் துறை அமைச்சர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்களும் இருக்கிறார்கள். வரம்பு என்பது வயது ஒன்றுதான். வேறு எந்த வரம்பும் நிர்ணயிக்கப்படவில்லை. நாங்கள் நிர்ணயம் செய்தது வயது வரம்பு ஒன்றுதான். 60 வயதைத் தாண்டியிருந்தால், அவர்களுக்குக் கொடுக்கலாம். ஆனால், நீங்கள் என்ன செய்தீர்கள் என்றால், என் தொகுதியில் இருந்த OAP பெறுவோரின் பெயர்கள் அனைத்தையும் நீக்கிவிட்டு, அதை திருமங்கலம் தொகுதிக்கு அப்படியே shift செய்துவிட்டீர்கள். இதே அவையில் அதுகுறித்து பலமுறை பேசப்பட்டிருக்கிறது. நானே உங்களிடம் கேட்டிருக்கிறேன். நான் அதை ஆதாரபூர்வமாகச் சொல்ல முடியும். அந்தப் பட்டியலும் என்னிடம் இருக்கிறது. எங்களுடைய ஆட்சிக் காலத்தில், 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு முறையாக, தாயாக இருந்தாலும் சரி, தந்தையாக இருந்தாலும் சரி, இரண்டு பேருக்கும் உதவித் தொகை கொடுத்தது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய அரசு என்பதை நான் இந்த நேரத்தில் பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்கள், உரையை முடித்துவிடுங்கள். (குறுக்கீடு)*

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதற்காகச் சொல்கிறேன். ** திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் கொடுத்த முதியோர் உதவித் தொகை அத்தனையும் நீக்கப்பட்டன.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2023 ஏப்ரல் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: **என்கிற வார்த்தைகள் எல்லாம் வேண்டாம். எல்லாவற்றையும் மொத்தமாக நீக்கிவிடுகிறேன். (குறுக்கீடு) அவர்கள் முடித்துவிடட்டும். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது முதியோர்களுக்கு வழங்கப்படுகின்ற உதவித் தொகை. இதில் எந்த அரசியலையும் நாங்கள் கலக்கவில்லை. ஆனால், இவ்வாறு தவறுதலாகக் கொடுக்கப்பட்ட காரணத்திற்காக, சம்பந்தப்பட்ட தாசில்தார் விசாரிக்கப்பட்டு suspend செய்யப்பட்டார். அதனால்தான், நாங்கள் இதைச் சொல்கிறோம். ஒரே காலகட்டத்தில் ஒரு தொகுதியில் இவ்வளவு பேருக்குக் கொடுக்கப்பட்டது என்பதற்காக இதைச் சொல்கிறோம். ஆகவே, இத்தகைய தவறுகள் நடைபெற்றன என்பதைத்தான் நான் சுட்டிக்காட்டினேனேயொழிய, வேறொன்றுமில்லை. தகுதியானவர்களுக்குக் கொடுக்க வேண்டும். எங்கள் ஆட்சிக் காலத்தில் பல பேருக்குக் கொடுக்கப்பட்டதை, தற்போது நிறுத்தியிருக்கிறார்கள். அதை ஆய்வு செய்யுங்கள். ஆய்வு செய்து, மீண்டும் அவர்களுக்கு உதவித் தொகையை வழங்க வேண்டுமென்பதுதான் எங்களுடைய கோரிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இனிமேல் அந்தப் பிரச்சினையே வராது. ஏனெனில், குடும்ப அட்டையிலுள்ள நபர் ஒருவருக்குக் கொடுக்கப் போகிறார்களே! மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர், சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தவறுதலாகக் கொடுக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். தவறுதலாகக் கொடுக்கப்படவே இல்லை. (குறுக்கீடு) இல்லை. விதிமுறைகளைத் தளர்த்தி, வயது வரம்பு ஒன்றை மட்டும் அடிப்படையாக வைத்துத்தான் கொடுக்கப்பட்டதே தவிர, வேறு எந்த அடிப்படையும் கிடையாது. நீங்கள் நன்றாகக் கேட்டுக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) உங்களிடம் யாரோ தவறாகச் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு) நீங்கள் தவறுதல் என்று சொல்கிற வார்த்தையே தப்பு. 60 வயதைக் கடந்த அத்தனை பேருக்கும் சரியாக, நியாயமாக, நேர்மையாக, கட்சி பார்க்காமல்,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ஜாதி பார்க்காமல், மதம் பார்க்காமல் கொடுத்த ஒரே அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்கள். உரையை முடித்துவிடுங்கள்.

திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: ஒரே ஒரு நிமிடம். ஒரேயொரு செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்களுக்கும், முன்னாள் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் நான் ஒரு கேள்வியைக் கேட்பதற்காக இதைச் சொல்கிறேன். 35 இலட்சம் பேருக்குக் கொடுக்க வேண்டும் என்று நமக்கு ஒரு target இருக்கிறது. நீங்கள் சொன்னதுபோல், 5 இலட்சம் பேரை நீக்கிவிட்டதாகக் கொண்டால், நாங்கள் தற்போது 30 இலட்சம் பேருக்கு கொடுத்துக் கொண்டிருக்கிறோமா, 35 இலட்சம் பேருக்கு கொடுத்துக் கொண்டிருக்கிறோமா? ஒரு Taluk Office-ல் 200 பேர் reject செய்யப்பட்டால், அடுத்தது seniority-ல் வரிசைப்படி உள்ளவர்களுக்கு நாங்கள் கொடுத்துக் கொண்டேதான் இருப்போம் என்பது உங்களுக்குத் தெரியும். அந்தப் பணம் அரசாங்கத்திற்குத் திரும்பி வருவதில்லை. உங்கள் திருமங்கலம் Taluk Office-ல் 100 பேருக்கு double entry வந்து நீக்கப்பட்டால், seniority-ல் உள்ள அடுத்த 100 பேருக்குக் கொடுத்துவிடுகிறோம். எனவே, அதைத் தள்ளுபடி செய்துவிட்டோம், நிறுத்திவிட்டோம் என்றெல்லாம் சொல்லக் கூடாது. நாங்கள் நிறுத்தியதில், ஆய்வு செய்து 1 இலட்சத்து 60 ஆயிரம் பேருக்குக் கொடுத்துவிட்டோம். மீதியையும் நாங்கள் சரிபார்த்துக் கொடுத்துவிடுகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, இது போதும். மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்கள். உரையை முடியுங்கள்.

திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடு)

2023 ஏப்ரல் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்கள், நீங்கள் பேசுங்கள்.

திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை இலவச வீட்டுமனைப் பட்டா இலக்கு 23 இலட்சத்து 50 ஆயிரம் என்று நிர்ணயிக்கப்பட்டது. அந்த இலக்கினை மிஞ்சுகிற வகையில், 24 இலட்சத்து 74 ஆயிரத்து 167 இலவச வீட்டுமனைப் பட்டாக்களைக் கொடுத்தது மாண்புமிகு அம்மாவின் அரசு என்பதை இந்த நேரத்தில் இந்த அவைக்குப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், தற்போது பட்டா கொடுப்பதில்லை. என்னுடைய தொகுதியில் பட்டா வாங்குவது என்பது மக்களுக்குக் கனவாகவே இருக்கிறது. நாங்கள் கொடுத்த பட்டாக்களில் occupy செய்யாத பட்டாக்களை cancel செய்துவிட்டு, அந்த பட்டாக்கள் மட்டுமே தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால், கொள்கை விளக்கக் குறிப்பில், கொடுக்கப்பட்ட பட்டாக்களின் எண்ணிக்கையைக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆனால், கிராமங்களில் அந்த நிலை இல்லை. பட்டாக்கள் கொடுக்கப்படுவதில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னும் இரண்டு நிமிடங்கள் பேசி முடித்துவிடட்டும். முடித்த பிறகு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லலாம்.

திரு. இரா. காமராஜ்: இல்லை, நான் 9 நிமிடங்கள்தான் பேசியிருக்கிறேன். நேரம் கடந்து கொண்டிருக்கிறது ஐயா. 2011 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படித்த மாணவ, மாணவிகளுக்கு 1 கோடியே 94 இலட்சத்து 772 பேருக்கு இணையதளம் வாயிலாக certificate கொடுத்தவர் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 2011 முதல் 2020 வரை 6 புதிய மாவட்டங்களை அம்மாவினுடைய அரசு உருவாக்கியிருக்கிறது; அதைப்போல, 16 கோட்டங்களை உருவாக்கியிருக்கிறது; 90 வட்டங்களை உருவாக்கியிருக்கிறது என்பதனை இந்த நேரத்திலே நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. இரா. காமராஜ்] [2023 ஏப்ரல் 12

பிற்பகல் 12–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொங்கலுக்கு வேட்டி-சேலை வழங்குவதுபற்றி நேற்றைக்கு இந்த அவையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். எங்களுடைய உறுப்பினர் அண்ணன் திரு. ராஜன் செல்லப்பா அவர்கள் தெரிவித்தபோது, அதாவது தரத்தோடு வழங்குவதற்காகத்தான் காலதாமதம் என்று ஒரு செய்தியைச் சொன்னார்கள். அருமைக்குரிய அண்ணன் எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடியார் அவர்கள் கேட்டபோது பிப்ரவரி மாதம் கொடுத்து முடிக்கப்படுமென்று சொன்னார்கள். ஆனால், இதுவரை பல இடங்களிலே பொங்கலுக்கு வழங்கப்பட வேண்டிய வேட்டி–சேலை வழங்கப்படாமல் இருக்கிறது. நீங்கள் உங்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பில் 30–வது பக்கத்தில் சொல்லியிருக்கிறீர்கள். 9–9–2022–ல் 487.92 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. 1.79 கோடி அதாவது, 1 கோடியே 79 இலட்சம் வேட்டிகளும், 1 கோடியே 79 இலட்சம் சேலைகளும் தகுதியுள்ள நபர்களுக்கு வழங்கப்பட்டுவிட்டதாகச் சொல்கிறீர்கள். எங்களைப் பொறுத்தவரை field–ல் இந்த நிலைமை கிடையாது. முற்றிலும் தவறான ஒரு செய்தியாகவே நாங்கள் இதைக் கருதுகிறோம். பல இடங்களில் கொடுக்கப்படாமல் இருக்கிறது. அது எவ்வளவு பேருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது, அதற்கு ஒதுக்கப்பட்ட பணத்திலே எவ்வளவு செலவாகியிருக்கிறது என்பதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, மக்களை ஆபத்துக் காலங்களில் காப்பாற்றக்கூடிய துறையாக இருக்கிறது. 1977 ஆம் ஆண்டு helicopter மூலம் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் சாப்பாடு போட்டதை இன்றைக்கும் எங்கள் பகுதி மக்கள் பேசுகிறார்கள். அதேபோல, 1982 ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 210 ரூபாய் நிவாரணம் கொடுத்ததை இன்றைக்கும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, இவையெல்லாம் நினைவிலே நிற்கக்கூடிய விஷயங்களாக இருக்கின்றன. அதைப்போல, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சுனாமியின்போது, அந்த சுனாமியினுடைய அலை ஓய்வதற்கு முன்பாகவே சுனாமியோடு சுனாமியாகச் சென்று மக்களைச் சந்தித்தார்கள். அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றினார்கள். அவர்களுக்கு ஒரு நம்பிக்கையைக் கொடுத்து, நம்பிக்கைக்குரிய

தலைவராக இருந்தார்கள். அதைப்போல, அருமைக்குரிய அண்ணன் எடப்பாடியார் அவர்கள், (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும்.*

திரு. இரா. காமராஜ்: *2018 ஆம் ஆண்டு ஆட்சியில் கஜா புயல், மிகப் பெரிய அளவிலே 8 மாவட்டங்களை எங்கு பார்த்தாலும் புரட்டிப் போட்டது. முதல்நாள் வீடுகளிலே படுத்துக்கொண்டிருந்தவர்கள் மறுநாள் வீடில்லாமல் தரையிலே நின்றார்கள். அவர்களுக்கெல்லாம் ஒரு நம்பிக்கை கொடுத்தார்கள். ஓடோடி வந்தார்கள். அவர்களுக்கு நிவாரணம் வழங்கினார்கள். வீடு வீடாக நிவாரணம் வழங்கப்பட்டது. அந்த 8 மாவட்டத்து மக்கள் இன்றைக்கும் அதை நெஞ்சிலே நிறுத்தி அண்ணன் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். அதைப்போல, நிவாரணம் என்று சொன்னால், . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்களும் அதேபோல, எனக்கும் ஒரு நன்றியைச் சொல்லிவிட்டு, உட்காருங்கள்.*

திரு. இரா. காமராஜ்: *அதைப்போல, மழை, வெள்ளம், புயல், சுனாமி இதுபோன்ற பாதிப்புகளை உள்ளடக்கிய மாவட்டங்களாக நம்முடைய தமிழ்நாடு காவேரி டெல்டா மாவட்டங்கள் இயற்கை இடர்பாடுகளால் தொடர்ந்து பாதிக்கப்படுகின்ற மாவட்டங்களாக இருக்கின்றன. வறட்சி நிவாரணமாக இருந்தாலும் சரி; வெள்ள நிவாரணமாக இருந்தாலும் சரி அல்லது விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டிய எந்த நிவாரணமாக இருந்தாலும் சரி உடனடியாகக் கொடுத்த தலைவர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். நிவாரணத்தை உடனடியாக வழங்கினார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி சொல்லி முடியுங்கள்.*

திரு. இரா. காமராஜ்: *அதைப்போல,* insurance*-ஐ முழுவதுமாகப் பெற்றுத் தந்தார்கள். இன்றைக்கு ** அதாவது,* insurance *தொகையை, . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, ** ஆகிய இரண்டையும் நீக்கி விடுகிறேன். சரியாகச் சொல்லுங்கள்.*

திரு. இரா. காமராஜ்: *அதாவது, ** அதுமட்டுமல்லாமல், . . .*

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அமைச்சராக இருந்தவர்கள். பொத்தாம்பொதுவாகக் குற்றச்சாட்டு வேண்டாம். ** என்பதை நீங்கள் சொல்ல வேண்டும். அதனால் அது தேவையில்லாத குற்றச்சாட்டு. அதனால் வேண்டாம். ஒரு நிமிடத்தில் உங்கள் உரையை முடியுங்கள். Correct ஆக 10 நிமிடங்கள் கூட கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்தான் எல்லாம் பேசினார்கள். உரையை முடியுங்கள்.

திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உளுந்து பயிருக்குக் கணக்கெடுப்பு எடுக்கவில்லை; நிவாரணமும் கொடுக்கவில்லை. அதைப்போல, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வீடு தீப்பற்றி எரிந்தால் உடனடியாகத் தாசில்தார் அங்கே போய்விடுவார்கள். அன்றைக்கு 2 ஆயிரம் ரூபாய், 3 ஆயிரம் ரூபாய் இன்றைக்கு 5 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படுகிறது. அது உடனடியாகக் கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால், இன்றைக்கு இருக்கிற நிலை IFHRMS என்கிற மென்பொருளில் பதிவு செய்த பிறகுதான் அந்தத் தொகை கிடைக்குமென்று சொல்வதால், கிட்டத்தட்ட 5 நாட்கள் தாமதமாகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பட்ஜெட் காகிதமில்லாத பட்ஜெட். இங்கே பல அமைச்சர்களே பதில் சொல்லும்போது காகிதமில்லாமல், நேற்றைக்கு மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் காகிதமில்லாமல் பதிலுரையை இங்கிருக்கக்கூடிய தொடுதிரைக் கணினியில்தான் செய்தார்கள். அதனால் காலத்திற்குத் தகுந்தபடி நாம் மாற்றியாக வேண்டும். நிச்சயமாக online-ல்தான் கோரிக்கை வைக்க வேண்டும். அரசு online-ல்தான் பதில் தருகிறது. அதிலே மாற்றமில்லை. அதிலே இனிமேல் நீங்கள் திரும்பவும் இன்னும் 100 வருடங்களுக்குப் பின்னாலெல்லாம் போக முடியாது. நீங்கள் நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

பிற்பகல் 12–10

திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறீர்கள். வருவாய்த் துறையில் CRA ஒரு சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2023 ஏப்ரல் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உரையாற்றியது போதும். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள். (குறுக்கீடு) போதும். (குறுக்கீடு) அது இருக்கட்டும்; நான் கடிதம் எழுதியிருக்கிறேன்; பதில் கிடைக்கும். (குறுக்கீடு) நீங்கள் தயவுசெய்து நன்றி சொல்லி, உரையை முடியுங்கள். (குறுக்கீடு) 15 நிமிடங்களுக்கு, 25 நிமிடங்கள் உங்களுக்குப் பேசுவதற்கு அனுமதித்திருக்கிறேன். (குறுக்கீடு) அமைதியாக உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள். (குறுக்கீடுகள்) நன்றி சொல்ல வேண்டும் என்று நீங்கள் சொல்லுங்கள். நன்றி சொல்லி, உரையை முடியுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.*

திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 ஆண்டுகள் பதவியில் இருக்கிறவர்கள் ஒரு சுற்றறிக்கையினால் பதவியிறக்கம் செய்யக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. அவர்கள் பட்டப் படிப்பு படிக்கவில்லை என்பதால் வட்டாட்சியராக இருக்கிறவர்கள், கூடுதல் ஆட்சியராக இருக்கிறவர்களெல்லாம். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். அவர்களுக்கெல்லாம் பெரிய சங்கம் இருக்கிறது. (குறுக்கீடு) அங்கே தவறு நடக்காது. (குறுக்கீடு)*

திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* Supreme Court *என்ன சொல்லியிருக்கிறதென்றால். . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, அவர்கள் வைத்த கோரிக்கைகள் எல்லாம் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.*

திரு. இரா. காமராஜ்: *அரசு கொள்கை முடிவு எடுத்துக்கொள்ளலாம் என்று* Supreme Court *சொல்லியிருக்கிறது. எனவே, அவர்கள் பதவியிறக்கம் செய்யப்படாமல் அதே நிலையில் நீடிப்பதற்கு உதவிட வேண்டுமென இந்த நேரத்தில் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *யாரையாவது, பதவியில் இருக்கிறவர்களைப் பதவியிறக்கம் செய்திருந்தால், அதற்குரிய காரணங்களை என்னிடம் காட்ட வேண்டும்; என்னிடம் சொல்ல வேண்டும். (குறுக்கீடு) இல்லை, நான் பொதுவாகச் சொல்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் பொத்தாம் பொதுவாகப் பதவியிறக்கம்*

செய்யப்படுகிறது என்று சொன்னால், இந்த அரசுக்கு வேலை, (குறுக்கீடு) நீங்கள் முதலமைச்சராக இருந்தவர்; யாரையாவது பதவியிறக்கம் செய்வதா உங்கள் வேலை? அப்படிச் செய்யக் கூடாது; அப்படிச் செய்திருந்தால் யாருக்கென்று சொல்லுங்கள். நன்றி சொல்லுங்கள்.

திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, நீங்களே கடிதம் எழுதியிருக்கிறீர்கள். மாண்புமிகு முதலமைச்சருக்கு நீங்களே அவர்கள் சொல்லி கடிதம் எழுதியிருக்கிறீர்கள். அந்தக் கடிதத்தின் நகல்கூட என்னிடம் இருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *யாரிடமிருந்தாவது ஒரு கோரிக்கை வந்திருந்தால், அதை அனுப்பியிருப்போம். நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) திரு. க. அன்பழகன். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித் தகுதியை நிர்ணயித்து, இப்போது* RDO *ஆக இருக்கிறவர்களைத் தாசில்தாராக ஆக்கப்பட்டது; தாசில்தாராக இருக்கிறவர்களை துணை தாசில்தாராக ஆக்கப்பட்டது; பதவியிறக்கம் செய்யப்பட்டது. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறார். அதை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டுசென்று, அதைச் சீர் செய்ய வேண்டும் என்பதுதான் அவருடைய கோரிக்கை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது* Supreme Court*-லிருந்து ஒரு தீர்ப்பு வழங்கி, நானே அவர்களிடம் சொன்ன விவகாரம் அது. மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) ஒன்றுமில்லை, உடனே சொல்லி முடித்துவிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது, எங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு, தாசில்தார் பதவி வரைக்கும் நாங்கள் யாருக்கும் பதவியிலிருந்து வெளியேற்றாமல் செய்திருக்கிறோம். அவர்களில் பட்டப் படிப்பு படித்தவர்களுக்கும், பட்டப் படிப்பு படிக்காதவர்களுக்கும்*

2023 ஏப்ரல் 12] [திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்]

இருக்கின்ற பிரச்சினை Supreme Court *வரைக்கும் சென்றிருக்கிறது என்பது மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அப்படி வரும்போது, நிறைய பேரை பதவியிறக்கம் செய்ய வேண்டி வருகிறது என்பதால், நாங்கள் சிறிது* delay *செய்து, சரி செய்து, யாரும் பாதிக்கப்படாத அளவிற்கு, சங்கத்தினர்களை அழைத்துப் பேசி, அவர்களுக்கு வேண்டிய அந்த நிவாரணத்தைக் கொடுக்கிற வேலையையும் பார்க்கிறோம். தாசில்தார் வரைக்கும்* seniority*-யை நாங்கள் போட்டுவிட்டோம்; அநேகமாக 15 நாட்களுக்குள்* Deputy Collector seniority*-யையும் நாங்கள் போட்டு முடிக்கும்போது, இந்தப் பிரச்சினைகள் இருக்காது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள். (குறுக்கீடு) போதும். (குறுக்கீடு) போதும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், நீங்கள் பேசுகிறீர்களா, என்ன? (குறுக்கீடுகள்) போதும், தாராளமாக உரையாற்றுவதற்கு நேரம் கொடுத்தாகிவிட்டது. (குறுக்கீடுகள்) தாராளமாக நேரம் தந்தாகிவிட்டது. நன்றி சொல்ல மட்டும் அனுமதியளிக்கிறேன், சொல்லுங்கள்.*

திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது சொன்னார்கள், ரூ.35 ஆக இருந்ததை, அவர்களுடைய தலைவர் ரூ.500 ஆக உயர்த்தினார் என்று சொன்னார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, குற்றச்சாட்டுகளெல்லாம் வேண்டாம்.*

திரு. இரா. காமராஜ்: *என்னுடைய தொகுதிக் கோரிக்கைகளை தங்களிடம் அளிக்கிறேன். அதனை நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். நன்றி.*

தொகுதிக் கோரிக்கைகள்:

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் தொகுதி, அரசு மருத்துவமனைக்குப் போதுமான மருத்துவர்களை நியமிக்க வேண்டும். நன்னிலம் பேரூராட்சியில் ஒருங்கிணைந்த விளையாட்டு அரங்கத்துடன்கூடிய விளையாட்டு மைதானம் அமைத்துத் தர வேண்டும். நன்னிலம் வட்டம், பேரளம் பேரூராட்சி, சக்கரை கொத்தங்குடியிலிருந்து அகரத்திருமாளம் இணைப்புச் சாலையினை மூன்று கான்கிரீட் பாலங்களுடன் புதிதாக அமைத்துத் தர

வேண்டும். திருவாரூர் வருவாய் கோட்டத்தை இரண்டாகப் பிரித்து நன்னிலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் கோட்டம் உருவாக்கித் தர வேண்டும்.

நன்னிலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தலையூரில் நாட்டாறில் ரெகுலேட்டருடன்கூடிய தடுப்பணை அமைத்துத் தர வேண்டும். குடவாசல் பேரூராட்சியில் ஒருங்கிணைந்த விளையாட்டு அரங்கத்துடன்கூடிய விளையாட்டு மைதானம் அமைத்துத் தர வேண்டும். குடவாசல் ஒன்றியம், வயலூர் ஊராட்சி, பூங்குடியிலிருந்து தஞ்சாவூர் மாவட்டம், பொய்யாநத்தத்தை இணைக்கும் வகையில் கீர்த்திமான் ஆற்றின் குறுக்கே பாலம் அமைத்துத் தர வேண்டும்.

குடவாசல் ஒன்றியம், மருதவாஞ்சேரி ஊராட்சி கோவில்பத்திலிருந்து அதம்பார் ஊராட்சி, ஜெகநாதபுரம் கிராமத்தை இணைக்கும் வகையில் திருமலைராஜன் ஆற்றின் குறுக்கே பாலம் அமைத்துத் தர வேண்டும். வடுகக்குடி அரசினர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும். கூத்தனூர் அரசினர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும்.

வலங்கைமான் பேரூராட்சியில் புதிதாகப் பேருந்து நிலையம் அமைத்துத் தர வேண்டும். குடமுருட்டி ஆற்றில் குப்பசமுத்திரம் வாய்க்காலில் ரெகுலேட்டருடன்கூடிய தடுப்பணை அமைத்துத் தர வேண்டும்.

வலங்கைமான் வட்டம், வீராணம் ஊராட்சி, படப்பக்குடி மெயின் ரோட்டிலிருந்து படப்பக்குடி ஆதி திராவிடர் தெருவிற்குச் செல்லும் சாலையில் இராஜன் வாய்க்காலில் கான்கிரீட் பாலம் அமைத்துத் தர வேண்டும். தென்குவளவேலி அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு வகுப்பறைக் கட்டடம் கட்டித் தர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள். (குறுக்கீடு) போதும், திரு. க. அன்பழகன், பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. க. அன்பழகன், பேசுங்கள்.

***திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

2023 ஏப்ரல் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும் (குறுக்கீடு) போதும். மாண்புமிகு உறுப்பினர், திரு. க. அன்பழகன், உரையை ஆரம்பியுங்கள். (குறுக்கீடுகள்)*

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மானியக் கோரிக்கையின்மீது. . . (குறுக்கீடுகள்)*

3. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஆ) பேரவை நிகழ்ச்சிகள் முழுவதையும் நேரடி ஒளிபரப்பு செய்வது— *தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள், என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஒரு முக்கியமான பிரச்சினைக் குறித்து* Zero Hour*–ல் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்பு கொண்டுவந்தார். அது பாலியல் துன்புறுத்தல் சம்பந்தமான முக்கியமான பிரச்சினை. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், பல சங்கங்கள், பொதுமக்கள் பல்வேறு பிரச்சினைகள் குறித்து கோரிக்கைகளைக் கொடுக்கும்போது, மக்களுக்காக அந்தப் பிரச்சினைகளை அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறார். அப்போது பார்த்தீர்களென்றால், தொடர்ந்து அது* live telecast *ஆகிக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் பேசும்போது* live telecast *ஆகிறது. ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது மட்டும் அதை* cut *செய்கிறார்கள். அது என்னவென்றால், சபாநாயகர் நான் உங்களை சொல்லவில்லை. இங்கே இருக்கிறவர்களில் அது சம்பந்தப்பட்டவர்கள்— எல்லோரும் உங்கள் அறையில் வந்து இதற்கு முன்னர்* complaint *செய்திருக்கிறோம்.—தொடர்ந்து இதை* purpose *ஆக அப்படிச் செய்கிறார்கள். அதற்குப் பின்னர் வருகின்ற கவன ஈர்ப்பு, அது* live telecast *ஆகிறது. (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் அமைதியாக இருங்கள். யாரும் உட்கார்ந்து பேசக் கூடாது. என்னுடைய அனுமதியில்லாமல் யாரும் பேசக் கூடாது, உட்காருங்கள்.*

[2023 ஏப்ரல் 12

திரு. எஸ்.பி. வேலுமணி: எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசி முடித்ததற்குப் பிறகு வருகிற கவன ஈர்ப்பு தொடர்ந்து live telecast ஆகிறது. ஆனால், அவர் பேசும்போது மட்டும், purpose ஆக cut ஆகிறது. இப்போது மட்டும் இல்லை, தொடர்ந்து ஆகிறது. இது முக்கியமான பிரச்சினை. பாலியல் துன்புறுத்தல் சம்பந்தமான பிரச்சினை பற்றி நிறைய நிமிடங்கள் அவர் பேசுகிறார். அதை cut செய்திருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட யாரோ ஒருவர் கண்டிப்பாக தவறாக இயக்குகிறார்; அதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதேபோலத்தான், நேற்றையதினம் நான் இங்கே வந்து, சபாநாயகருக்கு வணக்கம் சொல்கிறேன்; அதைத் தப்பாக, அந்த clippings-ஐ மட்டும் கொடுத்து, நேற்று பத்திரிகையிலே, சில தொலைக்காட்சிகளிலே தப்பாகக் கொடுத்திருக்கிறார்கள். நான் எப்போது அவைக்கு வந்தாலும் சபாநாயகர் அவர்களுக்கு வணக்கம் சொல்லி கும்பிடுவது வழக்கம்; அது ஒரு மரபு. அவ்வாறு வணக்கம் சொன்னதை வேறு மாதிரி தப்பாகக் கொடுக்கிறார்கள். இந்த clippings மட்டும் வெளியே போகிறது. தொடர்ந்து இதுபோன்று செய்து கொண்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் யார் என்பதைக் கண்டறிந்து, அவர்கள்மீது உடனடியாக நடவடிக்கை எடுங்கள்.

பிற்பகல் 12–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். சட்டமன்றப் பேரவைச் செயலாளர் அவர்களிடம், என்ன நடந்திருக்கிறது என்பது பற்றி விசாரிக்கச் சொல்லிவிட்டேன். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்கள் பேசக் கூடாது என்று சொல்கிறீர்களா? உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. காமராஜ், உட்காருங்கள். (குறுக்கீடு)

திரு. எஸ்.பி. வேலுமணி: பலமுறை வலியுறுத்தியும் தொடர்ந்து இவ்வாறு (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ், உட்காருங்கள். உங்கள் கொறடா அவர்கள் பேசுகிறார்கள் அல்லவா! உங்கள் கொறடா அவர்களுக்கும், உங்களுக்கும் என்ன பிரச்சினை? ஒன்றும் இல்லையே? (குறுக்கீடு) அவர்களைப் பேச விடுங்கள்.

2023 ஏப்ரல் 12]

திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, இவ்வாறு தொடர்ந்து நடைபெறுவதால், மக்கள் பிரச்சினை வெளிவராத காரணத்தினால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இன்று வெளிநடப்புச் செய்கிறது.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.)

(திரு. மு. ஜெகன் மூர்த்தி அவையிலிருந்து வெளியேறினார்.)

6. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 41-வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

(ஆ) கோரிக்கை எண் 51-இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

} தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலத்தால் அழிக்க முடியாத, காலத்தால் அழியாத, இன்றும் நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கிற தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் ஆகியோரை போற்றியும், வணங்கியும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு அரசுக் கொறடா அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சியினர் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். கும்பகோணம் தொகுதி, சாக்கோட்டையில் பிறந்த எனக்கு வாக்களித்து,

மூன்றாவது முறையாக செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு அனுப்பி வைத்திருக்கிற கும்பகோணம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய வெற்றிக்கு அயராது பாடுபட்டு உழைத்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் நன்றியை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அருமை இளவல் மாண்புமிகு தம்பி உதயநிதி அவர்களுக்கும், எதிர்காலத்தில் தமிழ்நாட்டின் தனிப்பெரும் தலைவராக உயர வேண்டும் என்று அவருக்கும் என்னுடைய வணக்கத்தையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் மகத்தான தலைவர், இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக உயர்த்த கடுமையாக உழைத்துக் கொண்டிருக்கும் மக்கள் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மீண்டும் வணங்கி, திராவிட மாடல் ஆட்சியினுடைய மூன்றாம் ஆண்டிற்கான வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய மானியக் கோரிக்கையின்மீது இங்கே உரை நிகழ்த்த நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்பிற்கினிய பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபொழுதுதான், நிர்வாக வசதிக்காக தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களை உருவாக்கினார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமேயானால், 1974–ல் புதுக்கோட்டை மாவட்டம் தந்தவர் கலைஞர்; 1989–ல் திருவண்ணாமலை மாவட்டம் தந்தவர் கலைஞர்; 1989–ல் நாகப்பட்டினம் மாவட்டம் தந்தவர் கலைஞர்; 1996–ல் நாமக்கல் மாவட்டம் தந்தவர் கலைஞர்; 1996–ல் திருவள்ளூர் மாவட்டம் தந்தவர் கலைஞர்; 1996–ல் தேனி மாவட்டம் தந்தவர் கலைஞர்; 1996–ல் திருவாரூர் மாவட்டம் தந்தவர் கலைஞர்; 1999–ல் அரியலூர் மாவட்டம் தந்தவர் கலைஞர்; 2009–ல் திருப்பூர் மாவட்டம் தந்தவர் கலைஞர்; இப்படி பல புதிய மாவட்டங்களை மக்களுக்கு நன்மைபயக்கும்விதமாக உருவாக்கி, திட்டங்களை வழங்கியவர் மாண்பிற்கினிய முதல்வராக இருந்த கலைஞர் அவர்கள்.

‘தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடி பாயும்’ என்ற கிராமத்துப் பழமொழிக்கிணங்க, இத்தனைப் புதிய மாவட்டங்களை

2023 ஏப்ரல் 12] [திரு. க. அன்பழகன்]

உருவாக்கிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய பாதையில் வருகின்ற மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைக்கிறேன். சீரோடும் சிறப்போடும் உள்ள கும்பகோணத்தைப் பற்றி தெரிவிக்க நூற்றுக்கணக்கான சிறப்புகள் இருந்தாலும்கூட, சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் கும்பகோணத்திலேயே பிறந்து, கும்பகோணத்திலேயே வாழ்ந்து, கும்பகோணத்திலேயே மறைந்திருக்கிற இராஜராஜ சோழனுடைய வரலாற்றுச் சிறப்பு கும்பகோணத்திற்கு உள்ளது; அனைத்தும் கும்பகோணத்தில்தான். எனவே, கும்பகோணத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் ஒன்றை அறிவிக்க வேண்டுமென இந்த நேரத்தில் மாண்பிற்கினிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–20

இந்த இடத்தில் ஒரு செய்தியை நான் பதிவு செய்ய வேண்டுமென நினைக்கிறேன். சிலருக்கு தெரிந்திருக்கலாம்; சிலர் மறந்திருக்கலாம். மரியாதைக்குரிய சுவாமி புட்டபர்த்தி சாய்பாபா அவர்கள் ஒருமுறை சென்னைக்கு வந்தார்கள். விமானத்தின்மூலம் சென்னைக்கு வந்து, காரில் ஏறி செல்கின்றபோது, தன்னுடைய உதவியாளரிடம், 'கலைஞர் கருணாநிதி வீட்டிற்கு வண்டியை விடுங்கள்' என்று சொல்கிறார். உதவியாளர் பயந்துகொண்டு, தவறாகச் சொல்கிறாரோ என்று நினைத்துக்கொண்டு, மீண்டும் ஒருமுறை கேட்கிறார். இல்லை, இல்லை, கலைஞர் வீட்டிற்கு வண்டியை விடுங்கள் என்று சொல்கிறார். உடனே வண்டியிலிருந்த உதவியாளர் முன்னால் செல்கின்ற வண்டிக்குச் சொல்லி, முதல்வர் வீட்டிற்கு வண்டியை அனுப்புவதற்கு ஏற்பாடு செய்கிறார். அங்கே சென்றவுடன், புட்டபர்த்தி சாய்பாபா அவர்கள், தலைவரைப் பார்க்க வருகின்றபோது, தலைவர் எங்கிருக்கிறார் என்று கேட்டபோது, மாடியில் இருக்கிறார் என்று சொல்கிறார்கள். விறு, விறு என்று மாடிக்கு செல்கிறார்; நம்முடைய கலைஞரைப் பார்த்தார்; இருவரும் அளவளாவி பேசினார்கள்; அன்றைக்குக் கிருஷ்ணா நதிநீர்த் திட்டத்திற்காக 200 கோடி ரூபாயை அவருடைய நிதியாக வழங்கினார். அன்றைக்கு, திரும்ப இறங்கி வருகின்றபோது, அவரோடு வந்த ஆன்மிகவாதிகள், என்னங்க, நீங்களே ஓர் ஆத்திகர்; ஒரு நாத்திகர் வீட்டிற்குச் செல்லலாமா? இது முறைப்படி தவறாயிற்றே என்று கேட்கிறபோது, அந்தப்

[திரு. க. அன்பழகன்] [2023 ஏப்ரல் 12

புட்டபர்த்தி சாய்பாபா அவர்கள் சொன்ன ஒரு செய்தி; நீங்கள் எல்லாம் கருணாநிதியை பார்க்கிறீர்கள்; நான் கலைஞர் கருணாநிதியை இராஜராஜ சோழனாகப் பார்க்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொன்னவர், புட்டபர்த்தி சாய்பாபா அவர்கள். ஏனென்று சொன்னால், அந்தளவுக்குப் பல்வேறு பணிகளைத் தமிழகத்திற்குக் கொடுத்தவர் தலைவர் கலைஞர் அவர்கள் என்பது புட்டபர்த்தி சாய்பாபா அவர்களுக்குக்கூடத் தெரிந்திருக்கிறது என்ற சூழ்நிலையில், இங்கே எதிர்க்கட்சியில் இருப்பவர்களுக்கெல்லாம் தெரியவில்லையே என்ற வகையில்தான் இதனை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

உடனே தலைவர் கலைஞர் அவர்களிடம் நிருபர்கள் கேட்கிறார்கள். புட்டபர்த்தி சாய்பாபா வந்தாரே, என்ன பேசினீர்கள் என்று கேட்கிறார்கள். "அவர் வந்தார்; நிதி தந்தார். அவர் ஆன்மிகமும் பேசவில்லை; நான் நாத்திகமும் பேசவில்லை" என்று சொன்னவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். நம்முடைய அவை முன்னவர் அவர்கள்கூட அன்றைக்கு அந்த நிகழ்ச்சியில் இருந்தார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன். இதனை நான் ஏன் சொல்கிறேன் என்று சொன்னால், புட்டபர்த்தி சாய்பாபாவே தலைவர் கலைஞர் அவர்களை இராஜராஜ சோழன் என்று சொன்னபோது, இங்கே அமர்ந்திருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரண்டாம் இராஜராஜ சோழனாக இன்றைக்கு இந்திய நாட்டில் பெயரெடுத்துக்கொண்டிருக்கிற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், கும்பகோணத்தை மாவட்டத் தலைநகரமாக்க வேண்டும் என்கிற அந்தச் செய்தியைத்தான் இங்கே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

கிராம நிர்வாக அலுவலர் அலுவலகக் கட்டடங்கள், பெரும்பாலான கிராமங்களில் சேதமடைந்திருக்கின்றன என்பது அனைவருக்கும் தெரிந்தது. பொதுவாக மின்சார வசதி, இணையதள வசதி, பார்வையாளர்கள் கூடம் மற்றும் கழிப்பிட வசதியுடன்கூடிய அலுவலகக் கட்டடங்களைக் கட்டித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். தற்போதுள்ள கும்பகோணம் கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் குடியிருப்புகள் 50 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டவையாகும். கும்பகோணம், சோழன்மாளிகை, தேவனாஞ்சேரி பகுதிகளில் கோட்டாட்சியர், வட்டாட்சியர் மற்றும் வருவாய் ஆய்வாளர் ஆகியோருக்குத்

தனியாகக் குடியிருப்புக் கட்டடங்கள் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கும்பகோணம் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் ஒவ்வொரு வருவாய் ஆய்வாளர் சரகத்திலும், தலா இரண்டு இ-சேவை மையங்கள் தொடங்கினால், பொதுமக்கள் அவதியின்றி பயன்பெறுவார்கள் என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழ்நாட்டில் பல ஊராட்சிகள் இருக்கின்றன; பொதுவாக எங்கள் ஊராட்சி சாக்கோட்டையே இருக்கிறது. இதில் ஒரு பக்கம் அண்ணலக்ரஹாரம், இன்னொரு பக்கம் சிவபுரம். மூன்று ஊர்களும் சேர்ந்து ஓர் ஊராட்சியாக இருக்கிறது. அந்த ஊராட்சிகளையெல்லாம் பிரித்து மறுவரையறை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேமாதிரி ஒரு சட்டமன்றத் தொகுதி இருக்கிறது. அதேபோல், ஓர் ஒன்றியத்தில் அடுத்தடுத்து இருக்கிற இரண்டு சட்டமன்றத் தொகுதிகள் கலந்து வருகின்றன. எனவே, அதுமாதிரி இல்லாமல் ஒரு சட்டமன்றத் தொகுதிக்குள் ஓர் ஒன்றியம் வர வேண்டும் என்ற அளவில் அதையும் பிரித்து மறுவரையறை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்பிற்கினிய முதலமைச்சர் பெயரால் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்மூலம் பதிவு செய்யப்பட்டு பயன்பெறும் விவசாயிகளினுடைய கணக்கெடுப்புப் பணிகள் மேற்கொண்டு இணையவழி மூலமாக பதிவேற்றம் செய்யும் வகையில் மாற்றங்கள் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் செயல்பாடுகள் மிகவும் இன்றியமையாதவையாகும். பெருமழை, வெள்ளம், புயல், தீ போன்ற பேரிடர்களில் மக்கள் பாதிக்கப்படும்போது, இந்தத் துறையில் பணியாற்றும் பணியாளர்களின் செயல்பாடுகள் பாராட்டுக்குரியவையாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இதுபோன்ற பணியாளர்களின் பணிச்சுமை மற்றும் அவர்களின் குறைபாடுகளைக் கேட்டறிந்து, அவர்களுடைய இன்னல்களைக் களைவது நம்முடைய அரசினுடைய தலையாய கடமையாகும்.

அடுத்து, மிகப் பெரிய திட்டமான மாதம் ரூ.1,000 வழங்கும் மகளிர் உரிமைத் தொகை திட்டம். நலிந்த மக்களுடைய நலன் நாடி, நலத் திட்ட உதவிகளை வழங்கிய ஆட்சி, தி.மு.க. ஆட்சி.

முதியோர் உதவித் தொகை, வேளாண் தொழிலாளர்களுக்கு உதவித் தொகை, விதவை மகளிருக்கு உதவித் தொகை, மாற்றுத் திறனாளிகளுக்கு உதவித் தொகை, நெசவுத் தொழிலாளர்களுக்கு உதவித் தொகை என்று பல்வேறு கீழ்மட்ட மக்களுக்கெல்லாம் உதவி செய்த ஆட்சி, கழக ஆட்சி என்பதை பல்வேறு நேரங்களில் நிரூபித்துக் காட்டியிருக்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஏனென்றால், தி.மு.க. ஆட்சியில்தான் அதிக அளவில் செய்யப்பட்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–25

அதேநேரத்தில், எந்த உதவியும் நேரடியாகப் பெறாத வறுமை நிலையில் இருக்கும் குடும்பங்களைச் சார்ந்த மகளிருக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை வழங்கப்படும் எனத் தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுகின்றவகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என்பதைத் தாரக மந்திரமாகக் கொண்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கிய மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பிறந்த நாளான செப்டம்பர் 15 ஆம் நாள் முதல் ஒரு கோடி தாய்மார்களுக்கு, எவ்வளவு? (குறுக்கீடுகள்) எல்லோரும் சேர்ந்தே சொல்லலாம்; ஒரு கோடி தாய்மார்களுக்கு நடைமுறைப்படுத்தப்படும் என்று மாண்பிற்கினிய முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியிருக்கிறார்கள். இந்தியத் திருநாடே வியக்கும்வகையில் செய்து காட்டியுள்ள நம் முதல்வர், இந்தத் திட்டத்தின் மூலமாக ஒரு கோடி இல்லத்தரசிகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வீதம் (மணியடிக்கப்பெற்றது) சிறிது நேரம் இந்த மாமன்றத்தில் மணியோசை இல்லாமல் செய்யுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 10 நிமிடங்கள் ஆகிவிட்டன. 2–00 மணிக்குள் மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லி முடிக்க வேண்டும். (குறுக்கீடுகள்)

திரு. க. அன்பழகன்: இந்த மாமன்றத்தில் சிறிது நேரம் மணியோசை இல்லாமல் செய்யுங்கள். மாதந்தோறும் 1,000 ரூபாய் வழங்கும் மிகப் பெரிய திட்டம். இது எல்லோருக்கும் வருவாய் கிடைக்க வேண்டுமென்ற சமூக நீதித் திட்டமாகும். இதுதான்

எங்கள் திராவிட மாடல் ஆட்சி. இந்தியாவில் உள்ள ஒரு சில அரசியல் கட்சிகளைத் தவிர ஏறத்தாழ அனைத்துக் கட்சிகளும் விரும்பக்கூடிய, வரவேற்று, வாழ்த்தி, பாராட்டக்கூடிய திட்டமும் இதுதான்.

இந்திய அளவில் ஒரு மாபெரும் தலைவராகத் திகழக்கூடியவர் எங்கள் திராவிட நாயகர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்று கூறுவதில் நாங்கள் பெருமையடைகிறோம். வெள்ள பாதிப்பு நிவாரணத் தொகை வழங்கியது தி.மு.க. ஆட்சியில்தான். மழை, வெள்ளக் காலங்களில் உயிரிழப்பவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணமாக முதன்முதலாக 1972 ஆம் ஆண்டு இழப்பீட்டுத் தொகை வழங்கும் திட்டத்தைத் தந்தது கழக ஆட்சி. மழை, வெள்ளத்தால் பாதிக்கப்படும் கால்நடைகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கும் திட்டத்தை முதலில் 1996 ஆம் ஆண்டு உருவாக்கியதும் தி.மு.க. ஆட்சியில்தான். அதேபோல், தீ விபத்தில் பாதிக்கப்பட்டு உயிரிழக்கும் கால்நடைகளுக்கு நிவாரணம் வழங்கும் திட்டத்தை 1996 ஆம் ஆண்டு தொடங்கியதும் தி.மு.க. ஆட்சியில்தான். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மண் மடிந்த விவசாயிகளுடைய நிலங்கள் முழுவதையும் இந்தியாவிலேயே முதன்முதலாக 1972 ஆம் ஆண்டில் அரசு சார்பில் சீரமைத்துக் கொடுத்திருக்கின்ற ஆட்சியும் கலைஞர் அவர்கள் ஆட்சிதான் என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2020–2021–ல் வடகிழக்குப் பருவ மழை காலத்தில் ஏற்பட்ட சேதங்களை உடனடியாகச் சீர் செய்திட மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களால் 300 கோடி ரூபாய் வழங்கப்பட்டு உதவிகளைச் செய்ததும் அவர்தான். சென்னை, செங்கல்பட்டு, திருப்பத்தூர், காஞ்சிபுரம், கடலூர், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், மயிலாடுதுறை, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் பெய்த கன மழையால் ஏற்பட்ட மனித உயிரிழப்புகள், கால்நடை இறப்புகள், குடிசைகள் சேதம் ஆகியவற்றிற்கு 90 ஆயிரத்து 273 குடும்பங்களுக்கு, ரூ.32.60 கோடி நிவாரணம் வழங்கியதும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான். 1.80 ஹெக்டேர் வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களுக்கு ரூ.168.87 கோடி நிவாரணம் வழங்கப்பட்டு, 3.59 இலட்சம் விவசாயிகள் பயனடைவதற்குக் காரணமாக இருந்தவர், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

[திரு. க. அன்பழகன்] [2023 ஏப்ரல் 12

மக்கள் குறைகளைப் போக்க முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதன்முதலாக முதலமைச்சரான 1969 ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளில் மனுநீதித் திட்டம் ஒன்றைக் கொண்டு வந்தார். அந்தத் திட்டம், மக்களைத் தேடி அதிகாரிகள் வர வேண்டும் என்பதற்கு அடையாளமாக, அவர்களிடம் மனுக்களைப் பெற்று குறைகளைத் தீர்க்க வேண்டுமென்று ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார். நம்முடைய மாண்பிற்கினிய முதலமைச்சர் அவர்கள், ஒரு படி மேலே சென்று மக்கள் அளிக்கும் மனுக்கள்மீது உடனடியாக நடவடிக்கைகளை எடுத்திட வேண்டுமென்று பேரறிஞர் அண்ணாவை போன்று, முத்தமிழறிஞர் கலைஞரை போன்று கழக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் ‘உங்கள் தொகுதியில் முதலமைச்சர்’ என்ற புதிய திட்டத்தை 7–5–2021 அன்று உருவாக்கினார். தேர்தலுக்கு முன் தந்த மனுக்கள்மீது அளித்த வாக்குறுதிகளின்படி 100 நாட்களில் நடவடிக்கை எடுத்தார். முதல்வரின் முகவரி திட்டத்தில் 17.70 இலட்சம் மனுக்கள் பெறப்பட்டு, 17.30 இலட்சம் மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டன. இப்படி தீர்வு கண்ட ஒரே அரசு, ஒரே முதலமைச்சர், இந்திய நாட்டிலேயே நம்முடைய முதலமைச்சர் ஒருவர்தான் என்பதற்கு அடையாளமாக இன்றைக்குச் செயலாற்றிக்கொண்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

நத்தம் மற்றும் UDR திட்டங்களில் ஏற்பட்ட பிழை, பட்டா தொடர்பான மேல் முறையீட்டு மனுக்கள் மற்றும் கணினிப் பதிவுகளில் உள்ள திருத்தங்கள் குறித்த பொதுமக்களின் மனுக்கள்மீது நடவடிக்கை எடுத்திட குறைந்தது ஆறு மாதங்கள் முதல் ஓராண்டு வரை காலதாமதமாகிறது. வருவாய்த் துறையில் உள்ள அன்றாடப் பணிகளினிடையே இதுபோன்ற மனுக்களையும் சேர்த்துக்கொள்வதால், இவற்றை ஆராய்ந்து முடிவு செய்ய காலதாமதமாகிறது. எனவே, நத்தம் மற்றும் UDR திட்டங்களில் ஏற்பட்ட பிழை, பட்டா தொடர்பான மேல்முறையீட்டு மனுக்கள், கணினிப் பதிவு திருத்த மனுக்கள் இவற்றின்மீது நடவடிக்கை எடுத்திட தனிப் பிரிவு ஒன்றினைப் புதிதாகத் தொடங்கினால், காலதாமதம் தவிர்க்கப்பட்டு, பொதுமக்களுடைய குறைகள் நீங்கும்.

2023 ஏப்ரல் 12]

பிற்பகல் 12–30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேச ஆரம்பித்து 15 நிமிடங்கள் ஆகிவிட்டன. பேரவையை 2–00 மணிக்கு முடித்தாக வேண்டும். மீண்டும், மாலை 4–00 மணிக்கு பேரவைக் கூட்டம் ஆரம்பிக்கப்படுகிறது. (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் பேச ஆரம்பித்து 15 நிமிடங்கள் ஆகிவிட்டன. நன்றி சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு)

திரு. க. அன்பழகன்: உங்களுடைய இடம் வானளாவிய அதிகாரம் படைத்தது. நான் உங்களிடம் கட்டளையாகக் கேட்கவில்லை. நான், வேண்டுகோளாகத்தான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மொத்தம் 8 உறுப்பினர்கள் பேச வேண்டும். (குறுக்கீடு)

திரு. க. அன்பழகன்: எதிர்க்கட்சிகளுக்குக் கொடுத்த அளவுகூட ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்குக் கொடுக்கவில்லையென்றால் எப்படி ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்னும் 8 உறுப்பினர்கள் பேச வேண்டும். அதனால் அதற்குத் தகுந்தமாதிரி நீங்கள் பேசி முடியுங்கள். (குறுக்கீடு)

திரு. க. அன்பழகன்: கடந்த ஆட்சியில் என்ன பாடுபட்டோம் என்று உங்களுக்கும் தெரியும். நீங்களும்தானே அப்போது உறுப்பினராக இருந்தீர்கள். எனவே, எங்களுக்கும் கொஞ்சம் நேரம் கொடுங்கள். நிலப் பதிவு ஆவணங்கள், ROR, PS மற்றும் RSR போன்றவை digitial முறையில், கணினி முறையில் பதிவேற்றம் செய்தால், அரசு புறம்போக்கு நிலங்களில், அரசுக்குச் சொந்தமான நிலங்களில் ஏற்படும் தவறுகளைக் காலதாமதமின்றி உடனுக்குடன் சரிசெய்யலாம்.

முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின்படி, மகன் இருந்தாலும் முதியோர் ஓய்வூதியம் வழங்கப்படும் என்று 1999 ஆம் ஆண்டு ஆணையிட்டவர் நம்முடைய முதலமைச்சர் கலைஞர். கிராம உதவியாளர் குடும்பங்களுக்கு ஓய்வூதியம் வழங்கினார் நம்முடைய கலைஞர்.

சிலப்பதிகாரத்தில் ஒரு காட்சி வருகிறது. சேர மாமன்னன் செங்குட்டுவன் மனைவி வேண்மாளுடன் தன்னுடைய தலைநகர் வஞ்சி மாநகருக்கு மலைவலம் செல்கிறார். அப்போது, அங்கே மலைவாழ் மக்கள் வந்து மன்னனைப் பார்த்து மகிழ்ந்து, மலையில் கிடைக்கும் பழங்கள், கிழங்குகள், தேன் முதலிய பலவகைப் பொருட்களைக் கொடுத்து, மன்னனை வணங்குகிறார்கள். அப்போது, மதுரையில் கண்ணகி நீதி கேட்டு வழக்காடிய பாண்டிய நெடுஞ்செழியன் உயிர் துறந்த, கொடுமையைச் சேர மன்னனிடம் சொல்கிறார்கள். அதைக் கேட்ட சேர மன்னன் மிகவும் வருத்தப்பட்டு சொல்கிறார். மலை புரண்டால் அச்சம், மழை பெருகினால் அச்சம், மக்கள் தவறு செய்தால் அச்சம், துன்ப துயரங்கள் இல்லாமல் மக்களைப் பாதுகாத்து செங்கோல் தவறாமல் ஆட்சிபுரியும் மன்னர் குடும்பத்தில் பிறப்பது என்பதே இன்பமல்ல, இன்பமும், துன்பமும். (குறுக்கீடு) அய்யன் திருவள்ளுவர் அவர்கள், தனக்கு இன்பம் தேடாமல், தன் நாட்டு மக்களுக்கு இன்பம் தேடி, மக்களின் நன்மைக்காக திட்டங்களை நிறைவேற்றுபவர்தான் மக்களுக்கு துன்பம் நேராமல் அவர்களைத் தாங்கி நிற்கும் தூண் போன்றவர் என்று கூறுகிறார். இப்படி இத்தனைக்கும் இணையாகச் செயல்படுகிற இந்திய நாட்டில் ஒரே முதலமைச்சர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் ஒருவர்தான் அடையாளம் என்று நான் கூறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நேரம் இல்லையென்று நீங்கள் சொல்கிறீர்கள். இன்னும் நிறைய பேச வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி சம்பந்தமான கோரிக்கைகளை நான் தங்களிடம் கொடுத்துவிடுகிறேன். அதிலுள்ள ஒரேயொரு திட்டத்தை மட்டும் நான் சொல்லிவிடுகிறேன்.

ஒரு திட்டத்தைத் தீட்டும்போது ஓராண்டு, இரண்டாண்டுகள், ஐந்தாண்டுகள் என போடுவார்கள். குறிப்பாக, என்னுடைய கும்பகோணத்தில் 1989 ஆம் ஆண்டு புறவழிச் சாலை ஒன்று மாண்பிற்கினிய தலைவருடைய ஆட்சியில், அண்ணன் திரு. கோ.சி. மணி அவர்கள் ஆரம்பித்தார்கள். ஒரு மகாமகத்திற்கு 12 ஆண்டுகள். இப்போது 3-வது மகாமகம் வரப் போகிறது. கிட்டத்தட்ட 36 ஆண்டுகளாக முடியாத ஒரு புறவழிச் சாலை கும்பகோணத்தில் இருக்கிறது என்பதை மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். எனவே, அந்த

2023 ஏப்ரல் 12] [திரு. க. அன்பழகன்]

புறவழிச் சாலையை விரைவாக முடித்துத் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தந்த வாய்ப்புக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். மீதமுள்ள தொகுதிக் கோரிக்கைகளை நான் தங்களிடம் கொடுத்துவிடுகிறேன். அவற்றை நான் இந்த அவையில் பேசியதாகக் கருதி, அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

தொகுதிக் கோரிக்கைகள்:

கும்பகோணம்-நீலத்தநல்லூர் குறுகலான சாலையை 7.0 மீட்டர் சாலையாக அகலப்படுத்த வேண்டும். கும்பகோணத்திலிருந்து அனைத்து நவக்கிரகத் திருக்கோயில்களுக்கும் சென்றுவர தினந்தோறும் சிறப்புப் பேருந்துகளை இயக்கிட வேண்டும்.

கல்லூர் கிராமத்தில் அரசு புறம்போக்கு இடம் (புல எண் 207/1) தேர்வு செய்யப்பட்டுள்ளது. அதற்கு நில உரிமை மாற்றம் செய்து, கல்லூர் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க வேண்டும். திப்பிராஜபுரம் ஊராட்சியில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வேண்டும்.

பழவத்தான்கட்டளை ஊராட்சி, முத்துப்பிள்ளைமண்டபம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வேண்டும். தில்லையம்பூர் ஊராட்சி, ஆண்டித்தோப்பு முடிகொண்டான் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட நடைபாலத்தை இடித்துவிட்டு புதிதாக வண்டிப் பாலம் அமைத்துத் தர வேண்டும். விக்கிரவாண்டி-கும்பகோணம்-தஞ்சாவூர் NH45-C சாலை நான்குவழிச் சாலையாக அகலப்படுத்தும் பணியை விரைவுபடுத்தி, விரைவில் பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும். நாகை மாவட்டம், மயிலாடுதுறை குமாரமங்கலம் கிராமத்தையும், கடலூர் மாவட்டம், மா.ஆதனூர் கிராமத்தையும் இணைக்கும் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கதவணைக் கட்டும் பணியினை விரைவுபடுத்த வேண்டும்.

தஞ்சாவூர் மாவட்டம், வாழ்க்கை கிராமத்தையும், அரியலூர் மாவட்டம், தூத்தூர் கிராமத்தையும் இணைக்கும் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே தடுப்பணைக் கட்ட வேண்டும். திருநாகேஸ்வரம் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரமுயர்த்த வேண்டும். கும்பகோணம் மாநகராட்சியில் புதிதாகச்

சேர்க்கப்பட்ட தாராசுரம் பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் அமல்படுத்திட வேண்டும். மேலும், கும்பகோணம் மாநகராட்சியிலுள்ள 8 வார்டுகளை உள்ளடக்கிய பகுதிகளுக்கும் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்திட வேண்டும். கும்பகோணத்தில் மகளிர் நீதிமன்றம் அமைக்க வேண்டும். சோழபுரம் மற்றும் திருநாகேஸ்வரம் ஆகிய பேரூராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த வேண்டும்.

கும்பகோணம் தொகுதிக்குட்பட்ட மாநகர ஒன்றிய கிராமப் பகுதிகளில் பழுதடைந்த நிலையில் காணப்படும் சாலைகளை சீரமைக்க வேண்டும். கும்பகோணம் தொகுதிக்குட்பட்ட நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான பழுதடைந்த நிலையில் காணப்படும் சாலைகளைச் சீரமைக்க வேண்டும். கும்பகோணம் நகராட்சியில் இரயில்வே நிலையம் அருகில் இரயில்வே கேட் (எண் LC 269) மாதுளம்பேட்டை தெருவின் குறுக்கே உள்ளது. எனவே, அங்கு இரயில்வே கீழ்ப்பாலம் அமைத்துத் தர வேண்டும்.

கும்பகோணம் மாநகராட்சியில் புதிய மின்சார தகன மேடை அமைத்துத் தர வேண்டும். கும்பகோணம் மாநகராட்சிக்குச் சொந்தமான சேய் குளத்தில், சுற்றுலாத் துறைமூலம் சுற்றுலாப் பயணிகளுக்காகப் படகு சவாரி ஏற்படுத்திட வேண்டும்.

தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்குக் காலை உணவுத் திட்டத்தின்கீழ் சிற்றுண்டி வழங்க வேண்டும்.

1975 ஆம் ஆண்டு முதல் ஆவணங்களின் பதிவுகள் இணையதளத்தில் சார்-பதிவாளர் அலுவலகத்தால் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. அதற்கு முந்தைய ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட பத்திரங்கள் மற்றும் மற்ற ஆவணங்களையும் கணினியில் விரைவில் பதிவேற்றம் செய்தால், பொதுமக்கள் அதனையும் இணையதளத்தின்மூலம் பதிவிறக்கம் செய்துகொள்ள ஏற்றவகையில் சார்-பதிவாளர் அலுவலகம் செயல்பட வேண்டும்.

கடந்த 2021 செப்டம்பர் மாதம் நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத் தொடரின்போது, கும்பகோணத்தில் அரசு சட்டக் கல்லூரி அமைக்கப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டேன். எனவே, கும்பகோணத்தில் அரசு சட்டக் கல்லூரி அமைத்துத் தர வேண்டும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 12]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்கள்.

***திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடியெடுத்து வைப்பதிலே அறிஞர் அண்ணாவை, படைநடுங்க வைப்பதிலே தந்தை பெரியாரை, கருத்துகளைப் பொழிவதிலே முத்தமிழறிஞர் கலைஞரை, தினம் தினம் நமக்கெல்லாம் நினைவூட்டி வருகின்ற கழகத்தினுடைய ஒப்பற்றத் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) வெல்லுகின்ற விழியாலும், கள்ளமற்ற சிரிப்பினாலும், செல்வாக்கு, பெருமை இவை சிறிதேனும் கருதாமல், எல்லோரிடத்திலும் ஒட்டி உறவாடுகின்ற தன்மையாலும் எங்களது இதயங்களில் நீக்கமற நிறைந்து, எதிர்காலத்தில் இந்த இயக்கத்தையும், தமிழ்நாட்டையும் வழிநடத்தவிருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர், அன்புச் சகோதரர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தை நான் முதற்கண் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12–35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

காட்டை அழிப்பது கூடும்–அலை
கடலை தூர்ப்பதும் கூடும்
மேட்டை அகழ்வதும் கூடும்–விரி
விண்ணை அளப்பதும் கூடும்
ஏட்டையும் நூலையும் தடுப்பது கூடும்–உரிமை
எண்ணத்தை மாற்றுதல் எப்படிக் கூடும்?
அடக்குமுறை செய்திடல் முடியும்!–கொள்கை
அழிக்கும்முறை எவ்வாறு முடியும்?
ஒடுக்குசிறை காட்டுதல் முடியும்!–உணர்
வொடுக்குதல் எவ்வாறு முடியும்?
திடுக்கிடச் செய்திடும் உன்னை–இத்
திராவிடர் எழுச்சியை மாற்றவா முடியும்?

என்கின்ற புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசனின் வைர வரிகளை உச்சரித்து, தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை, இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு ஆகியவை குறித்த

[திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி] [2023 ஏப்ரல் 12

விவாதத்தில் பங்கேற்று உரையாற்றுகின்ற வாய்ப்பு கிடைத்தமைக்கு நான் முதற்கண் மகிழ்ச்சியடைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாதனை என்றால் என்ன? பத்தோடு பதினொன்று, அத்தோடு இது ஒன்று என்று கூட்டிச் சொல்வதில்லை சாதனை. சாதனை என்று சொன்னால், இந்தப் பத்தில் இல்லாததை, சமூகத்திற்குப் பயனுள்ளதாகவும், வலுவுள்ளதாகவும் நடத்திக் காட்டுவதுதான் சாதனை. அந்தவகையில் பார்க்கப்போனால், முதல்வரின் முகவரி எனும் திட்டத்தின்கீழ் பெறப்பட்ட 17.70 இலட்சம் மனுக்களில் 17.30 இலட்சம் மனுக்களுக்குத் தீர்வுகண்டு மக்களை மகிழ்வித்திருக்கின்றாரே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அது சாதனை. வெள்ளத் தடுப்புப் பணிகளைப் போர்க்கால அடிப்படையில் முடுக்கிவிட்டு, சென்னை மாநகரின் வெள்ள அபாயத்தைக் குறைத்திருக்கிறாரே மாண்புமிகு முதலமைச்சர், அது சாதனை. (மேசையைத் தட்டும் ஒலி) நீர்நிலை புறம்போக்கு, மேய்க்கால், பாதை, கோயில், வனங்கள் என்று 13,044 எக்டேர் பரப்புள்ள அரசு நிலத்தை மீட்டெடுத்து இருக்கின்றாரே மாண்புமிகு முதலமைச்சர், அது சாதனை. இப்படிச் சாதனைகளை நான் அடுக்கிக்கொண்டே செல்லத்தான் ஆசை. இருந்தாலும், நேரம் இடம் கொடுக்காத காரணத்தினால் தலைப்புக்குள் செல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை என்றால் என்ன? தலையாக இருக்கின்ற அரசுக்கும் உடலாக விளங்குகின்ற மக்களுக்கும் முதுகெலும்பாக திகழ்வதுதான் வருவாய்த் துறை என்று சொன்னால் அது மிகையாகாது. அந்த வருவாய்த் துறை என்பது தன்னுடைய நிருவாகப் பணியினை எப்படி அமைத்துக் கொண்டுள்ளது என்பதை பார்ப்போமேயானால் 38 மாவட்டங்களாக, 94 வருவாய் கோட்டங்களாக, 314 வருவாய் வட்டங்களாக 1,195 குறுவட்டங்களாக, 16 ஆயிரத்து 743 வருவாய்க் கிராமங்களாக இன்னும் சொல்லப்போனால், 53 ஆயிரத்து 82 பணியாளர்களைக் கொண்ட அந்த வருவாய்த் துறை இப்படி பரந்து, விரிந்து மக்களுக்கு உழைக்கின்ற ஓர் உன்னதமான பணியைச் செய்துகொண்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

இன்னும் சொல்லப்போனால், மனிதனுடைய பிறப்பு முதல் இறப்பு வரை மக்களோடு பின்னிப் பிணைந்து

இருக்கின்ற வருவாய்த் துறையானது, நம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி அமைந்ததிலிருந்து இந்தநாள் வரையில் மக்களுக்கான சேவையை எந்த வகையில் செய்திருக்கிறது என்று பார்ப்போமேயானால், மக்களுக்குத் தேவையான 27 வகையான சான்றிதழ்களைக் கழகத்தின் ஆட்சி அமைந்து, இந்தநாள் வரை எந்தளவிற்கு வழங்கியிருக்கிறது என்பதைச் சற்றே பின்னோக்கி பார்ப்போமேயானால், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு கொள்கை விளக்கக் குறிப்பு புத்தகத்தைத் தந்திருக்கிறார்கள். அந்தப் புத்தகத்தில் 181–182–வது பக்கங்களில் குறிப்பிட்டுள்ளதைப்போலவே மக்களுக்குத் தேவையான 27 வகையான சான்றிதழ்களை ஏறக்குறைய அல்ல, உறுதியாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், ஒரு கோடியே 68 இலட்சத்து 18 ஆயிரத்து 44 சான்றிதழ்களை வழங்கி வருவாய்த் துறை சாதனைப் படைத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிச் சொல்லிக்கொண்டே செல்லலாம்.

பிற்பகல் 12–40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்னால் உரையாற்றிய எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. காமராஜ் அவர்கள் பேசுகின்றபோது சமூகப் பாதுகாப்புத் திட்டத்தைப் பற்றி சொன்னார். நான் குறிப்பிட விரும்புவது நம்முடைய கழக ஆட்சி அமைந்ததற்குப் பின்னால், இப்போது வெளியிடப்பட்ட 2023–2024 ஆம் ஆண்டுக்குரிய நிதிநிலை அறிக்கையில், அந்தச் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் தகுதியான பயனாளிகளைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்காக 5 ஆயிரத்து 346 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த 5 ஆயிரத்து 346 கோடி ரூபாயைப் பெறப்போகின்றவர்கள் யார் என்று பார்த்தால், மிட்டா மிராசுகள் அல்ல; செல்வந்தர்கள் அல்ல; இந்த நிதியைப் பெறப் போகின்றவர்கள் மூத்த குடிமக்கள் என்று சொல்லப்படுகின்ற முதியோர்கள், ஏழை விவசாயிகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், காலத்தின் கோலத்தால் கைம்பெண் ஆன பெண்கள், அரை நூற்றாண்டைக் கடந்தும் திருமணம் ஆகாமல் தவித்துக்கொண்டிருக்கின்ற பெண்கள், விளிம்பு நிலையில் தவித்துக்கொண்டிருக்கின்ற பெண்கள், இன்னும் சொல்லப்போனால் தன்னுடைய வேலையை, தானே செய்துகொள்ள முடியாத நிலையில் இருக்கின்ற மாற்றுத் திறனாளிகள்.இப்படி வருவாயை ஈட்ட முடியாதவர்களுக்காகத்தான்,

[திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி] [2023 ஏப்ரல் 12

அவர்களுக்கு வாழ்வளிக்கும் விதமாகத்தான், நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த நிதியை ஒதுக்கியிருக்கின்றார்கள்.

நம்முடைய எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. காமராஜ் அவர்கள், முதியோர் ஓய்வூதியத் திட்டம் நிறுத்தப்பட்டிருப்பதாகச் சொன்னார். இப்போது நம்முடைய கழக அரசில் ஒதுக்கப்பட்ட நிதிக்கும், கடந்த ஆட்சியிலே ஒதுக்கப்பட்ட நிதிக்கும் ஒரு சிறு வித்தியாசத்தைச் சொல்லவேண்டுமென்று சொன்னால், சிறு வித்தியாசம் அல்ல; பெரிய வித்தியாசமே இருக்கிறது. ஏனென்று சொன்னால், கடந்த கால ஆட்சி நிறைவு கட்டத்தில் 2020–2021 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட இடைக்கால நிதிநிலை அறிக்கை புத்தகத்தில் பக்கம் 24–ல் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இந்தச் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கு 4,807.56 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கழக ஆட்சி அமைந்த பின்னால், 2021–2022 ஆம் ஆண்டிற்குரிய திருத்திய நிதிநிலை அறிக்கைப் புத்தகத்தில் 15–வது பக்கத்திலே, தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது, அதாவது நமது கழக ஆட்சி அமைந்ததற்குப் பின்னால் ஒதுக்கப்பட்ட தொகை என்பது 4,807.56 கோடி ரூபாய். அதைத் தொடர்ந்து 2022–2023 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட நிதிநிலை அறிக்கை புத்தகத்தில் 20 ஆவது பக்கத்திலே, 4,816 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு, அதாவது 2023–2024 ஆம் ஆண்டிற்குரிய நிதிநிலை அறிக்கையின் பக்கம் எண் 69–ல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தச் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்திற்காக ரூ.5,346 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான், எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. காமராஜ் அவர்களுக்குச் சொல்ல விரும்புவதெல்லாம், உங்களது ஆட்சிக் காலத்தில் நீங்கள் ஒதுக்கிய தொகை என்பது 4,306.76 கோடி ரூபாய்தான். ஆனால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் படிப்படியாக உயர்த்தப்பட்டு, இன்றைக்கு சமூக விளிம்புநிலை மக்களுக்காகக் கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கியிருக்கின்ற தொகை என்பது, உங்கள் ஆட்சியில் ஒதுக்கப்பட்ட தொகையைக்காட்டிலும், கிட்டத்தட்ட 1,040 கோடி ரூபாய் உயர்த்தி வழங்கி, அந்த விளிம்பு நிலை மக்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வாழ வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

2023 ஏப்ரல் 12] [திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி]

இதுமாத்திரமல்ல, அவர் பேசும்போது பட்டா மாறுதல்கள் குறைவாக நடப்பதாகச் சொன்னார். அவர் சொல்வது சரியல்ல. (மணியடிக்கப்பெற்றது) இன்றைக்கு வெளியிடப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பு புத்தகத்திலே 161 ஆம் பக்கத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இணையவழியாக பட்டா மாறுதல் வேண்டி விண்ணப்பித்த விண்ணப்பங்கள் முறையாக ஆய்வு செய்யப்பட்டு, இன்றைக்கு வழங்கப்பட்டிருக்கின்ற பட்டா மாறுதல் என்பது 37.88 இலட்சம் பட்டா மாறுதல்கள் ஆகும். அதுமாத்திரமல்ல, நிலத்தின் உரிமையாளர்கள் எங்கிருந்து வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும், எந்த நேரத்திலும், பட்டா மாறுதலுக்கு விண்ணப்பிக்கலாம் என்ற ஒரு திட்டத்தை கடந்த ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார். அந்தத் திட்டத்தின் அடிப்படையில்மட்டும் பயனடைந்தோர் எண்ணிக்கையைப் பார்க்கப்போனால், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு வெளியிடப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தின் பக்கம் 189-ல் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது 304,230 பட்டா மாறுதல்கள் தானியங்கி முறையில் செய்யப்பட்டிருக்கின்றன. எனவே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி, எப்போதெல்லாம் தமிழகத்தில் அமைகிறதோ அப்போதெல்லாம் ஏழையெளிய மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் தருவதை வழக்கமாக வைத்துக்கொண்டிருக்கிறது என்பதற்கு சிறிய உதாரணம் இப்போது நம்முடைய கழகத் தலைவர் அவர்கள் தலைமையிலே அமைந்திருக்கின்ற நல்லாட்சியில் ஏழையெளிய மக்களுக்கு மட்டுமல்ல, ஆதி திராவிடர், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான திட்டத்தின்கீழ் உள்ள மக்களுக்கும், அதேபோல, சிறப்பு வரன்முறைப்படுத்தும் திட்டத்தின்கீழ், தடையேதும் இல்லாத அரசு நிலங்களில் வாழ்பவர்களுக்கும், அதைப்போலவே நகரளவைக் குடியிருப்புத் திட்டத்தின்கீழும், வழங்கப்பட்டிருக்கின்ற இலவச வீட்டுமனைப் பட்டா என்பது, இன்றைக்கு வழங்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் 103-வது பக்கத்தில் குறிப்பிட்டதைப்போலவே 4 இலட்சத்து 37 ஆயிரத்து 900 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் இதுவரையில் வழங்கப்பட்டிருக்கின்றன.

பிற்பகல் 12–45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.*

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: *இந்த நேரத்தில் ஒரேயொரு கோரிக்கையை மட்டும் நான் உங்கள் முன் வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். சென்னை மாநகரம் முழுவதும் அரசு நிலங்களில் நீண்ட காலமாகக் குடியிருந்து வருகிறவர்களுக்குப் பட்டா வழங்கப்படவில்லை. 2006 முதல் 2011 வரையிலான காலத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய தலைமையில் ஆட்சி நடைபெற்றபோது, அரசு நிலங்களில் நீண்ட காலமாக வாழ்ந்து வந்தவர்களுக்குப் பட்டா வழங்கப்பட்டது. அதைப்போலவே, சென்னை மாநகரில் பல்வேறு இடங்களிலுள்ள அரசு நிலங்களில் வசிப்பவர்களுக்குப் பட்டா வழங்கப்பட வேண்டும்.*

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், என்னுடைய திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதியில் அரசு நிலங்களில் நீண்ட நாட்களாக வசித்து வருகின்றவர்களுக்குப் பட்டா வழங்கப்படவில்லை. குறிப்பாக, வார்டு எண் 72–ல் சாஸ்திரி நகர், வ.உ.சி. நகர், திரு.வி.க. நகர், அம்பேத்கர் நகர், ஜெ.ஜெ. நகர், நரசிம்மன் நகர், தாஸ் நகர், வார்டு 73–ல், Pensioners' Lane, *பாடிசன்புரம் லேன், காந்தி நகர், வார்டு எண் 75–ல்* S.S. *புரம்* A Block, S.S. *புரம்* B Block, *வார்டு எண் 76–ல் வெங்கட்டம்மாள் சமாதி ரோடு, பொன்னியம்மன் கோயில் தெரு, பொன்னியம்மன் கோயில் 2–வது தெரு,* Bricklin Road, K.M. Garden, Corporation lane, C.S. *நகர் எனப்படுகின்ற கான்ரான் ஸ்மித் நகர். . .*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், அவற்றையெல்லாம் எழுதிக் கொடுத்துவிடுங்கள். அவற்றையெல்லாம் பதிவு செய்துகொள்ளலாம். நேரமாகிவிட்டது. நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: Corporation Lane, C.S. *நகர் என்றழைக்கப்படும் கான்ரான் ஸ்மித் நகரில் வசிப்பவர்களுக்கு நீண்ட நாட்களாகப் பட்டா வழங்கப்படவில்லை. ஆகவே, விரைந்து நடவடிக்கை எடுத்து, பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், தொகுதிக் கோரிக்கைகளை எழுதிக் கொடுத்துவிடுங்கள்.*

TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 12]

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: *இன்னும் ஒரேயொரு கோரிக்கை. திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதியில் இரண்டு தாலுகா அலுவலகங்கள் இருக்கின்றன. ஒன்று பெரம்பூரிலும், மற்றொன்று புரசைவாக்கத்திலும் இருக்கின்றது. திரு.வி.க. நகரில் புளியந்தோப்பு பகுதியின் ஒரு பகுதியைச் சார்ந்த மக்கள் மட்டும் பெரம்பூர் தாலுகா அலுவலகத்திற்குச் செல்கிறார்கள். மற்ற பகுதிகளைச் சார்ந்த மக்கள் அனைவரும் வட்டாட்சியரை அணுக வேண்டுமென்று சொன்னால், புரசைவாக்கம் தாலுகா அலுவலகத்திற்குச் செல்கிறார்கள். திரு.வி.க. நகர் முழுவதற்கும் ஒரேயிடத்தில் நிர்வாகம் நடைபெறுவதற்கு வசதியாக, பெரம்பூர் தாலுகா அலுவலகத்திற்குச் செல்கின்ற புளியந்தோப்பு மக்கள், இனிமேல் புரசைவாக்கம் தாலுகா அலுவலகத்திற்குச் செல்லக்கூடிய சூழ்நிலையை உருவாக்கி, நிருவாகம் செம்மையுறவும், அப்பகுதி மக்களின் நலன் கருதி, புளியந்தோப்பு பகுதியை புரசைவாக்கம் தாலுகா அலுவலகத்தோடு இணைத்திட வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள். தொகுதிக் கோரிக்கைகளை என்னிடத்தில் கொடுத்துவிட்டால், அனைத்தையும் பதிவு செய்துகொள்கிறேன். அதனால், உரையைச் சீக்கிரம் முடியுங்கள்.*

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்களுடைய தேவைகளை ஓர் அரசாங்கம் நிறைவேற்றித் தர வேண்டுமென்று சொன்னால், அதற்கு அடிப்படையாகத் தேவைப்படுவது நிதியாதாரம். அந்த நிதியாதாரத்திற்கு அடிப்படை, வரி வருவாய். கடந்த கால ஆட்சியில் வரி வருவாய் 5.88 சதவிகிதமாக வீழ்ச்சியில் இருந்தது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியினாலும், எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளினாலும், வரி வருவாய் 6.11 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. அது மாத்திரமல்ல, பேரிடர் காலங்களில், . . .*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ் அவர்கள்.*

திரு. ஆர். கணேஷ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். எனக்கு இரண்டாவது முறையாகப் போட்டியிட வாய்ப்பளித்து, வெற்றிபெறச் செய்த அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், இளந்தலைவர் திரு. ராகுல் காந்தி அவர்களுக்கும், அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், முன்னாள் மத்திய அமைச்சர் திரு. ஆர். பிரபு ஐயா அவர்களுக்கும், முன்னாள் மத்திய அமைச்சர் திரு. ஆ. ராசா அவர்களுக்கும், கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும், கட்சி நிருவாகிகள் அனைவருக்கும், என்னுடைய தொகுதி மக்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அமைச்சராகப் பொறுப்பேற்று முதல் முறையாக மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்குச் சிறப்பாக பதிலளித்த மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது கோரிக்கையை ஏற்று மேல்குந்தா ஊராட்சி, கின்னக்கொரை கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு ரூ.5.45 கோடி நிதியொதுக்கி, விரைவாக பணிகள் நடைபெற்றதற்கு, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். உதகையிலே mini TIDEL Park அமைக்க அரசாணை வெளியிட்ட மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–50

உதகை நகராட்சிப் பகுதியின் புராதனமான குடிநீர் ஆதாரமான Parsons Valley நீர்த்தேக்கத்திற்குச் செல்லும் மின்பாதையில் மழை வெள்ளக் காலங்களில் அடிக்கடி மின் தடை ஏற்படுகிறது. இதைத் தடுக்கும் பொருட்டு, புதைவட மின்கம்பிகள் அமைப்பதற்கு ரூ.7.00 கோடி நிதி ஒதுக்கித் தந்த மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாற்றுத் திறனாளிகளின் பயன்பாட்டிற்கு மருத்துவக் கல்லூரிக்குத் தனது சொந்த செலவிலேயே Battery Car வழங்கிய

2023 ஏப்ரல் 12] [திரு. ஆர். கணேஷ்]

நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அருள்மிகு மாரியம்மன் கோயிலுக்கு இந்த ஆண்டின் இறுதியில் குடமுழுக்கு செய்து தரப்படும் என்று கூறிய மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. சேகர்பாபு அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலாவதாக என் தொகுதி மக்களின் நலன் கருதி உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின்கீழ் உதகை சட்டமன்றத் தொகுதியில், கடனாடு ஊராட்சி, ஜாவளி முதல் மேல்முள்ளிகூர் வரை சாலை அமைப்பதற்கு அனுமதி வழங்கியதற்கும், கடனாடு கிராமத்தில் தொடக்கக் கூட்டுறவு வங்கி மற்றும் உரக் கிடங்கு ஆகியவற்றிற்குக் கட்டடங்கள் கட்டுவதற்கான பணிகளைத் துவங்குவதற்கு நிருவாக அனுமதி அளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உதகை தாவரவியல் பூங்காவில் நீண்டகாலமாகப் பணிபுரியும் பண்ணைப் பணியாளர்கள் கிட்டத்தட்ட 20 நாட்களாக உண்ணாவிரதப் போராட்டம் இருந்தனர். நமது மரியாதைக்குரிய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களோடு மாண்புமிகு மாவட்ட அமைச்சர் அவர்களும், நானும் கலந்துபேசி, அவர் இட்ட ஆணையின்படி நேற்று அவர்களது உண்ணாவிரதம் கைவிடப்பட்டு, இன்று அவர்கள் பணிக்குத் திரும்பியிருக்கிறார்கள். சிறப்பு காலமுறை ஊதியமாக இருந்த அவர்களது ஊதியத்தை காலமுறை ஊதியமாகவும், கிட்டத்தட்ட 1,200 பண்ணைப் பணியாளர்களுக்கு நல்வாழ்வு கிடைத்திட உரிய ஆணை வழங்கிட வேண்டுமாய் தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும், அவர்கள் தினசரி கூலியை உயர்த்தி வழங்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். தாங்கள் அவர்களது கோரிக்கையினை ஏற்று தயவுசெய்து நல்வாழ்வு வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உதகையில் சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருகின்ற சூழலில்—மரியாதைக்குரிய முன்னாள் முதலமைச்சர் திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் ஐயா அவர்களும், திரு. சிவாஜி கணேசன் அவர்களும் 1970 ஆம் ஆண்டுகளின் திரைப்படங்களில், ஜப்பானில் rope car–களில் சென்ற காட்சிகளைப் பார்த்திருக்கிறோம்.

இன்னும் இந்த rope car வசதி இந்தியாவிலே வரவில்லையென்று நினைக்கிறேன். நீலகிரி மாவட்டத்திற்குத் தொட்டபெட்டா முதல் படகு இல்லம் வரை தயவுசெய்து rope car வசதி அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். சென்ற ஆட்சியிலும் நான் கேட்டிருந்தேன். இந்த ஆட்சியிலும், இந்த ஆண்டில், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்குமாறு மீண்டும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

உதகையில் சுற்றுலாப் பயணிகளின் நலன் கருதி, ஊட்டி தாவரவியல் பூங்கா, Charring cross, ATC பேருந்து நிலையம், மத்திய பேருந்து நிலையம், படகு இல்லம் ஆகிய இடங்களில் கர்நாடக மாநிலத்தில் உள்ளதைப்போன்று குளியலறை வசதியுடன்கூடிய நவீன கழிப்பிடங்கள் வேளாண்மைத் துறையின் சார்பாகவோ அல்லது சுற்றுலாத் துறையின் சார்பாகவோ கண்டிப்பாக அமைத்துக் கொடுத்து, ஒரு நல்ல தீர்வினைச் சுற்றுலாப் பயணிகளுக்கு அளிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் வாழ்ந்துவரும் பூர்வகுடி படுக இன மக்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க ஒன்றிய அரசிற்கு மாநில அரசு மூலமாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அழுத்தம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உதகை சட்டமன்றத் தொகுதி, உல்லத்தி ஊராட்சியிலுள்ள தட்டனேரிப் பகுதியில் வாழும் சுமார் 70 சதவிகித மலைப் பகுதி மக்களுக்கு ST certificates வழங்கப்பட்டுள்ளன. இன்னும் 30 சதவிகித மக்களுக்கு certificates வழங்க வேண்டியுள்ளன. தயவுசெய்து ஏன் வழங்கப்படவில்லை, ஏன் இந்தச் சுணக்கம் என்பதை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கேட்டு, ஆராய்ந்து, 30 சதவிகித மக்களுக்கான certificates வழங்குவதற்கு ஆவன செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

உதகை, காந்தல் பகுதியில் ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் கலைஞர் நினைவு சமுதாயக் கூடம் கட்டுவதற்கு சென்ற ஆண்டிலேயே மாவட்ட ஆட்சியர் அவர்கள் அரசிற்குக் கருத்துரு அனுப்பியுள்ள நிலையில் அதனை உடனடியாகக் கட்டுவதற்கு ஆவன செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

உதகையில் parking வசதி அமைப்பதற்கு ATC பேருந்து நிறுத்தம் அருகில் கிட்டத்தட்ட ஒன்றே முக்கால் ஏக்கர் நிலம்

அரசால் கையகப்படுத்தப்பட்டுள்ளது. அது வருவாய்த் துறைக்குச் சொந்தமானது. வரி பாக்கி கிட்டத்தட்ட ஐநூறு கோடி ரூபாய் முதல் ஆயிரம் கோடி ரூபாய் வரை இருக்கும். 1.75 ஏக்கர் எடுத்திருக்கிறோம். அதற்கு சிமென்ட் தளம் அமைக்க வேண்டும். மேலும், அந்த Bus stand பகுதியிலுள்ள 4 ஏக்கர் நிலத்தை நாம் கையகப்படுத்தி parking வசதியைச் செய்தால்தான், ஊட்டிக்கு ஒரு நிரந்தரத் தீர்வு கிடைக்கும். தற்போது போக்குவரத்து நெரிசல் அதிகம் காணப்படுகிறது. எனவே, இதனை உடனடியாகச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–55

உதகை நகராட்சிப் பகுதியில் அதிக இடங்களில் வாகன நெரிசல் உள்ளது. Multi-level parking வசதி இருந்தால் போக்குவரத்து நெரிசல் குறையும். மரியாதைக்குரிய மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் நீலகிரி மாவட்ட National Highways-ல் ஒரு பாலம் அமைத்துத் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பாலத்தை உடனடியாக அமைத்து மக்களின் துயர் துடைக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நீலகிரி மாவட்டத்தில் புறநகரில் சாகுபடியாகும் தேயிலைக்குக் குறைந்தபட்ச விலையை முப்பது ரூபாய் என்று நிர்ணயம் செய்ய மத்திய அரசிடம் வலியுறுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குந்தா தாலுகாவிலுள்ள அரசு பொது மருத்துவமனைக்கு 24X7 என்ற விதத்திலே இரண்டு மருத்துவர்களை நியமிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். தயவுசெய்து மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் நிச்சயமாகச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உதகை சட்டமன்றத் தொகுதியில் அதிக அளவில் காலனிகள் இருப்பதால் பழங்குடியின மக்களுக்கு ஆதி திராவிடர் நலத் துறை சார்பாக சமுதாயக் கூடம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உதகை சட்டமன்றத் தொகுதியில் இத்தலார்–முள்ளிகூர் ஊராட்சி இணையும் இடத்திலே அமைந்துள்ள Emerald பகுதியிலே, அதிக அளவிலே பழங்குடியின மக்களும், விவசாயிகளும், விவசாயக் கூலித் தொழிலாளர்களும் 5 ஆயிரம் பேர் உள்ள நிலையில் அங்கு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத் தோடர் இன மக்களுக்கு ஒரு கோடி ரூபாய் அளவிலே தொழில் தொடங்க மரியாதைக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேற்று ஆணையிட்டிருக்கிறார்கள். அதற்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 68 mund-களிலே தோடர்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்குச் சாலை வசதி, குடிநீர் வசதி மற்றும் தெரு விளக்கு வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உதகை சட்டமன்றத் தொகுதி, குந்தா தாலுகா, மஞ்சூரிலிருந்து 35 கிலோ மீட்டர் இருக்கிறது. தயவுசெய்து தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் ஒன்று அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உதகை அரசு கலைக் கல்லூரியில் உள்ள மைதானம் திறந்த வெளியாக உள்ளதால் குடியரசு தின விழா, சுதந்திர தின விழா போன்றவை நடைபெறும்போது காற்று மழை வருவதால் அங்கு ஒரு stage அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

குந்தா பகுதியில் அதிகளவில் சுற்றுலாத் தலங்கள் உள்ளதால் கேரள பகுதியிலிருந்து அதிகளவில் சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். மாண்புமிகு அமைச்சரிடத்திலே சொல்லியிருக்கிறேன். குந்தா பகுதிக்கு economic development கிடைக்க, தயவுசெய்து வனத் துறை கட்டுப்பாட்டிலுள்ள checkpost-ல் சொல்லி, கேரள வாகனங்களை விடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

உதகை ஊராட்சி ஒன்றியம், கூக்கல் முதல் கிண்ணக்கரை வரை 100 கிலோ மீட்டர் உள்ளதால், அதைப் பிரித்து இரண்டு ஒன்றியங்களாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீலகிரி மாவட்டத்திற்கு Master Plan உள்ளதால் DTCP approval பெற்று பத்திரப் பதிவு செய்ய முடியாது. இதனால் பத்திரப் பதிவு அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, நீலகிரி மாவட்ட மக்களுக்குத் தனியாக அரசாணை பிறப்பித்து, பத்திரப் பதிவு செய்ய வழிவகை செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் அதிக இடங்களிலே மண் சரிவு ஏற்படுவதால், தடுப்புச் சுவர்களுக்கு அதிகளவு முக்கியத்துவம் கொடுத்து, அதைக் கட்டித் தர அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கலைஞர் பட்டா திட்டம், இப்போது Supreme Court-ல் stay இருக்கிறது என்று சொல்கிறார்கள். தயவுசெய்து, கலைஞர் பட்டா திட்டத்தின்கீழ் வீடு

இல்லாதவர்களுக்கு அளிக்க வேண்டும். மேய்க்கால் புறம்போக்கு இடங்களிலே உள்ள வீடுகளுக்கு மின்சார இணைப்பு நிச்சயமாக வழங்க வேண்டும்.

கூடலூரில் Section 17 வகைப்பாடு நிலப் பகுதிகளுக்கும் நிச்சயமாக ஒரு தீர்வு காண வேண்டும். மேய்க்கால் புறம்போக்கு இடங்களிலே உள்ள வீடுகளுக்கு மின்சார இணைப்பு வழங்க மாண்புமிகு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் உடனடியாக ஒரு நல்ல தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பான திட்டங்களான, மகளிர் இலவசப் பேருந்து பயணம், மகளிர் உரிமைத் தொகை, மக்களைத் தேடி மருத்துவம், இல்லம் தேடி கல்வி, காலை சிற்றுண்டி திட்டம், உங்கள் தொகுதியில் முதலமைச்சர், புதுமைப் பெண் திட்டம் போன்றவற்றால் இந்தியாவையே திரும்பி பார்க்கச் செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு காங்கிரஸ் கட்சியின் சார்பாக நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம், ஜெய்ஹிந்த். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உரையை முடித்துவிட்டேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.

திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் மானியக் கோரிக்கைமீது பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மற்றும் கொறடா ஆகியோருக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய மாவட்ட அமைச்சர் மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,
புரட்டுகளை உருட்டல் வேண்டும்,
புதுமைகளை வளர்த்தல் வேண்டும்,
போலிகளைப் பொசுக்கல் வேண்டும்,
போர்க்குண மறவராய் உலவல் வேண்டும்,
என்றுமே பெரியார், அண்ணா நம் இதயத்தில்
வேண்டும் என்ற ஏற்றல் வேண்டும்

என்ற தலைவர் கலைஞரின் கவி மொழியை நன்கு உணர்ந்திருக்கிற நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் உரையைத் தொடங்குகின்றேன்.

பிற்பகல் 1-00

ஒன்றே செய்ய வேண்டும்;
ஒன்றே ஆயினும் நன்றே செய்ய வேண்டும்;
நன்றே ஆயினும் இன்றே செய்ய வேண்டும்;
இன்றே ஆயினும் இன்னே செய்ய வேண்டும்.

என்ற புலவர் கபிலர் வைர வரிகளுக்கு ஏற்ப, சேர, சோழ, பாண்டியர் எனும் மூவேந்தர்களின் வாரிசாக விளங்குகின்ற நமது தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு தளபதியார் அவர்கள் அரசுதான் மக்களின் உண்மையான அரசாக உள்ளது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைக் கூறி, எங்கள் மனதின் இருப்பே, திராவிட இயக்கத்தின் சிறப்பே, இன்றைய சமூகத்தின் சிறந்த இளைஞராய், சுய மரியாதை மண்ணின் வலிமைமிகு தலைவராய், உதயசூரியனாய் உதித்த அன்பு சின்னவர் எங்கள் இளம் தலைவரை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை என்பது மிக முக்கியமான ஒரு துறை. இந்த நாட்டின் எல்லைகளைக் காட்டுகின்ற ஒரு முக்கியமான துறை. பிரிட்டிஷ் காலத்தில், 1800 ஆம் ஆண்டுதான் இங்கே ஆங்கிலேயருடைய கம்பெனியால் இந்த ஆட்சியரகம் உருவாக்கப்பட்டது. வருவாய் கிராமங்கள், தாலுகாக்கள், வருவாய் கோட்டங்கள், மாவட்டங்கள் உருவாக்கப்பட்டன. உருவாக்கப்பட்டது மட்டுமல்லாமல், 1967 ஆம் ஆண்டு அண்ணா காலத்தில்தான் புன்செய் நிலங்களுக்கான தீர்வை இரத்து செய்யப்பட்டது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், 1969 ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் இந்த மாநிலத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகுதான் ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமைதோறும் தமிழ்நாட்டில் மாவட்ட ஆட்சியர்கள் அலுவலகங்களிலே பொதுமக்கள் குறை கேட்கின்ற ஒரு வாய்ப்பு உருவாக்கப்பட்டது. அந்த வாய்ப்பை உருவாக்கித் தந்தவர் நமது முத்தமிழறிஞர் கலைஞர் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

2021 ஆம் ஆண்டு தேர்தல் பரப்புரையில், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள், கோரிக்கை

மனுக்களுக்கான பெட்டிகள் வைக்க வேண்டுமென்று குறிப்பிட்டு, எல்லா மாவட்டங்களிலும் வைக்கப்பட்டன. அப்படி வைக்கப்பட்ட பிறகு உங்கள் தொகுதியில் முதலமைச்சர் என்ற திட்டத்தை உருவாக்கினார். அதற்கு திருமதி ஷில்பா, இ.ஆ.ப. அவர்களைச் சிறப்பு அதிகாரியாக நியமித்து, துறைவாரியான மனுக்களுக்கு உடனுக்குடன் தீர்வு காண ஆணை பிறப்பித்தார். அனைத்து மாவட்டங்களிலும், 72 மரப் பெட்டிகள் மற்றும் 275 அட்டைப் பெட்டிகள் வைக்கப்பட்டு, 4 இலட்சத்திற்கும் மேற்பட்ட மனுக்கள் பெறப்பட்டன. பொதுமக்களின் குறைகளைத் தீர்ப்பதற்காக அம்மனுக்கள், மாவட்ட வாரியாக, துறை வாரியாக வகைப்படுத்தப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் மின் ஆளுமைக்கு உட்படுத்தப்பட்டன. இவ்வாறு அம்மனுக்கள் கணினிமூலம் பராமரிக்கப்பட்டு, துறை வாரியாகப் பிரிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட துறைகள்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவற்றிற்கான தீர்வுகள் காணப்பட்டன. இந்தப் பெருமை நம்முடைய மாண்புமிகு அண்ணன் தளபதி அவர்களையே சாரும். ஆக, இந்த மகத்தான திட்டத்தை வெளிப்படுத்திய இந்த மீடியாக்களுக்கெல்லாம், செய்தித் தொடர்பாளர்களுக்கெல்லாம் நான் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, மக்கள் குறை தீர்ப்பதில் தமிழ்நாடு அரசின் பங்களிப்பு பாராட்டிற்குரியது என்று 27-3-23 அன்று ஒன்றிய அமைச்சர் மாண்புமிகு டாக்டர் ஜிதேந்திரசிங் அவர்கள் தமிழக முதல்வருக்கு ஒரு கடிதம் அனுப்பியிருக்கின்றார். அந்தக் கடிதத்தில் தமிழ்நாடு அரசால் மையப்படுத்தப்பட்ட பொதுமக்கள் குறை தீர்க்கும் மற்றும் கண்காணிப்பு அமைப்பு Centralised Public Grievance Redress and Monitoring System மூலம் 32,852 மனுக்களுக்கும், மாநில மக்கள் குறை தீர்க்கும் இணையதளத்தின் வாயிலாக 1,08,658 மனுக்களுக்கும், சேவை வழங்கியின்கீழ் 2,92,701 மனுக்களுக்கும் தீர்வுகாணப்பட்டதைச் சுட்டிக்காட்டி, ஒன்றிய அமைச்சரே நம்முடைய தளபதி அவர்களை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டியிருக்கின்றார் என்று சொன்னால், அவர் செயல்படுகின்றவிதம் நாட்டு மக்களுக்கு நன்றாக, தெளிவாக தெரிந்து கொண்டிருக்கிறது.

[திரு. இ. கருணாநிதி] [2023 ஏப்ரல் 12

அதுமட்டுமல்ல, வெள்ள மேலாண்மை. அண்மையில் ஏற்பட்ட மழையின்போது, அரசால் முன்கூட்டியே திட்டமிடப்பட்டு, நிறைவேற்றப்பட்ட வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகள் அனைவராலும் பாராட்டப்பட்டன. 1355 கோடி ரூபாய் மதிப்பிலான வெள்ளத் தடுப்புப் பணிகள் போர்க்கால அடிப்படையில் முடுக்கிவிடப்பட்டு, சென்னை நகரில் வெள்ள பாதிப்பு பெருமளவுக் குறைக்கப்பட்டுள்ளது. மழை நேரங்களில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இரவோடு இரவாக, கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளார். இந்தியாவிலே எந்த முதல்வரும் செய்யாத வகையில், வெள்ளத் தடுப்புப் பணிகளைக் கண்காணிக்கின்ற முதல்வர், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

குறிப்பாக சென்னை புறநகரைப் பொறுத்தமட்டில், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அதேபோன்று மாவட்ட பொறுப்பு அமைச்சர்கள், அரசு தலைமைச் செயலாளர், அரசுச் செயலாளர்கள் என அனைவரும் நேரடியாக, தாம்பரம், பல்லாவரம் உள்ளிட்ட சென்னை புறநகர்ப் பகுதிகளைப் பார்வையிட்டு தீர்வு கண்டுள்ளனர் என்றால், இந்த அரசு வெள்ளத் தடுப்பிலே எந்தளவுக்கு வேகமாக இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 1-05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறைமூலம் வழங்கப்படும் சான்றுகள் அனைத்தும் இணையதளத்தில், website-ல் ஒருங்கிணைக்கப்பட வேண்டும் எனத் தங்கள்மூலம் வருவாய்த் துறையை நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து அரசு புறம்போக்கு பட்டா. ஒருவர் பிறந்து, வாழ்ந்து, பட்டா பெற இயலாத துயரமான நிலைக்கு முடிவு கட்டவும், இந்த அரசு செவி சாய்த்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு நிலத்தில் வசிக்கும், வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள மக்களின் நிலங்கள் சொந்தமாக்கப்பட வேண்டும். சென்னையில் மக்கட்தொகைப் பெருக்கத்திற்கேற்ப பல ஏரிகள் குடியிருப்புப் பகுதிகளாக மாற்றப்பட்டுள்ளன. எனவே, அரசு இந்தச் சூழ்நிலையை உணர்ந்து, நிலங்களை

2023 ஏப்ரல் 12] [திரு. இ. கருணாநிதி]

வகை மாற்றம் செய்ய வேண்டும். ஏரி, நீர்நிலைகளைத் தவிர, பயனற்ற நிலங்களில் வசிக்கின்ற மக்களுக்குப் பட்டா வழங்கிட வேண்டும். தமிழ்நாடு முழுவதும் இதுபோன்று கோரிக்கைகள் எழுந்துகொண்டிருக்கின்றன. மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள், பொதுமக்களிடமிருந்து வரப்பெறும் குறைகளைக் கேட்டு, இதன் விளைவாக தமிழ்நாடு அரசு வருவாய்த் துறைமூலம் 19-1-2023 தேதியிட்டு அரசாணை எண் 35-ஐ வெளியிட்டு, அதன் அடிப்படையில் அரசு நிலங்களை உட்பிரிவு செய்து, மாவட்ட ஆட்சியர்மூலம் பட்டா வழங்க உத்தரவு வழங்கப்பட்டது. இந்த அரசாணையை நடைமுறைப்படுத்தினால், 90 சதவிகிதம் பட்டாக்களுக்குத் தீர்வு காண முடியும். 234 தொகுதிகளுக்கும் கேட்கவில்லை. என்னுடைய பல்லாவரம் தொகுதிக்கு மட்டும் கேட்கின்றேன். பல்லாவரம் தொகுதிக்குட்பட்ட பொழிச்சலூர் கிராமத்தில் 693, பம்மல் கிராமத்தில் 2 ஆயிரத்து 305, அனகாபுத்தூர் கிராமத்தில் 5 ஆயிரத்து 660, திருநீர்மலை கிராமத்தில் 29, ஜமீன் பல்லாவரம் கிராமத்தில் 394, அஸ்தினாபுரம் கிராமத்தில் 45, திரிசூலம் கிராமத்தில் 1601, ஆக ஒரு தொகுதியில் கிட்டத்தட்ட 10 ஆயிரத்து 801 பட்டாக்கள் வழங்கப்படாமல் இருக்கின்றன என்று சொன்னால், தமிழ்நாட்டில் உள்ள 233 தொகுதி மக்களுக்கும் எவ்வளவு பட்டாக்கள் வழங்கப்பட வேண்டும்? மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இதை நிச்சயமாக நிறைவேற்றுவார்கள் என்று நினைக்கின்றேன்.

வீட்டுமனைப் பட்டா. 2006 முதல் 2011 வரையிலான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பொற்கால ஆட்சியில் ஒருங்கிணைந்த காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில், 62 ஆயிரம் ஏழையெளிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் இலவசமாக வழங்கப்பட்டன. அதனுடைய மதிப்பு 2 ஆயிரத்து 850 கோடி ரூபாயாகும். அப்போது மாண்புமிகு அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் நடைபெற்ற பட்டா வழங்கும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்கள். ஆக, வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்களில், 25 ஆயிரம் வீட்டுமனைப் பட்டாக்கள் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் கிராமப் பதிவேடுகளில் ஏறவில்லை. இதன் காரணமாக 12 ஆண்டுகளுக்கு மேலாக, அவர்களுக்கு வழங்கப்பட்ட பட்டாக்களைக் கிராம அடங்கலில் பதிவேற்றம் செய்யக் கோரி, வட்டாட்சியர் அலுவலகத்திற்கு மக்கள் அலையாய் அலைந்து கொண்டிருக்கின்றார்கள்.

ஆகவே, அரசு புறம்போக்கு நிலங்களில் கடந்த பத்தாண்டுக் காலத்திற்கு மேலாக மேய்க்கால் புறம்போக்கு, நத்தம் புறம்போக்கு உள்ளிட்ட அரசு புறம்போக்கு நிலங்களில் வீடு கட்டி வசிப்பவர்களுக்கு மின்சாரம் வழங்கப்படாமல் உள்ளது. மேலும், அவர்களுக்கு வீட்டு வரியும் வசூலிப்பதில்லை. இதன் காரணமாக செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள்.

இதுபோன்று நகராட்சி, மாநகராட்சி ஆகிய பகுதிகளில் உள்ள அரசு புறம்போக்கு நிலங்களில் 10 ஆண்டுகளுக்கு மேல் 400 சதுர அடி இடத்தில் வசிப்பவர்களுக்கு மின் இணைப்பு வழங்கப்படாமல் உள்ளது. இப்படி அரசு புறம்போக்கு நிலங்களில் வசிப்போர்களின் வாழ்வாதாரத்திற்காக, அவர்களுக்கு வசதியாக, அவர்களிடம் சுய உறுதிப் பத்திரம்–indemnity bond பெற்று மின் இணைப்பை வழங்கிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். தேர்தல் நேரங்களில் மக்களிடம் இதையெல்லாம் கூறிதான் நாங்கள் வாக்குகள் சேகரித்தோம். ஆகவே, இந்தப் பிரச்சினைக்குத் தாயுள்ளம் கொண்ட முதல்வர் தளபதி அவர்கள் நிச்சயமாகத் தீர்வு காண்பார் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று, கிராம நிர்வாக அலுவலகம். பல கிராமங்களில் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகங்கள் இல்லாமல், மொத்தமாக வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் சென்று பணிபுரிகிறார்கள். இதனால், பொதுமக்கள் நீண்ட தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, அந்தந்த கிராமங்களிலே, கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தைக் கட்டினால், நிச்சயமாக மக்கள் பயனடைவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, முதியோர் உதவித் தொகை. முதியோர் உதவித் தொகை கடந்த மூன்று மாதத்திற்கு மேலாக, அவர்கள் பெற இயலாத நிலை இருந்தது. தற்போது 2023–2024 budget–லே சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களுக்கு என 5 ஆயிரத்து 346 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருங்காலங்களில், OAP பயனாளிகளின் எண்ணிக்கையை உயர்த்திட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, வட்டாட்சியர் அலுவலகம். இங்கே சட்டமன்றப் பேரவையில் உறுப்பினர்கள் பேசும்போது சொன்னார்கள். ஒரு சட்டமன்ற உறுப்பினர் மூன்று தாலுகா அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டும். அந்த மூன்று தாலுகா அலுவலகங்களுக்குச் செல்லாமல் ஒரு தொகுதிக்கு ஒரு தாலுகா அலுவலகம் என அமைத்துக் கொடுத்தால், மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோன்று முதல்வரின் ஆய்வு. இந்தியாவிலேயே எந்த முதலமைச்சரும் மாவட்டத்திற்குச் சென்று. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், போதும் உரையை முடியுங்கள்.

திரு. இ. கருணாநிதி: மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குச் சென்று துறை ரீதியாக ஆய்வு செய்பவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒருவர்தான் என்பதை நான் கண்டிப்பாகச் சொல்ல விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், போதும். போதும் உரையை முடியுங்கள்.

திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் கலைஞர் அவர்கள் பல மணி நேரம் இங்கே பேசியிருக்கின்றார்கள். அவரின் பெயரைக் கொண்ட எனக்குப் பேசுவதற்கு ஐந்து நிமிடங்கள் கூடுதலாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கூடுதல் நேரமும் முடிந்துவிட்டது.

பிற்பகல் 1–10

திரு. இ. கருணாநிதி: 10 நிமிடங்கள்தான் ஆகியுள்ளன. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொல்லியல் துறையின்மூலம் சான்றிதழ் வழங்கப்படாமல் இருக்கிறது. அந்த இடத்திலிருந்து 100 மீட்டர் தள்ளி இருப்பவர்களுக்குப் பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். தமிழ்நாட்டில் சட்டமன்றத் தேர்தல் மற்றும் மக்களவைத் தேர்தல் நடைபெறும் நேரங்களில் மாவட்டங்களில் தற்காலிகப் பணியாளர்கள் தினக்

கூலி அடிப்படையில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பணியாளர்கள் உண்மையாக பணியாற்றினார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உரையாற்றியது போதும்.*

திரு. இ. கருணாநிதி: *ஆகவே, அவர்களையெல்லாம் பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். 2006 ஆம் ஆண்டு இயற்கை இடர்பாடுகள் காரணமாக இறந்தவர்களின் குடும்பங்களுக்கு பதினைந்தாயிரம் ரூபாய். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Time *இல்லை. இன்னும் 3 உறுப்பினர்கள் உரையாற்ற வேண்டும்.*

திரு. இ. கருணாநிதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றே ஒன்றைச் சொல்லிவிடுகிறேன். இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் நம்முடைய ஆட்சிக் காலத்தில்தான் மக்களுக்கு வழங்கினோம். அதில், 2007 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை பணியாற்றியவர்கள் 2016 ஆம் ஆண்டு கடந்த ஆட்சியில் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி, நன்றி. நல்ல கருத்துகளைப் பதிவு செய்துவிட்டீர்கள்.*

திரு. இ. கருணாநிதி: *கடைசியாக ஒரே ஒரு கருத்தைப் பதிவு செய்துவிடுகிறேன். என்னுடைய தொகுதியில் நம்முடைய மாண்புமிகு தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்தில் கோயம்பேட்டிலிருந்து அசோக் நகர் வரையிலான மெட்ரோ இரயில் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடந்தே வந்து அதற்கான பணிகளைத் தொடங்கி வைத்தார்கள். ஆக, தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் மெட்ரோ இரயில் திட்டம் வந்தது. எங்கள் தொகுதியில் உள்ள மீனம்பாக்கத்தில் மெட்ரோ இரயில் சேவை இருக்கின்ற காரணத்தால், மீனம்பாக்கம் மெட்ரோ இரயில்* Station*-க்கு கலைஞர் அவர்களின் பெயரைச் சூட்ட வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

2023 ஏப்ரல் 12] *[திரு. இ. கருணாநிதி]*

தொகுதிக் கோரிக்கைகள்:

பல்லாவரம், கீழ்க்கட்டளை பகுதிகளில், 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் 56.57 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டது. உயர் நீதிமன்றம் வீட்டுவசதி வாரியத்திற்கு எதிராகத் தீர்ப்பு வழங்கியது. 13 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த வழக்கு நிலுவையில் உள்ளது. இதன்மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு, சம்பந்தப்பட்ட இடத்தின் உரிமையாளர்களுக்கு அங்கீகாரம் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.

குரோம்பேட்டை, வைஷ்ணவா கல்லூரி இரயில்வே கேட் அருகில் உள்ள சிக்னலில் (GST Road) நகரும் படிக்கட்டுகளுடன்கூடிய (Escalator) நடை மேம்பாலம் அமைத்துத் தர வேண்டும்.

குரோம்பேட்டையிலிருந்து MIT மேம்பாலம், அஸ்தினாபுரம்–இராஜேந்திரபிரசாத் சாலை, திருமலைநகர், செம்பாக்கம் வழியாக நன்மங்கலம் மற்றும் மேடவாக்கம் செல்லும் சாலையை அகலப்படுத்தி, விரிவாக்கம் செய்து மழைநீர் கால்வாயுடன் சாலையை அமைக்க வேண்டும்.

குரோம்பேட்டை வழியாக தேசிய நெடுஞ்சாலையில் மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து தாம்பரம் இரும்புலியூர் வரை உயர்மட்ட மேம்பாலம் அமைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள். இப்போது உங்களுக்கான நேரத்தைப் பார்த்துக்கொள்ளுங்கள். மணி 1–11 ஆகிறது. 1–16–க்கு உரையை முடித்துவிடுங்கள்.*

திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரம் தொடர்பாக உங்கள் மீதுகூட எனக்கு பல நேரங்களில் வருத்தம் ஏற்பட்டுள்ளது. ஆனால், நீங்கள் எவ்வளவு கடினப்பட்டு இந்த அவையில் பல நேரங்களில் பேசியிருக்கிறீர்கள் என்பதைக் கடந்தகாலப் பதிவேடுகளிலிருந்து நான் தெரிந்துகொண்டேன். இந்த அவைக்கு வெற்றி பெற்று வந்ததுபோலவே, நான் இன்றைக்குப் பேசுவேனா, பேச மாட்டேனா என்றிருந்த நிலையில், எனக்குப் பேச வாய்ப்பளித்ததற்காகத் தங்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், அரசு கொறடா அவர்களுக்கும் என்னுடைய நன்றியை உரித்தாக்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தனியாக நன்றியைச் சொல்லிக்கொள்ளுங்கள். இப்போது உங்கள் உரையை குறித்த நேரத்தில் விரைவாகப் பேசி முடியுங்கள்.

திரு. S.S. பாலாஜி: இந்த மாபெரும் சபைக்கு என்னை அனுப்பி வைத்த, ஒடுக்கப்படுகின்ற, நசுக்கப்படுகின்ற, புறக்கணிக்கப்படுகின்ற ஒட்டுமொத்த மக்களுக்குமான உரிமைக் குரலாக இருக்கக்கூடிய, மேன்மைமிகு தலைவர் அண்ணன் எழுச்சித் தமிழர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். விடுதலை சிறுத்தைகள் கட்சித் தோழர்களுக்கும், ஐயா உஞ்சை அரசன், அண்ணன் பாவரசு ஆகியோருக்கும், திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களுக்கும், கூட்டணிக் கட்சித் தோழர்களுக்கும் என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். எனது தொகுதியைத் தன் தொகுதியைப் போன்று கருதி, அதில் மக்கள் நலப் பணிகளை முன்னெடுத்து, அண்ணனாய் இருந்து அரவணைத்து என்னை அழைத்துச் செல்லும் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் மாண்புமிகு அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். என்னுடைய தந்தையாருக்கு அரசியலில் முன்னவராக இருந்து, இப்போது இந்த அவையின் முன்னவராக இருக்கக்கூடிய பெருமைமிகு அண்ணன் மாண்புமிகு திரு. துரைமுருகன் அவர்களை வணங்குகிறேன்.

மாமல்லபுரம் என்றாலே பல்லவர்களுடைய சிற்பக் கலை நமக்கு நினைவிற்கு வரும். அதேபோன்று, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அங்கிருந்து படைத்திட்ட பல இலக்கியக் காவியங்கள் நம்முடைய எண்ணத்திலே முன்வந்து நிற்கும். இன்றைக்கு மாமல்லபுரம் என்றால் அது உலக செஸ் சாம்பியன் போட்டி என்று எண்ணுகிற அளவிற்கு அங்கே ஒரு சிறப்பான போட்டியை நடத்தி, நாளைய தமிழகத்தின் நம்பிக்கையாய், இனமான உதயம் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் மரியாதைக்குரிய சகோதரர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும், ஏனைய மாண்புமிகு அமைச்சர்களுக்கும் என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். நான் எடுத்த குறிப்புகளையெல்லாம் சரியாகப் பேசுகிறேனா என்று மாடத்திலே அமர்ந்து பார்த்துக்கொண்டிருக்கக்கூடிய என்னுடைய இல்லத்தரசிக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 12] [திரு. S.S. பாலாஜி]

திருப்போரூர் சட்டமன்றத் தொகுதி, ஒட்டிவாக்கத்தில் 10 ஆண்டுக் காலமாகக் கிடப்பில் போடப்பட்டிருந்த இரயில்வே மேம்பாலத்திற்குச் செல்லும் அணுகு மேம்பாலத்தை அமைத்துக் கொடுத்த மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும், பொன்மார் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைத்துக் கொடுத்த மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், தேவனேரிக்குப்பம் பகுதியில் கடலரிப்பைத் தடுப்பதற்கு 25 கோடி ரூபாயில் திட்டத்தை ஒதுக்கித் தந்த மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும், திருக்கழுக்குன்றத்திலுள்ள அருள்மிகு வேதகிரீஸ்வரர் ஆலயத்திற்கு rope car அமைத்துக் கொடுத்த மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது அடுத்த உரையில் இதுபோன்று நன்றியைத் தெரிவிக்கக்கூடிய அளவிற்கு அந்தப் பட்டியலிலே இடம்பெறக்கூடிய ஏனைய மாண்புமிகு அமைச்சர்களுக்கும் திருப்போரூர் சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'கேட்டதும் கொடுப்பவனே கிருஷ்ணா, கிருஷ்ணா' என்றும், 'கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்' என்றும், 'இறைவனிடம் கையேந்துங்கள், அவன் இல்லையென்று சொல்லுவதில்லை' என்றும், ஆண்டவனே கேட்டால்தான் கொடுப்பான் என்னும் நிலை இருக்கின்றபொழுது, கேட்காமலேயே கொடுக்கின்ற திராவிட ஆண்டவன், முத்தமிழறிஞர் கலைஞரின் வாரிசு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்பதால்தான் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு ஆழ்வார்பேட்டை ஆண்டவர் மட்டுமல்ல; மாநிலத்திலே உள்ள, நாட்டிலே உள்ள, பல மாநிலங்களைச் சார்ந்த ஆண்டவர்களும் இன்று நாட்டைப் பாதுகாப்பதற்காக அவர்களிடத்திலே வந்து நிற்கின்றார்கள். அந்த வழியில்தான் இன்றைக்கு ஆட்சி எனும் அட்சய பாத்திரத்தை வைத்து மக்கள் குறைகளைக் களையக்கூடிய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் மக்களுடைய குறைகளைக் களைய வேண்டி, இன்று மானியக் கோரிக்கையில் என்னுடைய கோரிக்கைகளையும் முன்வைக்கிறேன்.

பிற்பகல் 1–15

கலைஞர் அவர்கள் அறிவுக்கு பள்ளிகளையும், கல்லூரிகளையும், வாழ்வாதாரத்திற்கு வேலைவாய்ப்பையும், நல்ல பயணத்திற்கு பல

சாலைகளையும் அமைத்துக் கொடுத்தார் என்பதைவிட, அவர் மக்களுக்கான இல்லக் கனவை நிறைவேற்றுகின்ற வகையில் இலவச வீட்டுமனைப் பட்டாக்களைக் கொடுத்தார்கள் என்பதுதான் மகத்தான சாதனையாகப் பார்க்கப்படுகிறது. இன்றைக்கு எப்படி நாம் மகளிருக்கான இலவசப் பேருந்தை Stalin bus என்று பெருமையோடு பார்க்கிறோமோ, அதே பெருமையும், பெருமிதமும் கலைஞர் அளித்திருக்கின்ற பட்டாக்களை நினைக்கின்றபோது நமக்கு வருவது இயல்பு.

"People will forget what you said, people will forget what you did, but people will never forget how you made them feel" என்று ஓர் அமெரிக்க அறிஞர் சொல்லியிருக்கிறார்.

கலைஞர் என்னவெல்லாம் எழுதினார் என்று பாமர மக்களைக் கேட்டால், நன்றாக எழுதினார், தெரியாது என்பார்கள். என்னவெல்லாம் அவர் செய்திருக்கிறார் என்று கேட்டால், நிறைய செய்திருக்கிறார் அதைப் பட்டியலிட முடியாது என்பார்கள். ஆனால், கலைஞர் எப்படி ஆட்சி புரிந்தார் என்று கேட்டால், அது ஒரு பொற்கால ஆட்சி என்கின்ற உணர்வை மக்கள் வெளிப்படுத்துவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நிலைதான் இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் தளபதியினுடைய ஆட்சியைப் பற்றி, மக்களின் மதிப்பீடாக இருந்துகொண்டிருக்கிறது.

ஏழையெளிய மக்கள், பல ஆண்டுக் காலமாக வசிக்கின்றவர்கள் தாலுகா அலுவலகங்களுக்கு பட்டா கேட்டு போனால், குறிப்பாக சென்னையிலும், சென்னையை ஒட்டியுள்ள செங்கல்பட்டு மாவட்டத்திலும், G.O. No. 1135, 17–3–1962–ன்படி Belt area என்று வகைப்படுத்தப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். இந்த G.O.–க்கான அடிப்படையே, 1950 ஆம் ஆண்டுகளில் அரசு அலுவலகங்களைக் கட்டுவதற்கு போதுமான இடம் வேண்டுமென்ற தற்காப்பு நிலையில் போடப்பட்ட அரசாணை. அது, சென்னை மற்றும் செங்கல்பட்டு எல்லையிலிருந்து 5 மைல் தூரத்திற்கு வேறு எவருக்கும் நிலங்களை ஒதுக்கித் தரக் கூடாது என்கின்ற ஓர் அரசாணை. அந்த அரசாணையை, செங்கல்பட்டு மாவட்டத்தில் ஆட்சியராக இருந்த ஒருவர், 19–1–1958 அன்று இந்த 5 மைல் தூரத்தை 2 மைல் தூரமாகக் குறைக்க வேண்டுமென்று ஒரு கடிதம் எழுதுகிறார். அன்றைக்கு இருந்த Board of Revenue, அதுகுறித்த ஒரு பரிந்துரையை, மாநில பொதுப் பணித்

2023 ஏப்ரல் 12] [திரு. S.S. பாலாஜி]

துறையின் தலைமைப் பொறியாளரிடம் கேட்கிறது. தலைமைப் பொறியாளரிடம், 5-ஐ, 2 ஆகக் குறைக்கலாமா என்று ஒரு மதிப்பீட்டைக் கேட்டால், அவர் நல்ல புண்ணியவானாக அன்றைக்கு இருந்திருக்கிறார். இந்த 5-ஐ 20 ஆக மாற்றுங்கள் என்ற பரிந்துரையை அனுப்புகிறார். அந்தப் பரிந்துரையோடு சேர்த்து, இரண்டு பரிந்துரைகளை Board of Revenue, *வருவாய்த் துறைக்கு அனுப்புகிறது. ஆனால், வருவாய்த் துறை அந்த முதல் பரிந்துரையை மட்டும் ஏற்றுக்கொண்டு, இன்றைக்கு அதை 20 மைல் தூரம் என்றளவில் நீட்டித்திருக்கிறது. இதில் நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால், 1962 ஆம் ஆண்டில் போடப்பட்ட ஆணை. 1950-ல் இருந்த காலகட்டத்தை மதிப்பீடாகக்கொண்டு போடப்பட்ட ஆணை. அன்றைக்கு இருந்த நிலவியல் இன்று இல்லை. அன்றைக்கு இருந்த ஒருங்கிணைந்த செங்கல்பட்டு மாவட்டம், இன்றைக்கு 3 மாவட்டங்களாக மாறியிருக்கிறது. அன்றைக்கு இருந்த சைதாப்பேட்டை தாலுகா, இன்றைக்கு கிட்டத்தட்ட 10 தாலுகாக்களாக மாறியிருக்கிறது. இவையெல்லாம் இருந்தும்கூட, 60 ஆண்டுக் காலமாக இன்னமும் அந்த* G.O.-*ஐச் சொல்லியே மக்களுக்கான பட்டா மறுக்கப்படுகிறது. அந்த அரசாணையில்கூட என்ன இருக்கிறது என்று பார்த்தால்,* The ban is however to be restricted only to extents exceeding a few cents. *ஒரு குறிப்பிட்ட அளவிற்குமேல் இருக்கின்ற இடங்களுக்கு மட்டும்தான் இந்த வரையறை என்று இருக்கிறது. அப்படியானால், 2 சென்ட், 3 சென்ட்டுக்கு இல்லை என்று அந்த அரசாணையே சொல்கிறது.* And in these exempted cases, the Collector can take action. *இதுபோன்ற இனங்களில் மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுக்க முடியும். 1962 ஆம் ஆண்டு போட்ட* G.O.-*வை 60 ஆண்டுக் காலமாக ** என்று சொன்னால், நடைபெறுவது கலைஞருடைய ஆட்சி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *** என்பதை நீக்கிவிடுவோம்.*

திரு. S.S. பாலாஜி: *எதை எடுக்க வேண்டுமோ, எடுத்துக்கொள்ளுங்கள் ஐயா. நான் என் கருத்தை* convey *செய்துவிடுகிறேன்.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டப்படிதான் அவர்கள் செய்வார்கள். அதனால், ஒட்டுமொத்த ** நாம் குற்றம் சொல்ல வேண்டாம். உங்கள் நேரம் முடிந்துவிட்டது. நன்றி சொல்லி அமருங்கள்.

திரு. S.S. பாலாஜி: மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் நான் மன்றாடிக் கேட்டுக்கொள்வது, இப்போது அமைந்திருக்கின்ற இந்த அரசு, முத்தமிழறிஞர் கலைஞருடைய அரசு. இந்த அரசில் தங்களுக்குப் பட்டா கிடைக்கும் என்கின்ற நம்பிக்கையோடு மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். என்னையும், இந்த விடியல் ஆட்சியின் ஓர் ஒளிக்கதிராக நினைத்துதான் இந்தச் சட்டமன்றத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். மக்களுடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கின்றேன். ஆகவே, அவர்களுக்குப் பட்டாவை வழங்க வேண்டும்.

அடுத்து, ஒன்றேயொன்று. இன்றைக்கும் சென்னையைச் சுற்றியிருக்கின்ற மேய்க்கால் புறம்போக்கு இடங்களில் அடிப்படைப் பணிகளைச் செய்யக்கூடிய மக்கள் இருக்கிறார்கள். மேய்க்கால் புறம்போக்கில் இருப்பவர்களுக்கு மின்சார இணைப்பு வேண்டுமென்று NOC கேட்டு வருவாய்த் துறை அலுவலரிடம் சென்றால், NOC வழங்குவதற்கு வாய்ப்பில்லை என்று சொல்கிறார்கள். அதற்கு Court-ஐக் காரணமாகச் சொல்கிறார்கள். ஆனால், உச்ச நீதிமன்றம் மின்சார இணைப்பு என்பது அடிப்படை உரிமை என்கின்ற ஒரு வழிகாட்டுதலை வழங்கியிருக்கிறது. அதோடு மட்டுமல்ல, அப்படியே சுற்றிவிடுவதுபோல் நீங்கள் மின்சாரத் துறைக்குச் சென்று, Indemnity Bond வாங்கி வாருங்கள் என்கிறார்கள். மின்சாரத் துறையில் கேட்டால் கொடுக்க முடியாது என்கிறார்கள். NOC கேட்டால் வழங்க முடியாது என்று சொல்கிறார்கள். ஆனால், அதே வருவாய்த்துறையால், ஒரு சிலருக்கு மேய்க்கால் புறம்போக்கு நிலங்களுக்கு NOC வழங்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அந்தச் சான்றினைக் கொடுத்திருக்கிறேன்.

பிற்பகல் 1–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலாஜி, நீங்கள் பேசியது போதும்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2023 ஏப்ரல் 12]

திரு. S.S. பாலாஜி: *யாரோ ஒரு சிலருக்கு ஏதோ ஒரு காரணத்திற்காக NOC வழங்க முடியுமென்றால், ஏழையெளிய மக்களுக்கு ஏன் NOC வழங்க முடியாது என்கின்ற கேள்வியை இங்கே முன்வைக்க நான் விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலாஜி, அதற்கு இன்று மாலை பதிலுரையாற்றவுள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பதில் சொல்வார்கள். தற்போது பதிலுரையாற்றவுள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பதில் சொல்வார்கள். அதாவது, மேய்க்கால் புறம்போக்கு நிலம் என்பதை மேய்ச்சல் புறம்போக்கு நிலம் என்றும் சொல்வார்கள். அதற்குரிய விளக்கங்களை அவர்கள் சொல்வார்கள். நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. இளங்கோ அவர்கள். (குறுக்கீடு)*

திரு. S.S. பாலாஜி: *ஐயா ஒரேயொரு நிமிடம். கல்பாக்கம் பகுதியிலே தொடர் கதிர்வீச்சால் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்காக. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, இல்லை. பிரச்சினை வேண்டாம். போதும். கோரிக்கைகளெல்லாம் நிறைய சொல்லிவிட்டீர்கள்.*

திரு. S.S. பாலாஜி: *இதையெல்லாம் சொல்ல வேண்டுமென்றுதான் நாங்கள் வந்திருக்கிறோம். எப்படிச் சொல்லாமல் இருக்க முடியும்? வீதிகளில் போராடும் மக்களுக்காகப் பேச வேண்டும் என்பதற்காகத்தான் வந்திருக்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்களுக்குக் கொடுப்பதற்கு நேரமில்லை. (குறுக்கீடு) நேரமில்லை. ஏனெனில், 2 மணிக்குள் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையாற்றி முடிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. இளங்கோ அவர்கள். (குறுக்கீடு) பிறகு பேசிக்கொள்ளலாம். நான் வாய்ப்புத் தருகிறேன். பிறகு வாய்ப்புத் தருகிறேன். அப்போது பேசிக்கொள்ளுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஷாநவாஸ் அவர்கள் நாளை பேசும்போது, இதையும் பேசட்டும். தற்போது நன்றி சொல்லுங்கள்.*

திரு. S.S. பாலாஜி: *முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் ஆட்சி நடத்துகின்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர்*

அண்ணன் தளபதி அவர்களுடைய ஆட்சியை வாழ்த்துவதற்கு கவிஞர் கபிலனுடைய வரிகளை கடன் வாங்கி முன்வைக்க விரும்புகிறேன்.

'தடியூன்றி நடக்கின்ற பெரியார் இல்லை;
தமிழூன்றி நடக்கின்ற கலைஞர் இல்லை;
கொடியேற்றி கழகத்தை தொடங்கி வைத்த
கோமகனார் பேரறிஞர் இன்று இல்லை;
மூன்று வெடிமருந்தை மூளைக்குள் தாங்கிக் கொண்டு வென்றெடுத்தாய் தமிழகத்தை வாழ்க நீடு!'

என்று சொல்லி உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

தொகுதிக் கோரிக்கைகள்:

நெம்மேலி, மாமல்லபுரம் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளின் மின் தேவைக்காகத் துணை மின் நிலையம் அமைப்பதற்கு அரசு இடத்தை ஒதுக்கி தர வேண்டும். மாமல்லபுரம் கடற்கரையில் இருளர் இன மக்களின் பாரம்பரிய மாசிமகப் பெருவிழாவினை நடத்துவதற்கு, இருளர் பழங்குடியினர் கூட்டமைப்பின் சார்பில் நிரந்தரக் கலையரங்கம் அமைப்பதற்கு உரிய அரசு நிலத்தினைத் தேர்வு செய்து வழங்கிட வேண்டும். தையூர், சின்னமாநகர், சர்வே எண் 308/14–ல் உள்ள அரசு நிலத்தை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டு, அரசுக் கட்டுப்பாட்டிற்கே கொண்டு வர வேண்டும். தாழம்பூர் கிராம ஊராட்சி, சீனிவாசன் நகரில் வசிக்கும் குடும்பங்களுக்குப் பட்டா வழங்கப்பட வேண்டும்.

கேளம்பாக்கம் ஊராட்சி, திட்டப் பணிகளை மேற்கொள்வதற்காக, அப்பகுதியிலுள்ள அரசு உப்புக் கழகத்திடமிருந்து இருபது ஏக்கர் நிலத்தைப் பெற்று, கேளம்பாக்கம் ஊராட்சிக்குத் தேவையான இடத்தை ஒதுக்கித் தர வேண்டும். ஆலத்தூர் கிராமத்தில் தினசரி கூலி வேலை மற்றும் விவசாய வேலை பார்த்து வரும் தொழிலாளர்களுக்கு சர்வே எண் 237/1–ல் உள்ள இடத்திற்குப் பட்டா வழங்க வேண்டும். பூயிலுப்பை பகுதியில் வசித்து வரும் மக்களுக்கு சர்வே எண் 162, 166–ல் அரசு புறம்போக்கு நிலங்களுக்குப் பட்டா வழங்க வேண்டும்; இல்லையேல் அருகாமையில் உள்ள அரசு நிலங்களில்

சிறப்பு ஒதுக்கீட்டில் கரும்பாக்கம் கிராமம், பூயிலுப்பை பகுதி மக்கள் அனைவருக்கும் பட்டா வழங்கிட வேண்டும்.

ஆமூர் ஊராட்சி, பொருந்தவாக்கம் கிராமம் சர்வே எண் 44/2A–1A–ல் 22 ஏக்கர் பஞ்சமி நிலங்களை மீட்டு அதன் உரிமைதாரர்களுக்கு வழங்கிட வேண்டும். மேலும், இக்கிராமத்தில் உள்ள 300 ஆதி திராவிட குடும்பங்களுக்குச் சிறப்பு ஒதுக்கீட்டில் பட்டா வழங்க வேண்டும்.

வாணியஞ்சாவடியில் உள்ள ஜெ.ஜெ. நகர் பகுதி வழியாக ஏகாட்டூர் மற்றும் முட்டுக்காடு இடையே உள்ள பங்கிங்காம் கால்வாயின் குறுக்கே இணைப்புப் பாலம் அமைத்துத் தர வேண்டும். பழைய மகாபலிபுரம் சாலை மற்றும் கிழக்குக் கடற்கரைச் சாலை பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் இணைப்புப் பாலமும், சாலையும் அமைத்துத் தர வேண்டும்.

வண்டலூர்–கேளம்பாக்கம் சாலையிலிருந்து பிரியும் புதுப்பாக்கம்–மேடவாக்கம் சாலையில் சர்வே எண் 37, 41–ல் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, அரசு சார்பில் பொதுக் கழிப்பிடம் அமைத்துத் தர வேண்டும். தண்டலம் கிராமத்தில் வசிக்கும் ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாவிற்கான முறையான நில உடைமை ஆவணங்களை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். மானாமதி ஊராட்சி, காமராஜர் நகர் ஏரிக்கரை அருகில் உள்ள அரசு புறம்போக்கு நிலத்தினை சுடுகாடாக் மாற்றி அமைத்துத் தர வேண்டும்.

நென்மேலி ஊராட்சி, சாய்லட்சுமி நகர், வெங்கடேஸ்வரா நகர், திருமலா நகர், ரெப்யூட்ஸ் ஹோம்ஸ், சைந்தவி அபார்ட்மெண்ட்ஸ் ஆகிய பகுதிகளிலுள்ள மக்கள் வெங்கடேஸ்வரா நகர் சுடுகாட்டினைப் பயன்படுத்திக்கொள்ள உரிய அனுமதியினை வழங்க வேண்டும். மேலும், தற்காலிகமாக நென்மேலியிலுள்ள சுடுகாட்டினைப் பயன்படுத்தவும் அரசு அனுமதி வழங்க வேண்டும். சாலூர் கிராமம், ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்குக் கட்டடம் கட்ட தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குண்ணப்பட்டு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். தண்டரை கிராமம், ஆதிகேசவபுரத்தில் நிரந்தரமாக வசிக்கும் மக்களுக்கு சர்வே எண் 177டி/1பி என்ற அரசு புறம்போக்கு நிலத்தை அளவீடு செய்து பட்டா வழங்க வேண்டும். கடம்பாடி கிராமத்தில் வசித்து வரும் 17 இருளர்

பழங்குடியினருக்குப் பட்டா வழங்க வேண்டும். ஏகாட்டூர், காயார் கிராமங்களில் வசித்து வரும் இருளர் பழங்குடியினர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும். முட்டுக்காடு ஊராட்சி, கழிப்பட்டூர் கிராமத்தில் இலுப்பை ஏரியின் ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாம்பாக்கம் ஊராட்சி, இஸ்லாமியர்களுக்கான இடுகாடு அமைத்துத் தர வேண்டும். மணமை கிராமத்தில் உள்ள அரசு ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளிக்குப் புதியதாக 10 ஆசிரியர்களை நியமிக்க வேண்டும். கரும்பாக்கம் ஊராட்சி, செயல்பட்டு வரும் அரசினர் உயர்நிலைப் பள்ளியைத் தரமுயர்த்த வேண்டும். திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர் மலைக்கோயிலுக்கு இந்து சமய அறநிலையத் துறை சார்பில் மலைச் சாலை அமைத்திட வேண்டும்.

கிழக்குக் கடற்கரைச் சாலை, கானத்தூர் ஊராட்சி, ECR 14 Owners Welfare Association-(EOWA) பகுதியில் பாதுகாப்பான முறையில் குப்பைகள் கையாளப்படவும், வரைமுறைகளை மீறி செயல்படுவோர்மீது தக்க நடிவடிக்கை எடுக்கவும் வேண்டும். கேளம்பாக்கம் ஊராட்சி, 11-வது வார்டு பகுதியில் அமைந்துள்ள ராமலிங்கபுரம் பகுதியில் உள்ள சாலையைக் கழிவுநீர் கால்வாய் வசதியுடன்கூடிய தார்ச் சாலையாக மாற்றி, தெரு விளக்குகள் அமைக்க வேண்டும். சூளேரிக்காட்டுக்குப்பம், நெம்மேலிகுப்பம் பகுதிகளுக்கு மழைநீர் கால்வாய்கள் அமைக்க வேண்டும்.

பொன்விளைந்தகளத்தூர் ஊராட்சி, கல்பட்டு கிராமம், பொன்பதிர்கூடம் செல்லும் சாலையில் தேவைப்படும் இடங்களில் சிறுபாலங்கள் அமைத்துத் தர வேண்டும். திருவடிசூலம் கிராமக் கோயிலுக்குச் செல்லும் சாலையைச் சீரமைத்துத் தர வேண்டும். கொத்திமங்கலம் ஊராட்சி, பொன்னியம்மன் கோயில் தெருவிற்கு மழைநீர் வடிகால்வாயுடன் சேர்ந்த சாலை அமைத்துத் தர வேண்டும். ஆமூர் ஊராட்சி, குண்ணப்பட்டு செல்லும் சாலையைத் தேவையான அளவில் சீரமைத்து, நெடுஞ்சாலைத் துறை கிராமச் சாலைகள் பிரிவில் ஒப்படைக்க வேண்டும். முள்ளிப்பாக்கம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு மூன்று வகுப்பறைகள் கொண்ட புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும். பெருந்தண்டலம் ஊராட்சி தொடக்கப் பள்ளிக்கு மூன்று வகுப்பறைகள் கொண்ட புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும். தையூர் ஊராட்சி, கோமான் நகர் உள்ளடக்கிய (11 மற்றும் 12-வது வார்டு) பகுதிகளுக்கு சுடுகாட்டிற்குச் சுற்றுச்சுவர் அமைத்துத் தர வேண்டும்.

2023 ஏப்ரல் 12] [திரு. S.S. பாலாஜி]

பட்டிக்காடு ஊராட்சி, 3-வது வார்டுக்குட்பட்ட பெரியார் சாலையைச் சீரமைத்துத் தர வேண்டும். திருப்போரூர் ஊராட்சி ஒன்றியத்தில் செயல்பட்டு வரும் வட்டார ஊட்டச்சத்து அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும். மானாமதி ஊராட்சி, அகரம் கிராமம், மேட்டுத் தெருவிற்குக் கூடுதல் கொள்ளளவுக் கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை அமைத்துத் தர வேண்டும். ஒரகடம் காலனி பகுதியில் உள்ள C.S.I. தெரு, அரிசி ஆலைத் தெரு, மாதா தெரு ஆகியவற்றை, சிமெண்ட் சாலையாக மாற்ற வேண்டும். தாழம்பேடு மற்றும் காயார் ஊராட்சிகளில் அங்கன்வாடிக்குக் கட்டடங்கள் கட்டித் தர வேண்டும்.

சோகண்டி ஊராட்சியில், நெம்பர் 14 காங்கேயன்குப்பம் மற்றும் ஆனூர் ஊராட்சி ஆகியவற்றிற்கு புதியதாக நியாயவிலைக் கடைக் கட்டடங்கள் கட்டித் தர வேண்டும். தண்டரை ஊராட்சி, குப்பத்துக்குன்று, பிள்ளையார் கோயில் தெரு, ஆதிகேசவபுரம் ஆகிய பகுதிகளுக்குச் சிறு பாலங்கள் அமைக்க வேண்டும். குப்பத்துக்குன்று பகுதிக்கு 30,000 லிட்டர் கொள்ளளவுக் கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும். அனுமந்தபுரம் ஊராட்சிக்குட்பட்ட தர்காஸ் கிராம மக்களுக்குக் கரும காரியக் கூடம் மற்றும் அதற்குத் தேவையான தண்ணீர் வசதியையும் அமைத்துத் தர வேண்டும்.

அனுமந்தபுரம் ஊராட்சி, தாசரிகுப்பம் கிராமம், மேட்டுப்பாளையம் பகுதிக்கு 60,000 லிட்டர் கொள்ளளவுக் கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும். பொன்விளைந்தகளத்தூர் ஊராட்சிக்குப் புதிய அங்கன்வாடி கட்டடம் கட்டித் தர வேண்டும். தண்டரை ஊராட்சி ஆசான் கல்லூரி அருகில் வசிக்கும் இருளர் பழங்குடியினர் பகுதிக்கு சிமெண்ட் சாலை அமைத்துத் தர வேண்டும்.

தாழம்பேடு ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்குப் புதிய கட்டடம் மற்றும் சத்துணவு மையத்திற்கு இருப்பறையுடன்கூடிய சமையல் கூடம் கட்டித் தர வேண்டும்.

நாவலூர் ஊராட்சி, அரசு நடுநிலைப் பள்ளிக்கு மூன்று வகுப்பறைகள் கொண்ட புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும். அமணம்பாக்கம் ஊராட்சி, அரசு நடுநிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைக் கட்டடம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டித் தர வேண்டும்.

சதுரங்கப்பட்டினம் ஊராட்சி, அரசு நடுநிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைக் கட்டடம், சத்துணவு மைய சமையலறைக் கட்டடம், கழிப்பறைக் கட்டடம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டித் தர வேண்டும்.

வடகடம்பாடி ஊராட்சி, அரசு நடுநிலைப் பள்ளிக்கு வகுப்பறைக் கட்டடம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டித் தர வேண்டும். ஒரகடம் ஊராட்சி, கொளுத்தியம்மன் கோயில் அருகில் உள்ள குளத்தினைத் தூர்வாரி சீரமைத்து, ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடத்தைப் புதுப்பித்துத் தர வேண்டும். மேலையூர் ஊராட்சி, கொண்டங்கி கிராமம், அரசு ஆரம்பப் பள்ளிக்குப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும்.

அனுமந்தபுரம் ஊராட்சி, முத்துமாரியம்மன் கோயில் பகுதிக்குப் புதிய சிறு பாலம் அமைத்துத் தர வேண்டும். தையூர் ஊராட்சி, சின்னமாநகர் பகுதியில் உள்ள 300 மீட்டர் அளவுள்ள சாலையை சிமென்ட் சாலையாக அமைத்துத் தர வேண்டும். மானாமதி ஊராட்சி, 4-வது வார்டுக்குட்பட்ட சந்தினாம்பட்டு கிராமத்தில் செங்கழனியம்மன் கோயில் தெரு மற்றும் 1-வது வார்டு பெரியார் நகர், அம்பேத்கர் சாலையையும் சிமென்ட் சாலையாக அமைத்துத் தர வேண்டும்.

தாழம்பூர் ஊராட்சி, நேரு தெரு, அப்துல்கலாம் தெரு, கலைஞர் தெரு, புத்தபிரான் தெரு, சீனிவாசன் தெரு, ஜெய்பீம் நகர் மெயின் ரோடு ஆகிய இடங்களில் மழைநீர் தேங்காமல் தடையற்ற போக்குவரத்திற்காகத் தேவைப்படும் இடங்களில் சிறுபாலங்கள் அமைத்துத் தர வேண்டும்.

ஒரகடம் ஊராட்சி, மேட்டுத் தெரு, பெரிய தெரு, முத்துமாரியம்மன் கோயில் தெரு, பெரியவிப்பேடு செல்லும் தெரு ஆகிய இடங்களில் மழைநீர் தேங்காமல் தடையற்ற போக்குவரத்திற்காகத் தேவைப்படும் இடங்களில் சிறுபாலங்கள் அமைத்துத் தர வேண்டும். கொத்திமங்கலம் ஊராட்சிக்குட்பட்ட புலிக்குன்றம் கிராமம் மற்றும் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் உள்ள ஐந்து தெருக்களையும் கழிவுநீர் கால்வாய் வசதியுடன் சிமென்ட் சாலையாக அமைத்துத் தர வேண்டும்.

சிறுதாவூர் ஊராட்சி, கரும்பாத்தான் தெரு, பெரிய தெரு மற்றும் அம்பேத்கர் நகர், மெயின் ரோடு ஆகிய இடங்களில் மழைநீர் தேங்காமல் தடையற்ற போக்குவரத்திற்காகத் தேவைப்படும்

இடங்களில் சிறுபாலங்கள் அமைத்துத் தர வேண்டும். சிறுதாவூர் ஊராட்சிக்குப் புதிய ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடம் கட்டித் தர வேண்டும். சிறுதாவூர் ஊராட்சி, பெரிய தெரு, செல்லியம்மன் கோயில் தெரு, அம்பேத்கர் நகர் பகுதி சாலை போன்ற பகுதிகளில் புதிய தார்ச் சாலை அல்லது சிமெண்ட் சாலைகளை அமைத்துத் தர வேண்டும்.

குண்ணப்பட்டு ஊராட்சி, பஞ்சந்திருத்தி பகுதி, ஆதி திராவிடர் குடியிருப்பு, கங்கையம்மன் கோயில் தெரு ஆகிய சாலைகளைச் சீரமைத்து புதிய சிமெண்ட் சாலைகளை அமைக்க வேண்டும். தாழம்பூர் ஊராட்சி, ஜெய்பீம் நகர் 1-வது தெரு முதல் 4-வது தெரு, பெரியார் 1-வது குறுக்கு தெரு, ஜெய்பீம்நகர் மெயின் ரோடு, பெருமாள் கோயில் 6-வது தெரு போன்ற தெருக்களையும் சிமெண்ட் சாலையாக மாற்றி அமைத்துத் தர வேண்டும்.

கரும்பாக்கம் ஊராட்சி, விரால்பாக்கம் வேம்புலி அம்மன் கோயில் 2-வது தெரு, சாலையை சிமெண்ட் சாலையாக மாற்றி அமைத்துத் தர வேண்டும். மேலையூர் ஊராட்சி, ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் புதிய கலையரங்கத்தினைக் கட்டித் தர வேண்டும். கோவளம் ஊராட்சி, செங்கேணியம்மன் கோயில் தெருவிற்கு வடிகால்வாய் வசதியுடன்கூடிய சிமெண்ட் சாலை அமைத்துத் தர வேண்டும்.

பொன்பதிர்கூடம் ஊராட்சி, எடையூர் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதி சுடுகாட்டுக்குச் சுற்றுச்சுவர், தண்ணீர் வசதி, எரிதகனமேடை ஆகியவற்றைக் கட்டித் தர வேண்டும். மாதா கோயில் தெரு மக்களுக்கு குடிநீர்த் தேவைக்காக குடிநீர்க் குழாய் விரிவாக்கம் செய்தும், சிமெண்ட் சாலையைப் புதுப்பித்தும் தர வேண்டும்.

அமணம்பாக்கம் ஊராட்சி, பழைய காலனி பகுதி மக்களின் குடிநீர்ப் பற்றாக்குறையைச் சரி செய்ய 10,000 லிட்டர் கொள்ளளவுக்கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும். ஈச்சங்கருணை ஊராட்சிப் பகுதிக்கு 30,000 லிட்டர் கொள்ளளவுக் கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும். மணமை ஊராட்சி, கீழ்கழனியில் 60,000 லிட்டர் கொள்ளளவுக் கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும்.

நென்மேலி ஊராட்சி, 3–வது மற்றும் 5–வது வார்டுகளில் உள்ள சாலைகளைக் கழிவுநீர்க் கால்வாயுடன்கூடிய சிமெண்ட் சாலையாக மாற்றி அமைத்துத் தர வேண்டும். நென்மேலி ஊராட்சியில் புதியதாக உருவாக்கப்பட்ட ஃபோர்டு யூனியன் சிட்டியில் உள்ள 700 மீட்டர் மண் சாலையை சிமெண்ட் சாலையாக மாற்றி அமைத்துத் தர வேண்டும். தண்டலம் ஊராட்சி, திருப்போரூர் பேரூராட்சி 1–வது வார்டில் உள்ள 3 தெருக்களையும் சிமெண்ட் சாலையாக மாற்றி அமைத்துத் தர வேண்டும்.

மானாமதி ஊராட்சி, செங்கழுநீர் ஓடைப் பகுதி, காமராஜர் நகர் ஆகிய பகுதிகளில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்துத் தர வேண்டும். மேலையூர் ஊராட்சி, கொண்டங்கி கிராமத்தில் புதிய பாலம் அமைத்துத் தர வேண்டும். நென்மேலி ஊராட்சி, சூளேரிக்காடு ஆதி திராவிடர் காலனிப் பகுதிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும்.

நென்மேலி ஊராட்சி, சூளேரிக்காடு கிராமத்திற்கு 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் அதற்கான புதிய குடிநீர்க் குழாய் விரிவாக்கமும் அமைத்துத் தர வேண்டும். மானாமதி ஊராட்சிக்கு விளையாட்டுத் திடல், விழா மேடை அமைத்துத் தர வேண்டும். பெருந்தண்டலம் ஊராட்சி, டாக்டர் அம்பேத்கர் தெரு பகுதிக்குக் குடிநீர்க் குழாய் விரிவாக்கமும், புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் அமைத்துத் தர வேண்டும்.

மைலை–மானாமதி சாலையை அகலப்படுத்தித் தார்ச் சாலையாக மாற்றித் தர வேண்டும். பையனூர் ஊராட்சி, கூத்தவாக்கம் மயான சாலையைத் தார்ச் சாலையாகத் தரம் உயர்த்த வேண்டும். நென்மேலி ஊராட்சி, சாய்லட்சுமி நகரில் பூங்கா அமைத்துத் தர வேண்டும். பிரதான சாலைகள், குறுக்குச் சாலைகளைத் தார்ச் சாலைகளாக மாற்றித் தர வேண்டும். திருமணி ஊராட்சி, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், விளையாட்டுத் திடலும் அமைத்துத் தர வேண்டும்.

புல்லேரி ஊராட்சி, கீரப்பாக்கம் அம்பேத்கர் தெரு, சுடுகாட்டுப் பாதையை சிமெண்ட் சாலையாக அமைத்துத் தர வேண்டும். மழைநீர் வடிகால் வசதியுடன் சிமெண்ட் சாலை அமைக்க வேண்டும். நெல்வாய் ஊராட்சி, இடுகாடு/சுடுகாடு அமைந்துள்ள பகுதியில் தண்ணீர் வசதியும், சுற்றுச் சுவர் வசதியும் ஏற்படுத்தித்

2023 ஏப்ரல் 12] [திரு. S.S. பாலாஜி]

தர வேண்டும். வடகடம்பாடி ஊராட்சி, பங்காருப்பேட்டை பகுதியில் 60,000 லிட்டர் கொள்ளளவுக் கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும். அமணம்பாக்கம் ஊராட்சி, 10,000 லிட்டர் கொள்ளளவுக் கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டும். பொன்விளைந்தகளத்தூர் ஊராட்சி, கல்பட்டு கிராமத்திற்குச் செல்லும் பாதையில் இரண்டு இடங்களில் சிறுபாலங்கள் அமைத்துத் தர வேண்டும்.

அருங்குன்றம் ஊராட்சி, மேலகணகம்பட்டு கிராமத்தில் தார்ச் சாலை மற்றும் சிறுபாலம் அமைக்க வேண்டும். நென்மேலி ஊராட்சி, கன்னியம்மா நகர் பகுதிக்கு இணைப்புச் சாலை அமைத்துத் தர வேண்டும். பெரியவிப்பேடு கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையம், கிராம நிருவாக அலுவலர் அலுவலகம் மற்றும் ஊராட்சி மன்ற அலுவலகங்களின் கட்டடங்களைப் புதுப்பித்துத் தர வேண்டும். முள்ளிப்பாக்கம் ஊராட்சி, மயான சாலையை சிமெண்ட் சாலையாக மாற்ற வேண்டும். மானாமதி ஊராட்சி, ஆமையாம்பட்டு கிராமத்தில் குடிநீர் ஆதாரத்துடன்கூடிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டும். கானத்தூர், ரெட்டிக்குப்பம் கிராமத்தில் உள்ள அனைத்து சாலைகளையும் சிமெண்ட் சாலைகளாக மாற்ற வேண்டும்.

ஆமூர் கிராமத்தில் உள்ள அனைத்துத் தெருக்களின் சாலைகளையும் சிமெண்ட் சாலைகளாக மாற்ற வேண்டும். பொன்மார் ஊராட்சி, மலைத்தெரு-ஒட்டியம்பாக்கம் சாலையைத் தார்ச் சாலையாக மாற்ற வேண்டும். கொத்திமங்கலம் ஊராட்சி, நரிக்குறவர் சாலையை மழைநீர் வடிகால் வசதியுடன்கூடிய சிமெண்ட் சாலையாக மாற்ற வேண்டும். கானத்தூர், ரெட்டிகுப்பம் கிராமம், சீதாராமன் அவென்யூவில் உள்ள அனைத்து சாலைகளையும் தார்ச் சாலைகளாக மாற்ற வேண்டும்.

தண்டலம் ஊராட்சி, ஸ்ரீவாணி வித்யாலயா பள்ளிக்குச் செல்லும் பிரதான சாலையை சிமெண்ட் சாலையாக அமைத்துத் தர வேண்டும். பொன்மார் கிராமப் பகுதிக்கு சுடுகாட்டுச் சாலை மற்றும் சுற்றுச் சுவர் அமைத்துத் தர வேண்டும். பட்டிபுலம் ஊராட்சி, புது இடையூர்குப்பம் மற்றும் மீனவர் பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்துத் தர வேண்டும். மெய்யூர் கிராமம், மீனவர் பகுதியிலும் பட்டிக்காடு ஊராட்சி, குளக்கரை அருகிலும் புதிய கரும காரியக் கூடம் கட்டித் தர வேண்டும்.

[திரு. S.S. பாலாஜி] [2023 ஏப்ரல் 12

மேலேரிப்பாக்கம் ஊராட்சியில் புதிய எரிதகனமேடை அமைக்க வேண்டும். மானாமதி ஊராட்சி, ஈச்சம்பள்ளம், இரட்டைமலை சீனிவாசன் தெருவில் மழைநீர் வடிகால் வசதியுடன்கூடிய சிமென்ட் சாலை அமைக்க வேண்டும். ஈச்சம்பள்ளம் கிராமத்தில் இடுகாடு/சுடுகாடு அமைந்துள்ள பகுதிக்குத் தண்ணீர் வசதியும், சுற்றுச் சுவரும் ஏற்படுத்தித் தர வேண்டும். கொத்திமங்கலம் ஊராட்சி, எம்.ஜி.ஆர். நகரில் உள்ள இரண்டு சாலைகளையும் சிமென்ட் சாலைகளாக மாற்றித் தர வேண்டும்.

கொட்டமேடு ஊராட்சி, முத்துமாரியம்மன் கோயில் சாலையை சிமென்ட் சாலையாக மாற்றித் தர வேண்டும். திருமணி ஊராட்சி, சுற்று வட்டாரப் பகுதிகளில் கழிவுநீர்க் கால்வாய் அமைக்கவும், மழைநீர் திருமணி ஏரிக்குச் சென்று சேரவும் வழிவகை செய்ய வேண்டும்.

கானத்தூர், ரெட்டிகுப்பம், அகமத்கான் நகரில் மழைநீர் வடிகால்வாய் அமைத்துத் தர வேண்டும்; கக்கன் தெரு, வண்ணான் குளத்தைத் தூர்வாரி சீரமைக்க வேண்டும். ஈச்சம்பள்ளம் கிராமத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவுக் கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும்.

ஆமையாம்பட்டு தொடக்கப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் அமைக்க வேண்டும்; தேவதானம் ஓடைப் பகுதியில் சிறுபாலம் அமைக்க வேண்டும். ஆனூர் ஊராட்சி, எலுமிச்சம்பட்டி கிராமத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவுக் கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும்.

நெய்குப்பி ஊராட்சி, நரசங்குப்பம் கிராமச் சாலைகளைச் சிமென்ட் சாலைகளாக மாற்றித் தர வேண்டும். மேலையூர் ஊராட்சி, ஸ்ரீநாகபரணீஸ்வர சுவாமி திருக்கோயில் தொடர்புடைய சாலைகளைப் புதுப்பிக்க வேண்டும்.

சதுரங்கப்பட்டினம் ஊராட்சி, கடற்கரையோர கிராம மக்களது தொழிலுக்கு உதவிகரமாக உள்ள வகையில் அரசு சார்பில் மீன்வலை பின்னும் கூடம் அமைத்துத் தர வேண்டும். பையனூர் ஊராட்சி, இடுகாட்டுச் சாலையை தார்ச் சாலையாக அமைத்துத் தர வேண்டும். மாம்பாக்கம் ஊராட்சி, மயானப் பகுதிக்குத் தேவையான கரும காரியக் கூடம், அதற்குத் தேவையான தண்ணீர் வசதி செய்து தர வேண்டும். ஒத்திவாக்கம் ஊராட்சியில் உள்ள நியாய விலைக் கடைக்குப் புதியதாகக் கட்டடம் கட்டித் தர வேண்டும்.

2023 ஏப்ரல் 12] [திரு. S.S. பாலாஜி]

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் தாம்பரத்திலிருந்து தையூர் வரை இயங்கி வந்த 55–T பேருந்தினை மீண்டும் இயக்கித் தர வேண்டும். சென்னை மாநகர போக்குவரத்துக் கழகம் சார்பில் 519–T பேருந்தை அடையாறிலிருந்து காட்டூர் சிவன் கோயில் வரை நீட்டித்துத் தர வேண்டும். தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் T–21 பேருந்து மாலை 5.00 மணிக்கு திருநிலை ஊராட்சியைக் கடந்து செல்லும் வகையில் இயக்கித் தர வேண்டும். தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் திருப்போரூர் தொகுதியில் அடையாறிலிருந்து அம்மாப்பேட்டை வரை (தையூர் – காயார் வழியாக) புதிய வழித் தடத்தை இயக்கித் தர வேண்டும்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் இயக்கப்பட்டு வரும் திருப்போரூர் பேருந்துகளை (தடம் எண் 102, பிராட்வே–திருப்போரூர்), (தடம் எண் 19, தி.நகர்–திருப்போரூர்), (தடம் எண் 515, தாம்பரம்–திருப்போரூர்), (தடம் எண் 570, கோயம்பேடு–திருப்போரூர்) கல்லூரி நேரங்களில் திருப்போரூரிலிருந்து பையனூர் வரை நீட்டித்துத் தர வேண்டும். பையனூரில் உள்ள விநாயகா மிஷன்ஸ் பொறியியல், கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்குச் செல்லும் 150 கல்லூரி மாணவர்களுக்கு, மாமல்லபுரத்திலிருந்து பேருந்து இயக்கித் தர வேண்டும். திருப்போரூரிலிருந்து செங்கல்பட்டு மார்க்கம் மற்றும் செங்கல்பட்டிலிருந்து திருப்போரூர், திருப்போரூர் மார்க்கம் வழித் தடங்களில் செம்பாக்கம் பள்ளி, மாணவர்கள் செல்லும் நேரமான காலை 8–45 முதல் 9–00 மணி வரையிலும் மாலை 4–00 முதல் 4–30 மணி வரையிலும் முறையே இரண்டு பேருந்துகளை இயக்கித் தர வேண்டும்.

தாம்பரம்–தண்டரை–பெரிய இரும்பேடு வழித்தடத்தில் இயங்கிவந்த T–28 பேருந்தை மீண்டும் இயக்க வேண்டும். ECR உடன் இணையும் நெம்மேலிகுப்பம் குடியிருப்புச் சாலையைச் சீரமைக்க வேண்டும். நாவலூர்–தத்தளூர்–ஜம்பேரி சாலையைச் சீரமைக்க வேண்டும். திருப்போரூர் கால்நடை மருந்தகத்திற்குப் புதிய கட்டடம் மற்றும் சுற்றுச் சுவர் கட்டித் தர வேண்டும். தையூர் ஆதி திராவிட நல மேல்நிலைப் பள்ளிக்கு விழா மேடையுடன்கூடிய கலையரங்கம் அமைத்துத் தரவும், சுற்றுச் சுவரை உயர்த்தித் தரவும் வேண்டும்.

தையூர் அரசு ஆதி திராவிட மேல்நிலைப் பள்ளியில் நூலகத்திற்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தர வேண்டும். மானாமதி ஊராட்சி, அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கழிப்பறை வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும். நெம்மேலி ஊராட்சி, அரசு மேல்நிலைப் பள்ளியின் கட்டடங்களைப் புதுப்பித்தும், தேவையான கூடுதல் கட்டடங்கள் கட்டித் தரவும் வேண்டும். பட்டிப்புலம் ஊராட்சி, அரசு ஆதி திராவிட உயர்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் கட்டித் தர வேண்டும். நெம்மேலி ஊராட்சி, அரசு மேல்நிலைப் பள்ளிக்குச் சுகாதார வசதிகள் மற்றும் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் கட்டித் தர வேண்டும்.

மாமல்லபுரம் அரசு மேல்நிலைப் பள்ளிக்குப் புதிய கலையரங்க மேடை கட்டித் தர வேண்டும். மாம்பாக்கம் ஊராட்சி, அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள், கழிப்பறைகள், பள்ளி சுற்றுச் சுவர், மழைநீர் வடிகால் கால்வாய்கள் ஆகிய அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளைச் செய்து தர வேண்டும். செம்பாக்கம் ஊராட்சி, அரசு மேல்நிலைப் பள்ளிக்குப் புதிய கழிப்பறைக் கட்டடங்கள் கட்டித் தர வேண்டும்.

செங்கல்பட்டில் புதிதாக அமையவுள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து பொன்விளைந்தகளத்தூர் செல்லும் சாலையை அகலப்படுத்தித் தரவேண்டும். சோகண்டி ஊராட்சி, உயர்நிலைப் பள்ளிக்குக் கழிப்பறை, விளையாட்டு மைதானம், பள்ளி அலுவலகக் கட்டடம் ஆகியவற்றைக் கட்டித் தர வேண்டும். மானாமதி ஊராட்சி, ஆரம்ப சுகாதார மையத்திற்குக் கூடுதல் கட்டடங்கள், சுற்றுச் சுவர் கட்டித் தர வேண்டும். சதுரங்கப்பட்டினம் ஊராட்சி, ஆரம்ப சுகாதார நிலையத்திற்குத் தேவையான கட்டடங்கள் கட்டித் தர வேண்டும். மாமல்லபுரம் பேரூராட்சியில் சுற்றுலாத் தலத்திற்கு வருகை தரும் வாகனங்களுக்கு நுழைவுக் கட்டணம் வாகன நிறுத்தப் பகுதிகளிலேயே வசூலிக்கப்பட வேண்டும்.

பேரூர் நான்காவது கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தில் முட்டுக்காடு ஊராட்சிக்குட்பட்ட ஏகாட்டூர் பகுதியை இணைக்க வேண்டும். திருப்போரூர் சிறப்புநிலைப் பேரூராட்சியில் உள்ள 4-வது வார்டு பகுதிக்குப் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும். திருக்கழுக்குன்றம் பேரூராட்சியில் 18-வது வார்டு மங்கலம் பகுதியில் புதிய கரும காரியக் கூடம்

அமைத்துத் தர வேண்டும். திருக்கழுக்குன்றம் பேரூராட்சி, ஆசிரியர் நகர் 14-வது தெரு, பொதுமக்களுக்குக் கழிவுநீர் கால்வாயுடன் சேர்ந்த சிமெண்ட் சாலை அமைத்துத் தர வேண்டும்.

திருப்போரூர் பேரூராட்சி, 15-வது வார்டு மேட்டுக்குப்பம் இள்ளலூர் ரோடு-செங்காடு சாலை பழுதடைந்துள்ளதால் சாலையினைப் புதுப்பித்துத் தர வேண்டும். மாமல்லபுரம் பேரூராட்சியில் செயல்பட்டுவரும் அரசு சிற்பக் கல்லூரியில் புதிதாக குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும்.

தையூர் ஊராட்சி, 1-வது வார்டு, நியாயவிலைக் கூட்டுறவு கடையில் 1, 6, 8 ஆகிய மூன்று வார்டு மக்கள் 1-வது வார்டு கடையிலேயே ஆயிரத்து அறுநூறு குடும்ப அட்டைதாரர்களுடன் பொருட்கள் வாங்குகின்றனர். மேலும், அந்தக் கடையில் முதியவர்கள் பொருட்கள் வாங்குவதில் மிகவும் சிரமத்திற்கு ஆளாகின்றனர். அனைத்துக் குடும்ப அட்டைதாரர்கள் ஒரே நேரத்தில் கூடுவதால், கூட்ட நெரிசல் காரணமாக பொருட்கள் வாங்க முடிவதில்லை. 8-வது வார்டில் (பெரியமாநகர், மந்தைவெளி, குப்பமாநகர் மற்றும் விஜயராஜா குடியிருப்பு) சுமார் அறுநூறு குடும்ப அட்டைதாரர்கள் உள்ளனர். எனவே, இந்த நியாய விலைக் கடையினைப் பிரித்து தனி நியாய விலைக் கடையினை அமைத்துத் தர வேண்டும்.

மாமல்லபுரம், பவழக்காரன்சத்திரம் கிராமத்திற்கென தனியே ஒரு பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்துத் தர வேண்டும். வேண்பாக்கம் பகுதியில் புதிய ரேஷன் கடை அமைத்துத் தர வேண்டும். ஆலவாய் கிராமத்திற்குப் புதியதாக நியாய விலைக் கடை அமைத்துத் தர வேண்டும். மானாமதி ஊராட்சி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கத்திற்குச் சுற்றுச்சுவர் அமைத்துத் தர வேண்டும். பெரிய இரும்பேடு, தண்டரை ஆகிய ஊராட்சிகளை மையமாகக் கொண்டு இரண்டு பகுதிகளுக்கும் புதிய கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. இளங்கோ அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள், உங்களுக்கு என்ன சந்தேகம் வந்தது, சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்போது, அவருக்கும் தங்களுக்குமிடையே மற்ற உறுப்பினர்கள் குறுக்கே செல்லக் கூடாது என்ற விதிமுறை கடந்த காலங்களில் பின்பற்றப்பட்டு வந்தது. முத்தமிழறிஞர் கலைஞர் ஐயா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுகூட, ஓர் உறுப்பினர் பேசிக் கொண்டிருந்தபோது, முதலமைச்சர் அவர்கள் நின்று, அந்த உறுப்பினர் ஒரு நிமிடம் பேசி அமர்ந்த பிறகுதான் உள்ளே வந்தார்கள். எனவே, அந்த நடைமுறையைப் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை நான் பலமுறை மாமன்ற உறுப்பினர்களிடம் சொல்லியிருக்கிறேன் Maximum அதைக் கடைபிடிக்கிறார்கள். தவிர்க்க முடியாமல் சில நேரங்களில் சில சம்பவங்களைப் பார்த்ததால் நீங்கள் சொல்கிறீர்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதையும் மனதில் வைத்துக்கொள்ளுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. இளங்கோ அவர்கள்.

திரு. ரா. இளங்கோ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டின் சிற்பி, விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், மாணவர்களுக்குக் கட்டணமில்லாப் பேருந்து பயணம், ஏழையெளிய மக்களுக்கு இலவச காப்பீட்டுத் திட்டம், சமத்துவபுரம், உழவர் சந்தை என மக்களுக்கான திட்டங்களைத் தந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் உறங்குகின்ற திசைநோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

'மக்களிடம் செல்' என்ற அண்ணாவின் கொள்கைக்கேற்ப, மக்களைத் தேடி மருத்துவம், இல்லம் தேடிக் கல்வி தந்த தலைவரே! மகளிரின் சகோதரனாய் குடும்பத் தலைவிக்கு உரிமைத் தொகை, மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்துப் பயண வசதி தந்த தளபதியே! விவசாயிகளின் காவலனாய் விவசாயத்திற்குத் தனி பட்ஜெட், ஒன்றரை இலட்சம் விவசாயிகளுக்கு மின்னிணைப்பு தந்த தலைவரே! மாணவர்களுக்குக் காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண் திட்டம் வழங்கிய முதல்வரே! சுறுசுறுப்பில் தேனீயைப்போல அனைத்து மாவட்டங்களுக்கும் நேரில் சென்று,

கள ஆய்வுகள் செய்து பல்வேறு நலத் திட்டங்களை வழங்கியும் மக்கள் நலன் காக்கும் முதல்வரே! தங்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சேப்பாக்கம் தொகுதியின் ஆட்ட நாயகனாய், தமிழ்நாட்டின் தொடர் நாயகனாய், இளைஞரணியின் எழுச்சி நாயகனாய், தமிழ்நாட்டின் வளர்ச்சி ஒன்றையே குறிக்கோளாய், அமைச்சர் பொறுப்பேற்றதுமுதல் தமிழகம் முழுவதும் சூறாவளி சுற்றுப் பயணம் மேற்கொண்டு, எண்ணற்ற பயனாளிகளுக்கு நலத் திட்டங்களை வழங்கி, எங்களுக்கெல்லாம் வழிகாட்டியாகத் திகழும் எங்களின் சின்னவர் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அவையில் வீற்றிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களை வணங்குகின்றேன். கரூர் மாவட்டத்திற்கு எண்ணற்றத் திட்டங்களைப் பெற்றுத் தந்த மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அண்ணன் திரு. செந்தில்பாலாஜி அவர்களையும் வணங்குகிறேன். இங்கே வீற்றிருக்கின்ற அனைத்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை குறித்த மானியக் கோரிக்கைகளின்மீது எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், அதற்கு உறுதுணையாக இருந்த மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும், எனக்கு இந்த வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த அரவக்குறிச்சி தொகுதி மக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறை அனைத்து துறைகளையும்விட மூத்த துறை. ஏனெனில், மன்னராட்சி காலத்திலேயே இந்தத் துறை உருவாக்கப்பட்டது. இந்தத் துறையின் மூலமாகத்தான் பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்குத் தேவையான நிலங்கள் பிரித்து வழங்கப்படுகின்றன. இந்தத் துறை மாநிலத்திலுள்ள அனைத்து வகையான நிலங்களைப் பாதுகாப்பதோடு, முறையாக நில ஆவணங்களைப் பராமரித்தும் வருகிறது. அதுமட்டுமல்ல; நில எடுப்பு, நில உரிமை, நிலம்

ஒப்படைப்பு, வீட்டுமனைப் பட்டா வழங்குதல் ஆகியவற்றில் இந்தத் துறை முக்கியப் பங்கு வகிக்கிறது. நில உச்சவரம்பு, நில வரி வசூலித்தல் போன்ற பணிகளையும் இத்துறை மேற்கொண்டு வருகிறது. இத்துறையின்மூலமாக மக்களுக்கு அனைத்து வகையான சான்றிதழ்களும் வழங்கப்பெறுகின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், நம்முடைய தலைவருடைய ஆட்சிக் காலத்தில் இ-சேவைமூலம் ஒரு கோடியே 68 மனுக்களுக்கு இன்றைக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்த வேளையிலே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறை தொடங்கப்பட்டது முதல் புயல், வெள்ளம், வறட்சி, பூகம்பம், கொரோனா பெருந்தொற்று ஆகிய இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, உறைவிடம், குடிநீர் வழங்குவது போன்ற அத்தியாவசியப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, கொரோனா பெருந்தொற்று காலத்திலும், புயலால் பாதிக்கப்பட்ட நேரத்திலும் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சித் தலைவர் மேற்பார்வையில் War room-கள் அமைக்கப்பட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளும் இத்துறைமூலம் மேற்கொள்ளப்பட்டன. தென்மேற்குப் பருவமழை மற்றும் வடகிழக்குப் பருவமழைக் காலங்களில் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு குறிப்பாக, சென்னையில் அதிகப்படியான இடங்கள் பாதிக்கப்பட்டன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரவு, பகல் பாராமல் அந்தப் பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று, அதிகாரிகளையும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும், பேரிடர் ஊழியர்களையும் வைத்து நிவாரணப் பணிகளை மேற்கொண்டார்கள். இதன் காரணமாக, சேதங்களும், உயிரிழப்புகளும் தவிர்க்கப்பட்டன. அதேபோல, டெல்டா பகுதியில் பெய்த கனமழை காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உரிய முறையில், உரிய நேரத்தில் நிவாரணம் வழங்கப்பட்டது என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் வருவாய்த் துறையின்கீழ் ஆட்சி அமைப்பு இருக்கிறது. இந்த அமைப்பு அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரில் ஆரம்பித்து மாவட்ட வருவாய் அலுவலர்கள், கோட்டாட்சியர்கள், வட்டாட்சியர்கள்,

கிராம வருவாய் அலுவலர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் கிராம உதவியாளர்கள் இப்படி படிப்படியாகப் பணியாளர்களைப்பெற்று, இந்தத் துறை எல்லா துறைகளுக்கும் ஒரு தாய்த் துறையாக விளங்குகிறது. இந்தத் துறையின் வழியாகத்தான் தமிழ்நாட்டினுடைய அனைத்து நலத் திட்டங்களும் மக்களிடத்திலே கொண்டு சேர்க்கப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூகப் பாதுகாப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் நம்முடைய மாநிலம் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. சமுதாயத்தில் நலிவடைந்த மூத்த குடிமக்கள், மாற்றுத் திறனாளிகள், விவசாயத் தொழிலாளர்கள், ஏழை விவசாயிகள், 60 வயதிற்கும் மேற்பட்டவர்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் இத்திட்டத்தின்மூலம் பயனடைகிறார்கள். சென்ற டிசம்பர் மாதம் நடைபெற்ற நல்லாட்சி வாரம்—Good Governance week— நிகழ்ச்சியில் மக்கள் குறை தீர்ப்பில் தமிழ்நாடு அரசுமூலம் புதுமையான முறையில் மனுக்களுக்கு விரைந்து தீர்வு காணப்பட்டது என்று ஒன்றிய இணை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு பாராட்டுக் கடிதம் ஒன்றை எழுதி அனுப்பியிருக்கிறார் என்பதை இந்த நேரத்திலே பதிவு செய்ய நான் கடமைப்பட்டிருக்கிறேன். இதன்மூலம் இன்றைக்கு சமூக பாதுகாப்புத் திட்டத்தில் நம்முடைய அரசு சிறப்பாகக் கவனம் செலுத்தி அனைத்துத் தரப்பு மக்களும், ஏழையெளிய மக்களும் ஓய்வூதியத் திட்டத்தின் மூலமாகப் பயனடைகிறார்கள் என்பதை நான் இந்த வேளையிலே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாக்காளர் பட்டியல் தயாரித்தல், நாடாளுமன்ற, சட்டமன்றத் தேர்தலை நடத்துதல் ஆகியவை வருவாய்த் துறையினுடைய முக்கியப் பணிகளாகும். நிலமில்லாத ஏழையெளிய மக்கள் கண்டறியப்பட்டு அவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதும் இத்துறை மூலமாகத்தான். இன்றைக்கு கிராமப்புறங்களில் நத்தம் புறம்போக்கு நிலங்களில் குடியிருப்பவர்களுக்கு மட்டும்தான் பட்டா வழங்கப்படுகிறது. மேய்க்கால் புறம்போக்கு, மந்தைப் புறம்போக்கு, வண்டிப்பாதை, தோப்புப் புறம்போக்கு, கல்லாங்குத்து போன்ற பகுதிகளிலே குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்கப்படுவதில்லை. ஆனால், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 2009–2010 ஆம் ஆண்டில்

special one time G.O. வெளியிடப்பட்டு, அதன்மூலம் 7 ஆண்டுகள், 8 ஆண்டுகள் என இந்த மேய்க்கால் புறம்போக்கு பகுதிகளில் குடியிருப்பவர்களுக்குப் பட்டா வழங்கப்பட்டது என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தளபதி அவர்கள் தலைமையிலே மக்கள் போற்றும் சிறப்பான ஆட்சி புரியும் நம்முடைய கழக அரசு என்னுடைய தொகுதியில் க. பரமத்தியை தலைமையிடமாகக் கொண்டு ஒரு தாலுகாவை உருவாக்கித் தர வேண்டும். அது மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கை. ஏனென்றால், பரமத்தி என்பது அரவக்குறிச்சி தொகுதியினுடைய மத்தியப் பகுதியிலே இருக்கின்றது. 30–க்கும் மேற்பட்ட கிராமங்கள் அதைச் சுற்றியிருக்கின்றன. இன்றைக்கு தாலுகா அலுவலகத்திற்குச் செல்ல வேண்டுமென்றால், கரூர் சென்று, அதற்குப் பிறகுதான் புகளூர் செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, பரமத்தியை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய தாலுகாவை உருவாக்கித் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இன்னும் சில இடங்களில் இரண்டு ஊராட்சிகளுக்கு ஒரு கிராம நிருவாக அலுவலகம் இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) குறிப்பாக, என்னுடைய தொகுதியில், லிங்கமநாயக்கன்பட்டி கிராமத்தைப் பள்ளப்பட்டி நகராட்சியுடன் இணைத்திருக்கிறார்கள்.

பிற்பகல் 1–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. இளங்கோ, உரையை முடித்துவிடுங்கள்.

திரு. ரா. இளங்கோ: ஒரே நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். அதைப்போல, தொக்குபட்டி கிராமத்தை எலவனூர் ஊராட்சியோடு இணைத்திருக்கிறார்கள். ஆகவே, தனித் தனியாக கிராம நிருவாக அலுவலகம் அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, இந்தப் பகுதியில் surveyor–கள் மிகக் குறைவாக இருக்கின்றனர்; 4,000 பேர் பணியாற்ற வேண்டிய இடத்தில், 2,000 பேர்தான் பணியாற்றிக்கொண்டிருக்கின்றனர். ஆகவே, surveyor பணியிடத்தை விரைவில் நிரப்பித் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 12] *[திரு. ரா. இளங்கோ]*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு விவசாயிகளின் நலன் காக்கின்ற அரசு. இன்றைக்கு ஒன்றரை இலட்சம் விவசாயிகளுக்கு மின்னிணைப்புகள் வழங்கியது மட்டுமல்லாமல், எங்களுடைய பகுதியை முருங்கை ஏற்றுமதி மண்டலமாக அறிவித்தது மட்டுமல்லாமல், சர்வதேச முருங்கை கண்காட்சி ஒன்று கரூரில் நடத்தப்பட்டது. மூன்று மாண்புமிகு அமைச்சர்கள், மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். அந்தக் கண்காட்சிக்கு உள் நாட்டிலிருந்தும், வெளி நாடுகளிலிருந்தும் தொழில் முனைவோர்களெல்லாம் வருகை புரிந்த காரணத்தினால், முருங்கையின் importance*-ஐ உலகளவில் அறியச் செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, இந்த வேளையில் அரவக்குறிச்சி தொகுதி மக்களின் சார்பாக நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

அதைப்போல, விவசாயிகளின் நலன் கருதி ஆடு, மாடு கொட்டகைகளை வழங்க வேண்டும். அதேபோல, ஒவ்வொரு கிராமத்திற்கும் கால்நடை கிளை நிலையம் ஒன்று அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

ஒரேயொரு முக்கியமான விஷயத்தைக் கூறி விடுகிறேன். கிராமப்புறங்களில் இருக்கின்ற ஆதி திராவிட மக்கள் வசிக்கின்ற தொகுப்பு வீடுகளெல்லாம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. அவற்றை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பராமரிப்பு செய்து வருகிறோம். ஆனால், இன்றைக்கு ஒவ்வொரு தொகுதியிலும் இருக்கின்ற 20,000-க்கும் மேற்பட்ட தொகுப்பு வீடுகளெல்லாம் இடிந்து விழுகின்ற நிலையில் இருக்கின்றன. அவற்றைச் சரி செய்வதற்காக ஒரு புதிய திட்டத்தை உருவாக்கித் தர வேண்டுமென்று (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உரையாற்றியது போதும்.*

திரு. ரா. இளங்கோ: ஒரே நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். அதைப்போல, பள்ளப்பட்டி, புகளூர் பேரூராட்சிகளை நகராட்சிகளாகத் தரமுயர்த்தித் தந்ததற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், அந்தப் பகுதிகளிலே technical staff நிரப்பப்படாமல் இருக்கிறார்கள். அதையும் விரைவில் நிரப்பித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) அதைப்போல. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தொகுதிக் கோரிக்கைகளை என்னிடம் தந்துவிடுங்கள். அவற்றை நான் அவைக் குறிப்பில் பதிவு செய்துவிடுகிறேன். (குறுக்கீடு)

திரு. ரா. இளங்கோ: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடம், சென்ற முறை, கரூரிலிருந்து கோயம்புத்தூர் செல்கின்ற சாலையை நான்குவழிச் சாலையாக மாற்றுவதற்குக் கோரிக்கை வைத்தேன். இன்றைக்கு, அதற்கு அரசாணை வெளியிட்டிருக்கிறார்கள். அதைப்போல, நொய்யலிலிருந்து வேலாயுதம்பாளையம் செல்கின்ற சாலையில் இரண்டு railway crossings இருக்கின்றன. அந்த இரண்டு railway crossing-களிலும் மேம்பாலம் அமைத்துத் தர வேண்டும். ஏனென்று கேட்டால், அந்தச் சாலைகளை, 10 மீட்டர் சாலைகளாக. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையாற்றியது போதும். இரண்டு மேம்பாலங்கள் கேட்டிருக்கிறீர்கள். OK. அதை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறித்துக்கொண்டார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார் அவர்கள். (குறுக்கீடு) நன்றி மட்டும் சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. ரா. இளங்கோ: ஆகவே, இந்தக் கோரிக்கைகளையெல்லாம் நான் உங்களிடத்தில் படித்ததாகக் கருதி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னிடம் படித்ததாக இல்லை; அதை என்னிடம் தந்துவிடுங்கள். (குறுக்கீடு) நீங்கள் சபையில் பேசியதாகப் பதிவு செய்துவிடுகிறேன்.

திரு. ரா. இளங்கோ: நான் அவையில் படித்ததாகக் கருதி, அவற்றை நீங்கள் அவைக் குறிப்பில் பதிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

2023 ஏப்ரல் 12] [திரு. ரா. இளங்கோ]

தொகுதிக் கோரிக்கைகள்:

அரவக்குறிச்சி தொகுதியிலுள்ள மண் சாலைகளை முற்றிலுமாக தார்ச் சாலைகளாக மாற்றித் தர வேண்டும்.

கரூர்-கோவை தேசிய நெடுஞ்சாலையில் க. பரமத்தியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு பொது மருத்துவமனையாகத் தரமுயர்த்த வேண்டும். மேலும், தென்னிலை பகுதியில் துணை சுகாதார நிலையம் அமைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார் அவர்கள். பின்னால் பேச வருகிறவர்களுக்கெல்லாம் 7 நிமிடங்கள் பேச அனுமதிக்கப்படுகிறது. ஏற்கெனவே, 30 நிமிடங்கள் பேசியிருக்கிறார். (குறுக்கீடு)*

திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படிக்கும்போதும்கூட இவ்வளவு படிக்கவில்லை. இன்றைக்கு நிறைய* prepare *செய்துகொண்டு வந்திருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் சிறிதுநேரம் உட்காருங்கள். ஒரு நிமிடத்தில் சொல்லிவிடுகிறேன்.*

3. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஆ) பேரவை நிகழ்ச்சிகள் முழுவதையும் நேரடி ஒளிபரப்பு செய்வது–*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதாவது, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்* Zero Hour*-ல் பேசியதை* live *ஆக ஒளிபரப்பு செய்யவில்லை என்று மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்கள் அவையில் சொல்லி, அதனால், நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம் என்று சொல்லி, வெளிநடப்பு செய்துவிட்டு வந்தீர்கள். அது உங்கள் உரிமை. ஆனால், என்ன நடந்தது என்பதை அவர்கள் ஏற்கெனவே இங்கே, மைக் இல்லாமல், என்னிடம் சொன்னார்கள். நான் விசாரித்துவிட்டேன்.*

இன்றுவரை, வினாக்கள்-விடைகள் நேரம் நேரடி ஒளிபரப்பு செய்துகொண்டிருக்கிறோம். இன்றுவரைக்கும், அதைத் தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறோம். அதற்குப் பிறகு, இன்று முதற்கட்டமாக, (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள், அவரவர்

இருக்கைகளுக்குச் சென்று உட்காருங்கள். திரு. மார்க்கண்டேயன், உங்கள் இருக்கைக்குச் சென்று உட்காருங்கள். இன்றிலிருந்து agenda-வில் என்ன இருக்கிறதோ, அதையும் பரிட்சார்த்த முறையில் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள், live telecast செய்யுங்கள் என்று சொல்லிவிட்டார்கள். அந்த அடிப்படையில் agenda-வில் எடுத்துக்கொள்ளப்படுவதை மட்டும்—agenda-வில் கவன ஈர்ப்பு என்று எடுத்துக்கொள்கிறோம்.

பிற்பகல் 1–35

இன்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்களும் கவன ஈர்ப்பு கொண்டு வந்தார்கள். அதையும் இன்று நேரடியாக ஒளிபரப்பு செய்தோம். இவ்வாறு படிப்படியாக ஒளிபரப்பு செய்யப்படும். மீதமுள்ள மற்ற அலுவல்களைப் பொறுத்தவரையில், கடந்த காலங்களில் என்ன நடைமுறைகள் பின்பற்றப்பட்டனவோ, அந்த நடைமுறைகள்தான் பின்பற்றப்பட்டு வருகின்றன. சட்டமன்ற நிகழ்வுகளை 100 சதவிகிதம் ஒளிபரப்பு செய்ய வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நோக்கமாகும். படிப்படியாக அனைத்தும் ஒளிபரப்பு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்களுக்கு இதற்குப் பிறகும் என்ன சந்தேகம் உள்ளது?

திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாக்கள்-விடைகள் ஒளிபரப்பு செய்யப்படுகிறது; அதற்குப் பிறகு கவன ஈர்ப்பு ஒளிபரப்பு செய்யப்படுகிறது. நீங்கள் பொதுவாக சொல்வதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மக்கள் பிரச்சினையைப் பற்றி பேசும்போது, அதை மட்டும் cut செய்து, அதற்குப் பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுவது, மற்றவையெல்லாம் ஒளிபரப்பு செய்யப்படுகின்றன. அதைத்தான் நாங்கள் கேட்டோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா, உட்காருங்கள். நான் சொல்கிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள். நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள்; நான் சொல்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித்

தலைவர் அவர்கள் பேசுவது அவசியமானது, அது அவசியம் இல்லை என்று யாரும் சொல்லவில்லை? (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடு) நான் ஏற்கெனவே தெளிவாகச் சொல்லிவிட்டேன். வினாக்கள்-விடைகள் நேரத்தில் என்ன நடந்தாலும் அவை நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படுகின்றன. அதற்குப் பிறகு, agenda*-வில் வரக்கூடிய கவன ஈர்ப்பு இன்று முதல் ஒளிபரப்பு செய்யப்படுகின்றது. அதேபோன்று, இங்கு பேசும் மற்ற அனைத்தும்* live *ஆக* screen*-ல் வருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. படிப்படியாக விரைவில் ஒளிபரப்பு செய்யப்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார், பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பிரதான எதிர்க்கட்சியாக இருக்கிறது. நான் பேசுவதை ஏன் தடை செய்கிறீர்கள்? இதில் உங்களுக்கு என்ன பிரச்சினை இருக்கிறது என்று எங்களுக்குத் தெரியவில்லை? மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவருக்கு இதில் என்ன ** இருக்கிறது என்று எங்களுக்குத் தெரியவில்லை?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் உட்காருங்கள், நான் சொல்கிறேன். ** என்று சொன்னதை நீக்கிவிடுவோம்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *இதில் உங்களுக்கு என்ன பிரச்சினை இருக்கிறது? பிரதான எதிர்க்கட்சியாக நாங்கள் இருக்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் கேள்வி கேட்டிருக்கிறீர்கள். நான் பதில் சொல்கிறேன். (குறுக்கீடு) இல்லை, கேட்டுவிட்டீர்கள்; அதற்கு நான் பதில் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் கேட்டிருக்கிறீர்கள்; அதற்கு நான் பதில் சொல்கிறேன். உங்களுக்குத் தெரியாதது ஒன்றும் இல்லை. நிறைய விஷயங்களை இங்கு வெளிப்படையாகப் பேசுவதற்கு நான் விரும்பவில்லை. கடந்த 10 ஆண்டுக் கால வரலாறை எடுத்துப் பேசுவதற்கு நான் விரும்பவில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், உட்காருங்கள். நான் சொல்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், உட்காருங்கள். நான் சொல்கிறேன். (குறுக்கீடு)*

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *பிறகு, எங்களுக்கு என்ன வேலை இங்கேயிருக்கிறது? தெரியவில்லையே! நாங்கள் பேசுவது வரவில்லையென்றால், எதற்காக இங்கு வந்து உட்கார்ந்திருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர்கள் பேசுவதைக் கேட்பதற்கு நாங்கள் இங்கு வந்து உட்கார்ந்திருக்க வேண்டுமா? ஆளுங்கட்சி பேசுவதை நாங்கள் உட்கார்ந்து கேட்டுவிட்டு போக வேண்டும்; அதுதான் எங்களுடைய வேலை!*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, நீங்கள் உட்காருங்கள்; நான் சொல்கிறேன். (குறுக்கீடு)*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. உட்கார்ந்து கொண்டு யாரும் பேச வேண்டாம். நான் உங்களுக்குத் தேவையான பதிலைச் சொல்கிறேன். நீங்கள் கேள்வி கேட்டுவிட்டீர்கள். நான் சொல்கிற பதிலையும் நீங்கள் கேளுங்கள். (குறுக்கீடு) நான் பதில் சொல்வதையும் நீங்கள் கேட்க வேண்டும். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது உங்களுடைய ஆளுகைக்குட்பட்டது. உங்களிடத்தில்தான் நாங்கள் கேட்கிறோம். ஆளுங்கட்சிக்கு ஒரு நியாயம்; எதிர்க்கட்சிக்கு ஒரு நியாயம் என்ற நிலை இருக்கக் கூடாது. இது அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுடைய உரிமை. அந்த உரிமையை நிலைநாட்டுவது தங்களுடைய கடமை. அதைத்தான் நாங்கள் கேட்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோன்று, ஆளுங்கட்சிக்கு ஒரு நியாயம், எதிர்க்கட்சிக்கு ஒரு நியாயம் என்ற நிலைமை இங்கே இல்லை. இந்த அரசு தேர்தல் அறிக்கையில் சொன்னதை நிறைவேற்றுமோ, நிறைவேற்றவில்லையோ! அதைப் பற்றி நீங்கள் கேள்வி கேட்பது, அதற்கு பதில் சொல்வது ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி பிரச்சினை. இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், படிப்படியாக எவ்வாறு நேரடி ஒளிபரப்பு செய்யலாம் என்பது குறித்து நாங்கள் இங்கே இருந்துகொண்டே நடவடிக்கை எடுக்கவில்லை. பேரவைத்*

2023 ஏப்ரல் 12] [பேரவைத் தலைவர்]

தலைவர் என்ற முறையிலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆலோசனையைப் பெற்றும், கேரளா, ஒடிசா, கோவா, டெல்லி போன்ற இந்தியாவிலுள்ள பல மாநிலங்களுக்கு நம்முடைய அதிகாரிகள் சென்று, எந்தெந்த மாநிலங்களில் என்னென்ன நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன என்பது பற்றி ஆய்வு செய்து, அறிக்கைகள் கொடுத்தார்கள். கேரளாவில் வினாக்கள்-விடைகள் மட்டும் ஒளிபரப்பு செய்யப்படுகிறது. ஒடிசாவில் வினாக்கள்-விடைகள் மட்டும் ஒளிபரப்பு செய்யப்படுகிறது. மற்ற நேரங்களில் screen *செய்து, ½ மணி நேரம், ஒரு மணி நேரம் கழித்து, சில நிகழ்வுகளை முன்பு நீங்கள் ஒளிபரப்பு செய்ய என்ன நடைமுறைகளைப் பின்பற்றினீர்களோ, அதே நடைமுறைகளைப் பின்பற்றி ஒளிபரப்பு செய்கிறார்கள். இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, வினாக்கள்-விடைகள், ஆளும்கட்சி, எதிர்க்கட்சி என்று பாராமல் எல்லோருக்கும் சம வாய்ப்புக் கொடுத்து, நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படுகின்றன. இன்று முதல்* agenda-*வில் இருக்கக்கூடியதை, கவன ஈர்ப்புத் தீர்மானத்தையும் ஒளிபரப்பு செய்ய ஆரம்பித்திருக்கிறோம். யார் பேசுகிறீர்கள் என்பதும் இன்று முதல்* live *ஆக* screen-*ல் ஒளிபரப்பு செய்யப்பட்டிருக்கிறது. படிப்படியாக* zero hour *உட்பட அனைத்து நிகழ்வுகளும் நிச்சயமாக ஒளிபரப்பு செய்யப்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார் அவர்கள். (குறுக்கீடு) போதுமே! இனிமேல் இதில் பேசுவதற்கு தேவையிருக்காதே? மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமன்றப் பேரவையின் ஆளுகை தங்களுடைய கட்டுப்பாட்டில் இருக்கிறதா அல்லது முதல்வர் அவர்களுடைய கட்டுப்பாட்டில் இருக்கிறதா?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்னுடைய கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது. நான்தான் இந்த முடிவை எடுத்திருக்கிறேன்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *உங்களுடைய கட்டுப்பாட்டில் இருக்கின்ற காரணத்தினால்தான், சட்டமன்ற உறுப்பினர்களின் உரிமை என்ற அடிப்படையில், எதிர்க்கட்சித் தலைவர் என்ற அடிப்படையில் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். இதில் என்ன சங்கடம் இருக்கின்றது?*

[*2023 ஏப்ரல் 12*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், உட்காருங்கள்.*

பிற்பகல் 1–40

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *இல்லை. இதில் உங்களுக்கு என்ன சங்கடம் இருக்கின்றது? ஏனென்றால் நாங்கள் கேள்வி கேட்கின்றோம். கேள்வி கேட்பது வருவதில்லை; பதில் சொல்வது மட்டும்தான் வருகிறது. ஆக, தங்கள் ஆளுகைக்குட்பட்ட இந்தச் சட்டமன்ற வளாகத்தில், சட்டமன்றப் பேரவைக்குள், தாங்கள் எடுக்கின்ற முடிவுதான் இறுதி முடிவு. எனவே, அதில் தாங்கள்தான் நடுநிலையோடு செயல்பட வேண்டும். எங்களுடைய பிரச்சினையைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது எங்களுடைய கடமை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். அதாவது மீண்டும் மீண்டும் இந்த அவை ** நடக்கின்றதா என்ற தவறான குற்றச்சாட்டு, எண்ணத்தோடு சொல்கிறீர்கள். நான் மிகவும் தெளிவாகச் சொல்லிவிட்டேன். ஏற்கெனவே என்னென்ன நடைமுறைகள் பின்பற்றப்பட்டனவோ, அந்த நடைமுறைகள் இதுவரை பின்பற்றப்படுகின்றன. ஏற்கெனவே புதிதாக ஒளிபரப்பு செய்து கொண்டிருக்கிறோம். அதேபோல்,* zero hour*–ம் ஒளிபரப்பு செய்வதற்கு படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதுவரை ஏற்கெனவே இருந்த நடைமுறை என்னவோ, அதுதான் நடைமுறைப்படுத்தப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார் அவர்கள். (குறுக்கீடு) அதில் ஏதாவது சந்தேகம் இருந்தால் நாளைக்கு நான் விவரத்தைத் தருகிறேன். முழுமையாக விசாரித்துவிட்டு விவரத்தைத் தருகிறேன். (குறுக்கீடு) நான் தெளிவாகச் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) இனி, என்னவென்று ஆய்வு செய்துவிட்டு, முழுமையாக விவரங்களை எடுத்து நாளைக்கு அவைக்குத் தருகிறேன். (குறுக்கீடு) நான் அவைக்குத் தருகிறேன். முழுமையாக என்ன நடந்தது என்பதை எடுத்து தருகிறேன். (குறுக்கீடு)* General *ஆக நான் சொல்லியிருக்கிறேன்.* Particular *ஆக நீங்கள் கேளுங்கள்; அதற்கு நான் சொல்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார், பேசுங்கள். (குறுக்கீடு) அதற்காகத்தான் நாளை நான் தெளிவுபடுத்துகிறேன் என்று சொல்கிறேன்.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

6. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 41-வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை
(ஆ) கோரிக்கை எண் 51-இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு } *தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார், பேசுங்கள். தற்போது 1–41 மணி ஆகிறது; 1–48 மணிக்கு உரையை முடியுங்கள்.*

திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடுத்துக் கொடுத்து சிவந்த கரங்களுக்குச் சொந்தக்காரரர் (மேசையைத் தட்டும் ஒலி) சத்துணவு தந்த சரித்திர நாயகன்; ஏழைகளின் பங்காளி; தமிழகத்தில் தொடர்ந்து ஆட்சிக் கட்டிலில் அமர்ந்துவிட்டு சென்றிருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிறுவனர், தலைவர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

எனக்குப் பின்னாலும் இந்த இயக்கம் 100 ஆண்டுக் காலம் இருக்கும் என்று சொல்லிவிட்டு சென்று, ஒன்றரைக் கோடி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நம்பிக்கை நட்சத்திரமாக மறைந்தும் மறையாமலும் வாழ்ந்து கொண்டிருக்கிற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட இயக்கத்தின் பரிணாம வளர்ச்சியாகத் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வரிசையில் நம்முடைய கழகத்தினுடைய பொதுச் செயலாளர், முன்னாள் முதலமைச்சர், எதிர்க்கட்சியினுடைய தலைவர், எங்கள் இயக்கத்தினுடைய பொதுச் செயலாளர், அண்ணன் எடப்பாடியார் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு சாதாரணத் தொண்டனாக இருந்த என்னை, நாடாளுமன்ற உறுப்பினராக, சட்டமன்ற உறுப்பினராக, ஊராட்சி மன்றத் தலைவராக, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவராகப் பணியாற்ற வாய்ப்பளித்த என்னுடைய மரியாதைக்குரிய வேப்பனஹள்ளி சட்டமன்ற உறுப்பினர், கழகத்தினுடைய துணைப் பொதுச் செயலாளர், மரியாதைக்குரிய அண்ணன் கே.பி.எம். அவர்களையும் வணங்குகிறேன். இந்தப் பேரவையில் எனக்குப் பேச வாய்ப்பளித்த எதிர்க்கட்சிக் கொறடா, மரியாதைக்குரிய அண்ணன் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், எனக்கு 10 நிமிடங்கள் பேச வாய்ப்பளித்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். என்மீது அன்பானவர், பாசமானவர்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், 7 நிமிடங்கள்தான் தந்திருக்கிறேன்.

திரு. கி. அசோக்குமார்: எனவே, எனக்குப் பேச வாய்ப்பை கொடுத்திருக்கக்கூடிய என் மரியாதைக்குரிய பேரவைத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோரையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடம் இரண்டு, மூன்று கோரிக்கைகளை வைக்க விரும்புகிறேன். பண்ணையாண்டி என்று ஒரு சமூகம் இருக்கிறது. கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதியில் பண்ணையாண்டி சமூகத்திற்கு சாதிச் சான்றிதழ் வாங்க வேண்டுமென்று சொன்னால், அதற்குச் சிரமப்பட வேண்டிய ஒரு நிலை இருக்கிறது. தலைவரே, பூம்பூம் மாட்டுக்காரரைத் தெரியுமா! தலைவரே! பூம்பூம் மாட்டுக்காரன் வருவான். 'மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நல்ல காலம் பிறக்கிறது; நல்ல காலம் பிறக்கிறது' என்று சொல்லிக்கொண்டு வருவான். பூம்பூம் மாட்டுக்காரர்களுக்கு எங்களுடைய பகுதியில் 50 வீடுகள் இருக்கின்றன. அங்கே படிக்கும் 25 மாணவர்கள், இன்னும் சாதிச் சான்றிதழ் வாங்க முடியவில்லை. அதனால் அவர்களால் உயர் படிப்புக்குச் செல்ல முடியவில்லை. பூம்பூம் மாட்டுக்காரன் எல்லா வீடுகளுக்கும் வருவான். காலையிலேயே வந்து நல்ல செய்தியைச் சொல்வான். நல்ல செய்தி வருகிறது; நல்ல செய்தி வருகிறது; வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கு நல்ல செய்தி வருகிறது

2023 ஏப்ரல் 12] [திரு. கி. அசோக்குமார்]

என்று சொல்வான். (குறுக்கீடு) இந்த மாதிரி சொல்கின்ற அந்தச் சமுதாயத்திற்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார், உரையை முடியுங்கள்.*

திரு. கி. அசோக்குமார்: *அந்த மாதிரி, (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் நல்லதைத்தான் சொல்கிறார். ஏன் நீங்கள் உட்கார்ந்து கொண்டு பேசுகிறீர்கள்? மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார் அவர்கள்.*

திரு. கி. அசோக்குமார்: *அந்தச் சமுதாயத்திற்குச் சாதிச் சான்றிதழ் வழங்க வேண்டுமென்றுதான் கேட்கிறேன். வேறு எதையும் கேட்கவில்லை. அவர்களுக்குச் சாதிச் சான்றிதழ் இன்னும் வழங்கப்படாமல் உள்ளது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், என்னைப் பார்த்து கேளுங்கள்.*

திரு. கி. அசோக்குமார்: *அந்தச் சமுதாயத்திற்குச் சாதிச் சான்றிதழ் வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல், மாண்புமிகு நகராட்சித் துறையின் அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கின்றார்கள். சந்தை என்று நகராட்சியில் வசூல் செய்கிறார்கள். ஆனால், ஒரு நிரந்தரமான இடம் கிடைக்கவில்லை. அதற்கான ஒரு நிரந்தரமான இடத்தைத் தேர்வு செய்து, அங்கே அமைக்க வேண்டும்.*

பிற்பகல் 1–45

அதேபோல, மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் இருக்கின்றார்கள். ஏற்கெனவே கிருஷ்ணகிரியில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை உருவாகியிருக்கின்றது. ஏற்கெனவே இருந்த அரசு மருத்துவமனை 100 படுக்கைகள் வசதி கொண்ட மருத்துவமனையாகத் தொடர்ந்து செயல்பட வேண்டுமென்று தங்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இருக்கின்றார்கள். மரியாதைக்குரிய போக்குவரத்துத் துறை

அமைச்சர் அவர்களிடம் ஏற்கெனவே சென்ற கூட்டத் தொடரிலேயே கேட்டேன். கிருஷ்ணகிரியிலிருந்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வரை 24 மணி நேரமும் பேருந்து சேவை வேண்டுமென்று சொன்னேன். அந்தப் பேருந்தை விடுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று தங்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் துறையானது வருவாய்த் துறை ஆகும். பிறப்பிலிருந்து இறப்பு வரை அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்கின்றது. நிலம் தொடர்பான பணிகளையும், புயல், வெள்ளம், வறட்சி, covid *போன்ற இயற்கை இடர்பாடுகளில் திறம்படச் செயலாற்றியும், தேர்தல் போன்ற சிறப்புப் பணிகளை மேற்கொண்டும், மாவட்ட நிர்வாகத்தினை அன்றாடம் வழிநடத்தும் துறையானது வருவாய்த் துறை ஆகும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியிலும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், எங்கள் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் ஆட்சிக் காலத்திலும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தண்ணீர் குடியுங்கள், தண்ணீர் குடியுங்கள்.*

திரு. கி. அசோக்குமார்: *தமிழகத்தில் பொதுமக்களின் வசதிக்காக பல்வேறு மாவட்டங்கள், வருவாய் கோட்டங்கள் மற்றும் வருவாய் வட்டங்கள் உருவாக்கப்பட்டு, அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டன. ஆனால், இந்த அரசு பதவியேற்று இரண்டு ஆண்டுகாலம் முடிந்த நிலையில், தற்போதுவரை மாவட்டங்கள், கோட்டங்கள், வட்டங்கள் ஒன்றுகூட உருவாக்கப்படவில்லை. பல்வேறு மாவட்டங்களிலும் பொதுமக்கள் தங்கள் பகுதியில் புதிய மாவட்டங்கள், கோட்டங்கள் உள்ளிட்ட வருவாய் அமைப்புகளை உருவாக்க வேண்டுமென மனுக்கள் அளித்துள்ளனர். எனவே, இதுகுறித்து இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் அமைந்துள்ள கிருஷ்ணகிரி வருவாய் கோட்டமானது

ஆந்திர, கர்நாடக எல்லையிலிருந்து திருவண்ணாமலை, திருப்பத்தூர் மாவட்டங்கள் வரை நீண்டுள்ளது. ஊத்தங்கரையினை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வருவாய் கோட்டத்தினை அமைத்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011-ல் ஆட்சிக்கு வந்தார்கள். சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் உதவித் தொகையினை ஐநூறு ரூபாயிலிருந்து ஆயிரம் ரூபாயாக உயர்த்திக் கொடுத்த அரசு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோபித்துக் கொள்ளாதீர்கள். ஒன்றே ஒன்று சொல்கிறேன். தேர்தல் அறிக்கையில் ஆயிரத்து ஐநூறு ரூபாய் கொடுப்பதாகச் சொன்னீர்கள். அதை மட்டும் தயவுசெய்து கொடுத்துவிடுங்கள்.

அம்மா அவர்களின் வழியில் செயல்பட்ட எங்கள் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அரசில் முதியோர் உதவித் தொகை, மாற்றுத் திறனாளி உதவித் தொகை, விதவை உதவித் தொகை போன்றவை தகுதி வாய்ந்த அனைவருக்கும் கிடைக்க வேண்டுமென்ற எண்ணத்தில் பயனாளிகளின் எண்ணிக்கையை அதிகரித்தது. ஆனால், இந்த அரசு ஆட்சிக்கு வந்தவுடன் data purity என்ற பெயரில் பயனாளிகளின் வங்கிக் கணக்கை ஆய்வு செய்து, சுமார் 20 சதவிகித பயனாளிகளைக் குறைத்துவிட்டது. வங்கியில் நகைக் கடன் பெற்றால் ஓய்வூதியம் கிடைக்காது; குடியிருக்கும் வீட்டை மகளுக்குத் தானமாகக் கொடுத்தால் ஓய்வூதியம் கிடையாது என்று பல்வேறு காரணங்களைச் சொல்லி, ஓய்வூதியம் நிறுத்தப்பட்டுள்ளது. (குறுக்கீடு) நான் ஓய்வூதியத்தைக் கொடுங்கள் என்றுதான் கேட்கிறேன். வேறு எதுவும் நிறுத்தியதைப் பற்றி சொல்லவில்லை. எனவே, ஓய்வூதியம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பயனாளிகளை மறு ஆய்வு செய்து, அவர்களுக்கு மீண்டும் ஓய்வூதியம் வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசு, தற்போது பத்திரப் பதிவுத் துறையிலிருந்து வருவாயை நிறைய பெற வேண்டுமென்ற எண்ணத்தில் பதிவுக்

கட்டணத்தைக் குறைத்துள்ளதாக அறிவிப்பு வெளியிட்டது. இதனால் பத்திரப் பதிவு அதிகரிக்கலாம். ஆனால், பத்திரப் பதிவு செய்பவர்களுக்கு உரிய காலத்தில் பட்டா மாறுதல்கள் செய்து வழங்க நில அளவையர்கள் இல்லை. (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமான கோரிக்கை. இரண்டு நிமிடங்கள் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு நிமிடம் கூடிவிட்டது.

திரு. கி. அசோக்குமார்: பத்திரப் பதிவு செய்து, பட்டா பெறுவதற்குக் காலதாமதம் ஆகிறது. இந்த அரசு ஆட்சிக்கு வந்தவுடன் நிலத்தினை அளவீடு செய்வதற்கும், பட்டா மாறுதல் செய்வதற்கான கட்டணங்களையும் உயர்த்திவிட்டது. ஆனால், நிலத்தின் எல்லைகளை அளவு செய்திட மனு செய்து சுமார் ஆறு மாதக் காலம் கழித்து நில அளவை செய்திட முடிகிறது. இதற்குக் காரணம் போதிய பயிற்சி பெற்ற நில அளவையர்கள் இல்லை. பொதுமக்கள் தாங்கள் கிரையம் பெற்ற நிலத்திற்குத் தனிப் பட்டா இல்லாத காரணத்தினால் வங்கிக் கடன் போன்றவற்றைப் பெற இயலாத நிலை ஏற்படுகிறது. எங்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இன்றைய தேதிவரை 10,000-க்கும் மேற்பட்ட உட்பிரிவு பட்டா மனுக்கள் நிலுவையில் உள்ளன என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன். இவற்றின்மீது நடவடிக்கை எடுக்க போதிய பயிற்சி பெற்ற நில அளவையர்கள் இல்லை. எனவே, அரசு இதன்மீது தனிக் கவனம் செலுத்தி, அதிகமாக மனுக்கள் நிலுவையிலுள்ள மாவட்டங்களுக்குக் கூடுதல் நில அளவையர்களை நியமித்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் இரண்டு கோரிக்கைகள்தான் இருக்கின்றன. எங்களுடைய கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள ஊத்தங்கரை வட்டாட்சியர் அலுவலகம் மிகவும் பழுதடைந்து அடிப்படை வசதிகளற்ற நிலையில் உள்ளது. மேற்கண்ட கட்டடத்திற்குப் பதிலாகப் புதிய கட்டடம் கட்டித் தரக் கோரி அனுப்பப்பட்ட முன்மொழிவுகள் சுமார் இரண்டு வருடக்காலமாக நிலுவையில் உள்ளன. எனவே, மேற்கண்ட வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், போதும். (குறுக்கீடு) போதும். நேரமில்லை. (குறுக்கீடு)* Evening *4-00 மணிக்கு மீண்டும்* Assembly *கூடுகிறது. (குறுக்கீடு) உங்களுடைய நேரம் முடிந்துவிட்டது. (குறுக்கீடு) பதிலுரை. மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

திரு. கி. அசோக்குமார்: UDR *பட்டா கொடுத்து 35 வருடங்கள் ஆகின்றன. அதை மீண்டும் கொண்டுவர வேண்டுமென்று கேட்க வேண்டும். அது முக்கியமான சப்ஜெக்ட்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், போதும். (குறுக்கீடு)*

திரு. கி. அசோக்குமார்: *இதை மட்டும் நான் சொல்லிவிடுகிறேன். தமிழகத்தில் நிலவுடைமை மேம்பாட்டுத் திட்டம் (*UDR*) நடைமுறைப்படுத்தப்பட்டு, 35 ஆண்டுக்காலம் கடந்த நிலையில், நிலம் சார்ந்த பல்வேறு கோரிக்கைகள் பொதுமக்களிடம் நிலவி வருவதைக் கருத்தில்கொண்டு, நிலவுடைமை மேம்பாட்டுத் திட்டத்தை மீண்டும் செயல்படுத்த வேண்டுமென்று தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன். வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் பட்டா இல்லாத பதிவுருக்களைப் பாதுகாத்து, உறுதி செய்து ஆணையிடுமாறு தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், போதும். (குறுக்கீடு)*

திரு. கி. அசோக்குமார்: *தமிழக அரசு ஊழியர்கள் பணியின்போது உயிரிழந்தால், குடும்ப பாதுகாப்புத் திட்டத்தின்மூலம் ரூ.3 இலட்சம் வழங்கப்படுகிறது. அவர்களுடைய தேர்தல் அறிக்கையில் அந்தத் தொகை உயர்த்தித் தரப்படும் என்ற உறுதியை அளித்தது. அதை நிறைவேற்ற வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். இன்னும் ஒரே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.*

கொரோனா காலங்களில் பணி செய்தபோது, கொரோனா நோய்த் தொற்று ஏற்பட்டு உயிரிழந்த வருவாய்த் துறை அலுவலர்களுக்கு உரிய நிவாரணம் வழங்கிட வேண்டும். மேலும், உயிரிழந்த வருவாய்த் துறை அலுவலர்களுக்கு ரூ.25 இலட்சம் கொரோனா நிவாரண நிதியாக வழங்கிட வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், போதும். (குறுக்கீடு) பதிலுரை. மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)*

திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று, மாண்புமிகு கதர் துறை அமைச்சர் அவர்கள் கூறினார்கள். பொங்கல் பண்டிகையின்போது வழங்கப்படும் வேட்டி, சேலைகளை எல்லாம் நாங்கள் வருவாய்த் துறைக்கு அனுப்பியிருக்கிறோம் என்று சொன்னார்கள். அப்படி அவர்கள் அனுப்பியிருந்தால், எத்தனை வேட்டி சேலைகளை வழங்கினார்கள் என்பதை இந்த அவையிலே தெரிவிக்க வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இதோ முடித்துவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பதிலுரை. மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)*

திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடு) உங்களுடைய தொகுதி சம்பந்தமான கோரிக்கைகளை என்னிடம் கொடுத்துவிடுங்கள். அவற்றை நான் அவைக் குறிப்பில் பதிவு செய்துவிடுகிறேன். (குறுக்கீடு) நன்றி மட்டும் சொல்லி முடியுங்கள்.*

திரு. கி. அசோக்குமார்: *இந்தப் பேரவையில் எனக்குப் பேச வாய்ப்பளித்த எங்களுடைய கழகத்தினுடைய பொதுச் செயலாளர், மரியாதைக்குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், கொறடா அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

தொகுதிக் கோரிக்கைகள்:

கிருஷ்ணகிரி தொகுதி, காவேரிப்பட்டினம் ஒன்றியம், சந்தாபுரம் ஊராட்சி, சந்தாபுரம் கிராமம், தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே தடுப்பணைக் கட்ட வேண்டும். கே.ஆர்.பி அணை முதல் சோக்காடி

வழி மோரமடுகு ராயக்கோட்டை சாலை வரையுள்ள சாலையை அகலப்படுத்தி, உறுதிப்படுத்த வேண்டும்.

காவேரிப்பட்டினம் பேரூராட்சியில் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சாலையில் பாலக்கோடு கூட்டு ரோடு முதல் தென்பெண்ணையாறு வரை இடதுபுறம் மழைநீர் கால்வாய் அமைக்க வேண்டும்.

காவேரிப்பட்டினம் ஒன்றியம், நடேசா கல்யாண மண்டபம் முதல் தளிப்பட்டி வரையுள்ள சாலையை அகலப்படுத்தி, உறுதிப்படுத்த வேண்டும். கிருஷ்ணகிரி ஒன்றியம், சிக்கப்பூவத்தி ஊராட்சி, பெரிய பூவத்தி முதல் மூங்கில்பட்டி 4 கி.மீ. வரையுள்ள தார்ச் சாலையைப் புதுப்பிக்க வேண்டும்.

கிருஷ்ணகிரி ஒன்றியம், சோக்காடி ஊராட்சி, குள்ளமுனியன் கொட்டாய் முதல் ஐம்புத்து வரை புதிய தார்ச் சாலை அமைக்க வேண்டும். திப்பனப்பள்ளி ஊராட்சி, பெங்களூரு தேசிய நெடுஞ்சாலை முதல் மெட்டுப்பாறை 3.5 கி.மீ. வரையுள்ள சாலையைப் புதுப்பிக்க வேண்டும்.

கிருஷ்ணகிரி நகராட்சி, காந்தி சாலை முதல் அரசு மருத்துவமனை வரை புதியதாகக் கால்வாய் கட்ட வேண்டும். கிருஷ்ணகிரி நகராட்சிப் பகுதியில் அமைந்துள்ள சின்ன ஏரியினை அழகுபடுத்தி, பொழுதுபோக்குத் தலமாக மாற்ற வேண்டும்.

காவேரிப்பட்டினம் ஒன்றியம், பையூர் ஊராட்சி, இடைப்பையூர் முதல் கீழ்பையூர் வரை உள்ள பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான ஏரிக்கரையை அகலப்படுத்தி, ஏரியைச் சுற்றி தடுப்புச் சுவர் அமைக்க வேண்டும்.

திப்பனப்பள்ளி ஊராட்சி, கும்மனூர் கிராமத்தில் தென்பெண்ணையாறு செல்கிறது. கும்மனூர் தென்பெண்ணையாற்றின் இடையில் பாலம் அமைப்பதற்கு கூளியம் ஊராட்சி, ஒம்பலக்கட்டு கிராம மக்கள் தங்கள் சொந்த நிலங்களை இணைப்புச் சாலை அமைப்பதற்குத் தர தயாராக உள்ளார்கள். எனவே, கும்மனூர் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்க வேண்டும்.

கிருஷ்ணகிரி நகராட்சியில் அரசு உதவிபெறும் தூய பாத்திமா உயர்நிலைப் பள்ளி பெங்களூரு சாலையில் அமைந்துள்ளது. பள்ளிக்

குழந்தைகள் சாலையைக் கடக்க ஆபத்தான சூழ்நிலையைச் சந்திக்கின்றனர். எனவே, அப்பள்ளி அருகில் நடை மேம்பாலம் அமைக்க வேண்டும்.

கிருஷ்ணகிரி ஒன்றியம், அகசிப்பள்ளி ஊராட்சி, அகசிப்பள்ளி கிராமத்தில் புதிதாகக் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டும். கணவாய்பட்டி கோவில் முதல் மேலேரிக்கொட்டாய் சுமார் 2 கி.மீ. வரை உள்ள தார்ச் சாலையைச் சீரமைக்க வேண்டும். கிருஷ்ணகிரி ஒன்றியம், பெத்தனப்பள்ளி ஊராட்சி, போகனப்பள்ளி கிராமத்தில் பாதாள சாக்கடைக் கால்வாய் அமைக்க வேண்டும்.

கிருஷ்ணகிரி ஒன்றியம், பச்சிகானப்பள்ளி ஊராட்சி, பழையபேயனப்பள்ளி கிராமம், தாளப்பள்ளம் என்ற இடத்தில் புதிய ஏரி அமைக்க வேண்டும். பெத்தனப்பள்ளி ஊராட்சி, பேங்கர்ஸ் காலனி சென்னை புறவழிச் சாலை முதல் தீக்குச்சி கம்பெனி வரை கழிவுநீர்க் கால்வாய் மற்றும் தார்ச் சாலை அமைத்துத் தர வேண்டும்.

கிருஷ்ணகிரி ஒன்றியம், கம்மம்பள்ளி ஊராட்சி, கோட்டகொல்லை கிராமம் தேசிய நெடுஞ்சாலை, குப்பம் சாலையிலிருந்து செல்லியம்மன் கோயில் மற்றும் அமுதா க.பெ. சென்றாயசாமி நிலம் வரையுள்ள ஈரடுக்கு ஜல்லி சாலையைத் தார்ச் சாலையாக மாற்றித் தர வேண்டும். அகசிப்பள்ளி ஊராட்சி, மங்கம்மாபுரம் சங்கர் வீடு முதல் கூசிக்கொட்டாய் வழியாக அகசிப்பள்ளி ஏரி வரை செல்லும் தார்ச் சாலையைச் சீரமைக்க வேண்டும். பையனப்பள்ளி ஊராட்சி, பையனப்பள்ளி கிராமத்தில் புதிய அங்கன்வாடி மையம் கட்டித் தர வேண்டும். பெரியமுத்தூர் ஊராட்சி, துவாரகாபுரி முதல் நெக்குந்தி வழியாக அவதானப்பட்டி கோவில் வரையுள்ள தார்ச் சாலையைச் சீரமைத்துத் தர வேண்டும்.

கிருஷ்ணகிரி ஒன்றியம், திப்பனப்பள்ளி ஊராட்சி, பந்தாரப்பள்ளி பெங்களூரு தேசிய நெருஞ்சாலை முதல் மெட்டுப்பாறை வரை செல்லும் தார்ச் சாலையைச் சீரமைத்துத் தர வேண்டும். வெலகலஹள்ளி ஊராட்சி, வெலகலஹள்ளியிலிருந்து மார்வாடி செல்லும் சாலையைச் சீரமைத்துத் தர வேண்டும். கிருஷ்ணகிரி ஒன்றியம், வெலகலஹள்ளி ஊராட்சி, பாசிப்பட்டி கிராமத்திலிருந்து பெரியண்ணன்கொட்டாய் தார்ச் சாலையைச் சீரமைத்துத் தர வேண்டும்.

கிருஷ்ணகிரி ஒன்றியம், இட்டிக்கல் அகரம் ஊராட்சி, எரியம்பட்டி கிராமம் முதல் பாலகுறி மேல்கொட்டாய் வரை புதிதாகத் தார்ச் சாலையும், அதன் குறுக்கே 2 சிறிய பாலமும் அமைக்க வேண்டும். திருப்பதி வீடு முதல் பெருமாள் வீடு வரை உள்ள மண் சாலையைத் தார்ச் சாலையாக மாற்றித் தர வேண்டும். பெல்லாரம்பள்ளி ஊராட்சி, பெரியபெல்லாரம்பள்ளி முதல் சின்னபெல்லாரம்பள்ளி வரையுள்ள தார்ச் சாலையைச் சீரமைத்துத் தர வேண்டும்.

கிருஷ்ணகிரி ஒன்றியம், கங்கலேரி ஊராட்சி, கங்கலேரி கிராமம் முதல் கும்மனூர் வரை அமைந்துள்ள சுமார் 9 கி.மீ. கால்வாயைத் தூர் வாரி இரண்டு புறமும் தடுப்புச் சுவர் அமைக்க வேண்டும். பெல்லம்பள்ளி ஊராட்சி, பெல்லம்பள்ளி, பாலிகானூர், ஒட்டப்பட்டி ஆகிய மூன்று கிராமங்களில் நீர் பற்றாக்குறையாக உள்ளதால் நுக்குர் தென்பெண்ணை ஆற்றில் வரும் உபரி நீரை கருமலைக்குட்டை ஏரிக்கு நீர்வரத்துக் கால்வாய் அமைக்க வேண்டும்.

சோக்காடி மற்றும் மோரமடுகு ஊராட்சிகளில் சுமார் 10,500 பேர் வசித்து வருகிறார்கள். எனவே, சோக்காடி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டும். துடுக்கனஹள்ளி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர வேண்டும்.

கிருஷ்ணகிரி ஒன்றியம், கட்டிகானப்பள்ளி ஊராட்சி, ராயக்கோட்டை ரோடு, காவி மருந்தகம் அருகில் கட்டிகானப்பள்ளி ஊராட்சிக்குச் சொந்தமான காலி நிலத்தில் வணிக வளாகம் அமைக்க வேண்டும். வெங்கடாபுரம் ஊராட்சி, வெங்கடாபுரம் கிராமம், மெட்பண்டா அரசு உயர்நிலைப் பள்ளிக்கு 3 வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்டித் தர வேண்டும். கட்டிகானப்பள்ளி ஊராட்சி, ஆட்டோ நிறுத்தம் அருகில் அரசுக்குச் சொந்தமான காலி நிலத்தில் வணிக வளாகம் அமைக்க வேண்டும்.

எர்ரஹள்ளி மற்றும் சந்தாபுரம் ஊராட்சி, ஹவுசிங் போர்டில் பழுதடைந்துள்ள தார்ச் சாலையையும் பையூர் ஊராட்சி, தேவர்முக்குலம் மெயின் ரோடு முதல் ஊத்துப்பள்ளம் மேல்கொட்டாய் வரை பழுதடைந்துள்ள தார்ச் சாலையையும் சீரமைத்துத் தர வேண்டும். பையூர் ஊராட்சி, தேவர்முக்குலம் மெயின் ரோடு முதல் கந்தலம்பட்டி வரை, தேவர்முக்குலம் மெயின் ரோடு முதல் மல்லப்பன் கொட்டாய் வரை பழுதடைந்துள்ள தார்ச் சாலையைச் சீரமைத்துத் தர வேண்டும்.

காவேரிப்பட்டினம் ஒன்றியம், கரடிஅள்ளி ஊராட்சி, கரடிஅள்ளி ரோடு முதல் காரிமங்கலம் ரோடு வரை பழுதடைந்துள்ள சாலையைச் சீரமைக்க வேண்டும். திம்மாபுரம் ஊராட்சி, வார்டு 44 முதல் காமராஜ் நகர் வரை, மிட்டஅள்ளி ஊராட்சி, சாப்பரம் ரோடு முதல் தாலமருவி ரோடு வரை, சௌட்டஅள்ளி ஊராட்சி, சரவணன் வீடு முதல் குட்டூர் வரை, பாரதி வீடு முதல் காவாக்கரை வரை பழுதடைந்துள்ள தார்ச் சாலையைச் சீரமைத்துத் தர வேண்டும்.

பையூர் ஊராட்சி, பையூர் ஏரி கோடி முதல் கீழ்பையூர் ஏரி வரை தடுப்புச் சுவர் அமைத்து பாதையை அகலப்படுத்த வேண்டும். கால்வேஅள்ளி ஊராட்சி, முத்தூரான்கொட்டாயில் தென்பெண்ணை ஆற்றின் நீரேற்றுப் பாசனத்திற்காக ஏற்கெனவே இயக்கப்பட்டு வந்த 3 மின் மோட்டார்களை மீண்டும் இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பதிலுரை. மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மதிய உணவு சாப்பிடுவதற்காகத்தானே வெளியே செல்கிறீர்கள். (குறுக்கீடு) நன்றி, நன்றி. (குறுக்கீடு) இருங்கள். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரையை எல்லோரும் கேட்டுவிட்டுச் செல்லுங்கள். (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) நான் அவசரப்படவில்லை. (குறுக்கீடு) நீங்கள் சென்றுவிடக் கூடாது என்பதற்காகத்தான் நான் உங்களையெல்லாம் உட்காருங்கள் என்று சொல்கிறேன். (குறுக்கீடு) சரி. (குறுக்கீடு) பதிலுரை. மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூவேந்தர் காலந்தொட்டு முத்தமிழறிஞர் காலம்வரை பல்வேறு பரிமாணங்களில் வளர்ந்துவரும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் மானியக் கோரிக்கையை இந்த அவையில் தாக்கல் செய்ய எனக்கு வாய்ப்பு வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

2023 ஏப்ரல் 12] [திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்]

திராவிட இயக்கத்தின் பிதாமகன் தந்தை பெரியார் அவர்களையும், *(மேசையைத் தட்டும் ஒலி)* திராவிட முன்னேற்றக் கழகம் எனும் இயக்கம் தந்த, காஞ்சி தந்த அறிவுலக மேதை அண்ணா அவர்களையும் வணங்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* திராவிட இயக்கத்தின் வழிகாட்டியாய், இந்திய துணைக் கண்டத்தின் ஒப்பாரும், மிக்காரும் இல்லா ஒரு பெருந்தலைவராய், வாழ்ந்த காலமெல்லாம் தமிழினத்தின் திசை காட்டும் கருவியாய், ஒரு நூற்றாண்டுக் காலம் நெருங்கி வாழ்ந்து, அதிலும் முக்கால் நூற்றாண்டுக் காலம் இந்த அவையில் அமர்ந்து பணியாற்றி, உடலாய், உயிராய் நம்மோடு இல்லையென்றாலும், இன்றைக்கும் நம் முன்னே உயிரோவியமாய், படமாய், பாடமாய் நம்மோடு இருக்கிற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* தமிழினத்தின் திராவிட இயக்கத்தைக் காப்பதற்கு, தமிழினத்தையும், திராவிட இயக்கத்தையும் காப்பதற்குக் காலமும், கலைஞரும் கொடுத்த அருட்கொடை. அலங்கார ஒளியாக இல்லாமல், அடித்தட்டு மக்களின் வாழ்வில், இருளை விரட்டும் வெளிச்சத்தின் கதிராய் திகழும் திராவிட மாடல் அரசின் தியாகத் தலைவன், மாட்சிமைக்குரிய தமிழ்நாடு முதலமைச்சர், ஆருயிர் அண்ணன் திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 1–55

திராவிட இயக்கத்தின் கையிருப்பு, நாளைய தமிழ்நாட்டின் திசைகாட்டி, இளைய சமுதாயத்தின் நிகழ்கால வழிகாட்டி, மாண்புமிகு அமைச்சர் தம்பி திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு அவை முன்னவர் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், மாண்புமிகு அரசுக் கொறடா உள்ளிட்ட மாமன்றத்தின் உறுப்பினர்களுக்கும் என்னுடைய வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன். என்மீது நம்பிக்கை வைத்து தொடர்ச்சியாக என்னைத் தேர்ந்தெடுத்து வெற்றிபெறச் செய்த அருப்புக்கோட்டை தொகுதி மக்களுக்கும், விருதுநகர் மாவட்ட மக்களுக்கும் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை என்பது நம்மோடு ஒட்டி உறவாடக்கூடிய ஒரு துறை. மற்ற

துறைகளுக்கும் இந்தத் துறைக்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு பணி இருக்கும். பொதுப் பணித் துறையா அதற்கு ஒரு பணி, விவசாயத் துறையா அதற்கு ஒரு பணி, தொழில் துறையா அதற்கு ஒரு பணி, இப்படி ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு பணியாக தனித் தனியாக இருக்கும். ஆனால், வருவாய்த் துறையைப் பொறுத்தளவிற்கு நாம் அதோடு ஒட்டிப்போக வேண்டிய ஒரு துறை. நம்முடைய நிலத்தை உங்கள் இடம்தான் என்று சொல்லக்கூடிய துறையும் அதுதான். உங்கள் இடம் இதுதான், உங்கள் வீடு இதுதான் என்று சொல்லக்கூடிய துறையும் இதுதான். ஒரு சென்ட் நிலம் வைத்திருந்தாலும் 100 ஏக்கர் நிலம் வைத்திருந்தாலும் வருவாய்த் துறைதான் அது இன்னார் இடம் என்று சொல்லக்கூடிய அதிகாரம் உள்ள ஒரு துறை. இந்தத் துறையிலே பணியாற்றக்கூடிய அதிகாரிகள் அந்த எண்ணத்தோடு பணியாற்ற வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள்.

முதியோர் ஓய்வூதியமாக இருந்தாலும் சரி, சான்றிதழ்களாக இருந்தாலும் சரி, குறிப்பாக சட்டமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள் போகின்ற நேரத்தில் அவர்களுக்கு உரிய மரியாதையைக் கொடுக்க வேண்டுமென்றுதான் ஒவ்வொரு நேரத்திலும் நாங்கள் சங்க நிர்வாகிகளை அழைத்துப் பேசுகின்றபோதெல்லாம், உங்கள் கோரிக்கைகளையெல்லாம் நாங்கள் நிறைவேற்றித் தருகின்றோம். மக்கள் பிரதிநிதிகள் வந்து சொல்கின்ற அந்தப் பணிகளையெல்லாம் நீங்கள் செய்து கொடுக்க வேண்டுமென்று வலியுறுத்தி, வலியுறுத்திச் சொல்கிறோம். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், OAP. நீங்கள் சொல்கின்ற, அந்த நபர்களுக்கு, தகுதியிருந்தால் கொடுக்க வேண்டுமென்று சொல்லி நாங்கள் தாசில்தார், ஆர்.டி.ஓ. உள்ளிட்ட அதிகாரிகளுக்கு ஆணையிட்டிருக்கின்றோம். இப்படித்தான் செய்ய வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த வகையிலே ஆணையிட்டிருக்கின்றார்கள். ஆகவேதான், கள ஆய்விற்கு முதலமைச்சர் திட்டத்திற்கு செல்கின்ற நேரத்தில்கூட பார்ப்போமென்று சொன்னால்— கள ஆய்வுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு மாவட்டத்தின் தலைநகருக்கு போகின்றார்கள். ஆனால், அதேநேரத்தில், எங்கள் துறையைச் சார்ந்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அந்த நான்கு மாவட்டங்களில் இருக்கின்ற தாலுகா அலுவலகங்களுக்கு, ஆர்.டி.ஓ. அலுவலகங்களுக்கு சென்று ஆய்வு

2023 ஏப்ரல் 12] [திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்]

செய்து, அந்த அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் மத்தியிலே கொடுக்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆய்வு செய்கின்ற நேரத்திலே, தாலுகா அலுவலகத்திலே இந்தக் குறைகள் இருக்கின்றன அல்லது இந்த நிறைகள் இருக்கின்றன என்று சொல்லக்கூடிய ஒரு நிகழ்ச்சியாக அந்தக் கள ஆய்வை இந்தத் துறையைப் பொறுத்தளவிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிக அக்கறையாக எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த அக்கறையோடு சேர்ந்து நானும் பயணித்துக்கொண்டிருக்கிறேன் என்பதை மட்டும் இந்த நேரத்தில் பணிவன்போடு சொல்லிக்கொள்கிறேன்.

சான்றிதழ்கள் வழங்குவது என்பது மிகவும் முக்கியமான ஒரு பணி. காரணம், அது சாதிச் சான்றிதழாக இருந்தாலும் சரி, வருமானச் சான்றிதழாக இருந்தாலும் சரி, எந்தச் சான்றிதழாக இருந்தாலும் சரி, இந்தச் சான்றிதழ்களுக்காகப் போய் அலைவது பெரிய பாவமான காரியமாக இருக்கிறது. அதையெல்லாம் இப்போது ஆன்லைனில் கொடுக்க வேண்டுமென்று நாம் அறிவுறுத்திச் சொல்லியிருக்கின்றோம். அப்படி, ஆன்லைனில்கூட அது சரியில்லை என்றால், நாங்கள் என்ன அறிவுறுத்தியிருக்கிறோம் என்று சொன்னால், சம்பந்தப்பட்ட V.A.O.-க்கு சொல்லி, அவரை அழைத்துவந்து அதைச் சரிசெய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். சரியில்லை என்று சொல்லி அதை reject செய்யாமல் இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்றோம். நம்முடைய ஆட்சி வருகின்ற நேரத்தில், ஒரு சான்றிதழ் வழங்குவதற்கு, ஒரு குறிப்பிட்ட காலமாக, 15 நாட்கள் என நாம் வைத்திருக்கிறோம். நம்முடைய ஆட்சி வருகின்ற நேரத்தில் 4 இலட்சத்து 65 ஆயிரம் சான்றிதழ்கள் வழங்காமல் நிலுவையில் இருந்தன. மாண்புமிகு முதல்வர் அவர்கள் எங்கள் துறையை ஆய்வு செய்கின்ற நேரத்தில், இது மிகவும் அதிகமாக இருக்கிறது என்று சொன்னதன் விளைவாக, இப்போது என்னுடைய அலுவலகம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், C.R.A. அலுவலகம், செயலாளர் அலுவலகம் உள்ளிட்ட அலுவலகங்களில், ஒவ்வொரு தாலுகா அலுவலகத்திலும் 15 நாட்களுக்கு மேலாக எந்தெந்த சான்றிதழ்கள், எவ்வளவு சான்றிதழ்கள் நிலுவையில் இருக்கின்றன என்பதை ஆய்வு செய்வார்கள் என்று உத்தரவிட்டதன் விளைவாக, இப்போது வெறும் 785 சான்றிதழ்கள்தான் நிலுவையில் உள்ளன. கட, கட என அந்தச் சான்றிதழ்கள் அனைத்தும் வழங்கப்பட்டுவிட்டன.

பிற்பகல் 2–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: காரணம் என்னவென்று சொன்னால், நாங்கள் அன்றாடம் mark போடுகிறோம். ஒவ்வொரு Collector–ஐயும் monitor செய்கிறோம். Collector உடைய control–ல் இவ்வளவு சான்றிதழ்கள் தேக்கம் இருக்கின்றன என்று சொல்லி, அந்த Collector–ஐ கேள்வி கேட்கின்ற காரணத்தால், Collector கீழே இருப்பவர்களை விரட்டி, வேலை வாங்குகின்ற காரணத்தால் இப்போது வெறும் 785 தான் நிலுவையில் இருக்கின்றன. அதையும் online–ல் கொண்டு வந்து, இந்தச் சான்றிதழ்களுக்கு மக்கள் அலையக் கூடாது என்ற எண்ணத்தோடு அந்தப் பணிகளை நாங்கள் செய்கிறோம்.

OAP–ஐ பொறுத்தவரையில் முடிந்த அளவிற்குக் கொடுக்கிறோம். கிட்டத்தட்ட 35 இலட்சம் பேருக்கு நாம் கொடுக்க வேண்டும் என்பது ஒரு target. நமக்கு பணம் எவ்வளவு கொடுக்கிறார்கள் என்றால், 35 இலட்சம் பேருக்குக் கொடுங்கள் என்று சொல்லி, கொடுக்கிறார்கள். இந்தமுறை பார்த்தால் 3 இலட்சம் பேருக்கு, புள்ளிவிவர இலாக்காவிலிருந்து கணக்குக் கொடுத்து, அதைப் பார்க்கும்போது, நிறைய சொத்து வாங்கியவர்கள், இரண்டு pension வாங்கியவர்கள், இறந்தவர்கள் என்று சொல்லி, ஏறத்தாழ 3 இலட்சம் பேர் வரையில் நீக்கிவிட்டார்கள். இதை நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் இப்படி OAP–ஐ நீக்கியிருக்கிறார்கள் என்று சொன்னவுடனே, அதையெல்லாம் சரிபார்த்து, ஒரு இலட்சத்து அறுபத்து ஐந்தாயிரம் பேருக்கு நாங்கள் திருப்பிக் கொடுத்துவிட்டோம். அதைக்கூட பார்த்தீர்களென்று சொன்னால், OAP–க்கு நீங்கள் புதியதாக online–ல் apply செய்ய வேண்டும். உங்களுக்குத் தெரியும். புதியதாக apply செய்ய வேண்டுமென்றால், online–ல் apply செய்ய வேண்டும். நாம் அப்படி வேண்டாம் என்று சொல்லிவிட்டோம். ஏற்கெனவே, online–ல் apply செய்த அந்த paper–ஐ எடுத்து, VAO–ஐ அதைச் சரிபார்த்து சேருங்கள் என்று சொன்னதால், ஒரு இலட்சத்து 65 ஆயிரம் பேருக்கு நாம் இன்றைக்கு திருப்பிக் கொடுத்துவிட்டோம். மீதி இன்றைக்குக் கொடுக்க வேண்டியது 1.35 இலட்சம். ஏற்கெனவே double entry, இரண்டு pension வாங்குகிறவர்கள் என்று இருப்பதால்தான் அதை

2023 ஏப்ரல் 12] [திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்]

நாம் நிறுத்தியிருக்கிறோம். பொதுவாக OAP-ஐ பொறுத்தளவிற்கு, உங்கள் Taluk Office என்று வைத்துக்கொள்வோம். 50 அல்லது 100 பேருக்கு double entry-யோ, இறப்போ வந்தால், அந்தப் பணம் திரும்பவும் அரசாங்கத்திற்கு வருவதில்லை. உங்கள் Taluk Office-ல் 50 பேருக்கு, இறப்பு, double entry, 2 pension வாங்குபவர்கள் என்று reject ஆகி வந்தது என்றால், அந்த 50-க்குப் பதிலாக seniority-ல் அடுத்து இருப்பவர்களுக்கு அப்படியே நாங்கள் கொடுத்துவிடுகிறோம். அது அரசாங்கத்திற்கு வருவதில்லை. என்ன சொல்கிறார்கள் என்றால் நீங்கள், நிறுத்திவிட்டீர்கள், நிறுத்திவிட்டீர்கள் என்று சொன்னால், அது அரசாங்கத்திற்கு வந்துவிடுமா என்றால் இல்லை. உங்கள் Taluk Office-க்கு, Collectorate-க்கு எவ்வளவு கொடுத்திருக்கிறோமோ, அதை அப்படியே கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறோம். சுமார் 35 இலட்சம் பேருக்குக் கொடுக்கிறோம். இப்போது ஒரு இலட்சம் பேர் சேர்த்து, சுமார் 36 இலட்சம் பேருக்கு கொடுக்க வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தளவிற்குத் தகுதி இருக்கின்ற, அத்தனை பேருக்கும் கொடுங்கள் என்று சொல்கிறார்.

Panchayat Union Office-ல் poverty list பழைய list ஆக இருக்கும். இப்படி poverty list-ல் இருப்பவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று வருகிறது. Poverty list 15, 20 வருடத்திற்கு முன்பு எடுத்தது. இப்போது நாம் கொடுக்க வேண்டுமென்றால், நீங்கள் கிராம பஞ்சாயத்திலோ, நகராட்சியிலோ தீர்மானம் போட்டுக் கொடுத்தால் அவர்களுக்கு நாம் கொடுக்கலாம் என்று இருக்கிறது. அதனால், நீங்கள் எது முக்கியம் என்று நினைக்கிறீர்களோ, அதைக் கிராமப் பஞ்சாயத்தில் கொடுங்கள், நீங்கள் சென்று Taluk Office-ல் பாருங்கள். அதில் உங்களுக்கு ஏதாவது சிரமங்கள் இருந்தால், சட்டமன்ற உறுப்பினர்கள் என்னை, எப்போது வேண்டுமானாலும் வந்து பார்க்கலாம். பார்த்து அதற்கு வேண்டிய நிவாரணம் செய்யக்கூடியதைச் செய்வோம். அப்படிச் செய்தால் எனக்கும் ஒரு புண்ணியம். ஒரு முதியவருக்கு OAP பணம் வாங்கிக் கொடுத்தால் உங்களுக்கு எப்படி புண்ணியம் கிடைக்கிறதோ, அதே புண்ணியம் எனக்கும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் கிடைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால், அதில் நாங்கள் கணக்கமே பார்ப்பது இல்லை. அதையெல்லாம் நீங்கள் செய்கின்ற நேரத்தில், நாங்கள் நிச்சயமாக உங்களோடு

ஒத்துழைப்புக் கொடுப்போம் என்பதை மட்டும் நான் இந்த நேரத்தில் பணிவன்போடு சொல்லிக்கொள்கிறேன்.

மக்கள் தொடர்பு முகாம். இப்போது மூன்றாவது புதன்கிழமைகளில் Collector தலைமையில் நாம் கூட்டம் நடத்துகிறோம். அது உங்களுக்குத் தெரிகிறதா என்று தெரியவில்லை. சென்று check செய்துகொள்ளுங்கள். மூன்றாவது புதன்கிழமை ஒவ்வொரு Collector-ம் ஒரு கிராமத்திற்குச் சென்று—இது கலைஞர் ஆரம்பித்தது—ஒவ்வொரு மூன்றாவது புதன்கிழமையும் Collector, DRO, RDO எல்லோரும் சென்று, அங்கேயிருக்கின்ற மக்களின் குறைகளைத் தீர்க்க வேண்டுமென்று கலைஞர் 1969-ல் போட்ட திட்டம். அதற்குப் பின்பு A.I.A.D.M.K. period-ல் கொஞ்சம் மாற்றினார்கள். மாற்றி அது பெரிய success ஆக வரவில்லை. என்ன காரணம் என்றால், அவர்கள் நல்ல எண்ணத்தோடுதான் ஆரம்பித்திருக்கிறார்கள். தாசில்தார் மட்டும் போனார். தாசில்தார் மட்டும் போனால் DRO, RDO, Collector ஆகியோர் தீர்க்க வேண்டிய பிரச்சினை என்றால் அவர்களால் தீர்க்க முடியாது. ஆனால் நம்முடைய கலைஞர் போட்ட திட்டம் என்வென்றால் Collector-ஐ போகச் சொல்லிவிட்டார். Collector போகும்போது DRO, RDO எல்லோரும் போவார்கள். அதனால் சட்டமன்ற உறுப்பினர்கள், நீங்கள் கவனப்படுத்திக்கொண்டு, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்டு, புதன்கிழமை போகவேண்டுமென்று Minister சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்போகும்போது எங்களையும் கூப்பிடுங்கள் என்று சொல்லி, நீங்களும் சென்றால், அங்கே சுற்றியிருக்கின்ற 10 ஊர் மக்கள் வருவார்கள். அது நம்முடைய கவனத்திற்கு வருவதில்லை. அதனால்தான் உங்களுக்கு, திரும்பவும் சொல்கிறேன். நம் கவனத்திற்கு வருவதில்லை. நாங்களும் circular போடச் சொல்கிறோம். அந்தந்தப் பகுதிகளில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தகவல் சொல்ல வேண்டுமென்று circular போட்டு, நீங்கள், நாம் எல்லோரும் சென்று, Collector-க்கு தருகின்ற அந்த வேலை, எல்லோருக்கும் பயன்படக்கூடிய ஒரு வாய்ப்பு கிடைக்கும். நம்முடைய அரசு அதிகாரிகள் நான் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதற்கென ஒரு circular போட்டு, அதிகாரிகள் போகும்போது, சம்பந்தப்பட்ட தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர்களையும் அழைக்க வேண்டுமென்று நாங்கள் சொல்கிறோம்.

2023 ஏப்ரல் 12] [திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்]

பிற்பகல் 2–05

அதேபோன்று, பேரிடர். நம்முடைய அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு மூன்று புயல்கள் தாக்கின. மூன்று புயல்களையும் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் நம்முடைய மாண்புமிகு தலைவர் அவர்கள் சமாளித்துவிட்டார்கள். 2022 ஆம் ஆண்டு Mandous *புயல் வந்தது. கடந்த ஆண்டில் இரண்டு புயல்கள் வந்தன. வட கிழக்குப் பருவமழையின்போது மயிலாடுதுறை மாவட்டத்தில் 1000 சதவிகிதம் அதிகப்படியான மழை பெய்திருக்கிறது. தென் மேற்குப் பருவ மழையின்போது, காவேரியில் இரண்டு மாதக் காலமாக வெள்ளம் போய்க்கொண்டிருந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரில் சென்று, மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு. கே.என். நேரு அவர்களை அங்கேயே இருந்து நிலைமையைப் பார்க்கச் சொல்லிவிட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொள்ளிடம், முக்கொம்பிலேயே தங்கியிருந்தார்கள். இதுபோன்ற இயற்கைச் சீற்றங்கள் வரும்பொழுதும் நம்முடைய மாண்புமிகு தலைவர் அவர்கள் எவ்வித குறையுமில்லாமல் பணிகளைச் செய்து கொடுத்தார்கள்.*

இன்னொன்று என்னவென்றால், மழை பெய்தது ஒரு பக்கம் என்றால், 6 மாவட்டங்களில் மிகக் கடுமையான வறட்சி நிலவியது. அதனையும் நம்முடைய மாண்புமிகு தலைவர் அவர்கள், பாதிக்கப்பட்ட எல்லோருக்கும் நிதியைக் கொடுக்கச் சொல்லிவிட்டதன் அடிப்படையில், அனைவருக்கும் நிதியைக் கொடுத்துக்கொண்டு வருகிறோம். Disaster Management*–ல் அதற்குத் தேவையான நிதி எங்களிடம் இருக்கிறது. ஆனால், வருவாய்த் துறை அதிகாரிகளும், மற்ற துறை அதிகாரிகளும், பார்த்து, பரிந்துரைத்து, கணக்கு அனுப்புகிற நேரத்தில், அந்த நிதியை வழங்கும் பணியை நாங்கள் செய்துகொடுக்கிறோம். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் வெறுமனே அந்த வேலையைப் பார்க்காமல், இதில் கூடுதல்* interest *எடுத்து, இதுதொடர்பான கோரிக்கைகளை வேகமாக அனுப்பினீர்களென்றால் நன்றாக இருக்கும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நிதிக்குப் பிரச்சினையேயில்லை. பயிர்ச் சேதத்திற்காக வழங்குவதற்காகவோ, ஆட்கள் இறப்பிற்காகவோ,* Disaster Management*–ல் எந்தவித நிதிப் பற்றாக்குறையும் தற்போது இல்லை. (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்* Disaster Management*–ல் நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். பணம் இருக்கிறதென்றால், அது என்னுடைய பணமா? மாண்புமிகு*

[திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்] [2023 ஏப்ரல் 12

தலைவர் அவர்கள் அந்த நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். வறட்சி மாவட்டங்களுக்கு நிதியினை வழங்குவதற்காக வறட்சிக்கென ரூ.192 கோடி நிதி recommend செய்யப்பட்டு, வரப்பெற்றுள்ளது. மாண்புமிகு அமைச்சர் கேட்டுக்கொண்டேயிருக்கிறார்கள். அதற்கான கோப்பு Finance Department-க்குப் போயிருக்கிறது. எந்த நிதியாக இருந்தாலும், Finance Department-ன் clearance இல்லாமல் கொடுக்க முடியாது. ஆகவே, வறட்சிக்காகவும், புயல் சேதத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நிவாரணம் அளிக்கிறோம். அதேபோல, Public Works Department, Highways Department-க்கும் நாங்கள்தான் நிதியினைக் கொடுக்கிறோம். அதனால், எங்களுடைய area-விற்கும் சேர்த்து வேலையைப் பாருங்கள்.

தற்போது சென்னையில் வேலை நடக்கிறது இல்லையா? அதற்குத் தேவையான நிதியை, இந்த நிதியிலிருந்து கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியதன் அடிப்படையில், அந்த நிதியை divert செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, எங்களைப் பொறுத்தவரையில், எந்தவிதமான சிரமங்களும் இல்லாமல் ஓர் ஆட்சியை நடத்த வேண்டுமென்ற எண்ணத்தோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

வீட்டுமனைப் பட்டா வழங்குவதில், அரசு புறம்போக்கு நிலங்களில் பட்டா கொடுக்க முடியாது. அரசு கிராம நத்தம் என்று வகைப்படுத்தப்பட்ட நிலங்கள் எங்கெங்கு இருக்கின்றனவோ, அப்பகுதிகளில் பட்டா வழங்கப் பெறலாம். மாண்புமிகு உறுப்பினர்கள் தாசில்தார்களைப் பார்த்து, யார் யார் அவ்வாறு அரசு கிராம நத்தம் என்று வகைப்படுத்தப்பட்ட நிலங்களில் வசிக்கிறார்களோ, விவரம் அளித்தால் அங்கெல்லாம் பட்டா வழங்கலாம். அரசு புறம்போக்கு, அரசு நத்தம், அரசு கிராமப் புறம்போக்கு என்று நிலங்கள் பல வகைகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் அரசு கிராம நத்தம் என்று வகைப்படுத்தப்பட்டிருந்தால், அந்த நிலங்களில் வசிப்பவர்களுக்குப் பட்டா கொடுப்பதற்கு ஒரு வழி இருப்பதை நாங்கள் கண்டுபிடித்து வைத்திருக்கிறோம்.

குறிப்பாக, சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளிலுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் பட்டா வழங்கும் பிரச்சினையைத்தான் பெரியதாகப் பேசுகிறார்கள். இதுதான் அவர்களுக்கு election

2023 ஏப்ரல் 12] [திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்]

நேரங்களில் மிகவும் தொந்தரவான பிரச்சினையாக இருக்கிறது. நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் பட்டா வாங்கிக் கொடுக்கிறோம் என்றும், அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கிறோம் என்றும் வாக்களித்திருப்போம். அதைப்போல, நானும் சொல்லியிருக்கிறேன். நீங்களும் சொல்கிறீர்கள். நாம் அனைவரும் சொல்கிறோம். ஆனால், அவ்வாறு வாக்களித்ததுபோல, செய்ய முடியாமல் போகும்போது, அப்பகுதிகளுக்குச் செல்கிறபோது, பிரச்சினை வருகிறது. (குறுக்கீடு) அதனால், நான் என்ன சொல்கிறேன் என்றால், இதுகுறித்து அதிகாரிகளிடம் நேற்று பேசினோம். இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்தவுடனேயே, சென்னையைச் சுற்றியுள்ள நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களோடு கலந்துபேசி, உங்களுடைய கோரிக்கைகளை அதிகாரிகளிடம் சொல்லுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கோரிக்கைகளில் எவற்றையெல்லாம் செய்ய முடியுமோ, அவற்றைச் செய்யலாம். நாம் சொல்கிற அனைத்தையும் செய்ய முடியாமல் இருக்கலாம். செய்யக்கூடிய ஒன்றிரண்டு கோரிக்கைகளைக் கண்டுபிடிக்கலாம். 1962 ஆம் ஆண்டில் belt area *என்று போட்டிருக்கிறார்கள்.* Belt area *சட்டம் காங்கிரஸ் கட்சி ஆட்சியிலிருந்தபோது கொண்டுவரப்பட்ட சட்டம். அவர்கள் அப்பொழுது அரசின் திட்டங்களைச் செயல்படுத்த, சில பகுதிகளை* develop *செய்ய வேண்டுமென்று எண்ணி, இந்த இடங்களை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அதனால், இன்றைக்கு நமக்கு பாதிப்பு ஏற்படுகிறது.* Belt area*-வில் நிறைய மக்கள் குடியிருக்கிறார்கள். இது குறித்து காங்கிரஸ் சட்டமன்றக் கட்சித் தலைவர் அவர்கள் என்னுடைய அறைக்கு வந்து சொன்னார்கள். அதற்காகவே, இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்தவுடனே, ஒரு வாரம்* leave *எடுத்துவிட்டு, ஊருக்குப் போய்விட்டு வந்து, சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் அழைக்கிறோம். நீங்கள் எங்கள் அதிகாரிகளிடம் பேசுங்கள். அதிகாரிகள் உங்களிடத்தில் நிலைமையைச் சொல்லட்டும். நான் பஞ்சாயத்துக்காரரர் மாதிரி அமர்ந்து, பேசி முடிவெடுத்து, குறிப்பிட்ட கட்சித் தலைவர்களை அழைத்துக்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சென்று பார்ப்போம். (மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 2–10

ஏதாவது ஒரு முடிவு செய்தால்தான், சரியாக வரும். கலைஞர் காலத்தில் அவர்கள் பட்டாவினை வழங்கினார்கள்.

அதேபோன்று, கலைஞர் அவர்களின் மகனாக இருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சராக இருக்கின்ற நீங்களும் இந்தப் பட்டா வழங்கும் பணிகளைச் செய்ய வேண்டும் என்று சொல்கின்ற வேளையில், நானும் உங்களுடன் இணைந்து அப்பணிகளைச் செய்து கொடுக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள் வேகமாக கை தட்டுகிறார்கள். எனவே அவை செய்துகொடுக்கப்படும்.

அதேபோன்று, நரிக் குறவர், இருளர் இன மக்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேடிப் பிடித்து பட்டா வழங்குகிறார்கள். அவர்களையெல்லாம் முன்பு கண்டுகொள்ளவே மாட்டோம். நரிக் குறவர்களைக் கண்டுகொள்ள மாட்டோம், இருளர் இன மக்களைக் கண்டுகொள்ளவே மாட்டோம். ஆனால் தற்போது அவ்வாறான 48 ஆயிரம் குடும்பங்களைக் கண்டுபிடித்திருக்கிறோம். கண்டுபிடிக்கப்பட்டு 33 ஆயிரத்து 677 நபர்களுக்குப் பட்டா வழங்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்குப் பட்டா வழங்கியதோடு மட்டுமல்ல, மாண்புமிகு அண்ணன் திரு. இ. பெரியசாமி அவர்களுடைய துறையின் மூலமாக அவர்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுக்கச் சொல்லியிருக்கிறோம். பட்டா வழங்கினால் மட்டும் நரிக்குறவர், இருளர் இன மக்கள் எவ்வாறு வீடுகளைக் கட்டுவார்கள்? கட்ட முடியாது. பட்டா கொடுப்பதோடு அரசு விட்டுவிடுகிறதா என்றால், இல்லை. அதேபோன்று கிராமங்களில், அந்தக் காலங்களில் ஆதி திராவிட மக்களுக்கும், Backward Classes மக்களுக்கும் இடம் வழங்கியுள்ளார்கள். அதையும் ஊரைத் தாண்டி வழங்கியுள்ளார்கள். ஆனால், அவ்விடங்களில் மக்கள் யாரும் அப்போது குடியேறவில்லை. 15, 20 வருடங்களாக அந்த இடங்களை யாரும் கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டார்கள். தற்போது அரசின் மூலமாக அவ்விடங்களில் யார் யார் வசிக்கின்றனர் என்பதைப் பார்க்கும்போதுதான் எங்கிருக்கின்ற மக்களும் ஓடி வருகிறார்கள். ஏனெனில், தற்போது விலைவாசி ஏற்றத்தின் காரணமாக அந்த இடங்களின் விலை உயர்ந்துவிட்டது. இவ்வளவு நாட்கள் கவனிக்கப்படாமல் இருந்தது. ஆனால், அவர்கள் யாருக்கும் பட்டா வழங்கப்படவில்லை. அப்போது மந்திரிகளோ, சட்டமன்ற உறுப்பினர்களோ யாரேனும் ஏதேனும் ஒரு function-க்கு வந்தார்களேயானால் அவர்களிடம் ஒரு cover-ஐ வழங்கிவிட்டால் அவர்கள் அதைப் பெற்றுக்கொண்டு

2023 ஏப்ரல் 12] [திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்]

வீட்டிற்குச் சென்றுவிடுவார்கள். உதாரணத்திற்கு, இந்த இடம் திரு. இராமச்சந்திரனுக்கு உரியது, இந்த இடம் இந்த நபருக்கு உரித்தானது என்று அந்த இடங்கள் அளந்து கொடுக்கப்படவில்லை. தற்போது, அந்தப் பணிகளைச் செய்வதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அரசு அதிகாரிகளிடம் அனைத்து பணிகளையும் முறைப்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது. அரசு அதிகாரிகள் புதிய பணிகளைச் செய்கிறீர்களோ இல்லையோ, நடைபெற்ற பணிகளை முதலில் முறைப்படுத்துங்கள் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. பட்டா அனைவருக்கும் வழங்கப்பட வேண்டும். பட்டா வழங்காமல் இருக்க வேண்டாம் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

அதேபோன்று, தற்போது அறிவிப்பில் சொல்லப்போகிறேன்— திரு. E.V.K.S. இளங்கோவன் அண்ணன் அவர்களுடைய வீட்டிற்கே பட்டா இல்லையென்று சொன்னால் மாண்புமிகு உறுப்பினர்கள் நம்புவீர்களா? ஈரோடு மாவட்டத்தில், திரு. E.V.K.S. இளங்கோவன் அண்ணன் அவர்களுக்குப் பட்டா இல்லை. கேளுங்கள் அவர்களிடம். முதலில் அவர்கள் ஓட்டு கேட்பதை விட்டுவிட்டு, அதைத்தான் என்னிடம் கேட்டார். என் வீட்டிற்கு எப்படியாவது பட்டா கொடுக்க வேண்டும் என்று கேட்டார்கள். தந்தை பெரியார் வீட்டிற்கே பட்டா இல்லை. 7,000 குடும்பங்கள் அவ்வாறான நிலையில் உள்ளன. தேர்தல் நேரத்தில் செல்லும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை விடுத்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கே, எப்படி இவ்வளவு பெரிய மனிதருக்குப் பட்டா விடுபட்டுப் போனதென்று அதிசயமாகப் போய்விட்டது. தந்தை பெரியார் அவர்கள் வீட்டிற்கே பட்டா இல்லை, திரு. E.V.K.S. இளங்கோவன் அண்ணன் அவர்கள் வீட்டிற்குப் பட்டா இல்லை. கருங்கல்பாளையத்தில் அனைவரின் வீடுகளுக்கும் பட்டாக்கள் இல்லாத நிலை உள்ளது. அவர்கள் அனைவருக்கும் தற்போது பட்டா வழங்கப்படவிருக்கின்றன. மாண்புமிகு கொறடா அவர்கள்தான் அந்தப் பகுதிக்கு in-charge ஆக இருந்தார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அண்ணன் நேரு அவர்கள் அக்ரஹாரம் பகுதியையும் சேர்த்துவிட்டார்கள். ஒரு பிரச்சினை என்றால், ஓட்டு வாங்கிவிட்டு மாண்புமிகு கொறடா அவர்களும் மாண்புமிகு நேரு அவர்களும் வந்துவிடுகிறார்கள். ஓட்டு கேட்டபோது அன்றைக்கு என்ன சொன்னார்களோ, அவற்றைச் செய்து கொடுக்கக்கூடியவர்கள்தான் மாண்புமிகு தலைவர் அவர்களுடைய சகோதரர்கள் ஆவார்கள். ஈரோடு இடைத்தேர்தலில் ஓட்டு வாங்கிவிட்டோம், நமக்கு இனி என்ன

என்று நினைக்கவில்லை. சொன்னதைத்தான் வந்தவுடன் செய்கிறோம். தற்போது துறையை ஒழுங்குபடுத்த அதிகாரிகளிடம் உத்தரவிட்டிருக்கிறோம். முந்தைய 10 ஆண்டுகளில் அவ்வாறு ஒன்றுமே செய்யாமல் விட்டுவிட்டார்கள். தற்போது எங்கள் அரசில் அவற்றை ஒழுங்குப்படுத்தி, துறையைச் சீர்திருத்தம் செய்கிறோம்.

Mandous புயல் மற்றும் வெள்ளம் வந்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரவில் வந்துவிட்டார்கள். நான் வீட்டிலிருந்தேன், தொலைபேசியில் தொடர்புகொண்டார்கள். 'எங்கே இருக்கிறீர்கள்?' என்று கேட்டார்கள், 'வீட்டில் இருக்கிறேன்' என்று கூறினேன். 'புயல் வருகிறது, நீ வீட்டிலிருக்கிறாய் வெளியே செல்' என்று உத்தரவிட்டார்கள். நேராக control room சென்று உட்கார்ந்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கு வந்துவிட்டார்கள். வந்து அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடனும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, மறுநாள் காலையில் எந்தெந்தப் பகுதிகளெல்லாம் சேதமடைந்திருந்தனவோ அந்தந்தப் பகுதிகளுக்கெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்று ஆய்வு செய்தார்கள். பிற முதலமைச்சர்களைப்போன்று வெளியே செல்லாமல் உட்கார்ந்த இடத்திலிருந்தே சட்டம் பேசவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் களத்திற்குப்போய் கீழே இறங்கி நடந்தார்கள். காரிலேயே உட்கார்ந்துகொண்டு பார்த்துவிட்டு வரவில்லை. Van-ல் உட்கார்ந்துகொண்டே எங்களை பணிகள் செய்ய ஏவவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே களத்தில் இறங்கி, தண்ணீரில் இறங்கி, வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு, தானும் பணி செய்து, எல்லோரும் போகும் இடங்களில் செல்லக்கூடிய அளவில் சட்டமன்ற உறுப்பினர்களை வேலை வாங்குகிறார்கள் என்றால், இதைவிட ஒரு முதலமைச்சர் நமக்கு எப்படி கிடைப்பார்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டை இப்போது திருத்த முடியாவிட்டால், எப்போது திருத்த முடியும்? நம் துறையை மட்டுமல்ல, ஒவ்வொரு துறையையும், கலைஞரைப்போன்று, நடத்துகிறார் என்று நானும், மாண்புமிகு அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்களும் பேசிக்கொண்டிருந்தோம்.

பிற்பகல் 2–15

எப்பொழுதுமே, நாங்கள் பழைய காலத்து கதையையெல்லாம் பேசிக்கொண்டிருப்போம். Question hour-ல் ஒரு question வந்தால், அந்த question-ஐ அவர் படித்துவிட்டு வந்துவிடுவாராம். அது மாதிரி, ஒவ்வொரு துறையிலும் இந்தத் துறையில் என்ன வேலை நடைபெறுகிறது என்று பார்க்கக்கூடிய முதலமைச்சராக கலைஞர் இருந்தார்; அதே வழியில் அவரது மகனும் இருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இந்தத் துறையில் என்னென்ன வேலை நடைபெற வேண்டுமோ அவற்றையெல்லாம் செய்து கொடுத்துவிடுகிறோம். அதேபோன்று நிறைய இடங்களில், (குறுக்கீடு) முதலில் 6 இலட்சத்து 35 ஆயிரம் பேருக்குப் பட்டா மாறுதல் இருந்தது. அவற்றையெல்லாம் நாங்கள் மாற்றிக் கொடுத்துவிட்டோம். பட்டா மாறுதலையெல்லாம் செய்து கொடுத்துவிட்டோம். வேறு என்ன பெரிய வேலை? பட்டா மாறுதல் கொடுக்க வேண்டும், சான்றிதழ் கொடுக்க வேண்டும். நீங்கள் போகும்பொழுது உங்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும். நீங்கள் சொல்கிற வேலையைச் செய்ய வேண்டும். இதுதானே முக்கியம். Revenue Department-ல் என்ன வேலை? முன்பு, OAP-க்கு நம்மிடம்தான் கையெழுத்து வாங்கிக்கொண்டு செல்வார்கள். சான்றிதழுக்கு நாம்தான் தாசில்தாருக்கு letter கொடுப்போம். சான்றிதழுக்கு letter கொடுக்க வேண்டிய வேலை இப்போது இல்லை. எல்லாமே online-ல் கொடுக்கப்படுகிறது. நம்மை யாருமே பார்ப்பதே இல்லை. எப்போது பார்க்க வருகிறார்களென்றால், அவர்களுக்குக் கிடைக்காதபோதுதான் நம்மிடம் வருகிறார்கள். அதற்கு முன்பு பார்த்தால், காலையில் எழுந்தவுடன் சான்றிதழ் வாங்க வருபவர்கள், OAP வாங்க வருபவர்கள் என்று MLA Office-ல் கையெழுத்து வாங்கிக்கொண்டேயிருப்பார்கள். இப்போது அதெல்லாம் இல்லை. எல்லாமே online-ல் வந்துவிட்டது. அதையெல்லாம் ஒழுங்குபடுத்தி, இந்தத் துறையிலே என்னென்ன நல்ல காரியங்கள் நடைபெற வேண்டுமோ, அதையெல்லாம் வருவாய்த் துறையின் சார்பிலே நிச்சயமாக செய்து கொடுப்போம். புயல் வந்தாலும், வறட்சி வந்தாலும், எது வந்தாலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆதரவுக் கரம் நமக்கு எப்போதும் இருக்கும் என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே உங்களுக்கு பணிவன்போடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அறிவிப்புகள் இருக்கிறதல்லவா!*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *அறிவிப்புகள் இருக்கின்றன. மொத்தம் 282 வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள்; அதில் தாலுகா அலுவலகம் வேண்டும்; தாலுகா பிரித்துக்கொடுங்கள்; மாவட்டம் வேண்டும் என்றுதான் நிறைய இருக்கின்றன. இல்லையென்றால் VAO அலுவலகத்தைப் பிரித்துக் கொடுங்கள். இப்படித்தான் நிறைய வந்திருக்கின்றன. எனக்கும், திரு. நேரு அண்ணாச்சி அவர்களுக்குமே இந்தப் பிரச்சினை வருகிறது. பெரிய கிராமங்களைப் பிரிக்க வேண்டியிருக்கிறது. பெரிய, பெரிய கிராமங்களைப் பிரிக்க வேண்டும். அப்படிப் பிரிக்கிற நேரத்திலே VAO Office–ஐயும் பிரிக்க வேண்டியிருக்கிறது. (குறுக்கீடு) அதுதான், அதுதான். எல்லாமே வைத்துள்ளோம். அதையெல்லாம் பார்த்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டு, நிச்சயமாகப் பிரிக்கப்படும். ஒவ்வோர் ஊரிலும் எண்ணிக்கை கூடுதலாக இருக்கிறது. அனைத்தையும் பார்த்துப் படித்துள்ளேன். பெரும்பாலானவற்றிற்கு என்னுடைய உரையில் பதில் சொல்லியிருக்கிறேன். அவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டு, வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பேன் என்று சொல்லிக்கொண்டு, உறுப்பினர்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அறிவிப்புகளையெல்லாம் நீங்கள் சபையில் படித்ததாக பதிவு செய்துவிடலாமா! இல்லை, தலைப்பு செய்திகள் உண்டா? நீங்கள் என்ன சொல்கிறீர்களோ அதுதான்!*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *பதிவு செய்துகொள்ளலாம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி.*

2023 ஏப்ரல் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3793, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி.*

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீண்ட காலமாகப் பணிபுரியும் டாஸ்மாக் தொழிலாளர்களைப் பணி நிரந்தரம் செய்து காலமுறை ஊதியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.205,25,96,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3920, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை.*

திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "டாஸ்மாக் ஊழியர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.205,25,96,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4011, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரி. செந்தில்நாதன்.*

திரு. பெரி. செந்தில்நாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் பூரண மதுவிலக்கு அமல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.205,25,96,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4168, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4670, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4935, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார்.

திரு. வே. சம்பத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரூர் தொகுதியில் TASMAC கடைகளைக் குறைப்பது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.205,25,96,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4978, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன்.

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "டாஸ்மாக் கடைகளுக்கு அருகில் அரசு நிர்ணயம் செய்த தொகையைவிட வெளிநபர்கள் கூடுதல் தொகைக்கு மதுபாட்டில் விற்பதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.205,25,96,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5477, மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து.

திரு. K. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "டாஸ்மாக் பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்டவெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.205,25,96,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5529, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ்.

திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "டாஸ்மாக் கடைகளில் மது விற்பனையைக் கணினி வழியில் மேற்கொண்டு இரசீது வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.205,25,96,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5742, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5900, மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல்.

திருமதி கு. மரகதம் குமரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் இயங்கிவரும் டாஸ்மாக் கடைகளின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.205,25,96,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5957, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்.

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், மேலூர் தொகுதி, கொட்டாம்பட்டி ஒன்றியம், சாணிப்பட்டி கிராமத்திலிருக்கும் மதுபானக் கடையை மூட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.205,25,96,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6016, மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி.

திரு. S.S. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் மதுவிலக்கைப் படிப்படியாக நடைமுறைப்படுத்தும் வகையில், TASMAC கடைகளின் எண்ணிக்கையைக் குறைப்பது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.205,25,96,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7132, மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி.

திரு. V.P. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் இயங்கிவரும் மதுபானக் கடைகளில் மதுபாட்டில் விலையை உயர்த்தும் திட்டத்தையும், அனைத்துக் கடைகளிலும் உள்ள காலி மதுபான பாட்டில்களைத் திரும்ப வாங்கும் திட்டத்தையும் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.205,25,96,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

2023 ஏப்ரல் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7448, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ராஜகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7468, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சேகர்.

திரு. S. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாமக்கல் மாவட்டம், பரமத்தி-வேலூர் தொகுதி, கபிலர்மலை ஒன்றியத்திற்குட்பட்ட கோப்பணம்பாளையம், ஜேடர்பாளையம் மற்றும் சோழசிராமணி ஆகிய பகுதிகளில் உள்ள டாஸ்மாக் கடைகளில் மதுபானக் கூடம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.205,25,96,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எரிசக்தித் துறை மற்றும் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) ஆகியன பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளன. கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேசைகளிலுள்ள சிறு கணினியிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கங்களை அளிக்கின்றேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

@ 484 முதல் 639 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் II மற்றும் III ஆக அச்சிடப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். தற்போது இரண்டு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பெற்றுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். இன்று 7 மாமன்ற உறுப்பினர்கள் பேசவிருக்கின்றீர்கள். முதலாவதாகப் பேசுகின்ற மாமன்ற உறுப்பினருக்கு 20 நிமிடங்களும், மற்றவர்களுக்கு தலா 10 நிமிடங்களும் வழங்கப்படுகிறது. குறித்த நேரத்தைப் பயன்படுத்தி விவாதத்தை முடித்துத் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். முதலில், மாண்புமிகு உறுப்பினர் திரு. நத்தம் ஆர். விசுவநாதன் அவர்கள். இப்போது மணி 4-07 ஆகிறது. 4-27 மணிக்கு உரையை முடித்துவிடுங்கள்.

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் ஏழு கோடி மக்களுடைய நெஞ்சங்களில் நீக்கமற நிறைந்திருக்கின்ற, அவருடைய பூத உடல் மறைந்தாலும் புகழுடம்பு மறையாமல் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கும் மக்கள் மனதில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று வாழ்ந்து (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களுக்காகவே தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணித்து மறைந்திருக்கின்ற, அவர் மறைந்திருந்தாலும் மக்களுடைய மனதில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆகிய இரு பெரும் தலைவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய மறைவிற்குப் பின்பு கழகத்திற்குப் பொறுப்பேற்று சிறப்பாக எங்களையெல்லாம் வழிநடத்தி வருகின்ற, ஆற்றல்மிக்க தலைவராக விளங்கிக்கொண்டிருக்கின்ற முன்னாள் முதலமைச்சர், இந்நாள் எதிர்க்கட்சித் தலைவர், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர், (மேசையைத் தட்டும் ஒலி) வள்ளுவர் சொன்னதைப்போல,

> "இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்
> ததனை அவன்கண் விடல்"

என்ற குறளுக்கேற்ப, அந்த அளவிலே பொதுச் செயலாளர் பதவிக்கு யார் தகுதியானவர் என்பதைக் கண்டறிந்து, (மேசையைத் தட்டும் ஒலி) அவரால் மட்டுமே இந்தக் கழகத்தை வழிநடத்த முடியும் என்பதை அறிந்து, இன்றைக்குக் கழகப் பொதுச் செயலாளர் பொறுப்பை கழக சகோதரர்கள் அத்தனை பேரும்

2023 ஏப்ரல் 12] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

அவருக்கு வழங்கியிருக்கிறார்கள். அந்த வகையிலே, எங்களுடைய பொதுச் செயலாளர், எங்களுடைய தலைவர், அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும் இந்த நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 4–10

இங்கே மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையில் பேசுவதற்கு வாய்ப்பினை வழங்கியிருக்கின்ற அருமைச் சகோதரர் எதிர்க்கட்சிக் கொறடா திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இங்கே பேசுவதற்கு அனுமதி வழங்கியிருக்கின்ற தங்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்மீது மின் வாரியத்தின் பிரச்சினைப் பற்றி முழுமையாகப் பேசுவதற்கு முன்பு, மலரும் நினைவுகளாகப் பல சம்பவங்களை நினைவுபடுத்தி தொடரலாம் என்று கருதுகிறேன்.

மலரும் நினைவுகள் என்றால் மகிழ்ச்சிகரமான நினைவுகள் அல்ல, அது துன்பம் நிறைந்த, இன்னல் நிறைந்த நினைவுகள். கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தமிழ்நாட்டில் மின்வெட்டு பிரச்சினை, தமிழ்நாட்டில் மின்சாரம் வந்த நேரத்தைவிட மின்சாரம் வராத நேரம் அதிகமாக இருந்தது என்பது நாட்டு மக்கள் அனைவருக்கும் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் அமைச்சராக இருந்தவர். நீங்கள் இப்போது இந்த demand–ல் பேசும்போது உங்களுடைய சாதனைகளைச் சொல்லுங்கள்.

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: சொல்கிறேன், சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இப்படியெல்லாம் இருந்தீர்கள் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டிய அவசியம் இல்லை. அது தேவையில்லை. நீங்கள் இருந்தபோது ** இருந்தது, நாங்கள் வந்த பிறகுதான் அதைச் சரிசெய்தோம் என்பதை ஏன் சொல்ல வேண்டும்? நேற்றைய முன்தினம் நீங்கள் அந்த வார்த்தையைச் சொன்னதற்காகத்தான் அவர் சொன்னார், நாங்கள் நல்ல அரிசிதான் போடுகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

நீங்கள் முன்பு மோசமான அரிசி போட்டீர்கள் என்று சொன்னதால்தான், walkout *செய்தீர்கள். அதைச் சொல்ல வேண்டிய அவசியமில்லையே. அதைப்போல அவர்களையும் குற்றம் சொல்ல வேண்டாம். தொடருங்கள்.*

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே மின்சாரத் துறையில் 7 ஆண்டுக்காலம் அமைச்சராகப் பணியாற்றியிருக்கிறேன். அதேபோல, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் அமைச்சராகவும் 5 ஆண்டுக்காலம் பணியாற்றியிருக்கிறேன். இதே பிரச்சினைகளை ஏற்கெனவே நாங்கள் எதிர்க்கட்சியாக இருக்கின்றபோது பதிவு செய்திருக்கிறோம். நீங்கள் வேண்டுமானால் பழைய புத்தகங்களைப் படித்துப்பாருங்கள். எந்தளவிற்கு விவாதம் ஆரோக்கியமாக நடைபெற்றிருக்கிறது, எந்தளவிற்குச் சுதந்திரமாகப் பேச அனுமதித்திருக்கிறோம் என்பதையெல்லாம் பார்த்துக்கொள்ளுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நேற்று முன்தினம் நடந்ததைத்தான் நான் சொல்கின்றேன். நீங்கள் அதை மனதில் வைத்து அதற்குத் தகுந்தபடி பேசுங்கள்.*

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *நான் ஏற்கெனவே அவைக் குறிப்பில் இடம் பெற்றிருக்கின்ற விஷயங்களைத்தான் பேசுகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் தவறுதலாக உங்களைச் சொல்லவில்லை. நீங்கள் நல்ல அனுபவமுள்ள மூத்த முன்னாள் அமைச்சர், முன்பு இருந்திருக்கிறீர்கள். இப்பவும் தெரியும். இப்போது சபை நடவடிக்கைகள் நாகரிகமாக இருக்க வேண்டுமென்பதால், ஏற்கெனவே எதிர்க்கட்சிக் கொறடா 2 தினங்களுக்குமுன்பு, இதே பிரச்சினையை நாம் பேசி, அன்றைக்கு மாலை வெளிநடப்பு செய்து, அன்று திரும்ப வரவில்லை. அப்படிப்பட்ட கருத்து, அவர்களுக்கு ஒரு நியாயம், உங்களுக்கு ஒரு நியாயம் இல்லை. நீங்களும் அப்படிப்பட்ட கருத்துகளைப் பதிவு செய்ய வேண்டாம். தயவுசெய்து ஒத்துழைப்புக் கொடுங்கள்.*

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *இதைக்கூட பதிவு செய்யவில்லை என்றால், தமிழகத்தில் ** இல்லை என்று சொல்ல வருகிறீர்களா, ** இருந்தது என்பது உண்மைதானே.*

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2023 ஏப்ரல் 12] [*திரு. நத்தம் ஆர். விசுவநாதன்*]
உண்மையைத்தானே சொல்கிறேன். தவறாக இருந்தால், அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடுங்கள். அதில் ஒன்றும் தப்பு இல்லை. மின்வெட்டு இருந்தது என்பதை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரும்பத் திரும்ப ஒரே விஷயத்தில் நேரத்தை வீணாக்க வேண்டாம். நான்* simple *ஆக சொல்கிறேன். உணவுத் துறை அமைச்சர், இப்போது இருக்கிற* mill-*ல்* Colour Sorter *போட்டதால், எந்த அரிசி நீக்க வேண்டுமோ அதையெல்லாம் நீக்கிவிடுகிறார்கள். அதனால் இப்போது நல்ல அரிசியாக இருக்கிறது. முந்தைய ஆட்சியில் அப்படியில்லை என்று சொன்னதால்தான் விவாதமே. நீங்களும் கேட்டுவிட்டுத்தான் பேச வேண்டும். பழைய காலத்தில் உங்கள் ஆட்சியில் ** இருந்தது என்பதை எதற்கு பதிவு செய்ய வேண்டும், சொல்லுங்கள். நீங்கள், உங்கள் ஆட்சியில் நாங்கள் இப்படி, இப்படி செய்தோம் என்று சொல்லுங்கள். இன்னும் நீங்கள் இப்படி செய்யுங்கள் என்றும் சொல்லுங்கள். நான் அத்தனையும் பதிவு செய்யவிடுகிறேன்.*

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *நான் என்ன பேச வேண்டுமென்று நீங்கள் சொல்லுங்கள். நான் பேசிவிட்டுப் போய்விடுகிறேன். (சிரிப்பு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் ஒன்றும் சொல்லவில்லை. என்ன பேச வேண்டுமென்று உங்கள் கொறடாவிடம் கேளுங்கள்.*

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *நான் ஒன்றும் பேசவில்லை. என்ன வழிமுறை?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கொறடாவின் புதிய* rule. *அதன்படிதான் நடக்கிறது. (சிரிப்பு)*

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து என்னுடைய நேரத்தை வீணாக்காதீர்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய பேச்சில் குறுக்கிட வேண்டுமென்பது*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

என்னுடைய எண்ணமில்லை. இங்கே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பல புதிய சட்டமன்ற உறுப்பினர்களும் இருக்கிறார்கள். முன்னாள் அமைச்சர்களும் பலர் இருக்கிறார்கள். பழைய கதைகளையெல்லாம் மாறிமாறிப் பேசுவதன் மூலமாக கால, நேரத்தை விரயமாக்க வேண்டும் என்பதுதான் உங்களுடைய நோக்கம். பழைய கதைகளைப் பேச வேண்டுமென்றால், நாங்களும் பேச ஆரம்பிப்போம். இன்னும் சொல்லப்போனால், இந்தச் சட்டமன்றத்தில், திராவிட மாடல் ஆட்சியின் இந்த 2 ஆண்டுக்காலத்தில் ஆரோக்கியமாக நீங்கள் கேள்விகள் கேட்பதும், மாண்புமிகு அமைச்சர்கள் சுருக்கமாகப் பதில் சொல்வதும் அல்லது உங்கள் கவன ஈர்ப்பிற்கு பதிலளிப்பதும், முறையாக போய்க்கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே பழைய கதை எப்படி இருந்ததென்று சொன்னால், நாங்கள் பேச ஆரம்பிக்கும்போதே அமைச்சர் பெருமக்கள் எல்லாம் எழுந்து பேச ஆரம்பிப்பார்கள். நாங்கள் பேரவைத் தலைவர் அவர்களிடம், நாங்கள் பேசவேயில்லையே என்று கேட்போம். நீங்கள் குறுக்கீடு இல்லாமல் பேச வேண்டும், நீங்கள் குறுக்கீடு வருகிற மாதிரி ஏன் பேசுகிறீர்கள் என்றுதான் எங்களுக்குப் பதில் வரும். இன்னும் சொல்லப்போனால் குற்றச்சாட்டு இல்லாமல் பேச வேண்டும் என்று சொல்வார்கள்.

பிற்பகல் 4–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நடந்ததெல்லாம் இருக்கட்டும். நான் அதைச் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: ஒரே ஒரு நிமிடம். தொடர்ந்து இத்தகைய பிரச்சினை ஏற்படுவதால்தான் இதைச் சொல்லவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அவர்கள் பேச வேண்டுமென்றுதான் நாங்களும் ஆர்வமாக இருக்கிறோம். அவர்கள் முழுமையாகப் பேச வேண்டுமென்பதுதான் எங்களுடைய நோக்கம். பழைய கதைகளைப் பேச வேண்டுமென்றால், என்ன நடக்குமென்றால், நீங்கள் குறுக்கீடு எழாதவாறு பேச வேண்டும். அவ்வாறு மாண்புமிகு அமைச்சர்கள் பேசினால், அந்த நேரத்தையும் உங்களுடைய நேரத்தில்தான் கழிப்போம் என்றெல்லாம் நடந்தது. தற்போது நீங்கள் அவையை அப்படியெல்லாம் நடத்தவில்லை. பெரும்பாலும் ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களையும், எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களையும் சமமாகத்தான் நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். எனவே, பழைய செய்திகளைச் சொல்வதன் மூலமாக கால;

நேரம் விரயமாகும். நீங்களும் அமைச்சராக இருந்திருக்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்களும் தொடர்ந்து அமைச்சராக இருந்தார்கள். எனவே, உங்கள் ஆட்சியினுடைய பெருமையைப் பேசுங்கள். நாங்கள் அதை ஒன்றும் தடுத்து நிறுத்தவில்லை. நீங்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொல்லும்போது, அதற்கு நாங்கள் எதிர்க்குற்றச்சாட்டைச் சொல்ல வேண்டிய நிலை ஏற்படும். அதனால், குறிப்பிட்ட நேரத்தில் சட்டமன்ற அலுவல்களை முடிக்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நத்தம் ஆர். விசுவநாதன் அவர்கள்.

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. குற்றச்சாட்டு என்று நீங்கள் தவறுதலாக எடுத்துக்கொள்ள வேண்டாம். 15 நிமிடங்கள் ஆகிவிட்டன. இன்னும் 10 நிமிடங்களுக்குப் பிறகு மற்றவற்றைப் பேசிக்கொள்ளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு இருந்த **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இதைப் பதிவு செய்ய முடியாது. தேவையில்லாதவற்றைத் தயவுசெய்து பேச வேண்டாம். (குறுக்கீடு) தேவையில்லை. அதெல்லாம் எதற்கு? நீங்கள் அதைச் சொன்னால், உங்கள் அமைச்சர்கள் சொன்னதை இவர்கள் repeat செய்வார்கள். (குறுக்கீடுகள்) அது நன்றாக இருக்காது. அதைப் பதிவு செய்ய வேண்டாம். (குறுக்கீடுகள்) எல்லோரும் அமைதியாக இருங்கள். அதைப் பதிவு செய்யவில்லை. நேற்று முன்தினம் நீங்கள் அவையில் இருந்தீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. நிவேதா எம். முருகன் அவர்கள் ஒன்றே ஒன்றைத்தான் சொன்னார்கள். ஆட்சிக்கு வந்து 2 வருடங்கள்கூட முடியவில்லை. ஒன்றரை இலட்சம் விவசாய மின் இணைப்புகள் கொடுத்திருக்கிறோம். நீங்கள் அவ்வாறு கொடுக்கவில்லை என்றுதான் சொன்னார். அதையே நீங்கள் எதிர்த்து, அப்படிச் சொல்லக் கூடாது என்று சொன்னீர்கள். அப்படியிருக்கும்போது, நீங்கள் ஏன் இதைச் சொல்கிறீர்கள்? (குறுக்கீடு)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: ** என்று சொல்ல வந்தேன். அதற்குத்தான் இவ்வளவு பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நானும் அதைத்தான் திரும்பச் சொல்கிறேன். அதற்காகத்தான் நீங்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு walkout செய்தீர்கள் என்று சொல்கிறேன்.

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதோ பாருங்கள். ஒரு வார்த்தையை இங்கே பதிவு செய்ய வேண்டுமென்றால். . . (குறுக்கீடு)

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: அடுத்த வார்த்தையைப் பேச. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை நான் முழுமையாக எல்லோருக்குமாக சொல்கிறேன். (குறுக்கீடு)

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: வார்த்தைக்கு வார்த்தை இப்படிச் செய்தீர்கள் என்றால். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வார்த்தைக்கு வார்த்தை என்றெல்லாம் இல்லை. நீங்கள் உட்காருங்கள். இந்த ஒன்றை மட்டும் நான் சொல்லிக்கொள்கிறேன். அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் நான் சொல்கிறேன். ஏதோ ஒரு கட்சியைப் பற்றி ஏதோ ஒரு வார்த்தையை தவறுதலாகப் பதிவு செய்வதால் யாருக்கும் எதுவும் வரப் போவதில்லை. யாருக்கும் எந்தப் பின்னடைவும் வரப் போவதில்லை. தேவையான அளவிற்கு நாகரிகமாக நமது அவை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நாகரிகமாகவே பேசுங்கள். பல சந்தர்ப்பங்களில் சில வார்த்தைகளை நீங்கள் நீக்கக் கோரினால், அடுத்த நிமிடத்திலேயே நீக்கிவிடுகிறேன். தயவுசெய்து அந்தப் பொறுப்போடு பேச வேண்டும். எல்லோருக்கும் அதுதான் பொறுப்பு.

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: ஒரு வார்த்தைகூட சொல்லவில்லையே. நாகரிகக் குறைவாக அப்படி என்ன சொல்லிவிட்டேன். ** என்று சொன்னேன். அது தவறு என்றால், அதையும் நீக்கிவிடுங்கள். அதில் எனக்கொன்றும் ஆட்சேபணையில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2023 ஏப்ரல் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது ஏற்கெனவே நீக்கப்பட்டுவிட்டது. நீங்கள் புதிதாக ஏதேனும் பேசுங்கள்.*

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *எல்லாவற்றையும் நீக்கிவிடுங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இப்போது பேசப் போவதையும். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இப்படி தவறாகப் பேசினால் நான் நீக்கிக்கொண்டேதான் இருப்பேன்.*

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே நிலைமை நீடித்தால், நீங்கள் சபாநாயகராக இருக்கும் வரை நாங்களெல்லாம் பேசவே முடியாது என்று சொல்லி முடிவெடுக்க வேண்டிய கட்டாயம்தான் வரும். (குறுக்கீடுகள்) ஜனநாயக ரீதியாக உரிமையைக் கொடுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் பேசவே மாட்டேன் என்று முடிவெடுக்கிற உரிமை உங்களுக்கு உள்ளது.*

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எதிர்க்கட்சியாக இருந்தபோது, கடந்த காலத்தில் ஏற்பட்ட ** தமிழக மக்கள் சொல்லொணாத் துயரத்தில் இருக்கிறார்கள்; தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்; சிறு தொழில்முனைவோர், பெரும் தொழில்முனைவோர், தொழிலாளர்கள் உள்ளிட்ட எல்லாத் தரப்பு மக்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்; இவ்வாறு மக்களுடைய வாழ்வாதாரத்தைப் பாதிக்கிற ** பிரச்சினைக்கு, நான் ஆட்சிக்கு வந்தால் மூன்றாண்டுக் காலத்தில் ** இல்லாத மாநிலமாக மாற்றிக் காட்டுவேன் என்று சூளுரைத்தார். அவருடைய வாக்குறுதியை நம்பி, மக்களும் அவருக்கு வாக்களித்து, அவரை மீண்டும் முதலமைச்சராக அரியணையில் அமர்த்தினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தவுடன், அந்தச் சூளுரையை நிறைவேற்றுவதற்காக, அவர் முதலில் கவனம் செலுத்திய துறை இந்த மின்சாரத் துறைதான். அப்போது மின்சாரத் துறை*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

அமைச்சராக இருந்த என்னை அழைத்து, 'நான் மக்களிடத்தில் 3 ஆண்டுக் காலத்தில் தமிழ்நாட்டை ** இல்லாத மாநிலமாக மாற்றிக் காட்டுவேன் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறேன். அதற்கு சில வழிமுறைகளைச் சொல்கிறேன். அந்த வழிமுறைகளின்படி நீங்கள் நடவடிக்கை எடுத்து அதைச் செய்ய வேண்டும்' என்று சொன்னார்கள். அதற்கேற்றவாறு, அப்போதைய மின்சாரத் துறை அமைச்சராக இருந்த என் தலைமையில் ஒரு குழுவை அமைத்தார்கள். மின் வாரியத்தின் தலைவர், மின் வாரியத்தின் அனைத்து உயரதிகாரிகள், பொறியாளர்கள், நிதித் துறை செயலாளர், எரிசக்தித் துறை செயலாளர், தொழில் துறை செயலாளர், வேளாண்மைத் துறை செயலாளர், உள்ளாட்சித் துறை செயலாளர் உள்ளிட்ட உயரதிகாரிகள் கொண்ட குழுவை அமைத்தார்கள்.

பிற்பகல் 4–20

அந்த Committee வாரந்தோறும் திங்கட்கிழமை காலையில் 10–30 மணிக்குத் தலைமைச் செயலகத்தில் கூடும். தலைமைச் செயலகத்தில் கூடி மின்வெட்டுப் பிரச்சினைக்கு என்ன காரணம் என்பதைக் கண்டறிந்து, அதற்குரிய பரிகாரங்களைச் செய்ய வேண்டுமென்று அதற்கு ஒரு குழுவை நியமித்தார்கள். அந்த உயரதிகாரிகள் கொண்ட குழு வாரந்தோறும் அங்கே கூடி எடுக்கின்ற முடிவை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு அப்போதைக்கப்போது தெரிவிக்க வேண்டும். சில நேரங்களில் அம்மா அவர்களே அந்தக் கூட்டத்தை நடத்துவார்கள். இப்படி எல்லா விஷயங்களிலும் நேரடியாக இந்தளவிற்குக் கவனம் செலுத்தி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையால் இந்த மின்வெட்டுப் பிரச்சினைக்கு என்ன காரணம் என்ற சில உண்மைகளைக் கண்டறிந்து அதற்குரிய நடவடிக்கையை எடுத்தார்கள்.

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்

என்று வள்ளுவர் சொல்லியிருப்பது நோய்க்கு மட்டுமல்ல. அதேபோல, எந்தப் பிரச்சினைக்கும், மின் பற்றாக்குறைக்கு மின்வெட்டுப் பிரச்சினைக்கு என்ன காரணம் என்பதைக் கண்டறிந்து, அந்தக் காரணத்தை நிவர்த்தி செய்தால்தான் சரியாக வரும் என்பதற்காக காரணங்களைக் கண்டறிந்தோம். அன்றைக்கு நான் சொல்கின்ற இந்தக் கூட்டமெல்லாம் நடைபெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2023 ஏப்ரல் 12] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

அன்றைக்கு அமைச்சராக இருந்த அருமைச் சகோதரர் திரு. செந்தில்பாலாஜி அவர்களுக்கும் அது நன்றாகவே தெரியும். அன்றைக்கு அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கைகளெல்லாம் அவருக்கும் நன்றாகத் தெரியும். அந்தளவிலே அன்றைக்கு 4 காரணங்களைக் கண்டறிந்தோம். அதிலே வளர்ந்து வரும் மின் தேவைக்கேற்ப மின் உற்பத்தியைப் பெருக்கவில்லை என்பது ஒன்று. வெளி மாநிலங்களிலிருந்து மின் வழித்தடங்கள் அமைக்கப்படவில்லை. அதேபோல, நீண்டகால மின் கொள்முதல் LTO *செய்யப்படவில்லை. குறுகிய, நடுத்தரகால ஒப்பந்தமும் செய்யப்படவில்லை—அதனால் தொடங்கப்பட்ட இடங்களிலிருந்து செயல்பட்டு வருகின்ற இந்தத் திட்டப் பணிகள்—தி.மு.க. ஆட்சியில்கூட சில திட்டங்களையெல்லாம் தொடங்கினார்கள். அந்தப் பணிகளெல்லாம்-அன்றைக்கு வேகமாக முடிக்கப்படாமல், முழுமையாக நிறைவேறாமல் பாதியிலே நின்றன. இப்படிப்பட்ட முடிக்கப்படாமல் இருக்கின்ற பணிகளை விரைந்து முடிப்பது.*

இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு சொல்வதெல்லாம், இங்கே எந்த ஒரு மாநிலமும் தன்னுடைய சொந்த உற்பத்தியிலேயே மின் தேவையைப் பூர்த்தி செய்துவிட முடியாது. குறிப்பாக, தென் இந்தியாவில் இருக்கின்ற அனைத்து மாநிலங்களும் இன்றைக்கு மின் பற்றாக்குறை மாநிலங்கள்தான். இப்போதுதான் நாம் தன்னிறைவைப் பெற்றிருக்கிறோம்; அது வேறு விஷயம். எல்லா மாநிலங்களிலும் பற்றாக்குறை இருக்கின்றபொழுது கொள்முதல் மூலமாகத்தான் அந்த மின் தேவையை நாம் நிறைவு செய்ய முடியும். இப்பொழுதும் நீங்களும் அந்த வேலையைத்தான் செய்வீர்கள். யாராக இருந்தாலும் அதைத்தான் செய்ய முடியும். அந்த அளவில் கொள்முதல் செய்வதற்கும் இவர்கள் என்ன செய்திருக்க வேண்டுமென்று சொன்னால், நீண்டகாலக் கொள்முதல் ஒப்பந்தம் இருப்பவர்கள் மட்டுமே மின்சார வழித்தடத்திற்கு விண்ணப்பிக்க முடியுமென்ற நிலை இருந்தது. அதை அந்தப் பழைய ஆட்சியாளர்கள் கண்டுகொள்ளவே இல்லை. நீண்டகால ஒப்பந்தம் செய்யாததன் விளைவாக மின் வழித்தடங்களை, உதாரணத்திற்கு, வட மாநிலங்களிலே நிறைய மின்சாரம் கிடைத்தது. தென் மாநிலங்களிலே கிடைக்கவில்லை. ஆனால், கிடைத்த இடத்திலிருந்து நீங்கள் கொள்முதல் செய்து இங்கே தமிழ்நாட்டிற்குக் கொண்டு வர வேண்டுமென்றால், மின் Corridor, *அந்த வழித்தடம், அது* Northern Grid-*ஐயும், வட இந்திய மத்திய தொகுப்பையும்,* Southern Grid-*ஐயும் இணைப்பதற்கு மின் வழித்தடம் இல்லை. மின் வழித்தடம் ஓரிரு இடங்களில்தான் இருந்தது. ஒட்டுமொத்தமாக தென் இந்தியாவிலே இருக்கின்ற*

பற்றாக்குறை மாநிலங்களெல்லாம் அங்கே அந்த வழித்தடத்தைப் பயன்படுத்துகின்றபொழுது, அந்த வழித்தடமும் நமக்குக் கிடைக்கவில்லை. ஆகவே, அந்தக் கொள்முதல் மூலமாகவும் இங்கே நமது தேவையைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. இப்படிப்பட்ட இக்கட்டான பிரச்சினைகளையெல்லாம் கண்டறிந்து, அதற்குப் பின்பாகத்தான் அம்மா அவர்கள் முடிவெடுத்தார்கள்.

இந்தப் பிரச்சினைக்கு முதலில் தீர்வுகாண வேண்டுமென்றால், வட இந்திய மாநிலங்களிலே இருக்கின்ற மின் தொகுப்புக்கும், தென்னிந்தியாவில் பெங்களூருவில் இருக்கின்ற மின் தொகுப்புக்கும் இடையிலே மின் Corridor, மின் வழித்தடம் அமைக்க வேண்டுமென்று முடிவெடுத்து, அன்றைக்கு இருந்த மத்திய அரசை நேரடியாக வலியுறுத்தி, எடுத்த பல்வேறு தொடர் முயற்சிகளின் காரணமாக 3 ஆண்டுகளுக்குள் அந்த வழித்தடம் அமைக்கப்பட்டது. அதனால்தான் வட இந்தியாவில் இருக்கின்ற கூடுதலான மின்சாரத்தை இங்கே கொள்முதல் செய்ய முடிந்தது. ஆனால், இந்த நேரத்திலே தயவுசெய்து இதைக் குற்றச்சாட்டாக நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டாம். நான் சொல்கின்றேன்; அன்றைக்கு ** அமைச்சராக இருந்தார். மாநிலத்தினுடைய . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையிலே இல்லாதவர்கள் பெயர்களையெல்லாம் நீங்கள் குறிப்பிட வேண்டாம். (குறுக்கீடு) அதையெல்லாம் நீக்கி விடுகிறேன். இல்லை. ** எல்லாம் தேவையில்லை. தி.மு.க. ஆட்சியில் இருக்கிறது. அ.இ.அ.தி.மு.க. நீங்கள் ஆட்சியில் இருந்தீர்கள். இப்போது எதிர்க்கட்சியாக இருக்கிறீர்கள். அதை மாற்றி அந்த இரண்டுக்குள்ளேயே comparison-ல் வாருங்கள்.

பிற்பகல் 4—25

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: பெயர் சொல்லவில்லை. ** இருந்தாலும்கூட, தமிழகத்தில் ** (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேண்டாம், நானே சொல்லிவிட்டேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2023 ஏப்ரல் 12]

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *ஆனால், ** அதற்குப் பின்பு, அம்மா அவர்களுடைய பெருமுயற்சியினால் அந்த மின் வழித்தடம் அமைக்கப்பட்டதற்குப் பின்புதான், வட இந்தியாவிலிருந்து இங்கே கொள்முதல் செய்ய முடிந்தது. அதேபோல, கொள்முதல் செய்த உடனே, நீண்ட கால கொள்முதல் ஒப்பந்தத்தையும் முடித்து, குறுகிய கால, நடுத்தர கால ஒப்பந்தத்தையும் முடித்து, அந்த வழித்தடத்திற்கு நாம் விண்ணப்பித்து வழித்தடமும் பெற முடிந்தது. ஆக, இப்படிப்பட்ட நுணுக்கமான பிரச்சினைகளையெல்லாம் அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையின் விளைவாகத்தான் மின்வெட்டுப் பிரச்சினை அன்றைக்குத் தீர்க்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

அதேபோல, மின் உற்பத்தியைப் பெருக்குவதற்காக ஏற்கெனவே நடைபெற்று வந்திருக்கின்ற பல்வேறு திட்டங்கள் அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலும், அதைத் தொடர்ந்து நடைபெற்ற நமது அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஆட்சிக் காலத்திலும் மேற்கொள்ளப்பட்டன. ஒட்டுமொத்தமாக தமிழகத்திலே அனல் மின் நிலையங்களினுடைய நிறுவுதிறன், installed capacity *ஏறத்தாழ 4,320 மெகா வாட்; எரிவாயு மின்கலன்களின் திறன் 5,016 மெகா வாட்; மத்திய தொகுப்பு மின்கலன்கள் 6,166 மெகா வாட்; இங்கே தனியார் மின் கொள்முதல் 746 மெகா வாட், நீண்டகால மின் கொள்முதல் 2,830 மெகா வாட், நடுத்தர கால மின் கொள்முதல் 550 மெகா வாட், மொத்த மின் கொள்முதல் 4,126 மெகா வாட். ஆக, மரபு சாரா எரிசக்தி ஆதாரங்கள், நீர் மின் நிலையங்கள் 2 ஆயிரத்து 321 மெகா வாட், காற்றாலை, சூரிய சக்தி மற்றும் தாவரக் கழிவுகளிலிருந்தெல்லாம், நான் சொல்கின்ற இந்தப் புள்ளிவிவரங்கள், அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் நிறுவப்பட்ட நிறுவு திறன், அதாவது மரபு சார்ந்த உற்பத்தித் திறன்கள், அன்றைக்கு இருந்த* figure, *இப்போது மாண்புமிகு அமைச்சர் கொடுத்திருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்திலும் பாருங்கள், அதே* figure *தான் இருக்கிறது. அதாவது என்ன அர்த்தம்; அம்மா ஆட்சிக் காலத்திலிருந்து இன்றைக்குவரை அந்த உற்பத்தித் திறன் அப்படியே இருக்கிறது; (மேசையைத் தட்டும் ஒலி) எதுவும் கூட்டப்படவில்லை. அது அப்படியே இருக்கிறது. இன்றைக்குக் காற்றாலை மின்சாரமும், சூரிய சக்தி மின்சாரமும் மட்டுமே கூடுதலாக இருக்கிறதே தவிர, மரபு சார்ந்த மின் திட்டங்கள்–நீர் மின் நிலையங்கள், புனல் மின்*

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

நிலையங்கள், நீரேற்று மின் நிலையங்கள், அனல் மின் நிலையங்கள், இப்படி மரபு சார்ந்த மின் உற்பத்திகளின் திறன் இன்றைக்கு ஒரு மெகா வாட்கூட உயர்த்தப்படவில்லை. இரண்டாண்டுக் காலமாகியிருக்கிறது. இன்றைக்கு வரை, எந்த முன்னேற்றமும் இல்லை. கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்திலே நாங்கள் எங்கள் கழக ஆட்சியிலே கொடுக்கப்பட்ட அதே மின் உற்பத்தித் திறன்தான் இன்றைக்கும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் ஏற்கெனவே சொன்னதைப்போன்று, காற்றாலை சக்தி உற்பத்தித் திறன் மற்றும் சூரிய சக்தி உற்பத்தித் திறன் மட்டும் இன்றைக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது.

அதைப்போல, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் இந்தத் திட்டங்களெல்லாம் செயல்படுத்தப்பட்டன என்பதைத் தேதியுடன்கூடிய புள்ளிவிவரங்களாக இங்கே நான் சொல்லவிரும்புகின்றேன். நீர் மின் திட்டத்தை எடுத்துக்கொண்டால், பவானி கட்டளை 29–11–2011–லும்; பெரியாறு புனல் மின் திட்டம் 30–11–2012–லும்; அதைப்போல, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், தேசிய அனல் மின் கழகத்துடன் [National Thermal Power Corporation Limited (NTPC)] கூட்டு முயற்சியிலே 350 மெகா வாட் 29–11–2012–லும்; பெரியாறு புனல் மின் நிலையம் 11–9–2012–லும்; பவானி தடுப்பணை புனல் மின் திட்டம்–10, 26–10–2012–லும் தொடங்கப்பட்டன. நான் சொல்வது முழுவதும் அம்மா அவர்களின் ஆட்சிக் காலம். தேதிகளைப் பாருங்கள்; இவையெல்லாம் உற்பத்தி தொடங்கிய தேதிகளாகும்.

அதைப்போல, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தேசிய அனல் மின் கழகத்தின் கூட்டு முயற்சியினால் வல்லூரில் 359 மெகா வாட் 25–8–2013–லும்; மேட்டூர் அனல் மின் திட்டம் 600 மெகா வாட் (நிலை–III) 12–10–2013–லும்; வட சென்னை அனல் மின் திட்டம் நிலை–II, அலகு–1 (Unit–1) 600 மெகா வாட் 20–3–2014–லும்; பெரியாறு புனல் மின் திட்டம்–7, 8–1–2014–லும்; பவானி கட்டளை தடுப்பணை, 30 மெகா வாட் 16–10–2013–லும் தொடங்கப்பட்டன. பெரியார்–வைகை சிறுபுனல் மின் திட்டம் நிலை–IV 2013–லும்; வட சென்னை அனல் மின் திட்டம், 600 மெகா வாட், 8–5–2014–லும் தொடங்கப்பட்டன. கூடங்குளம் அணு மின் நிலையம் மத்திய அரசினுடைய திட்டமாக இருந்தாலும், அது தொடங்கப்பட்ட நாள் 31–12–2014 ஆகும்.

பிற்பகல் 4–30

கூடங்குளம் என்றவுடன் என்னுடைய நினைவுக்கு வருவது என்னவெனில், அன்றைய காலகட்டத்தில் கூடங்குளம் பகுதியில் என்ன நடந்தது என்பது பற்றி எங்களைவிட மாண்புமிகு பேரவைத்

2023 ஏப்ரல் 12] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

தலைவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். கூடங்குளம் அணு மின் நிலையத்தால் பாதிக்கப்படுவோமோ என்ற அச்ச உணர்வால் அன்றைக்கு அந்தப் பகுதி மக்களெல்லாம் போராட்டம் நடத்தினார்கள். பூவுலகின் நண்பர்கள் என்ற அமைப்பின் மூலமாக அன்றைக்கு மிகப் பெரிய போராட்டத்தை முன்னெடுத்து நடத்திச் சென்றார்கள். அந்தப் போராட்டத்தின் காரணமாக, கூடங்குளம் அணு மின் நிலையத் திட்டம் ஒட்டுமொத்தமாக நின்றுவிடுமோ, ரஷ்யாவின் உதவியுடன் செயல்படுத்தப்படுகின்ற அந்தத் திட்டத்தை, கூடங்குளத்தை மூடிவிடுவார்களோ என்று அன்றைக்கு எல்லோரும் அச்சப்படுகின்ற அளவிற்கு நிலைமை பூதாகரமாக உருவெடுத்துக் கொண்டிருந்தது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆளுமைக்கு ஓர் எடுத்துக்காட்டு எது என்று சொன்னால், அது கூடங்குளம் பிரச்சினையை அவர் வெற்றிகரமாகக் கையாண்டு மின் உற்பத்தியைத் தொடங்கி வைத்தார்களே! அதுதான் மிகப் பெரிய ராஜதந்திரம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கூடங்குளம் அணு மின் நிலையம் எனது தொகுதியில் உள்ளது. பல ஆயிரக்கணக்கானோர்மீது உண்மைக்குப் புறம்பாக வழக்குகள் போடப்பட்டன. அந்த வழக்குகள் அனைத்தையும் இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் இரத்து செய்திருக்கிறார்கள்.

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: என்ன சொல்ல வருகிறேன் என்பதை முழுமையாகக் கேட்டுவிட்டு பேசுங்கள். கொஞ்சம் தயவுசெய்து இருங்கள். **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த உலகத்திலேயே நீங்கள் ஒருவர்தான் எல்லா விவரமும் தெரிந்தவர் என்கின்ற மாதிரி யாரையும் துச்சமாகப் பேச வேண்டாம். முதலில் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்கள்தான் கூடங்குளத்திற்கு வந்து, கூடங்குளத்தில் பணிகள் நடைபெறாது என்று போராட்டத்தில் சொன்னார்கள். அதற்குப் பிறகு மீண்டும் நடைபெற வைத்ததும் நீங்கள்தான்; வழக்குப் பதிவு செய்ததும் நீங்கள்தான். அந்த வழக்கை இரத்து செய்தவர்தான் இன்றைய முதல்வர். அதனால், அது பற்றி எனக்குத் தெரியும். அது எனது ஊர், அது எனது தொகுதி. (மேசையைத் தட்டும் ஒலி) அடுத்த சப்ஜெக்ட் குறித்து பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) தயவுசெய்து நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *நான் சொல்ல வருகிற சாராம்சத்தைப் புரிந்துகொள்ளவில்லை. நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால், அம்மா அவர்கள் இல்லையென்றால், அன்றைக்குக் கூடங்குளம் திட்டம் வந்திருக்கவே வந்திருக்காது. தற்போது, கூடங்குளத்தில் 2 ஆயிரம் மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு, தமிழ்நாட்டிற்கு மின்சாரம் கிடைக்கிறது என்றால், அதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த முயற்சி என்பதை தயவுசெய்து நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தளவிற்கு அன்றைக்கு செயல்பட்டு, பல சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்தி, ஓராண்டு காலம் அந்தப் பிரச்சினையை ஆறப்போட்டு, அதற்குப் பிறகு அந்தப் பிரச்சினையை வெற்றிகரமாக முடித்தார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள்.*

*அதற்கடுத்தபடியாக, இன்னொரு சம்பவத்தைப் பற்றி சொல்கிறேன். இதை நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. நடந்த சம்பவத்தைக் கூறுகிறேன். அதேபோன்று அம்மா அவர்களுடைய பெருமுயற்சியின் காரணமாக, அம்மா ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட பைக்காரா நீர் மின் திட்டம் ஏறத்தாழ 400 மெகா வாட் அளவிற்கான திட்டமாகும். ஏறத்தாழ 12 ஆண்டுக் காலம், அம்மா அவர்கள் தொடங்கிய திட்டத்தை மீண்டும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகுதான் அந்த திட்டமே முழுமையாக நிறைவேற்றப்பட்டது. பைக்காரா நீர் மின் திட்டத்திற்கான அனைத்துப் பணிகளும் முடிவடைந்து, திட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகுதான், பைக்காரா நீர் மின் திட்டம் செயல்படுத்தப்பட்டது. அவ்வாறு செயல்படுத்தி, அம்மா அவர்கள் அன்றைக்கு நேரடியாக வந்து மின் உற்பத்தியை, அந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். அந்தத் திட்டத்தைத் தொடங்கியதற்குப் பிறகு, உற்பத்தி செய்யப்பட்ட அந்த மின்சாரத்தை வெளியே எடுத்துச் செல்வதற்கு வழித்தடம் அமைக்க வேண்டுமா, இல்லையா? வழித்தடம் அமைக்கின்றபோது, ** வனப் பகுதியில் மின் வழித்தடம் அமைக்கக் கூடாது என்று தடை செய்துவிட்டார்கள். ஆக, அந்த பைக்காரா நீர் மின் திட்டம். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நான் சொல்கிறேன். (குறுக்கீடு) இல்லை. (குறுக்கீடு) இப்போது நான் உங்களுக்கு ஒரு விஷயத்தைச் சொல்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள், சொல்கிறேன். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் பேசியதற்கு நான் சொல்லவில்லை. ஒரு புது* ruling *கொடுக்கப்போகிறேன்.*

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

Screen–ல் இப்போது எல்லோருமே, (குறுக்கீடு) இல்லை, உங்கள் பேச்சில் குறுக்கிடவில்லை. நீங்கள் உட்காருங்கள், சொல்கிறேன். (குறுக்கீடு) தற்போது நான்கு புறமும் screens உள்ளன. குறுக்கீடுகள் இருந்தாலும், பேசுகின்ற உறுப்பினர் எவ்வளவு நேரம் பேசினார் என்பது அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நீங்கள் மட்டும் பேசியது, 20 நிமிடங்கள் 16 விநாடிகள் என்று மஞ்சள் எழுத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது; குறுக்கீடு இல்லாமல் நீங்கள் பேசியது மட்டும். நன்றி சொல்லி அமருங்கள். இனி யார் பேசினாலும் குறுக்கீடு இல்லாமல் அந்தந்த உறுப்பினர் பேசுவதற்கு counting இருக்கிறது.

பிற்பகல் 4–35

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு உத்தரவு பெறப்பட்டது. பின்பு உச்ச நீதிமன்றம் வரை மத்திய அரசாங்கம் சென்றுவிட்டது. உச்ச நீதிமன்றம் வரை சென்று, அனுமதி பெற்றுத்தான் அந்த வழித்தடம் அமைக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆக, எவ்வளவு தடைகளையெல்லாம் முறியடித்து, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்தச் சாதனையை நிகழ்த்தியிருக்கிறார்கள் என்பதற்காக ஓர் உதாரணத்திற்குச் சொல்ல வந்தேன். இவ்வளவு தடைகளெல்லாம் இருந்தன. அதேபோல், தொழிலாளர். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், போதும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் முடித்தவுடன் வாய்ப்பு தருகிறேன். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட கால மின் கொள்முதல் என்பது மின் வாரியத்திற்கு இழப்பு ஏற்படாத வகையில் அந்த ஒப்பந்தங்கள் செய்திட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், முன்னாள் அமைச்சராக இந்தத் துறையைக் கவனித்தவர். 25 ஆண்டுக் காலத்திற்கு மின் கொள்முதல் ஒப்பந்தம் செய்கின்றபோது, 7 ரூபாய் 1 பைசாவிற்கு அவர்கள் ஒப்பந்தம் செய்தார்கள். இன்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 1,000 மெகா வாட் அளவிற்கு 2 ரூபாய் 61 பைசாவிற்கு 25 ஆண்டுகளுக்கு, நீண்ட காலத்திற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும்; நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. நத்தம் ஆர். விசுவநாதன், நீங்கள் மூத்த உறுப்பினர். உங்களுடைய behaviour அப்படி இருக்கக் கூடாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார். அதனைக் கேட்கக் கூடாது என்றால் எப்படி? (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: ஒரே நிமிடம். நான் பதில் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) கடைசியாகப் பேசலாம் என்றுதான் நினைத்தேன். நீங்கள் சொல்லிக்கொண்டே சென்றதால், அதற்குப் பதில் சொல்ல வேண்டியிருந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் சொன்னது மட்டும்தான் இந்த அவைக்குறிப்பில் ஏறவேண்டும் என்றால் எப்படி? மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பதில் சொல்லவிடுங்கள். மற்ற எல்லா உறுப்பினர்களையும் நான் சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: வட சென்னை அனல் மின் நிலையம்-நிலை 3; அதேபோல உடன்குடி, உப்பூர் உள்ளிட்ட அனல் மின் நிலையத் திட்டங்களும் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய பொற்கால ஆட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) 2010 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட திட்டங்களெல்லாம், குறிப்பாக 2018-2019 ஆம் ஆண்டு முடிக்கப்பட்டு, மின் உற்பத்தி பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டிருக்க வேண்டும். ஆனால், முழுமையாக அந்தப் பணிகளை முடிக்காமல், நிலுவையில் விட்டுவிட்டுச் சென்றதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் முதல் ஆய்வுக் கூட்டத்திலேயே, இந்தத் திட்டங்களையெல்லாம் விரைந்து முடித்து, மின் உற்பத்தி பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள்.

குறிப்பாக மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தை எடுத்து பாருங்கள். மிகத் தெளிவாக இந்தக் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்திலே விவரிக்கப்பட்டுள்ளது. அடுத்த இரண்டு ஆண்டுகளில் 4 ஆயிரத்து 620 மெகா வாட் அனல் மற்றும் புனல் மின் உற்பத்தித் திறன், தமிழ்நாடு மின் கட்டமைப்பில் சேர்க்கப்படவுள்ளது. என்னென்ன

2023 ஏப்ரல் 12] [திரு. V. செந்தில்பாலாஜி]

திட்டங்கள், எவ்வளவு மெகா வாட், எந்த வருடத்தில் முடித்து, கட்டமைப்பில் இணைப்பதற்குக் கொண்டு வரப்படுகிறது என்ற விவரங்களும் இதிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அதேபோல், நீங்கள் 2 ஆயிரத்து 830 மெகா வாட் அளவிற்கு நீண்ட காலக் கொள்முதலுக்கு ஒப்பந்தம் செய்தீர்கள். ஆனால், அந்த மின்சாரத்தைக் கொண்டு வருவதற்கு அந்தக் காலகட்டத்தில் மின் வழித்தடம் இல்லாமலேயே அந்த ஒப்பந்தங்களெல்லாம் செய்யப்பட்டன. இன்று நம்முடைய சொந்த உற்பத்தி என்பதை 2 வகையாகப் பார்க்க வேண்டும். இன்று நீங்கள் என்ன சொல்கிறீர்கள்; சொந்த உற்பத்தி செய்து நம்மால் நிறைவு செய்ய முடியாது என்பதை ஒத்துக்கொள்கிறீர்கள். ஆனால், நம்மால் நீண்ட காலத்திற்குக் கொள்முதல் செய்கின்றபோது, மின் வாரியம் தொடர்ந்து இழப்பைச் சந்திக்கக்கூடிய சூழலை உருவாக்கிவிடும். ஆகையால் ஏற்கெனவே கடந்த ஆட்சியில் 1 இலட்சத்து 60 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு மின் வாரியத்தினுடைய இழப்பு இருக்கக்கூடிய சூழலில் மின் வாரியத்தினுடைய இழப்பை நாம் குறைத்திட வேண்டும் என்று சொன்னால், நீண்ட காலத்திற்கு மின் கொள்முதலை மிக அவசரம், அவசியம் மட்டும் கருதி—குறுகிய காலத்திற்கான ஒப்பந்தங்கள் தற்போது ஏற்படுத்தப்படுகின்றன–– நீண்ட கால கொள்முதல் என்பதற்குப் பதிலாக நாமே நம்முடைய உற்பத்தியை அதிகரித்து, அதற்காகத்தான் 6 ஆயிரம் மெகா வாட் அளவிற்கு solar energy உற்பத்தி, அதேபோல் 4 ஆயிரத்து 620 மெகா வாட் அளவிற்கு thermal energy மற்றும் புனல் மின் உற்பத்தி. 14 ஆயிரத்து 500 மெகா வாட் அளவிற்கு hydropower உற்பத்தி உள்ளிட்ட திட்டங்களெல்லாம் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்திலே மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

எனவே, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய பொற்காலத்தில் அறிவிக்கப்பட்ட திட்டங்களெல்லாம் உரிய காலத்தில் முடிக்கப்படாத காரணத்தினால் இந்த நிலை ஏற்பட்டது. நான் ஒன்றே ஒன்றை மட்டும் கேட்கிறேன். உங்களுடைய ஆட்சியில் அனல் மின் நிலையங்களில் உற்பத்தியைத் தொடங்கி எவ்வளவு மெகா வாட் உற்பத்தித் திறனை நீங்கள் கட்டமைப்பில் இணைத்தீர்கள்? சொல்லுங்கள் பார்ப்போம்.

பிற்பகல் 4–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் உரையை முடித்துவிடுங்கள், நேரமில்லை.

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தேதிவாரியாகச் சொல்லிவிட்டேன். எங்களுடைய ஆட்சியில் எவ்வளவு மின் உற்பத்தி செய்யப்பட்டு, இணைக்கப்பட்டது என்பதைச் சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதற்குப் பதில் சொல்வதற்கு எனக்கு வாய்ப்பினை வழங்க வேண்டும். மின் கொள்முதலைப் பற்றி . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கேள்வி கேட்டு, பதில் சொல்லியாகிவிட்டது. உங்கள் நேரம் முடிந்தது. அவ்வளவுதான்.

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: நான் சொல்கிறேன். நான் பதில் சொல்ல வேண்டுமல்லவா!

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்காக நீங்கள் debate எல்லாம் பேச முடியாது. நீங்கள் அடுத்த subject–க்கு வாருங்கள். நீங்கள் ஒரு கேள்வி கேட்டீர்கள், அதற்குப் பதில் சொல்லியாகிவிட்டது.

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: Subject–ல்தான் பேசுகிறேன். **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கொஞ்சம் உட்காருங்கள், சொல்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள் நான் சொல்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள், சொல்கிறேன். (குறுக்கீடு) அதாவது, ** உரையை முடியுங்கள். நான் பேசியது அனைத்தையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் தேவையில்லை. நீங்கள் என்னை சொன்னதால்தான் நான் சொல்கிறேன். நான் இப்படி நூறு சொல்வேன். எனக்குத் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2023 ஏப்ரல் 12]

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதற்கெல்லாம் நான் கேட்கவில்லை. என்னைச் சொன்னால் நான் பதில் சொல்வேன். (குறுக்கீடு) ** என்று நீங்கள் சொன்ன வார்த்தைக்குத்தான் நான் பதில் சொல்லியிருக்கிறேன். இன்னும் கேளுங்கள், நூறு விஷயங்களை என்னால் சொல்ல முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் அது பேச்சு அல்ல. உங்களுக்குத் தெரிந்ததை, நீங்கள் செய்த சாதனைகளைச் சொல்லுங்கள்.* Advise *செய்யுங்கள். இப்படிச் செய்யுங்கள் என்று சொல்லுங்கள். இந்தத் திட்டம் நீங்கள் போட்டதால்* loss *இருக்கிறது. அதனால் இதை செய்யாதீர்கள் என்று ஆலோசனை சொல்லுங்கள். அனைத்து மூத்த உறுப்பினர்களும் அப்படித்தான் பேசுகிறார்கள். தயவுசெய்து அப்படிப் பேசுங்கள்.*

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *நல்ல ஆலோசனை. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) கொஞ்சம் கேளுங்கள். இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உரையை சீக்கிரம் முடியுங்கள்.*

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மின் உற்பத்திக்கு, மின் விலை என்பது, எந்த மூலப் பொருள் பயன்படுத்தி உற்பத்தி செய்கிறோமோ அதற்குத் தகுந்த விலைதான் அமையும். உதாரணத்திற்கு* thermal*-ல். . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்கார்ந்து கொண்டு பேசாதீர்கள்.*

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *நிலக்கரியில் தயார் செய்கின்ற மின்சாரத்திற்குக் கூடுதல் விலை இருக்கும். நீர் மின் நிலையத்தில் உற்பத்தி செய்கின்ற மின்சாரத்திற்கு விலை குறைவாக இருக்கும். சோலார் மின்சாரம் விலை குறைவாக இருக்கும். இப்படி மூலப்பொருளுக்குத் தகுந்தபடிதான் விலை அமையும். ஆக, அந்த அளவிலே இன்றைக்கு மின் வெட்டுப் பிரச்சினை இல்லாத சூழ்நிலை இருக்கின்றதால் இப்போது எந்த*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

நேரத்தில் வேண்டுமானாலும் வாங்குவோர் கை ஓங்கியிருக்கிறது. இப்போது எந்த நேரத்தில் வேண்டுமானாலும், எவ்வளவு வேண்டுமானாலும் விலை குறையும். அன்றைக்குப் பற்றாக்குறை இருக்கின்றபோது எல்லா மாநிலங்களும் இந்த விலையை மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அன்றைக்கு மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது நாம்தான் குறைவாக அங்கே கொள்முதல் செய்திருக்கின்றோம். (மணியடிக்கப்பெற்றது) இதேபோல, இன்றைக்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: அடுத்த subject பேச வேண்டும். தொழிலாளர் பிரச்சினையைப் பற்றி சொல்லிவிடுகிறேன். மின்சாரத் துறை தொழிலாளர் பிரச்சினை. மின்சாரத் துறையிலே தொழிலாளர் ஊதிய ஒப்பந்தம் இன்னும் இறுதி செய்யப்படவில்லை. தொழிலாளர்கள் அங்கே போராடிக் கொண்டிருக்கிறார்கள், வாதாடிக் கொண்டிருக்கிறார்கள். முத்தரப்பு ஒப்பந்தத்தை இறுதிசெய்து தொழிலாளர்கள் பிரச்சினையை முடித்து, விரைவில் அவர்களுக்கு உரிய பரிகாரமாக அவர்களது கோரிக்கைகளை நிறைவேற்றிட வேண்டும்.

மின் துறையிலே ஏறத்தாழ 58 ஆயிரம் பணியாளர்கள் பற்றாக்குறை இருக்கிறது. அந்த 58 ஆயிரம் பணியாளர்களை நிரப்புவதற்கு வழிவகை செய்ய வேண்டும். அதேபோல, outsourcing முறையை எங்களுடைய ஆட்சியில் கொண்டு வந்ததாக நீங்களும் சொல்லலாம்; அமைச்சர் அவர்களும் சொல்லலாம். Outsourcing முறையைக் கொண்டு வந்ததை தொழிலாளர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால், அன்றைக்குக் கழக ஆட்சியிலேயே அது திரும்பப் பெறப்பட்டுவிட்டது. ஆக, outsourcing முறையை இன்றைக்கும் இப்போதும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், 37 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: அதனால், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொல்கிறேன். தயவுசெய்து outsourcing முறை வேண்டாம். அதைத் தனியார்மயப்படுத்துகின்ற ஒரு மறைமுக முயற்சியாகத் தொழிலாளர்கள் கருதுகின்றார்கள். ஆகவே, outsourcing முறை வேண்டாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 12] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

அதேபோல, மின் பணியாளர்கள் பற்றாக்குறை இருக்கிறது. பணியாளர்கள் பற்றாக்குறையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிவர்த்தி செய்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, TASMAC. TASMAC-ஐப் பற்றி 5 நிமிடங்கள் பேசி முடித்துவிடுகிறேன். ஒன்றே ஒன்று.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.

பிற்பகல் 4–45

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மின்சாரக் கட்டணத்தைப் பொறுத்தவரையில், எந்த sector மக்கள், எந்தெந்தப் பகுதிகளில் உள்ள மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று பார்த்து இன்றைக்கு, fixed load factor-ஐ சற்று குறைத்திருக்கிறீர்கள். அதாவது, ரூ.100/–லிருந்து ரூ.75/– ஆகக் குறைத்திருக்கிறீர்கள். எனவே, எந்தெந்தப் பகுதி மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைக் கண்டறிந்து, அதை மறுஆய்வு செய்து, மின்சாரக் கட்டணத்தில் ஏதாவது மாற்றம் செய்து, சற்று குறைக்க வேண்டுமென்று உங்களை நான் அன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அதனால் மக்கள் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள். பாதிக்கப்படுகின்ற அந்த sector மக்களுக்கு குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி, நன்றி.

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: இதே நிலைமை நீடித்தால், தொழில்களெல்லாம் தமிழ்நாட்டிற்கு வராது; வேறு மாநிலங்களுக்குச் சென்றுவிடக்கூடிய ஆபத்து இருக்கிறது. ஆகவே, தொழிற்கூடங்களுக்கு உயர்த்தியிருக்கின்ற இந்த மின் கட்டணத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று உங்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மற்ற மாநிலங்களில் இருக்கின்ற மின் கட்டணங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அதைவிட சற்று குறைவாக இருந்தால்தான் நம்முடைய மாநிலத்தில் தொழில் செய்ய முன்வருவார்கள் என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், ஆலோசனையைக் கேட்டீர்கள், அதையும் நான் சொல்கிறேன். மின் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று உங்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

டாஸ்மாக்கை பொறுத்தளவிலே, இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், போதும். (குறுக்கீடுகள்) இன்னோர் உறுப்பினர் பேசவிருக்கிறார். அவர் பேசுவார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர், இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.*

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: டாஸ்மாக்கில் வருவாய் கூடிக்கொண்டிருக்கிறது. டாஸ்மாக்கில் வருகின்ற வருவாயை வைத்துக்கொண்டு அரசினுடைய அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்கிற முயற்சியைக் கைவிட்டு, வேறு மாற்று வருவாய்க்கும் அரசு முயற்சிக்க வேண்டும். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அதாவது, வருவாய் விலையேற்றத்தினால் கூடியிருக்கிறது என்றும் revenue growth கூடியிருக்கிறது என்றும் சொன்னார். நான் கேட்பதெல்லாம், அந்த revenue growth கூடியிருக்கிறது; ஆனால், physical growth கூடவே இல்லையா? கூடவே இல்லையா? இந்தக் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் ஆண்டுகளைக் குறிப்பிட்டு நீங்கள் வருவாயைச் சொல்கிறீர்களே தவிர, அதற்கு physical growth எவ்வளவு? மது பாட்டில்கள் விற்பனை செய்யப்பட்ட அளவு எவ்வளவு? அந்த physical growth என்று சொன்னால், விற்பனை அளவு. தமிழகத்திலே மது விற்பனை அளவு கூடுகிறதா அல்லது குறைகிறதா என்பதை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், போதும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் சரியாக அரை மணி நேரம் பேசிவிட்டீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, போதும். (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் முடித்துவிட்ட பின்னர் நான் உங்களை அழைக்கிறேன். (குறுக்கீடு) நன்றி சொல்லுங்கள். (குறுக்கீடு) ஒரே நிமிடத்தில் முடியுங்கள். (குறுக்கீடு) சரி, ஒரே நிமிடத்தில் உரையை முடியுங்கள்.*

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: ஒரே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். மது விற்பனையில் வரும் வருவாய் முழுவதும் முழுமையாக அரசு கஜானாவிற்கு வந்தால், இன்னும் தமிழகத்தினுடைய நிதிப் பற்றாக்குறை மிக அதிகளவில்

2023 ஏப்ரல் 12] [*திரு. நத்தம் ஆர். விசுவநாதன்*]

குறைவதற்கு வாய்ப்பிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சேதாரங்களை ஒருங்கிணைத்து, அனைத்தும் அரசு கஜானாவிற்கு வருவதற்குரிய வழிமுறைகளை நீங்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நன்றி, நன்றி. (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பேச வேண்டும் என்கிறார். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை, நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடு) இல்லை, போதும். (குறுக்கீடு) உங்களை 31 நிமிடங்கள் பேச அனுமதித்திருக்கிறேன். (குறுக்கீடுகள்)*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வபெருந்தகை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் நன்றி சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நன்றி சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் வேறு சப்ஜெக்ட் குறித்து பேசாமல், நன்றி மட்டும் சொல்லி முடியுங்கள்.*

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அரசுக்கு நல்ல ஆலோசனையைத்தான் சொல்லியிருக்கிறேன். அரசு கஜானாவிற்கு வராமல், வெளியிலே செல்கின்ற அந்த வருவாயை அரசு கஜானாவிற்கு வருவதற்கான வழிமுறையை நான் உங்களிடம் கேட்டால். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லுங்கள் என்று சொன்னால், இதுதான் நன்றியா என்று பாருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வபெருந்தகை, நீங்கள் என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். போதும். (குறுக்கீடு) நீங்கள் 32 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். போதும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், போதும். (குறுக்கீடு)*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது,*

கூடங்குளம் அணு மின் நிலையம் அம்மா அவர்களுடைய காலத்தில் கொண்டுவரப்பட்டது என்று இங்கே குறிப்பிட்டார்கள். (குறுக்கீடுகள்)

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

கூடங்குளம் அணு மின் நிலையம் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருக்கும்போதுதான் அந்தத் திட்டத்தை இங்கே கொண்டுவந்தார்கள். (குறுக்கீடுகள்) டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் பிரதமராக இருக்கும்போது, ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் இருக்கும்போதுதான் அந்தக் கூடங்குளம் அணு மின் நிலையம் தமிழகத்திற்குக் கொடுக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி. (குறுக்கீடுகள்) மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) கூடங்குளம் அணு மின் நிலையம் வந்தது காங்கிரஸ் ஆட்சியில்தான் என்று நீங்கள் சொல்கிறீர்கள். நன்றி. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, அவர் சொல்லிவிட்டார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. நத்தம் விசுவநாதன், எங்களுடைய முதல்வர் அவர்களால் கொண்டுவரப்பட்டது என்று சொன்னார். (குறுக்கீடுகள்) இல்லை, எங்களுடைய பிரதமர் கொண்டுவந்தார் என்று திரு. செல்வபெருந்தகை அவர்கள் சொன்னார்கள். அதில் ஒன்றும் தவறில்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. நத்தம் விசுவநாதன், ஒரே வரியில் முடியுங்கள். உங்களை நன்றி சொல்லச் சொன்னால் பேசிக் கொண்டே இருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நன்றி சொல்லி முடியுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. நத்தம் விசுவநாதன், சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. நத்தம் விசுவநாதன் அவர்கள் ஏற்கெனவே இந்தத் துறையினுடைய அமைச்சராக இருந்தவர். நல்ல அனுபவசாலி; மிகவும் கெட்டிக்காரரும்கூட. ஆனால், அவர் அரசுக்கு ஆலோசனைகளைத்தான் சொல்கிறேன் என்று

சொன்னார். ஐயா, இந்த ஆலோசனைகளையெல்லாம் நீங்கள் செய்திருந்தால், இன்றைக்கு இதிலே குறையே வந்திருக்காதே! (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 4–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் சாதனையைச் சொல்லி, நாங்கள் இப்படிச் செய்தோம் என்று சொல்லி, நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் சாதனையை, நாங்கள் இப்படி செய்தோம் என்று, நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த வார்த்தைகள் அனைத்தையும் நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் உற்பத்தியைப் பற்றி இங்கே சுட்டிக்காட்டினார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, உறுப்பினர் திரு. நத்தம் ஆர். விசுவநாதன் இப்போது பேசிய அவ்வளவு வார்த்தைகளையும் நீக்கியாகிவிட்டது.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: வட சென்னை அனல் மின் நிலையம் 3–ன் நிலை என்னவென்றால், 26–10–2010 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பொற்கால ஆட்சியில் அறிவிக்கப்பட்ட மின் திட்டம். இந்தத் திட்டத்தின் பணிகள் முடிக்கப்பட்டு 2018–2019 ஆம் ஆண்டு மின் உற்பத்தியைத்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தொடங்கியிருக்க வேண்டும். ஆனால், இவர்கள் ஆட்சியை விட்டு செல்கின்றபோது முடிந்த பணிகள் 82 சதவிகிதம். இரண்டு ஆண்டுக்காலத்தில், மிக விரைவாகப் பணிகளை முடிப்பதற்காக விரைவுபடுத்தப்பட்டு இப்போது 94 சதவிகிதம் பணிகள் நிறைவு பெற்றிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) வருகின்ற ஜூன் மாதம் பணிகள் முழுவதும் முடிக்கப்பட்டு மின் உற்பத்தி தொடங்கப்படவிருக்கின்றன.

அதேபோல், எண்ணூர் SEZ மின் திட்டத்தைப் பொறுத்தவரையில், 1320 மெகா வாட். இது அறிவிக்கப்பட்டது 2010 ஆம் ஆண்டு. 11-8-2010 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பொற்கால ஆட்சியில் அறிவிக்கப்பட்ட திட்டம். இதை முடித்து, பயன்பாட்டிற்கு வந்திருக்க வேண்டிய ஆண்டு 2019 ஆம் ஆண்டு. ஆனால், அவர்கள் வெறும் 50 சதவிகித பணிகளை மட்டுமே நிறைவு செய்திருந்தார்கள். இப்போது அந்தப் பணிகளை விரைவுபடுத்தி 64 விழுக்காடு பணிகள் முடிந்திருக்கின்றன. விரைவாக அந்தப் பணிகளை முடித்து, 2024-2025 ஆம் ஆண்டுக்குள் உற்பத்தியைத் தொடங்குவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

அதேபோல், உடன்குடி மின் நிலையத்தைப் பொறுத்தவரை, 15-10-2007 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட மின் திட்டம். இதை முடித்து, 2020-2021 ஆம் ஆண்டில் உற்பத்தியைத் தொடங்கியிருக்க வேண்டும். ஆனால், அவர்கள் 45 விழுக்காடு பணிகளை மட்டுமே நிறைவு செய்திருந்தார்கள். இப்போது அந்தப் பணிகள் 74 விழுக்காடு நிறைவுபெற்றிருக்கின்றன. விரைவாக அந்தப் பணிகளை முடித்து 2024-2025 ஆம் ஆண்டுக்குள் உற்பத்தியைத் தொடங்குவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

அதேபோல், உப்பூர் தெர்மல் பிளாண்டைப் பொறுத்தவரையில் முடிக்கப்பட வேண்டிய பணிகள் 35 விழுக்காடு; அப்படியே நிறுத்திவிட்டார்கள். அதேபோல், குந்தா நீர் மின் உற்பத்தித் திட்டங்கள் 2007 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. அது உற்பத்தியைத் தொடங்க வேண்டிய ஆண்டு 2022-2023. வெறும் 10 விழுக்காடு பணிகள் மட்டுமே கடந்த ஆட்சியில் நிறைவு பெற்றிருந்தன. இப்போது 48 விழுக்காடு பணிகள் நிறைவுபெற்றிருக்கின்றன. அந்தத் திட்டப் பணிகளும் அக்டோபர், 2024 ஆம் ஆண்டில் முடித்து, உற்பத்தியைத் தொடங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கின்றார்கள். எனவே,

2023 ஏப்ரல் 12] [திரு. V. செந்தில்பாலாஜி]

2010 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பொற்கால ஆட்சியில் அறிவிக்கப்பட்ட திட்டங்களெல்லாம் பாதியளவிலேயே நிறுத்தப்பட்டதன் காரணமாக, இரண்டு ஆண்டுகளில் விரைவுபடுத்தப்பட்டு அந்தப் பணிகள் இப்போது நிறைவுபெறக்கூடிய சூழ்நிலையை உருவாக்கியிருக்கின்றோம். விரைவாக, குறிப்பிட்ட காலத்திற்குள் அந்தத் திட்டப் பணிகளை முடித்து, மின் உற்பத்தித் தொடங்கும் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், தொழிலாளர்கள் ஊதிய உயர்வு பற்றியும் இங்கே குறிப்பிட்டார்கள். தயவுசெய்து, ஒன்றே ஒன்றை மட்டும் நீங்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ளுங்கள். ஊதிய உயர்வு ஒப்பந்தம் எப்போது உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். 1–12–2019 ஆம் ஆண்டு. என்றைக்கு அது நடைமுறைக்கு வந்திருக்க வேண்டுமென்றால் 1–12–2019 அன்றே ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு அவர்களுக்கான ஊதியத்தை உயர்த்தி, அவர்களுக்கான சம்பளத்தைக் கொடுத்திருக்க வேண்டும். அப்போதெல்லாம் கொரோனா கிடையாது. ஆனால், 2019–ல் அதற்கான நடவடிக்கையையே எடுக்கவில்லை. என்ன செய்தீர்களென்றால், ஒரே ஒரு குழுவை மட்டும்தான் அமைத்தீர்கள். அதன் பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று இதுவரை 7 முறை தொழிற்சங்கப் பிரதிநிதிகளோடு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, இப்போது இறுதிக் கட்டத்தை எட்டியிருக்கிறது. மிக விரைவாக அவர்கள் விரும்பக்கூடிய வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த ஒப்பந்தங்களை ஏற்படுத்த வேண்டுமென்று துறைக்கு அறிவுறுத்தியிருக்கின்றார்கள். விரைவில் அதற்கான தீர்வுகளும் காணப்படும் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

அதேபோல், டாஸ்மாக் நிருவாகத்தைப் பற்றி இங்கே சுட்டிக்காட்டினார்கள். அதாவது உங்கள் ஆட்சியில் இருந்தபோது விலை உயர்த்தப்பட்ட பிறகு எவ்வளவு வருவாய் கூடியிருக்கிறது என்பதையும், அதேபோல் விற்பனை செய்யக்கூடிய பெட்டிகளின் எண்ணிக்கை, உங்கள் ஆட்சியில் 2018–2019, 2019–2020 ஆண்டுகளில் பெட்டிகளின் எண்ணிக்கை எவ்வளவு இருந்ததோ, அதிலிருந்து ஒரு சதவிகிதம், ஒன்றரை சதவிகிதம் மட்டுமே கூடுதலாக இருக்கின்றன. அதிலிருந்து குறைக்கவில்லை. எனவே, எந்த இடத்திலும் இழப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இல்லை. முழுவதுமாக இந்தத்

துறைக்கு, டாஸ்மாக் நிறுவனத்திற்குத்தான் அந்த வருவாய் ஈட்டப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ் அவர்கள்.*

திரு. ஒய். பிரகாஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, நூற்றாண்டு நிறைவு விழா காணும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் ஓய்வெடுக்கும் திசை நோக்கி வணங்கி எனது உரையை ஆரம்பிக்கின்றேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, அது போதும். (குறுக்கீடு) வேறு நோக்கம் ஏதாவது இருந்தால் சொல்லுங்கள். 35 நிமிடங்கள் பேசவிட்டதற்குப் பிறகு பிரச்சினை செய்யக் கூடாது. (குறுக்கீடு) நீங்கள் நன்றி சொல்ல முடியாது. அடுத்த உறுப்பினர் பேச ஆரம்பித்துவிட்டார். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களும் பதில் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) இனிமேல் உங்கள் கையில் ஒன்றுமில்லை. அவர் பேசியதில் ஏதாவது குறை இருந்தால் சொல்லுங்கள். நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

பிற்பகல் 4–55

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் உறுப்பினர் எதிர்க்கட்சியில் இருக்கின்றபோது குற்றச்சாட்டு சொல்லி, வேகமாகப் பேசுவார். அதற்குப் பதில் சொல்லவேண்டியது மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கடமை. அவர் பேசிவிட்டார்; அதுவும்* record *ஆகிவிட்டது. அதற்குப் பதில் சொல்லிவிட்டார்; அதுவும்* record *ஆகிவிட்டது. மறுபடியும், மறுபடியும் பேசிக்கொண்டிருந்தால், உங்கள் இரண்டு பேருக்குத்தான்* debate *நடக்கும். நாங்கள் உட்கார்ந்துகொண்டிருக்க வேண்டும். ஆகையினால், (குறுக்கீடு) இல்லை, இல்லை. நான் முதலிலே சொன்னேனே, அவர் கெட்டிக்காரர், எதைப் பேசினாலும், நம்புகின்ற மாதிரியே பேசுவார் விசுவநாதன். ஆகையினால், இன்னொரு நாளைக்கு வைத்துக் கொள்ளலாம்.*

2023 ஏப்ரல் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ் அவர்கள். (குறுக்கீடு) போதும், இதற்குமேல் இனிமேல் தேவையில்லை. நீங்கள் ஏதாவது பேசுவதாக இருந்தால் பேசுங்கள். உறுப்பினர் பேசி முடித்துவிட்டார். (குறுக்கீடு)*

திரு. ஒய். பிரகாஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் 2023–2024 ஆம் ஆண்டுக்கான, (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்களுக்கு ஏதாவது கருத்து இருந்தால் பேசுங்கள். சொல்லுங்கள்.*

திரு. ஒய். பிரகாஷ்: *எரிசக்தித் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள்.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணன் நத்தம் விசுவநாதன் அவர்கள் மூத்த உறுப்பினர், ஐந்து முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர். அவை முன்னவர் சொன்னதுபோல, இரண்டு முறை அமைச்சராக இருந்தவர். அவர் பேசும்போது, நீங்களும் கோபப்பட்டீர்கள். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் கோபப்படவில்லை.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *உங்களை அவர் அப்படித் தவறாக பேசமாட்டார். அது அவருடைய இயல்பு, இங்கு இருக்கும் முன்னாள் அமைச்சர்களுக்குத் தெரியும். அவருக்கு வித்தியாசமான ஓர் இயல்பு உண்டு, எல்லோருக்கும் மரியாதை தருவார். அவர் நிறைய* subject*-ல் பேசினார். அவர் பேசியதற்கு எல்லாம் மாண்புமிகு அமைச்சர் தெளிவாகப் பதில் சொல்லிவிட்டார். பதில் சொல்வதற்கும்* ready *ஆக இருக்கிறார்கள். ஆகவே, எதிர்க்கட்சிகளை நீங்கள் குற்றமே சொல்லக் கூடாது; நீங்களே அதிகமாகப் பேசி எல்லாவற்றையும் முடித்து விடுகிறீர்கள், அது எப்படிச் சரியாக இருக்கும்?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. நான் அதிகம் பேசவில்லை.*

திரு. எஸ்.பி. வேலுமணி: இல்லை, இல்லை. நாங்கள்கூட இரண்டு நாளைக்கு முன்புகூட, உணவுத் துறையில் பிரச்சினையைப் பற்றி பேசும்போது, எங்களுக்கு வாய்ப்புக் கொடுங்கள் என்றுதான் கேட்கிறோம். எதிர்க்கட்சி எந்தக் குற்றமும் சொல்லக்கூடாது. எதுவுமே பேசக் கூடாது என்றால் எப்படிப் பேச முடியும். எதிர்க்கட்சி குற்றம் சொல்லித்தான் பேச முடியும். நீங்கள், இதற்கு முன்னால் இவர்கள் பேசியதையெல்லாம் எடுத்துப் பாருங்கள். ஆகவே, அவருக்குத் திரும்பவும் வாய்ப்புக் கொடுங்கள். அவர் முடிக்கவில்லை. கடைசியில் ஐந்து நிமிடங்கள் வாய்ப்புக் கொடுத்து முடியுங்கள். ஐந்து நிமிடங்கள் கண்டிப்பாக வாய்ப்புக் கொடுத்து முடியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: இல்லை, எதிர்க்கட்சிகளுக்கு வாய்ப்புக் கொடுக்கக் கூடாது என்று யாரும் சொல்ல மாட்டோம். நாங்களும் எதிர்க்கட்சியில் இருந்தோம். எதிர்க்கட்சிகள் என்றால், குற்றம், குறை சொல்வதற்காகத்தான் வருகிறார்கள். அண்ணா அவர்கள் சொன்ன மாதிரி லாலி பாடுவதற்கு வரவில்லை. ஆகையினால் ஒன்றும் தப்பு இல்லை. ஆனால், என்ன விஷயம் என்று கேட்டீர்கள் என்றால், ஓர் உறுப்பினர் பேசி முடித்தவுடனே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்களை அழைத்து, பதில் சொல்லி முடித்துவிட்டார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இன்னோர் உறுப்பினரை அழைத்தவுடனே நீங்கள் விடவேண்டும். இன்று விசுவநாதன், அடுத்து முன்னாள் Minister உட்கார்ந்துகொண்டிருக்கிறார். திரு. தங்கமணி அவர்கள் (குறுக்கீடு) இல்லை, நீங்கள் பேசலாம். அவரும் ரொம்ப கெட்டிக்காரரர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ் அவர்கள்.

திரு. ஒய். பிரகாஷ்: இந்த மாமன்றத்தில் 2023–2024 ஆம் ஆண்டுக்கான எரிசக்தித் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆகிய மானியக் கோரிக்கைகளில் பேச எனக்கு வாய்ப்பினை வழங்கிய சமூக நீதி, சம நீதி, சுய மரியாதை, கூட்டாட்சி மற்றும் மொழி பாதுகாப்பு அடங்கிய திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் (மேசையைத்

தட்டும் ஒலி) கழகத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியினையும், வணக்கத்தினையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்கள் வருங்கால நம்பிக்கை நட்சத்திரம், மாநில இளைஞரணிச் செயலாளர், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணன் உதயநிதி அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்கள் மாவட்ட பொறுப்பு அமைச்சர், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர், அண்ணன் ராணிப்பேட்டை திரு. காந்தி அவர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், அரசுக் கொறடா அவர்களுக்கும், சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கும் மேலாக, ஓசூர் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் நன்றியினையும், வணக்கத்தையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றபிறகு, அவர்கள் கொண்டு வந்த பல திட்டங்கள், கொரோனா நிவாரண நிதியாக ரூபாய் நான்காயிரம், ஆவின் பால் லிட்டருக்கு 3 ரூபாய் குறைப்பு, வேளாண்மைக்குத் தனி Budget, உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின்கீழ் கொடுக்கப்பட்ட மனுக்களுக்குத் தீர்வு, மக்களைத் தேடி மருத்துவம், இல்லம் தேடி கல்வி, இன்னுயிர் காப்போம்; நம்மைக் காக்கும் 48, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 2 ஆயிரத்து, 756 கோடி ரூபாய் கடன் தள்ளுபடி, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிமூலம் கடன் உதவி, தலைவர் கலைஞர் வருமுன் காப்போம், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் மூலமாக வழங்கப்பட்ட நகைக் கடன் தள்ளுபடி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனவு திட்டமான நான் முதல்வன் என்ற அற்புதமான திட்டம், மகளிருக்கு நகரப் பேருந்துகளில் இலவசப் பேருந்து பயணம், அரசு பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை படித்து, உயர் கல்விக்குச் செல்லக்கூடிய மாணவிகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் உதவித் தொகை.

பிற்பகல் 5-00

1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்குக் காலை உணவுத் திட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) பொங்கல் பரிசாக ஆயிரம் ரூபாய், கரும்பு மற்றும் சர்க்கரை வழங்கும் திட்டம், பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம், பெருந்தலைவர் காமராஜர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டம், தலைவர் கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம் போன்ற நூற்றுக்கணக்கான திட்டங்களைக் கொண்டு வந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதனால்தான் இந்தியாவிலேயே number one *முதலமைச்சர் யாரென்று சொன்னால், அந்தப் பெருமை நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையே சாரும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே முதல்முறையாக விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கிய ஒரே தலைவர் என்ற பெருமை தமிழ்நாட்டின் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களைத்தான் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) எப்பொழுதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வருகிறதோ, அப்போதெல்லாம் விவசாயிகளுக்கு இலவச மின்சார இணைப்புகள் வழங்கப்படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற 22 மாதங்களில் 1 இலட்சத்து 50 ஆயிரம் இலவச விவசாய மின்சார இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

அவற்றில் குறிப்பாக, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சுமார் 11 ஆயிரத்து 576 மின் இணைப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதற்கும் மேலாக, என்னுடைய ஓசூர் சட்டமன்றத் தொகுதியில் சுமார் 2 ஆயிரத்து 570 இலவச மின் இணைப்புகள் விவசாயிகளுக்கு வழங்கி, சாதனை படைத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாவட்ட விவசாயிகளின் சார்பாகவும், ஓசூர் தொகுதி விவசாயிகளின் சார்பாகவும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 12] [திரு. ஒய். பிரகாஷ்]

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ரூ.8.19 கோடி திட்ட மதிப்பீட்டில் மொத்தம் 2 துணை மின் நிலையங்கள் 16 MVA திறன் மின்மாற்றிகளுடன் துவக்கப்பட்டு, பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. மேலும், ஏற்கெனவே பயன்பாட்டிலுள்ள 14 துணை மின் நிலையங்களில் ரூ.48.31 கோடி திட்ட மதிப்பீட்டில் கூடுதலாக 173 MVA திறன் மின்மாற்றிகள் அமைக்கப்பட்டு, பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள பகிர்மான மின்மாற்றியின் அதிக மின்பளுவைக் குறைக்க ரூ.111.47 இலட்சம் செலவில் கூடுதலாக 231 புதிய பகிர்மான மின்மாற்றிகள் அமைக்கப்பட்டு, பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் குறைந்த மின் அழுத்தக் குறைபாட்டை நீக்க ரூ.72.80 இலட்சம் செலவில் கூடுதலாகப் புதிய 150 பகிர்மான மின்மாற்றிகள் அமைக்கப்பட்டு, பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த மாமன்றத்தில் பதிவு செய்ய நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்துவரும் ஓசூர் சட்டமன்றத் தொகுதி, ஓசூர் மாநகராட்சி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருப்பது பாதாள சாக்கடைத் திட்டம். இந்தத் திட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, ரூ.574.93 கோடி ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது. அதேபோல், ஓசூர் சட்டமன்றத் தொகுதியில் அரசு விரைவுப் பேருந்து நிலையம் அமைக்க ரூ.30 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது. அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாகவும், என்னுடைய சார்பாகவும் மனமார்ந்த நன்றியினை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓசூர் ஊராட்சி ஒன்றியம், வருவாய்த் துறை–இனாம் நிலம் மீட்பு. கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் சட்டமன்றத் தொகுதி, ஓசூர் வட்டம், சென்னசந்திரம் ஊராட்சியைச் சேர்ந்த மாரசந்திரம், பைரசந்திரம், உளியாளம், சென்னசந்திரம், இளையசந்திரம் மற்றும் திம்மசந்திரம்

ஆகிய ஆறு இனாம் கிராமங்கள் இனாம் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் settlement செய்யப்படாமல் இன்றைய தேதி வரையில் நிலுவையில் உள்ளன. 1965 ஆம் ஆண்டிலேயே settlement பணிகள் தொடங்கப்பட்டு, உரிய காலத்தில் முடிவு பெற்றிருக்க வேண்டும். ஆனால், அரசின் நடவடிக்கைக்கு எதிராக இனாம்தாரர் தரப்பில் தீர்ப்பாயம், உயர் நீதிமன்றம் உச்ச நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டதன் காரணமாக இப்பணிகள் உரிய காலத்தில் நடைபெறவில்லை. தற்போது நமது அரசு பொறுப்பேற்றவுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 14–7–2022 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டு, ஓராண்டிற்குள் இந்த settlement பணிகளை முடிப்பதற்கு அரசு அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, தற்போது இப்பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

பிற்பகல் 5–05

சென்னசந்திரம் ஊராட்சியில் உள்ள 6 கிராமங்களின் மூலமாக சுமார் 2 ஆயிரத்து 482 ஏக்கர் இனாம் நிலங்கள் உள்ளன. அதில் 600 ஏக்கர் நிலம் கெலவரப்பள்ளி அணைக் கட்டும்போது நீர்த்தேக்கத்திற்காக அரசினால் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள சுமார் 1,800 ஏக்கர் நிலம் பொதுமக்கள் மற்றும் விவசாயிகளிடம் உள்ளது. கடந்த 16–8–2022 முதல் 13–1–2023 வரையில், பொதுமக்கள் மற்றும் விவசாயிகளிடமிருந்து 1,739 மனுக்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களால் பெறப்பட்டு, விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. நில அளவீட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. எனவே, சுமார் 30 முதல் 40 ஆண்டுகளுக்கு மேலாக விவசாயம் செய்யக்கூடிய விவசாயிகளுக்குப் பட்டா வேண்டுமென்றும், மீதமுள்ள நிலங்களை அரசுடைமையாக்க வேண்டுமென்றும் இந்த நேரத்தில் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டத்தில் குடிநீர்ப் பிரச்சினை அதிகமாக இருக்கக்கூடிய காரணத்தினால், தென்பெண்ணையாற்றிலிருந்து வெளியேறும் உபரி நீரைக் கொடியாளம் தடுப்பணையிலிருந்து 68 உயர் மட்ட ஏரிகளுக்கு நீரேற்று முறையில் நீர் கொண்டு செல்லும் திட்டத்தைச் செயல்படுத்தினால், நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து, குடிநீர்ப் பிரச்சினை குறையும். அப்பகுதியிலுள்ள சுமார் 10 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலம் பாசனம் பெறும்; விவசாயிகளின் வாழ்வாதாரமும் உயரும். எனவே, இத்திட்டத்தினை நிறைவேற்றித்

2023 ஏப்ரல் 12] [திரு. ஒய். பிரகாஷ்]

தருமாறு ஓசூர் பகுதி விவசாயிகள் பல ஆண்டுக்காலமாக போராட்டங்களும், ஆர்ப்பாட்டங்களும் செய்து வருகின்றனர். கடந்த 2021 ஆம் ஆண்டின் தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது. 2021–2022 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அப்பணிக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களையும் இந்தத் திட்டத்தினை விரைந்து செயல்படுத்தித் தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஓசூர் சட்டமன்றத் தொகுதி, ஓசூர் மாநகராட்சியில் 2 பெரிய ஏரிகள் உள்ளன. 1. ராமநாயக்கன் ஏரி, 2. சந்திராம்பிகை ஏரி, தர்கா ஏரி. இந்த 2 ஏரிகளும் மாநகராட்சியின் மையப் பகுதியில் உள்ளன. மழைக் காலங்களில் ராமநாயக்கன் ஏரி நிரம்பி, சந்திராம்பிகை ஏரியை வந்தடையும். சந்திராம்பிகை ஏரியிலிருந்து கிருஷ்ணா நகர், கோபி கார்டன், குறிஞ்சி நகர் மற்றும் KCC நகர் பகுதிகள் வழியாக தென்பெண்ணையாற்றுக்குச் சென்றடைகிறது. இது சந்திராம்பிகை ஏரியிலிருந்து மாநகராட்சி குடியிருப்புப் பகுதிகளுக்குள் சுமார் 3.30 கி.மீ. தூரத்திற்குக் கால்வாய் வழியாகச் செல்கிறது. இந்தக் கால்வாய் இதுவரை தூர்வாரப்படாமலும், தடுப்புச் சுவர் கட்டப்படாமலும் உள்ளதால், கனமழை பெய்யும்போது உபரிநீர் இந்தக் குடியிருப்புகளுக்குள் புகுந்து மிகுந்த சேதம் ஏற்படுகிறது. கடந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொலைக்காட்சியில் பார்த்து, என்னிடம் தொலைபேசியில் தொடர்புகொண்டு சேத நிலவரங்களைக் கேட்டறிந்தார்கள். பாதிக்கப்பட்ட மக்களைப் பாதுகாப்பான இடங்களில் தங்கவைத்து, அடிப்படை வசதிகளைச் செய்து தரும்படி ஆணையிட்டார்கள்.

சந்திராம்பிகை ஏரியும், கால்வாயும் நீர்வளத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன. 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' திட்டத்தின்கீழ் ரூ.43 கோடி மதிப்பில் சுமார் 3.30 கி.மீ. தூரத்திற்கு இருபுறமும் நிரந்தர தடுப்புச் சுவர் அமைக்க திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, இப்பணியினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களும் நிறைவேற்றித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

வளர்ந்துவரும் ஓசூர் மாநகராட்சியில் குடிநீர்ப் பிரச்சினை அதிகமாக இருக்கிறது. ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து சுமார் 6.5 MLD குடிநீர் வந்துகொண்டிருந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு அது 10 MLD ஆக வந்துகொண்டிருக்கிறது. ஓசூர் மாநகராட்சி மக்களுக்கு ஒரு நாளைக்கு தேவைப்படும் குடிநீர் சுமார் 27 MLD ஆக உள்ளது. அங்குள்ள ஆழ்துளைக் கிணறு மற்றும் தனியாருடன் இணைந்து மீதமுள்ள சுமார் 17 MLD குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேகமாக வளர்ந்துவரும் ஓசூர் மாநகராட்சியில் தற்போதுள்ள மக்கள் தொகைக்கேற்ப. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முடியுங்கள், முடியுங்கள்.

திரு. ஒய். பிரகாஷ்: குடிநீர் தேவையின் அளவு சுமார் 50 MLD ஆக உள்ளது. இதனைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களும் 50 MLD குடிநீர் ஓசூர் மாநகரத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓசூரில் metro rail திட்டம். கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் metro rail. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் 14 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. ஒய். பிரகாஷ்: Metro rail சேவை தொடங்கப்படும் என்று பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல் வேகமாக வளர்ந்து வரும் ஓசூருக்கு metro rail சேவை வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே, கர்நாடக மாநிலம் பெங்களூரு முதல் Electronic City வரை metro rail சேவை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதிகமான தொழிற்சாலைகள் உள்ள காரணத்தினால், அந்தச் சேவையை நீட்டிப்பு செய்து கர்நாடக எல்லை முதல் ஓசூர் வழியாக சூளகிரி வரை சுமார் 30 கி.மீ. தூரத்திற்கு metro rail சேவையை வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.*

திரு. ஒய். பிரகாஷ்: *ஓசூரில் விமான சேவை. கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில்* UDAN *திட்டத்தின்கீழ் விமான சேவை தொடங்கப்படும் என்று ஒன்றிய அரசு கடந்த காலத்தில் அறிவித்தது. கடந்த ஆட்சியில் சட்டமன்றக் கூட்டத்தொடரில் கேள்வி நேரம் மற்றும் மானியக் கோரிக்கைகளில் பல முறை பேசியும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதவியேற்ற பிறகு ஓசூரில் விமான சேவை தொடங்கப்படுவதற்கு பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், திடீரென ஒன்றிய அரசு, ஓசூரில் விமான சேவை தொடங்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்று பாராளுமன்றத்தில் அறிவித்தது. சுமார் 3 ஆயிரம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகள் உள்ள இந்த மாநகரத்திற்கு விமான சேவை தேவை. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், துறை சார்ந்த அமைச்சர் அவர்களும் மத்திய அரசிடம் வலியுறுத்தி விமான சேவையைத் தொடங்குவதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.*

ஓசூரில் சுற்றுலா மாளிகை. தினந்தோறும் ஆயிரக்கணக்கான தொழிலதிபர்கள், அரசு உயர் அதிகாரிகள் ஓசூருக்கு வந்து செல்கின்றனர். அவர்கள் தங்குவதற்கு அரசு சார்பில் தங்கும் விடுதி இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் ஏற்கெனவே கோரிக்கை மனு கொடுத்துள்ளேன். கண்டிப்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே ஓசூரில் சுற்றுலா மாளிகை கட்டித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி சொல்லி முடியுங்கள். நன்றி சொல்லி முடியுங்கள். போதும். போதும் நேரமில்லை. நாளைக்கு காலையிலும்* Assembly *இருக்கிறது.*

திரு. ஒய். பிரகாஷ்: *மீதியுள்ள என்னுடைய தொகுதி கோரிக்கைகளையெல்லாம் நான் இந்த மாமன்றத்தில் பேசியதாகப் பதிவேட்டில் பதிவு செய்துகொண்டு, வளர்ந்துவரும் ஓசூரில் அனைத்து அமைச்சர்களும் அந்தந்தப் பணிகளைச் செய்து தரவேண்டுமென்று கேட்டு, இந்த அளவிற்கு எனக்கு வாய்ப்பினை*

வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து, நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

ஓசூர் மாநகராட்சி பகுதியிலும், ஓசூர் ஊராட்சி ஒன்றியத்திலும் பட்டா இல்லாமல் வசிக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும். ஓசூரில் தொழிலாளர்களின் நலனிற்காக ஓசூர் சுற்றுவட்டாரப் பகுதியிலேயே வருங்கால வைப்புநிதி அலுவலகம் (PF Office) அமைக்க வேண்டும். ஓசூரில், ஓசூரை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு நவீன வசதிகளுடன்கூடிய புதிய வட்டாட்சியர் அலுவலகம் அமைக்க வேண்டும்.

ஓசூர் ஊராட்சி ஒன்றியம், பாகலூரில் 3 ஆயிரம் மெட்ரிக் டன் உருளைக்கிழங்கு சேமிப்புக் கிடங்கு மற்றும் சிப்பமிடும் கூடங்கள் அமைக்க வேண்டும். ஓசூர் ஒன்றியம், பாகலூரில், புதிதாக பேருந்து நிலையம் அமைக்க வேண்டும். ஓசூரில் ஒரு வர்த்தக மையம் ஏற்படுத்த வேண்டும்.

ஏராளமான வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தரும் இந்நகரில் பணிபுரியும் தொழிலாளர்கள் தங்குவதற்கு இளைஞர் விடுதிகளை அமைக்க வேண்டும். படித்த மற்றும் கிராமப்புற இளைஞர்கள் திறனை மேம்படுத்தும் விதமாக திறன் வளர்ப்பு பயிற்சி மையம் அமைக்க வேண்டும். குறைந்த செலவில் தொழிலாளர்கள் தங்குவதற்கு அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைக்க வேண்டும்.

குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களின் முழு உற்பத்தித் திறனுக்கு ஈடான விதத்தில் புதிய, பெரிய கார் உற்பத்தி நிறுவனங்கள், இருசக்கர வாகன உற்பத்தி நிறுவனங்கள், மருத்துவ உபகரண உற்பத்தி நிறுவனங்கள், பொதுத் துறை நிறுவனங்கள் போன்ற நிறுவனங்களை ஓசூரில் துவங்க வேண்டும்.

2006 முதல் 2011 வரையிலான காலத்தில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் ஓசூரில் தொடங்கப்பட்ட IT Park கடந்த ஆட்சிக் காலத்தில் மூடப்பட்டதால் Wipro, Infosys போன்ற பெரிய நிறுவனங்கள் வருவதற்கு ஏதுவாக மீண்டும் IT Park மேம்படுத்தப்பட வேண்டும்.

2023 ஏப்ரல் 12] [திரு. ஒய். பிரகாஷ்]

ஓசூரில் ஊடகம் மற்றும் பத்திரிகையாளர்களுக்குப் புதிதாக கட்டடம் அமைக்க வேண்டும். ஓசூர் மாநகராட்சியில் அதிகமாக கிறிஸ்துவர்கள் உள்ளதால், அவர்களில் யாரேனும் இறந்தால் அடக்கம் செய்வதற்கு ஓசூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் சிறுபான்மை மக்களுக்கு இடம் ஒதுக்கிக் கொடுக்க வேண்டும்.

ஓசூரில் மாநகராட்சிக்கு அருகில் ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் புதிதாக பத்திரப் பதிவு அலுவலகம் அமைக்க வேண்டும். ஓசூர் சார்–பதிவாளர் அலுவலகத்தை இரண்டாகப் பிரித்து பாகலூரில் அல்லது பேரிகையில் அமைத்துக் கொடுக்க வேண்டும்.

ஓசூர் சட்டமன்றத் தொகுதி, ஓசூர் ஊராட்சி ஒன்றியம், பாகலூர் ஊராட்சி மற்றும் பெலத்தூர் ஊராட்சிகளை இணைத்து பேரூராட்சியாகத் தரமுயர்த்த வேண்டும். வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதி, ராயக்கோட்டை ஊராட்சியை ராயக்கோட்டை பேரூராட்சியாகவும், சூளகிரி ஊராட்சியை சூளகிரி பேரூராட்சியாகவும் தரமுயர்த்த வேண்டும். தளி சட்டமன்றத் தொகுதி, தளி ஊராட்சி ஒன்றியம், அஞ்செட்டி ஊராட்சியை அஞ்செட்டி பேரூராட்சியாகத் தரமுயர்த்த வேண்டும்.

பாகலூர் முதல் பேரிகை வரையிலான இருவழிச் சாலையை நான்குவழிச் சாலையாக அகலப்படுத்த வேண்டும். மத்திகிரி கூட்டு ரோட்டில் உயர்மட்ட மேம்பாலம் அமைக்க வேண்டும். அந்திவாடி சோதனைச் சாவடியில் உயர்மட்ட மேம்பாலம் அமைக்க வேண்டும். ஓசூர் மாநகரம், பாகலூர் சாலை, GRT *முதல் நல்லூர் சோதனைச் சாவடி வரை மேம்பாலம் அமைக்க வேண்டும். சூளகிரி வட்டம், பேரிகையில் வெளிவட்டச் சாலை அமைக்க வேண்டும். ஓசூர் ஜுஜுவாடி முதல் நல்லூர் வழியாக பேரண்டப்பள்ளி வரை வெளிவட்டச் சாலை அமைக்க வேண்டும். அலசநத்தம் முதல் பேரிகை செல்லும் இருவழிச் சாலையை நான்குவழிச் சாலையாக அகலப்படுத்த வேண்டும்.*

ஓசூர் அசோக் லேலண்ட் பகுதி–1 மற்றும் சிப்காட் தொழிற்பேட்டை பகுதி–1 அமைந்துள்ள இடத்திலும், ESI *மருத்துவமனைப் பிரிவு சாலை, பத்தலப்பள்ளி மார்க்கெட் அருகிலும், பேரண்டப்பள்ளி–தொரப்பள்ளி பிரிவு சாலையிலும் மேம்பாலங்கள் கட்டப்பட வேண்டும். தர்கா முதல் ஓசூர் மாநகரம் சிப்காட்–*II *வரையுள்ள சர்வீஸ் ரோட்டை அகலப்படுத்த வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் த. இனிகோ இருதயராஜ் அவர்கள்.

*__முனைவர் த. இனிகோ இருதயராஜ்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நடக்குமா, வரவே முடியாது, கட்டம் சரியில்லை என்று சொன்னவர்கள் மத்தியிலே சொன்னவர்களுக்குத்தான் கட்டம் சரியில்லை என்ற நிலையை உருவாக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 2 வருடக் காலமாக, ஏழையெளிய மக்களுடைய வாழ்க்கையிலே, மாபெரும் ஒளிவிளக்காக இருக்கின்ற தமிழ்நாட்டினுடைய தன்னிகரில்லாத் தலைவர் தமிழ்நாட்டினுடைய உரிமையைத் தினந்தோறும் மீட்டெடுத்துக் கொண்டிருக்கின்ற தலைவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அண்ணன் தளபதி அவர்களுக்கு முதல் வணக்கங்களையும், வாழ்த்துகளையும் சொல்லிக்கொள்கிறேன்.

பிற்பகல் 5–15

முதல் தடவையாக அமைச்சராகி, சட்டமன்றத்திலே மிகச் சிறப்பான மானியக் கோரிக்கை உரையை நிகழ்த்தி, விளையாட்டுத் துறை, பெண்கள் மேம்பாட்டுத் துறையிலே தனி முத்திரைப் பதித்து, சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையினுடைய அமைச்சர் மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் வணக்கங்களைச் சொல்லிக்கொள்கிறேன். சட்டமன்றத்திலும், அரசியலிலும், நீண்ட, நெடிய அனுபவம் கொண்ட அவையின் முன்னவர் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களுக்கும், குறிப்பாக, என்னுடைய மாவட்டச் செயலாளரும், பள்ளிக் கல்வித் துறையினுடைய அமைச்சருமான மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களுக்கும் மற்றும் சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய, திருச்சிராப்பள்ளி (கிழக்கு) தொகுதி மக்களுக்கும், அனைவருக்கும் பணிவான வணக்கங்களை நான் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

'சம்சாரம் அது மின்சாரம்' என்று ஒரு பாடல் வரி உள்ளது. ஒருவர் வாழ்நாளிலே சம்சாரம் இல்லாமல்கூட இருந்து விடலாம். ஆனால், மின்சாரம் இல்லாமல் இருந்துவிட முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தளவுக்கு மக்களோடு பின்னிப் பிணைந்த துறை; shock அடிக்கின்ற துறை; மிக முக்கியமான துறை மின்சாரத் துறை. அப்படிப்பட்ட மின்சாரத் துறையிலே இந்தியாவிலுள்ள பிற மாநிலங்கள் பாராட்டுகின்ற அளவிற்கு இவ்வளவு பெரிய சாதனையை நாம் இரண்டு ஆண்டுக்காலத்தில் சாதித்திருக்கிறோம் என்றால், அதற்கு அடித்தளமிட்டவர் யார்

என்று சொன்னால் அனைத்திற்கும் அந்த ஆண்டவரைத்தான் கைக்காட்ட வேண்டியுள்ளது. ஆம், முன்னால் நம்மை ஆண்டவரான முத்தமிழறிஞர் கலைஞர் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள்தான். இப்போது நம்மை ஆண்டு கொண்டிருக்கிற நமக்கான முதல்வர் அண்ணன் தளபதியார் அவர்கள்தான். அவர்கள் அமைத்துக் கொடுத்த அந்த அடித்தளம்தான் இன்று இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், தனி நபர் ஒருவருடைய மின் நுகர்வு என்பது 1593 யூனிட்டாக உள்ளது. ஒரு நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சி என்பது அந்த நாட்டிலுள்ள வளங்கள், அந்த நாட்டிலுள்ள தொழிற்சாலைகள், அந்த நாட்டினுடைய வர்த்தக சூழ்நிலைகளைப் பொறுத்தேதான் இருந்தாலும், அதற்கு உயிர் என்றால் அது மின்சாரம்தான். அப்படிப்பட்ட மின்சாரத்தை உற்பத்தி செய்வதும், அதை சரியான முறையில் மின் நுகர்வோருக்குக் கொண்டு சேர்ப்பதும்தான் இந்த மின்சாரத் துறையினுடைய சிறப்பான பணி.

தரவுகளை உற்றுநோக்கிப் பார்த்தோம் என்று சொன்னால் எப்பொழுதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் உள்ளதோ அப்போதெல்லாம் மின் உற்பத்திக்கான திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. 2006 ஆம் ஆண்டு எண்ணூர் அனல் மின் நிலைய இணைப்புத் திட்டம்; 2008 ஆம் ஆண்டு வட சென்னை அனல் மின் நிலையத்தில் 1200 மெகா வாட் மின் உற்பத்தித் திட்டம்; 2007–2009 வரை 8 ஆயிரம் கோடி மதிப்பில் 1500 மெகா வாட் மின்னிணைப்புத் திட்டம்; T.N.E.B.-ம் N.L.C.-ம் சேர்ந்து தூத்துக்குடியிலே 1000 மெகா வாட் மின் உற்பத்தித் திட்டம்; உடன்குடியில் B.H.E.L.-ம் T.N.E.B.-ம் சேர்ந்து 1200 மெகா வாட் மின் உற்பத்தித் திட்டம். இப்படி, தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட மின் உற்பத்தித் திட்டங்களின் காரணமாகத்தான், தமிழகத்திலே தொழிற்சாலைகளுடைய எண்ணிக்கை அதிகளவில் உருவாகி, இந்திய அளவிலே தமிழ்நாட்டினுடைய GDP 8.4 சதவிகிதம்—அதாவது, Gross Domestic Product என்று சொல்வார்கள்—8.4 சதவிகிதத்தைப் பெற்ற மாநிலம் தமிழ்நாடு என்ற கௌரவத்தைப் பெற்றிருப்பதற்குக் காரணம், மாண்புமிகு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் வகுத்த திட்டங்கள்தான்.

நான் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். இதற்கு முன்பிருந்த ஆட்சியாளர்கள் கோபித்துக்கொள்ளக் கூடாது. 2011 முதல் 2021 வரையிலான ஆண்டுகளிலே, கடந்த

[முனைவர் த. இனிகோ இருதயராஜ்] [2023 ஏப்ரல் 12

10 ஆண்டுகளில் TANGEDCO மிகப்பெரிய இழப்பை, மிக மோசமான நிர்வாகத்தினால் சந்தித்திருக்கிறது. 2011–2012–ல் தி.மு.க. ஆட்சி இறுதியில் வைத்துச் சென்ற கடன் தொகை 10 ஆயிரத்து 166 கோடி ரூபாயாகத்தான் இருந்தது. ஆனால், 2020–2021 ஆம் ஆண்டில் அ.தி.மு.க. ஆட்சியின் இறுதியில் 1 இலட்சத்து 59 ஆயிரத்து 823 கோடி ரூபாய் அளவுக்குக் கடனை வைத்து விட்டுச் சென்றிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, தனியார் மின் உற்பத்தி நிறுவனங்களுக்கு overdue ஆக இருந்த தொகை 16 ஆயிரத்து 917 கோடி ரூபாய். இந்தத் தொகையைக் கொடுக்காமல் இழுத்தடிக்கப்பட்ட காரணத்தினால், TANGEDCO நிறுவனமானது, வருவாய் இழப்பையும், கடன் சுமையையும் ஒரே நேரத்தில் சுமக்க வேண்டிய ** குறிப்பிட்டுச் சொல்லாமல், இந்த மானியக் கோரிக்கையை என்னால் கடந்து செல்ல முடியாது.

பிற்பகல் 5–20

இவ்வளவு கடன் இருந்தும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சீரிய மின்னல் வேக நிர்வாகத் திறமையினாலும், மின் துறை அமைச்சருடைய அயராத உழைப்பினாலும், தமிழ்நாடு மின்சார வாரியம் பல சாதனைகளைச் செய்து வருகிறது. குஜராத், மகாராஷ்டிரா மாநிலங்களையடுத்து இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் அதிகளவில் மின்சாரம் உற்பத்தி செய்கிறது. தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் இருந்தாலும், கடைக்கோடி மக்களுக்கும், கிராமங்களில் கடைசியில் உள்ள குடிசைக்கும் மின்சாரம் வழங்கியுள்ள மாநிலங்களில், தமிழ்நாடுதான் முதல் மாநிலம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். வேறு எந்த மாநிலத்திலும் இல்லை.

நமது குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு பிறந்து வளர்ந்த ஜார்கண்ட் மாநிலத்தில், அவர் ஜனாதிபதி ஆகிறவரை அவருடைய இல்லத்திற்கு மின்சார இணைப்பு இல்லை. அவருடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இல்லத்திலும் மின்சார இணைப்பு இல்லை. அவர் வேட்பாளர் என்று அறிவித்த பிறகுதான் மின்சார இணைப்பு கொடுப்பதற்கான வழித்தடமே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலை அங்கு இருந்தது. ஆனால், அதுபோன்ற நிலை இங்கு இல்லை.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2023 ஏப்ரல் 12] [முனைவர் த. இனிகோ இருதயராஜ்]
கடைக்கோடி விவசாயிக்கும் மின்சாரம் கொடுக்கின்ற ஓர் ஆட்சி. (மணியடிக்கப்பெற்றது) இப்போதுதான் உரையாற்ற ஆரம்பித்தேன். ஐந்து நிமிடங்கள் தாருங்கள்.

அதேபோல், நானும் விவசாயி, நானும் விவசாயி என சொல்லிக் கொண்டிருப்பவர்கள் மத்தியில் விவசாயிகளின் நலனில் உண்மையான அக்கறைக் கொண்டு, அவர்கள் படுகின்ற கஷ்டங்களைக் கவனத்தில் கொண்டு, எந்த மாநிலத்திலும், எந்த அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் உதிக்காத சிந்தனையாக, உலக நாடுகளே பாராட்டுகின்றவண்ணம், விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தைத் தந்து மகிழ்ந்தவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) "தாய் 8 அடி பாய்ந்தால், குட்டி 16 அடி பாயும்" என்று சொல்வார்கள். ஆட்சிப் பொறுப்பேற்ற ஒன்றரை ஆண்டுகளில், ஒன்றரை இலட்சம் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கியது நமது முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்களுடைய ஆட்சிதான். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு 2017–லிருந்து இலவச மின்சாரம் வழங்கப்படவில்லை. ஆனால், இதுவரை நிலுவையில் இருந்த அத்தனை விண்ணப்பங்களுக்கும் இலவச மின்சாரம் வழங்கப்பட்டுவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமில்லை, மின் கட்டணம் ஏறி விட்டது, ஏறி விட்டது என்று சொல்கிறார்கள். ஒன்றிய அரசின் நிர்ப்பந்தங்கள் காரணமாக மின் கட்டணத்தை ஏற்றினாலும், இந்தியாவில் உள்ள 15 மாநிலங்களைக் காட்டிலும், தமிழ்நாட்டில்தான் மின் கட்டணம் குறைவாக இருக்கிறது. தமிழ்நாட்டில் 100 யூனிட் மின்சாரம் இலவசம். 200 யூனிட் மின்சாரம் 225 ரூபாய். மற்ற மாநிலங்களில் பார்த்தீர்கள் என்றால் 100 யூனிட் மின்சாரம் 500 ரூபாய், (குறுக்கீடு) ஹரியானா, ராஜஸ்தான் மாநிலங்களில் 100 யூனிட் மின்சாரம் 935 ரூபாய். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்கார்ந்து கொண்டு பேசாதீர்கள். (குறுக்கீடு) என்னைப் பார்த்து பேசுங்கள்.*

முனைவர் த. இனிகோ இருதயராஜ்: *எவ்வளவு நிதி நெருக்கடி இருந்தாலும், நம் முதல்வர் அவர்கள், விவசாயிகளின் உழைப்பிற்கும், வியர்வைக்கும் அங்கீகாரம் அளித்து விவசாய பம்பு செட்டிற்கு மின்சாரத்தை இலவசமாக இன்றைக்கும் வழங்கி வருவதற்கு, நானும் ஒரு விவசாயி என்ற வகையில் நன்றிகளைத்*

தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2022-2023 ஆம் ஆண்டில் TANGEDCO-வின் புனல் மின்சார உற்பத்தியில், வரலாற்றில் இல்லாத அளவிற்கு, மத்திய மின்சார ஆணையத்தால் (CEA) நிர்ணயிக்கப்பட்ட அளவைவிட 2 ஆயிரத்து 261 million unit-ஐ தயாரித்து முதலிடம் பெற்றிருக்கிறது.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் நிறுவன வளத் திட்டமிடுதலை செயல்படுத்தியதற்காக சக்தி மற்றும் ஆற்றல் பிரிவின்கீழ், 2022-ல் SKOCH என்கின்ற தங்க விருதைப் பெற்றிருக்கிறது. இன்று யாராவது மின் இணைப்பு கேட்டால், உடனே மின் இணைப்பு கொடுக்கின்ற நிலை வேறு எந்த மாநிலத்திலும் இல்லை; திராவிட மாடல் ஆட்சியில்தான் இருக்கிறது.

நான் M.L.A. ஆனவுடன், கே.கே. நகர் Rail Vihar பகுதியில் transformer புதிதாக வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்தேன். அந்த இடத்திலிருந்தே தொலைபேசியில் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு phone செய்தேன். 10 ஆண்டுக்காலமாக கோரிக்கை வைத்திருந்தார்கள். பத்தே நாட்களில் transformer-ஐ நிறுவிக் காட்டியது மின்சாரத் துறை. (மேசையைத் தட்டும் ஒலி) WhatsApp group உருவாக்கியிருக்கிறார்கள். அதையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மின்னகம் பற்றி நான் சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேறு subject பற்றி பேசுவதாகச் சொன்னீர்கள்.

முனைவர் த. இனிகோ இருதயராஜ்: இதோ பேசுகிறேன். இரண்டு நிமிடங்களில் பேசிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், இதற்குமேல் என்றால் current shock ஆகும். என்னிடம் பேசுவதாகச் சொன்னதைப் பேசிவிடுங்கள்.

முனைவர் த. இனிகோ இருதயராஜ்: இதோ ஒரு suggestion மட்டும் சொல்லிவிடுகிறேன். Japan, Denmark, Sweden, Norway போன்ற நாடுகளெல்லாம் மின் உற்பத்தியிலும், மின் பகிர்மானத்திலும் தன்னிறைவு பெற்றிருக்கின்றன. (குறுக்கீடு) ஒன்று இரண்டு suggestions மட்டும் சொல்லி, உரையை முடித்துவிடுகிறேன்.

2023 ஏப்ரல் 12] [முனைவர் த. இனிகோ இருதயராஜ்]

Japan நாட்டை எடுத்துக்கொண்டால், அந்த நாட்டில் ஒவ்வொரு வீட்டிலேயும், அவர்களே மின் உற்பத்தி செய்து, அதை அரசாங்கத்திற்கு வழங்கி, அதன்மூலம் வருமானம் ஈட்டுபவர்களாகவும் இருக்கிறார்கள். அதேபோன்று, தமிழ்நாட்டிலும் ஒவ்வொரு குடும்பமும், சூரிய ஒளிமூலம் மின்சாரம் தயாரித்து அரசுக்கு வழங்குகின்ற ஒரு பங்குதாரர்களாக அவர்களை உருவாக்க வேண்டும்.

Denmark நாட்டை எடுத்துக்கொண்டீர்கள் என்றால், காற்றாலைமூலம் அதிக மின்சாரம் வழங்குகிற நாடாக இருக்கிறது. அந்த நாட்டில் பார்த்தீர்கள் என்றால் 42% மக்கள் காற்றாலைமூலம் மின்சாரத்தை உருவாக்கி, மீதம் உள்ளவற்றை Government-க்குக் கொடுக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களும் Copenhagen Infrastructure Partners என்ற Denmark நிறுவனத்தோடு இணைந்து 1 GW offshore காற்றாலை மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு ready செய்திருக்கிறார்கள். அது ஏன் என்றால், தமிழ்நாடுதான் சூரிய ஒளியையும், அதிகமான காற்று வீசுகின்ற நீண்ட நெடிய கடற்கரையையும் வைத்திருக்கிறது.

பிற்பகல் 5–25

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதேபோல், நம் மாநிலத்தில் சற்றேறக்குறைய 39 ஆயிரம் ஏரிகளும், நீர்த்தேக்கங்களும் உள்ளன. Storage facilities-ஐ இந்த அரசு உருவாக்க வேண்டும். இன்னும் 10 ஆண்டுகளில், அதாவது 2031–2032 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் மின் தேவை எவ்வளவு இருக்கும் என்றால், கிட்டத்தட்ட 1 இலட்சத்து 86 ஆயிரத்து 106 மில்லியன் யூனிட் என்று Central Electricity Authority of India கூறியிருக்கிறது. இப்போது இருப்பதைவிட 70 சதவிகிதம் மின் தேவை அதிகமாக இருக்கும். எனவே, இவற்றையெல்லாம் திராவிட மாடல் ஆட்சியில் மிகச் சிறப்பாகத் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறீர்கள். திராவிட மாடல் ஆட்சியில் மின்சாரத் துறை மிளிர்கிறது; ஒளிர்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, என்னுடைய கன்னிப் பேச்சை இந்த அவையில் நான் பேசியபோது, மாண்புமிகு முத்தமிழறிஞர் தலைவர்

கலைஞர் அவர்களுக்கு அவர்களுடைய நூற்றாண்டினை முன்னிட்டு ஒன்றிய அரசு பாரத ரத்னா விருதை வழங்க வேண்டுமென்று சொல்லியிருந்தேன். இப்போது திரும்பவும் அதை வலியுறுத்துகிறேன். ஏனென்றால், அப்படி அவர்களுக்கு அந்த விருதை வழங்கினால்தான் அந்த விருதுக்கே பெருமை கிடைக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று ஒன்றிய அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி சார்ந்த கோரிக்கைகள். திருச்சி மாநகருக்கு டைடல் பார்க்கும், திருச்சி மாவட்டம், ஓலையூரில் என்.சி.சி. நிரந்தர பயிற்சி முகாமும் அளித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மெட்ரோ இரயில் திட்டத்தைத் திருச்சி மாவட்டத்திற்கும் செயல்படுத்த வேண்டும். திருச்சி, மலைக்கோட்டை உச்சிப் பிள்ளையாரை வணங்க நிச்சயமாக மலைக்கோட்டையில் ரோப் கார் வசதி செய்து தர வேண்டுமென்று கோரிக்கை வைத்திருந்தேன். உச்சிப் பிள்ளையாரை வணங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

காந்தி மார்க்கெட் பகுதியிலுள்ள பெண்கள் சிறைச்சாலையை வேறு இடத்திற்கு மாற்றிவிட்டு, அங்கு மார்க்கெட் பகுதியை விரிவாக்கம் செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைக்கின்றேன். வீட்டுவசதி வாரியத்தின்மூலம் LIG, MIG போன்ற குடியிருப்புகளைக் கட்டித் தர வேண்டும் என்று கோரிக்கை வைக்கின்றேன். பாதாள சாக்கடைத் திட்டத்தை விரைந்து நிறைவு செய்து தர வேண்டும். சாலை விரிவாக்கம், வாய்க்கால் தூர் வாருதல் போன்ற இன்னும் பல கோரிக்கைகளை நான் படித்ததாக அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, சிறுபான்மையினருக்கான கோரிக்கைகள். சிறுபான்மையின மக்கள் என்றாலே ஏனோ தெரியவில்லை, ஒன்றிய அரசுக்கு வேப்பங்காயாகக் கசக்கிறது என்று நான் இங்கே குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். காரணம், திரு. மன்மோகன் சிங் அவர்கள் பாரதப் பிரதமராக இருந்த காலத்தில் தொடங்கப்பட்ட பதோ பர்தேஷ் என்ற சிறுபான்மையினருக்கான கல்வி

வங்கிக் கடன் திட்டத்தினுடைய வட்டி மானியத்தை ஒன்றிய அரசு நிறுத்தியிருக்கிறது. முந்தைய கல்வி உதவித் தொகை மட்டுமல்லாமல், 16 ஆண்டுகளாக சிறுபான்மையின மாணவர்கள் பயன்படுகின்ற வகையில் இருந்த மெட்ரிக் கல்விக்கு முந்தைய உதவித் தொகையை ஒன்றிய அரசு முற்றிலுமாக நிறுத்தியுள்ளது. ஆராய்ச்சித் திட்ட நிதி ஒதுக்கீட்டை 50 சதவிகிதமாகக் குறைத்திருக்கிறது. சிறுபான்மையினருக்கான ஒன்றிய அரசின் மொத்த பட்ஜெட் தொகையான ரூ.1,425 கோடியிலிருந்து ரூ.438 கோடியாகக் குறைத்திருக்கிறது. நை மன்சில் என்கிற திட்ட நிதியை ரூ.46 கோடியிலிருந்து வெறும் ரூ.10 இலட்சமாகக் குறைத்திருக்கிறது. அப்துல் கலாம் ஆசாத் கல்வித் திட்ட நிதி முற்றிலுமாக நிறுத்தப்பட்டிருக்கிறது. சிறுபான்மையின மாணவர்களுக்கான அனைத்து நிதிகளையும் குறைத்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இதனைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டிலுள்ள சிறுபான்மையின மாணவர்களுக்கு உதவிக்கரம் நீட்ட வேண்டும் என்ற கோரிக்கையை வைக்கிறேன்.

அடுத்து, கால் நூற்றாண்டுக் காலமாக தண்டனைக் காலம் முடிந்தும், வாழ்நாள் முழுவதும் சிறையிலே வாடிக் கொண்டிருக்கின்ற இஸ்லாமிய சிறைக் கைதிகளை விடுதலை செய்வதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கிறேன்.

உலகமே வியந்து பாராட்டுகின்ற புதுமைப் பெண் திட்டம் வழியாக அரசுப் பள்ளியிலே படித்த மாணவிகளுக்கு ரூ.1,000/– வழங்குவதுபோல, அரசுப் பள்ளியிலே காலை உணவுத் திட்டம் வழங்குவதுபோல, அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5% NEET இட ஒதுக்கீடு வழங்குவதுபோல, தமிழ்வழிக் கல்வியை அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கும் நீட்டித்து வழங்க வேண்டும் என்ற கோரிக்கையையும் இங்கே வைக்கிறேன். எங்களுடைய கோரிக்கையை ஏற்று ஆங்கிலோ–இந்தியன் பள்ளிகளை நிருவகிப்பதற்கு தனியாக ஒரு D.E.O.–வை வழங்கிய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைச் சொல்கின்ற அதே சமயத்தில், காலிப் பணியிடங்களுக்கு ஆசிரியர்களை நியமிப்பது குறித்தும், அவர்களை நியமிப்பதற்கு ஒப்புதல் வழங்குவதற்கான நடைமுறைச் சிக்கல்களைக் களைந்திட வேண்டுமென்ற கோரிக்கையையும் வைக்கிறேன்.

[முனைவர் த. இனிகோ இருதயராஜ்] [2023 ஏப்ரல் 12

சிறுபான்மையின மக்களுக்கான கல்லறைகள், தலித் கிறித்துவர்களுக்கான இட ஒதுக்கீடு, கிறித்துவ வன்னியர்களுக்கான இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை, தேவாலயங்கள் கட்டுவதற்கு அனுமதி பெறுவதற்கான நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன. சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மைனாரிட்டி பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கான கட்டடங்கள் கட்டுவதற்கு பயன்படுத்திக்கொள்ளலாம் என்பது ஏற்கெனவே நடைமுறையில் இருந்தது. அதை மீண்டும் பெற்றுத் தர வேண்டும் என்ற கோரிக்கையையும் வைக்கிறேன்.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, சிறுபான்மையின மக்களை அரவணைத்துக் காக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்களுக்கு இந்த நேரத்தில் இந்தக் கோரிக்கைகளையெல்லாம் வைத்து, எனக்குப் பேச வாய்ப்பளித்த அனைவருக்கும் நன்றி சொல்லி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

தொகுதிக் கோரிக்கைகள்:

சிங்காரத்தோப்பு, பெரியக்கடை வீதி, தெப்பக்குளம் போன்ற பகுதிகளில் சாலையை விரிவாக்கித் தர வேண்டும். உய்யக்கொண்டான் வாய்க்காலைத் தூர் வார வேண்டும்.

திருச்சியில் கனரக தொழிற்சாலைகள் ஒன்றிரண்டு இருந்தன. அவை தற்போது செயல்படாத காரணத்தினால், அங்கு கனரக தொழிற்சாலைகளை நிறுவ வேண்டும்.

திருச்சியில் பல கோயில்கள் உள்ளதால் மாதம் ஒரு முறையாவது தேரோட்டம் நடைபெறுவதால், மின்சாரக் கம்பிகள் மேலே செல்வதால் ஏற்படுகின்ற ஆபத்தைத் தடுப்பதற்கு அந்தப் பகுதிகளில் under ground cable அமைத்து மின்சாரம் வழங்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா அவர்கள்.

பிற்பகல் 5–30

திரு. JMH. அசன் மௌலானா: தருமத்தின் வாழ்வுதனை சூது கவ்வும், மீண்டும் தருமமே வெல்லும். Joseph Goebbels

2023 ஏப்ரல் 12] [திரு. JMH. அசன் மௌலானா]

ஆங்கிலத்தில் கூறியது, "A lie told once remains a lie but a lie told a thousand times becomes the truth" அதே Joseph Goebbels தன் வாழ்நாளின் இறுதி காலத்தில் கூறிய செய்தி, "There will come a day, when all the lies will collapse under their own weight and truth will again triumph" மீண்டும் தருமமே வெல்லும் என்ற அடிப்படையில் தலைவர் திரு. ராகுல் காந்தி அவர்களுக்கு நேரிட்ட துக்கமான விஷயத்திலிருந்து மீண்டும் தலைவர் திரு. ராகுல் காந்தி வென்று எடுப்பார் என்று வேண்டிக்கொள்கிறேன். அன்னை சோனியா காந்தி அவர்களையும், இளம் தலைவர் திரு. ராகுல் காந்தி அவர்களையும் மற்றும் எங்கள் காங்கிரஸ் பேரியக்கத்தின் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே அவர்களையும் வணங்குகிறேன். எங்களை வழிநடத்தும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகளையும் மற்றும் வேளச்சேரி வாக்காளப் பெருமக்களுக்கு என்னுடைய நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடையேழு வள்ளல்கள் பாரி, காரி, ஓரி, நள்ளி, ஆய், பேகன், அதியமான் நெடுமான் அஞ்சி என்று இலக்கியத்தில்தான் படித்துள்ளேன். சொன்னதை மட்டுமல்ல, சொல்லாததையும் செய்துவரும் கண்ணெதிரே எட்டாவது வள்ளலாய் அமர்ந்திருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் கடைக்கண் பார்வையில், நான் வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினராய் பதவியேற்ற பின்னர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எனது தொகுதிக்கு சுமார் 15 முறை வந்திருக்கிறார். தினந்தோறும் walking-க்கு என் தொகுதிக்குத்தான் வருவார். அப்படிக் கணக்கு சொல்ல வேண்டுமென்றால், எத்தனை நாட்கள் என்று என்னால் சொல்ல முடியாது. ஆனால், தொகுதி மேம்பாட்டுக்காக 15 முறை வந்துள்ளார்.

காலையில்கூட பேசும்போது ஓர் உறுப்பினர், நேரடியாக களத்தில் இறங்கும் முதலமைச்சர் என்று சொன்னார். முதலாண்டில் வந்த மழையினால் என்னுடைய தொகுதியில் இடுப்பளவு தண்ணீர் நின்றது. அப்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய boots காலோடு மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களோடும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் ஐயா, மாண்புமிகு திரு. கே.என். நேரு அவர்களோடும் வந்திருக்கிறார்கள். அப்படி

மட்டுமே 3 முறை வந்திருக்கிறார்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். ஒரேயாண்டில் இதற்குத் தீர்வு காண வேண்டுமென்று நினைத்தார். Storm water drain என்ற ஒரு திட்டத்தை ஆரம்பித்து, வேளச்சேரிக்கு மட்டும் 167 கோடியே 46 இலட்சம் ரூபாயை ஒதுக்கினார். ஒரேயாண்டில் Storm water drain அமைக்கப்பட்டது. இந்த மழைக் காலத்தில் கால் அளவிற்குக்கூட தண்ணீர் நிற்காமல், மழைக் காலத்தில் வெள்ளச்சேரியை வேளச்சேரியாக முற்றிலுமாக மாற்றிக் கொடுத்தவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் ஐயா திரு. தளபதி அவர்கள் என்பதை இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். அதேநேரத்தில் மழைக் காலத்தில் சாலைகள் மிகவும் மோசமான நிலையில் இருந்தன. உடனடியாக எங்களுக்கு 11 கோடி ரூபாய் கொடுத்து சாலைகளைச் சீரமைக்க வைத்தார். இன்று வேளச்சேரி தொகுதியில் சாலைகள் சீராக இருக்கின்றன.

பூங்காக்கள். சென்னை 2.0 என்ற திட்டம் வந்தது. சென்னை 2.0 திட்டத்தின் மூலமாக சுமார் 30 கோடியே 60 இலட்சம் ரூபாய் கொடுத்து பூங்காக்களை ஏற்படுத்திக் கொடுத்தார். Azadi Ka Amrit Mahotsav சுதந்திர தின பெருவிழா பூங்கா, என்னுடைய வேளச்சேரி தொகுதியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்து திறந்துவைத்தார்கள். அந்த அருமையான பூங்கா, ராஜீவ் காந்தி சாலையில் அமைந்திருக்கிறது. இங்கிருக்கக்கூடிய நமது செய்தித் துறை அமைச்சர் ஐயா திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன் அவர்களிடம் ராஜீவ் காந்தி சாலையில் உள்ள Azadi Ka Amrit Mahotsav பூங்காவில் ராஜீவ் காந்தி அவர்களின் சிலையை அமைத்துத் தர வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்கெனவே நான் முன்வைத்திருந்தேன். இதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வந்தவுடனே மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கொள்கை விளக்கப் புத்தகத்தைப் பார்த்தேன். எல்லா எம்.எல்.ஏ–க்களின் புகைப்படத்தையும் அந்தப் புத்தகத்தில் போட்டு, எங்களையெல்லாம் அவர் பக்கம் இழுத்துவிட்டார். அதற்கு முதலில் எங்களுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். சாதாரண விஷயமல்ல. வேளச்சேரியில் அதிகமான அளவில் மின்வெட்டு இருந்தது. தினமும் காலையில் தொலைபேசிமூலம் மக்கள் மின்வெட்டு, மேலேயிருந்து current வந்து pass ஆகியதால்

2023 ஏப்ரல் 12] [திரு. JMH. அசன் மௌலானா]
மின்வெட்டு என்று சொல்கின்ற அளவு, இதுபோன்று மழைக் காலத்திலும், சாதாரண நாட்களிலும் மின்வெட்டு மிகப் பெரிய உச்சத்தில் இருந்தது. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில், எங்களைக் காப்பாற்றுங்கள் என்று முதலாண்டே கூறினோம். 50 மின்மாற்றிகளைக் கொடுத்தார். 350-க்கும் மேற்பட்ட RMU-க்களைக் கொடுத்தார். 3, 4 sub-station power-ஐ increase செய்து கொடுத்தார்.

பிற்பகல் 5-35

வேளச்சேரி தொகுதி, புவனேஸ்வரி நகரில் ஒரு sub-station வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கண்டிப்பாகத் தருவார்கள் என்ற நம்பிக்கை வேளச்சேரி தொகுதி மக்களுக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டாஸ்மாக் கடைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஒருசில நேரங்களில் டாஸ்மாக் கடைகள் மூலமாக ஏற்படும் துன்பங்களை வேறு மாதிரியான எண்ணத்தில் சிலர் எடுத்துச் சென்றுவிடுகிறார்கள். அரங்கண்ணல் சாலை Canal Bank Road-ல் ஒரு டாஸ்மாக் கடை இருக்கிறது. அங்கு வரக்கூடிய மதுப்பிரியர்கள் மது அருந்திவிட்டு என்ன செய்வார்களோ தெரியவில்லை. அதனால், கோபமுற்ற ஒருவர் இந்த இடம் நீர்நிலைப் புறம்போக்கு என்று நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துவிட்டார். ஒரே ஒரு டாஸ்மாக் கடையை அகற்ற, மேய்க்கால் புறம்போக்கு நிலத்தை, நீர்நிலைப் புறம்போக்கு என்று கூறி, நீதிமன்றமும் அதை ஏற்றுக்கொண்டதால், அப்பகுதியில் வாழும் மக்களுக்கு மிகப் பெரிய அச்சம் ஏற்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக ஒரு கடிதத்தை ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கொடுத்திருக்கிறேன். இதுபோன்ற விஷயங்கள், பொதுமக்களைப் பாதித்துவிடக் கூடாது. டாஸ்மாக் கடைகள் இயங்கட்டும். ஆனால், பொதுமக்களைப் பாதித்துவிடக் கூடாது.

மற்றோர் இடத்தில், தண்டீஸ்வரர் திருக்கோயில் இருக்கிறது. திருக்கோயில் அருகே தெப்பக்குளம் இருக்கிறது. அந்தத் தெப்பக்குளம் மிகவும் மோசமான நிலையில் இருந்தது. எனவே, நானும் சில NGOs-ம் சேர்ந்து உடனடியாக அந்தத் தெப்பக்குளத்தை clean செய்து, லிங்கம் படத்துடன் சிவா என்று எழுதி வைத்திருந்தோம்.

தெப்பக்குளத்தின் மிக அருகிலேயே ஒரு டாஸ்மாக் கடை இருக்கிறது. ஒருவர் அங்கு மது அருந்திவிட்டு, தெப்பக்குளத்திற்கு அருகிலுள்ள அசைவ ஹோட்டல் ஒன்றில் உணவு சாப்பிட்டுவிட்டு, அங்கேயே அசுத்தம் செய்திருக்கிறார். இதுபோன்ற நிலைமை நீடிக்கக் கூடாது. கோயில்கள், வணக்கஸ்தலங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அங்கிருக்கின்ற டாஸ்மாக் கடையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்களுக்காக அகற்றித் தர வேண்டுமென்று முழு நம்பிக்கையோடு இந்தத் தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும்,திருவான்மியூர் பேருந்து நிலையம் சீரமைத்துத் தரப்படும் என்று கூறிய நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வேளச்சேரி railway station பக்கத்தில் 6.2 ஏக்கர் நிலம் கலைஞர் அவர்களது ஆட்சிக்காலத்தில் கையகப்படுத்தப்பட்டு, வேளச்சேரிக்கு புதிய பேருந்து நிலையம் வரும் என்று கூறியுள்ளார்கள். அங்குள்ள எல்லைக் கல்லில் இதுவரை வேளச்சேரி bus stand என்றுதான் இருக்கிறது. அந்த இடத்தில் ஒரு புதிய bus stand-ஐ உருவாக்கித் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழ்நாட்டில் மிகப் பெரிய கடற்கரை இருக்கிறது. அந்தக் கடற்கரையில் Kinetic energy என்ற ஒரு energy-ஐ உருவாக்க முடியும். நமது கடற்கரையில் மட்டும்தான் waves இருக்கும். அதாவது, கடல் அலைகள் இருக்கும். பல மேலை நாடுகளில் கடல் அலைகள் மூலமாக Kinetic energy-ஐ உருவாக்கி, அதன்மூலம் மின்சார உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த மின்சார உற்பத்தி நமது தமிழ்நாட்டிலும் செய்யப்பட வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். அதிகமான Windmill energy கிடைத்திருக்கிறது; அதிகமான Solar energy கிடைத்திருக்கிறது. இப்படி சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள். Technology-ல் நாம் இன்னும் உயர்ந்துகொண்டே போக வேண்டும்.

இரண்டு இலட்சம் smart meters பொருத்தப்பட்டுள்ளதாக ஒரு தகவல் இருக்கிறது. இன்னும் அதிகமாக smart meters பொருத்தப்பட வேண்டும். மாதந்தோறும் மின் பயனீட்டு அளவீடு எடுப்பது எப்போது அமலுக்கு வரும் என்ற ஒரு கேள்வி இருக்கிறது. மாதந்தோறும் மின் அளவீடு செய்வது மற்றும் smart meters

2023 ஏப்ரல் 12] [திரு. JMH. அசன் மௌலானா]

பொருத்துவது அமலுக்கு வர வேண்டுமென்று இத்தருணத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்கின்றேன். மேலும், வீட்டிற்கு ஒரு LED bulb *என்ற* national scheme *ஒன்று இருக்கிறது. அந்தத் திட்டத்தின் அடிப்படையில் வீட்டிற்கு ஒரு* LED bulb *எப்போது வழங்கப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் இத்தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) அப்படியா, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களிடமா? சரி.*

வேளச்சேரி மக்கள் தங்கள் குடும்ப அட்டை சம்பந்தமான பிரச்சினைகளை அணுக சைதாப்பேட்டை அல்லது மயிலாப்பூர் செல்ல வேண்டியுள்ளது. ரேஷன் கடைகள் வேளச்சேரியிலேயே இருக்கும்போது, அதற்கான AC office *வேளச்சேரியிலேயே அமைக்கப்பட வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

இரவு நேரங்களில் டாஸ்மாக் கடைகளை மூடிய பிறகும், கள்ளச் சந்தை இயங்கிக் கொண்டிருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்களே, டாஸ்மாக் கடைகள் திறந்திருக்கும் நேரத்தை நீங்கள் மேலும் ஒரு மணி நேரம் நீட்டித்து, கள்ளச் சந்தை வியாபாரத்தை ஒழித்துவிட்டால், நிம்மதியாக இருக்கும் என்பதை இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) மேலும் one hour extend *செய்யுங்கள் என்று கேட்கிறேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

பிற்பகல் 5–40

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே இரண்டு கடைகள் குறித்து சொன்னார்கள். அந்தக் கடைகள் இந்த இரண்டாண்டுகளில் தொடங்கப்பட்டவை அல்ல. ஏற்கெனவே, அப்பகுதிகளில் பல ஆண்டுகளாக இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய கடைகள். அதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடத்திலே சுட்டிக்காட்டினார்கள். அது துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.*

அதேபோல, இப்போது ஒரு கருத்தைச் சொன்னார்கள். அது எந்தக் கடையென்று குறிப்பிட்டுச் சொன்னாரென்றால், நாளையே சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அனுப்பி அதுகுறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அதாவது, இரவு நேரங்களிலே கடை மூடிய பிறகு விற்பனை நடக்கிறதென்று சொன்னார்கள். கடையினுடைய நம்பரைச் சொல்லுங்கள். இன்றே அதிகாரிகளை அனுப்பி அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி முடியுங்கள்.*

திரு. JMH. அசன் மௌலானா: New & Renewable Energy. *அதேபோன்று,* Waste Management. *இப்போது சென்னையிலிருந்து எடுத்துக் கொண்டுபோகின்ற எல்லா* waste-*மே பள்ளிக்கரணையில்தான்* dump *ஆகிறது. பள்ளிக்கரணை* dump yard-*லிருந்து* New & Renewable Energy-*யை ஏற்படுத்தலாம். அது ஏன் இன்னும் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வராமல் இருக்கிறதென்று தெரியவில்லை. உலகமெங்கும்* Waste Management *என்பது மிகப் பெரிய ஒரு* skillfull subject *ஆக இருக்கிறது. அந்த* subject-*ல் உலகமே இன்று* bio-mass energy, Waste Management *மூலமாக* energy-*யை உற்பத்தி செய்து கொண்டிருக்கிறது. அதில் நாம் இன்னும் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறோம் என்று நம்புகிறேன். கண்டிப்பாக பள்ளிக்கரணை* dump yard-*ல் இருக்கக்கூடிய* waste-*லிருந்து மின்சாரம் தயாரிக்கக்கூடிய* energy; any ways of energy; energy-*ஐத் தயாரிக்கக்கூடிய ஒரு திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வர வேண்டுமென்று இத்தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. புகழேந்தி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி முடியுங்கள். நேரமாகிவிட்டது.*

திரு. JMH. அசன் மௌலானா: *இன்னும் ஒரேயொரு விஷயம். சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் சுதந்திரப் போராட்ட வீரர் என்பது நமக்கு நன்கு தெரியும். வெள்ளையருக்கு எதிராக அவர் போராடினார் என்பதற்காக, கைது செய்யப்பட்டு,* Lord Wellington *என்பவர் தெற்கு கடற்கரைச் சாலையிலுள்ள சிங்காரவேலரின்*

சொந்த வீட்டையும், சுற்றியுள்ள இடத்தையும் அபகரித்து, அவரது மனைவி Lady Wellington பெயரில் ஒரு பள்ளிக்கூடத்தை உருவாக்கினார். பள்ளிக்கூடம் அமைந்துள்ள இடத்தின் ஒரு பகுதியில் சிங்காரவேலர் குடும்பத்தாருடைய சமாதிகளும் இருக்கின்றன. இந்த இடத்தை மீட்டு தமிழ்நாடு அரசு அவர்கள் குடும்பத்திற்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அந்த Lady Wellington பள்ளிக்கு சிங்காரவேலர் பெயரைச் சூட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். 2013 ஆம் ஆண்டின் உயர் நீதிமன்ற வழிகாட்டுதலின்படி குடும்பத்தாருக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும். ஓய்வுபெற்ற நீதிபதியைக் கொண்டு சிங்காரவேலர் பெயரில் உள்ள சொத்துகளைக் கண்டறிந்து தற்போது வறுமையில் வாடிக் கொண்டிருக்கும் அவருடைய குடும்பத்தினருக்கு வெளிச்சத்தை பெற்றுத் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

வேளச்சேரி ஏரி. சென்னையைப் பொறுத்தவரை பிரதானமாக 6 ஏரிகள் இருக்கின்றன. 6 ஏரிகளிலுமே 90 சதவிகிதம் ஆக்கிரமிப்பு ஏற்பட்டிருக்கிறது. 90 சதவிகித ஆக்கிரமிப்பிலிருந்து, தற்போது நீர்நிலைப் புறம்போக்கு. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேச ஆரம்பித்து 12 நிமிடங்களாகிவிட்டன. நேரமாகிவிட்டது.

திரு. JMH. அசன் மௌலானா: ஐயா, இது ஒரு முக்கியமான subject. இந்த இடத்தை நீங்கள் உடனடியாகக் காலி செய்துவிட வேண்டுமென்று தற்போது notice வந்து கொண்டிருக்கின்றது. நீங்கள் நகரமயமாக்குதல் செய்யும்போது நீர்நிலைகள் வீடுகளாகிவிட்டன; நத்தம் புறம்போக்கு வீடுகளாகிவிட்டது; கிராம நத்தம் வீடுகளாகிவிட்டது; மேய்க்கால் புறம்போக்கு வீடுகளாகிவிட்டது. இன்னும் எத்தனை நாட்கள் இவர்களை நீர்நிலைப் புறம்போக்கு என்று அலைக்கழித்துக் கொண்டிருப்பீர்கள் என்று ஒரு கேள்வி. அவர்கள் வாழ்க்கையிலும் நீங்கள் வெளிச்சத்தைத் தர வேண்டும். அதேபோல, பல இடங்களில் புறம்போக்கு நிலங்களில் வாழ்கிறார்கள் என்று கூறி அவர்களுக்கு மின்சாரம் கிடைப்பதில்லை. எங்கு சென்றாலும், . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர், சிறிதுநேரம்* rest *எடுத்துக்கொள்ளுங்கள். ஏனென்றால் அவர் நோன்பில் இருக்கிறார். நீர்நிலைப் புறம்போக்கில் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். அதையெல்லாம் அப்படியே விட்டுவிட வேண்டும் என்று சொன்னார். எங்களுக்கு மட்டும் அவர்களைத் தொல்லைப்படுத்த வேண்டுமென்று ஆசையா? அவர்களும் ஏழைகள்தான். வீடுகளைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், நீர்நிலைப் புறம்போக்கை நீங்கள் ஏன்* evict *செய்யவில்லையென்று கேட்டால்,* Chief Secretary*–ஐ* Court *முன்பாக* bar*–ல் நிற்க வைத்து விடுவோமென்று* High Court*–ல் சொல்கிறார்கள். ஆக, தலைமைச் செயலாளரைக் கொண்டுபோய்* bar*–ல் நிற்க வைப்பது மட்டுமில்லை,* Supreme Court*–லிருந்து கேள்வி கேட்கிற எல்லா* Judge*–களும் நீர்நிலைப் புறம்போக்கைக் காப்பாற்றுங்கள் என்று சொல்கிறார்கள். ஆக, கருணை ஒரு பக்கம்; நீதி ஒரு பக்கம். மதுரை மட்டுமல்ல எல்லா* High Court*–ம்தான்.* Court *என்றாலே நீர்நிலைகள்தான். (குறுக்கீடு) அதுவல்ல. நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும்; இனி நடப்பவை நல்லவையாக இருக்கட்டும். அப்படியென்பதால் முடியாது; வேறு வழி கிடையாது.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. புகழேந்தி அவர்கள். நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) இல்லை. நேரமாகி விட்டது. (குறுக்கீடு) இரண்டு நிமிடங்கள் இல்லை. ஒரே நிமிடம். நன்றி சொல்லி முடியுங்கள்.*

***திரு. நா. புகழேந்தி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)*

பிற்பகல் 5–45

திரு. JMH. அசன் மௌலானா: *அண்ணா, உட்காருங்கள். இந்த நீர்நிலைப் புறம்போக்கு வகைமாற்றம் செய்யப்பட வேண்டும். ஏனென்றால் கலைஞர் அவர்கள்தான் இவர்களுக்கு* slum settlements *என்று கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் நம்மிடம் வந்து மன்றாடிக் கேட்பதற்குக் காரணம் கொடுத்தவரல்லவா கலைஞர்; கொடுத்தவரே பறித்துக் கொண்டார் என்ற நிலைமை*

ஏற்பட்டுவிடக் கூடாது. அதனால்தான், இதைச் சொல்கிறேன். இந்தச் சொத்துகளை நீங்கள் கொடுக்கும்போது வகைமாற்றம் செய்யாமல் கொடுத்துவிட்டீர்கள். இனிமேல், அதை வகைமாற்றம் செய்துவிட்டால், இந்த நீர்நிலைப் புறம்போக்குப் பிரச்சினையில் ஓரளவிற்குத் தீர்வு ஏற்படும். இன்னும் ஒரேயொரு point, விரைவில் உரையை முடித்துவிடுகிறேன் ஐயா. அதேபோல். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: திரு. J.M. ஆரூண் ரஷீத் அவர்களுடைய son. அவரைவிட அவருடைய அப்பாவின் பெயர்தான் எனக்கு நினைவுக்கு வருகிறது. நன்றாகப் பேசுகிறார். மின்சாரத் துறையில், அதிலே நின்று பேசுகிறார் பாருங்கள். நீர்நிலைப் புறம்போக்குகளில் கலைஞர் அவர்கள் ஒன்றும் கொடுக்கவில்லை; அவரவர்கள் கட்டிக் கொண்டார்கள். தலைவர் அவர்களை அழைத்துக் கொண்டு சென்று, பல ஏரிகளை நான் காண்பித்தேன். பல ஏரிகளின் நடுவில் பங்களாவே கட்டிவிட்டு, car வைத்துக்கொண்டு, அங்கே உட்கார்ந்து இருக்கிறார்கள். உள்ளபடியே, அவர்கள் அதை வாடகைக்கு வேறு விட்டிருக்கிறார்கள். ஆகையினால், தவிர்க்க முடியாமல் தவிர்க்கப் பார்க்கிறோம். ஆனால், தவிர்க்க முடியாமல் போனால், எங்களைச் சபிக்காதீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. JMH. அசன் மௌலானா: சென்ற ஆட்சியில் அனைத்து மீனவர்களுக்கும் Walkie Talkie கொடுத்திருக்கிறார்கள். இப்போது அந்த Walkie Talkie பழுதடைந்து வேலை செய்வதில்லை. அதற்கு முன்பிலிருந்து மாதத்திற்கு rent ஏதோ கழித்துக்கொண்டிருக்கிறார்களாம். உங்களுக்குத் தெரியும், அடையாறிலிருந்து ஆரம்பித்து திருவான்மியூர் வரைக்கும் வேளச்சேரி தொகுதியில் மீனவர் பகுதிகள் இருக்கின்றன. Walkie Talkie பழுதடைந்து போய்விட்டது. இன்னும் அதற்கு ஏன் rent deduct செய்கிறீர்கள் என்று தெரியவில்லை. எனவே, இந்தப் பகுதி மக்களுக்கு Walkie Talkie–க்கு பிடித்தம் செய்யும் rent–ஐ

[திரு. JMH. அசன் மௌலானா] [*2023 ஏப்ரல் 12*

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து இரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. புகழேந்தி அவர்கள்.*

திரு. நா. புகழேந்தி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணக்கம். தன் வாழ்நாள் முழுவதும் அயராத உழைப்பாலும். . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *ஒரு நிமிடம். நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

திரு. JMH. அசன் மௌலானா: *இந்த அருமையான வாய்ப்பைத் தந்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து எனது தொகுதிக் கோரிக்கைகளை நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.*

தொகுதிக் கோரிக்கைகள்:

AGS *காலனி மற்றும் ஆண்டாள் நகரில்,* SE South I*-ல்* UG cable *பதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.* AGS *காலனி மற்றும் ஆண்டாள் நகரிலிருந்து பாரிமுனை செல்லவும், ஆலந்தூர் வழியாக தாம்பரம் செல்லவும், திருவல்லிக்கேணி செல்லவும் பேருந்துகள் இயக்கிட வேண்டும். கலாசேத்திரா,* IIT *போன்ற அமைப்புகள் மறித்து வைத்துள்ள பொதுப் பாதையை மீட்டுத் தர வேண்டும்.*

இஸ்லாமியர்களுக்குத் தனி அடக்கஸ்தலம், கபர்ஸ்தான் ஏற்படுத்தித் தர வேண்டும். வேளச்சேரி 177-வது வார்டில் உள்ள காந்தி சாலை வடக்குப் பகுதி, IIT *சுற்றுச்சுவர் பகுதிகள் மற்றும் நியூ காலனி பகுதிகளை* J*–13 காவல் எல்லையிலிருந்து நீக்கி* J*–7 காவல் எல்லைக்குள் கொண்டு வர வேண்டும்.*

வேளச்சேரி தொகுதி, அருணாச்சலபுரம், சோனி நகர், தந்தை பெரியார் நகர் பகுதிகளில் வசிக்கும் அனைவருக்கும் பட்டா வழங்க வேண்டும். வேளச்சேரி ஏரியை அழகுபடுத்தி படகு குழாம் அமைத்து சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டும். வேளச்சேரி பத்திரப் பதிவு அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டும்.

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 12]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளச்சேரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அன்பு சகோதரர் அவர்கள் நினைவில் வாழும் மரியாதைக்குரிய திரு. ராஜீவ் காந்தி அவர்களுக்குச் சிலை அமைப்பது குறித்து என்னிடத்திலே கடிதம் கொடுத்திருப்பதைப் பற்றி சொன்னார்கள். அந்தக் கடிதம் துறையின் பரிசீலனையில் இருக்கிறது. ஏற்கெனவே நம்முடைய முத்தமிழறிஞர் ஐயா கலைஞர் அவர்கள் 2006 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு வரை முதலமைச்சராக இருந்தபோதுதான் மத்திய கைலாஷிலிருந்து சிறுசேரி வரை இருக்கக்கூடிய தகவல் தொழில்நுட்பவியல் சாலைக்கு மறைந்த திரு. ராஜீவ் காந்தி அவர்களுடைய பெயரை வைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, எப்போதும் திரு. ராஜீவ் காந்தி அவர்களின்மீது மரியாதைகொண்டதுதான் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக இயக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) அதேநேரத்தில் சென்னையில், சைதாப்பேட்டையிலிருந்து விமான நிலையம் செல்லக்கூடிய சாலையில் திரு. ராஜீவ் காந்தி அவர்களுடைய சிலை அமைந்திருக்கிறது. இருந்தாலும், நிதிநிலைமைக்கேற்ப எதிர்காலத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. புகழேந்தி அவர்கள்.

திரு. நா. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணக்கம். தன் வாழ்நாள் முழுவதும் தன்னுடைய அயராத உழைப்பாலும், இடைவிடாத போராட்டத்தாலும் தமிழ்நாட்டில் அனைத்து மக்களையும் தலைநிமிரச் செய்தவரும், இந்தியாவின் பிரதமர்களையும், ஜனாதிபதிகளையும், உருவாக்கியவரும், மறைந்தும் மறையாமல் எங்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் தமிழினத் தலைவர் (மேசையைத் தட்டும் ஒலி) முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் இடம் நோக்கி வணங்கி என் உரையைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் எரிசக்தித் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை

மானியக் கோரிக்கைகளில் பேசுவதற்கு வாய்ப்பளித்த இந்தியாவிலேயே அனைத்து முதல்வர்களுக்கும் number one முதல்வராய் திராவிட மாடல் ஆட்சியை நடத்துகின்ற (மேசையைத் தட்டும் ஒலி) கழகத்தினுடைய தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன்.

நாளைய தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரம், இன்றைய இளைஞர்களின் ஈடு இணையற்ற தலைவர், கழக இளைஞரணிச் செயலாளர், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் எங்கள் அன்புக்குரிய சின்னவர் திரு. உதயநிதி அவர்களை வணங்குகிறேன்.

கழகப் பொதுச் செயலாளர், அவை முன்னவர் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களை வணங்குகிறேன். கழகத் துணைப் பொதுச் செயலாளர் மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு சிறுபான்மையினர் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்களையும், மூத்த அமைச்சர்கள் மற்றும் அனைத்து அமைச்சர் பெருமக்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர், அரசுக் கொறடா மற்றும் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்றச் செயலாளர் மற்றும் அரசு அதிகாரிகள், எனது விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் எனது பணிவான வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 5–50

எனது கோரிக்கையை ஏற்று, கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் அன்னியூர் பகுதியில் தீயணைப்பு மீட்பு நிலையம் வழங்கி, கடந்த திங்கட்கிழமையன்று காணொலி காட்சிமூலம் திறந்து வைத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது சார்பிலும், விக்கிரவாண்டி தொகுதி மக்களின் சார்பிலும் மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விழுப்புரம் மாவட்ட விவசாயிகளின் நீண்ட கால கோரிக்கையை ஏற்று, ஏனாதிமங்கலம்–எல்லீஸ்சத்திரம் தடுப்பணையை புதிய அணையாகக் கட்டுவதற்கு ரூ.86 கோடியே 25 இலட்சம், வீரபாண்டி ஏரிக்கு ரூ.1 கோடியே 73 இலட்சம் மற்றும் விக்கிரவாண்டி தொகுதி, விக்கிரவாண்டி வட்டம்,

2023 ஏப்ரல் 12] [திரு. நா. புகழேந்தி]

அய்யன்கோவில்பட்டு பம்பை ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள வாதனூர் நீரொழுங்கிப் பணிக்கு ரூ.4 கோடியே 3 இலட்சம் ஒதுக்கீடு செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் விழுப்புரம் மாவட்ட மக்களின் சார்பில் எனது நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழக விவசாயிகளுக்கு ஒன்றரை இலட்சம் இலவச மின் இணைப்புகளை வழங்கி, விழுப்புரம் மாவட்டத்தில் மட்டும் 6 ஆயிரத்து 119 விவசாயிகளுக்கு மின் இணைப்புகளை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

விக்கிரவாண்டி தொகுதி, காணை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 30 கிராமங்களில் மின்னழுத்த பற்றாக்குறை உள்ளதால், அப்பகுதியில் புதிய துணை மின் நிலையம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களை அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் தொகுதி, திருவெண்ணெய்நல்லூர் வட்டம், சித்தலிங்கமடம் ஊராட்சியிலிருந்து பிரிந்து எடப்பாளையம் ஊராட்சியாகச் செயல்பட்டு வருகிறது. எடப்பாளையம் ஊராட்சியை வருவாய்க் கிராமமாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று விக்கிரவாண்டி தொகுதிக்குட்பட்ட விக்கிரவாண்டி வட்டம், ஆசூர் ஊராட்சியிலிருந்து தனியாகப் பிரிந்து பொன்னங்குப்பம் ஊராட்சியாகச் செயல்பட்டு வருகிறது. விழுப்புரம் வட்டம், அரியலூர் திருக்கை ஊராட்சியிலிருந்து டட்நகர் ஊராட்சியாக பிரிந்து செயல்பட்டு வருகிறது. அதைத் தனி வருவாய்க் கிராமமாக அறிவிக்கக் கோரி மாவட்ட ஆட்சியர்மூலம் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது, ஆகவே, மேற்கண்ட மூன்று ஊராட்சிகளையும் வருவாய்க் கிராமங்களாக அறிவிக்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களையும் அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

விக்கிரவாண்டி தொகுதியில் பல்வேறு இடங்களில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் இருளர் வகுப்பைச் சேர்ந்த மக்களுக்கு நம்முடைய தலைவர் அவர்களுடைய ஆட்சியில் மனைப் பட்டாக்களை வழங்கியிருக்கிறார்கள். மேலும் பழங்குடியினர், இருளர், நரிக்குறவர்கள் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஜாதி சான்றிதழ்களை உடனடியாக வழங்குமாறு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

விக்கிரவாண்டி தொகுதியில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் கல்லூரியில் பயில வேண்டுமென்றால், சுமார் 30 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள விழுப்புரம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்குச் சென்றுதான் படிக்க வேண்டிய நிலை உள்ளது. எனவே, இவர்களின் மேற்படிப்பு நலனைக் கருதி, அன்னியூர் பகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்துத் தருமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களையும் அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள முகையூர் ஊராட்சி ஒன்றியத்தில் பையூர், மாரங்கியூர், கொங்கராயனூர் ஆகிய மூன்று ஊராட்சிகள் உள்ளன. இந்த மூன்று ஊராட்சிகளும் முகையூர் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து 25 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளதால், பொதுமக்கள் தங்களது கோரிக்கைகளுக்காகவும், இதர பணிகளுக்காகவும் செல்வதில் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. மேற்படி மூன்று ஊராட்சிகளும் திருவெண்ணெய்நல்லூர் வட்டத்தில் உள்ளதால், இம்மூன்று ஊராட்சிகளையும் அருகில் உள்ள திருவெண்ணெய்நல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் இணைத்தால் அவ்வூர் பொதுமக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும். எனவே, தற்போது முகையூர் ஊராட்சி ஒன்றியத்திலிருக்கும் பையூர், மாரங்கியூர், கொங்கராயனூர் ஆகிய மூன்று ஊராட்சிகளைத் திருவெண்ணெய்நல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் சேர்க்க வேண்டுமாய் அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, விழுப்புரம் மாவட்டம், வானூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து, புதியதாகக் கிளியனூர் ஊராட்சி ஒன்றியம் மற்றும் முகையூர் ஊராட்சி ஒன்றியத்தைப்

பிரித்து மணம்பூண்டி ஊராட்சி ஒன்றியம் ஆகிய இரண்டு ஊராட்சி ஒன்றியங்கள் கடந்த ஆட்சியில் 13–12–2013 அன்று அறிவிக்கப்பட்டு, உத்தரவிடப்பட்டது. ஆனால் நாளதுவரை மேற்படி உத்தரவு நடைமுறைப்படுத்தப்படாமல் நிலுவையில் உள்ளது. எனவே, பொதுமக்களின் நலன் கருதி, ஏற்கெனவே அறிவிக்கப்பட்டபடி, தனியாகப் பிரித்து கிளியனூர் ஊராட்சி ஒன்றியம் மற்றும் மணம்பூண்டி ஊராட்சி ஒன்றியம் ஆகியவற்றைச் செயல்படுத்திடுமாறு மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களை அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

விக்கிரவாண்டி தொகுதியில் கீழ்க்கண்ட ஊராட்சிகளில் அதிக மக்கள்தொகையும் வாக்காளர்களும் உள்ளதால், தனி ஊராட்சியாகப் பிரித்துத் தருமாறு அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன். கல்பட்டு ஊராட்சியிலிருந்து நத்தமேடு, ஆரியூர் ஊராட்சியிலிருந்து சாணிமேடு, மாம்பழப்பட்டு ஊராட்சியிலிருந்து செல்லங்குப்பம், கருவாச்சி ஊராட்சியிலிருந்து புதுகருவாச்சி, பனமலை ஊராட்சியிலிருந்து பனமலைப்பேட்டை, பனமலை ஊராட்சியிலிருந்து உமையாள்புரம் மற்றும் அய்யூர், அகரம் ஊராட்சியிலிருந்து சிந்தாமணி ஆகிய ஊராட்சிகளைப் பிரித்துத் தருமாறு மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களை அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5–55

விக்கிரவாண்டி தொகுதியில் காணை ஊராட்சி ஒன்றியத்தில் பொதுப் பணித் துறை கட்டுப்பாட்டில் உள்ள பனமலை ஈசா ஏரியை நீர்த் தேக்கமாக மேம்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். வாக்கூர் ஊராட்சி மேல்பாதியில் பம்பை ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்துத் தருமாறும் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களை அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

விக்கிரவாண்டி தொகுதியில் கல்பட்டு மற்றும் பனமலைப்பேட்டை ஊராட்சிகளில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தரவும், வேம்பி ஊராட்சியில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் வசதி கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தித் தரவும், முண்டியம்பாக்கத்தில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிக்கு மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் விடுதி, 100

மாணவியர்கள் விடுதி கட்டடம் வி.சாலையில் கட்டும் பணிக்கு ரூ.4.10 கோடியும் நிர்வாக ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. இந்த 4 பணிகளையும் நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களையும் அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

விக்கிரவாண்டி பேரூராட்சியில் உள்ள மயானத்தில் மின் தகன மேடை ஒன்று புதிதாக அமைத்திடவும், 40 ஆண்டுகளாகப் பயன்படுத்தி வரும் 2.5 இலட்சம் லிட்டர் கொள்ளளவுக் கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி மிகவும் பழுதடைந்து, இடிந்துவிழும் நிலையில் உள்ளதாலும், இங்கு அதிக மக்கள் வசிக்கும் காரணத்தால், 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவுக் கொண்ட நீர்த்தேக்கத் தொட்டி புதியதாகக் கட்டித் தருமாறும் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களை அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன். பெரும்பாக்கத்திலிருந்து சூரப்பட்டு வழியாக வரக்கூடிய நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சாலையையும், காணையிலிருந்து வாழப்பட்டு வரை உள்ள சாலையை, ஒரு வழிச்சாலையில் பேருந்து போக்குவரத்துக்குச் செல்வதால், இருவழிச் சாலையாக அகலப்படுத்தித் தருமாறு மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களை அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

விக்கிரவாண்டி பேரூராட்சி அருகில் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் அடிக்கடி விபத்து நடப்பதால், அங்கு மேம்பாலம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், நெடுஞ்சாலைத் துறை கட்டுப்பாட்டில் உள்ள முண்டியம்பாக்கம்–ஒரத்தூர் சாலையிலுள்ள இரயில்வே கடவினைக் கடப்பதற்கு மேம்பாலம் அமைத்துத் தருமாறும் மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், மாம்பழப்பட்டிலிருந்து அரியலூர் திருக்கை, கல்பட்டு வழியாக நத்தமேடு வரை ஏரிக்கரை மேலே செல்கின்ற சாலையை அகலப்படுத்தி, தடுப்புச் சுவர் அமைத்துத் தருமாறும் மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களை அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

விக்கிரவாண்டி தொகுதி, கொட்டியாமுண்டி அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகவும், கஞ்சனூர், மேல்காரணை

உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் தரமுயர்த்தித் தருமாறு மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களை அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், விக்கிரவாண்டி பேரூராட்சியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவ, மாணவியர் என இரு சாராரும் பயில்கின்றனர். எனவே, மாணவிகளை மட்டும் பிரித்து அதே பேரூராட்சியில் உள்ள மகளிர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தருமாறு மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களை அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

விக்கிரவாண்டி தொகுதி, தும்பூர் கிராமத்தில் எழுந்தருளியிருக்கும் இந்து சமய அறநிலையத் துறையைச் சார்ந்த அருள்மிகு ஸ்ரீ சுயம்பு நாகம்மன் கோயில் பிரசித்தி பெற்ற கோயிலாகும். அந்தக் கோயிலுக்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் தரிசனம் செய்ய வருகிறார்கள். அந்தக் கோயிலைச் சுற்றி மதில் சுவர் அமைத்துத் தருமாறும், அதேபோல் கல்பட்டு கிராமத்தில் அருள்மிகு ஸ்ரீமுத்தாலம்மன் திருக்கோயில் உள்ளது. அந்தக் கோயிலுக்கு புதிய திருத்தேர் செய்திடவும் மற்றும் திருப்பணி நடைபெறவும் நிதி ஒதுக்கீடு செய்து தருமாறும் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களை அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

விக்கிரவாண்டி தொகுதியில் 2019 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வரும் ஒருங்கிணைந்த நீதிமன்றம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதற்குப் புதியதாக நீதிமன்றக் கட்டடம் கட்ட போதுமான இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. புதிய கட்டடம் கட்டித் தர நிதி ஒதுக்கித் தருமாறு மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களை அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதிக் கோரிக்கைகளைப் பதிவு செய்துகொள்ளுமாறு அன்போடு கேட்டு எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்து, என் உரையை நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பூமிநாதன் அவர்கள்.

பிற்பகல் 6–00

திரு. மு. பூமிநாதன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசின் மூன்றாமாண்டு நடைபெறும் மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், கூட்டணியில் மதுரை (தெற்கு) தொகுதியை எனக்கு வழங்கிய இந்தியாவிற்கே வழிகாட்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தேர்தலில் போட்டியிட எனக்காக இந்தத் தொகுதியைப் பெற்றுத் தந்த மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் ஆருயிர் தலைவர் திரு. வைகோ அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மதுரை (தெற்கு) தொகுதியினுடைய வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், எனக்காகப் பிரச்சாரம் செய்த மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், கழக இளைஞரணிச் செயலாளர் மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைமைக் கழகச் செயலாளர் ஆருயிர் சகோதரர் திரு. துரை வைகோ அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

என்னை ஆளாக்கிய எனது தாய் மூக்கம்மாள், தந்தையார் முனியாண்டி தேவர், என்னுடைய மனைவி சூரியகாந்தாள் ஆகியோருக்கும் இந்த நேரத்திலே நான் நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1976 ஆம் ஆண்டு நெருக்கடி காலத்திலே மரியாதைக்குரிய மாண்புமிகு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் சென்னை கடற்கரையிலே சீரணி அரங்கக் கூட்டத்திற்குச் செல்லும்போது, அரசு வழங்கிய காரை சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு விழா அலுவலகத்திற்கு முன்பு நிறுத்திவிட்டு, மாண்புமிகு முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் நடந்தே கூட்டத்திற்குச் சென்று உரையாற்றினார்கள். அப்போது அவர், 'பதவி எனக்கு பெரிதல்ல, என் தோளிலே கிடக்கும் துண்டிற்குச் சமம்' என்று பேசினார்கள். அவ்வழியிலே வந்த மாண்புமிகு தளபதி அவர்களும் மக்கள் பிரச்சினைக்கு முக்கியத்துவம் தந்து, எவருக்கும் அஞ்சாமல் திராவிட மாடல் ஆட்சி நடத்தி

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வருகின்றார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மதுரையிலே, தென் மாவட்ட மக்கள் பயன்பெறும் வகையிலே முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நினைவாக நவீன முறையிலே நூலகம் அமைத்ததற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உலகப் புகழ்பெற்ற திரைப்படப் பின்னணிப் பாடகர், பத்மஸ்ரீ உள்ளிட்ட விருதுகளைப் பெற்றவரும், மதுரை (தெற்கு) தொகுதியிலே பிறந்து, தமிழ் திரையுலகிலே முடிசூடா மன்னனாகத் திகழ்ந்த, மறைந்த திரு. டி.எம். சௌந்தரராஜன் அவர்களுக்கு மதுரையிலே முழு உருவச் சிலை அமைப்பதற்கு அனுமதி தந்த தளபதி அவர்களுக்கு என் சார்பாகவும், என்னுடைய தொகுதி மக்கள் சார்பாகவும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சிலையை அமைப்பதற்கு முயற்சி செய்து, ஒத்துழைப்புத் தந்த மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் திரு. பி. மூர்த்தி அவர்களுக்கும், மரியாதைக்குரிய நிதியமைச்சர் மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன் அவர்களுக்கும் மற்றும் மாவட்ட நிர்வாகத்திற்கும் நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மற்றும் அமைச்சர் பெருமக்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த இரண்டு ஆண்டுகளில், ஒன்றரை இலட்சம் இலவச மின்சார இணைப்பு வழங்கியதற்காகவும், விவசாயத்திற்கு 18 மணி நேரம் மும்முனை மின்சாரம் கிடைக்கப்பெறும் என்று உறுதியளித்ததற்காகவும், கைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் 250 யூனிட்டிலிருந்து 300 யூனிட்டாக உயர்த்தியமைக்காகவும், விசைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் 750 யூனிட்டிலிருந்து 1,000 யூனிட்டாக உயர்த்தியதற்காகவும் மரியாதைக்குரிய அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலே நிதிப் பற்றாக்குறை, ஆள் பற்றாக்குறை இருந்தும் மின்சாரத் துறையிலே சிறப்பான முறையிலே பணியாற்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும்,

அவருக்கு உந்து சக்தியாக விளங்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

BPO என்ற call centre மக்களின் மின் தடை குறைகளைக் களைய 24 மணி நேரமும் இயங்க ஏற்படுத்தப்பட்ட திட்டம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது என்பதை இந்த அவையிலே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 6-05

மின்சார வாரியத்திலே நடத்தப்பட்ட தேர்வுகளில் தேர்வாகியுள்ள 5 ஆயிரத்து 493 Gangman பணியாளர்களுக்கு விரைவாகப் பணி ஆணை வழங்கி அவர்களின் வாழ்விலே ஒளியேற்றி வைக்குமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இது தொடர்பாக மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைமைக் கழகச் செயலாளர், அன்பிற்கினிய சகோதரர் திரு. துரை வைகோ அவர்கள், 16-4-2022 மற்றும் 22-12-2022 ஆகிய தேதிகளில் கோரிக்கை மனுவை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நேரடியாக அளித்துள்ளார்கள்.

மதுரை (தெற்கு) சட்டமன்றத் தொகுதியில், வைகை ஆற்றில் திருவிழா நேரங்களில் இலட்சக்கணக்கான மக்கள் கூடும் ஆழ்வார்புரம் பகுதி மற்றும் தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் கூடும் தெப்பக்குளம் போன்ற பகுதிகளில் பூமிக்கடியில் புதைவடக் கம்பிகள் அமைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரை (தெற்கு) சட்டமன்றத் தொகுதியில் மொத்தம் 83 ரேஷன் கடைகள் இருக்கின்றன. அந்த 83 ரேஷன் கடைகளில், 20 கடைகள் மட்டுமே அரசுக்குச் சொந்தமான கட்டடங்களில் இருக்கின்றன. ஆனால், புறநகர்ப் பகுதிகளில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் அதிக கடைகள் கட்டித் தருகின்ற இந்த நேரத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதனைக் கருணையோடு பரிசீலித்து, நகரத்திலுள்ள ரேஷன் கடைகளுக்கும் சொந்தமாகக் கட்டடங்கள் கட்டுவதற்கு நிதி தர வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

44-வது வார்டில் பிரசவ மருத்துவமனை ஒன்று இருக்கின்றது. அந்த மருத்துவமனையை, நம்முடைய மருத்துவம் மற்றும் நல்வாழ்வுத் துறையினுடைய செயலாளர் மற்றும் அதிகாரிகள் எல்லோரும் வந்து ஆய்வு செய்தார்கள். ஆய்வு செய்கிறபோது, 3 ரேஷன் கடைகள் மருத்துவமனைக்குப் பக்கத்தில் உள்ள கட்டடத்தில் இருப்பதனால், அந்த வளாகத்தில் பிரசவத்திற்காக வருகிற பெண்கள் சிரமப்படுகிறார்கள். எனவே, இந்த ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்திலுள்ள நியாய விலைக் கடைகளை அருகிலுள்ள வேறு இடங்களில் மாற்றித் தர வேண்டும். மேலும், இந்த மருத்துவமனையை விரிவுபடுத்தி, தரமுயர்த்த வேண்டுமெனவும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

20 இலட்சத்திற்குமேல் மக்கள் உள்ள பகுதியைத் தனி சுகாதார மாவட்டமாக அறிவிக்கலாம் என்ற அடிப்படையில், மதுரை மாநகராட்சிப் பகுதியைத் தனி சுகாதார மாவட்டமாக அறிவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். மதுரை தெற்கு வாசலில் உள்ள திரவியம் பிள்ளை மாநகராட்சி மருத்துவமனை 1938 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. அந்தக் கட்டடத்தை மராமத்து செய்து, மேம்படுத்த வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன். மதுரை, அனுப்பானடியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் 1968 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. அந்தக் கட்டடம் மிகவும் பழுதடைந்துள்ளது. எனவே, அந்தக் கட்டடத்தை இடித்துவிட்டு, புதிய கட்டடம் கட்டித் தர வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை ராஜாஜி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, 1842 ஆம் ஆண்டு Erskines Hospital ஆக நிறுவப்பட்டு, 1918 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் மாநில அரசின் கட்டுப்பாட்டின்கீழ் வந்தது. இது 1954 ஆம் ஆண்டு, மதுரை ராஜாஜி மருத்துவமனையாக மாறி, சுமார் 21 ஏக்கர் நிலப் பரப்பில் இயங்கிவரும் தமிழ்நாட்டின் இரண்டாவது பெரிய மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாகும். 75 ஆண்டுகள் பழமையான இம்மருத்துவமனையை, இதன் சார்பு மருத்துவமனையான பாலரெங்காபுரம் மண்டல புற்றுநோய் மையம் மற்றும் தோப்பூர் மருத்துவமனையுடன் சேர்த்து பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளுக்காக, ரூ.50 இலட்சம் முதல் ரூ.75 இலட்சம் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகையை உயர்த்தி, தண்ணீர், கழிப்பறை, பாதாள சாக்கடை மற்றும் கழிவுநீர் வெளியேற்ற அமைப்பு ஆகியவற்றைச் சீர்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரையில் உள்ள முக்கியமான இடங்களில் ஒன்றான மாரியம்மன் தெப்பக்குளத்தில் பனையூர் வாய்க்கால் மூலமாக தண்ணீர் வருகின்றது. நகரின் குடியிருப்புப் பகுதிகளைக் கடந்து வர வேண்டியுள்ளதால், இந்தக் கால்வாய்மூலம் நிரப்பப்படும் நீரானது அசுத்தமாகவும், சில நேரங்களில் துர்நாற்றமாகவும் இருக்கின்றது. இதற்குத் தீர்வு காணும் வகையில், குருவிக்காரன் சாலை அருகிலே, வைகை ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணையைக் கட்ட வேண்டும். ஏற்கெனவே அங்கிருந்து தெப்பக்குளத்திற்கு நீரைக் கொண்டு செல்ல அமைக்கப்பட்டிருக்கும் நீர் வழித்தடத்தைப் பயன்பாட்டுக்குக் கொண்டுவர வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன். தெப்பக்குளம் நீர் நிலைப்படுதல்; இதனைச் சுற்றியுள்ள சுமார் 2, 3 கிலோ மீட்டர் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளதால், எல்லா ஆழ்துளைக் கிணறுகளுக்கும் போதிய தண்ணீர் வருவதால் தற்போது தண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டது. இந்தக் கோடைக் காலம் முடிந்து, மழைக் காலம் தொடங்கும் முன்பாக மதுரை (தெற்கு) தொகுதிக்குட்பட்ட பகுதிகளிலே பல ஆண்டுக்காலமாகத் தூர்வாரப்படாமல் உள்ள பனையூர் வாய்க்கால், அனுப்பானடி வாய்க்கால், சொட்டதட்டி வாய்க்கால் மற்றும் கிருதுமால் நதி உள்ளிட்ட வாய்க்கால்களைத் தூர்வார வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 6–10

மதுரை (தெற்கு) தொகுதி, சிந்தாமணி ரோடு, பைபாஸ் சுற்றுச் சாலைக்கு இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்திருக்கிறது. இது தேசிய நெடுஞ்சாலையைச் சென்றடைய எளிய வழியாகும். சிந்தாமணி ரோட்டில் railway crossing உள்ளதால் அங்கே அடிக்கடி போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு மக்கள் மிகவும் சிரமப்பட்டு வருகின்றார்கள். இச்சாலையில் அதிக எண்ணிக்கையில் அரிசி ஆலை இருப்பதால் கனரக வாகனங்கள் பெருமளவு வந்து செல்கின்றன. எனவே, இந்தச் சாலையில் ஒரு இரயில்வே மேம்பாலம் அமைத்துத் தர வேண்டுமென்று மக்களின் முதல்வர் மாண்புமிகு தளபதி அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொல்வது எல்லாம் தொகுதி சார்ந்த கோரிக்கைகளாக இருந்தால் கொடுத்துவிடுங்கள். நீங்கள் அவையில் பேசியதாகப் பதிவு செய்துகொள்ளப்படும்.

2023 ஏப்ரல் 12] [பேரவைத் தலைவர்]

(குறுக்கீடு) சரி இரண்டு நிமிடங்களில் உரையை முடியுங்கள். மணி 6.13–க்கு உரையை முடித்துவிடுங்கள்.

திரு. மு. பூமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை (தெற்கு) தொகுதியிலுள்ள, மதுரை–இராமநாதபுரம் ரோட்டில், காலியிடத்தில் ஒரு விளையாட்டு மைதானமும், சாலையின் மறுபுறம் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் எண்ணத்தில் உதயமான உழவர் சந்தையும் அமைத்துத் தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மரியாதைக்குரிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் 2008–ல் பத்திரிகையாளர் 86 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதற்கு அனுமதி தந்தார்கள். அவர்கள் இலவசமாக, அரசின் வழிகாட்டு மதிப்பில் 5 இலட்சத்து 26 ஆயிரம் ரூபாய் வீதம் பணம் செலுத்தி, 50 பேர் பட்டா வாங்கி வீடு கட்டப் போகும்போது சில இடையூறுகள் இருக்கின்றன. அதைக் களைந்து தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை (தெற்கு) தொகுதியிலுள்ள தெப்பக்குளம் பகுதியில் காவல் நிலையம் கட்டுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பு பணம் ஒதுக்கப்பட்டும் இடம் தேர்வு செய்ய முடியாத சூழ்நிலை உள்ளது. அந்தத் தெப்பக்குளத்திற்குப் பல்லாயிரக்கணக்கான மக்கள் வருவதால், இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலம் நிறைய உள்ளதால், அந்த இடத்தில் காவல் நிலையம் கட்ட அனுமதி தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சிப் பகுதிகளிலே உள்ள மேலஅனுப்பானடி 87–வது வார்டு, 88–வது வார்டு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதையெல்லாம் பதிவு செய்துவிடலாம். நன்றி சொல்லுங்கள். (குறுக்கீடு) போதும், போதும். உரையை முடித்துவிடுங்கள்.

திரு. மு. பூமிநாதன்: உரையை முடித்துவிடுகிறேன். Housing Board மூலம் 20 வருடங்களுக்கு முன்பு இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அங்கும் ஒரு காவல் நிலையம் கட்டித் தர அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 36 ஆண்டுக்காலம் அரசியலில் தொடர்ந்து பயணிக்க ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இதில் நான் பேசினால்தான், என் தொகுதி மக்கள், பரவாயில்லை, நம்முடைய எம்.எல்.ஏ., தொகுதிக் கோரிக்கைகளைப் பேசினார் என்று திருப்தியடைவார்கள். இவ்வளவு நேரம் பேச வாய்ப்பு தந்த உங்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சேகர் அவர்கள். தற்போது நேரம் மாலை 6-13. உங்கள் உரையை 6.23-க்குள் முடித்துவிடுங்கள்.

திரு. S. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு இதய தெய்வம், கழகத்தின் காவல் தெய்வம் அம்மா அவர்களின் ஆட்சியில் ஆயிரம் சாதனைகளையும் ஏழையெளிய மக்களுக்கு உதவிடும் வகையில் எண்ணற்ற திட்டங்களைக் கொண்டுவந்த அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களின் மறைவிற்குப் பிறகு, அடிமட்டத் தொண்டனின் கனவுகளையெல்லாம் நிறைவேற்றிடும் வகையில், ஜனநாயக நாடான இந்தியாவில், மிகப் பெரிய ஜனநாயக கட்சியான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் குடிமராமத்து நாயகன், (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளின் விடிவெள்ளி, ஏழையெளிய மக்களின் இதயத் துடிப்பு, எங்கள் கழகத்தின் பொதுச் செயலாளர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். எங்கள் சட்டமன்றக் கொறடா முன்னாள் அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். 24 மணி நேரமும் தடையில்லா மின்சாரம் கொடுத்த எங்களுடைய மாவட்டச் செயலாளர், முன்னாள் அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். என்னுடைய பரமத்தி-வேலூர் வாக்காளப் பெருமக்களுக்கு மீண்டும் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 6–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் என்னுடைய தொகுதியின் கோரிக்கைகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடைசியில் time கொடுக்கவில்லையென்றால், உறுப்பினர் சொல்வதுபோல, நேரமில்லாமல் போய்விடும்.

காவிரி ஆற்றின் குறுக்கே பிலிக்கல்பாளையம் முதல் கொடுமுடி வரை உயர் மட்டப் பாலம் கட்டுவதற்கு, அண்ணன் எடப்பாடியார் அவர்கள் அறிவித்த திட்டத்திற்கு தற்போது நில எடுப்புப் பணிக்காக, காவிரி ஆற்றின் மூன்று பாலங்கள் உட்பட பிலிக்கல்பாளையத்தில் 29 கோடி ரூபாய்க்கு மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார். அவருக்கு இந்த நேரத்தில் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பாலத்திற்கு உண்டான தொகை கிட்டத்தட்ட 85 கோடி ரூபாய்; நடப்பு ஆண்டிலேயே, அதையும் நீங்கள் ஒதுக்கி விரைவில் கட்டி முடித்துத் தர வேண்டுமென்று உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கபிலர்மலை ஒன்றியத்தில் நூற்றுக்கும் மேலான வெல்லம் தயாரிக்கும் ஆலைக் கொட்டாய்கள் இருப்பதாலும், அடிக்கடி தீ விபத்துகள் ஏற்படுவதாலும், கபிலர்மலை அல்லது ஜேடர்பாளையத்தில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைத்துத் தர ஆவன செய்திட வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், காலையில்தான் ஒரு தீயணைப்பு நிலையம் கொடுத்தீர்கள். மாலையில் ஒன்று கொடுக்க நீங்கள் பரிந்துரை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய பகுதியில் 11–3–2023 அன்று நடந்த சம்பவம் ஒன்றை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். வடகரை ஆத்தூர் ஊராட்சியில், கரப்பாளையத்தில் 27 வயதுடைய வித்தியா என்ற பெண்மணி, தன்னுடைய வீட்டிலிருந்து மாலை 3 மணிக்கு ஆடுகளை மேய்க்கச் சென்றார். அங்கே 17 வயது இளைஞன் அருகில் உள்ள குட்டையில் கஞ்சா மற்றும் மதுபோதையில் மீன் பிடித்துக்கொண்டிருந்தபோது, தனியாக இருந்த அந்தப் பெண்ணைப் பார்த்தவுடன் போதையில் கற்பழித்துவிட்டு, கொலையும் செய்திருக்கிறான். இந்தச் சம்பவத்தில் வேறு யாரேனும் நபர்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றார்களா

என்று, அந்தக் கிராம மக்களும் அவர்களுடைய உறவினர்களும் சந்தேகப்படுகின்றார்கள். இதன் காரணமாக அந்தப் பகுதியில் 4 கரும்பு ஆலைக் கொட்டாய்களுக்குத் தீ வைத்த சம்பவங்கள் அடுத்த இரண்டு நாட்களில் நடந்திருக்கின்றன. ஆகவே, இதனை அரசு விசாரணை செய்து, பாதிக்கப்பட்ட அந்தப் பெண்ணின் குடும்பத்திற்கும், தீ விபத்தினால் சேதமடைந்த கரும்பு ஆலைக் கொட்டாய்களுக்கும் உரிய நிவாரணம் அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமத்தி ஒன்றியத்தில் கோளாரம் ஊராட்சியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தேவைப்படுகிறது. அதற்குத் தனி நபர் இடமும் கொடுக்கின்றார். விதிகளின்படி தேவையான அளவிற்குக் கிலோ மீட்டர் இடைவெளியும் மக்கள் தொகையும் உள்ளது. எனவே, அந்தக் கோளாரம் பகுதி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையத்தை நீங்கள் அமைத்துக்கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, திருமணிமுத்தாறு ஆற்றின் குறுக்கே கிட்டத்தட்ட ஆறு பாலங்கள் உள்ளன. நமது மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் இலுப்புளி தரைமட்டப் பாலத்தை மேல்மட்டப் பாலமாக அறிவித்துள்ளார்கள் அதற்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, மீதமுள்ள 5 பாலங்களையும், விரைவாக இரண்டு ஆண்டுகளுக்குள் கட்டி முடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், வேலூர் பேரூராட்சி, வட்டார மருத்துவமனையில் கூடுதல் கட்டடம் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் பரமத்தி-வேலூர் பேரூராட்சி center ஆன இடம். பொதுமக்கள் வரக்கூடிய இடம். அங்கு மூன்று மாடிக் கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பரமத்தி-வேலூர் பேரூராட்சியில் மக்கள் மன்றம்; கிட்டத்தட்ட 4 மாதங்களாக முடக்கப்பட்டு விட்டது. மன்றக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மேற்பார்வையில்தான் நடந்திருக்கிறது. நம்முடைய பேரூராட்சியைக் கருத்தில்கொண்டு, மக்கள் மன்றம் தொடர்ந்து நடைபெற ஆவன செய்ய வேண்டும். ஏனென்றால் அந்தப் பகுதிகளில் இருக்கக்கூடிய மக்கள் குறைகளை ward உறுப்பினர்கள்மூலம் சொல்லமுடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதிகளில் சில வேலைகள் நடைபெறாத காரணத்தினால் பரமத்தி-வேலூர் பேரூராட்சியை

2023 ஏப்ரல் 12] [திரு. S. சேகர்]

இந்த அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, பரமத்தி ஒன்றியத்தில் மணியனூர், கூடச்சேரி ஆகிய ஊர்களில் 2 சுய உதவிக் குழுக்களுடைய கட்டடங்களுக்குப் போதுமான நிதி இல்லாமல் இருந்தது, அதற்கு மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், அவர்களுடைய பதிலுரையில் ரூபாய் 52 இலட்சம் நிதி ஒதுக்கியதற்கு, என்னுடைய மனமார்ந்த நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல கபிலர்மலை ஒன்றியத்தில் பிலிக்கல்பாளையம் ஊராட்சியில், 110/11 கே.வி. துணை மின் நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடம், நான் ஏற்கெனவே சட்டமன்றத்தில் கூறியுள்ளேன். துறை அதிகாரிகளெல்லாம் சென்று பார்த்தார்கள். அந்த இடம் இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமாக இருப்பதால், அதனுடைய process இன்னும் நடைபெறவில்லை. ஆகவே, இந்தக் கூட்டத்தொடரிலேயே அந்தத் துணை மின் நிலையத்தை அமைத்துக் கொடுக்குமாறு மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய பகுதியிலே கோரைப்பாய் கைத்தொழில் செய்துகொண்டிருக்கிறார்கள். கைத்தறி, விசைத்தறிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கியதைப்போல, கோரைப்பாய்த் தொழிலுக்கும் இவ்வரசு இலவச மின்சாரம் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 6–20

எங்கள் பகுதியில் தென்னை மரங்கள் அதிகமாக இருக்கின்றன. மின்சாரக் கம்பிகள் மேலே செல்கின்ற காரணத்தினால், தென்னை மர மட்டைகள்மீது உரசாத அளவிற்கு covered conduit அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நான் மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குச் செல்வதற்கு முன்பாக, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர், முனைவர் த. இனிகோ இருதயராஜ் அவர்கள் பேசும்போது, ** என்று சொன்னார். அதனை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.*

திரு. S. சேகர்: *அதுபோல, 'நானும் ஒரு விவசாயி, நானும் ஒரு விவசாயி' என்று சொல்லிக்கொண்டிருந்தார். அது யாரைக் குறிக்கிறது என்று தெரியும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது பொதுவான கருத்து.*

திரு. S. சேகர்: *ஆனால், வேளாண் மண்டலத்தைப் பாதுகாத்தவரும், அத்திக்கடவு-அவினாசித் திட்டத்தைக் கொண்டுவந்தவரும், விவசாயிகளின் மனதில் நீங்கா இடம் பிடித்தவர் என்ற காரணத்தினால், (மேசையைத் தட்டும் ஒலி) 'நானும் ஒரு விவசாயி, நானும் ஒரு விவசாயி' என்று சொல்லிக்கொள்வதில் என்ன தவறு இருக்கிறது?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவர் அவ்வாறு குறிப்பிடவில்லை. 'விவசாயி' என்றுதான் குறிப்பிட்டார். அவ்வளவுதான்.*

திரு. S. சேகர்: *மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் ஒரு சில கருத்துகளை நான் குறிப்பிட விரும்புகிறேன். கடந்த காலங்களில் மின்சாரத் துறையில்* peak hours-*ல் 90 சதவிகிதம் அளவிற்கு மின்வெட்டு இருந்தது. மற்ற நேரங்களில் 40 சதவிகிதம் அளவிற்கு மின்வெட்டு இருந்தது. 5-6-2015 முதல் தமிழகத்தில் மின்வெட்டே இல்லையென்ற நிலையினை உருவாக்கிக் காட்டியவர்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களும், மாண்புமிகு எடப்பாடியார் அவர்களும், 2011 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை தமிழகத்தில் 15 ஆயிரத்து 410 மெகா வாட் அளவிற்கு மின் உற்பத்தியினை அதிகரித்து, மின்வெட்டு இல்லாத மாநிலமாக உருவாக்கிக் கொடுத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த காலத்தில், 18 மணி நேரம் வரை மின்வெட்டு இருந்த நிலையினை மாற்றி, உபரி மின்சாரத்தை வெளி மாநிலங்களுக்குக் கொடுத்த அரசு, அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய அரசு என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.*

இயற்கைச் சீற்றங்கள் வரும்போதெல்லாம், குறிப்பாக, இந்திய அளவில் வரலாறு காணாத தானே புயல், வர்தா புயல், ஒகி புயல், கஜா புயல் ஆகிய புயல்கள் தமிழகத்திற்கு வந்தபோது, புயலைவிட வேகமாகப் பணியாற்றி, மக்களுக்கு

2023 ஏப்ரல் 12] [திரு. S. சேகர்]

விரைந்து மின்சாரத்தைக் கொடுத்த அரசு மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய அரசு என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், கஜா புயலின்போது, 3,31,772 மின் கம்பங்கள் முழுமையாகச் சேதமடைந்தன. அந்தச் சூழ்நிலையில் 24 மணி நேரத்தில் சம்பந்தப்பட்ட Collector *அலுவலகங்கள், மருத்துவமனைகள் ஆகியவற்றிற்கு புயல் கரையைக் கடந்த அன்றைய மாலைக்குள் மின்சாரம் வழங்கியது மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய அரசு என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

நமது மாநிலத்தில் கஜா புயலின்போது, மேற்கொள்ளப்பட்ட மீட்புப் பணிகளைப் பார்த்து பாராட்டாத மாநிலங்களே இல்லை. அந்தளவிற்கு மிக வேகமாகப் பணியாற்றி அனைத்துப் பகுதிகளுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டது. ஆனால், இன்று இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் மின்வெட்டு ஏற்பட்டது. ஆனால், மின் தேவை, அதே அளவில்தான் இருந்தது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பராமரிப்பு இல்லாத காரணத்தினால் மின்வெட்டு ஏற்பட்டதாகக் கூறினார்கள். தமிழகம் முழுவதும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த அரசின் ஐந்தாண்டு ஆட்சிக் காலத்தில், குறிப்பாக ஓராண்டில், 2018–2019 ஆம் ஆண்டில்தான் அதிகபட்ச மின் நுகர்வு இருந்தது. அது, ஆண்டு முழுவதும் சேர்த்து 1,11,349 மில்லியன் யூனிட்டுகள். கடந்த 2022–2023 ஆம் ஆண்டில் 1,17,069 மில்லியன் யூனிட்டுகள் அளவிற்கு மின் நுகர்வு பயன்படுத்தப்பட்டுள்ளது. 1,11,000 மில்லியன் யூனிட்டிலிருந்து 1,17,000 மில்லியன் யூனிட்டாக மின் நுகர்வு அதிகரித்து, மின்சாரம் பயன்படுத்தப்பட்டுள்ளது. எந்தவிதத் தடையுமில்லாமல் சீரான மின் விநியோகம் வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக,* peak *என்று பார்த்தால், ஒரு நாள் 388 மில்லியன் யூனிட்டாக முதலில் இருந்தது. ஆனால், நேற்றைக்கு ஒரே நாளில் 397 மில்லியன் யூனிட் அளவிற்கு அதிகபட்சமாக மின் நுகர்வு பயன்படுத்தப்பட்டுள்ளது. அதுவும் தடையில்லாமல் நேற்று மின் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. எனவே, மின் விநியோகத்தின் அதிகரிப்பு, மின் நுகர்வு அதிகரிப்பு பற்றிய தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன தகவல் தவறான தகவல். மின் நுகர்வு அதிகரித்திருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சேகர் அவர்கள், உரையை முடித்துவிடுங்கள். நீங்கள் பேச ஆரம்பித்து 10 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. S. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதைய காலத்தில் மின் நுகர்வு இந்தளவுக்கு வந்ததற்குக் காரணமே 10 ஆண்டுகளில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசும், மாண்புமிகு எடப்பாடியார் அவர்களுடைய அரசும் ஏற்படுத்திய மின் கட்டமைப்புதான். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த summer காலத்திலும் நமக்கு மின்சாரம் கிடைத்துக்கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், 10 நாட்களில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னாலும், மின் விபத்துகள் நிகழாத நாளே இல்லை என்கின்ற நிலைமைதான் இருக்கின்றது. ** உருவாகியிருக்கிறது.

பிற்பகல் 6–25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மண்டலங்களைப் பொறுத்தவரையில், அதிக அளவிலான மின் தேவை இருப்பதால், துணை மின் நிலையங்கள் அமைப்பது மிகுந்த சிரமமாக இருக்கிறது.

மாண்புமிகு அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களது முயற்சியில், பல்வேறு இடங்களில் தாமோதரன் தெரு, pillars தெரு, கண்ணம்மாப்பேட்டை, Corporation Colony ஆகிய இடங்களில் Gas insulated substation (GIS) கொண்டுவந்து, 30 KV துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டு, செயல்பாட்டில் உள்ளன. அதேபோன்று, எங்கள் ஆட்சிக் காலத்தில், சென்னையில் மிக முக்கியமான பகுதிகளான CIT Nagar, முண்டகக் கண்ணியம்மன் கோயில் பகுதி மற்றும் Broadway ஆகிய 3 இடங்களில் துணை மின் நிலையங்கள் அமைப்பதற்காக நிலங்களைக் கையகப்படுத்தியும், இன்னும் அந்த 3 இடங்களிலும் துணை மின் நிலையங்கள் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்படவே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, எங்கள் ஆட்சியில் எதிர்கால மின் தேவையைக் கருத்திற்கொண்டு, 765 KV திறன்கொண்ட 4 துணை மின் நிலையங்கள் அறிவிக்கப்பட்டது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வட சென்னை, அரியலூர், விருதுநகர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில், கோயம்புத்தூரைத் தவிர பிற பணிகள் அனைத்தையும் விரைந்து முடித்து, பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, தென் சென்னை பகுதிகளில் அதிக மின் தேவை இருப்பதன் காரணமாக அடிக்கடி மின் தடை ஏற்படுகிறது. இந்தப் பகுதிகளுக்கு தடையில்லா மின்சாரம் வழங்கப்பட வேண்டுமென்ற காரணத்தினால் வனத் துறையின் அனுமதி கிடைக்காத நிலையில், சதுப்பு நிலங்களில் புதைவடத் தடங்களில் மின் பாதை கொண்டுவந்து தென் சென்னை பகுதிகளில் மின் தடை இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக இதுபோன்ற நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொண்ட அரசு, அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களது அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் ஆட்சிக் காலத்தில், தமிழகம் முழுவதும் மின் வாரியக் கட்டமைப்பினை உயர்த்துவதற்காக, Ambattur Industrial Estate - 230 KV, CMRL-230 KV, மாம்பலத்தில் 230 KV, கிண்டியில் 230 KV, காஞ்சிபுரத்தில் 230 KV, பள்ளிக்கரணையில் 110 KV உள்ளிட்ட பல்வேறு இடங்களில் 400 KV, 200 KV, 110 KV போன்ற உயர்திறன் மிக்க துணை மின் நிலையங்கள் கொண்டுவரப்பட்டு, இன்னும் முழுமையான பயன்பாட்டிற்கு வராமல் இருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று ARS Garden-ல் 110 KV துணை மின் நிலையம் இன்னும் துவங்கப்படாமலேயே உள்ளது. இந்தத் துணை மின் நிலையங்களுக்கெல்லாம் நூற்றுக்கணக்கான கி.மீ. தூரம் புதைவட மின் cables பதிக்கப்பட்டுவிட்டன. மேலும் இப்புதைவட cables தட்டுப்பாட்டில் இருப்பதாகவும் நான் அறிகிறேன். எனவே, இப்பணிகளை விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள். அதற்கு முன்பு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, ** என்று சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. S. சேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புயல் சேதங்களின்போது, வெளி மாநிலங்களைச் சார்ந்த ஆயிரக்கணக்கான பணியாளர்கள் நம் மாநிலத்தில் பணியாற்றுவதைப் பார்த்த மாண்புமிகு அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள், உடனடியாக களப் பணியாளர்களைக்கொண்டு மின் வாரியத்தில் காலியாக இருக்கின்ற பணியிடங்களைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று அன்றைக்கு அறிவுரை வழங்கினார்கள். அதனடிப்படையில் 15,000* Gangman *பணியிடங்களைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று அறிவுறுத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், இதில் சிலர் நீதிமன்றம் சென்றதால், இப்பணியிடங்களைப் பூர்த்தி செய்வதில் காலதாமதமாகியது. நீதிமன்றத் தீர்ப்பு வந்தவுடன், 10,000 பணியாளர்களை திரு. எடப்பாடியார் அவர்களது அரசு, வெளிப்படைத் தன்மையுடன் பூர்த்தி செய்தது. மேலும் 5,000 பணியாளர்கள் நிரப்பப்பட வேண்டுமென்று இரண்டு ஆண்டுகளாக நாங்கள் தொடர்ந்து குரல் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். தேர்வு பெற்றவர்கள் பல போராட்டங்களையும் அறிவித்து, வேலைவாய்ப்பு கிடைக்காத சூழ்நிலையில் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்றனர். முழுக்க முழுக்க வெளிப்படைத் தன்மையுடன் நீதிமன்றத்தின் மேற்பார்வையுடன் நடைபெற்ற அந்தத் தேர்வில், மீதம் இருக்கின்ற 5,000 பணியாளர்களை நியமிக்காமல் காலம் தாழ்த்திக்கொண்டிருப்பது ஏன் என்று தெரியவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களது பதிலுரையில் நான் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், 15 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். உரையாற்றியது போதும். நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள், நீங்கள்* chorus *ஆக சத்தம் போடக் கூடாது. உங்களுக்குத் தேவையான அளவிற்குக் கால அவகாசம் வழங்கப்பட்டது. முதலில் பேசிய மாண்புமிகு உறுப்பினருக்கு எவ்வளவு நேரம் வாய்ப்பு அளிக்கப்பட்டது என்பதை அனைவரும் பார்த்தீர்கள். தற்போது 15 நிமிடங்கள் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.*

திரு. S. சேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வேறு எதுவுமே சொல்லவில்லை. இருப்பதை ஏன் செய்யவில்லையென்று கேட்கிறேன்.*

2023 ஏப்ரல் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உரையை முடித்துவிடுங்கள்.*

திரு. S. சேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1 இலட்சத்து 50 ஆயிரம் விவசாயிகளுக்கு இலவச மின்னிணைப்பு கொடுத்ததாக இப்பேரவையில் பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் சொல்கின்றனர். இந்த 1 இலட்சத்து 50 ஆயிரம் விவசாயிகளுக்கு மின்னிணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறதென்று சொன்னால், எங்களுடைய ஆட்சிக் காலத்தில் மின் கட்டமைப்புகள் முழுமையாக இருந்த காரணத்தினால் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த விவசாயிகளுக்கு உங்களால் மின்னிணைப்பு கொடுக்க முடிந்ததே தவிர, (மணியடிக்கப்பெற்றது) இதற்குக் காரணம் எங்கள் அண்ணன் எடப்பாடியார் அரசுதான் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

பிற்பகல் 6–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் யாரும் உட்கார்ந்துகொண்டு பேச வேண்டாம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். மாண்புமிகு உறுப்பினர் நீங்கள் முடியுங்கள்.*

திரு. S. சேகர்: *எங்களது ஆட்சிக் காலத்தில், மின் கட்டமைப்பு வசதிகள் சரியாக இல்லாமல் இருந்திருந்தால், எப்படி உங்களால் 1 இலட்சத்து 50 ஆயிரம் பேருக்கு மின்னிணைப்பு கொடுத்திருக்க முடியும்?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் அதைப் பதிவு செய்துவிட்டீர்கள். அடுத்தது நன்றி சொல்லி முடியுங்கள். நேரம் இல்லை.*

திரு. S. சேகர்: *இந்த விவசாயிகளுக்கு எல்லாம். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Cricket *பார்க்க போகக்கூடிய வேகத்தில் இருக்கிறார்கள் எல்லோருமே. நீங்கள் முடியுங்கள்.*

திரு. S. சேகர்: *காலையிலேயே தெரியும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி சொல்லி முடியுங்கள்.*

திரு. S. சேகர்: *அதேபோல 24 மணி நேரமும் மும்முனை மின்சாரம் வழங்கிட வேண்டுமென்று. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிறைய விஷயங்கள், நல்ல விஷயங்களெல்லாம் பதிவு செய்துவிட்டீர்கள். நன்றி சொல்லி முடியுங்கள்.

திரு. S. சேகர்: 24 மணி நேரமும் இந்த ஒன்றரை இலட்சம் விவசாயிகளுக்கும் மும்முனை மின்சாரம் வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, 2013 ஆம் ஆண்டு வரை பதிவு செய்தவர்களுக்குத்தான் இலவச மின்சாரம் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் 10 ஆண்டுகள் இலவச மின்சாரத்திற்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் வழங்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றாகச் சொல்லியிருக்கிறீர்கள். நன்றி சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு) நிறைய பதிவு செய்தாகிவிட்டது. மாண்புமிகு அமைச்சர் இரண்டு துறைகளுக்குப் பதில் சொல்ல வேண்டும். (குறுக்கீடு) கடைசி பக்கத்தை எடுங்கள்.

திரு. S. சேகர்: Smart meter திட்டத்தினைப் பொறுத்தவரையில், முதன்முதலில் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஆட்சிக் காலத்தில் மத்திய அரசு உதவியுடன் தி. நகரில் Smart City திட்டம் கொண்டு வந்தபோது, Smart meter பொருத்தும் திட்டமும் தொடங்கப்பட்டது. எனவே, ஏற்கெனவே நடைமுறையில் இருந்த திட்டத்தினை இப்போது புதிய Smart meter திட்டம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்குள்ள மானியத்திற்குத் தொடர்பில்லாத திட்டம். தொடர்புள்ள பக்கத்தை எடுங்கள். நன்றி சொல்லுங்கள், போதும். இருக்கிறதா ? (குறுக்கீடு) சரி.

திரு. S. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமானது, முக்கியமானது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு, இடையூறு இல்லாமல் 17 நிமிடங்கள் பேசியுள்ளீர்கள். நன்றி சொல்லி முடியுங்கள். பதிலுரை. (குறுக்கீடு) முடியுங்கள்.

திரு. S. சேகர்: மதுக்கடைகளைப் படிப்படியாகக் குறைப்போம் என்று சொன்னீர்கள். ஆனால், 2016 ஆம் ஆண்டு தேர்தல் வாக்குறுதியிலே படிப்படியாக குறைப்போம் என்று சொல்லி, அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு முதல்

கையெழுத்திலேயே 500 கடைகளைக் குறைத்தார்கள். அதேபோல அண்ணன் எடப்பாடியார் அவர்களும் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் 500 கடைகளைக் குறைத்தார்கள். நீங்கள் கடையை அதிகரித்துக்கொண்டிருக்கிறீர்களே தவிர, கடைகளைக் குறைப்பதற்கான எண்ணம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், நன்றி சொல்லுங்கள்.

திரு. S. சேகர்: ஒரே ஒரு நிமிடம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லாவற்றிற்கும் பதில் சொல்வார்கள். பதிலுரை மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) போதும், போதும்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) சுயமாய் சிந்தித்து, சுயமரியாதையோடு வாழச் சொல்லித் தந்த பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், தமிழ்நாடு என பெயரிட்ட திராவிட திருமகன், கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டை நம் நெஞ்சில் விதைத்த தமிழ் அன்னையின் தலைமகன் பேரறிஞர் அண்ணா, பெரியாரின் வழிதொட்டு, அண்ணாவின் அடியொற்றி,

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

(திரு. ஓ. பன்னீர்செல்வம் மற்றும் திரு. பால் மனோஜ் பாண்டியன் அவையில் இருந்தனர்.)

(திரு. மு. ஜெகன் மூர்த்தி அவையில் இல்லை.)

நவீன தமிழ்நாட்டைச் செதுக்கிய சிற்பி, தமிழ் நிலத்தில் திராவிடம் செழிக்கச் செய்த வரலாற்று நாயகர் தமிழினத் தலைவரை, முத்தமிழறிஞரை அவரது நூற்றாண்டில் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சுயமரியாதை நின்றாடும் தமிழ் மண்ணில், சுடர்விடும் சூரியனாய், வென்றாடும் திராவிட நாயகரே! எல்லோருக்கும் எல்லாம் கிடைத்திட வேண்டுமென ஒவ்வொரு நொடியும் ஓய்வின்றி உழைத்திடும் சமத்துவக் காவலரே! நேர்மையும், நிதானமும் நிலையான நெஞ்சுரமும் கொண்டு மக்கள் உரிமையையும், மாநில உரிமையையும் காத்து நிற்கும் கலைஞர்

வளர்த்துத் தந்த திராவிடப் போர்வாளே! பகைவர்களையும் அணைத்திடும் அருட்கொடையே! தவிர்த்திடும் நெஞ்சங்களில் துளிர்த்திடும் நம்பிக்கையே! மழலைகள் முதல் முதியவர்கள் வரை வாழ்த்திடும் எங்கள் தலைவரே! பேரன்பே! பெருமதிப்பே! தமிழ் மண்ணின் தனிச் சிறப்பே! மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 6–35

வானில் தோன்றும் வானவில்லின் சிறப்பு 7 நிறங்கள். எங்கள் சின்னவரே உங்கள் சிறப்பு 7 குணங்கள். என்றும் எளிமை; எப்பொழுதும் இனிமை; மலைபோல் பொறுமை; மாசற்ற நேர்மை; வியத்தகு புதுமை; வணங்கத்தகு தூய்மை; வழிகாட்டும் திறமை; மாண்புமிகு அமைச்சராக உங்கள் உழைப்பு; அந்த உழைப்புக்கே உண்டாகும் வியப்பு; தமிழக இளைஞர்களின் திறனை மேம்படுத்துவது உங்கள் இலட்சியம்; உங்கள் ஊக்குவிப்பால் உலக அரங்கில் நம் இளைஞர்கள் வெல்வது நிச்சயம். கழக இளைஞரணிச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் மாண்புமிகு சின்னவர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கத்தைச் சமர்ப்பித்து, அவையின் முன்னவர், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்து, மாண்புமிகு மூத்த அமைச்சர்கள், அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அவையோர் அனைவருக்கும் இந்த நேரத்தில் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எல்லோருக்கும் எல்லாம். தமிழகத்தின் ஒவ்வொரு துறையிலும் விடியல் பிறக்க வேண்டும். தி.மு.க.வுக்கு வாக்களிக்காதவர்கள்கூட நாம் தி.மு.க.வுக்கு வாக்களிக்காமல் விட்டுவிட்டோமோ என்று வருத்தப்படும் அளவிற்கு நாம் களப் பணியாற்ற வேண்டுமென்றார் திராவிட நாயகன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள். ஏழை–பணக்காரன் என்ற பாகுபாடு இல்லை. இருப்பவன்–இல்லாதவன் என்ற வேறுபாடு இல்லை. எல்லாருக்கும் எல்லாம் கிடைத்திட வேண்டும். சமத்துவம் பொங்கிடும் சமூகம் படைத்திட வேண்டும் என்பதே மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்களின் கோட்பாடு. அனைத்துத் தொகுதிகளையும், தன்னுடைய சொந்தத் தொகுதியாக எண்ணிடும் மக்கள் நலன் காக்கும் மன்னவரின் அறிவுறுத்தலின்படி செயல்படும் தமிழ்நாடு

2023 ஏப்ரல் 12] [திரு. V. செந்தில்பாலாஜி]

மின்சாரத் துறை, எல்லோருக்கும் எல்லாம் என்ற திசை நோக்கிப் பயணித்து வருகின்றது என்பதற்கு சட்டப் பேரவையில் மாண்புமிகு உறுப்பினர்கள் முன்னால் வைக்கப்பட்டிருக்கும் எல்லோருக்கும் எல்லாம் என்ற புத்தகமே சாட்சியாக அமைந்திருக்கிறது. 234 சட்டமன்றத் தொகுதிகளுக்கும் ஒரு பொறுப்பு அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார். அந்தப் பொறுப்பு அலுவலர் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களையும் நேரிலே சந்தித்து பேசி, தங்கள் தொகுதியில் இருக்கக்கூடிய மின்சாரத் துறை சார்ந்த பிரச்சினைகளைக் கேட்டு, ஒவ்வொரு தொகுதிக்கும் இந்த இரண்டு ஆண்டுகளில் செய்திட்ட பணிகள், செய்து கொண்டிருக்கின்ற பணிகள், செய்யப்போகும் பணிகள் என மூன்று விதமாகப் பிரித்து, அதை ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் புத்தகமாக அச்சடித்து, நேரிலே சென்று வழங்கியிருக்கின்றார்கள். அதோடு மட்டுமல்லாது, சட்டமன்ற உறுப்பினர்கள், துறையினுடைய அலுவலர்கள் உள்ளிட்டோர் கொண்ட ஒரு WhatsApp குழு உருவாக்கப்பட்டு, அந்த WhatsApp குழுவிலே, புகார்கள் ஏதேனும் தொகுதியிலிருந்து தெரிவிக்கப்பட்டால், உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கக்கூடிய வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு பொறுப்பு அலுவலரை நியமித்து, அதற்கான அறிவிப்பை வெளியிட்டு, இன்று சட்டமன்ற உறுப்பினர்களோடு மின்சாரத் துறையினுடைய அலுவலர்கள் இணக்கமாக பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.

கடந்த 2 ஆண்டுகளில் மொத்தமுள்ள 234 தொகுதிகளிலும், இதுவரை 22,01,100 பராமரிப்புப் பணிகள் நடைபெற்றிருக்கின்றன. எல்லோருக்கும் எல்லாம் என்பது விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட 1.5 இலட்சம் விவசாய மின்னிணைப்புகளே சாட்சியாக அமைந்திருக்கின்றன. புதியதாக நிறுவப்பட்ட 40,020 மின்மாற்றிகளும் அதற்குச் சாட்சியாக அமைந்திருக்கின்றன. புதிய மற்றும் தரமுயர்த்தப்பட்ட, அறிவிக்கப்பட்ட 316 துணை மின் நிலையங்களும் அதற்குச் சாட்சியாக அமைந்திருக்கின்றன. இந்த 2 ஆண்டுகளில் முடிந்த பணிகளையும், இங்கே அறிவிக்கப்பட்டிருக்கின்ற பணிகளையும், சட்டமன்றத் தொகுதி உறுப்பினர்கள் வாரியாக, குறிப்பாக, அரசியல் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் வாரியாக, பிரித்துப் பார்க்கின்றபோது, 234 தொகுதிகளுக்கும், அனைத்துக் கட்சிகளுக்கும், எல்லோருக்கும் எல்லாம் என்ற உன்னத நோக்கத்தோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திட்டங்களை வழங்கியிருக்கின்றார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதிகளுக்கு வழங்கிய விவசாய மின்னிணைப்புகள் 65,343; புதிய மின்மாற்றிகள் 20,093; துணை மின் நிலையங்கள் மொத்தம் 186.

65 சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களின் தொகுதிகளுக்கு வழங்கிய விவசாய மின்னிணைப்புகள் 60,121; அதேபோல, புதிய மின்மாற்றிகள் 12,971; புதிய துணை மின் நிலையங்கள் மொத்தம் 77.

18 சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்களின் தொகுதிகளுக்கு வழங்கிய விவசாய மின்னிணைப்புகள் 5,494; புதிய மின்மாற்றிகள் 2,823; அதேபோல, துணை மின் நிலையங்கள் 16.

பட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்திருக்கின்ற உறுப்பினர்களின் சட்டமன்றத் தொகுதிகளில் வழங்கப்பட்ட விவசாய மின்னிணைப்புகள் 5,862; புதிய மின்மாற்றிகள் 738; 8 துணை மின் நிலையங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

அதேபோல, பா.ஜ.க.-வைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதிகளில் வழங்கப்பட்ட விவசாய மின்னிணைப்புகள் 1,313; புதிய மின்மாற்றிகள் 497; துணை மின் நிலையங்கள் 2.

விடுதலை சிறுத்தைகள் கட்சியைச் சார்ந்திருக்கக்கூடிய 4 சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதிகளில் வழங்கப்பட்ட விவசாய மின்னிணைப்புகள் 1,443; புதிய மின்மாற்றிகள் 403; துணை மின் நிலையங்கள் 4.

பிற்பகல் 6–40

CPI(M) கட்சியைச் சார்ந்திருக்கக்கூடிய இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதிகளில் வழங்கப்பட்ட விவசாய மின்னிணைப்புகள் 1,139; புதிய மின் மாற்றிகள் 391; வழங்கப்பட்ட துணை மின் நிலையங்கள் 2.

அதேபோல CPI கட்சியைச் சார்ந்திருக்கின்ற இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதிகளில் வழங்கப்பட்ட விவசாய மின்னிணைப்புகள் 2,534; புதிய மின் மாற்றிகள் 387; வழங்கப்பட்ட துணை மின் நிலையங்கள் 5.

2023 ஏப்ரல் 12] [திரு. V. செந்தில்பாலாஜி]

ம.தி.மு.க.–வைச் சேர்ந்த நான்கு சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதிகளில் வழங்கப்பட்ட விவசாய மின்னிணைப்புகள் 1,865; புதிய மின் மாற்றிகள் 803; துணை மின் நிலையங்கள் 7.

மனித நேய மக்கள் கட்சியைச் சார்ந்த இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதிகளில் வழங்கப்பட்ட விவசாய மின்னிணைப்புகள் 2,959; புதிய மின் மாற்றிகள் 464.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈஸ்வரன் அவர்களுடைய சட்டமன்றத் தொகுதியில் வழங்கப்பட்டிருக்கின்ற விவசாய மின்னிணைப்புகள் 1,070, புதிய மின் மாற்றிகள் 122.

மாண்புமிகு திரு. வேல்முருகன் அவர்களுடைய தொகுதியில் வழங்கப்பட்டிருக்கின்ற விவசாய மின்னிணைப்புகள் 256; புதிய மின் மாற்றிகள் 105; துணை மின் நிலையம் ஒன்று. இதுவே எல்லோருக்கும் எல்லாம் என்று உன்னத ஆட்சி நடத்துகின்ற மாண்புமிகு தளபதி அவர்களுடைய ஆட்சிக்கு ஒரு சான்றாக, (மேசையைத் தட்டும் ஒலி) அனைவருக்கும் திட்டங்களைத் தந்திருக்கின்றார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பூவை ஜெகன்மூர்த்தி அவர்களது தொகுதியில் வழங்கப்பட்ட விவசாய மின்னிணைப்புகள் 601; புதிய மின் மாற்றிகள் 223; துணை மின் நிலையங்கள் 3.

இந்த இரண்டு ஆண்டுகளில் 234 சட்டமன்றத் தொகுதிகளிலும், 95,000 பழுதடைந்த மின் கம்பங்கள் புதிதாக மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளில் பழுதடைந்த மின் கம்பங்கள் தொகுதி வாரியாக கணக்கெடுக்கப்பட்டு, புகார்கள் வந்ததோ, வரவில்லையோ அனைத்தையும் அலுவலர்கள் நேரில் சென்று, கணக்கெடுத்து 95,000 பழுதடைந்த மின் கம்பங்கள் இதுவரை மின் துறை வரலாற்றில் இல்லாத வகையில் இரண்டு ஆண்டுகளில் மாற்றப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். 'எல்லோருக்கும் எல்லாம்' என்ற மாண்புமிகு முதலமைச்சர் தளபதியின் வைர வரிகள் வெறும் சொல் அல்ல, செயல் என்பதை இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

விவசாய மின்னிணைப்புகளைப் பொறுத்தவரையில் ஒன்றரை இலட்சம் விவசாயிகளின் வாழ்வு செழித்திட மின்னிணைப்பை வழங்கினார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். உழவர் குல

விளக்காக, விவசாயிகளுடைய பாதுகாவலராக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது இந்தத் திட்டம். ஏற்கெனவே வழங்கப்பட்ட திட்டங்களை நாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, 2006 முதல் 2011 வரையிலான முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய பொற்கால ஆட்சியில் அறிவிப்புகள் வெளியிடப்பட்டவை 2,72,000. வழங்கியவை 2,12,000. ஆனால், கடந்த பத்து ஆண்டுகளில் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் 4,10,000. ஆனால், வழங்கியவை வெறும் 2,20,000. மாண்புமிகு முதலமைச்சருடைய இரண்டு ஆண்டுக்கால ஆட்சியில் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் 1,50,000, வழங்கியவை 1,50,000. நூற்றுக்கு நூறு என்கிற அளவில் இலக்கை எட்டிய அரசு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்களுடைய அரசு என்பதை இந்த நேரத்தில் பணிவனபோடு சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

இலவச மின்னிணைப்பு திட்டத்தைப் பற்றி இங்கே பரமத்தி–வேலூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். 2003–ல் அவர்கள் ஆட்சியில்தான் நிறுத்தி வைத்திருந்தார்கள். அதன் பிறகு பத்து ஆண்டுகள் இலவச மின் இணைப்பிற்கு பதிவு செய்து காத்திருக்கக்கூடிய விவசாயிகளுக்கு மின்னிணைப்பு வழங்கி நிறைவு செய்யப்பட்டிருக்கின்றன.

அதேபோல் Tatkal திட்டத்தில், குறிப்பாக 2017–க்கு பிறகு அரசு திட்டங்களின்படி பதிவு செய்தவர்களுக்குக் கடந்த காலங்களில் மின்னிணைப்பு வழங்கப்படவில்லை. அதைப் பார்த்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆய்வுக் கூட்டத்தில் துறைக்கு உத்தரவிட்டார்கள். குறிப்பாக, Tatkal திட்டங்களில் TAHDCO போன்ற துறையின் மூலமாக பதிவு செய்து காத்திருப்பவர்களுக்கு, அனைத்து விவசாயிகளுக்கும் உடனடியாக மின்னிணைப்பை வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டு, அந்த மின்னிணைப்புகளும் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

2021–2022 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்தமாக பயன்பெற்றிருக்கக்கூடிய விவசாயப் பரப்பளவு என்பது 2,91,173 ஏக்கராகும். ஒன்றரை இலட்சம் விவசாயிகள் மின்னிணைப்பைப் பெற்றிருக்கின்றார்கள். இதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கக்கூடிய அரசு மானியம் ஓர் ஆண்டிற்கு 3,550 கோடி ரூபாய், ஒன்றரை இலட்சம் விவசாயிகளுக்கு அரசு நிதியை மானியமாக வழங்கி, இலவச மின்னிணைப்பை வழங்கக்கூடிய

2023 ஏப்ரல் 12] [திரு. V. செந்தில்பாலாஜி]

மகத்தான திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். உண்மையான விவசாயினுடைய தோழனாக இருந்து டெல்டா மாவட்டத்தினுடைய சொந்தக்காரராக இருந்து ஒன்றரை இலட்சம் விவசாயிகளுடைய வாழ்வில் விளக்கேற்றிய முதலமைச்சர் மாண்புமிகு தளபதி அவர்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

Lift Irrigation-ஐப் பொறுத்தவரைக்கும் மொத்தம் 56 மின்னிணைப்புகள் இருக்கின்றன. நாம் சாதாரணமாக Lift Irrigation என்பது இலவச மின்சாரம் தானே வழங்கப்படுகிறது என்று நினைக்கிறோம். இந்த 56 மின் இணைப்பிற்கு மட்டும் ஓர் ஆண்டிற்கு, இந்த ஆண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 57 கோடியே 51 இலட்சம் ரூபாய் அரசு நிதியை மானியமாக வழங்கியிருக்கின்றார்கள். ஏறத்தாழ ஒரு மின்னிணைப்பிற்கு ஒரு கோடியே 2 இலட்சம் ரூபாய் அரசினுடைய நிதி, மானியமாக இந்தத் திட்டத்தின்மூலம் பயன்பெற்ற விவசாயப் பெருமக்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்குகின்றார்கள் என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன்.

பிற்பகல் 6–45

அதேபோல, கைத்தறி நெசவாளர்கள் மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்கான திட்டமான, உழைத்திடும் மனிதர்களை உயர்த்திடும் உன்னதம், நொடித்திடும் குடும்பங்களை எடுத்திடும் திட்டங்களால் வளர்த்திடும் பெருந்தகை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் தாயுள்ளம்கொண்டு, கைத்தறி, விசைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கிய சலுகைகளால், இரவினில்கூட ஓயாமல் இயங்கிடும் தறியினுடைய சப்தம் என்பதை இந்த நேரத்தில் நெசவாளர் பெருமக்கள் பாராட்டிக் கொண்டிருக்கின்றார்கள்.

குறிப்பாக, விசைத்தறி நெசவாளர்களைப் பொறுத்தவரையில், 100 யூனிட் இலவச மின்சாரம் என்பது 1–8–2006 அன்று முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் வழங்கப்பட்ட ஒரு மகத்தான திட்டம். அதற்குப் பிறகு, அந்த 100 யூனிட் என்பது 200 யூனிட்டாக மாறி, தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கைத்தறி நெசவாளர்களுக்கு 200 யூனிட்டிலிருந்து

300 யூனிட் ஆக உயர்த்தி வழங்கியிருக்கின்றார்கள். விசைத்தறி நெசவாளர்களுக்கு 750 யூனிட்டுகளிலிருந்து 1,000 யூனிட்டுகளாக இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை வழங்கும் இலவச மின்சாரத்தை உயர்த்தி வழங்கியிருக்கிறார்கள்.

நாங்கள் சோமனூர் பகுதியில் இருக்கின்ற விசைத்தறி நெசவாளர்கள் சங்கத்தின் தலைவராக, அந்த மக்களுடைய நன்மதிப்பைப் பெற்றுப் பணியாற்றிய அண்ணன் திரு. பழனிசாமி அவர்களுடைய மறைவிற்காக அவருடைய இல்லத்திற்குச் சென்று, உறவினர்களைப் பார்த்துப் பேசிக்கொண்டிருந்தபொழுது, மனந்திறந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டினார்கள். உள்ளபடியே அந்த நேரத்தில் நாங்கள் நெகிழ்ந்துபோனோம். 16 தறிகளை இயக்கக்கூடிய ஒரு விசைத்தறி உரிமையாளர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கக்கூடிய 1,000 யூனிட் இலவச மின்சாரத்தைப் பயன்படுத்தி, ஒரு பைசாகூட கட்டணமில்லாமல் தன்னுடைய வாழ்வை மேம்படுத்திக்கொள்ளலாம் என்ற மகத்தான திட்டத்தை வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) விசைத்தறி நெசவாளர்களும், கைத்தறி நெசவாளர்களும் தங்களுடைய வாழ்நாள் முழுவதும் நாங்கள் நன்றிக்கடன் பட்டவர்கள் என்ற வார்த்தையை அந்த நேரத்தில் அவர்கள் விவரித்து, எங்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுங்கள் என்றும் சொன்னார்கள்.

அதுமட்டுமல்லாமல், ஏறத்தாழ 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கைத்தறி, விசைத்தறி நெசவாளர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நேரில் வந்து அழைத்து, கருமத்தம்பட்டியில் மிகப் பெரிய பாராட்டு விழாவையும், நன்றியறிவிப்பையும் மிகப் பிரம்மாண்டமாக நடத்தினார்கள். எங்கள் வாழ்நாள் முழுவதும் நாங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியுடையவர்களாக இருப்போம் என்ற உறுதியையும் அவர்கள் அந்த மேடையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, மின்னகம். மின் நுகர்வோர் மையத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 20-6-2021 அன்று தங்களுடைய திருக்கரங்களால் தொடங்கி வைத்தார்கள். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. பூமிநாதன் அவர்கள்கூட அதைப் பற்றி இங்கே தெளிவாக எடுத்துச் சொன்னார்கள்.

2023 ஏப்ரல் 12] [திரு. V. செந்தில்பாலாஜி]

இங்கே தொடங்கப்பட்ட மின்னகம் என்பது மக்களிடத்திலே மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கக்கூடிய திட்டமாக அமைந்திருக்கிறது. முதலில் இதற்காக மொத்தம் 107 எண்கள் இருந்தன. ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு எண். ஒருவருடைய வீடு ஒரு பகுதியில் இருக்கும்; Office ஒரு பகுதியில் இருக்கும்; தோட்டம் ஒரு பகுதியில் இருக்கும்; ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு இடத்திற்குச் செல்கின்றபோதும் அந்த அலுவலகத்தின் எண் தனித்தனியாக இருக்கக்கூடிய சூழ்நிலையை மாற்றி, ஒரே எண்ணில் தற்போது 94987 94987 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு மின் துறை சார்ந்த புகார்களைத் தெரிவித்தால் உடனுக்குடன் தீர்வு காணக்கூடிய மகத்தான திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். இதுவரை, ஏறத்தாழ 15 இலட்சம் புகார்கள் மின்னகத்திற்கு வரப்பெற்றிருக்கின்றன. அதில், 99.5 விழுக்காடு புகார்களுக்கு உடனடியாகத் தீர்வுகள் காணப் பெற்றிருக்கின்றன என்பதையும் இந்த நேரத்தில் பெருமையோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற இரண்டு ஆண்டுகளில் 9 மண்டல அலுவலகங்களுடன் கூடுதலாக 3 புதிய மண்டல அலுவலகங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 16–4–2022 அன்று தங்களுடைய திருக்கரங்களால் தொடங்கி வைத்திருக்கின்றார்கள். (1) திருவண்ணாமலை, (2) தஞ்சாவூர், (3) கரூர் ஆகிய இடங்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய திருக்கரங்களால் 3 புதிய மண்டல அலுவலகங்களை மின் வாரியத்திற்கு வழங்கியிருக்கின்றார்கள்.

அதேபோல, பல ஆண்டுகளாகக் கோட்ட அலுவலகங்கள் புதிதாக உருவாக்கப்படாமல் இருந்த நிலையை மாற்றி, மின்னிணைப்புக்கேற்ப புதிய அலுவலகங்களைத் திறந்திட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவுகளை வழங்கி, புதிய கோட்ட அலுவலகங்களாக சேப்பாக்கம், சோழிங்கநல்லூர், பல்லாவரம், தேன்கனிக்கோட்டை, பெண்ணாகரம், திருவெண்ணெய்நல்லூர், ஊத்துக்குளி, வேடசந்தூர், ஜெயங்கொண்டம், சாத்தூர், கெங்கவல்லி ஆகிய 11 இடங்களைத் தலைமையிடமாகக்கொண்டு புதிய கோட்ட அலுவலகங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 15–12–2022 அன்று தொடங்கி வைத்து மின்சார வாரியத்திற்குப் பெருமை சேர்த்தார்கள்.

இங்கே பேசிய பரமத்தி-வேலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் மின் விநியோகத்தைப் பற்றி சுட்டிக்காட்டினார்கள். கடந்த ஆட்சிக் காலத்தில் 505 விபத்துகள் ஏற்பட்டன; அவை மரண விபத்துகளாக நடந்திருந்தன; இந்த இரண்டு ஆண்டுகளில் 64 மரண விபத்துகள், மின் விபத்துகள் நிகழ்ந்திருக்கின்றன; இதையும் முழுவதுமாகக் குறைத்திட வேண்டும்; அதற்கான நடவடிக்கைகளை எடுத்திட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மின்சார வாரியத்திற்கு உத்தரவுகளை வழங்கியிருக்கின்றார்கள்.

அதேபோல, கடந்த 5 ஆண்டுகளில் குறிப்பாகப் பார்க்கின்றபோது, வாரிசுகளுக்கான வேலை என்பது முழுமையாக வழங்கப்படாமல், அதற்கான விண்ணப்பங்கள் நிலுவையில் இருந்தன. விபத்தில் இறந்த மின் வாரியத்தின் ஊழியர்களுடைய வாரிசுகளுக்கான வேலைகளை உடனடியாக வழங்கிட வேண்டும் என்று உத்தரவிட்டு, இந்த இரண்டு ஆண்டுகளில் 1,374 வாரிசுதாரர்களுக்கு மின்சார வாரியத்தில் வேலை உருவாக்கப்பட்டு, அதற்கான உத்தரவுகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய திருக்கரங்களால் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதையும் இந்த நேரத்தில் பெருமையோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 6–50

மின் இணைப்பையும், மின் பளுவையும் பொறுத்தவரையில் உங்களிடத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புவது, இந்த இரண்டு ஆண்டுகளில் 14 இலட்சத்து 77 ஆயிரம் புதிய மின்னிணைப்புகள் அனைத்து நிலைகளிலும் வழங்கப்பட்டிருக்கின்றன. பெருமையோடு சொல்ல வேண்டுமென்றுசொன்னால், அந்த மின்னிணைப்புகளில் LT தொழிற்சாலைகளைப் பொறுத்தவரை, இந்த 2 ஆண்டுகளில் 7,068 புதிய மின்னிணைப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. HT தொழிற்சாலைகளைப்பொறுத்தவரை, 611 புதிய மின்னிணைப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இணைக்கப்பட்டிருக்கின்ற

மின்பளு, connected load 2016 முதல் 2021 வரை, 5 ஆண்டுகளில் இணைக்கப்பட்ட மின்பளு என்பது 20 ஆயிரத்து 754 மெகா வாட் மட்டுமே கூடுதலாக இணைக்கப்பட்டன. இந்த இரண்டே ஆண்டுகளில் மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்களின் பொற்கால ஆட்சியில் 17 ஆயிரத்து 594 மெகா வாட் அளவிற்குக் கூடுதலாக மின்பளு இணைக்கப்பட்டு ஒரு வரலாற்றுச் சாதனையை மின் வாரியம் நிகழ்த்தியிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 12] [திரு. V. செந்தில்பாலாஜி]

அதேபோல, மின் விற்பனையைப் பற்றி இந்த நேரத்தில் நான் குறிப்பிடுவது சாலப் பொருத்தமாக இருக்கும். அதிலும் குறிப்பாக, இங்கே பேசிய எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரை, மின் தேவை அதிகரிக்கவில்லையென்று சுட்டிக்காட்டினார்கள். 2018–2019 ஆம் ஆண்டு தொழிற்சாலைகளைப் பொறுத்தவரை, 33 ஆயிரத்து 813 மில்லியன் யூனிட் ஓராண்டிற்குத் தேவையென்பது 2021–2022 ஆம் ஆண்டு 35 ஆயிரத்து 615 மில்லியன் யூனிட்டாகவும், 2022–2023 ஆம் ஆண்டு 38 ஆயிரத்து 173 மில்லியன் யூனிட்டாகவும் அதிகரித்திருக்கின்றன. 2018–2019 ஆம் ஆண்டைவிட 2022–2023 ஆம் ஆண்டில் 4,360 மில்லியன் யூனிட்டாக இந்த 2 ஆண்டுகளில் அதிகரித்திருக்கிறது. குறிப்பாக, 12.90 விழுக்காடு அளவிற்குத் தொழிற்சாலைகளுக்கான மின்நுகர்வு அதிகரித்திருக்கின்றது என்பதையும் இந்த நேரத்தில் பெருமையோடு எடுத்துச் சொல்ல விரும்புகின்றேன்.

அதேபோல மின் உற்பத்தியைப் பற்றி இங்கே குறிப்பிட வேண்டியது கடமையாக இருக்கின்றது. மின் உற்பத்தி என்பதும், அதனுடைய இலக்கு என்பதும் நீர்மின் திட்டங்களைப் பொறுத்தவரை, ஒன்றிய அரசின் ஆணையம், கடந்த 5 ஆண்டுகளில் 20 ஆயிரத்து 807 மில்லியன் யூனிட் என்பதை இலக்காக வைத்தது. ஆனால் 5 ஆண்டுகளில் 20 ஆயிரத்து 359 மில்லியன் யூனிட் உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றது. இரண்டே ஆண்டுகளில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பொற்கால ஆட்சியில் ஒன்றிய அரசின் மின் ஆணையம், நிர்ணயித்த இலக்கு 7,767 மில்லியன் யூனிட். 11 ஆயிரத்து 688 மில்லியன் யூனிட் உற்பத்தி செய்து இதுவரை வரலாற்றில் இல்லாத அளவிற்கு உச்சபட்ச உற்பத்தியை நீர் மின் நிலையங்கள், புனல் மின் நிலையங்கள் உற்பத்தி செய்து சாதனை படைத்திருக்கின்றன என்பதையும் இந்த நேரத்தில் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அதேபோல, காற்றாலை மின் உற்பத்தி என்பது 2018–2019–ல் 10 ஆயிரத்து 991 மில்லியன் யூனிட், 2019–2020–ல் 10 ஆயிரத்து 840 மில்லியன் யூனிட், 2020–2021–ல் 10 ஆயிரத்து 604 மில்லியன் யூனிட், 2021–2022–ல் 11 ஆயிரத்து 316 மில்லியன் யூனிட், 2022–2023–ல் 12 ஆயிரத்து 496 மில்லியன் யூனிட் அளவிற்கு உற்பத்தி செய்து இதிலும் சாதனை படைத்திருக்கிறது தமிழ்நாடு மின்சார வாரியம்.

அதேபோல, சூரியசக்தி மின் உற்பத்தியைப் பொறுத்தவரை, 2021–2022 ஆம் ஆண்டு 6 ஆயிரத்து 532 மில்லியன் யூனிட்டும், 2022–2023 ஆம் ஆண்டு 8 ஆயிரத்து 277 மில்லியன் யூனிட்டும். இதுவரை சூரியசக்தி மின் உற்பத்தி என்பது வரலாற்றில் சிறப்பை சேர்க்கக்கூடிய வகையில் அதிக உற்பத்தியைச் செய்து தமிழ்நாடு மின்சார வாரியம் சாதனை படைத்திருக்கின்றது.

தமிழ்நாட்டின் ஒரு நாள் சராசரி மின்சாரப் பயன்பாடு என்பது, 2019–2020 ஆம் ஆண்டில் 305 மில்லியன் யூனிட் என்பதே கடந்த ஆட்சியில் அதிக மின்நுகர்வாக இருந்தது. மாண்புமிகு தளபதி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் 2022–2023 ஆம் ஆண்டில் ஒரு நாள் சராசரி பயன்பாடு என்பது, 321 மில்லியன் யூனிட்டாக, அதாவது 16 மில்லியன் யூனிட் ஒரு நாளைக்கு அதிகரித்து ஆண்டு முழுவதும் இதனை விநியோகிப்பதற்கான திட்டங்களைச் செயல்படுத்துகிறது என்பதையும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் உச்சபட்ச மின் தேவை 26–3–2021 அன்று 16 ஆயிரத்து 481 மெகா வாட். மின் தேவை 6–4–2023 அன்று 18 ஆயிரத்து 252 மெகா வாட்டாக எட்டி உச்சம் தொட்டது. அதேபோல, மாநிலம் முழுவதும் ஒரு நாள் அதிகபட்ச மின்நுகர்வு 26–3–2021 அன்று 362 மில்லியன் யூனிட்டாகவும், 29–4–2022 அன்று 388.078 மில்லியன் யூனிட்டாகவும், நேற்று, 11–4–2023 அன்று 397.785 மில்லியன் யூனிட்டாகவும் பதிவாகி சாதனை படைத்திருக்கிறது.

காற்றாலை மின் உற்பத்தியும் அதிகரித்து, சூரியசக்தி மின் உற்பத்தியும் அதிகரித்து, மிகச் சிறப்பான பணிகளை, தமிழ்நாடு மின்சார வாரியம் உற்பத்தியையும், அதற்கான ஏற்பாடுகளையும் செய்து நிறைவு செய்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 6–55

அதேபோல, கோடைக்காலத்தின் மின் தேவையைக் கணக்கிட்டு, குறுகிய கால ஒப்பந்தங்கள்மூலம் அதாவது, மார்ச், ஏப்ரல், மே ஆகிய 3 மாதங்களுக்குத் தேவையான மின்சாரத்தை நாம் அதற்கான முன்னேற்பாடுகளைச் செய்திட வேண்டுமென்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவு. இந்த மூன்று மாதங்களுக்குத் தேவையான மின்சாரம் என்பது மார்ச் மாதத்திற்கு 1,355 மெகா வாட், ஏப்ரல் மாதத்திற்கு 1,293 மெகா வாட், மே மாதத்திற்கும் சேர்த்து இந்த 3 மாதங்களுக்குமான மின்சாரத்

2023 ஏப்ரல் 12] [திரு. V. செந்தில்பாலாஜி]

தேவையினைக் கவனத்திலேகொண்டு, குறுகிய கால ஒப்பந்தங்கள் மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டு, இப்போது எந்தவிதத் தடையும் இல்லாமல் சீரான மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. இதையே சந்தையில் மின்சாரம் வாங்கினால் 1 யூனிட் மின்சாரம் 12 ரூபாய் என ஒன்றிய அரசு நிர்ணயம் செய்திருக்கிறது. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்களின் அடிப்படையில், நாம் மேற்கொண்ட குறுகிய கால ஒப்பந்தங்கள் மற்றும் எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் காரணமாக ஒரு யூனிட் 8 ரூபாய் 50 பைசா என ஒப்பந்தம்மூலம் இறுதி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு 8 ரூபாய் 50 பைசா விலையில் கொள்முதல் செய்யப்படுவதால், தமிழ்நாடு மின்சார வாரியம் இந்த ஆண்டு இந்த மூன்று மாதங்களில் மட்டும் 1,312 கோடி ரூபாய் சேமிப்பை உருவாக்கி ஒரு வரலாற்றுச் சாதனையை நிகழ்த்தியிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல, வரவு-செலவைப் பொறுத்தவரை, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கடனை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுவது எனது கடமையாக நினைக்கின்றேன். 2019–2020 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் ஒட்டுமொத்த வருவாய் என்பது 65 ஆயிரத்து 177 கோடி ரூபாய், செலவினம் என்பது 77 ஆயிரத்து 142 கோடி ரூபாய், பற்றாக்குறை-நஷ்டம் என்பது 11 ஆயிரத்து 964 கோடி ரூபாய். 2020–2021 ஆம் ஆண்டில் வருவாய் 52 ஆயிரத்து 830 கோடி ரூபாய், செலவினம் 66 ஆயிரத்து 237 கோடி ரூபாய், நஷ்டம் என்பது 13 ஆயிரத்து 407 கோடி ரூபாய் அளவிற்கு ஓராண்டில் ஏற்பட்டிருக்கிறது. 2021–2022 ஆம் ஆண்டில் வருவாய் 61 ஆயிரத்து 162 கோடி ரூபாய், செலவு 72 ஆயிரத்து 375 கோடி ரூபாய், நஷ்டம் 11 ஆயிரத்து 213 கோடி ரூபாய். 2020–2021 ஆம் ஆண்டில் 13 ஆயிரத்து 407 கோடி ரூபாயாக இருந்த நஷ்டம் 2021–2022 ஆம் ஆண்டில் 11 ஆயிரத்து 213 கோடியாக குறைக்கப்பட்டுள்ளது. அதேபோல, 2022–2023 ஆம் ஆண்டு வருவாய் என்பது 70 ஆயிரத்து 97 கோடி ரூபாய், செலவினம் என்பது 77 ஆயிரத்து 683 கோடி ரூபாய், நஷ்டம் என்பது 7 ஆயிரத்து 566 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தின் ஒட்டுமொத்த நஷ்டங்களையும் சேர்த்து பார்க்கும்போது, 2019–2020 ஆம் ஆண்டில் 13 ஆயிரத்து 39 கோடி ரூபாய், 2020–2021 ஆம் ஆண்டில் 15 ஆயிரத்து 158 கோடி ரூபாய், 2021–2022 ஆம் ஆண்டில்

12 ஆயிரத்து 992 கோடி ரூபாய், 2022–2023 ஆம் ஆண்டில் 8 ஆயிரத்து 449 கோடி ரூபாய். எனவே, எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக இந்த இழப்புகள் குறைக்கப்பட்டிருக்கின்றன.

கடனைப் பொறுத்தவரை, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கடன் என்பது, குறிப்பாக 2021 ஆம் ஆண்டு 1 இலட்சத்து 60 ஆயிரம் கோடி ரூபாய் அளவில் இருந்தது. இந்த இரண்டாண்டுகளில் கூடுதலாக 14 ஆயிரம் கோடி ரூபாய் கடன் சேர்ந்திருக்கிறது. அதற்குக் காரணம், கடந்த காலங்களில் வாங்கப்பட்ட கடன்களுக்குச் செலுத்தப்படுகின்ற வட்டி. ஆகையால், இந்த 14 ஆயிரம் கோடி ரூபாய் கடனையும் முழுவதுமாகக் குறைத்திட வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை எடுத்திட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுரைகளை வழங்கியிருக்கின்றார்கள்.

அதேபோல, அரசு மானியங்களைப் பொறுத்தவரை, கடந்த ஆட்சியில் 8 ஆயிரத்து 800 கோடி ரூபாய் அளவிற்கு இருந்த மானியம் தொடர்ந்து அதே அளவு இந்த ஆண்டுகளிலும் வழங்கப்பட்டிருக்கின்றது. ஆனால், இந்த இரண்டாண்டுகளில், 2021–2022 ஆம் ஆண்டு தொடங்கி 2022–2023 ஆம் ஆண்டு வரை 12 ஆயிரம் கோடி ரூபாயும், 2023–2024 ஆம் ஆண்டிற்கு 14 ஆயிரம் கோடி ரூபாயும் என அரசு நிதியை மின்சார வாரியத்திற்கு மானியமாக வழங்கி, மின்சார வாரியத்தைக் காப்பாற்றியிருக்கக்கூடிய முதலமைச்சர் மாண்புமிகு தளபதி அவர்கள்.

அதேபோல, வீட்டு இணைப்பிற்கு 100 யூனிட் இலவச மின்சாரம். விவசாயிகளுக்கான மின் இணைப்பைப் பொறுத்தவரை, 5 ஆயிரத்து 584 கோடி ரூபாயை அரசு மானியமாக வழங்குகிறது. விசைத்தறி நெசவாளர்களுக்கு 397 கோடி ரூபாயை அரசு மானியமாக வழங்குகிறது. இவ்வாறு தொடர்ச்சியாக அனைத்துத் திட்டங்களுக்கும் அரசு நிதியை மானியமாக வழங்கி மின்சாரத் துறையையும், மக்களையும் காப்பாற்றி வருகிற முதலமைச்சர் மாண்புமிகு தளபதி அவர்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

சேமிப்பைப் பொறுத்தவரை, பல்வேறு வழிகளில் மேற்கொள்ளப்பட்ட சிக்கன நடவடிக்கைகளின் காரணமாக, பல்வேறு சீர்திருத்தங்களின் காரணமாக சேமிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. PFC, REC மூலமாக நிறுவனங்களின் வட்டி விகிதம் குறைந்த வகையில் மின் தொடரமைப்புக் கழகத்தில் 148 கோடி ரூபாய் சேமிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின்

2023 ஏப்ரல் 12] [திரு. V. செந்தில்பாலாஜி]

உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தொடரமைப்புக் கட்டணம் குறைக்கப்பட்டிருப்பதன் காரணமாக 148 கோடி ரூபாய் அல்லாமல், கூடுதலாக மின் சிக்கன சேமிப்பும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணையம் மற்றும் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் எதிர் மனு மற்றும் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்ததன் மூலமாக கட்டணம் குறைக்கப்பட்ட வகையில் 387 கோடி ரூபாய் மின்சார வாரியத்திற்குச் சேமிப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

தூத்துக்குடி துறைமுகத்தில் அதிக திறன்கொண்ட இரண்டு புதிய நிலக்கரி கையாளும் இயந்திரங்கள் நிறுவப்பட்டதன் மூலமாக ஏற்பட்ட சேமிப்பு 80 கோடி ரூபாய் அளவிற்கு உருவாக்கப்பட்டிருக்கிறது. இப்படி தொடர்ச்சியாக பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அதன் மூலமாக மின்சார வாரியம் சேமிப்பையும், சிக்கன நடவடிக்கைகளையும் எடுத்து கடன் சுமையைப் படிப்படியாகக் குறைத்து வருகிறது.

இரவு 7-00

இன்னும் கூடுதலாக ஒரு வரலாற்று நிகழ்வை இந்த நேரத்திலே பகிர்ந்துகொள்கின்றேன். அனல் மின் நிலையங்களில் உற்பத்தியாகக்கூடிய உலர் சாம்பலைக் கடந்த காலங்களில் சரிவரக் கையாளாததால், முறையாக tender விடாமல் அதனால் வருவாய் இழப்பு ஏற்பட்டது. அதிலே நான் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், 2014–2015 ஆம் ஆண்டில் 117 கோடி ரூபாய்; 2015–2016 ஆம் ஆண்டில் 100 கோடி ரூபாய் அளவிற்கு வருவாய் இருந்தது. அதுவே கடந்த 5 ஆண்டுகளில் குறிப்பாக 2016–2017–ல் 91 கோடி ரூபாய்; 2017–2018–ல் 84 கோடி ரூபாய்; 2018–2019–ல் 93 கோடி ரூபாய்; 2019–2020–ல் 92 கோடி ரூபாய்; 2020–2021–ல் 92 கோடி ரூபாய்; இந்த 2 ஆண்டுகளை ஒப்பிட்டுப் பார்க்கின்றபொழுது 2021–2022 ஆம் ஆண்டில் 122 கோடி ரூபாயாக வருவாய் உயர்ந்திருக்கின்றது. 2022–2023 ஆம் ஆண்டில் அதாவது 2020–2021–ல் இருந்த 92 கோடி ரூபாய் என்பது 2022–2023 ஆம் ஆண்டில் 190 கோடி ரூபாயாக, உலர் சாம்பல் முறையாக tender விடப்பட்டு, அதன் மூலமாக ஏற்கெனவே வந்த வருவாய் இரட்டிப்பாக 105 விழுக்காடு வருவாய் உயர்ந்திருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே பெருமையோடு எடுத்துச் சொல்ல விரும்புகின்றேன்.

நிலக்கரி இறக்குமதியைப் பொறுத்தவரையில், சில நேரங்களிலே உள் நாட்டினுடைய நிலக்கரியே நம்முடைய தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத சூழ்நிலையில் வெளிநாட்டு நிலக்கரியை இறக்குமதி செய்யக்கூடிய சூழல் ஏற்படுகிறது. குறிப்பாக, 2021–2022 ஆம் ஆண்டு ஒரு டன்கூட, வெளிநாட்டு நிலக்கரியை தமிழ்நாடு மின்சார வாரியம் இறக்குமதி செய்யவில்லை. காரணம், வெளிநாட்டு நிலக்கரியினுடைய விலை அதிகமாக இருந்ததால், மின்சார வாரியத்திற்கு இழப்பு ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக உள் நாட்டு நிலக்கரியை வைத்தே முழுவதுமாக மின்சார வாரியம் மின் உற்பத்தியைச் செய்து சாதனை படைத்தது. குறிப்பாக, 2022–2023 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில், ஒன்றிய அரசு வெளிநாட்டு நிலக்கரியை இறக்குமதி செய்ய வேண்டும்; கையிருப்பிலே வைத்துக்கொள்ள வேண்டுமென்று உத்தரவிட்டதன் அடிப்படையிலே 7 இலட்சம் டன் அளவிற்கு நிலக்கரியை இறக்குமதி செய்ய வேண்டிய சூழல் ஏற்பட்டது. அதுவும் மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது tender மூலமாக வெளிச் சந்தையிலே வெளிநாட்டு நிலக்கரியை வாங்கினாலும்கூட, நம்முடைய மாநிலம்தான், தமிழ்நாடுதான் மாண்புமிகு முதலமைச்சருடைய சீரிய வழிகாட்டுதலின்படி மிகக் குறைந்த விலையில், 134 dollar அளவிற்கு ஒரு டன் நிலக்கரியை இறக்குமதி செய்வதற்காகத் திறந்தவெளி online tender மூலமாக அந்த விலைப் பட்டியல் இறுதி செய்யப்பட்டிருக்கிறது. மற்ற மாநிலங்களை நாம் ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது இது மிகக் குறைந்த விலையே என்பதையும் இந்த நேரத்திலே நான் பெருமையோடு சொல்லிக்கொள்கின்றேன்.

தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வைப் பற்றி இங்கே சொன்னார்கள். இந்த ஊதிய உயர்வு அளிக்கப்பட வேண்டிய தேதி என்பது 1–12–2019. 2019 ஆம் ஆண்டிலேயே தொழிற்சங்கங்களோடு அதற்கான குழுக்கள் அமைக்கப்பட்டு பேச்சுவார்த்தை நடத்தி, அவர்களுக்கான ஊதிய உயர்வுக்கான அனுமதியை வழங்கியிருக்க வேண்டும். ஒப்பந்தத்தை ஏற்படுத்தி இருக்க வேண்டும். மாறாக, அவர்கள் முழுவதுமாகச் செய்யாமல் 2 ஆண்டுகள் கடந்துவிட்டன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, தொழிற்சங்கங்களை அழைத்துப் பேச வேண்டுமென்று அவர்கள் உத்தரவிட்டு ஏறத்தாழ 7 முறை நிர்வாகத்தின் சார்பில் தொழிற்சங்கப் பிரதிநிதிகளோடு பேசப்பட்டு, அவர்களுடைய கோரிக்கைகள் முழுமையாகப் பெறப்பட்டு, அந்த ஒப்பந்தத்திலே

நிர்வாகம் என்ன ஏற்படுத்திட முடியும் என்பது எழுத்துப்பூர்வமாக கொடுக்கப்பட்டு, அதன்மீதும் இப்போது தொழிற்சங்கங்களுடைய பதிலையும் தெரிவித்திருக்கின்றார்கள். விரைவில் மாண்புமிகு முதலமைச்சருடைய பொற்கால ஆட்சியில் தொழிற்சங்கங்கள் விரும்பக்கூடிய வகையில் கண்டிப்பாக ஒரு திருப்திகரமான ஒப்பந்தம் ஏற்படுத்தப்படும். அதற்கான உத்தரவுகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள் என்பதையும் இந்த நேரத்திலே பெருமையோடு சுட்டிக்காட்டுகின்றேன்.

மின் வாரிய ஊழியர்களைப் பொறுத்தவரை, மழை பெய்தாலும் சரி, வெயில் அடித்தாலும் சரி, இயற்கைச் சீற்றங்கள் ஏற்பட்டாலும் சரி, தன்னுடைய குடும்பத்தை, பிள்ளைகளைப் பார்க்காமல் எந்தவித பாதிப்பும் இல்லாமல் சீரான மின் விநியோகம் வழங்கப்பட வேண்டும் என்பதிலே கவனம் கொண்டு சிறப்பாகப் பணியாற்றக்கூடிய மின் வாரியத்தினுடைய அலுவலர்கள், ஊழியர்களுக்கு இந்த நேரத்திலே என்னுடைய அன்பையும், நன்றியையும் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த அன்பு, நன்றி என்பது வரக்கூடிய தொழிற்சங்கத்தினுடைய ஒப்பந்தத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின் அடிப்படையிலே சிறப்பான வெளிப்பாடாக அமையும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, விடுபட்ட Gangman-களைப்பற்றி இங்கே சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவர்களுக்கும் வாழ்வு கொடுக்க வேண்டுமென்பதற்காக ஒரு குழு அமைத்து, அந்தக் குழு அவர்களையெல்லாம் அழைத்துப்பேசி, அதற்கான அறிக்கையைத் தயார் செய்திருக்கின்றார்கள். விரைவில் அதற்கான தீர்வுகளும் எட்டப்படும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அதேபோல, ஏற்கெனவே பணிபுரிகின்ற Gangman-கள் வெவ்வேறு ஊர்களிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் வாங்கக்கூடிய ஊதியம் என்பது வெளியூரிலே சென்று பணியாற்றக்கூடிய அளவிற்கு எங்களுக்குப் போதுமானதாக இல்லை; எனவே, எங்கள் சொந்த ஊருக்குப் பணியிட மாறுதல் வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்திருக்கின்றார்கள். அதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதியைத் தந்திருக்கின்றார்கள். அதற்கான அறிவிப்பும் விரைவிலே வரவிருக்கின்றது என்பதையும் இந்த நேரத்திலே பெருமையோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

இரவு 7-05

அதேபோல, சென்னை நகரத்தினுடைய கட்டமைப்புகளைப் பொறுத்தவரை, ஏற்கெனவே நடைபெற்ற அந்தப் புதைவடக் கம்பிகள் பதிக்கும் பணிகளை முழுவதுமாக விரைந்து முடித்திட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவுகளை வழங்கினார்கள். 2021, 2022 ஆகிய 2 ஆண்டுகளில் 2 ஆயிரத்து 570 கிலோ மீட்டர் அளவிற்கு புதைவடக் கம்பிகளைப் பதிக்கும் பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. மீதம் 450 கிலோ மீட்டர் அளவிற்கு நிலுவையில் இருக்கிறது. அதையும் விரைவாகச் செய்து முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டு ஆண்டுகளில் 30,883 Pillar Box-கள் சென்னையில் மட்டும் சீரான மின் விநியோகத்திற்காகப் புதிதாக அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பெருமையோடு இங்கே சுட்டிக்காட்டுகின்றேன். அதைப்போல, மீதம் இருக்கக்கூடிய 3 ஆயிரத்து 133 Pillar Box-களை விரைவாக அமைத்து முடிப்பதற்கு அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது. அதைப்போல, மழைக் காலங்களில் எந்தவித பாதிப்புகளும் வராத வகையில் சீரான மின் விநியோகம் வழங்கப்படுவதற்காக 4 ஆயிரத்து 370 Pillar Box-கள் தரையிலிருந்து ஒரு மீட்டர் அளவிற்கு உயர்த்தி அமைக்கப்பட்டிருக்கின்றன. ஏனென்றால், தரையோடு தரையாக அந்த Pillar Box-கள் பயன்பாட்டில் இருந்தன. அரை அடி தண்ணீர் தேங்கினால்கூட மின் விநியோகத்திலே பாதிப்பு ஏற்பட்டு, மின் விநியோகம் நிறுத்தப்படக்கூடிய சூழ்நிலையை உணர்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தரையிலிருந்து ஒரு மீட்டர் அளவிற்கு உயர்த்த வேண்டுமென்று உத்தரவிட்டார்கள். 4 ஆயிரத்து 370 Pillar Box-களை அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன.

சென்னையைப் பொறுத்தவரையில், கடந்த இரண்டு ஆண்டுகளில் 4 ஆயிரத்து 416 RMU-கள் புதிதாக அமைக்கப்பட்டு, சீரான மின் விநியோகம் வழங்கப்பட்டிருக்கின்றது. இந்த இடத்தில் ஆர்.கே. நகர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இருக்கின்றார். அந்தத் தொகுதியில் உள்ள சில பகுதிகளுக்கு இரவிலே பாதிப்பு ஏற்பட்டதால் நானும், அவரும் நேரடியாகச் சென்றோம்; அதைப்போல, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும் சென்னையில் ஏற்படும்

2023 ஏப்ரல் 12] [திரு. V. செந்தில்பாலாஜி]

மின் பாதிப்புகளை அப்போதைக்கப்போது சுட்டிக்காட்டுவதால் அவற்றிற்கெல்லாம் உடனுக்குடன் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, சென்னை உட்பட தமிழகம் முழுவதுமே எந்தவிதமான பாதிப்புகளும் இல்லாத அளவில் சீரான மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. அதற்குக் காரணம் மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்களுடைய சீரிய நடவடிக்கை என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக, smart meter-ஐ பற்றி நம்முடைய வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் இங்கே சுட்டிக்காட்டினார்கள். பொதுவாக smart meter என்பது நவீன காலத்திற்கேற்ப புதிய வடிவமைப்போடு இருக்க வேண்டுமென்பது மின்சார வாரியத்தினுடைய இலக்கு. இந்தியாவில் எந்த மாநிலத்திலும் செயல்படுத்தாத அளவிற்கு புதிய வடிவமைப்புடன் அந்த smart meter-ஐப் பொருத்துவதற்கான அறிவிப்புகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டிருக்கின்றன. விரைவில் டெண்டர் கோருவதற்காக DPR தயாரிக்கக்கூடிய பணிகள் இறுதி கட்டத்தை எட்டியிருக்கின்றன. எனவே, தமிழ்நாட்டில் ஒட்டுமொத்தமாக இருக்கக்கூடிய 3 கோடி மின் நுகர்வோருக்கும் புதிய வடிவமைப்புடன் நவீன வசதிகளோடு smart meter பொருத்தும் பணிகளும், அதேபோல, 16 ஆயிரத்து 974 மின்னூட்டிகள், 4 இலட்சத்திற்கும் மேற்பட்ட மின்மாற்றிகள், (குறுக்கீடு) முடித்துவிடுகிறேன். மாவட்ட எல்லைகளில் 1,300 மீட்டர் பொருத்தக்கூடிய பணிகளும் இருக்கின்றன. உற்பத்தி செய்யக்கூடிய இடங்களில் மீட்டர்; துணை மின் நிலையங்களில் மீட்டர்; அதற்குப் பிறகு transformer-களில் மீட்டர்; நுகர்வோர்களிடம் மீட்டர். எந்த இடத்தில் மின் இழப்பு ஏற்படுகிறது என்பதையும் துல்லியமாகக் கண்காணிக்கக்கூடிய வகையில் அந்த வடிவமைப்புகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் அதில் கூடுதல் வசதி செய்யப்பட்டிருக்கிறது. உதாரணத்திற்கு எங்கேயேனும் கம்பிகள் அறுந்து விழுந்தால், உடனடியாக மின் விநியோகம் தானாக நிற்கக்கூடிய அளவிற்கு அதிலே புதிய வடிவமைப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்பதையும் இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். டெல்லியிலிருந்து ஒன்றிய அரசின் அதிகாரிகள் தமிழ்நாட்டிற்கு வருகை தந்து இந்தக் கட்டமைப்புகளையெல்லாம் பரிசோதனை முறையிலே பார்த்து மற்ற மாநிலங்களுக்கு நாங்கள் இதை சிபாரிசு செய்கிறோம் என்று சொல்லியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அந்த அளவிற்குப் புதிய வடிவமைப்போடு அந்தத் திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்துவதற்கு அறிவுறுத்தியிருக்கின்றார்கள். அதேபோல, மின் விநியோகத்தைப் பற்றி இங்கே பேசினார்கள். மின் உற்பத்தி ஒரு பக்கம் என்று சொன்னால், அதற்கான மின் விநியோகக் கட்டமைப்பை உருவாக்க வேண்டுமென்பது அடிப்படை தேவை. அந்த அடிப்படைத் தேவையை உணர்ந்துதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரண்டாண்டுகளில் 316 துணை மின் நிலையங்கள், அதைப்போல துணை மின் நிலையங்களின் தரமுயர்த்துவதற்கான வாய்ப்பை வழங்கினார்கள். இந்த ஆண்டும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் தங்களுடைய தொகுதிகளில் புதிய துணை மின் நிலையங்கள் வேண்டுமென்ற கோரிக்கைகளையும் முன் வைத்திருக்கின்றார்கள். முடிந்தவரை அவர்களுடைய கோரிக்கைகள் ஆய்வு செய்யப்பட்டு, முழுவதுமாக அந்தத் துணை மின் நிலையங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஏதேனும் ஒன்றிரண்டு விடுபட்டால் வரக்கூடிய ஆண்டுகளில் அவற்றைச் சேர்ப்பதற்கு துறை நிச்சயம் நடவடிக்கை எடுக்கும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையைப் பொறுத்தவரை, 76 மெகா வாட் அளவிற்கு நடுத்தர மற்றும் சிறிய சூரிய சக்தி மின் திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்தியுள்ளது. இதில், குறிப்பாக 59.28 மெகா வாட் திறன் கொண்ட வீடுகளுக்கான சூரிய மேற்கூரைத் திட்டம், 17 மெகா வாட் திறன் கொண்ட சோதனைக் காற்றாலை திட்டத்தை நிறுவியுள்ளது. தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறு கிராமத்தில் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் நிலத்தில் ஒரு காற்றாலை, அதைப்போல, சூரிய சக்தி, மின்கல கலப்பின அமைப்பை நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டு அதற்கான பூர்வாங்கப் பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன.

மின் ஆய்வுத்துறையைப் பொறுத்தவரை, 2020–2021-ல் வசூலித்த வரி என்பது ரூ.11 கோடி; 2021–2022 ஆம் ஆண்டு ரூ.13 கோடி; 2022–2023 ஆம் ஆண்டு வசூலித்த வரி என்பது ரூ.17 கோடி என ஆண்டுதோறும் இந்த வரியினுடைய வருவாய் உயர்ந்திருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் 2020–2021 ஆம் ஆண்டின் நிகர இலாபம் ரூ.396 கோடி; 2021–2022 ஆம் ஆண்டு நிகர இலாபம் ரூ.680 கோடி; 2022–2023 ஆம்

ஆண்டு ரூ.781 கோடி அளவிற்கு இலாபம் ஈட்டப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் பெருமையோடு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இரவு 7–10

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையைப் பொறுத்தவரை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. எதிர்க்கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கு பேசியபோது, புதிய மதுபானக் கடைகள் திறக்கப்படுவதைப் போன்ற ஒரு தோற்றத்தை உருவாக்கினார்கள். பலமுறை இதே அவையிலே நான் சுட்டிக்காட்டியிருக்கின்றேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த இரண்டு ஆண்டுகளில், கோயில்கள், பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் ஆகியவற்றின் அருகில் இருக்கக்கூடிய பல்வேறு மதுபானக் கடைகள் கணக்கிடப்பட்டு, பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற புகார்கள், மக்கள் பிரதிநிதிகளிடமிருந்து வரப்பெற்ற புகார்கள் குறித்தெல்லாம் உரிய நடவடிக்கைகள் எடுக்கக்கூடிய வகையில், 96 கடைகள் மூடப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு கூற விரும்புகிறேன். எங்கெல்லாம் அரசினுடைய விதிமுறைகளுக்கு மாறாக கடைகள் அமைக்கப்பட்டிருக்கின்றனவோ, அவற்றையெல்லாம் பொதுமக்கள் எதிர்ப்புகளைத் தெரிவிக்கின்றபோது, ஒன்று அந்தக் கடைகளை இடமாற்றம் செய்வது இல்லையென்றால் அவற்றை நிரந்தரமாக மூடுவது என்ற வகையில் TASMAC நிறுவனம் நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தக் கடைகள் இந்த இரண்டு ஆண்டுகளில் அமைக்கப்பட்டவை அல்ல; அவை ஏற்கெனவே அமைக்கப்பட்டிருக்கின்ற கடைகள் ஆகும்.

அதேபோன்று, 2022 ஆம் ஆண்டு மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை செய்த சாதனையில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், 1,40,649 கள்ளச்சாராய வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 11,828 பெண் குற்றவாளிகள் உட்பட 1,39,697 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்; தொடர் நடவடிக்கையாக அவை கண்காணிக்கப்பட்டு வருகிறது. எங்களுடைய மதிப்பிற்குரிய உள் துறை செயலாளர் அவர்கள் இங்கே இருக்கின்றார்கள். இந்த TASMAC நிறுவனத்தைப்

பொறுத்தவரை, end-to-end டெண்டர் விடக்கூடிய பணிகள் இறுதிகட்டத்தை எட்டியிருக்கின்றன. அதை நடைமுறைக்குக் கொண்டு வருகின்றபோது, எந்த இடத்திலும் இழப்பு இல்லாமல், leakage இல்லாமல், முழுமையாகக் கண்காணிக்கக்கூடிய வகையில், அதாவது, உற்பத்தி செய்யும் இடங்களில் தொடங்கி, விற்பனை செய்யக்கூடிய இடங்கள் வரை கண்காணிக்கக்கூடிய வகையில், அதற்கான வடிவமைப்புகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. விரைவில் அவற்றை நடைமுறைக்குக் கொண்டுவருகின்றபோது, இன்னும் கூடுதலாக, கடைகளில் scan செய்யக்கூடிய நடைமுறைகள் பின்பற்றப்படும். எவ்வாறு departmental store-ல் பொருட்களை scan செய்து, இரவு எவ்வளவு stock இருக்கிறது என்று கணக்கு எடுப்பார்களோ, அதேபோன்று, scan செய்யக்கூடிய நடைமுறைகள் வந்ததற்குப் பிறகு, அதில் முழுவதுமாக எந்தவிதமான தவறுகளும் நடக்காத அளவிற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கான அனைத்து முன்னேற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையைப் பொறுத்தவரை, இளைஞர்களிடையே போதைப் பொருள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய வகையில், 11-8-2022 அன்று மாநிலம் முழுவதும் 74 இலட்சம் மாணவர்கள் ஒரே நாளில் ஒரே நேரத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் உறுதிமொழி ஏற்றனர். இந்நிகழ்வு உலக சாதனையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதையும் பெருமையோடு இம்மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

TASMAC நிறுவனத்திலே பணியாற்றக்கூடியவர்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரகம் மற்றும் அதில் இருக்கக்கூடிய மூன்று அமைப்புகளும் சேர்ந்து, பல்வேறு நடவடிக்கைகளை, ஆய்வுகளை, சோதனைகளைச் செய்து கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறார்கள். குறிப்பாக 45 நிரந்தர மதுவிலக்கு சோதனை சாவடிகள், 7 நடமாடும் சோதனை சாவடிகள் பயன்படுத்தப்பட்டு, அவை நடைமுறையில் இருக்கின்றன என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

TASMAC நிறுவனத்தினுடைய ஊழியர்கள் என்னைச் சந்தித்து பல்வேறு கோரிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்று முன்வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகளைக் கடைசி நேரத்தில் என்னை வந்து சந்தித்துக் கொடுத்தார்கள்.

அவர்களிடம் நான், வரக்கூடிய காலங்களில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, நிதிநிலைமைக்கேற்ப உங்களுடைய கோரிக்கைகளைக் கண்டிப்பாக அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்று சொல்லியிருக்கின்றேன். இவ்வாறு ஒட்டுமொத்தமாக, இந்த இரண்டு துறைகளைப் பொறுத்தவரையில், அரசின் சார்பிலும், துறைகளின் சார்பிலும் பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில், வருவாய் சேமிப்பு, செலவினங்கள் குறைப்பு உள்ளிட்ட நடவடிக்கைகள் மிகச் சிறப்பாக எடுக்கப்பட்டிருக்கின்றன.

ஆள வைத்த தமிழக மக்களைத் தன்மானத்தோடு வாழ வைக்கும் திராவிட தவப் புதல்வரே! தன்னிகரற்ற முதல்வரே! இந்த இரண்டு ஆண்டு ஆட்சி பெரியாரும், பேரறிஞரும் காலத்தின் பாதையிலே தமிழ்நாட்டின் திசைகாட்டியாய் வீற்றிருக்கும் தமிழினத் தலைவரும் கண்ட திராவிடக் கனவுகளின் சாட்சி! உங்கள் தலைமையின்கீழ் தமிழ்நாடு வளர்கிறது! மின்சாரத் துறை ஒளிர்கிறது! எங்கள் தலைவரே! என்றென்றும் முதல்வரே! என்றும் நீங்கள் நலமாக இருக்க வேண்டும்! நாடு எப்போதும் பலமாக இருக்க வேண்டும்! எங்களை ஆண்டு நீங்கள் வாழ வேண்டும் பல நூறாண்டு என்று (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குக் கோடானுகோடி நன்றி மலர்களை இந்த நேரத்தில் பணிவன்போடு சமர்ப்பித்து, மூன்றாவது முறையாக மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் மானியக் கோரிக்கைகளைத் தாக்கல் செய்து, மாண்புமிகு மாமன்ற உறுப்பினர்களுடைய கேள்விகளுக்கு பதிலளிக்கக்கூடிய வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு கோடானுகோடி நன்றி மலர்களை இந்த நேரத்தில் பணிவன்போடு சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

இரவு 7–15

இளைய சூரியன், எங்களது மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அரவக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியினுடைய இடைத்தேர்தலிலும், கரூர் சட்டமன்றத் தொகுதியினுடைய பொதுத் தேர்தலிலும் போட்டியிடக்கூடிய வாய்ப்பை வழங்கி, வெற்றிக்கு உறுதுணையாக இருந்து,

அரவணைத்துக்கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு என் வாழ்நாள் நன்றிகளை மலர்ப் பாதங்களில் சமர்ப்பித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கரூர் மாவட்டத்திற்குட்பட்ட 4 சட்டமன்றத் தொகுதிகளிலும் உதயசூரியனை வெற்றி பெறச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கும், பொதுமக்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியை அவர்களுடைய பாதங்களில் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

கோவையில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு 96 விழுக்காடு வெற்றியை வழங்கிய கோவை மக்களுக்கும் இந்த நேரத்தில் மனமார்ந்த நன்றியை மலர்ப் பாதங்களில் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

இங்கு பேசிய முன்னாள் அமைச்சர், நத்தம் சட்டமன்ற உறுப்பினர் பல்வேறு கருத்துகளை முன் வைத்தார்கள். அவர்களுக்கு நேரத்தின் அருமை கருதி, ஒரு கருத்தை மட்டும், ஒரு பதிலை மட்டும் தெரிவிக்கின்றேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், குறிப்பாக முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் இணை மின் திட்டங்களை சர்க்கரை ஆலைகளிலே உருவாக்க வேண்டும்; அதற்கான பணிகளைச் செய்திட வேண்டுமென்று அந்தத் திட்டங்களைத் தந்தார்கள். அந்தத் திட்டம் அறிவிக்கப்பட்ட ஆண்டு, அரசாணை வெளியிடப்பட்ட ஆண்டு 2008; ஆனால் கடந்த 10 ஆண்டுகளாக அந்தத் திட்டம் முழுமையாக நிறைவு பெறாமல், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரோடு ஆய்வுக் கூட்டங்களை நடத்தி, அந்தத் திட்டப் பணிகளை விரைந்து முடித்திட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள். அந்தத் திட்டத்தினுடைய மதிப்பே 1,200 கோடி ரூபாய். தற்போது அதற்கு ஆகியிருக்கக்கூடிய செலவு 2,500 கோடி ரூபாய். வட்டி மட்டும் 1,300 கோடி ரூபாய் அளவிற்கு. அந்த இணை மின் திட்டங்களுக்குக் கடந்த ஆண்டுகளில் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தாமல் விட்டுவிட்டதால், கூடுதலாகச் செலவினங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

குறிப்பாக பரமத்தி–வேலூர் பகுதியிலிருக்கக்கூடிய மோகனூர் சர்க்கரை ஆலைக்கு எங்களுடைய மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ராஜேஷ் குமார் அவர்களோடு சேர்ந்து நேரில் ஆய்வு பணிகளைச் செய்தார்கள்.

2023 ஏப்ரல் 12] [திரு. V. செந்தில்பாலாஜி]

அந்த இடங்களைப் பார்க்கின்றபோது, சர்க்கரை ஆலையின் இயந்திரங்கள் அனைத்தும் துருப்பிடித்து, பயன்படுத்த முடியாத அளவிற்கு அவை மிக மோசமான சூழ்நிலையில் இருந்தன. அவற்றையெல்லாம் தூசு தட்டி எடுத்து, வரக்கூடிய ஆண்டுக்குள் நிலுவையிலிருக்கக்கூடிய திட்டங்களை முழுமையாக முடித்திட வேண்டுமென்று உத்தரவுகளை வழங்கியிருக்கின்றார்கள். எனவே, இணை மின் திட்டங்களைப் பொறுத்தவரை, கடந்த காலங்களில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு கிடப்பில் போடப்பட்ட அந்த இணைமின் திட்டங்களோடு சேர்த்து, மின் வாரியத்தினுடைய உற்பத்தி என்பது அதிகரித்துள்ளது.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. நத்தம் ஆர். விசுவநாதன் அவர்கள் நீண்ட கால கொள்முதல் குறித்து கடந்த கால வரலாறுகளைச் சொன்னார்கள், 7 ரூபாய் 1 பைசாவிற்கு கடந்த காலங்களில் ஒப்பந்தம் போட்டிருக்கிறார்கள். இன்றைக்கு அதே மின்சாரம் 2 ரூபாய் 61 பைசா. ஒரு யூனிட் 2 ரூபாய் 61 பைசா. (மேசையைத் தட்டும் ஒலி) மின் வாரியத்திற்கு ஒரு நாளைக்கு, ஒரு மாதத்திற்கு ஓராண்டிற்கு எத்தனை கோடி ரூபாய் இழப்பு ஏற்படும் என்பதை அவர் சிந்திக்காமல், அதைப் பற்றி யோசிக்காமல் அந்தக் கருத்துகளை இங்கே சொன்னார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவு குறைந்த விலையில் தரமான மின்சாரம் வழங்க வேண்டும் என்பதுதான். எனவேதான், 1,000 மெகாவாட் அளவிற்கு 2 ரூபாய் 61 பைசாவிற்கு ஒப்பந்தம் போடப்பட்டிருக்கின்றது. தமிழ்நாடு மின்சார வாரியம் தொடங்கப்பட்டு ஏறத்தாழ 65 ஆண்டுகளை நிறைவு செய்யவிருக்கின்றது. 1957 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது தமிழ்நாடு மின்சார வாரியம். 2021 ஆம் ஆண்டு ஒட்டுமொத்தமாக, நிறுவுதிறன் என்று பார்க்கிறபோது, 7,000 மெகாவாட்தான் இருக்கிறது. ஆனால் வெளிச் சந்தை கொள்முதல், தனியாரிடமிருந்து செய்யக்கூடிய கொள்முதல் என இவற்றையெல்லாம் கணக்கிட்டுப் பார்க்கின்றபோது, 32,500 மெகா வாட் இருக்கிறது. அதில் 7,000 மெகா வாட் அளவிற்குத்தான் மின்சார வாரியத்தினுடைய சொந்த நிறுவுதிறன். வரக்கூடிய ஆண்டுகளில் குறிப்பாக 2030 ஆம் ஆண்டுக்குள் 1957 ஆம் ஆண்டு தொடங்கி ஏறத்தாழ 65 ஆண்டுகள் உருவாக்கப்பட்ட கட்டமைப்பை இந்த 10 ஆண்டுகளில் 35,000 மெகா வாட் என்றளவிற்கு சொந்தமாக

உற்பத்தி செய்ய வேண்டுமென்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய இலக்கு. இன்னும் சொல்லப்போனால், Green energy திட்டங்களைப் பொறுத்தவரை, ஒன்றிய அரசு, வரக்கூடிய 2029–2030 ஆம் ஆண்டுக்குள் மொத்த மின் தேவையில் 43 சதவிகிதம் மரபுசாரா எரிசக்தியைப் பயன்படுத்த வேண்டுமென்று சுற்றறிக்கை அனுப்பியிருக்கின்றது. அதற்கு முன்னதாகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டினுடைய கட்டமைப்பை வலுப்படுத்தக்கூடிய நிலையில் 50 விழுக்காடு அளவிற்கு 2030 ஆம் ஆண்டிற்குள் மரபுசாரா எரிசக்தியினுடைய உற்பத்தித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான வழிமுறைகளை வழங்கியிருக்கின்றார்கள்.

இரவு 7–20

குறிப்பாக, 6 ஆயிரம் மெகா வாட் Solar திட்டங்கள், 14 ஆயிரம் மெகா வாட் அளவிற்கு நீர் மின் திட்டங்கள், 2 ஆயிரம் மெகா வாட் அளவிற்கு Gas திட்டங்கள், 2 ஆயிரம் மெகா வாட் அளவிற்கு Storage ஏற்படுத்தக்கூடிய திட்டங்கள். குறிப்பாக, சொந்தமாக 17 மெகா வாட் காற்றாலை இருக்கிறது. ஆனால் ஓடவே இல்லை. 10 வருடங்கள் அதைப் பற்றி கவனிக்கவே இல்லை. அதே இடங்களில் 40 மெகா வாட் புதிய காற்றாலை அமைப்பதற்கான திட்டமிடலும், காற்றாலை மட்டுமல்லாமல், அதோடு சேர்த்து அதன் கீழே இருக்கக்கூடிய பகுதிகளிலே hybrid முறையிலே சூரிய மின் சக்தி பெறக்கூடிய வகையில் இரண்டையும் சேர்த்து உற்பத்தி செய்யக்கூடிய வடிவமைப்புகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி உருவாக்கப்பட்டிருக்கின்றன. 65 ஆண்டு காலமாக உருவாக்கப்பட்ட கட்டமைப்பை, பத்தே ஆண்டுகளில் உருவாக்குவது என்பது சவாலான காரியம்தான். இருந்தாலுங்கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தச் சவாலான காரியத்தைச் சாதித்துக் காட்ட வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கின்றார்கள். இது தமிழ்நாடு அரசு, மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்களுடைய பொற்கால அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக, ஏற்கெனவே இருக்கக்கூடிய நிறுவுதிறனை 2030 ஆம் ஆண்டுக்குள் இரண்டு மடங்காக உயர்த்தி, தமிழ்நாட்டினுடைய மின்சாரத் தேவையை தமிழ்நாடு மின்சார வாரியமே முழுவதுமாகப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் அனைத்து கட்டமைப்புகளும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அதற்கான அடிப்படைப் பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன

என்பதையும் இந்த நேரத்திலே பெருமையோடு எடுத்துச் சொல்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு வெட்டுத் தீர்மானங்களை இங்கே வழங்கியிருக்கின்றார்கள். அந்த வெட்டுத் தீர்மானங்கள், குறிப்பாக துணை மின் நிலையங்கள் கேட்டல் உள்ளிட்ட பணிகள் இருக்கின்றன. அதில் சில உறுப்பினர்கள் கேட்ட துணை மின் நிலையங்கள் இப்போது வரக்கூடிய அறிவிப்புகளிலே இடம் பெற்றிருக்கின்றன. அதிலே விடுபட்டவர்களுக்கு வரக்கூடிய ஆண்டுகளில் ஆய்வு செய்யப்பட்டு, அவையும் சேர்த்துக்கொள்ளப்படும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்களால் இரண்டு துறைகளின்மீது கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களினுடைய உத்தரவின் அடிப்படையில் புதிய அறிவிப்புகளின் தலைப்புகளை மட்டும் படிக்கிறேன். மீதமுள்ளவற்றை நான் படித்ததாகக் கருதி, அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அறிவிப்புகள்

(அ) எரிசக்தித் துறை

1. 50 ஆயிரம் விவசாயிகளுக்கு இலவச விவசாய மின்னிணைப்புகள்

50,000 விவசாயிகளுக்கு இலவச விவசாய மின்னிணைப்புகள் இந்த ஆண்டு வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின் அடிப்படையில் இந்த அறிவிப்பை வெளியிடுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டில் விளை நிலங்களின் பரப்பை அதிகரித்து, விவசாய உற்பத்தியினைப் பெருக்கி, உழவர்களின் வாழ்வில் ஒளியேற்றும் விதமாகவும் மற்றும் பசுமைப் புரட்சிக்கு வித்திடும் விதமாகவும், நடப்பு 2023–2024 ஆம் ஆண்டில் 50 ஆயிரம் எண்ணிக்கை புதிய விவசாய இலவச மின்னிணைப்புகள், சாதாரண வரிசை, சுயநிதித் திட்டம், சிறப்பு முன்னுரிமை, தட்கல், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் (KAVIADP) மற்றும் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (TAHDCO) திட்டங்களின்மூலம் வழங்கப்படும்.

2. அரசு—தனியார் பங்களிப்புடன் 5,000 மெகா வாட் காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களை நிறுவுதல்

புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை ஊக்குவிக்கும் நோக்கமாக தமிழ்நாடு அரசு மொத்த மின் உற்பத்தியில் 50 சதவிகிதம் மரபு சாரா எரிசக்திமூலம் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயம் செய்துள்ளது. மேற்கண்ட இலக்கினை அடையும் நோக்கில், அரசு–தனியார் பங்களிப்புடன் 5 ஆயிரம் மெகா வாட் காற்றாலை மின் உற்பத்தி நிலையங்கள் நிறுவப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. சென்னை மாநகரில் குறுகிய இடத்திற்குள், பராமரிப்புப் பணிகள் தேவையற்ற புதிய 33/11 கி.வோ. Compact Primary Substation (CPS) துணை மின் நிலையங்களை நிறுவுதல்

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதியில் புதிய 33/11 கி.வோ. துணை மின் நிலையங்கள் அமைப்பதற்குத் தேவையான நிலங்கள் கிடைப்பதில் ஏற்படும் சிக்கல்களைக் கருத்தில் கொண்டு, குறுகிய இடத்திற்குள் பராமரிப்புப் பணிகள் தேவையற்ற வினைத் திறன் மிக்க 2 எண்ணம் புதிய 33/11 கி.வோ. துணை மின் நிலையங்கள் (CPS) பரீட்சார்த்த முறையில் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

4. 33 கி.வோ., 11 கி.வோ. மற்றும் தாழ்வழுத்த புதைவடங்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் கண்டறிவதற்காகப் புதைவட சோதனைக் கருவியுடன் இணைந்த பரிசோதனை வாகனம் கொள்முதல் செய்தல்

தற்போது, பெருநகர சென்னை மாநகராட்சி, கோயம்புத்தூர், திருச்சி மற்றும் மதுரை மாநகராட்சிகளில் 33 கி.வோ., 11 கி.வ. மற்ற ம் தாழ்வழுத்த மின்னிணைப்புப் பாதைகள் புதை வ டங்களாகப் பல இடங்களில் பயன்பாட்டில் உள்ளன. மழை க் காலம் மற்றும் இரவு நேரங்களில் புதைவடங்களில் ஏ ற்ப டும் பழுதுகளைக் கண்டறிந்து, மின் விநியோகத்தைச் சீர் செ ய்வதற்கு அதிக நேரம் தேவைப்படுவதால், புதைவடங்களில் ஏற்பட்ட பழுதுகளை விரைந்து கண்டறிந்து, ஏற்பட்ட பழுதுகளை உடனுக்குடன் சரி செய்து பொதுமக்களுக்கு மின்தடங்கலால் ஏற்படும் அசௌகரியங்களைக் குறைத்து தடையில்லா சீரான மின்சாரத்தை வழங்குவதற்காக புதைவட சோதனை கருவியுடன் இணைந்த பரிசோதனை வாகனம் ஒன்று வாங்கப்படும்.

5. 72 புதிய துணை மின் நிலையங்கள் நிறுவப்படும்

2 எண்ணம் புதிய 400 கி.வோ. துணை மின் நிலையங்கள், 2 எண்ணம் புதிய 230 கி.வோ. துணை மின் நிலையங்கள், 22 எண்ணம் புதிய 110 கி.வோ. துணை மின் நிலையங்கள் மற்றும் 46 எண்ணம் புதிய 33 கி.வோ. துணை மின் நிலையங்கள் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், சிவகங்கை, இராமநாதபுரம், தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில், மற்ற மாவட்டங்களைவிட சூரிய ஒளியின் ஆற்றல் அதிகமாக உள்ளதால், அந்த மாவட்டங்களில் அதிக அளவில் சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையங்கள் நிறுவுவதற்கு ஏதுவாக, புதிய 400 கி.வோ., 230 கி.வோ. மற்றும் 110 கி.வோ. துணை மின் நிலையங்கள் இந்த மாவட்டங்களில் அமைக்கப்படும்.

6. 57 துணை மின் நிலையங்களில் உள்ள மின்மாற்றிகளின் திறனை மேம்படுத்துதல்

39 எண்ணிக்கையிலான 110 கி.வோ. துணை மின் நிலையங்கள் மற்றும் 18 எண்ணிக்கையிலான 33 கி.வோ. துணை மின் நிலையங்களில் உள்ள மின்மாற்றிகளின் திறன் மேம்படுத்தப்படும்.

7. துணை மின் நிலையங்களில் புதிய 33 கி.வோ., 22 கி.வோ. மற்றும் 11 கி.வோ. நிரந்தர காந்த இயக்க வெற்றிட மின்சுற்று பிரேக்கர்கள் (Permanent Magnetic Actuated Vacuum Circuit Breaker–PMAVCB) நிறுவுதல்

*தற்பொழுது, துணை மின் நிலையங்களிலிருந்து செல்லும் மின் பாதைகளுக்கு சாதாரண வெற்றிட மின்சுற்று பிரேக்கர்கள் மட்டுமே இயக்கத்தில் உள்ளன. இதனை நிறுவுவதற்கு அதிக இடம் தேவைப்படுகிறது. மேலும், பராமரிப்புச் செலவுகளும் அதிகம். இதனைத் தவிர்க்கும்விதமாக, குறுகிய இடத்திலேயே பராமரிப்புச் செலவில்லா புதிய 33 கி.வோ, 22 கி.வோ. மற்றும் 11 கி.வோ. மின்னூட்ட மின்மாற்றி உள்ளிணைந்த நிரந்தர காந்த இயக்க வெற்றிட மின்சுற்று பிரேக்கர்கள் (*Permanent Magnetic Actuated Vacuum Circuit Breaker – PMAVCB*) துணை மின் நிலையங்களில் நிறுவப்படும்.*

8. தமிழ்நாட்டின் முக்கியமான நகரங்களில் செல்லும் மேல்நிலை மின் கம்பிகளைப் புதைவடங்களாக மாற்றுதல்

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் செல்லும் மேல்நிலை மின் கம்பிகளைப் புதைவடங்களாக மாற்றி அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதைத் தொடர்ந்து, கூடுதலாகக் கோயம்புத்தூர், மதுரை மற்றும் கரூர் மாநகராட்சிப் பகுதிகளில் செல்லும் மேல்நிலை மின் கம்பிகளையும் புதைவடங்களாக மாற்றி அமைக்கும் பணிகள் தொடங்கப்படும்.

9. வடசென்னை அனல் மின் நிலையம்–I–ன் செயல்திறனை மேம்படுத்துவதற்கான சிறப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்

வடசென்னையில் செயல்பட்டுவரும் 3X210 மெகா வாட் திறன் கொண்ட வட சென்னை அனல் மின் நிலையம்-I-ன் செயல்திறனை மேம்படுத்தி, மின் உற்பத்தியைப் பெருக்குவதற்காக ரூ.58.18 கோடி திட்ட மதிப்பீட்டில் சிறப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

10. வடசென்னை அனல் மின் நிலையம்–II–ன் செயல் திறனை மேம்படுத்துவதற்கான சிறப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்

வடசென்னையில் செயல்பட்டுவரும் 2X600 மெகா வாட் திறன் கொண்ட வடசென்னை அனல் மின் நிலையம்–II–ன் செயல் திறனை மேம்படுத்துவதற்கு ரூ.95.90 கோடி திட்ட மதிப்பீட்டில் சிறப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

11. தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் செயல்திறனை மேம்படுத்துவதற்கான பணிகளை மேற்கொள்ளுதல்

தூத்துக்குடியில் செயல்பட்டுவரும் 5X210 மெகா வாட் திறன் கொண்ட தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் ரூ.16.68 கோடி திட்ட மதிப்பீட்டில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

12. மேட்டூர் அனல் மின் நிலையம்–I–ன் செயல்திறனை மேம்படுத்துவதற்கான சிறப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்

மேட்டூரில் செயல்பட்டு வரும் 4X210 மெகா வாட் மேட்டூர் அனல் மின் நிலையம்–I–ன் திறனை மேம்படுத்துவதற்காக ரூபாய் 12.55 கோடி திட்ட மதிப்பீட்டில் பல்வேறு வகையான சிறப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

13. மேட்டூர் அனல் மின் நிலையம்—II—ன் செயல்திறனை மேம்படுத்துவதற்கான சிறப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்

மேட்டூரில் செயல்பட்டு வரும் 1X600 மெகா வாட் திறன் கொண்ட மேட்டூர் அனல் மின் நிலையம்–II–ன் திறனை மேம்படுத்துவதற்காக ரூ.9.13 கோடி திட்ட மதிப்பீட்டில் சிறப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

14. எண்ணூர் சிறப்புப் பொருளாதார மண்டல அனல் மின் நிலையத்திற்காக இரண்டு நிலக்கரி கையாளும் இயந்திரங்கள் (Shore Unloader) நிறுவுதல்

எண்ணூர் சிறப்புப் பொருளாதார மண்டல அனல் மின் நிலையத்தின் நிலக்கரி தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, ஒரு மணி நேரத்தில் 2 ஆயிரம் டன்கள் வரை நிலக்கரியினைக் கையாளுவதற்கு இரண்டு இயந்திரங்கள் (Shore Unloader) சென்னை காமராஜர் துறைமுகத்தில் நிறுவப்படும்.

15. மோயார் புனல் மின் நிலையத்தின் பழமை வாய்ந்த உயரமுத்த நீர் எடுத்துச் செல்லும் குழாய்களை (Penstocks) மாற்றி அமைத்தல்

நீலகிரி மாவட்டத்தில் உள்ள 70 ஆண்டு காலம் பழமை வாய்ந்த 3X12 மெகா வாட் திறன் கொண்ட மோயார் புனல் மின் நிலையத்தில் உள்ள மூன்று எண்ணிக்கையிலான உயரமுத்த நீர் எடுத்துச் செல்லும் குழாய்கள் ரூபாய் 84.67 கோடி திட்ட மதிப்பீட்டில் மாற்றப்படும்.

16. கீழ்மேட்டூர் கதவணை மின் நிலையம்—I—ற்காக ஆகாயத் தாமரை மற்றும் திடக்கழிவுகளை அகற்றுவதற்கான சுத்தம் செய்யும் இயந்திரம் (trash rack cleaning machine) கொள்முதல் செய்தல்

செக்கானூரில் செயல்பட்டுவரும் 2X15 மெகா வாட் திறன் கொண்ட கீழ்மேட்டூர் கதவணை மின் நிலையம்–I–ன் சுழலிக்குச் செல்லக்கூடிய தண்ணீருடன் கலந்து வரும் ஆகாயத் தாமரைச் செடிகள் மற்றும் திடக்கழிவுகளை அகற்றுவதற்கான சுத்தம் செய்யும் இயந்திரம் ரூ.6.95 கோடி திட்ட மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.

17. பில்லூர், நிராலப்பள்ளம் திருப்பு அணை, பாபநாசம் திருப்பு அணை மற்றும் அவலாஞ்சி அணைகளில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளுதல்

பில்லூர், நிராலப்பள்ளம் திருப்பு அணை, பாபநாசம் திருப்பு அணை மற்றும் அவலாஞ்சி ஆகிய நான்கு அணைகளில் ரூ.78.25

கோடி மதிப்பீட்டில் உலக வங்கியின் நிதியுதவியுடன் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

18. மாநில மின் பகிர்ந்தளிப்பு மையத்தை (Main Load Despatch Centre – MLDC) நவீனமயமாக்குதல்

தற்சமயம், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு சொந்தமான மாநில மின் பகிர்ந்தளிப்பு மையமானது மிகவும் பழைய கட்டடத்தின் தரைத் தளத்தில் இயங்கி வருகிறது. இதனை அதிநவீன தொழில்நுட்ப வசதியுடன்கூடிய புதிய கட்டுப்பாட்டு அறை மற்றும் இட வசதியுடன்கூடிய மின் பகிர்ந்தளிப்பு மையமாக மாற்றுவதற்கு, தற்பொழுது செயல்பட்டு வரும் இடத்திலிருந்து தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகக் கட்டடத்தின் மூன்றாவது தளத்திற்கு சுமார் ரூ.4 கோடி திட்ட மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

19. தமிழ்நாடு மாநில மின் பகிர்ந்தளிப்பு மையத்திற்கென (MLDC) தனியாக தகவல் தொழில்நுட்பப் பிரிவு உருவாக்குதல்

தமிழ்நாடு மாநில மின் பகிர்ந்தளிப்பு மையத்திற்கென (MLDC) தனியாக தகவல் தொழில்நுட்பப் பிரிவு எவ்வித கூடுதல் செலவினமுமின்றி நடப்பாண்டில் உருவாக்கப்படும்.

20. மின்னல் தடுப்பான்களில் (LAS) ஏற்படும் பழுதுகளைக் குறைப்பதற்கு சோதனைக் கருவி கொள்முதல் செய்தல்

மின்னல் தடுப்பான்களில் (LAS) ஏற்படும் பழுதுகளைக் குறைப்பதற்கு 3-வது ஹார்மோனிக் மின்னல் தடுப்பான் சோதனைக் கருவி நடப்பாண்டில் கொள்முதல் செய்யப்படும்.

21. அதி உயரழுத்த மற்றும் கூடுதல் உயரழுத்த மின் வழித்தடங்களில் பழுதுகளைக் கண்டறிவதற்கு நவீன கருவி கொள்முதல் செய்தல்

அதி உயரழுத்த மற்றும் கூடுதல் உயரழுத்த மின் வழித்தடங்களில் ஏற்படும் பழுதுகளை மின் தடங்கல் எதுவுமின்றி கண்டறிவதற்கு Travelling Wave Fault Locator *எனும் புதிய நவீன கருவி நடப்பாண்டில் கொள்முதல் செய்யப்படும்.*

2023 ஏப்ரல் 12] [திரு. V. செந்தில்பாலாஜி]

இரவு 7–25

22. மின்னூட்டம் உள்ளபோதே பழுதுகளைச் சரிசெய்வதற்குப் புதிய இன்சுலேட்டட் ஏரியல் பக்கெட்டுடன்கூடிய வாகனம் கொள்முதல் செய்தல்

மிக உயரழுத்த மின் வழித்தடங்களில் மின் தடையின்றி மின்னோட்டம் உள்ளபோதே (Live line) பழுது நீக்குதல் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக புதிய இன்சுலேட்டட் ஏரியல் பக்கெட்டுடன்கூடிய வாகனம் கொள்முதல் செய்யப்படும்.

23. மின் பாதைகளில் ஏற்படும் பழுதுகளைக் கண்டறிவதற்கு DRONE–கள் கொள்முதல் செய்தல்

அதி உயர் அழுத்தம் கொண்ட மின் பாதையில் ஏற்படும் வெப்பப் பகுதி மற்றும் பலவீனமான இணைப்புகளை (Hot spot/weak joints) கண்டறிவதற்காகவும், குறைபாடுள்ள இன்சுலேட்டர்களை மின்தடை எதுவும் இல்லாமல் கண்டறிவதற்காகவும் அதிக திறன் கொண்ட கேமராவுடன்கூடிய DRONE–கள் கொள்முதல் செய்யப்படும்.

24. இன்ஃப்ரா–ரெட் தெர்மல் இமேஜிங் கேமரா மற்றும் கரோனா டிஸ்சார்ஜ் கேமரா கொள்முதல் செய்தல்

அதி உயர் அழுத்த மின் பாதையில் குறைபாடுள்ள இன்சுலேட்டர்கள் மற்றும் ஜம்பர்களைக் கண்டறிவதற்காக 30 எண்ணம் இன்ஃப்ரா–ரெட் தெர்மல் இமேஜிங் கேமரா மற்றும் ஒரு எண்ணம் கரோனா டிஸ்சார்ஜ் கேமரா கொள்முதல் செய்யப்படும்.

25. சென்னை கிண்டியில் கூடுதலாக ஒரு வளிம காப்பு உபகோட்டம் உருவாக்குதல்

வளிம காப்பு துணை மின் நிலைய (Gas Insulated Substation) பராமரிப்புப் பணிகளின் முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு, கொரட்டூரில் இயங்கிவரும் பராமரிப்பு உபகோட்டத்துடன் கூடுதலாக கிண்டியில் மேலும் ஒரு வளிம காப்புப் பராமரிப்பு உபகோட்டம் உருவாக்கப்படும்.

26. கரூர் மற்றும் தஞ்சாவூர் மண்டலங்களுக்கு இரண்டு புதிய மின் இயக்க வட்டங்கள் (Operation Circle) உருவாக்குதல்

*ஒவ்வொரு மின் பகிர்மான மண்டலத்திற்கும் (*Distribution Region*) ஒரு மின் இயக்க வட்டம் (*Operation Circle*) என்ற அடிப்படையில், புதிதாகத் துவங்கப்பட்ட கரூர் மற்றும் தஞ்சாவூர் மின் பகிர்மான மண்டலங்களுக்காக இரண்டு புதிய இயக்குதல் வட்டங்கள் கரூர் மற்றும் தஞ்சாவூரைத் தலைமை இடமாகக் கொண்டு மறுசீரமைப்பு முறையின்கீழ் உருவாக்கப்படும். மேலும், மின் இயக்க வட்டம்/தெற்கு சென்னையின் தலைமை இடத்தை, மறுசீரமைப்பின்படி புதிதாகத் துவங்கப்பட்ட திருவண்ணாமலை மண்டலத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.*

27. ஒரே மின்னூட்டி வசதியுடன்கூடிய 60 எண்ணிக்கையிலான 110 கி.வோ. துணை மின் நிலையங்களுக்கு இரண்டாவது மின்பாதை அமைத்தல்

*தற்போது 60 எண்ணிக்கையிலான 110 கி.வோ. துணை மின் நிலையங்களுக்கு ஒரே ஒரு மின்னழுத்த மின்னூட்டியின்மூலம் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது (*Single Source*). இந்த மின்பாதையில் பழுது ஏற்பட்டாலோ அல்லது மின் சாதனங்களில் பழுது ஏற்பட்டாலோ, அந்த மின் பாதையுடன் இணைக்கப்பட்ட துணை மின் நிலையங்களுக்கு முற்றிலும் மின் தடங்கல் ஏற்படுகிறது. இதனைத் தவிர்க்கும்பொருட்டு, அருகிலுள்ள மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்ட துணை மின் நிலையத்திலிருந்து கூடுதலாக ஒரு 110 கி.வோ. மின்னூட்டி அல்லது தற்போதுள்ள மின் பாதையை உட்புறமாக (*LILO*) வந்து செல்லும் விதமாக மாற்றி அமைப்பதற்கான பணிகள் படிப்படியாக மேற்கொள்ளப்படும்.*

28. திருவலம் மற்றும் நெய்வேலியில் இரண்டு புதிய கருவி காத்தல் மற்றும் தகவல் தொடர்பு (Protection & Communication) வட்டங்கள் அமைத்தல்

*அதி உயரழுத்த மின் பாதைகள், அதன் உட்கட்டமைப்புகள் மற்றும் அவற்றைச் சார்ந்த துணை மின் நிலையங்களில் நிறுவப்பட்டுள்ள மின் சாதனங்களைப் பராமரிப்பதற்காக அமைக்கப்பட்ட பாதுகாப்பு மற்றும் தகவல் தொடர்பு பிரிவின் செயல்பாட்டினைக் கருத்தில்கொண்டு, தற்போதுள்ள நான்கு கருவி காத்தல் மற்றும் தகவல் தொடர்பு (*P&C*) வட்டங்களுடன்,*

கூடுதலாக திருவலம் மற்றும் நெய்வேலி ஆகிய இடங்களைத் தலைமையகமாகக் கொண்டு புதிய இரண்டு பாதுகாப்பு மற்றும் தகவல் தொடர்பு வட்டங்கள் கூடுதல் செலவின்றி உருவாக்கப்படும்.

29. வடசென்னை அனல் மின் நிலையம்—1 வளாகத்தில் நிலக்கரியைக் கையாளுவதற்குப் புதிய வேகன் டிப்ளர் இயந்திரம் அமைத்தல்

சிங்கரேனி நிலக்கரி நிறுவனத்தின் சுரங்கங்களிலிருந்து (SCCL) இரயில் தொடர் வண்டிமூலம் கொண்டுவரப்படும் நிலக்கரியை இரயில் பெட்டிகளிலிருந்து அப்படியே இறக்குவதற்காக வடசென்னை அனல் மின் நிலையம்-1 வளாகத்தில் புதிய வேகன் டிப்ளர் இயந்திரம் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

30. திருநெல்வேலி, ஸ்ரீரங்கம், கோயம்புத்தூர், அவினாசி, திருப்பரங்குன்றம், திருச்செங்கோடு, கரூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய ஊர்களில் அமைந்துள்ள தேரோடும் மாட வீதிகளில் செல்லும் மேல்நிலை மின் கம்பிகளைப் புதைவடங்களாக மாற்றி அமைத்தல்

திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயில், ஸ்ரீரங்கம் அருள்மிகு ஸ்ரீரங்கநாதர் திருக்கோயில், கோயம்புத்தூர் அருள்மிகு கோனியம்மன் திருக்கோயில், அவினாசி அருள்மிகு அவினாசி லிங்கேஸ்வரர் திருக்கோயில், திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செங்கோடு அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில், கரூர் தான்தோன்றிமலை அருள்மிகு ஸ்ரீகல்யாண வெங்கடரமண சுவாமி திருக்கோயில் மற்றும் காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரீஸ்வரர் திருக்கோயில், அருள்மிகு வரதராஜப் பெருமாள் திருக்கோயில், அருள்மிகு காஞ்சி காமாட்சி அம்மன் திருக்கோயில் ஆகிய திருத்தலங்களிலுள்ள தேரோடும் பாதைகளில் மேலே செல்லும் மின் கம்பிகள் அனைத்தும் புதைவடங்களாக மாற்றியமைக்கப்படும்.

இத்திருத்தலங்களில் நடைபெறும் தேரோட்டத்தின்போது பல்வேறு பகுதிகளில் இருந்து இலட்சக்கணக்கான பக்தர்கள் வருகை புரிவதால், இவ்வாறு, மேல்நிலை மின் கம்பிகளைப் புதைவடங்களாக மாற்றி அமைப்பதன்மூலம் பொதுமக்களுக்குத் தடையில்லா மின்சாரம் வழங்கப்படுவதுடன், மின் விபத்துகளும் முற்றிலும் தடுக்கப்படும்.

31. ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் 100 கி.வாட் திறன் கொண்ட சூரிய சக்தியினால் இயங்கும் இரண்டு வாகன மின்னூட்டல் (Solar based EV Charging) நிலையங்கள் அமைத்தல்

*தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையால் (*TEDA*) தமிழ்நாடு புதுமை முயற்சி முகமையின் (*Tamil Nadu Innovation Initiatives*) நிதியுதவிமூலம், தலைமைச் செயலக வளாகம், சென்னை மற்றும் பள்ளிக் கல்வி இயக்குநரகம், சென்னை ஆகிய இடங்களில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக, 100 கி.வாட் திறன் கொண்ட இரண்டு சூரிய சக்தியின்மூலம் இயங்கும் வாகன மின்னூட்டல் நிலையங்கள் ரூபாய் 1.50 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.*

(ஆ) மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை

1. கள்ளச்சாராயம் காய்ச்சுதல் மற்றும் கள்ள மதுபான விற்பனையில் ஈடுபட்டு மனம் திருந்தியவர்களின் மறுவாழ்வுக்கு நிதி வழங்குதல்

கள்ளச்சாராயத்தை முற்றிலுமாக ஒழிக்கவும் மற்றும் அதன்மூலம் ஏற்படும் தீமைகளை முற்றிலுமாகக் களையவும், இறக்குமதி செய்யப்பட்ட அயல்நாட்டு மதுபானங்களைக் கள்ளத்தனமாகக் கடத்துதல் மற்றும் விற்பனை செய்தல், போலி மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்களைக் கள்ளத்தனமாக விற்பனை செய்தல், தெளிந்த சாராவி கடத்துதல் மற்றும் விற்பனை செய்தல், கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கடத்துதல் மற்றும் விற்பனை செய்தல் போன்ற மதுவிலக்குக் குற்றங்களுக்குச் சிறைத் தண்டனை பெற்று விடுதலையாகி மனம் திருந்தியவர்களின் மறுவாழ்வுக்காகவும், அவர்கள் மீண்டும் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடாமல் வேறு தொழில்களை மேற்கொள்ள உதவிடுவதற்காகவும் ரூ.5.00 கோடி மறுவாழ்வு நிதி மானியமாக வழங்கப்படும்.

2. மது அருந்துதலுக்கு அடிமையாகாமல் இருக்கவும் மற்றும் மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுதல் மற்றும் போதை மருந்துகளைத் தவறான பயன்பாட்டிற்குப் பயன்படுத்துதலுக்கு எதிரான விழிப்புணர்வுப் பிரச்சாரம் மேற்கொள்ளுதல்

மது அருந்துதலுக்கு மக்கள் அடிமையாகாமல் இருக்கவும், அவ்வாறு மது அருந்தும் பழக்கத்திற்கு அடிமையானவர்கள், அப்பழக்கத்தைக் கைவிட வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடனும்,

2023 ஏப்ரல் 12] [திரு. V. செந்தில்பாலாஜி]

மது அருந்துதலுக்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கைகளைத் தீவிரமாக மேற்கொள்ளவும் மாவட்டந்தோறும் போலி மதுபானங்கள் மற்றும் கள்ளச்சாராயத்தினால் ஏற்படும் தீமைகளைப் பற்றி விழிப்புணர்வுப் பிரச்சாரம் மற்றும் சிறப்பு முகாம்கள் நடத்துவதற்கும் அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. மது அருந்துதலுக்கு எதிரான விழிப்புணர்வுப் பிரச்சாரத்துடன் போதை மருந்துகளைத் தவறான பயன்பாட்டிற்குப் பயன்படுத்துதலுக்கு எதிரான விழிப்புணர்வுப் பிரச்சாரத்தையும் இணைந்து மேற்கொள்ள ரூ.4.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

3. இரகசிய தகவலாளர்களுக்கு வெகுமதி வழங்குதல்

ஒவ்வோர் ஆண்டும் எரிசாராயம், போலி மதுபானம், பிற மாநிலங்களிலிருந்து மதுபானம் கடத்துதல் மற்றும் கடத்தலுக்குப் பயன்படுத்தப்படும் வாகனங்கள் குறித்து தகவல்கள் தரும் உளவாளிகளுக்கு பண வெகுமதி வழங்கும்பொருட்டு தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் சொந்த நிதியிலிருந்து ரூ.15 இலட்சம் தொகையினை வழங்க அரசு அனுமதி அளித்துள்ளது. 2023–2024 ஆம் நிதியாண்டில் இரகசிய தகவல் தரும் உளவாளிகளுக்கு வழங்கப்படும் வெகுமதித் தொகை ரூ.15 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

4. எரிசாராயம், போலி மதுபானம் மற்றும் பிற மாநிலங்களிலிருந்து கடத்தப்படும் மதுபான பாட்டில்கள் ஆகியவற்றைக் கைப்பற்றுவதில் பெரும் பங்கு வகிக்கும் காவல் ஆளிநர்களை ஊக்குவிக்கும்பொருட்டு ஊக்கத்தொகை வழங்குதல்

ஒவ்வோர் ஆண்டும் எரிசாராயம், போலி மதுபானம் மற்றும் பிற மாநிலங்களிலிருந்து கடத்தப்படும் மதுபானப் பாட்டில்கள் ஆகியவற்றைக் கைப்பற்றுவதில் பெரும் பங்கு வகிக்கும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு மற்றும் மாவட்ட, நகர, சட்டம் மற்றும் ஒழுங்கு காவல் ஆளிநர்களை ஊக்குவிக்கும்பொருட்டு ஊக்கத்தொகை வழங்குவதற்கு ரூ.15 இலட்சம் தொகையினை அரசு ஒதுக்கீடு செய்கிறது. 2023–2024 ஆம் நிதியாண்டில் காவல் ஆளிநர்களை ஊக்குவிக்கும்பொருட்டு வழங்கப்படும் ஊக்கத்தொகையை ரூ.15 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

[திரு. V. செந்தில்பாலாஜி] [2023 ஏப்ரல் 12

5. தமிழ்நாடு மாநில வாணிபக் கழக மதுபான சில்லறை விற்பனைக் கடை பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்குதல்

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் 6,648 மேற்பார்வையாளர்கள், 14,794 விற்பனையாளர்கள் மற்றும் 2,876 உதவி விற்பனையாளர்கள் ஆக மொத்தம், 24,318 மதுபான சில்லறை விற்பனைக்கடை பணியாளர்கள் தொகுப்பூதிய முறையில் பணியாற்றி வருகிறார்கள். தற்போது வழங்கப்பட்டுவரும் தொகுப்பூதியத்தினை மேற்பார்வையாளர்களுக்கு ரூ.1,100/–ம், விற்பனையாளர்களுக்கு ரூ.930/–ம் மற்றும் உதவி விற்பனையாளர்களுக்கு ரூ.840/–ம் மாதந்தோறும் கூடுதலாக உயர்த்தி 1–4–2023 முதல் வழங்கப்படும். இதற்காக ஆண்டொன்றுக்கு ரூ.31.57 கோடி கூடுதல் செலவாகும்.

6. தமிழ்நாடு மாநில வாணிபக் கழக மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில் கண்காணிப்புக் கேமராக்கள் (IP CCTV Cameras) பொருத்துதல்

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் மார்ச் 2023 அன்றுள்ளபடி, 5,329 மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இரவு நேரங்களில் சமூக விரோதிகளால் பாதிப்பிற்குள்ளாகும் மதுபான சில்லறை விற்பனைக் கடைகளைக் கண்காணித்திடவும், கடைகளுக்கு வருகைதரும் நபர்கள் மற்றும் தவறான நோக்கத்தில் வரும் நபர்களை அடையாளங்கண்டு தவறுகளைத் தடுத்திட இந்த நிதியாண்டில் 500 மதுபான சில்லறை விற்பனைக் கடைகளுக்குக் கண்காணிப்புக் கேமராக்கள் ரூ.16.00 கோடி செலவில் பொருத்தப்படும்.

7. தமிழ்நாடு மாநில வாணிபக் கழக மதுபான சில்லறை விற்பனைப் பணியாளர்கள் மற்றும் இதர அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுவரும் குடும்ப நல நிதி (குழுக் காப்பீட்டுத் திட்டம்) உதவித் தொகையை ரூ.3.00 இலட்சத்திலிருந்து ரூ.5.00 இலட்சமாக உயர்த்தி வழங்குதல்

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் தொகுப்பூதிய முறையில் பணியாற்றி வரும் மதுபான சில்லறை விற்பனைக் கடைப் பணியாளர்கள் மற்றும் இதர அலுவலர்கள் பணியில் இருக்கும்போது மரணம் அடைந்தால் அவர்களது குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வரும் குடும்ப நல நிதி ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சமாக 1–4–2023 முதல் உயர்த்தி வழங்கப்படும். இத்திட்டத்திற்காக ஆண்டொன்றுக்கு ரூ.7.38 கோடி செலவாகும்.

2023 ஏப்ரல் 12] [*திரு. V. செந்தில்பாலாஜி*]

8. தமிழ்நாடு மாநில வாணிபக் கழக மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில் பணப் பாதுகாப்பு பெட்டகங்கள் (Cash Safe Boxes) நிறுவுதல்

*தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் மார்ச் 2023 அன்றுள்ளபடி, 5,329 மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இதில் கிராமம் மற்றும் நகர பஞ்சாயத்துப் பகுதிகளில் அமைந்துள்ள மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில் பாதுகாப்பு நடவடிக்கையாக இந்த நிதியாண்டில் 1,000 மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில் ரூ.10.03 கோடி செலவில் பணப் பாதுகாப்பு பெட்டகங்கள் (*Cash Safe Boxes*) நிறுவப்படும்.*

9. தமிழ்நாடு மாநில வாணிபக் கழக மதுபான சில்லறை விற்பனைக் கடைகளின் எண்ணிக்கையைக் குறைத்தல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின் அடிப்படையில், 9-வது அறிவிப்பாக ஒரு சிறப்பு அறிவிப்பை இங்கே வெளியிடுகின்றேன். தமிழ்நாடு மாநில வாணிபக் கழக மதுபான சில்லறை விற்பனைக் கடைகளின் எண்ணிக்கையை, 500 கடைகளை இந்த ஆண்டு குறைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவுகளை வழங்கியிருக்கின்றார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பை இந்த அவையிலே வெளியிடுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின் அடிப்படையிலே வெளியிடுகிறேன். (குறுக்கீடு) 500 மதுபானக் கடைகள் இந்த ஆண்டு குறைக்கப்படுகின்றன. அதுதான் அறிவிப்பு.

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் 31-3-2023 அன்றுள்ளபடி, 5,329 மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இதில் தகுதியான 500 மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் கண்டறியப்பட்டு மூடப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறுதியாக, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, எரிசக்தித் துறை மற்றும் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) ஆகிய மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கைகளை தயாரிக்க உறுதுணையாக இருந்த அரசு தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனிச் செயலாளர்கள் திரு. T. உதயச்சந்திரன், ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும், Dr. P. உமாநாத், ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும், திரு. M.S சண்முகம், ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும், திருமதி அனு ஜார்ஜ், ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. பணீந்திர ரெட்டி, ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும், எரிசக்தித் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ரமேஷ் சந்த் மீனா, ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தினுடைய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. ராஜேஷ் லக்கானி, ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும், தமிழ்நாடு மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆணையர் Dr. மா. மதிவாணன், ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தினுடைய மேலாண்மை இயக்குநர் திரு. என். சுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும் அரசுத் துறைகளைச் சார்ந்திருக்கிற அதிகாரிகளுக்கும், அலுவலர்களுக்கும், மின் வாரியத்தினுடைய கடைநிலை ஊழியர்கள் வரை, டாஸ்மாக் நிறுவனத்தினுடைய கடைநிலை ஊழியர்கள் வரை அனைவருக்கும் இந்த நேரத்திலே என்னுடைய நன்றியை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு மூத்த அமைச்சர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வாய்ப்பைத் தந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றிகளை பணிவன்போடு சமர்ப்பித்து, நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

இரவு 7–30

(அ) கோரிக்கை எண் 14-எரிசக்தித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 14-எரிசக்தித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

2023 ஏப்ரல் 12] [பேரவைத் தலைவர்]

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.8,379,29,32,000/–, மூலதனக் கணக்கில் ரூ.72,27,04,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.2,241,95,03,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. *(மேசையைத் தட்டும் ஒலி)*

(ஆ) கோரிக்கை எண் 37-மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 37–மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.205,25,96,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (13–4–2023), வியாழக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை இரவு 7–31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

88. 2021–2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் முப்பத்து ஏழாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395 (1) (b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்–ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

180. மானியக் கோரிக்கை எண் 41–வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மற்றும் மானியக் கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

181. மானியக் கோரிக்கை எண். 14–எரிசக்தித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

2023 ஏப்ரல் 12]

182. மானியக் கோரிக்கை எண். 37–மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

183. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை மற்றும் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் ஊரகக் கடன்கள் தொடர்பான ஒரு வருட சாதனைகள் என்கிற சிறுநூல். (தமிழ்)

184. தமிழ்நாடு கைத்தறி தொழில்–மறுவரையறை' என்கிற சிறுநூல். (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

185. தமிழ்நாடு ஜவுளித் தொழில்–புத்தெழுச்சிக்கான முன்னெடுப்புகள் என்கிற சிறுநூல். (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

186. Customer Experience Redefined – Co-optex *என்கிற சிறுநூல். (ஆங்கிலம்)*

187. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)

188.சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)

189. கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு I

(102 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 41-வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

மானியக் கோரிக்கை எண் 51-இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

1. முன்னுரை

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையானது மாநில நிருவாகத்தின் முதுகெலும்பாக விளங்குவதுடன், நீடித்த நிலையான சமுதாய முன்னேற்றத்திற்கு அச்சாணியாகத் திகழ்கிறது. தற்போது செயல்பட்டு கொண்டிருக்கிற பெரும்பான்மையான துறைகள் வருவாய்த் துறையிலிருந்தே உருவாக்கப்பட்டதால் அத்துறைகள் யாவும் வருவாய்த் துறையின் சேவைகளைச் சார்ந்தே உள்ளன. இத்துறையானது அரசின் பல்வேறு சமூகப் பொருளாதார திட்டங்களைச் செயல்படுத்தி, சீரான சமூகப் பொருளாதார முன்னேற்றத்தினை உருவாக்குவதை இலக்காகக் கொண்டுள்ளது.

இத்துறை பின்வரும் ஆணையரகங்களாகச் செயல்பட்டு வருகிறது:—

i. *வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம் (சமூக பாதுகப்புத் திட்டம் உட்பட)*

ii. *நில நிருவாக ஆணையரகம்*

iii. *நிலச் சீர்திருத்த ஆணையரகம்*

iv. *நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி ஆணையரகம்*

v. *நில அளவை மற்றும் நில வரித் திட்ட இயக்குநரகம்*

வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு: வரவு-செலவுத் திட்டம் 2023-2024 ஆம் நிதியாண்டில் கோரிக்கை எண் 41, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைக்கான நிதி ஒதுக்கீடு ரூ.8199.09 கோடியாகவும் மற்றும் கோரிக்கை எண் 51-ல் ரூ.1500.01 கோடியாகவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

[2023 ஏப்ரல் 12

இத்துறை மாவட்ட நிருவாகம், சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் வழங்குதல், அரசு நிலங்கள் மேலாண்மை, நில ஆவணங்கள் மேலாண்மை, நில அளவை மற்றும் நில வரி திட்டப் பணிகள், நிலச் சீர்திருத்தம் சார்ந்த பணிகள் மற்றும் பேரிடர் மேலாண்மைப் போன்ற பிரதான பணிகளை மேற்கொண்டு வருகிறது.

2. வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம்

2.1 வருவாய் நிருவாக ஆணையர், மாவட்ட நிருவாகத்திற்கான மேற்பார்வை அலுவலராகவும் மற்றும் மாநில நிவாரண ஆணையராகவும் செயல்பட்டு வருகிறார்.

2.2 இத்துறையின் வாயிலாக மேற்கொள்ளப்படும் முக்கியப் பணிகள் பின்வருமாறு:-

i. *பொது வருவாய் நிருவாகம்*

ii. *நில வருவாய் வசூல்*

iii. *சமூகப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்துதல்*

iv. *சான்றுகள் வழங்குதல்*

v. *பொது மக்கள் குறை தீர்க்கும் பணிகள்*

vi. *பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிப்பு*

vii. *பல்வேறு சட்டங்களை அமல்படுத்துதல் மற்றும் செயலாக்கம்*

இத்துறையில் கிராம அளவிலிருந்து மாவட்ட அளவு வரை கள அளவிலான அலகுகள் உள்ளன.

2.3 மாவட்ட நிருவாகம்

நிருவாகத்தைத் திறம்பட செயல்படுத்த ஏதுவாக மாநிலம் 38 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மாவட்டமும் மாவட்ட ஆட்சியர் தலைமையின்கீழ் இயங்கி வருகிறது. மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் பல்வேறு துறைகளின் மாவட்ட அளவிலான அலுவலர்கள், மாவட்ட ஆட்சியர்/மாவட்ட நீதிபதியின் மேற்பார்வையின்கீழ் செயல்பட்டு வருகின்றனர்.

TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 12]

2.4 கோட்ட நிருவாகம்

ஒவ்வொரு மாவட்டமும் நிருவாக நலனுக்காகவும், சிறப்பாகச் செயல்படும் நோக்குடனும், சார் ஆட்சியர்/வருவாய் கோட்ட அலுவலர் தலைமையில் 94 வருவாய் கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

2.5 வட்ட நிருவாகம்

வட்டாட்சியரின் தலைமையில் வட்ட நிருவாகம் இயங்கி வருகிறது. பட்டா, அடங்கல், வருமானம், இருப்பிடம், வாரிசு மற்றும் அனைத்து வகையான சான்றிதழ் வழங்குதல் போன்ற பணிகளில் வட்டாட்சியருக்கு, துணை வட்டாட்சியர்கள் மற்றும் வருவாய் ஆய்வாளர்கள் உதவுகின்றனர். நிருவாக நலனைக் கருத்தில் கொண்டு, தற்போது 314 வட்டங்கள் செயல்பட்டு வருகின்றன.

2.6 குறுவட்ட நிருவாகம்

ஒவ்வொரு வட்டமும், கிராமங்களை உள்ளடக்கிய குறுவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. குறுவட்டத்தை வருவாய் ஆய்வாளர் நிருவகிக்கின்றார். கிராம நிருவாக அலுவலர்களின் அனைத்துப் பணிகளை மேற்பார்வையிடுவதிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். தற்போது மாநிலத்தில் மொத்தம் 1195 குறுவட்டங்கள் உள்ளன.

2.7 கிராம நிருவாகம்

தமிழ்நாட்டில் மொத்தம் 16,743 கிராமங்களில், கிராம நிருவாகம் செயல்பட்டு வருகிறது. அரசின் நலத் திட்டங்கள் அனைத்து குடிமக்களுக்கும் சென்றடைய ஒவ்வொரு கிராமத்திற்கும் கிராம நிருவாக அலுவலர்கள் வருவாய் நிருவாகத்தின் அடிப்படை களப் பணியாளர்களாகச் செயல்படுகின்றனர். பல்வேறு சான்றிதழ்கள் வழங்குதல், அரசு நலத் திட்டங்களுக்கான தகுதிகளைச் சரி பார்த்தல், நில வரி வசூல் செய்தல், அரசு நிலங்களைப் பாதுகாத்தல் போன்ற பணிகள் இவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2.8 வருவாய் நிருவாகப் பணியாளரமைப்பு

வருவாய் நிருவாக அலுவலக ஆணையர் அலுவலகத்தில் 437 அலுவலர்கள்/ பணியாளர்கள் மற்றும் மாவட்ட நிருவாகத்தின்கீழ்,

[2023 ஏப்ரல் 12

கிராமம் முதல் மாவட்டம் வரை, 53,082 அலுவலர்கள்/ பணியாளர்கள் செயல்பட்டு வருகின்றனர்.

2.9 நில வருவாய்

தமிழ்நாட்டில் உள்ள நிலங்களின் வகைபாடு மற்றும் தன்மைக்கு ஏற்ப அரசாணை (நிலை) எண் 544, வருவாய்த் (வ.நி.1(1)) துறை, நாள் 20.10.2010-ன்படி பின்வருமாறு நில வரி தொகை நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்படுகிறது

அட்டவணை 2.1

வ. எண்.	விவரம்	தொகை /ஏக்கர்
1.	புஞ்சை நிலத்திற்குத் தீர்வை	ரூ.2/-
2.	நஞ்சை நிலத்திற்குத் தீர்வை	ரூ.5/-
3.	ஆட்சேபணையற்ற அரசு புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்து அனுபவித்து வருபவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் ஆக்ரமணத் தீர்வை	ரூ.5/-
4.	பட்டா ஒன்றுக்கு குறைந்தபட்ச கேட்புத் தொகை	ரூ.1/-

வருவாய்த் தீர்வாய நிகழ்வின்போது ஒவ்வொரு கிராமத்தின் ஆண்டு வருவாய் கணக்குகள் இறுதி செய்யப்படுகிறது. ஒவ்வொரு பசலி ஆண்டிலும், ஜுலை 1 ஆம் தேதி முதல் ஜுன் 30 ஆம் தேதி வரை நிலவரி வசூலிக்கப்படுகிறது.

2.10. அடங்கல்

ஒவ்வொரு கிராமத்திலும், கிராம நிருவாக அலுவலரால் பராமரிக்கப்படும் ஒரு முக்கியப் பதிவேடாக அடங்கல் விளங்குகிறது. நிலத்தின் பரப்பு, தீர்வை, தண்ணீர் தீர்வை பருவ வாரியாக விவசாயிகளால் பயிர் செய்யப்படும் பயிர்கள் விவரம், விளைச்சல் விவரம், பாசன ஆதார விவரங்களைக் கொண்டு ஜி-அறிக்கையினைத் தயார் செய்திட உதவுகிறது, உணவு தானிய உற்பத்தி விவரம் பெறவும், வறட்சி மற்றும் வெள்ளத்தினால்

2023 ஏப்ரல் 12]

ஏற்படும் பயிர் சேதங்களுக்கு உரிய நிவாரணம் வழங்குவதற்கும் அடங்கல் மிகவும் அவசியமானது.

இதர துறைகளின் நலன் கருதி, அனைத்து மாவட்டங்களின் வருவாய் பதிவேடுகள், பயிர் விவரங்கள், பயிர்வாரியான பரப்பளவு விவரங்கள் மற்றும் விவசாயிகளின் நில உரிமை விவரங்களை இணையம்மூலம் இணைக்க பிரத்யேக இணையதளம் உருவாக்கப்பட்டு வருகிறது. பயிர் விவரங்கள் மற்றும் அடங்கல் ஆகியவற்றைப் பெறுவதற்கு இப்புதிய இணையதளம் செயல்படுத்தப்படும். இதன்மூலம் ஒவ்வொரு துறையும் தங்களுக்குக் கீழாக வரும் திட்டங்களுக்கான உதவித் தொகையை வழங்குவதற்கு அடங்கல் குறித்த விவரங்கள் தேவைப்படின் அதனைப் பெற்றுக்கொள்ள ஏதுவாகும், ஒவ்வொரு துறையும், துறைகளுக்குக் கீழான திட்டங்களை முறைப்படுத்தவும், விவசாயிகள் சான்றிதழ் வேண்டி பலமுறை விண்ணப்பம் செய்வதையும் தவிர்க்க இயலும். மேலும், இதன்மூலம் காகித அடங்களின் தேவை குறைக்கப்பட்டு, கிராம நிருவாக அலுவலர்களின் பணிச் சுமையைக் குறைக்க முடியும்.

2.11 வருவாய் கட்டடங்கள்

மாவட்ட நிருவாகத்தில் வருவாய்த் துறை முக்கிய அங்கம் வகிப்பதால் வருவாய்த் துறைக்குத் தேவையான அலுவலகக் கட்டடங்கள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் வழங்குவது குறித்து அரசால் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது. வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர், வருவாய் கோட்டாட்சியர், வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர், கிராம நிருவாக அலுவலர் ஆகியோருக்கான அலுவலகக் கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகள் உள்ளன.

2.12. சமூகப் பாதுகாப்புத் திட்டம்

தமிழ்நாடு அரசு, சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினர்களைப் பாதுகாக்கும் வகையில் ஓய்வூதியத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் அனைத்து தகுதியுள்ள பயனாளிகளுக்கும் மாதாந்திர ஓய்வூதியத் தொகை ரூ.1000/- வழங்கப்பட்டு வருகிறது. 2023-2024 ஆம் நிதியாண்டிற்கு அனைத்து ஓய்வூதியத் திட்டங்களுக்கும் ரூ.5337.18 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 31.03.2023 முடிய 34,62,034 பயனாளிகள் கீழ்க்காணும் திட்டங்களின்மூலம் பயன்பெற்று வருகின்றனர்.

[2023 ஏப்ரல் 12

அட்டவணை - 2.2

வ. எண்	திட்டத்தின் பெயர்	பயனாளிகளின் எண்ணிக்கை (31-3-2023 வரை)
1	இந்திராகாந்தி தேசிய முதியோர் ஓய்வூதியத் திட்டம்	14,36,569
2	இந்திராகாந்தி தேசிய மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதியத் திட்டம்	63,769
3	இந்திராகாந்தி தேசிய விதவையர் ஓய்வூதியத் திட்டம்	5,29,728
4	மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம்	4,04,345
5	ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதியத் திட்டம்	6,16,016
6	ஆதரவற்ற/கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம்	1,18,462
7	50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம்	25,655
8	முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்	2,63,194
9	இலங்கை அகதிகளுக்கான ஓய்வூதியத் திட்டம்.	4,296
	மொத்தம்	34,62,034

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அட்டவணை - 2.3

வ. எண்.	திட்டத்தின் பெயர்	ஒன்றிய அரசின் பங்கீடு ரூ.	மாநில அரசின் பங்கீடு ரூ.
1.	இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம்	200/-	800/-
		500/-	500/-
2.	இந்திராகாந்தி மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதிய தேசியத் திட்டம்	300/-	1200/-
3.	இந்திராகாந்தி விதவையர் ஓய்வூதிய தேசியத் திட்டம்	300/-	700/-
4.	மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம்	-	1500/-
5.	ஆதரவற்ற விதவையர் ஓய்வூதியத் திட்டம்	-	1000/-
6.	முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டம்.	-	1000/-
7.	ஆதரவற்ற/கணவரால் கைவிடப்பட்ட பெண்கள் ஓய்வூதியத் திட்டம்	-	1000/-
8.	50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம்	-	1000/-
9.	இலங்கை அகதிகளுக்கான ஓய்வூதியத் திட்டம் (OAP, DWP, DDWP)	-	1000/-
10.	இலங்கை அகதிகளுக்கான ஓய்வூதியத் திட்டம் (DAPS)	-	1500/-

அட்டவணை - 2.4

வ. எண்	திட்டத்தின் பெயர்	தகுதி/நிபந்தனைகள்
1.	இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம்	ஆதரவற்றவராக மற்றும் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். வயது - 60 மற்றும் அதற்கு மேல் இருத்தல் வேண்டும்.
2	இந்திராகாந்தி விதவையர் ஓய்வூதிய தேசியத் திட்டம்	ஆதரவற்ற விதவையாக மற்றும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவராக இருத்தல் வேண்டும். வயது – 40 மற்றும் அதற்கு மேல் இருத்தல் வேண்டும்.
3	இந்திராகாந்தி மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதிய தேசியத் திட்டம்	வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ளவர் வயது - 18 மற்றும் அதற்கு மேல் மாற்றுத்திறன் நிலை – 80 சதவிகிதம் மற்றும் அதற்கு மேல் இருத்தல் வேண்டும்.

தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் தேசிய சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் பெற தகுதிகள் பின்வருமாறு:-

அட்டவணை - 2.5

வ. எண்	திட்டத்தின் பெயர்	தகுதி/நிபந்தனைகள்
1.	மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம்	வேலையற்றவராக இருத்தல் வேண்டும். தனியார் மற்றும் சுயவேலையில் இருப்பின் ஆண்டு வருமானம் ரூ.3 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். வயது - 18 மற்றும் அதற்கு மேல் மாற்றுத்திறன் நிலை – 40 சதவிகிதம் மற்றும் அதற்கு மேல்

2023 ஏப்ரல் 12]

வ. எண்	திட்டத்தின் பெயர்	தகுதி/நிபந்தனைகள்
2.	*ஆதரவற்ற விதவையர் ஓய்வூதியத் திட்டம்*	*ஆதரவற்ற விதவையாக இருத்தல் வேண்டும். வயது - 18 மற்றும் அதற்கு மேல் அசையா சொத்து ரூ.1,00,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும் (மேலும், அரசின் எந்தவொரு திட்டத்தின்கீழும் பயனாளிகளுக்கு இலவச வீடு ஒதுக்கப்பட்டிருந்தால், விண்ணப்பதாரரின் அல்லது பயனாளிகள் நிலையான சொத்து (அல்லது) சொத்தின் மதிப்பில் இதனை கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது)*
3.	*முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்*	*ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும். வயது - 60 மற்றும் அதற்கு மேல் நிலமற்ற விவசாயத் தொழிலாளியாக இருத்தல் வேண்டும். அசையா சொத்து ரூ.1,00,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும் (மேலும், அரசின் எந்தவொரு திட்டத்தின்கீழும் பயனாளிகளுக்கு இலவச வீடு ஒதுக்கப்பட்டிருந்தால், விண்ணப்பதாரரின் அல்லது பயனாளிகள் நிலையான சொத்து (அல்லது) சொத்தின் மதிப்பில் இதனை கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது)*
4.	*ஆதரவற்ற/ கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம்*	*ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும். வயது 30 மற்றும் அதற்கு மேல் சட்டப் பூர்வமாக விவாகரத்து அல்லது குறைந்தது 5 ஆண்டுகள் கணவனால் கைவிடப்பட்டவராக இருத்தல் வேண்டும் அல்லது நீதிமன்றத்திலிருந்து சட்டப்பூர்வமாகப் பிரிவு சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். அசையா சொத்து ரூ.1,00,000/-க்கு மிகாமல்*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	திட்டத்தின் பெயர்	தகுதி/நிபந்தனைகள்
		இருத்தல் வேண்டும் (மேலும், அரசின் எந்தவொரு திட்டத்தின்கீழும் பயனாளிகளுக்கு இலவச வீடு ஒதுக்கப்பட்டிருந்தால், விண்ணப்பதாரரின் அல்லது பயனாளிகள் நிலையான சொத்து (அல்லது) சொத்தின் மதிப்பில் இதனை கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது)
5.	50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம்	ஆதரவற்ற திருமணமாகாத பெண்ணாக இருத்தல் வேண்டும். வயது 50 மற்றும் அதற்கு மேல் அசையா சொத்து ரூ.1,00,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும் (மேலும், அரசின் எந்தவொரு திட்டத்தின்கீழும் பயனாளிகளுக்கு இலவச வீடு ஒதுக்கப்பட்டிருந்தால், விண்ணப்பதாரரின் அல்லது பயனாளிகள் நிலையான சொத்து (அல்லது) சொத்தின் மதிப்பில் இதனை கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது)
6.	இலங்கை அகதிகளுக்கான ஓய்வூதியத் திட்டம் (OAP, DAP, DWP, DDWP)	OAP, DAP, DWP மற்றும் DDWP ஆகிய திட்டங்களின் தகுதிகள் அடிப்படையில் பயன்கள் வழங்கப்படுகின்றன.

2.13 சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் - இணையவழி விண்ணப்பம்

சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் பெற விரும்பும் பொதுமக்களுக்காக இணையவழியில் விண்ணப்பிக்க எளிய முறையில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இணையவழியில் பெறப்படும் மனுக்கள் உடனடியாக வருவாய்த் துறை அலுவலர்களுக்கு விசாரணைக்கு அனுப்பப்பட்டு,

2023 ஏப்ரல் 12]

இறுதியில் தகுதியுள்ள பயனாளிகளுக்கு, சமூகப் பாதுகாப்புத் திட்ட தனி வட்டாட்சியரால் ஒப்புதல் செய்யப்பட்டு தகுதியுள்ள பயனாளிகளுக்கு ஓய்வூதிய ஆணைகள் வழங்கப்படுகின்றன.

2.14 விண்ணப்பங்களை முடிவு செய்தல்-கால அளவு

சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின்கீழ் பெறப்படும் விண்ணப்பங்கள் முறையாக ஆய்வு செய்யப்பட்டு அரசு வகுத்துள்ள விதிகளின்படி 30 தினங்களுக்குள் தீர்வு காணப்படுகின்றன.

2.15 ஓய்வூதியதாரர்களுக்கு இதர பயன்கள்

சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின்மூலம் ஓய்வூதியம் பெறும் பயனாளிகளுக்கு ஆண்டுக்கு இருமுறை பொங்கல் மற்றும் தீபாவளி பண்டிகைகளின்போது, பெண் ஒருவருக்கு ஒரு சேலையும்/ஆண் ஒருவருக்கு ஒரு வேட்டியும் வழங்கப்படுகிறது:—

மேலும், பயனாளிகள் பின்வரும் விதிமுறைகளுக்குட்பட்டு தரமான விலையில்லா அரிசிபெறுவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள்.

I. *அங்கன்வாடி மையங்களில் உணவு உட்கொள்ளாதவர்களுக்கு மாதம் 4 கிலோ தரமான அரிசி வழங்கப்படுகிறது.*

II. *அங்கன்வாடி மையங்களில் உணவு உட்கொள்பவர்களுக்கு மாதம் 2 கிலோ தரமான அரிசி வழங்கப்படுகிறது.*

III. *சமூகப் பாதுகாப்புத் திட்ட அனைத்து பயனாளிகளுக்கும் உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013-ன்படி 5 கிலோ அரிசி வழங்கப்படுகிறது.*

2.16 விபத்து நிவாரணத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், அறிவிக்கப்பட்ட 44 வகையான தொழில்களில் ஈடுபடும் வறுமைக்கோட்டிற்குகீழ் வாழும் குடும்பங்களில் 18-59 வயதுக்குட்பட்ட வருவாய் ஈட்டும் பிரதான நபர், விபத்தில் மரணம் அடைந்துவிட்டால், இறந்த நபரின் வாரிசுதாரருக்கு நிவாரணமாக ரூ.20,000/- வழங்கப்படுகிறது.

காயத்தின் தன்மை மற்றும் உடல் குறைபாட்டின் அளவைப் பொறுத்து குடும்பத்தின் வருவாய் ஈட்டும் பிரதான நபருக்கு ரூ.7,500/- முதல் ரூ.15,000/- வரை நிவாரணம் வழங்கப்படுகிறது.

[2023 ஏப்ரல் 12

2.17 நலிந்தோர் நிவாரணத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் குடும்பங்களில் 18 முதல் 59 வயது வரை உள்ள வருவாய் ஈட்டும் பிரதான நபர் (ஆண் அல்லது பெண்) இயற்கை மரணம் அடைந்துவிட்டால், இறந்த நபரின் வாரிசுதாரருக்கு நிவாரணத் தொகையாக ரூ.20,000/- வழங்கப்படுகிறது.

2.18 விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் முன்னாள் இந்திய தேசிய ராணுவத்தில் பணியாற்றியவர்களுக்கும் ஓய்வூதியம் மற்றும் ஏனைய பயன்கள்

தமிழ்நாடு அரசு முனைப்புடன் பல நலத் திட்டங்களை நமது நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுத்து மிகுந்த துன்பங்களை அனுபவித்த விடுதலைப் போராட்ட வீரர்களுக்கென நடைமுறைப்படுத்தி வருகிறது. தமிழக அரசு, சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம், மருத்துவ வசதி, இலவசப் பேருந்து வசதி, வேலைவாய்ப்பு மற்றும் வீடுகள் ஒதுக்கீடு செய்வது போன்ற நலத் திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கி வருகிறது.

தமிழ்நாடு அரசு விடுதலைப் போராட்ட தியாகிகள் ஓய்வூதியத் திட்டம், விடுதலைப் போராட்ட வீரர்களின் தேசப்பற்று உணர்வை அங்கீகரிப்பதற்காக, அவர்களின் மேலான தியாகத்தைப் போற்றும் வகையில், 1.10.1966 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2.18.1 தகுதிகள்

i. *இத்திட்டத்தின்கீழ், இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டதற்காக மூன்று மாத காலத்திற்குக் குறையாமல் சிறை தண்டனைப் பெற்றவர்கள் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்களாவர். இந்த ஓய்வூதியம் பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதியானது, மூன்று வாரக் கால சிறைவாசம் என 1.4.1980 முதல் குறைக்கப்பட்டது.*

ii. *தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவர்களும், துப்பாக்கிச் சூட்டிலோ அல்லது விடுதலைப் போராட்டத்தின்போது காவலர் தடியடியிலோ, இறந்தவர்கள் அல்லது நிரந்தரமாக ஊனமுற்றவர்கள் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம்/ குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்களாவர்.*

2023 ஏப்ரல் 12]

iii. இத்திட்டம் 7.6.1982 முதல் கீழ்க்கண்ட வகையினருக்கும் நீட்டிக்கப்பட்டது:-

(அ) முன்னாள் இந்திய தேசிய இராணுவத்தில் (Ex.INA) பணியாற்றியவர்கள்.

(ஆ) 1946 ஆம் ஆண்டு கடற்படை கலகத்தில் பங்கு கொண்டவர்கள்.

(இ) மதுரை சதித் திட்ட வழக்கில் சிறைத் தண்டனை அடைந்தவர்களுக்கும் இத்திட்டம் நீட்டிக்கப்பட்டது.

(ஈ) விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டதற்காக அரசுப் பணியிலிருந்து பணியறவு/பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள்.

(உ) விடுதலைப் போராட்டத்தின்போது தலைமறைவாக இருந்தவர்கள் மற்றும் சொத்து பறிமுதல்/பற்றுகை செய்யப்பட்டவர்கள்.

மேற்கண்ட இனங்களில் (ஈ) மற்றும் (உ)விற்கு ஆதாரமாக நீதிமன்ற அல்லது அரசு ஆவண ஆதாரங்களைச் சமர்ப்பித்தால், விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்களாக இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

iv. இந்த ஓய்வூதியம் பெறுவதற்கான வருமான உச்ச வரம்பு 11.3.1983 அன்று முதல் நீக்கப்பட்டது.

2.18.2 குடும்ப ஓய்வூதியம்

மாநில அரசின் ஓய்வூதியம் பெற்று வருகின்ற விடுதலைப் போராட்ட வீரர் இறக்க நேரிட்டால், இந்த ஓய்வூதியத் தொகையானது அன்னாரின் மனைவிக்கு/கணவருக்கு/உரிய வயதடையாத குழந்தைகளுக்குத் தொடர்ந்து குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது.

மாநில அரசு ஓய்வூதியம் பெற்று வருகின்ற விடுதலைப் போராட்ட வீரர்கள் இறப்பிற்குப் பிறகு மகனாயிருந்தால் 18 வயதுக்கு மேலும், மகளாயிருந்தால் 21 வயதுக்கு மேலும், சுயமாய் சம்பாதித்து வாழமுடியாத அளவிற்கு மனவளர்ச்சி

குன்றியவராகவோ அல்லது மாற்றுத் திறனாளியாகவோ இருக்க நேர்ந்தால், அவர்களது வாழ்நாள் முழுமைக்கும் தொடர்ந்து குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

2.18.3 ஓய்வூதியத் தொகை

விடுதலைப் போராட்ட வீரர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்திற்கொண்டு, அவர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியமானது அரசால் அவ்வப்போது உயர்த்தப்பட்டு வந்துள்ளது.

i. இந்த ஓய்வூதியமானது மாதம் ஒன்றிற்கு ரூ.18,000/-லிருந்து ரூ.20,000/- ஆக கடந்த 15.8.2022 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

ii. குடும்ப ஓய்வூதியத் தொகை ரூ.9,000/-லிருந்து ரூ.10,000/- ஆக கடந்த 15.8.2022 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

2.18.4. சிறப்பு ஓய்வூதியம்

விடுதலைப் போராட்ட இயக்கத்தில் பங்கு கொண்டு நாட்டிற்காகக் குறிப்பிடத்தக்க வகையில் சிறப்புற பணியாற்றி பெருமைப் பெற்றவர்களின் தியாகத்தைப் பாராட்டி அங்கீகரிக்கும் வகையில், அவர்களது வாரிசுகளுக்குச் சிறப்பு ஓய்வூதியமானது அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த ஓய்வூதியமானது கடந்த 15.8.2022 முதல் ரூ.9,000/-லிருந்து ரூபாய் 10,000/-ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. தற்பொழுது.

i. சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வழிதோன்றல்கள் 86 நபர்களுக்கு வழங்கப்படுகிறது.

ii. வீரபாண்டிய கட்டபொம்மனின் வழிதோன்றல்கள் 3 நபர்களுக்கு வழங்கப்படுகிறது.

iii. முன்னாள் இராமநாதபுர மன்னர் முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதியின் தகுதியான வழிதோன்றல்கள் 49 நபர்களுக்கு வழங்கப்படுகிறது.

iv. சுதந்திரப் போராட்ட தியாகி செக்கிழுத்த செம்மல் வ.உ. சிதம்பரனார் அவர்களின் வழிதோன்றல் ஒருவருக்கும் இந்தச் சிறப்பு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

மேற்கண்ட சிறப்பு ஓய்வூதியம் அவர்கள் வாழ்நாள் முழுவதற்கும் வழங்கப்படும்.

2023 ஏப்ரல் 12]

2.18.5. ஏனைய சலுகைகள்

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் அவர்களது வாரிசுகளுக்கும் வழங்கப்படும் ஏனைய சலுகைகள் பற்றிய விவரம் பின்வருமாறு:-

அ) மருத்துவ வசதி

- ஒன்றிய அரசு ஓய்வூதியமோ அல்லது மாநில அரசு ஓய்வூதியமோ அல்லது இரண்டு ஓய்வூதியங்களும் பெற்று வருகின்ற அனைத்து விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், குடும்ப ஓய்வூதியம் பெறும் விதவைகளுக்கும்/உரிய வயதடையாத குழந்தைகளுக்கும் மருத்துவப் படி ரூ.500/-ஆக உயர்த்தப்பட்டு 15.8.2012 முதல் வழங்கப்பட்டு வருகிறது.
- விடுதலைப் போராட்ட வீரர்கள் அல்லது அவரது வாரிசுதாரர்கள் மருத்துவச் சிகிச்சைக்காகப் பழைய அரசு மருத்துவமனைகளுக்கு வரும்போது 'அ' வகுப்பு வசதிகளுடன்கூடிய மருத்துவச் சிகிச்சையும், புதிய மருத்துவமனைகளில் கட்டணப் பிரிவுகளில் எந்தவிதக் கட்டணமும் இல்லாமல் உயர்தர சிகிச்சையும் வழங்கப்படுகின்றன.

ஆ) போக்குவரத்து வசதி

ஒன்றிய மற்றும் மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்கள், அவர்களின் விதவைகள் மற்றும் ஓய்வூதியம் பெற்று வரும் வாரிசுகளுக்கும் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 60 வயதிற்கு மேற்பட்ட ஓய்வூதியதாரர்கள் பயணம் செய்யும்போது, அவர்களுடன் உதவியாளர் ஒருவருக்குக் கட்டணமில்லாமல் பயணம் செய்ய இலவச பயண அட்டை அரசால் வழங்கப்பட்டுள்ளது.

இ) வீட்டு வசதி

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் ஒதுக்கீடு செய்யும் வீடுகளில்/மனைகளில்/அடுக்கு மாடிக் குடியிருப்புகளில், ஆதி திராவிடர்/பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட 18 சதவிகிதத்திலிருந்தும், சலவையாளர்/நாவிதர்களுக்கு ஒதுக்கப்பட்ட 5 சதவிகிதத்திலிருந்தும் மற்றும் பொதுமக்களுக்கு ஒதுக்கப்பட்ட 37 சதவிகிதத்திலிருந்தும் தலா ஒரு சதவிகிதம்வீதம் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

ஈ) வேலைவாய்ப்பில் முன்னுரிமை

வேலைவாய்ப்பு அலுவலகங்களிலிருந்து அரசுத் துறைகளுக்கும் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களுக்கும் வேலைவாய்ப்புக்குத் தகுதியான பெயர் பட்டியல் அனுப்பப்படும்போது விடுதலைப் போராட்டத் தியாகிகளின் சட்டப்படியான வாரிசுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது.

உ) ஈமச்சடங்குச் செலவு

விடுதலைப் போராட்ட வீரர் இறந்தால், அவர்தம் ஈமச்சடங்குச் செலவுக்காக விடுதலைப் போராட்ட வீரரின் மனைவிக்கு அல்லது அவருடைய நேரடி வாரிசுதாரர்களுக்கு உதவித் தொகையாக ரூ.5000/- உடனடியாக வழங்கப்பட்டு வருகிறது. இறந்துபோன விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில், வட்டாட்சியருக்குக் குறையாத பதவியிலுள்ள வருவாய்த் துறை அலுவலர் ஒருவரால் அரசு சார்பில் மறைந்தவரின் உடல்மீது மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தப்படுகிறது. மாநில அரசின்/ஒன்றிய அரசின் ஓய்வூதியம் அல்லது இவ்விரண்டு ஓய்வூதியங்களையும் பெறுகின்ற விடுதலைப் போராட்ட வீரர்கள் அனைவருக்கும் இது பொருந்தும்.

2.18.6 வகைவாரியான ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை விவரம்

தற்போது, மாநில அரசுத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வரும் பல்வேறு வகையான ஓய்வூதியங்களைப் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்கள் மற்றும் வாரிசுதாரர்களின் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு:-

அட்டவணை 2.6

வ. எண்	ஓய்வூதிய வகைகள்	ஓய்வூதிய தாரர்களின் எண்ணிக்கை ***
1.	மாநில அரசின் ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்கள் (மாதமொன்றிற்கு ரூ.20,000/- மற்றும் ரூ.500/- மருத்துவப் படி)	68

2023 ஏப்ரல் 12]

வ. எண்	ஓய்வூதிய வகைகள்	ஓய்வூதிய தாரர்களின் எண்ணிக்கை ***
2.	மாநில அரசின் குடும்ப ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களின் வாரிசுதாரர்கள் (மாதமொன்றிற்கு ரூ.10,000/- மற்றும் ரூ.500/- மருத்துவப் படி)	732
3.	மருது பாண்டியர் சகோதரர்களின் வழிதோன்றல்கள் (மாதமொன்றிற்கு ரூ.10,000/- வீதம்)	86
4.	வீரபாண்டிய கட்டபொம்மனின் வழிதோன்றல்கள் (மாதமொன்றிற்கு ரூ.10,000/- வீதம்)	3
5.	முன்னாள் இராமநாதபுர மன்னர் முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதியின் வழிதோன்றல்கள் (மாதமொன்றிற்கு ரூ.10,000/- வீதம்)	49
6.	சுதந்திரப் போராட்ட தியாகி செக்கிழுத்த செம்மல் வ.உ. சிதம்பரனார் அவர்களின் வழிதோன்றல் (மாதமொன்றிற்கு ரூ.10,000/- வீதம்)	1
7.	ஒன்றிய அரசின் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் பெறும் மாநில சுதந்திரப் போராட்டத் தியாகிகள் (ஓய்வூதியம் ரூ.500/- + மருத்துவப் படி ரூ.500/-)	186
8.	ஒன்றிய அரசின் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் குடும்ப ஓய்வூதியம் பெறும் மாநில சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் வாரிசுதாரர்கள் ஓய்வூதியம் (ஓய்வூதியம் ரூ.500/- + மருத்துவப் படி ரூ.500/-)	375
	மொத்தம்	1500

***31.1.2023-ன்படி கருவூலக் கணக்குத் துறையிடமிருந்து பெறப்பட்ட எண்ணிக்கை

[2023 ஏப்ரல் 12

2.18.7 ஒன்றிய அரசின் ஓய்வூதியத் திட்டம்

15.8.1972 முதல் ஒன்றிய அரசும் விடுதலைப் போராட்ட வீரர்கள் ஓய்வூதியத் திட்டத்தைச் (ஸ்வதந்திரதா சைனிக் சம்மான் பென்சன்) செயல்படுத்தி வருகிறது. தற்போது, ஒன்றிய அரசு இத்திட்டத்தினை "ஸ்வதந்திரதா சைனிக் சம்மான் யோஜனா" என 1.4.2017 முதல் பெயர் மாற்றம் செய்துள்ளது. இத்திட்டத்தின்படி வழங்கப்படும் சலுகைகள் பின்வருமாறு:-

அ) ஒன்றிய அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறும் தியாகிகளுக்கு ஒன்றிய அரசால் 15.8.2016 முதல் ரூ.26,000/- அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலைப் படியும் சேர்த்து வழங்கப்படுகிறது. இவ்வாறு ஒன்றிய அரசு ஓய்வூதியம் பெற்று வரும் விடுதலைப் போராட்ட வீரர்கள் மற்றும் வாரிசுதாரர்களின் எண்ணிக்கை 561 ஆகும்.

ஆ) ஒன்றிய அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம்/ ஒன்றிய அரசு குடும்ப ஓய்வூதியம் பெறுபவருக்கு, மாநில அரசின் நிதியிலிருந்து, மாதமொன்றிற்கு ரூபாய் 500/- ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

மேற்குறிப்பிட்ட விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியத் திட்டங்களுக்காக 2023-2024 ஆம் நிதியாண்டிற்கு ரூ.16,48,48,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.19 மக்கள் தொடர்பு முகாம்

பொதுமக்களின் குறைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காணும் நோக்குடன் ஒவ்வொரு மாதத்தின் இரண்டாவது புதன்கிழமைகளில் மக்கள் தொடர்பு முகாம் நடத்தப்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சியரின் தலைமையில் வருவாய்த் துறையுடன், ஊரக வளர்ச்சி, வேளாண்மை, தோட்டக்கலை, சுகாதாரம், கால்நடை, சமூக நலம் மற்றும் இதர துறைகளைச் சார்ந்த உயர் அலுவலர்கள் ஒரு குழுவாகச் சென்று மக்களின் குறைகளுக்குத் தீர்வு காண்பதோடு மட்டுமல்லாமல் இதர அரசு சேவைகளும் வழங்கப்பட்டு வருவதே இத்திட்டத்தின் சிறப்பு அம்சம் ஆகும். இம்முகாம்களை மேலும் பயனுள்ளதாகச் செயல்படுத்த 1) தனித்துணை ஆட்சியர் (சமூக

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 12]

பாதுகாப்புத் திட்டம் 2) வருவாய் கோட்ட அலுவலர் 3) மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மற்றும் 4) மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை நல அலுவலர் ஆகியோர் அடங்கிய குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களுக்குச் சென்று பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெறுவதற்காக, முந்தைய மாதத்தின் மூன்றாவது புதன்கிழமை அன்று அனுப்பி வைக்கப்படுகிறார்கள். பெறப்பட்ட மனுக்கள் தொடர்புடைய துறைகளுக்கு அனுப்பப்பட்டு, அதன் மீதான இறுதி ஆணைகள் மக்கள் தொடர்பு முகாம் நாளன்று பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றன. அம்முகாம்களிலேயே முதியோர் உதவித் தொகை பெறுவதற்கான ஆணைகள், வீட்டுமனைப் பட்டா மற்றும் பட்டா மாறுதல் ஆணைகள், இதர சான்றிதழ்கள் வழங்குதல், புதிய குடும்ப அட்டைகள் வழங்குதல் மற்றும் இதர அரசு நலத் திட்ட உதவிகள் அனைத்தும் தகுதியான பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

அனைத்து மாவட்டங்களிலும் மக்கள் தொடர்பு முகாம் நடத்துதல் தொடர்பாக திருத்தப்பட்ட வழிகாட்டுதல்கள் அரசாணை (நிலை) எண் 377, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் [வ.நி.3(2)] துறை, பிரிவு, நாள் 22.8.2022-ன் வாயிலாக வெளியிட்டுள்ளது.

2.20. மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள்

மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் கூட்டம் ஒவ்வொரு மாதமும் வருவாய்க் கோட்ட நிலை அலுவலர்களாலும், இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை மாவட்ட ஆட்சித் தலைவர்களாலும், மூன்று மாதங்களுக்கு ஒருமுறை வருவாய் நிருவாக ஆணையராலும் அவர்களது குறைகளைக் களையும் நோக்குடன் நடத்தப்பட்டு வருகின்றன.

2.21. வேட்டி மற்றும் சேலை வழங்கும் திட்டம் - 2023

இவ்வாண்டு (2023) பொங்கல் திருநாளை முன்னிட்டு, 1.79 கோடி சேலைகளும், 1.79 கோடி வேட்டிகளும் தகுதியுள்ள பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதற்கென 2022-2023 ஆம் நிதியாண்டில், அரசாணை (நிலை) எண் 140, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (டி2) துறை, நாள் 9.9.2022-ல், ரூ.487.92 கோடி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2.22. முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம

மாநிலத்தில் விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களின் கல்வி, சமூகப் பாதுகாப்பு மற்றும் பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துவதற்காக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

2.22.1 தகுதிகள் மற்றும் உறுப்பினர் பதிவு விவரம்

- விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த தொழிலில் ஈடுபட்டுள்ள அனைத்து விவசாயத் தொழிலாளர்கள்.
- உள்ளூர் மீன்பிடித் தொழில், பால்பண்ணை தொழில், தோட்டக்கலை, பட்டுப் புழு வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு, கோழிப் பண்ணை மற்றும் மரங்கள் வளர்த்தல் போன்ற தொழில்கள் செய்பவர்களும் விவசாயத் தொழிலாளர்களாகக் கருதப்படுவார்கள்.
- 2.50 ஏக்கர் நன்செய் அல்லது 5.00 ஏக்கர் புன்செய் அளவிற்குட்பட்ட நிலத்தைச் சொந்தமாக வைத்திருந்து அதில் நேரடியாகப் பயிர் செய்யும் குறு/சிறு விவசாயிகள் மற்றும் பயிரிடு குத்தகைதாரர்கள்.
- இத்திட்டத்தின்கீழ் 18 வயது முதல் 65 வயது வரையுள்ளவர்கள் முதன்மை உறுப்பினர்களாகப் பதிவு செய்யப்படுவார்கள்.
- மூல உறுப்பினர்களைச் சார்ந்து வாழும் பொருள் ஈட்டாத குடும்ப உறுப்பினர்கள், சார்ந்து வாழும் உறுப்பினர்களாகப் பதிவு செய்யப்படுவார்கள்.

இத்திட்டத்தின்கீழ் 31.3.2023 வரை பதிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களின் விவரம் பின்வருமாறு:

அட்டவணை 2.7

உறுப்பினர்களின் விவரம்

1	முதன்மை உறுப்பினர்கள்	1,47,44,017
2	முதன்மை உறுப்பினரைச் சார்ந்தவர்கள்	1,35,88,380
	மொத்தம்	2,83,32,397

2023 ஏப்ரல் 12]

2.22.2 மூல உறுப்பினர்கள் மற்றும் சார்ந்து வாழும் உறுப்பினர்களுக்கான நலத் திட்ட உதவிகளின் விவரம்

இத்திட்டத்தில் கீழ்க்கண்ட நலத் திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன:-

அட்டவணை 2.8

மூல உறுப்பினர்களுக்காக	உதவித்தொகை விவரம்
1. திருமண உதவித் தொகை	ஆண்களுக்கு ரூ.8,000/- பெண்களுக்கு ரூ.10,000/-
2. முதியோர் ஓய்வூதியம்	மாதம் ரூ.1000/-
3. உறுப்பினர்களின் தற்காலிக உடல்திறனற்ற காலத்திற்கான மாதாந்திர உதவி	
i. காசநோய்	மாதம் ரூ.1000/-
ii. புற்றுநோய்	
iii. எச்.ஐ.வி./எய்ட்ஸ்	
iv. டயாலிசிஸ் (Dialysis)	
v. கை, கால் முறிவு மற்றும் நிலை குலைவு	
vi. நரம்பு சம்பந்தமான நோய்	
vii. முதுகு தண்டுவடம் பாதிப்பு	
viii. இதயநோய்	
ix. பார்வை இழத்தல்	
x. கல்லீரல் நோய்	
xi. சிறுநீரக நோய்	
xii. மனநிலை பாதிப்பு	
xiii. அரிவாள் செல் இரத்த சோகை	
xiv. இரத்த அழிவு சோகை	
xv. இரத்த உறையா நோய்	

[2023 ஏப்ரல் 12

மூல உறுப்பினர்களுக்காக	உதவித்தொகை விவரம்
4. விபத்து நிவாரணம்	மரணம் ரூ.1,00,000/- விபத்து காயங்களுக்கு ஏற்ப ரூ.20,000 முதல் ரூ.1,00,000/-வரை
5. இயற்கை மரண உதவித் தொகை	ரூ.20,000/-
6. ஈமச்சடங்கு செலவு	ரூ.2500/-
சார்ந்து வாழும் உறுப்பினர்	உதவித் தொகை விவரம்
1. கல்வி உதவித் தொகை	தொழிற்பயிற்சி/ பல்தொழில்நுட்பப்பயிற்சி முதல் முதுநிலை தொழிற்கல்வி பயிலும் மாணவ மாணவியருக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1,250/- முதல் ரூ.6,750/- வரை வழங்கப்படுகிறது
2. திருமண உதவித் தொகை	ஆண்களுக்கு ரூ. 8,000/- பெண்களுக்கு ரூ.10,000/-
3. எச்.ஐ.வி.-யினால் உயிரிழந்த மூல உறுப்பினரின் ஆதரவற்ற குழந்தைகளுக்கான உதவித் தொகை.	மாதம் ரூ.1,000/- வீதம் 18 வயது வரை வழங்கப்படுகிறது.
4. ஈமச்சடங்கு செலவு	ரூ.2,500/-

2.22.3 இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்கள் பின்வருமாறு

- கல்வி உதவித் தொகையினைப் பொறுத்தவரையில் அரசின் மற்ற எந்தத் திட்டத்தின்கீழ் கல்வி உதவி பெற்றிருப்பினும் இத்திட்டத்தின்கீழ் கல்விக்கான உதவித் தொகையினைக் கூடுதலாகப் பெறலாம்.
- இத்திட்டத்தின்கீழ் ஆண்களுக்கும் திருமண உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2023 ஏப்ரல் 12]

- *பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்ட முதன்மை உறுப்பினர்களுக்கு விபத்து நிவாரணமாக ரூ.50,000/- வழங்கப்படுகிறது.*

- *எந்த ஒரு பதிவுபெற்ற முதன்மை உறுப்பினர் அல்லது உறுப்பினரைச் சார்ந்தவர்கள் இறந்தாலும் ஈமச் சடங்குக்கான நிதியுதவி ரூ.2,500/- வழங்கப்படுகிறது.*

- *காசநோய், புற்றுநோய், எச்.ஐ.வி./ எய்ட்ஸ் மற்றும் கொடிய நோயினால் பாதிக்கப்பட்ட விவசாய உறுப்பினர்களுக்கு அவர்களின் தற்காலிக உடல்திறனற்ற காலத்திற்கு மாதாந்திர உதவித் தொகை ரூ.1000/- வழங்கப்படுகிறது.*

- *எச்.ஐ.வி.-யினால் உயிரிழந்த விவசாய உறுப்பினரின் ஆதரவற்ற குழந்தைகளுக்கு மாத உதவித் தொகை ரூ.1000/- வழங்கப்படுகிறது. (18 வயது வரை)*

- *மூல உறுப்பினர் இறந்த பிறகும் விவசாய உறுப்பினரைச் சார்ந்த குடும்ப உறுப்பினர்களுக்குக் கல்வி மற்றும் திருமண உதவித் தொகை தொடர்ந்து வழங்கப்படுகிறது.*

செயலாக்கம்

முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 31.3.2023 முடிய இதுவரை 34,15,774 பயனாளிகளுக்கு ரூ.2,440.02 கோடி வழங்கப்பட்டுள்ளது.

2022-2023 ஆம் ஆண்டில் முதலமைச்சரின் உழவர் பத்துகாப்புத் திட்டத்தில் வழங்கப்பட்ட உதவி விவரங்கள் பின்வருமாறு:-

அட்டவணை 2.9

வ. எண்	உதவி விவரம்	தொகை (கோடியில்)	பயனாளிகளின் எண்ணிக்கை
1.	*கல்வி*	*9.87*	*40,107*
2.	*உறுப்பினர்களின் திருமணம்*	*2.45*	*2,885*
3.	*உறுப்பினரைச் சார்ந்தவர்களின் திருமணம்*	*13.05*	*14,999*

[2023 ஏப்ரல் 12

வ. எண்	உதவி விவரம்	தொகை (கோடியில்)	பயனாளிகளின் எண்ணிக்கை
4.	இயற்கை மரணம் மற்றும் ஈமச் சடங்கு	100.24	45,866
5.	விபத்து நிவாரணம்	11.05	1,090
6.	தற்காலிக உடல்திறனற்ற காலத்திற்கான மாதாந்திர உதவித்தொகை	49.02	45,206
7.	எச்.ஐ.வி-யினால் உயிரிழந்த உறுப்பினரின் ஆதரவற்ற குழந்தைகளுக்கான மாதாந்திர உதவித் தொகை	0.59	513
	மொத்தம்	186.27	1,50,666

2.23. பேரிடர் மேலாண்மை

தமிழ்நாடு இந்திய துணைக் கண்டத்தின் தென்பகுதியில் அமைந்துள்ள நிலையில் பல்வேறு இயற்கை பேரிடர்களின் பாதிப்பிற்குள்ளாகிறது. வங்காள விரிகுடா, இந்தியப் பெருங்கடல் மற்றும் அரபிக் கடல் ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்ட தமிழ்நாடு 1076 கி.மீ. நீள கடற்கரையைக் கொண்டுள்ளது, இது நாட்டின் மொத்த கடற்கரைத் தூரத்தில் 18% மற்றும் இரண்டாவது நீளமான கடற்கரை ஆகும். மேலும், மாநிலத்தின் மாவட்டங்களில் 14 மாவட்டங்கள் கடற்கரையைக் கொண்டுள்ளன.

கடந்த நூற்றாண்டில், 50-க்கும் மேற்பட்ட புயல்கள் தமிழக கடற்கரையின் பல்வேறு பகுதிகளைத் தாக்கியுள்ளதன்மூலம், கடலோர மாவட்டங்களில் வசிக்கும் மக்களுக்குத் தொடர் அச்சுறுத்தலாக இருந்து வருகிறது. புயல் தவிர, கனமழை, வெள்ளம், நிலச்சரிவு, வறட்சி, கடல் அரிப்பு மற்றும் கடல் நீர் உட்புகுதல்,

2023 ஏப்ரல் 12]
வெப்ப அலை, இடி மற்றும் மின்னல், தொழிற்சாலை மற்றும் இரசாயன பேரழிவுகள், தீ விபத்துகள், காட்டுத் தீ போன்றவை மாநிலத்தில் அடிக்கடி ஏற்படும் பிற பேரிடர்கள் ஆகும். மாநிலத்தின் சில பகுதிகள் நில நடுக்கத்தின் பாதிப்பின் தன்மை கருதி வகைப்படுத்தப்பட்டுள்ள மண்டலங்களுள், மண்டலம் 2 மற்றும் 3-ல் உள்ளன.

தமிழ்நாடு அரசு ஒரு முழுமையான அணுகுமுறையின்மூலம் பேரிடர்கள், அபாயம் மற்றும் பாதிப்புகள் குறித்த தரவுகள் மற்றும் வரைபடங்களைத் தயாரிப்பதோடு, பேரிடர் அபாயத்தைக் குறைத்திட தணிப்பு திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. பொதுமக்களின், அபாயத்தை எதிர்கொள்ளும் திறனை மேம்படுத்த தொடர்ந்து நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. தமிழக அரசானது அனைத்து விதமான பேரிடர்களையும் திறம்பட எதிர்கொண்டு, அதன்மூலம் பேரிடர்களை எதிர்கொள்ளக்கூடிய திறன்மிக்க சமூகம், கிராமம், நகரம் மற்றும் தமிழ்நாட்டை உருவாக்க உறுதி பூண்டுள்ளது.

*பேரிடர்களை எதிர்கொள்ளும் தமிழ்நாடு என்ற இலக்கினை அடைய முன்னெச்சரிக்கைத் தகவல்கள் கடைக்கோடி மக்களையும் சென்றடையும் வகையில் மேம்படுத்துதல் வானிலை கண்காணிப்பு அமைப்புகளை வலுப்படுத்துதல் மற்றும் வெள்ளத் தணிப்புத் திட்டங்களைச் செயல்படுத்துதல் ஆகியவற்றில் தமிழ்நாடு அரசு கவனம் செலுத்தி வருகிறது. 1400 தானியங்கி மழை மானிகள் மற்றும் 100 தானியங்கி வானிலை நிலையங்கள் நிறுவுதல், இரண்டு டாப்ளர் வானிலை ரேடார்களை (*Doppler Weather Radars*) நிறுவுதல் மற்றும் மேல் அடுக்கு வானிலை கண்காணிப்பு அமைப்புகளை உருவாக்குதல் ஆகியவை தமிழ்நாடு அரசின் தடம்பதிக்கும் முயற்சிகள் ஆகும். இந்த முயற்சிகள் மாநிலத்தின் நீர்நிலை மற்றும் வானிலை கண்காணிப்பு அமைப்புகளை வலுப்படுத்தும்.*

2.24. தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம்

தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை ஆணையம் மாநிலத்தின் பேரிடர் மேலாண்மைக்கான பொறுப்பேற்றுள்ளது. இவ்வாணையம் மாநில செயற்குழு, மாநில நிவாரண ஆணையர், தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமை, மாவட்ட நிருவாகம் மற்றும் முக்கியத் துறைகளின் உதவியுடன் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில்

ஏற்படுத்தப்பட்டுள்ள தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் உறுப்பினர்கள் விவரம் பின்வருமாறு:

- மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்
- அரசு தலைமைச் செயலாளர்
- அரசு செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை
- அரசு செயலாளர், நிதித் துறை
- அரசு செயலாளர், உள் துறை
- அரசு செயலாளர், உயர் கல்வித் துறை
- அரசு செயலாளர், பள்ளிக் கல்வித் துறை
- மாநில நிவாரண ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர்
- இயக்குநர், பேரிடர் மேலாண்மை மற்றும் தணிப்பு மையம்,
- அண்ணா பல்கலைக்கழகம், சென்னை
- துறைத் தலைவர், கட்டட பொறியியல் துறை, இந்திய தொழில்நுட்பக் கழகம், சென்னை.

இவ்வாணையமானது, கொள்கை உருவாக்கத்திற்கான வழிகாட்டுதல், மாநில பேரிடர் மேலாண்மைத் திட்டம், மாவட்ட பேரிடர் மேலாண்மைத் திட்டம் மற்றும் துறை வாரியான பேரிடர் மேலாண்மைத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தல், பேரிடர் அபாயக் குறைப்பு தொடர்பான அனைத்து முக்கியமான திட்டங்களையும் கண்காணித்தல் உள்ளிட்ட பணிகளை மேற்கொண்டு வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் கூட்டம் 26.9.2022 அன்று நடைபெற்றது.

2023 ஏப்ரல் 12]

2.25. மாநில செயலாக்கக் குழு

மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்திற்கு உதவிடும் வகையில், மாநில செயலாக்கக் குழு தமிழக அரசின் தலைமைச் செயலரின் தலைமையில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, உள் துறை உள்ளிட்ட துறைகளின் செயலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி குழுவின் கூட்டத்தில் வருவாய் நிர்வாக ஆணையர், நிதித் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மற்றும் நீர்வள ஆதாரத் துறை ஆகிய துறைகளின் செயலாளர்கள் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொள்வர்கள். மாநில அளவிலான பேரிடர் மேலாண்மைத் திட்டங்களைச் செயல்படுத்துவதும், தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை ஆணையத்திற்கு நிதியை கையாள்வது தொடர்பான ஆலோசனைகள் வழங்குவதும் இக்குழுவின் முக்கியப் பொறுப்பாகும். பேரிடர் காலங்களில் உடனடி நிவாரணம் மற்றும் சீரமைப்புப் பணிகளுக்காக மாநில பேரிடர் அபாய மேலாண்மை நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்வதை இக்குழு உறுதி செய்கிறது.

2.26. மாநில ஆலோசனைக் குழு

மாநில ஆலோசனைக் குழு, வருவாய் நிருவாக ஆணையரைத் தலைவராகக் கொண்டும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை செயலாளரை இணைத் தலைவராகக் கொண்டும் அமைக்கப்பட்டுள்ளது. பல்வேறு துறை சார்ந்த வல்லுநர்களை உள்ளடக்கிய இக்குழு, பேரிடர் அபாயக் குறைப்பு நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைகளைத் தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்திற்கு வழங்குகிறது.

2.27. மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையம்

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியர்களின் தலைமையில் மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையமானது, ஒன்றிய மற்றும் மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி மாவட்டத்தில் பேரிடர் மேலாண்மைத் தொடர்பான திட்டமிடல், ஒருங்கிணைத்தல் மற்றும் செயல்படுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகிறது.

[*2023 ஏப்ரல் 12*

2.28. தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமை

தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் செயலாக்க அமைப்பாக தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமை செயல்படுகிறது. இம்முகமையின் ஆட்சிமன்றக் குழுவிற்கு மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தலைவராகவும், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் துணைத் தலைவராகவும் உள்ளனர். ஒரு துடிப்பான பேரிடர் மேலாண்மை இயக்கத்தின்மூலம் அனைத்து வகை பேரிடர்களின் எதிர்மறையான விளைவுகளைக் குறைத்து, உயிரிழப்பு, பொது சொத்துகள் மற்றும் அதிமுக்கியத்துவம் வாய்ந்த உட்கட்டமைப்புகளின் சேதம் ஆகிவற்றைத் தவிர்த்தல் என்பதே தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமையின் முதன்மை நோக்கமாகும்.

2.29. பேரழிவு அபாயக் குறைப்புக்கான உலகளாவிய மற்றும் தேசிய கட்டமைப்புகள்

சென்டாய் கூட்டமைப்பின் பேரிடர் அபாயக் குறைப்பு கோட்பாடுகள் (2015 – 2030), பருவமாற்ற ஒப்பந்தமான பாரிஸ் உடன்படிக்கை (2015), நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் (2015 – 2030), பேரிடர் அபாயக் குறைப்பு குறித்து இந்தியப் பிரதமரின் 10 அம்சத் திட்டம், தேசிய பேரிடர் மேலாண்மைத் திட்டம் 2019 ஆகியவை பேரிடர்களைக் குறைக்கும் திட்டம். தமிழ்நாட்டின் பேரிடர் அபாயக் குறைப்பு நடவடிக்கைகள் மேற்கூறிய கோட்பாடுகளின் அடிப்படையில் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. இதன்மூலம் பேரிடர் அபாயத்திலிருந்து மீள் தன்மையுடைய கிராமம், நகரம், பெருநகரம் மற்றும் மாநிலம் என்ற இலக்கினை அடைய, உலகளாவிய மற்றும் தேசிய பேரிடர் அபாயக் குறைப்புக் கொள்கைகள் சமூகத்தின் அனைத்து நிலைகளிலும் செயல்படுத்தப்படுகிறது. இதற்காக சென்டாய் கூட்டமைப்பின் பின்வரும் கோட்பாடுகளைப் பின்பற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது.

i. *பேரிடர் அபாயத்தைப் புரிந்து கொள்வது*

ii. *பேரிடர் அபாய ஆளுமையினை மேம்படுத்துவது*

iii. *பேரிடர் அபாயக் குறைப்பிற்குத் தேவையான முதலீடு செய்வது (கட்டமைப்பு மற்றும் கட்டமைப்பு அல்லாத செயல்பாடுகள்)*

2023 ஏப்ரல் 12]

iv. பேரிடர்களின்போது மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகளுக்கான ஆயத்த நிலை, பேரிடருக்கான முன்னெச்சரிக்கை, பேரிடரின் போது சிறந்த மீட்புப் பணி மற்றும் பேரிடருக்கு பின்னர் சிறப்பான மறுசீரமைப்பு.

2.30. பேரிடர் மீட்பு நடைமுறை

பேரிடர்களின்போது, பொதுமக்கள் மற்றும் அவர்களின் சொத்துகளை பாதுகாக்க பேரிடர் மேலாண்மையின் அனைத்து பங்குதாரர்களின் முயற்சிகளை ஒருங்கிணைத்து உடனடியாகச் செயல்படும்வகையில் மாநிலத்தில் பேரிடர் மீட்பு நடைமுறையை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. பேரிடர் மீட்பு நடைமுறையானது பேரிடரின்போது, அரசின் அனைத்து துறைகளையும், முகமைகளையும் செயலாக்கமுள்ள முறையான அணுகுமுறையுடனும் வழிநடத்துகிறது. உயிர் மற்றும் உடைமைகளின் இழப்பைக் குறைப்பதோடு மட்டுமல்லாமல் மாநிலத்தில் பேரிடர் மீட்பு செயல்பாடுகளை வலுப்படுத்துவதும், தரப்படுத்துவதும் இதன் நோக்கமாகும். மாநில அளவில், வருவாய் நிருவாக ஆணையர்/ மாநில நிவாரண ஆணையர், ஒரு பேரிடர் நிகழ்வுக்கு பேரிடர் தலைவராகச் செயல்படுவார், பேரிடர் மேலாண்மை இயக்குநர், துணை பேரிடர் தலைவராகச் செயல்படுவார். பேரிடர்களின்போது அனைத்து துறைகளும் பேரிடர் தலைவரின் வழிகாட்டுதலின்கீழ் செயல்படும். பேரிடர்களின்போது, மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர் பேரிடர் தலைவராகச் செயல்படுவார்.

2.31 பேரிடர் அபாய தகவல் தெரிவித்தல்

பேரிடர் காலங்களில், பாதிப்பிற்குள்ளாகும் மக்களுக்கு பேரிடர் அபாயம் குறித்த தகவல்களை உரிய நேரத்தில் தெரியப்படுத்தும் ஓர் அமைப்பு முறையினை உருவாக்குவது மிக முக்கியமானதாகும். இந்திய வானிலை ஆய்வு மையம், இந்திய தேசிய கடல்சார் தகவல் மையம், மத்திய நீர்வள ஆணையம் உள்ளிட்ட அமைப்புகளிடமிருந்து பெறப்படும் கனமழை, வெள்ளம், புயல், நிலநடுக்கம், சுனாமி போன்ற பேரிடர்கள் குறித்தான எச்சரிக்கைத் தகவல்கள் மாநில அவசரக்கால செயல்பாட்டு மையத்தில் பெறப்படுகிறது. இத்தகவல்கள் மாவட்ட அவசரக்கால செயல்பாட்டு மையத்தின்மூலம் பொதுமக்கள்,

மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபடும் முகமைகள் மற்றும் இதர பங்குதாரர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது. மாவட்ட அவசரக்கால செயல்பாட்டு மையம் மட்டுமல்லாமல், பேரிடர் தலைவர் அனைத்துவிதமான தகவல் தொடர்பு முறைகளையும் பயன்படுத்தி, பொதுமக்கள் மற்றும் பிற பங்கேற்பாளர்களுக்குத் தகவல்கள் சென்றடைய வழிவகை செய்கிறார்.

2.32. மாநில அவசரக்கால செயல்பாட்டு மையம்

மாநில அவசரக்கால செயல்பாட்டு மையம் வருவாய் நிருவாக ஆணையர்/மாநில நிவாரண ஆணையரின் கட்டுப்பாட்டின்கீழ் 24 மணி நேரமும் செயல்பட்டு வருகிறது. இந்திய வானிலை ஆய்வு மையம், இந்திய தேசிய கடல்சார் தகவல் மையம், மத்திய நீர்வள ஆணையம் மற்றும் இந்தியாவின் புவியியல் ஆய்வு மையம், நில அதிர்வுக்கான தேசிய மையம் ஆகிய அமைப்புகளிடமிருந்து, மழை, புயல், வெள்ளம், நிலச்சரிவு மற்றும் நிலநடுக்கம் ஆகியவை குறித்தான முன்னெச்சரிக்கை தகவல்கள் மாநில அவசரக்கால செயல்பாட்டு மையத்தில் பெறப்படுகிறது. இத்தகவல்கள் மாவட்ட நிருவாகம், முக்கியத் துறைகள் மற்றும் பேரிடர் மேலாண்மையின் இதர பங்குதாரர்களுக்கும், ஊடகங்களுக்கும் உயர் அலுவலர்களின் அனுமதியோடு தெரிவிக்கப்படுகிறது.

பேரிடர்களின்போது, முன்னெச்சரிக்கை தகவல்களை விரைந்து அனுப்பும்பொருட்டு, மாநில மற்றும் மத்திய அமைப்புகளின் மூத்த அலுவலர்களது மேற்பார்வையில் இந்த மையம் 24 மணி நேரமும் செயல்படும். துயரில் இருக்கும் பொதுமக்கள் 1070 என்ற கட்டணமில்லாத் தொலைபேசிமூலம் இம்மையத்தினைத் தொடர்புகொள்ளலாம்.

பேரிடர் காலங்களில் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் ஆகியோருடன் இணைந்து பொதுமக்களுக்குப் பேரிடர் அபாயம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தவும், பொதுமக்களது பாதுகாப்பினை உறுதி செய்திட மாநில அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும், ஊடகங்களின் வாயிலாக மக்களுக்குத் தெரிவிப்பார்கள்.

2023 ஏப்ரல் 12]

2.33. மாவட்ட அவசரகால கட்டுப்பாட்டு மையம்

மாவட்ட அவசரக்கால கட்டுப்பாட்டு மையம், மாவட்ட ஆட்சித் தலைவரின் மேற்பார்வையின்கீழ் செயல்படுகின்றது. பேரிடர் காலங்களில், மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையத்திலிருந்து பெறப்படும் வானிலை முன்னறிவிப்புகள்/ எச்சரிக்கைகளின் அடிப்படையில் பேரிடர் தொடர்பான தேடுதல், மீட்பு, நிவாரணம் மற்றும் சீரமைப்புப் பணிகளை செயல்படுத்தும் வகையில் மாவட்ட அவசரக்கால செயல்பாட்டு மையங்கள், மாவட்ட அளவிலான தகவல் தொடர்பு மையங்களாகச் செயல்படுகிறது. பேரிடர் காலங்களில் அனைத்துத் துறை மாவட்ட அலுவலர்களின் பங்களிப்போடு 24 மணி நேரமும் இம்மையம் செயல்படுகிறது. இதன்மூலம் முன்னெச்சரிக்கை தகவல்களை விரைந்து வட்டம், கிராமம் மற்றும் குடியிருப்புப் பகுதிகளுக்கும் கொண்டு சேர்க்கின்றது. இம்மையம், பேரிடர் காலங்களில், அனைத்துத் துறை அலுவலர்களை பணியில் அமர்த்தி துறை அளவிலான தேடுதல், மீட்பு, நிவாரணம் மற்றும் சீரமைப்புப் பணிகளைக் கண்காணித்து, வரப்பெற்ற அறிக்கைகளைத் தொகுத்து வருவாய் நிருவாக ஆணையர்/மாநில நிவாரண ஆணையருக்கு அனுப்பும் பணியில் ஈடுபடுகிறது. 1077 என்ற கட்டணமில்லாத் தொலைபேசிமூலம் பொதுமக்கள் இம்மையங்களைத் தொடர்பு கொள்ள முடியும்.

2.34. அவசர உதவி ஆதார அமைப்பு

இந்திய அரசின் உள் துறை அமைச்சகத்தால் அனைத்து மாநிலங்களிலும் ஒரே அவசர உதவி எண் நிறுவப்பட்டுள்ளது. தற்போது இந்த அவசர உதவி ஆதார அமைப்பு (ERSS) மூலம் பொது மக்கள் காவல் உதவி, மருத்துவ அவசர ஊர்தி, தீ விபத்து, பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு தொடர்பான அவசர நிலைகளில் உதவி பெறுவதற்காக '112' என்ற ஒற்றை தொலைபேசி எண்ணை அழைக்கலாம்.

தற்சமயம், இந்த அவசர உதவி ஆதார அமைப்பு (ERSS), 112 உதவி எண்ணை பேரிடர் தொடர்பான உதவிக்காகவும் பயன்படுத்தும் வகையில் சேவைகளை நீட்டித்துள்ளது. இந்த விரிவாக்கத் திட்டம் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் (NDMA) நிதியுதவியுடன் உயர்நிலை கணிப்பு மேம்பாட்டு மையத்தால் (Centre for Development of Advanced Computing)

(C-DAC) செயல்படுத்தப்பட்டு வருகிறது. பொதுமக்கள் மாநில அவசரக்கால செயல்பாட்டு மையத்தை எங்கிருந்தும் 1070 மற்றும் 112 ஆகிய எண்களில் தொடர்புகொள்ளலாம். உதவி கோரி வரப்பெறும் அழைப்புகளுக்குத் தீர்வு காணும் வரை, தொடர்ந்து கண்காணிக்கும் வசதி கொண்ட இந்த ERSS அமைப்பானது விரைவில் செயல்பாட்டிற்கு வரவுள்ளது.

2.35 முன்னெச்சரிக்கை வழங்குதல்

2.35.1 முன்னெச்சரிக்கை வழங்கும் முகமைகள்

இந்திய வானிலை ஆய்வு மையம், மத்திய நீர்வள ஆணையம், இந்திய தேசிய கடல்சார் தகவல் மையம், இந்தியாவின் புவியியல் ஆய்வு மையம் மற்றும் நில அதிர்வுக்கான தேசிய மையம் ஆகிய அமைப்புகளிடமிருந்து, மழை, புயல், வெள்ளம், நிலச்சரிவு மற்றும் நில நடுக்கம் ஆகியவை குறித்தான முன்னெச்சரிக்கைத் தகவல்கள் மாநில அவசரக்கால செயல்பாட்டு மையத்தால் பெறப்படுகிறது. இந்த முன்னெச்சரிக்கை வழங்கும் முகமைகள் குறிப்பிட்ட கால இடைவெளியில் முன்னெச்சரிக்கைகள் மற்றும் அறிக்கைகளை வழங்குகின்றன. பேரிடர்களின்போது நிலைமைக்கு ஏற்றவாறு இந்தக் கால இடைவெளி குறைக்கப்பட்டு அவ்வப்போது முன்னெச்சரிக்கை செய்திகள் வழங்கப்படுகின்றன.

2.35.2 வானிலை முன்னெச்சரிக்கை அமைப்புகளை வலுப்படுத்துதல்

1400 தானியங்கி மழைமானிகள் மற்றும் 100 தானியங்கி வானிலை நிலையங்கள் நிறுவப்படுவதன்மூலம் நிகழ்நேர மழை விவரங்கள் அறிந்து, உரிய நேரத்தில் வானிலை முன்னெச்சரிக்கைகளை வழங்க இயலும். மேலும், மழை விவரத்தைக் கொண்டு, மழைநீர் விவரத்தின் அடிப்படையில் நீர்வரத்தைக் கணித்து அதற்கேற்ப அணைகளில் நீர் இருப்பினை மேலாண்மை செய்ய இயலும். இத்தகைய நெருக்கமான தானியங்கி மழைமானி மற்றும் தானியங்கி வானிலை அமைப்புகள்மூலம், கன மழையின் காரணமாக ஏற்படும் பயிர் சேதங்கள் குறித்து துல்லியமாகக் கணிக்க முடியும் மற்றும் வடிநிலப் பகுதிகள், வேளாண் காலநிலை பகுதிகள் மற்றும் பயனாளர் வரையறுக்கும் பகுதிகளுக்கும் முன்னெச்சரிக்கை மற்றும் முன்னறிவிப்புகள் வழங்க இயலும்.

2023 ஏப்ரல் 12]

2.35.3 ரேடார்கள், வானிலை பலூன்கள் மற்றும் அதிவேக கணினி நிறுவுதல்

18.3.2022 அன்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வானிலையை மிகச் சரியாகக் கணித்து உரிய முன்னெச்சரிக்கையினைப் பேரிடர் நிகழ்விற்கு முன்னரே வழங்கும் வகையில் வானிலை பலூன்களும், 2 ரேடார்களும், அதிவேக கணினியும் அமைக்கப்படும் என அறிவித்தார்கள்.

ரேடார்கள் மற்றும் பலூன்கள் அமைக்கப்பட வேண்டிய இடங்கள் மற்றும் அவற்றின் விலை மதிப்பீடு ஆகியவற்றை இறுதி செய்ய தமிழக அரசுக்கு உதவும் வகையில் இந்திய வானிலை ஆய்வு மையம் (IMD) சிறப்பு வல்லுநர் குழுக்களை அமைத்துள்ளது. ரேடார்கள் அமைப்பதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள இடங்களை இறுதி செய்யும் பணியை மாநில அரசும் இந்திய வானிலை ஆராய்ச்சி மையமும் மேற்கொண்டு வருகிறது.

மிகவும் துல்லியமான வானிலை முன்னறிவிப்பை உருவாக்க அகமதாபாத்தில் உள்ள விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் அதிவேக கணினி வசதி பயன்படுத்தப்படும் மற்றும் இதற்கென அகமதாபாத்தில் உள்ள விண்வெளி ஆராய்ச்சி மையத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்படவுள்ளது.

2.35.4 தமிழ்நாடு மாநில அவசரநிலை மேலாண்மைத் தரவுதளம்

தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமையில் ஏற்படுத்தப்பட்டுள்ள புவிசார் தகவல் மையம், தேசிய அவசரநிலை மேலாண்மை தரவுதளத்தை, மாநில அளவில் பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில் தமிழ்நாடு மாநில அவசரநிலை மேலாண்மைத் தரவுதளத்தை உருவாக்கியுள்ளது. அவசர மேலாண்மைத் தரவுகளைச் சேகரிப்பதற்கென வடிவமைக்கப்பட்டுள்ள செயலிமூலம் மாவட்ட அளவில் பல்வேறு தரவுகள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. பேரிடர் மேலாண்மைக்கான கட்டமைப்புகள்/உபகரணங்கள்/ஆதாரங்களின் விவரங்களை கொண்ட 76 புவிசார் தகவல் அடுக்குகளைத் தமிழ்நாடு மாநில அவசரநிலை மேலாண்மைத் தரவுதளம் கொண்டுள்ளது. தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமை, அண்ணா பல்கலைக்கழகத்தின் தொலையுணர்வு மையம் மற்றும் சென்னை தொழில்நுட்பக்கழகம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து பேரிடர் தரவுதளத்தை விரிவுபடுத்தல்,

வளப்படுத்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றன. பேரிடர் பாதித்த பகுதிகளுக்குத் தேவைப்படும் உபகரணங்கள் மற்றும் பொருட்களை ஏற்பாடு செய்யும்போது, தமிழ்நாடு மாநில அவசரநிலை மேலாண்மைத் தரவுதளத்தின் புவிசார் ஆய்வின்மூலம் தேவையான பொருட்களின் அருகாமை மற்றும் இருப்பினை அரசு அலுவலர்கள் அறிந்து நகர்வு செய்ய முடியும். மேலும், சென்னையில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழகத்தால் (IIT-M) உருவாக்கப்பட்டுள்ள புயல் சீற்ற மாதிரியும் மாநில அவசர மேலாண்மை தரவுதளத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. இது வெள்ளம் குறித்த முன்னெச்சரிக்கையை வழங்குவதோடு, பேரிடர் காலங்களில் தேவையான தளவாடங்கள் மற்றும் தகவல்களைத் திரட்டவும் உதவுகிறது.

2.35.5 ஆளில்லா வானூர்திமூலம் வெள்ளநிலை குறித்த வான்வழி புகைப்படம்

தமிழ்நாட்டின் கடலோரப் பகுதி, ஆற்று வழிகள் மற்றும் இடையகப் பகுதிகளை ஆளில்லா வானூர்திமூலம் வெள்ளநிலை குறித்த வான்வழி புகைப்படம் எடுக்கும் பணி, அண்ணா பல்கலைக்கழகத்தின், சென்னை தொழில்நுட்பக் கழக கல்லூரியில் உள்ள வான்வெளி ஆராய்ச்சி மையம்மூலம் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 19 மாவட்டங்களில் 5650.45 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுப் பகுதிகளில் வான்வழிப் புகைப்படம் எடுக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது. இந்தப் புகைப்படங்களானது இலக்க முறை பரப்பு அமைப்பு (Digital Surface Model), இலக்க முறை நிலப்பரப்பு/இலக்க முறை நிலமட்ட அமைப்பு (Digital Terrain Model/Digital Elevation Model) ஆக மாற்றம் செய்து புவிசார் தகவல் அமைப்பு வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றது. இந்த இலக்க முறை பரப்பு அமைப்பானது (Digital Surface Model), வானிலை முன்னறிவிப்பின் அடிப்படையில், பாதிப்பிற்குள்ளாகக்கூடிய பகுதியின் உண்மை நிலையினையும், அப்பகுதியில் ஏற்படக்கூடிய வெள்ள அபாயத்தின் அளவீடுகளையும் வழங்கும். இந்த அமைப்பின் முடிவுகள் வெள்ள அபாயத்தினை எதிர்கொள்ள திட்டமிடுவதற்கும், முன்கூட்டியே மீட்பு படையினை நிலைநிறுத்தவும், தேவையான உபகரணங்கள் மற்றும் இதர பொருட்களை திரட்டவும் பயன்படுத்தப்படுவதோடு, முன்னுரிமை அடிப்படையில் வெள்ளத் தணிப்பு பணிகள் மேற்கொள்ளவும் வழிவகுக்கும்.

2023 ஏப்ரல் 12]

2.35.6 சென்னை நகருக்கான அறிவுத்திறன்சார் வெள்ள அபாய எச்சரிக்கை அமைப்பு

தேசிய கடலோர ஆராய்ச்சி மையம், சென்னை நகருக்கான அறிவுத்திறன்சார் வெள்ள அபாய எச்சரிக்கை அமைப்பினை உருவாக்கியுள்ளது. இந்த அமைப்பு கடந்தகால வானிலை தரவு, நிகழ்நேர வானிலை முன்னறிவிப்பு மற்றும் நீராற்பகுப்பு மாதிரி ஆகியவற்றின் அடிப்படையில் சென்னை மாநகராட்சிப் பகுதி முழுவதுக்கும் i-FLOWS-*ஐ உருவாக்கியுள்ளது. இந்த அமைப்பு கடந்த கால வானிலை தரவுகளின் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சியின் 200 வார்டுகளுக்கும் வெள்ளத்தின் தீவிரம் மற்றும் தாக்கம் தொடர்பான 80 நிலையான சூழல்களை உருவாக்கி வைத்துள்ளது. மேலும், வெள்ளம் ஏற்படக்கூடிய நிலையில் கடந்த கால வானிலை தரவுகள், நிகழ்நேர வானிலை முன்னறிவிப்பு மற்றும் அலை எழுச்சி ஆகியவற்றை* i-FLOWS *மாதிரியில் உள்ளீடு செய்து, வெள்ளம் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ள மாநகராட்சி வார்டுகள் மற்றும் பகுதிகள், வெள்ளத்தின் ஆழம் குறித்த தகவல்களை உடனுக்குடன் பெற முடியும். இம்மாதிரி, வார்டு வாரியாகவும்/தெரு வாரியாகவும், வெள்ள பாதிப்பின் அளவை இரண்டு மற்றும் முப்பரிமாண வடிவில் வழங்குவதோடு, வெள்ளத்தின் காரணமாக பாதிப்பிற்குள்ளாகக்கூடிய முக்கியம் வாய்ந்த உட்கட்டமைப்புகளின் பட்டியலையும் அளிக்கிறது. கணிக்கப்பட்ட வெள்ள அபாயத்தைப் பகுப்பாய்வு செய்யவும், உண்மை கள நிலையை அறிக்கை செய்யவும் இதில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த மாதிரியின் கணிப்பினைத் துல்லியமாக்கும் வகையில், பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் அண்மைக் காலத்தில் அமைக்கப்பட்டுள்ள மழை நீர் வடிகால்கள் முக்கிய உள்ளீடாக எடுத்துக் கொள்ளப்படும். 2022 ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவ மழையின்போது தேசிய கடலோர ஆராய்ச்சி மையத்தின் (*NCCR*) உதவியுடன் தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமையால்* i-Flows *பயன்படுத்தப்பட்டது. இந்த அமைப்பு* TNSMART-*ல் ஒருங்கிணைக்கப்படவுள்ளது.*

2.35.7 சென்னை நிகழ்நேர வெள்ள முன்னறிவிப்பு மற்றும் இடம்சார் முடிவுகள் மேற்கொள்ள உதவும் அமைப்பு

தமிழ்நாடு நிலையான நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் ஓர் அங்கமாக, சென்னை வடிநிலப் பகுதிகளான அடையாறு, கூவம், கொசஸ்தலையாறு மற்றும் கோவளம் பகுதிகளுக்கு "நிகழ்நேர வெள்ள முன்னறிவிப்பு மற்றும் இடம்சார் முடிவுகள் மேற்கொள்ள

உதவும் அமைப்பு (RTFF & SDSS)” ஒன்றை ஏற்படுத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் இணையவழி அடிப்படையிலான நிகழ்நேர வெள்ள முன்னறிவிப்பும், ஏரி மற்றும் நீர்த்தேக்கங்களில் நீர் மேலாண்மை செய்வதற்காக வழிகாட்டுதல்களும் பெறப்படுகிறது. இத்திட்டத்திற்கு ஆலோசகர்கள்மூலம் திட்ட அறிக்கை தயார் செய்ய தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதிச் சேவைகள் (TNUIFSL) நிறுவனத்தின் திட்ட மேம்பாட்டு மானிய நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. வருவாய் நிர்வாக ஆணையரால் ஒருங்கிணைக்கப்பட்டு செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.71.22 கோடி ஆகும். இத்திட்டத்தின் முதற்கட்ட பணிகள் செப்டம்பர் 2022-ல் முடிக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது இத்திட்டம் செயலாக்க நிலையில் உள்ளது.

இந்தத் திட்டத்தின்கீழ் 86 தானியங்கி மழை மானிகள், 14 தானியங்கி வானிலை நிலையங்கள், 149 தானியங்கி நீர்நிலை அளவீட்டுக் கருவிகள் மற்றும் 80 மதகுகளில் நீர் உணர்விகள் நிறுவப்பட்டு இதன்மூலம் நிகழ்நேர அடிப்படையில் நீர் மற்றும் வானிலை தரவுகளைப் பதிவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களில் 4,974 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள சென்னை வடிநிலப் பகுதிகளை, இந்திய நில அளவை நிறுவனம் ஆளில்லா விமானம்மூலம் அளவீடு மற்றும் புகைப்படம் எடுத்து வருகிறது. இந்த ஆளில்லா விமானம்மூலம் எடுக்கப்படும் புகைப்படங்கள் 20 செ.மீ. உயரம் கொண்ட துல்லியமான இலக்கமுறை உயர மாதிரிகள் தயாரிக்க பயன்படுத்தப்படும். தற்போது சென்னையில் உள்ள மாநில அவசரக்கால செயல்பாட்டு மையத்தில் ஒரு தற்காலிக வெள்ள அபாய கட்டுப்பாட்டு அறை நிறுவப்பட்டுள்ளது. இந்த மையம், தேசிய நடுத்தர கால வானிலை முன்னறிவிப்பு மையத்தின் (NCMRWF) வானிலை மாதிரிகள் மற்றும் பல்வேறு துறைகளின் மழை தரவுகள் அடிப்படையில் வெள்ள முன்னறிவிப்பையும், சென்னை வடிநிலப் பகுதிகளுக்கான ஆலோசனைகளையும் வழங்குகிறது. சென்னை நிகழ்நேர வெள்ள முன்னறிவிப்பு மற்றும் இடம்சார் முடிவுகள் மேற்கொள்ள உதவும் அமைப்பின் முடிவுகள் 2022 ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவமழையின்போது தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமையால் ஒப்பாய்வு செய்யப்பட்டது.

2023 ஏப்ரல் 12]

2.35.8. மாநில மற்றும் மாவட்ட அளவிலான வறட்சி கண்காணிப்பு மையம்

மாநில அளவிலான வறட்சி கண்காணிப்பு மையம், இந்திய வானிலை ஆய்வு மையம், தேசிய தொலையுணர்வு மையம், தேசிய பயிர் நிலவரங்கள் முன்கணிப்பு மையம், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், மாநில நீர்வள ஆதார மையம், வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை ஆகியவற்றின் உள்ளீடுகளைப் பெற்று, மாநில அளவில் வறட்சி நிலையைத் தொடர்ந்து கண்காணித்து வருகிறது. தமிழ்நாட்டில் கடந்த 2022 ஆம் ஆண்டு தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவமழை காலத்தில் முறையே 45% மற்றும் 1% கூடுதலாக மழைப்பொழிவு ஏற்பட்டுள்ளது. மாநில நீர்வளத் துறையின் நிலத்தடி நீர்மட்ட ஆய்வுகளின்படி, டிசம்பர் 2022 அனைத்து மாவட்டங்களிலும் நீர்மட்டம் உயர்ந்துள்ளதோடு, திருநெல்வேலி மாவட்டத்தில் களக்காடு பகுதியில் மட்டும் குறைந்த அளவில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்துள்ளது. மாவட்ட அளவிலான வறட்சி கண்காணிப்பு மையமானது மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் ஓர் அங்கமாகச் செயல்படும் வகையில் அனைத்து மாவட்டங்களிலும் உருவாக்கப்பட்டுள்ளது. இம்மையமானது மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு, அவரது கட்டுப்பாட்டில் செயல்படுகிறது.

2.36 முன்னெச்சரிக்கை தகவலினைப் பரப்புதல்

2.36.1 முன்னெச்சரிக்கை அமைப்பு

1076 கிலோ மீட்டர் நீளம் கொண்ட தமிழகக் கடற்கரையானது புயல், கனமழை, வெள்ளம் மற்றும் சுனாமி போன்ற பல்வேறு பேரிடர்களால் பாதிப்பிற்குள்ளாகக்கூடியது ஆகும். எனவே 14 மாவட்டங்களின் கடலோரப் பகுதிகளில் 424 முன்னெச்சரிக்கை அமைப்பு (EWS) நிறுவப்பட்டுள்ளது. இந்த முன்னெச்சரிக்கை அமைப்பில் சைரன் ஒலி அல்லது நேரலை அல்லது பதிவு செய்யப்பட்ட எச்சரிக்கை தகவல்களை ஒரு குறிப்பிட்ட பகுதி, வட்டம், மாவட்டம் அல்லது அனைத்து இடங்களுக்கும் ஒளிபரப்பும் வசதி உள்ளது. இந்த முன்னெச்சரிக்கை அமைப்பானது GPS/GPRS அல்லது செயற்கைக்கோள் அடிப்படையிலான தகவல் பரிமாற்றம் செய்கிறது. இந்த அமைப்பு 2 கி.மீ. சுற்றளவிற்குத் தகவல் சேர்க்கும் திறன் கொண்டுள்ளது.

மேலும், பேரிடர் அபாயம் குறித்து, பொதுமக்கள், மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையம் மற்றும் மாவட்ட அவசரக்கால செயல்பாட்டு மையத்திற்கு இந்த எச்சரிக்கை அமைப்பில் முன்பதிவு செய்யப்பட்டுள்ள தொலைபேசி எண்கள்மூலம் தெரிவிக்கும் வசதியும் உள்ளது. இந்த அமைப்பு தமிழ்நாட்டின் கடைகோடி பகுதிகளில் வசிக்கும் மக்களின் தகவல் இணைப்பை உறுதி செய்கிறது. இந்த அமைப்பு மாநில அவசரக்கால செயல்பாட்டு மையத்திலிருந்து முழுமையாகக் கண்காணிக்கப்பட்டு இயக்கப்படுகிறது. மாண்டஸ் புயலின்போது, பதிவு செய்யப்பட்ட மற்றும் நேரலை எச்சரிக்கை செய்திகள் மீனவர்களுக்கும் மற்றும் கடலோரக் குடியிருப்புகளுக்கும் மணிக்கு ஒருமுறை முன்னெச்சரிக்கை அமைப்பின்மூலம் ஒலிபரப்பப்பட்டது.

2.36.2 பல்வேறு பேரிடர்களின் தாக்கத்தினை முன்னறிந்து அவசர மீட்பு நடவடிக்கைகளை நடைமுறைபடுத்தும் திட்டம்

வானிலை முன்னறிவிப்புகளைப் பெறுதல், அவசரக்கால முடிவுகள் மேற்கொள்ள உதவுதல் மற்றும் முன்னெச்சரிக்கை தகவல்களைப் பரப்புதல் என அனைத்திற்கும் TNSMART ஒரே தீர்வாகும். TNSMART இணையவழி மற்றும் கைபேசி செயலிமூலம் செயல்படும். TNSMART பாங்காக்கில் இருக்கும் ‘ஒருங்கிணைந்த பல்வகை பேரிடர் முன்னறிவிப்பு அமைப்புடன்’ (RIMES-Regional Integrated Multi Hazard Early Warning System) ஒருங்கிணைந்து உருவாக்கப்பட்டுள்ளது. TNSMART கைபேசி செயலியைத் தற்போது 2,53,467-க்கும் மேற்பட்ட பயனாளர்கள் பயன்படுத்துகின்றனர். இச்செயலி முழுமையாக அலுவலகப் பயன்பாட்டிற்கு மட்டுமே பயன்படுத்த ஏதுவாகவும் உள்ளது. இந்தக் கைபேசி செயலியின்மூலம் பொதுமக்கள் பேரிடர் துயர் குறித்த தகவல்களை அரசு அலுவலர்களுக்கு அனுப்பி உதவி பெற முடியும். இதுமட்டுமின்றி, பேரிடர் காலங்களில் புகைப்படங்கள் மற்றும் காணொலியை அனுப்பவும் இந்த செயலியில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2.36.3 பேரிடர் மேலாண்மைக்கான பொதுவான எச்சரிக்கை நெறிமுறை

பேரிடர் காலங்களில், உயிர் சேதம் மற்றும் பொருள் சேதம் ஏற்படாமல் இருக்க முன்னெச்சரிக்கை தகவல்களை அதிகப்படியான நபர்களுக்கு மிக விரைவாக அனுப்புவது

2023 ஏப்ரல் 12]

அவசியமாகிறது. பேரிடர் தொடர்பான எச்சரிச்கை தகவல்களை அளிக்கும் இந்திய வானிலை ஆய்வு மையம், இந்திய நீர்வள ஆணையம், இந்திய தேசிய கடல்சார் தகவல் மையம், பாதுகாப்பு புவியியல் தகவல் ஆராய்ச்சி நிறுவனம், இந்திய வன ஆய்வு நிறுவனம்; பேரிடர் முன்னெச்சரிக்கைமீது முடிவெடுக்கும் அல்லது உறுதிபடுத்தும் மாநில பேரிடர் மேலாண்மை ஆணையங்கள் மற்றும் எச்சரிக்கை தகவல்களைப் பொதுமக்களுக்கு கொண்டு சேர்க்கும் அமைப்புகளான தொலைபேசி சேவை, DTH நிறுவனங்கள், பொது அறிவிக்கை அமைப்புகள், அச்சு, காட்சி மற்றும் சமூக ஊடகங்கள் ஆகியவற்றை இந்த பொதுவான எச்சரிக்கை நெறிமுறை ஒரு பொதுவான இணையதளத்தில் ஒருங்கிணைக்கிறது.

பொதுவான எச்சரிக்கை நெறிமுறை அமைப்பானது இணையவழி புவிசார் அமைப்பை (Web GIS) அடிப்படையாகக் கொண்டு செயல்படுவதோடு, ஒரு குறிப்பட்ட புவிசார் பகுதியில் உள்ள அனைத்து கைபேசி பயனர்களுக்கும் எச்சரிக்கைச் செய்திகளை அனுப்ப உதவுகிறது. எச்சரிக்கை தகவல்களை வழங்கும் முகமைகளால் எச்சரிக்கை தகவல்கள், பொதுவான எச்சரிக்கை நெறிமுறை அமைப்பு இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டு, மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தால், களநிலை மற்றும் அவசியத்தின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டு, முன்னெச்சரிக்கை தகவல்கள் பரப்பப்படுகிறது. இந்த பொதுவான எச்சரிக்கை நெறிமுறை அமைப்பினைப் பயன்படுத்தி 2022 ஆம் ஆண்டு தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் 1.71 கோடி நபர்களுக்குக் குறுஞ்செய்தி வாயிலாக முன்னெச்சரிக்கை செய்திகள் அனுப்பப்பட்டுள்ளன.

2.36.4. VHF, செயற்கைக்கோள் தொலைபேசிகள் NAVTEX மற்றும் NavIC

தடையற்ற தகவல் பரிமாற்றத்தை உறுதி செய்வதற்காக, VHF கருவிகள் (செல்லிடம் மற்றும் நிலையானது) மாவட்ட ஆட்சியர்கள், வருவாய் கோட்ட அலுவலர்கள், வட்டாட்சியர்கள் மற்றும் மாவட்டங்களில் உள்ள அனைத்து வருவாய்த் துறை அலுவலர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

பேரிடர்களின்போது தடையற்ற தகவல் தொடர்பை உறுதி செய்வதற்காக அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மாவட்ட

அவசரகால செயல்பாட்டு மையங்களுக்கு செயற்கைக்கோள் தொலைபேசிகள், தேசிய புயல் அபாயக் குறைப்புத் திட்டம் (NCRMP) மற்றும் கடலோரப் பேரிடர் அபாயக் குறைப்புத் திட்டத்தின்கீழ் (CDRRP) வழங்கப்பட்டுள்ளன. மேலும், தலைமைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள், வருவாய் நிர்வாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர், காவல் துறை உயர் அலுவலர்கள், மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கும் செயற்கைக்கோள் தொலைபேசிகள் வழங்கப்பட்டுள்ளன.

வானிலை எச்சரிக்கைகள், முன்னறிவிப்புகள் மற்றும் அவசர கடல் பாதுகாப்புத் தகவல்களைத் தெரிவிக்க, கடலோர மாவட்ட நிர்வாகத்திற்கும், ஆழ்கடலில் குழுக்களாக மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கும், செயற்கைக்கோள்மூலம் இயங்கும் NavIC, NAVTEX தொலைதொடர்புக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், ஆழ் கடலில் மீன் பிடிக்கும் மீனவர்களின் உயர்மட்ட பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, GPS ரிசீவர்கள் பொருத்திய 18,555 கையடக்க VHF வானொலிக் கருவிகள் மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

2.36.5. சமூக ஊடகம்

தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவமழையின்போது இணைய வசதி பெற்றுள்ள கணிசமான மக்களுக்கு முன்னெச்சரிக்கை தகவல்களை உடனடியாகக் கொண்டுசெல்லும் நோக்கத்தில் ட்விட்டர், முகநூல், இன்ஸ்டாகிராம் மற்றும் வாட்ஸ்அப் போன்ற சமூக ஊடகங்கள் பெருமளவில் பயன்படுத்தப்பட்டன. இந்திய வானிலை மையம் மற்றும் இந்திய தேசிய கடல்சார் தகவல் மையம் ஆகியவற்றிலிருந்து மாநில அவசரக்கால செயல்பாட்டு மையத்தில் பெறப்படும் வானிலை முன்னறிவிப்புகள், எச்சரிக்கை செய்திகள் சமூக ஊடகங்கள்மூலம் காலதாமதமின்றி தெரிவிக்கப்பட்டது. புயல், மின்னல், வெள்ளம், ஆறுகளில் உபரி நீர் வெளியேற்றம் போன்றவை தொடர்பான எச்சரிக்கைகளும் சமூக ஊடகங்கள் மூலமாகவும் தெரியப்படுத்தப்பட்டன. பேரிடர் காலங்களில் 24 மணி நேரமும் சமூக ஊடகங்களைக் கையாளுவதற்குத் தனியாக ஒரு மூத்த அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார். பேரிடர் மேலாண்மைத் தொடர்பான அனைத்து அரசு செய்திக்குறிப்புகள் சமூக ஊடகங்களில் வெளியிடப்படுவதால், பேரிடர் மேலாண்மையில் மாநில அரசு மேற்கொள்ளும் முயற்சிகள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொள்ள ஏதுவாக உள்ளது.

2023 ஏப்ரல் 12]

2.37 பேரிடர் மீட்பு

2.37.1. தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை

இயற்கை மற்றும் மனிதர்களால் ஏற்படும் பேரிடர்களின்போது தேடல், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளைக் திறம்பட மேற்கொள்வதற்காக "தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை (TNDRF)" அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையினருக்குத் தேசிய பேரிடர் மீட்புப் படையினரால் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையை (TNDRF) வலுப்படுத்தும் நோக்கில் அதிநவீன உபகரணங்களை வாங்குவதற்கு அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையின் செயல் திறன்களை மேம்படுத்தும் வகையில், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களது அறிவிப்பின்படி, 2022-2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படைக்கு வாகனங்கள் கொள்முதல் செய்ய ரூ.2.31 கோடி மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டு வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

2.37.2 தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்

அனைத்து மாவட்டங்களிலும் உள்ள தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் படை முதல் நிலை மீட்புப் படையாகச் செயல்பட்டு வருகிறது. பேரிடர்களின்போது, நவீன தேடல் மற்றும் மீட்பு உபகரணங்களைக் கொண்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையானது அர்ப்பணிப்போடு, பாதிப்பிற்குள்ளாகும் மக்களை முன்கூட்டியே பாதுகாப்பான இடங்களில் தங்க வைப்பது, தேடுதல், மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்வது உள்ளிட்ட பணிகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் திறனை வலுப்படுத்தும் வகையில், தண்ணீர் தெளிப்பான்கள், அவசரக்கால மீட்பு வாகனங்கள், சுவாசக் கருவிகள் ஆகிய உபகரணங்கள் வாங்குவதற்கும், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிப்பதற்காகவும் 2022-2023 ஆம் ஆண்டு ரூ.15.21 கோடி மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதோடு பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.

2.37.3 ஆப்த மித்ரா – 5500 சமூக தன்னார்வலர்களின் பயிற்சி

மேம்படுத்தப்பட்ட ஆப்த மித்ரா திட்டத்தின்கீழ், பேரிடர் பாதிப்புக்குள்ளாகும் 16 மாவட்டங்களான கடலூர், கன்னியாகுமரி, காஞ்சிபுரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, இராமநாதபுரம், நீலகிரி, தஞ்சாவூர், தேனி, திருவள்ளூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, திருவண்ணாமலை, சிவகங்கை, விருதுநகர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் தன்னார்வலர்களுக்கு 12 நாட்கள் பயிற்சி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பல்வேறு பேரிடர்களின்போது மேற்கொள்ள வேண்டிய தகவல் பரிமாற்றம், தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கைகள், முதலுதவி போன்ற திறன்கள் குறித்து இதுவரை 5,500 சமூகத் தன்னார்வலர்களுக்கு இரண்டு கட்டங்களாகப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இந்த சமூகத் தன்னார்வலர்கள் பேரிடர் காலத்தில் கள நிலை குறித்து முதல் தகவல் தெரிவிப்பவர்களாகவும், பேரிடர் ஏற்படும் இடத்தில் மீட்புப் படையினருக்கு உறுதுணையாகவும் செயல்படுவார்கள். மேலும், இந்தத் தன்னார்வலர்களைப் பேரிடர் மேலாண்மைப் பயிற்சியில் பயிற்சியாளர்களாகவும் பயன்படுத்த இயலும்.

2.37.4. 65,000 முதல் நிலை மீட்பாளர்களுக்கான பயிற்சி

பேரிடர் மேலாண்மையில் சமூகத்தின் பங்களிப்பை அதிகரிக்கவும், பயனுள்ள சமூகப் பேரிடர் மீட்புப் படையை உருவாக்கவும், 14 கடலோர மாவட்டங்கள் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் குடியிருப்பு அளவிலான 65,000 தன்னார்வலர்கள் கண்டறியப்பட்டு, மூன்று நிலைகளில் (மாவட்டம், வட்டம் மற்றும் குறுவட்ட அளவிலான) 3 நாள் முதல் நிலை மீட்பாளர் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இதனால் பேரிடர்களின்போது எந்த ஒரு சூழ்நிலையையும் சமூகத்தினால் திறமையாக எதிர்கொள்ள முடியும்.

2.37.5. பேரிடர் மேலாண்மையின் பல்வேறு பங்குதாரர்களுக்குத் திறன் மேம்பாடு பயிற்சி

பேரிடர் காலங்களில் பெறும் பங்கு வகிக்கும் பேரிடர் மேலாண்மையின் பல்வேறு பங்குதாரர்களுக்கு மாநில மற்றும் மாவட்ட அளவில் திறன் மேம்பாடு பயிற்சி வழங்க அண்ணா நிருவாக பணியாளர் கல்லூரிக்கு ரூ.60 இலட்சம் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 12]

2.38 வானிலை நிகழ்வுகளின் மேலாண்மை

2.38.1 மயிலாடுதுறை மாவட்டத்தில் கனமழை-நவம்பர் 2022

இந்திய வானிலை ஆய்வு மையம், 9.11.2022 அன்று நாளிட்ட அறிவிக்கையில், தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதை ஒட்டிய மத்திய இந்தியப் பெருங்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகி உள்ளதாகவும், இதன் காரணமாக பல மாவட்டங்களில் கனமழை முதல் மிக கனமழைப் பெய்யக்கூடும் எனத் தெரிவித்திருந்தது.

வங்கக்கடலில் உருவான குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி காரணமாக, மாநிலத்தின் பல மாவட்டங்களில் கனமழை முதல் மிக கனமழை பெய்தது. குறிப்பாக மயிலாடுதுறை மாவட்டத்தில் 10.11.2022 முதல் 11.11.2022 வரை 1198% அளவில், அதிகனமழை பதிவாகியுள்ளது.

மயிலாடுதுறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தின் காரணமாக சீர்காழி மற்றும் தரங்கம்பாடி வட்டங்களின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின. சீர்காழி, கொள்ளிடம், தரங்கம்பாடி பகுதியில் 2700 கனஅடி நீரைக் கடத்தும் அளவிலான கழுமலையாறு மற்றும் வெள்ளப்பள்ளம் உப்பனாறு வடிகால்கள் உள்ளன. ஆனால், கனமழை மற்றும் மிகக் கனமழையின் காரணமாக இவ்வடிகால்களில் 25000 கனஅடி அளவு வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதால் சீர்காழி மற்றும் தரங்கம்பாடி வட்டங்களில் பெரு வெள்ளம் ஏற்பட்டு, குடியிருப்புகள் வெள்ளத்தில் மூழ்கின. இவ்வட்டங்களில் உள்ள மொத்தம் 677 குடியிருப்புகளில், 489 குடியிருப்புகள் முழுமையாகவும், 188 குடியிருப்புகள் பகுதியாகவும் வெள்ளத்தில் மூழ்கியதால் பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

குடிசைகள், ஓட்டு வீடுகள், மின் உட்கட்டமைப்புகள், வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள் சேதமடைந்ததோடு, மனித உயிர் இழப்புகள், காயங்கள் மற்றும் கால்நடை இறப்புகளும் ஏற்பட்டன. 20,196 குடும்பங்களைச் சேர்ந்த 57,000-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டு அவர்களுக்கு தேவையான உணவு, பாதுகாப்பான குடிநீர், மருத்துவ வசதிகள் மற்றும் பிற அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. மேலும், 9.11.2022 முதல் கடல் சீற்றம் காரணமாக மீனவர்கள் கடலுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டதுடன்,

மீன்பிடித் தளத்தில் இருந்த இரண்டு படகுகளும் சேதமடைந்தன. இப்பெருமழையால் மாவட்டத்தில் இயல்பு வாழ்க்கை முடங்கியதோடு சீர்காழி மற்றும் தரங்கம்பாடி வட்டங்களில் மக்களின் வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மயிலாடுதுறை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரடியாக ஆய்வு மேற்கொண்டு மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளைத் துரிதப்படுத்தினார். மேலும், நிவாரணப் பணிகளை விரைவுபடுத்துவதற்காக மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் மூத்த அதிகாரிகள் மயிலாடுதுறை மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பின்படி, மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி மற்றும் தரங்கம்பாடி வட்டங்களில் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்ட 1,61,647 குடும்பங்களுக்கு ரூ.1000/-வீதம் நிவாரணம் வழங்க அரசால் ரூ.16.1647 கோடி மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிவாரணத் தொகை வழங்கப்பட்டது. மேலும், கனமழை மற்றும் மிக அதிக கனமழையினால் மயிலாடுதுறை மாவட்டம் மற்றும் சில மாவட்டங்களில் 38,155 ஹெக்டேர் பரப்பளவில் பயிர்கள் சேதமடைந்ததால் பாதிக்கப்பட்ட 49,681 விவசாயிகளுக்கு இடுபொருள் மானியமாக ரூ.51.42 கோடி மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிவாரணத் தொகை வழங்கப்பட்டது.

2.39 மாண்டஸ் புயல், டிசம்பர் 2022

2.39.1 முன் உணர்த்தல்

உயிரிழப்பைக் குறைப்பதற்காக 9 மாவட்டங்களில் உள்ள 205 தங்குமிடங்களில் 9,280 பேர் (3,247 ஆண்கள், 3,928 பெண்கள், 3,222 குடும்பங்களைச் சேர்ந்த 2105 குழந்தைகள்) முன்கூட்டியே தங்க வைக்கப்பட்டனர்.

2.39.2 மாண்டஸ் புயலின் தாக்கம்

செங்கல்பட்டு, காஞ்சிபுரம், சென்னை, விழுப்புரம், திருவள்ளூர் மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களில் 501 கிராமங்களில் வசிக்கும் 70,95,114 மக்கள் புயலின் காரணமாகப் பாதிப்புக்குள்ளாயினர். மேலும், 6736.21 ஹெக்டேர் வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களுக்குச் சேதம் ஏற்பட்டது. பலத்த

2023 ஏப்ரல் 12]

காற்றின் தாக்கத்தால் 3,066 மரங்கள் சாய்ந்தன, 1,134 மின்கம்பங்கள், 28,440 கி.மீ. நீளமுள்ள மின்கடத்திகள், 73 மின்மாற்றிகள், 10 துணை மின் நிலையங்கள் சேதமடைந்தன. மீனவர்களின் 37 ஃபைபர் படகுகள் (6-முழுமையாகவும், 31 பகுதியாகவும்), 212 இயந்திரப் படகுகள் (76 முழுமையாகவும், 136 பகுதியாகவும்) மற்றும் 932 மீன்பிடி வலைகள் சேதமடைந்தன. இப்புயலின் காரணமாக 5 மனித உயிரிழப்புகள் ஏற்பட்டன.

மாண்டஸ் புயலின் காரணமாக 23 மாவட்டங்களில் பாதிப்பிற்குள்ளான 6736 ஹெக்டேர் பரப்பளவிலான வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களுக்கு, 13,141 விவசாயிகள் பயன்பெறும் வகையில் ரூ.9 கோடி நிவாரணம் வழங்க மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாண்டஸ் புயலின் காரணமாக சேதமடைந்த மின் உட்கட்டமைப்புகளைச் சீரமைப்பதற்காக மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.1.28 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், மாண்டஸ் புயலின்போது சேதமடைந்த மீன்பிடிப் படகுகள் மற்றும் உபகரணங்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் ரூ.4.67 கோடி மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழக அரசால் எடுக்கப்பட்ட அசாதாரண முயற்சி மற்றும் உடனடி நடவடிக்கையின் அடிப்படையில், மாண்டஸ் புயலின்போது மனித உயிர்கள் மற்றும் பிற சேதங்கள் வெகுவாகக் குறைக்கப்பட்டன. நிவாரணப் பணிகள் விரைவுபடுத்தப்பட்டு, போக்குவரத்து, மின் விநியோகம் ஆகிய சேவைகள் மிக விரைவாகச் சீரமைக்கப்பட்டு, 48 மணி நேரத்திற்குள் இயல்பு நிலை திரும்பியது.

2.39.3 பருவம் தவறிய மழை – ஜனவரி – பிப்ரவரி - 2023

29.1.2023 அன்று வங்கக்கடலில் உருவான காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் காரணமாக டெல்டா மாவட்டங்களான நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை, அரியலூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, மதுரை, சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் 30.1.2023 முதல் 3.2.2023 வரை கனமழைப் பொழிவு ஏற்பட்டது. இதன் காரணமாக 93,873,73 ஹெக்டேர் பரப்பளவில் வேளாண் பயிர்கள் சேதமடைந்தன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி பாதிப்பிற்குள்ளான 1,33,907 விவசாயிகளுக்கு ரூ.112.72 கோடி நிவாரணம் வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2023 ஏப்ரல் 12

2.40 பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் புறநகர் பகுதிகளில் வெள்ளத் தணிப்பு நடவடிக்கைகள்

பெருநகர சென்னை மாநகரம் மற்றும் அதன் புறநகர் பகுதிகளில், வெள்ளப்பெருக்கு ஏற்படுவதைத் தவிர்க்கும்பொருட்டு அமைக்கப்பட்ட வெள்ள ஆலோசனைக் குழுவின் பரிந்துரையின் பேரில், வெள்ள தணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள ஏதுவாக, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குனரகத்துக்கு ரூ.373.50 கோடி மாநில பேரிடர் தணிப்பு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.41 பேரிடர் மேலாண்மை நிதியளிப்பு

பேரிடர் மேலாண்மை நிதியளிப்பானது, நிவாரணத்தை மையமாகக் கொண்ட அணுகுமுறையிலிருந்து தற்பொழுது தடுப்பு, தயார்நிலை மற்றும் தணிப்பு நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளித்து, ஒரு முன்னுதாரண மாற்றத்தை அடைந்துள்ளது. மேலும், இதன்மூலம் அனைத்துப் பங்குதாரர்களின் பங்கேற்புடன் பேரிடர் தடுப்பு மற்றும் தணிப்பு நடவடிக்கைகள், அரசின் அனைத்து வளர்ச்சித் திட்டங்களில் உள்ளடக்கமாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

15-வது நிதிக் குழுவின் பரிந்துரைகளின்படி, ஒன்றிய அரசு மாநில பேரிடர் நிவாரண நிதியினை, மாநில பேரிடர் அபாய மேலாண்மை நிதி என மறுசீரமைத்துள்ளது. மாநில பேரிடர் அபாய மேலாண்மை நிதியினை மாநில பேரிடர் நிவாரண நிதி, மாநில பேரிடர் தணிப்பு நிதி என இரண்டு முக்கியக் கூறுகளாகப் பிரித்து பின்வருமாறு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது:—

நிதி ஒதுக்கீட்டின் வகைகள்	**நிதி ஒதுக்கீட்டின் சதவிகிதம்**
I மாநில பேரிடர் நிவாரண நிதி	
i) மீட்பு மற்றும் நிவாரணம்	40%
ii) மறுசீரமைப்பு	30%
iii) ஆயத்த நிலை மற்றும் திறன் மேம்பாடு	10%
II மாநில பேரிடர் தணிப்பு நிதி	20%
மொத்தம்	100%

2023 ஏப்ரல் 12]

தமிழ்நாடு அரசு, பேரிடர் தணிப்புத் திட்டங்களை மேற்கொள்வதற்காக, மாநில பேரிடர் தணிப்பு நிதியை உருவாக்கியுள்ளது, இதுதொடர்பாக தேவையான வழிகாட்டுதல்கள், அரசால் வெளியிடப்பட்டுள்ளன. சமூக மற்றும் உள்ளூர் அமைப்புகளின் பங்கேற்கும் பேரிடர்களின் அபாயக் குறைப்பு மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாடுத் திட்டங்களுக்கு மாநில பேரிடர் தணிப்பு நிதியிலிருந்து நிதி அளிக்கப்படுகிறது. இருப்பினும் கடற்கரைத் தடுப்புச் சுவர்கள், வெள்ள தடுப்புக் கரைகள், வறட்சி மீள் நடவடிக்கைகள் போன்ற பெரிய அளவிலான தணிப்பு நடவடிக்கைகள் வழக்கமான வளர்ச்சி திட்டங்கள் மூலம் செயல்படுத்தப்பட வேண்டும்.

மாநில பேரிடர் நிவாரண நிதி மற்றும் மாநில பேரிடர் தணிப்பு நிதியின் நிதியளிப்பு இனங்கள் ஒன்றுக்கொன்று மாறக்கூடியவை அல்ல என்றாலும், அந்தந்த நிதிகளின் துணைச் சாளரங்களுக்குள் நெகிழ்வுத்தன்மை மற்றும் மறு ஒதுக்கீடு செய்யப்படலாம். அத்தகைய மறு ஒதுக்கீடு அந்த துணை சாளரத்தின் ஒதுக்கப்பட்ட மொத்த தொகையில் 10 சதவீதத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

தமிழ்நாட்டிற்கு மாநில பேரிடர் அபாய மேலாண்மை நிதியின்கீழ் ஆண்டு வாரியான நிதி ஒதுக்கீடு விவரம் பின்வருமாறு:-

ஆண்டு	**நிதி ஒதுக்கீடு (கோடியில்)**
2021 - 22	*1360.00*
2022 - 23	*1428.00*
2023 - 24	*1500.00*
2024 - 25	*1575.00*
2025 - 26	*1653.00*
மொத்தம்	*7516.00*

2.41.1. தேசிய பேரிடர் நிவாரண நிதி மற்றும் தேசிய பேரிடர் தணிப்பு நிதியின் பிரத்தியேக ஒதுக்கீடு

2.41.1.1 தேசிய பேரிடர் தணிப்பு நிதியிலிருந்து பெருநகர சென்னை மாநகராட்சியில் நகர்ப்புற வெள்ள அபாயக் குறைப்பு

15-வது நிதிக் குழுப் பரிந்துரையின்படி, நாட்டில் உள்ள அதிக மக்கள் தொகைக் கொண்ட 7 நகரங்களில் நகர்ப்புற

[*2023 ஏப்ரல் 12*

வெள்ள அபாயத்தினைக் குறைக்க ரூ.2,500 கோடி தேசிய பேரிடர் தணிப்பு நிதியில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஆண்டொன்றுக்கு ரூ.100 கோடி வீதம் 2021-26 வரையிலான 5 ஆண்டுகளுக்கு ரூ.500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியினைப் பெறுவதற்கு 304.51 கோடி ரூபாய்க்கான முன்மொழிவுகள் உள் துறை அமைச்சகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

2.41.1.2 தேசிய பேரிடர் தணிப்பு நிதியிலிருந்து மிகவும் வறட்சியால் பாதிக்கப்படும் பன்னிரண்டு மாநிலங்களுக்கு ஊக்க உதவி

தமிழ்நாட்டில் வறட்சித் தணிப்புப் பணிகள் மேற்கொள்ளும்பொருட்டு, ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆண்டு ஒன்றுக்கு ரூ.20 கோடி வீதம் 5 ஆண்டுகளுக்கு இந்நிதியினை பெறுவதற்கு வறட்சி மேலாண்மை திட்ட முன்மொழிவுகள் தயாரித்து உள் துறை அமைச்சகத்துக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2.41.1.3 - 2026-க்கு பின்னர் 15-வது நிதிக் குழுவின் பரிந்துரைகள்

2021-26 ஆம் ஆண்டு வரை மட்டுமே செல்லத்தக்க நிலையில், தமிழ்நாடு அரசு பேரிடர் மேலாண்மைக்கான, குறிப்பாக பேரிடர் தணிப்புக்கான சிறப்பான நிதி ஆதரவை 2026 ஆம் ஆண்டுக்கு பின்னரும் தொடர்ந்து ஒன்றிய அரசு வழங்க வேண்டும் என்று வலியுறுத்தும்.

2.42 தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை கொள்கை

பேரிடர் மேலாண்மையின் அனைத்து அம்சங்களை உள்ளடக்கி தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை கொள்கையை தமிழக அரசு மேம்படுத்தி வெளியிட்டுள்ளது. இந்த கொள்கையில் நிறுவன மற்றும் நிதி ஏற்பாடுகள், பேரிடர் தவிர்ப்பு, தணிப்பு, ஆயத்தம், மீட்பு, நிவாரணம், சீரமைப்பு, மறுவாழ்வு, திறன் மேம்பாடு உள்ளிட்ட அம்சங்கள் குறித்து அரசின் கொள்கை விளக்கப்பட்டுள்ளது.

ஒரு துடிப்பான பேரிடர் மேலாண்மை இயக்கத்தின்மூலம் அனைத்து வகை பேரிடர்களின் எதிர்மறையான விளைவுகளைக்

2023 ஏப்ரல் 12]

குறைத்து, உயிரிழப்பு, பொது சொத்துகள் மற்றும் அதிமுக்கியத்துவம் வாய்ந்த உட்கட்டமைப்புகளின் சேதம் ஆகிவற்றைத் தவிர்த்தல், அரசு உருவாக்கிய பொருளாதார மற்றும் வளர்ச்சி ஆதாயங்களை இழக்காது இருத்தல் என்பதே தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மைக் கொள்கையின் நோக்கமாகும்.

2.43 பேரிடர் மேலாண்மைத் திட்டமிடல் பேரிடர் மேலாண்மைச் சட்டம், 2005 பிரிவு

23(1)-ன்படி தமிழ்நாடு அரசு, 2023 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மைத் திட்டத்தை வெளியிட்டுள்ளது. பேரிடர் தவிர்ப்பு, தணிப்பு, ஆயத்தம், மீட்பு, நிவாரணம், சீரமைப்பு, மறுவாழ்வு, திறன் மேம்பாடு தொடர்பான செயல்பாடுகள் இத்திட்டத்தில் விவரிக்கப்பட்டுள்ளன. மேலும், பேரிடர் அபாயக் குறைப்பு மற்றும் மீட்புப் பணிகளுக்கான பரிந்துரைகளும் இத்திட்டத்தில் உள்ளது. மேலும், அனைத்து மாவட்டங்களும் 2022 ஆம் ஆண்டுக்கான மாவட்ட பேரிடர் மேலாண்மைத் திட்டத்தினை வகுத்துள்ளன.

2.44 பேரிடர் மேலாண்மைக்கான நிலையான வழிகாட்டு நடைமுறை

இயற்கை/இதர பேரிடர்களின்போது மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையம், அரசுத் துறைகள், உள்ளாட்சி அமைப்புகள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமையால் வெளியிடப்பட்ட பேரிடர் மேலாண்மைக்கான நிலையான வழிகாட்டு நடைமுறையில் விவரிக்கப்பட்டுள்ளது. பேரிடர் மேலாண்மைக்கான நிலையான வழிகாட்டு நடைமுறையில் ஒவ்வொரு பேரிடருக்கும் தவிர்ப்பு, தணிப்பு, ஆயத்தம், மீட்பு, நிவாரணம், சீரமைப்பு, மறுவாழ்வு, சிறப்பான மறுகட்டமைப்பு, திறன் மேம்பாடு தொடர்பான வழிகாட்டுதல்கள் உள்ளன. மேலும், வெப்ப அலை மற்றும் இடி, மின்னலுக்கான செயல் திட்டங்கள் தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமையால் தயாரிக்கப்பட்டு மாவட்ட ஆட்சியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

[*2023 ஏப்ரல் 12*

2.45 அறிவுத்திறன் பகிர்வு

2.45.1 மாநில பேரிடர் மேலாண்மை ஆணையங்களின் மண்டல அளவிலான முதல் மாநாடு

தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம், தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்துடன் ஒருங்கிணைந்து 8.3.2022 மற்றும் 9.3.2022 ஆகிய நாட்களில் 11 கடலோர மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களான தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா, ஆந்திரா, ஒடிசா, மேற்கு வங்காளம், கோவா, அந்தமான் & நிக்கோபார் தீவு, தாத்ரா மற்றும் நகர் ஹவேலி மற்றும் டாமன் & டையூ, லட்சத்தீவு மற்றும் புதுச்சேரி உள்ளிட்ட மாநில பேரிடர் மேலாண்மை ஆணையங்களின் முதல் மண்டல மாநாடு சென்னையில் நடைபெற்றது. பேரிடர் மேலாண்மையில் பல்வேறு மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் எதிர்கொண்ட அனுபவம் மற்றும் சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்து கொள்வதற்கு இந்த மாநாடு வழி வகுத்தது.

2.45.2 யுனிசெப் நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து பேரிடர் அபாயத்தால்கு ழந்தைகளுக்கு ஏற்படும் தாக்கம் தொடர்பான மதிப்பீடு குறித்த பயிலரங்கம்

தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையமும், யுனிசெப் நிறுவனமும், தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமையும் ஒருங்கிணைந்து பேரிடர் அபாயத்தால் குழந்தைகளுக்கு ஏற்படும் தாக்கம் தொடர்பான பயிலரங்கத்தை 20.12.2021 மற்றும் 21.12.2021 அன்று நடத்தியது. பேரிடர்களின்போது குழந்தைகளுக்கு ஏற்படும் அபாயத்தைக் குறைப்பதே இப்பயிலரங்கத்தின் முக்கிய நோக்கமாகும். ஆபத்து தகவல் நிரலாக்க அணுகுமுறையின் முக்கியத்துவத்தை உருவாக்குவதோடு குழந்தைகளின் பேரிடர் அபாயத்தைத் தடுப்பதற்கான இலக்கை அடைய இந்த பயிலரங்கம் உதவி புரிந்தது. முக்கிய இடர் தகவல் நிரலாக்கத்திற்கான ஐந்து முன்னுரிமைகளில் ஒவ்வொன்றிற்கும் சாத்தியமான செயல்களை அடையாளம் காண இப்பயிலரங்த்தின் பங்கேற்பாளர்கள் அறிவுறுத்தப்பட்டனர். ஒட்டுமொத்தமாக மாநில அரசு தற்போது செயல்படுத்திவரும் வளர்ச்சித் திட்டங்களுக்கு இந்த பயிலரங்கம் பெரும் பங்களிப்பை அளித்துள்ளது. இதன் தொடர்ச்சியாக ஆபத்து தகவல் நிரலாக்கம் முக்கியத் துறைகளின் பேரிடர் மேலாண்மைத் திட்டங்களில் ஒருங்கிணைக்கப்படவுள்ளது.

2023 ஏப்ரல் 12]

2.45.3 பேரிடர் மேலாண்மையில் உளவியல் மற்றும் சமூக ரீதியான ஆதரவு அளித்தல் (TNSDMA - UNICEF மற்றும் NIMHANS ஆகியவற்றின் கூட்டு முயற்சி)

பேரிடர்களின்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உளவியல் சார்ந்த சேவைகளை மேற்கொள்வது முக்கியமான ஒன்றாகும். பேரிடர் மீட்புபணியில் ஈடுபடுபவர்களுக்கு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உளவியல்ரீதியான ஆதரவு அளிக்கும் திறன் முக்கிய சவாலாக உள்ளது. இந்த இடைவெளியை நிரப்புவதற்காகத் தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமை உளவியல் ரீதியிலான முதலுதவி மற்றும் பேரிடரை எதிர்கொள்ளும் மனவளம் பெறுதல் குறித்த பயிற்சியினை 100 முதல் 120 முதன்மைப் பயிற்சியாளர்களுக்கு வழங்கவுள்ளது. பயிற்சியளிக்கப்பட்ட முதன்மைப் பயிற்சியாளர்கள், பேரிடர் களத்தில் உள்ள தன்னார்வலர்கள் மற்றும் முதல் நிலை மீட்பாளர்களுக்குச் சமூக உளவியல் ஆதரவு வழங்கக்கூடிய ஆலோசகர்களுக்கான பயிற்சியினை அளிப்பார்கள். தேசிய மன நலம் மற்றும் நரம்பியல் அறிவியல் நிறுவனம் உதவியுடன் இத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இத்திட்டத்தின்மூலம் பாதிக்கப்பட்ட கடைகோடி மனிதனுக்கு கிடைக்க வேண்டிய சமூக உளவியல் உதவி மற்றும் தயார் நிலை இடைவெளி குறைக்கப்படும்.

2.45.4 பேரிடரை எதிர்கொள்ளும் உள்கட்டமைப்புக்கான கூட்டமைப்பு

*பேரிடரை எதிர்கொள்ளும் உள் கட்டமைப்புக்கான கூட்டமைப்பு (*CDRI*) என்பது 43 நாடுகளின் அரசாங்கங்கள்,* UN *முகவர்கள், பலதரப்பு வங்கிகள், தனியார் துறை மற்றும் அறிவுசார் நிறுவனங்களின் பங்களிப்புடைய உலகளாவிய கூட்டாண்மை ஆகும். இது இந்திய அரசின் முன்முயற்சியால் உருவாக்கப்பட்டது. உறுப்பு நாடுகளில் பேரிடரினை எதிர்கொள்ளும் உட்கட்டமைப்பினை உருவாக்குவதன்மூலம் நிலையான நீடித்த வளர்ச்சியினை பெறுவதே இதன் நோக்கமாகும். இக்கூட்டமைப்பு உறுப்பு நாடுகளுக்கு தொழில்நுட்ப ஆதரவு, திறன் மேம்பாடு, ஆராய்ச்சி, அறிவு மேலாண்மை, ஆலோசனை, கூட்டாண்மை மூலம் பேரிடரை எதிர்கொள்ளும் உட்கட்டமைப்புகளில் முதலீடு செய்வதை ஊக்குவிக்கவும், எளிதாக்கவும் செய்கிறது.*

[2023 ஏப்ரல் 12

2.45.5 2023-24-க்கான கூட்டு முயற்சிகள்

தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமை யுனிசெப் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்மூலம் 2023 மற்றும் 2024 ஆண்டுகளில் பேரிடர் அபாயக் குறைப்பை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது. இந்த இரண்டு ஆண்டுகளில் யுனிசெப் நிறுவனம், தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்திற்கு, மாநில பேரிடர் அபாயக் குறைப்பு நோக்கங்களை அடைய உதவி செய்யும். இம்முயற்சியில்

i. 15-வது நிதிக் குழுவின் பரிந்துரைகளுக்கு முன்னுரிமை அளிப்பதன்மூலம் மாநிலத்தில் பேரிடர் அபாயக் குறைப்பு செய்தல்.

ii. பல்நோக்கு பாதுகாப்பு மையங்களின் மேலாண்மைக் குழுக்களின் திறன்களை மேம்படுத்துதல்.

iii. அறிவுத்திறனை மேம்படுத்துதல்.

iv. மாவட்ட பேரிடர் மேலாண்மைத் திட்டங்கள், துறைவாரியான பேரிடர் மேலாண்மைத் திட்டங்கள் ஆகியவற்றைத் தயாரிக்க உதவி புரிவது மற்றும் மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையங்களுக்கு தொழில்நுட்ப உதவி புரிதல். மேலும், தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமைக்கு, குழந்தைகளுக்கான பேரிடர் அபாயக் குறைப்புத் திட்டத்தில் தொழில்நுட்ப உதவி மற்றும் தமிழ்நாட்டில் முக்கியமான பேரிடர்களின் அபாயக் குறைப்புக்கான முன்னெடுப்புகளை செயல்படுத்தவும் யுனிசெப் உதவி புரியும்.

2.45.6 பிற மாநில பேரிடர் ஆணையங்களுக்கு அறிவுசார் பயணம்

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை செயலாளர் தலைமையில் வருவாய் நிருவாக ஆணையர், பேரிடர் மேலாண்மை இயக்குநர் உள்ளிட்ட அலுவலர்கள், வல்லுநர்கள் கொண்ட குழு கடந்த 12.5.2022 முதல் 14.5.2022 வரை கர்நாடக மாநில இயற்கை பேரிடர் கண்காணிப்பு மையத்திற்கு வானிலை, மழை, இடி, மின்னல், நில நடுக்கம் ஆகியவற்றைக் கண்காணிப்பது தொடர்பாகவும் மற்றும் நடுத்தர வானிலை முன்னறிவிப்பு மற்றும் பரவலுக்காகவும் ஏற்படுத்தப்பட்டுள்ள உட்கட்டமைப்புகளை அறிந்து கொள்ள சென்றது.

2023 ஏப்ரல் 12]

பேரிடர் மேலாண்மை இயக்குநர் உள்ளிட்ட அலுவலர்கள், வல்லுநர்கள் கொண்ட குழு கடந்த 17.2.2023 அன்று திருவனந்தபுரத்தில் நடைபெற்ற கடல் அரிப்பு, நதி அரிப்பு மற்றும் மறுவாழ்வுக்கான தேசிய கொள்கையின் வரைவை இறுதி செய்வதற்கான பயிலரங்கத்தில் கலந்து கொண்டது. 18.2.2023 அன்று திருவனந்தபுரத்தில் உள்ள கேரள மாநில அவசரக்கால செயல்பாட்டு மையத்தின் உட்கட்டமைப்புகளையும், செயல்பாடுகளையும் குழு அறிந்து கொண்டது.

வருவாய் நிருவாக ஆணையர், பேரிடர் மேலாண்மை இயக்குநர் உள்ளிட்ட அலுவலர்கள், வல்லுநர்கள் கொண்ட குழு கடந்த 26.2.2023 முதல் 28.2.2023 வரை இந்திய தேசிய கடல்சார் நிறுவனத்திற்குச் சென்று சுனாமி கண்காணிப்பு அமைப்பு பற்றியும், நிலையான வழிகாட்டு நடைமுறைப் பற்றியும் இந்திய கடல்சார் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ள பல்வேறு ஆய்வுகளையும் அறிந்து கொண்டது. தமிழ்நாட்டில் கிராம அளவில் புயல், சுனாமி பேரிடர்களை எதிர்கொள்ளும் திறன்களை மேம்படுத்த தேசிய கடல்சார் ஆய்வு நிறுவனம் உதவிபுரிவதாகத் தெரிவித்தது. தெலுங்கானா மாநில வளர்ச்சி மற்றும் திட்டமிடல் சங்கத்திற்குச் சென்ற இக்குழு மழைப்பொழிவு, வானிலையை மற்றும் வறட்சி கண்காணிப்பது மற்றும் தரவுகளை ஆவணப்படுத்துவது குறித்து அறிந்து கொண்டது. மேலும், ஹைதராபாத்தில் உள்ள தேசிய தொலையுணர்வு மையத்தால் நடத்தப்பட்ட தேசிய அளவிலான பேரிடர் மேலாண்மையில் வளர்ந்து வரும் தொழில்நுட்பம் குறித்தான கருத்தரங்கில் கலந்து கொண்டது.

2.46 பேரிடர் அபாயக் குறைப்புக்கான மூன்றாவது தேசிய மாநாடு

பேரிடர் அபாயக் குறைப்புக்கான மூன்றாவது தேசிய மாநாடு "மாறி வரும் பருவக்காலச் சூழலில் பேரிடரை எதிர்கொள்ளும் உள்ளூர் மக்களின் திறனைக் கட்டமைத்தல்" என்ற கருத்தோடு 10.3.2023 முதல் 11.3.2023 வரை புதுடெல்லியில் நடத்தப்பட்டது. இத்தேசிய மாநாட்டில் மாண்புமிகு அமைச்சர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கலந்து கொண்டார். இம்மாநாட்டில் தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் சார்பாக தமிழ்நாட்டில் பேரிடரை எதிர்கொள்ள மேற்கொள்ளப்படும் முன்னோடியான மற்றும் முத்தாய்ப்பான திட்டங்கள் குறித்து கண்காட்சி நடத்தப்பட்டது.

[*2023 ஏப்ரல் 12*

2.47 குழந்தைகளுக்கான பேரிடர் அபாயக் குறைப்பு குறித்த பயிலரங்கம்

தேசிய பேரிடர் மேலாண்மைப் பயிற்சி நிறுவனமும், தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை ஆணையமும் இணைந்து சென்னையில் 27.3.2023 முதல் 31.3.2023 வரை குழந்தைகளுக்கான பேரிடர் அபாயக் குறைப்பு குறித்த பயிலரங்கம் நடத்தியது. இப்பயிலரங்கத்தில் பல்வேறு துறைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட முதன்மைப் பயிற்சியாளருக்குக் குழந்தைகளுக்கான பேரிடர் அபாயக் குறைப்பு குறித்த பயிற்சி வழங்கப்பட்டது. தொடர்ச்சியாக முதன்மைப் பயிற்சியாளர்கள்மூலம் மாவட்டந்தோறும் அரசு அலுவலர்களுக்கும், தன்னார்வலர்களுக்கும் இப்பயிற்சி வழங்கப்படும்.

முன்னோக்கிய பாதை

சமீபக் காலமாக இயற்கை இடர்பாடுகளின் போக்கில் பெரும் மாற்றம் உள்ளது. பருவக்கால மாற்றம் பேரிடர்களின் குறிப்பாக கனமழை, மேக வெடிப்பு, இடி, மின்னல் போன்றவற்றின் தீவிரம் மற்றும் அளவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. வறட்சி, வெப்ப அலை போன்ற தீவிர பேரிடர்களின் நிகழ்வு அதிகரித்து வருகிறது. பேரிடரை எதிர்கொள்ளும் மாநிலத்தை உருவாக்குவதற்கான முயற்சியில் தமிழ்நாடு அரசு ஆயத்தம், திறன் மேம்பாடு, பேரிடர் தணிப்பு முதலீடு, தட்பவெப்ப நிலையை தாங்கக்கூடிய உட்கட்டமைப்புகளை உருவாக்குதல் போன்ற செயல்பாடுகளில் உறுதியுடன் உள்ளது. பல்துறை கூட்டாண்மைமூலம் பேரிடர் பாதிப்புகளை எதிர்கொள்வதற்கான திறன் மேம்படுத்தப்படும்.

2.48 நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள்

காலநிலை மாற்றம் மற்றும் அதன் தாக்கத்தை எதிர்கொள்வதற்கு அவசர நடவடிக்கைகள் மேற்கொள்வதே நீடித்த வளர்ச்சிக்கான இலக்கு எண் 13 ஆகும். தமிழ்நாடு அரசு மாநில பேரிடர் மேலாண்மைக் கொள்கை 2023 மற்றும் மாநில பேரிடர் மேலாண்மைத் திட்டம் 2023 ஆகியவற்றை வெளியிட்டுள்ளது. இந்த இரண்டு ஆவணங்களும் மாநிலத்தில் காலநிலை தொடர்பான ஆபத்துகள் மற்றும் இயற்கை பேரிடர்களின் தாக்கத்தினை எதிர்கொள்ளும் திறனை வலுப்படுத்த வலியுறுத்துகின்றன. பேரிடர் மேலாண்மைத் துறையின் செயல்திறன் மூன்று குறியீடுகள்மூலம் அளவிடப்படுகிறது.

2023 ஏப்ரல் 12]

இலக்கு எண் 13.1.2. தீவிர காலநிலை காரணமாக ஒரு இலட்சம் மக்கள் தொகையில் ஏற்படும் இறப்புகளின் எண்ணிக்கையை குறைப்பது

பேரிடர்களைத் திறம்பட எதிர்கொள்ள, கடைக்கோடி மக்களைச் சென்றடையும் வகையில் முன்னெச்சரிக்கை அமைப்பு, மீட்புப் படைகளை வலுப்படுத்துதல் மற்றும் பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளிலிருந்து பொதுமக்களை முன்கூட்டியே பாதுகாப்பான இடங்களில் தங்கவைப்பது உள்ளிட்ட ஆயத்த நடவடிக்கைகளை அரசு வலுப்படுத்தி வருகிறது. மேம்படுத்தப்பட்ட முன்னெச்சரிக்கை அமைப்புகளான TN-SMART, *பொதுவான எச்சரிக்கை நெறிமுறை மற்றும் கடலோரப் பகுதிகளில் நிறுவப்பட்டுள்ள 424 பேரிடர் எச்சரிக்கை அறிவிப்பு அமைப்புகளின் காரணமாக கடந்த ஆண்டுகளில் தீவிர காலநிலையால், ஒரு இலட்சம் மக்கள் தொகையில் ஏற்படும் இறப்புகளின் எண்ணிக்கை கணிசமாகக் குறைக்கப்பட்டது.*

இலக்கு 13.3 காலநிலை மாற்றத்தைத் தணித்தல், தாக்கத்தைக் குறைத்தல் மற்றும் முன்னெச்சரிக்கை அமைப்பு ஆகியவை தொடர்பான கல்வி, விழிப்புணர்வு மற்றும் பொதுமக்கள், பேரிடர்களின் முக்கியப் பங்குதாரர்களின் திறனை மேம்படுத்துதல்

13.3.1a – பேரிடர் தணிப்பு, தாக்கத்தைக் குறைத்தல், முன்னெச்சரிக்கை அமைப்பு ஆகியவற்றில் மாநிலத்தின் ஒருங்கிணைப்பு குறித்து தொடக்கப் பள்ளி முதலான பாடத் திட்டங்களில் அறிமுகப்படுத்துவது

பேரிடர் மேலாண்மைக் குறித்த விழிப்புணர்வைப் பள்ளி மாணவர்களிடையே உருவாக்குவதற்காக 7 முதல் 12 ஆம் வகுப்பு மற்றும் ஆசிரியர் பயிற்சி வகுப்பு பாடத் திட்டங்களில் பேரிடர் மேலாண்மைக் குறித்து பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

13.3.2. திறன் மேம்பாடு மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

பேரிடர்களின்போது சமூகப் பங்களிப்பு மற்றும் எதிர்கொள்ளும் திறனை மேம்படுத்தும் வகையில், 5,500 ஆப்த மித்ரா தன்னார்வலர்களுக்கும், 65,000 முதல்நிலை மீட்பாளர்களுக்கும் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இதுமட்டுமின்றி, பாதிப்பிற்குள்ளாகக்கூடிய பகுதிகளில் தொடர்ந்து மாநில மற்றும் மாவட்ட அளவிலான ஒத்திகைப் பயிற்சிகள் நடத்தப்படுவதோடு,

பொதுமக்களுக்குப் பேரிடர் குறித்த விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

3. நில நிருவாகம்

நிலம் தொடர்பான பல்வேறு பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு கடந்த 1980 ஆம் ஆண்டு முன்னாள் வருவாய் வாரியத்திலிருந்து நில நிருவாக ஆணையரகம் உருவாக்கப்பட்டது.

இவ்வாணையரகத்தால் மேற்கொள்ளப்படும் முக்கியப் பணிகளின் விவரம் பின்வருமாறு:-

- நிலவுடைமை ஆவணங்கள் பராமரித்தலைக் கண்காணித்தல் (தனியார் நிலங்களின் பட்டா மாற்றம்/ அவற்றின் மீதான மேல்முறையீடு மற்றும் சீராய்வு முறையீடு)
- இரயத்துவாரி நிலவரிச் சட்டங்கள், நத்தம் நிலவரித் திட்டம், நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின் கீழான சட்டப்பூர்வ மற்றும் மேல் முறையீட்டு அதிகாரங்கள்

அரசு நிலங்கள் தொடர்பானவை

- அரசு நிலங்களை மாநில அரசின் ஒரு துறையிலிருந்து மற்றொரு துறையின் பயன்பாட்டிற்கும் ஒன்றிய அரசின் துறைகளின் பயன்பாட்டிற்கும் நிலமாற்றம் செய்து வழங்குதல்
- ஒன்றிய/மாநில அரசின் பொதுத் துறை நிறுவனங்கள்/ வாரியங்களுக்கு நில உரிமை மாற்றம் செய்தல்,
- ஆட்சேபணையுள்ள மற்றும் ஆட்சேபணையற்ற அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமணங்களை அகற்றுதல்.
- அரசு நிலங்களைக் குத்தகைக்கு வழங்குதல்,
- விவசாய நில ஒப்படை/ வீட்டுமனை ஒப்படை ஆட்சேபகரமற்ற புறம்போக்குகளில் உள்ள குடியிருப்பு ஆக்கிரமணங்களை வரன்முறைப்படுத்துதல்
- பொது நோக்கங்களுக்காகத் தனியார் நிலங்களைக் கையகப்படுத்தல்

2023 ஏப்ரல் 12]

- *அரசின் நீர் ஆதாரங்களிலிருந்து பாசனத்திற்காக நீர் எடுப்பதை முறைப்படுத்துதல்.*

3.1 வீட்டுமனை ஒப்படை

வீடற்ற ஏழைகள் அனைவருக்கும் ஏற்புடைய வாழ்விடம் அமைத்துத் தரும் பொருட்டு இலவச வீட்டுமனைகள் வழங்கி மக்களின் வாழ்வாதாரத்தைப் பெருக்குவதே அரசின் கொள்கையாகும். அதன்படி, வருவாய் நிலை ஆணை எண் 21-ன் விதிகளின்கீழ், "காலிநத்தம்" என வகைப்படுத்தப்பட்டு, கிடைக்கக்கூடிய அரசு நிலங்களை ஒதுக்கீடு செய்து வீடு இல்லாத ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்படுகிறது. நத்தம் என வகைப்படுத்தப்பட்ட போதிய நிலங்கள் இல்லாத சூழ்நிலையில் வருவாய் கோட்டாட்சியர்கள்/மாவட்ட ஆட்சியாளர்கள் வருவாய் நிலை ஆணை 21(6)-ன்கீழ் பல்வேறு வகையான ஆட்சேபணையற்ற அரசுப் புறம்போக்கு நிலங்களை வகைப்பாடு மாற்றம் செய்து, வீடற்ற ஏழைகளுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்க அதிகாரமளிக்கப்படுகிறது.

ஆதி திராவிடர் நலத் துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையால் ஒதுக்கப்பட்ட நிலங்களில் வசிப்பவர்களுக்கு இ-பட்டாக்கள் வழங்கப்படுகின்றன. பெண்களின் நலனை உறுதி செய்வதற்காக, குடும்பத்தில் உள்ள பெண் உறுப்பினர்கள் பெயரில் மட்டுமே இலவச வீட்டுமனைகள் வழங்கப்படுகின்றன.

7.5.2021 முதல் 31.3.2023 வரை, முறையான வீட்டுமனைப் பட்டா வழங்குதல் திட்டம், ஆதி திராவிடர்/பிற்படுத்தப்பட்டோர் நலத் திட்டத்தின்கீழ் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல், சிறப்பு வரன்முறைப்படுத்தும் திட்டத்தின்கீழ் ஆட்சேபகரமற்ற அரசு புறம்போக்கில் குடியிருந்து வரும் தகுதியுள்ள நபர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல் மற்றும் நகரளவைத் திட்டத்தின்கீழ் வீட்டுமனைப் பட்டா வழங்குதல் என மொத்தம் 4,37,900 பட்டாக்கள்/இ-பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. குறிப்பாக இருளர் மற்றும் நரிக்குறவர் போன்ற விளிம்பு நிலை சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்குவதில் தனிக் கவனம் செலுத்தப்படுகிறது.

[2023 ஏப்ரல் 12

3.2 பட்டா மாறுதல்

பட்டா மாறுதல் சேவையானது, பொது மக்களைச் சென்றடைவதை இந்த ஆணையரகம் கண்காணித்து வருகிறது. மேலும். நில நிருவாக ஆணையரால் இணையதள வழியிலான பட்டா மாறுதல் பணி குறித்த காலமுறை சீராய்வுக் கூட்டங்கள் நில அளவை மற்றும் நில வரித் திட்ட இயக்குநர்/மாவட்ட ஆட்சியர்கள்/மாவட்ட வருவாய் அலுவலர்கள் ஆகியோருடன் நடத்தப்பட்டு வருகிறது.

இணையதள வழியிலான பட்டா மாறுதல்

பட்டா மாறுதல் தொடர்பான இணையதள சேவைகள் பொதுமக்களுக்கு எளிதில் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. பொது மக்கள் தங்களுக்கு அருகிலுள்ள பொது சேவை மையத்தில் இணையதளத்தில், பட்டா மாறுதல் சேவைக்காக விண்ணப்பிக்கும்போது அவர்களுக்கு உடனடியாக ஒப்புகைச் சீட்டு வழங்கப்படுகிறது. இதன் தொடர்ச்சியாக, இந்தப் பட்டா மாறுதல் கோரும் மனுமீது வட்ட அளவிலான அலுவலர்களால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. பட்டா மாறுதல் கோரும் மனுவின் மீதான நடவடிக்கையானது, குறுஞ்செய்தி (SMS) மூலமாக மனுதாரருக்குத் தெரிவிக்கப்படுகிறது. இந்த வசதியினைப் பயன்படுத்தி மனுதாரர் சிட்டா நகலையும், "அ" பதிவேடு நகலையும் இணையவழியில் பெற்றுக்கொள்ளலாம். அவ்வாறு எடுக்கப்படும் நகல்களில், இணையவழி கையொப்பம் மற்றும் சிறப்புக் குறியீடு மூலம் (Quick Response - QR) இணைக்கப்பட்டு இந்த ஆவணங்கள் சட்டப்பூர்வமாக்கப்பட்டுள்ளன. இத்திட்டமானது மாநிலத்தின் அனைத்து வட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது. இணைய வழிபட்டா மாறுதல் திட்டத்தின் வழியாக பெறப்படும் விண்ணப்பங்களில் உள்ள நிலுவை இனங்கள் நில அளவை மற்றும் நில வரித் திட்ட இயக்குநரகம் மற்றும் நில நிருவாக ஆணையரகம் மூலமாக உரிய காலங்களில் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும், இணையவழி பட்டா மாறுதல்களை மாவட்ட அளவில் துரிதப்படுத்த உரிய அறிவுரைகளை அரசு அவ்வப்போது வழங்கி வருகிறது. பொது சேவை மையங்கள் மட்டும் அல்லாமல், விண்ணப்பதாரர்கள் நேரடியாக இணையவழியாக குடிமக்கள் போர்ட்டலில் (Portal) விண்ணப்பம் செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 12]

*நிலம் தொடர்பாக பதிவுத் துறையில் மேற்கொள்ளப்படும் அனைத்துப் பதிவுகளும், வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு மின்னணு முறையில் அனுப்பப்பட்டு, இணையதளம் வழியாக வருவாய்ப் பதிவேட்டில் (*Tamil Nilam land records database*) மாறுதல் மேற்கொள்ளப்படுகின்றன. இதன்மூலம், நில உரிமையாளர்கள் பட்டா மாறுதல் கோரி தனியாக மனு செய்வது தவிர்க்கப்படுகிறது.*

3.3 நிலக் குத்தகை

*வருவாய் நிலை ஆணை எண் 24*A*-ன்கீழ், அரசின் புறம்போக்கு நிலங்கள்/கட்டடங்கள்/நிலத்துடன்கூடிய கட்டடங்கள் போன்றவற்றை, வேளாண்மை அல்லாத பிற பயன்பாட்டிற்காக நிறுவனங்கள், தனி நபர்கள், தனியார் அமைப்புகள், உள்ளாட்சி அமைப்புகள், கூட்டுறவுச் சங்கங்கள், பிற சங்கங்கள் ஆகியவற்றிற்குத் தற்காலிகமாகக் குத்தகை அடிப்படையில் பல்வேறு நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கப்படுகிறது. குத்தகைக்கு வழங்கப்படும் அரசு புறம்போக்கு நிலங்கள் குத்தகைக்கு வழங்கப்பட்ட நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்யும் வகையில் கீழ்க்கண்ட முக்கியமான நிபந்தனைகள் விதிக்கப்படுள்ளன:*

i. *குத்தகை நிலம் எந்த நோக்கத்திற்காக குத்தகைக்கு வழங்கப்படுகிறதோ அந்த நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.*

ii. *குத்தகைக்கு வழங்கப்பட்ட அரசு நிலத்தை வேறு நபருக்கு உள்குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விடுவதோ அல்லது குத்தகை உரிமையை மாற்றம் செய்யவோ கூடாது.*

iii. *குத்தகை நிபந்தனை மீறப்படின், எவ்வித இழப்பீடுமின்றி உரிய வழிமுறைகளின்படி குத்தகை நிலம் அரசு வசம் மீள எடுத்துக் கொள்ளப்படும்.*

பொதுவாக குத்தகை இனங்கள் குறைந்த பட்சம் 3 ஆண்டுகளுக்கும் அதிகபட்சமாக 30 ஆண்டுகளுக்கும், வழங்கப்படுகின்றன. சில சிறப்பு நேர்வுகளில், அத்தியாவசியம், சமூக சேவை மற்றும் பொது நல நோக்கங்களின் அடிப்படையில் செயல்படும் அமைப்புகளுக்குத் தேவை எனக் கருதும்பட்சத்தில், அதிகபட்சமாக 99 வருடங்களுக்கு அரசளவில் குத்தகை உரிமை வழங்கப்படுகிறது.

தற்போது உள்ள விதிமுறைகளின்படி வணிகமற்ற நோக்கத்தில் செயல்படும் குத்தகை இனங்களில் ஆண்டு குத்தகைக் கட்டணம் நிலத்தின் சந்தை மதிப்பில் 7 விழுக்காடும், வணிக நோக்கத்தில் செய்யப்படும் இனங்களில் 14 விழுக்காடும் நிர்ணயம் செய்யப்படுகிறது. நிலத்தின் சந்தை விற்பனை மதிப்பு அல்லது வழிகாட்டி பதிவேட்டின் மதிப்பு ஆகியவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் அரசு நிலத்தின் மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டு, அதன் பேரில் நிலக் குத்தகைக் கட்டணம் கணக்கிடப்படுகிறது. சிறப்பு நேர்வுகளில் சமூக சேவை மற்றும் பொது நல நோக்கில் செயல்படும் அமைப்புகளுக்கு சலுகை அடிப்படையில் பெயரளவு குத்தகைத் தொகை அரசால் நிர்ணயம் செய்யப்படுகிறது.

நீண்ட காலக் குத்தகை இனங்களில், நில மதிப்பினைக் கணக்கில் கொள்ளாமல், அப்போதைய சந்தை மதிப்பின் அடிப்படையில் ஆண்டு குத்தகைத் தொகையானது 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை மாவட்ட ஆட்சியரால் மறு நிர்ணயம் செய்யப்பட்டு வருகிறது.

குத்தகைக்குட்படும் அரசு நிலங்களின் உத்தேச நில மதிப்பின் அடிப்படையில், புதிய குத்தகை இனங்கள் மற்றும் குத்தகை புதுப்பிப்பு இனங்கள் ஆகியவற்றிற்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் பல்வேறு அலுவலர்களுக்கான நிதி அதிகார வரம்பு கீழ்க்கண்டுள்ளவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது:-

அட்டவணை 3.1

அலுவலர்கள்	நிதி அதிகார வரம்பு (நில மதிப்பில்)	
	நில குத்தகை (புதிய இனங்களுக்கு) (ரூபாய்)	குத்தகை புதுப்பித்தல் (ரூபாய்)
வட்டாட்சியர்	இல்லை	இல்லை
வருவாய் கோட்டாட்சியர்	ரூ.50,000/- வரை	இல்லை
மாவட்ட வருவாய் அலுவலர்	ரூ.1,00,000/- வரை	இல்லை
மாவட்ட ஆட்சித் தலைவர்	ரூ.4,00,000/-வரை	ரூ.10,00,000/-வரை

2023 ஏப்ரல் 12]

நில நிருவாக ஆணையர்	ரூ.5,00,000/- வரை	ரூ.25,00,000/-வரை
அரசு	ரூ.5,00,000/-க்கு மேல்	ரூ.25,00,000/-க்கு மேல்

குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்ட அரசு நிலங்கள் தொடர்பான விவரங்கள் அனைத்தும் ஒருங்கிணைந்த குத்தகைப் பதிவேட்டில் (Master Lease Register) பதிவு செய்யப்பட்டு, வட்டாட்சியர் அலுவலகத்திலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் பராமரிக்கப்படுகிறது. ஒவ்வொரு பசலி ஆண்டு முடிவிலும், வருவாய்த் தீர்வாயம் (Jamabandhi) நடைபெறும்போது இப்பதிவேட்டில் உள்ள பதிவுகள் புதுப்பிக்கப்படுகின்றன (Updated). குத்தகைக்கு வழங்கப்பட்ட புலங்களில், குத்தகை நிபந்தனைகள் சரிவர கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்பதை வட்டாட்சியர்/ வருவாய்க் கோட்டாட்சியர்/மாவட்ட வருவாய் அலுவலர்/ மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோரால் அவ்வப்போது புலத் தணிக்கை செய்யப்பட்டு உறுதி செய்யப்படுகின்றன.

அரசாணை (நிலை) எண் 803, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 29.12.2000-ன்படி, குத்தகை இனங்களுக்கு அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித் துறை மற்றும் நில நிருவாக ஆணையர் உறுப்பினர்/ ஒருங்கிணைப்பாளர் ஆகிய மூன்று நபர் குழு அரசால் அமைக்கப்பட்டது.

மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் அவர்களால் 18.3.2022 அன்று சட்டப் பேரவையில் புதிய நிலக் குத்தகைக் கொள்கை உருவாக்கப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, நில குத்தகைக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், தற்போதைய சூழ்நிலைக்கேற்ப புதிய வரைவு நில குத்தகைக் கொள்கை தயார் செய்யப்பட்டு, அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

3.3.1. உப்பள நிலங்களைக் குத்தகைக்கு வழங்குதல்

அதேபோன்று வருவாய் நிலை ஆணை எண் 24A-ன்படி, கடலோர மாவட்டங்களில் உள்ள அரசு புறம்போக்கு நிலங்கள் (Salt Pan) உப்பு மற்றும் அதன் சார்பு பொருட்கள் உற்பத்திச் செய்வதற்காக குத்தகை அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

உப்பு மற்றும் அதன் சார்பு பொருட்கள் உற்பத்திக்காகக் குத்தகை அடிப்படையில் வழங்கப்படும் அரசு நிலங்களுக்கான குத்தகைக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது:—

அட்டவணை - 3.2

1.	குத்தகைத் தொகை	ரூ.5/-வீதம் ஒரு ஏக்கருக்கு/ஒரு வருடத்திற்கு
2.	உரிமத் தொகை	உற்பத்தி செய்யப்பட்ட உப்பு மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ.2/- வீதம் குறைந்தபட்சமாக ஒரு ஏக்கருக்கு/ஒரு வருடத்திற்கு ரூ.100/-
3.	தலவரி 100%	ரூ.5/- ஒரு ஏக்கருக்கு/ஒரு வருடத்திற்கு
4.	தலமேல்வரி 500%	ரூ.25/- ஒரு ஏக்கருக்கு/ஒரு வருடத்திற்கு
	மொத்தம்	ரூ.135/- ஒரு ஏக்கருக்கு/ஒரு வருடத்திற்கு

தமிழக கடலோரப் பகுதிகளில் சுமார் 27,777 ஏக்கர் அரசு உப்பள நிலங்கள், குத்தகை அடிப்படையில் தனி நபர்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்களுக்கு, உப்பு மற்றும் அதன் சார்பு பொருட்கள் உற்பத்தி செய்வதற்கு வழங்கப்பட்டுள்ளன. கட்டண விகிதத்தில் திருத்தம் மேற்கொள்ள அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

3.4 ஆக்கிரமணங்களை அகற்றுதல்

அரசு நிலங்களைக் காப்பது, பராமரிப்பது மற்றும் அரசின் பல்வேறு துறைகள் மற்றும் பணி திட்டங்களுக்கு நிலத்தை ஒதுக்கீடு செய்வது மற்றும் ஆக்கிரமிப்பின்றி நிலங்களைப் பாதுகாப்பது வருவாய் துறையின் முக்கியமானப் பணிகளில் ஒன்றாகும். அரசு நிலங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள அனுமதியற்ற கைப்பற்றுதல்கள் ஆக்கிரமணங்கள் என கருதப்படும். அரசு நிலங்களில் உள்ள ஆக்கிரமணங்களை அளப்பதும் மற்றும் ஆக்கிரமணத்தின் தன்மை மற்றும் வசிப்போர் விவரம் போன்றவற்றை மதிப்பீடு செய்வது வருவாய்த் துறையின் பணிகளாகும். வருவாய் துறையின்

2023 ஏப்ரல் 12]

கைப்பற்றிலுள்ள நிலங்களுக்குத் தமிழ்நாடு ஆக்கிரமண சட்டம் 1905/பிரிவுகளின் படியும், இதர துறைகளாகிய நீர்வள ஆதாரத் துறை, உள்ளாட்சித் துறை போன்றவற்றிற்கு தமிழ்நாடு ஏரிகள் பாதுகாப்பு மற்றும் ஆக்கிரமணங்கள் அகற்றுதல் சட்டம், நெடுஞ்சாலைத் துறை சட்டம், வக்ஃபு சட்டம், இந்து சமய அறநிலையத் துறை சட்டம் மற்றும் ஊரக/நகராட்சி/மாநகராட்சி சட்டம் என அந்தந்தத் துறைகளின் சட்டப் பிரிவுகளின்கீழ் ஆக்கிரமணங்கள் அகற்றப்பட வேண்டும்.

அரசாணை (நிலை) எண் 64, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் [நி.மு 6(2)] துறை, நாள் 8.2.2022-ல் கோட்ட கண்காணிப்புக் குழு (வருவாய் கோட்டாட்சியர் தலைமையிலும்), மாவட்ட கண்காணிப்புக் குழு (மாவட்ட ஆட்சியர் தலைமையிலும்) மாநில வழிகாட்டும் குழு (அரசின் தலைமைச் செயலர் தலைமையிலும்) அமைத்து ஒரு முனை திட்டத்தின் அடிப்படையில், அரசின் நீர்நிலை மற்றும் இதர புறம்போக்குகளில் உள்ள ஆக்கிரமணங்களைக் கண்டறிந்து, நடவடிக்கை எடுத்து, ஆக்கிரமிப்புகளை அகற்ற வழிவகை செய்யப்பட்டது. இதுவரை, நீர்நிலைகள் மற்றும் இதர அரசு புறம்போக்குகளில் இருந்த 13044.85.43 ஹெக்டர் ஆக்கிரமணங்கள் அகற்றப்பட்டுள்ளன.

3.4.1 அரசு நிலங்கள் மீட்டெடுத்தல் மற்றும் பாதுகாத்தல் நிதி

அரசு கடிதம் (நிலை) எண் 277, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் [நிமு6(2)] துறை, நாள் 21.6.2022-ன்படி அரசு நிலங்கள் மீட்டெடுத்தல் மற்றும் பாதுகாப்பு நிதியாக, ரூ.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதற்கான வழிகாட்டி நெறிமுறைகளுடன் வழங்கப்பட்டது. அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.50 கோடி, அனைத்து மாவட்டங்களுக்கும், (மாநகராட்சிகள் உட்பட), அரசு நிலங்களில் உள்ள ஆக்கிரமணங்களை அகற்றவும், வேலியிட்டு, அவற்றைப் பாதுகாக்கவும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. இதுவரை, இதற்கென ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து ரூ.1318,92,81,667/- மதிப்பு கொண்ட 388.1021 ஹெக்டர் பரப்பளவிலான அரசு நிலங்களுக்கு வேலி அமைக்கப்பட்டுள்ளது.

3.5 நில மாற்றம்

அரசு நிலங்கள் வருவாய் நிலை ஆணை எண் 23 மற்றும் 23A-ன்கீழ், நிலமாற்றம் செய்யப்படுகின்றன. வருவாய் நிலை

[2023 ஏப்ரல் 12

ஆணை எண் 23-ன்கீழ் ஒன்றிய அரசுத் துறைகளுக்கு நிலக் கிரையத்தை வசூலித்துக் கொண்டும், வருவாய் நிலை ஆணை எண் 23A-ன்கீழ் மாநில அரசுத் துறைகளுக்கு நிலக் கிரையமின்றியும் அரசு நிலங்கள் நிலமாற்றம் செய்யப்படுகின்றன.

அரசுத் துறைகளுக்கு ஆட்சேபணையற்ற அரசு புறம்போக்கு நிலங்களை நில மாற்றம் செய்யும் நேர்வுகளில் நில மதிப்பு வரம்பின்றி முன் நுழைவு அனுமதி வழங்கவும், ஆட்சேபணையுள்ள புறம்போக்கு நிலங்களுக்கு சம்பந்தப்பட்ட துறையின் தடையின்மைச் சான்று பெற்று முன் நுழைவு அனுமதி வழங்கவும் அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

3.6 நில உரிமை மாற்றம்

அரசு நிலங்களை வருவாய் நிலை ஆணை எண் 24-ன்கீழ் ஒன்றிய மற்றும் மாநில அரசு நிறுவனங்கள்/கழகங்கள்/வாரியங்கள்/உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றிற்கு பொதுப் பயன்பாட்டிற்காகவும், அவற்றின் திட்டங்களுக்காகவும் நில உரிமை மாற்றம் செய்யப்படுகிறது. சில நேர்வுகளில் தனியார் நிறுவனங்களுக்கும் அவற்றின் தேவை, அவசியம் போன்றவற்றினை ஆய்வு செய்து, அரசின் வசம் போதுமான நிலம் இருக்கும்பட்சத்தில் அவர்களுக்கு நில உரிமை மாற்றம் செய்யப்படுகிறது. நில உரிமை மாற்றத்தின்போது வணிக நோக்கமில்லாத பயன்பாட்டிற்காக நில உரிமை மாற்றம் செய்யும் நேர்வுகளில் ஒரு மடங்கு சந்தை நில மதிப்பு வசூல் செய்தும், வணிக நோக்கத்திற்காக நில உரிமை மாற்றம் செய்யும் நேர்வுகளில் இரு மடங்கு சந்தை நில மதிப்பு வசூல் செய்தும், வருவாய் நிலை ஆணை எண் 24(6)-ன்படி உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு நில உரிமை மாற்றம் செய்யப்படுகிறது.

பொது நலன் கருதி, குடிநீர் வழங்கல் திட்டங்கள், பாதாளச் சாக்கடைத் திட்டம் மற்றும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டங்களுக்காக அரசு நிலங்கள் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம், சென்னை பெருநகரக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் மற்றும் இதர உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிலக் கிரயமின்றி நில உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. அவ்வாறே, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு வீடற்ற ஏழை மக்களுக்கு வீட்டு வசதி ஏற்படுத்தும் திட்டத்திற்காக அரசு நிலங்கள் நிலக் கிரயமின்றி நில உரிமை மாற்றம் செய்யப்படுகிறது.

2023 ஏப்ரல் 12]

அரசு நிலங்களை நில உரிமை மாற்றம் செய்யும் நேர்வுகளில் ஏதேனும் நிபந்தனை மீறல் கண்டறியப்படும் எனில் அரசு நிலங்களை மீளப்பெற அரசுக்கு அதிகாரம் உண்டு.

ஆட்சேபணையற்ற அரசு புறம்போக்கு நிலங்களைப் பொறுத்தவரை, நில உரிமை மாற்ற ஆணையினை நிலுவையில் வைத்து, நிலமதிப்பு உச்சவரம்பின்றி முன் அனுமதி வழங்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சியர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

நில உரிமை மாற்றம் செய்யும் நேர்வுகளில் தற்போதைய நிதி அதிகார வரம்பு கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது:—

அட்டவணை - 3.3

வ. எண்	பதவி	அதிகார வரம்பு (ரூ.)
1	*வட்டாட்சியர்*	*50,000/-*
2	*வருவாய் கோட்ட அலுவலர்*	*1,00,000/-*
3	*மாவட்ட வருவாய் அலுவலர்*	*2,50,000/-*
4	*மாவட்ட ஆட்சியர்*	*10,00,000/-*
5	*நில நிர்வாக ஆணையர்*	*15,00,000/-*
6	*அரசு*	*15,00,000/-க்கு மேல்*

3.6.1 தலைமைச் செயலக அளவிலான குழு

நிலமாற்றம், நில உரிமை மாற்றம் தொடர்பான முன்மொழிவுகளின்மீது விரைந்து முடிவெடுப்பதற்கு ஏதுவாக தலைமைச் செயலக அளவிலான குழு அமைக்கப்பட்டது. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை செயலாளரைத் தலைவராகவும், நில நிர்வாக ஆணையரை ஒருங்கிணைப்பாளர்/ உறுப்பினர் செயலாளராகவும் சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களை உறுப்பினர்களாக உள்ளடக்கி, இக்குழு அமைக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட துறைகளின் இசைவு/ தடையின்மைக் கோரப்படும் நேர்வுகளில் தொடர்புடைய முன்மொழிவு இக்குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு துறைத் தலைவர்களின் கருத்திசைவு அல்லது ஆட்சேபணை பெறப்படுகிறது.

2021 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையில் 1129.34 ஏக்கர் அரசு நிலங்கள், பள்ளிக் கல்வி, உயர் கல்வி, சட்டம் நீதி, காவல், சுகாதாரம், நெடுஞ்சாலை, பொதுப் பணி, போக்குவரத்து, வருமான வரி, வணிக வரி, தொழில் மற்றும் வணிகம், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, வருவாய், சமூக நலம், மீன்வளம், பாதுகாப்பு போன்ற பல்வேறு அரசுத் துறைகளுக்கு 87 இனங்களில் நில மாற்றம் செய்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

1.4.2021 முதல் 31.3.2023 வரையில் 2300 ஏக்கர் பரப்பளவுக் கொண்ட அரசு நிலங்கள், 208 இனங்களில் ஒன்றிய மற்றும் மாநில அரசு நிறுவனங்கள்/உள்ளாட்சி அமைப்புகள்/வாரியங்கள் முதலியனவற்றிக்குப் பொது நோக்கங்களுக்காக, நில உரிமை மாற்றம் செய்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

அரசாணை (நிலை) எண் 621, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 1.10.2021-ன்படி, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ள அரசு நிலங்களை ரயத்துவாரி மனை என வகைபாடு மாற்றம் செய்து தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் பெயரில் பட்டா வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு ஏற்கெனவே நில உரிமை மாற்றம் செய்யப்பட்ட நிலங்களை ரயத்துவாரி மனை என வகைபாடு மாற்றம் செய்து பட்டா வழங்கவும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண் 72, குறு, சிறு (ம) நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, நாள் 30.11.2021-ன்படி அரசு மற்றும் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவன (TANSIDCO) தொழிற்பேட்டைகளில் உள்ள நிலங்களுக்கு உரிய நில உரிமை மாற்ற அரசாணை பெற்றிடவும், ரயத்துவாரி மனை என வகைபாடு மாற்றம் செய்யவும், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்), தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) மற்றும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) தொடர்பான நிலப் பிரச்சினைகளை ஆய்வு செய்வதற்காகவும், தொழில் முனைவோருக்கு பட்டா வழங்கிட வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைமூலம் தக்க உத்தரவுகளை பெற்றுத் தரவும், அரசு தலைமைச் செயலாளர் அவர்களின்

2023 ஏப்ரல் 12]

தலைமையில், அதிகாரம் பெற்றக் குழுவினை அமைத்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3.7 சட்டத் தனிப் பிரிவு

அரசாணை (நிலை) எண் 355, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 5.8.2022-ன்படி நில நிர்வாக ஆணையரகத்தில் சட்டத் தனிப் பிரிவு தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

நில நிர்வாகத் துறையின் சட்டத் தனிப் பிரிவானது நீதிமன்ற வழக்குகளை (CCMS), மாண்புமிகு உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள பெருமளவிலான வழக்குகளைக் கண்காணிக்கவும், தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்ட நீதிமன்றங்களில் உள்ள நிலம் தொடர்பான நிலுவை வழக்குகள் மற்றும் நிலம் கையகப்படுத்துதல் தொடர்பான நீதிமன்ற வழக்குகளையும் ஒருங்கிணைத்து விரைந்து தீர்வு காணும் நோக்கத்தில் அரசு வழக்கறிஞர்களுக்கும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைக்கும் இடையில் பாலமாகச் செயல்பட்டு வழக்குகளில் பதிலுரை தாக்கல் செய்யவும், சட்டம் தொடர்பான சிக்கல்களுக்கு சட்டக் கருத்துரை பெற்றும் அளிக்கின்றது. இதனால், நில நிர்வாகத் துறை பல்வேறு சட்ட சிக்கல்களை எளிதாக எதிர்கொள்ள முடிகிறது.

3.8 நில எடுப்பு

2013 ஆம் ஆண்டின் நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான சரியீடு மற்றும் ஒளிவுமறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு உரிமைச் சட்டம் (ஒன்றிய சட்டம் 30/2013) ஒன்றிய அரசால் 1.1.2014 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் முந்தைய 1894 ஆம் ஆண்டின் பழைய நில எடுப்புச் சட்டம் நீக்கரவு செய்யப்பட்டது.

மேற்கண்ட புதிய நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான சரியீடு மற்றும் ஒளிவுமறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு உரிமைச் சட்டம், 2013, நில எடுப்புச் சட்டத்தின் பிரிவு 105A-ன்கீழ் ஐந்தாவது அட்டவணையில் பின்வரும் மூன்று நில எடுப்புச் சட்டங்கள் சேர்க்கப்பட்டன:-

i. *தமிழ்நாடு ஆதி திராவிடர் நலத் திட்டங்களுக்கான நிலம் கையகப்படுத்துதல் சட்டம், 1978 (தமிழ்நாடு சட்டம் 31/1978)*

[2023 ஏப்ரல் 12

ii. தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நிலம் கையகப்படுத்துதல் சட்டம், 1997 (தமிழ்நாடு சட்டம் 10/1999)

iii. தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டம், 2001 (தமிழ்நாடு சட்டம் 34/2002)

மேற்படி மூன்று நில எடுப்புச் சட்டங்களின்கீழ் நில எடுப்புப் பணிகளைத் தொடர்வதற்கு ஏதுவாக தமிழ்நாடு நிலம் கையகப்படுத்துதல் சட்டங்கள் (செயல்முறை உயிர்ப்பித்தல், திருத்தம் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டம், 2019 (தமிழ்நாடு சட்டம், 38/2019) இயற்றப்பட்டு, மேதகு குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இதன்படி மேற்குறிப்பிட்டுள்ள மூன்று தமிழ்நாடு நில எடுப்புச் சட்டங்களின் அனைத்து சட்டப் பிரிவுகளும் (இழப்பீடு நிர்ணயம் செய்தல் தொடர்பான சட்டப் பிரிவுகள் தவிர) 2013 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 26 ஆம் தேதியன்று மற்றும் அன்றைய தேதியிலிருந்து உயிர்ப்பிக்கப்பட்டுள்ளன. மேலும், 2013 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான சரியீடு மற்றும் ஒளிவுமறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு உரிமைச் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள சரியீட்டைத் தீர்மானித்தல், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வைத் தீர்மானித்தல் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் முதலானவை மேற்படி மூன்று சட்டங்களுக்கும் பொருந்தும்.

பல்வேறு உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு தேவையான நிலங்களைச் கையகப்படுத்துவது மிகவும் இன்றியமையாதது. அவ்வாறு, மாநிலம் முழுவதும் ஒன்றிய மற்றும் மாநில அரசின் பல்வேறு திட்டங்களுக்காக சுமார் 25,000 ஹெக்டேர் பட்டா நிலங்களைக் கையகப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவற்றுள் சில முக்கியமான திட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு:—

நில எடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒன்றிய/மாநில அரசுகளின் சில முக்கியத் திட்டங்கள்

- மாநில அரசின் நீர்வளத் துறையின்கீழ் தாமிரபரணி – கருமேனியாறு – நம்பியாறு நதி நீர் இணைப்புத் திட்டம், காவேரி – வைகை – குண்டாறு நதிநீர் இணைப்புத்

திட்டம், தருமபுரி – கிருஷ்ணகிரி எண்ணேகொள் கால்வாய்த் திட்டம், கடலூர் அருவாள்மூக்கு கால்வாய்த் திட்டம், தஞ்சாவூர் – மயிலாடுதுறை – கடலூர் ஆதனூர் குமாரமங்கலம் திட்டம், சேலம் மேட்டூர் சரபங்கா திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

- மாநில நெடுஞ்சாலைத் துறையின்கீழ் சென்னை சுற்று வட்டச் சாலை, சென்னை வெளிவட்டச் சாலை, சென்னை–கன்னியாகுமரி தொழிற்தட திட்டச் சாலைகள், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் – 2, பல்வேறு நகரங்களுக்கான புறவழிச் சாலைகள், சாலை மேம்பாலங்கள்/கீழ்பாலங்கள் மற்றும் பல்வேறு சாலை விரிவாக்கப் பணிகளுக்கான நில எடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- தமிழ்நாடு மாநில தொழில் வளர்ச்சிக் கழகத்திற்காக (சிப்காட்), ராணிப்பேட்டை, பனப்பாக்கம் தொழிற்பூங்கா, திருவண்ணாமலை, செய்யாறு தொழிற்பூங்கா, திருவள்ளூர், மாநெல்லூர் தொழிற்பூங்கா, கிருஷ்ணகிரி, ஓசூர் தொழிற்பூங்கா, திருநெல்வேலி, கங்கைகொண்டான் தொழிற்பூங்கா, தூத்துக்குடி, அல்லிக்குளம் தொழிற்பூங்கா உள்ளிட்ட பல்வேறு தொழிற்பேட்டைகள்/ தொழிற்பூங்காக்கள் அமைப்பதற்கான நில எடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- ஒன்றிய அரசின் துறைகளான தேசிய நெடுஞ்சாலைத் துறை/தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்காக சித்தூர் – தச்சூர் இணைப்புச் சாலை, மதுரை வட்டச் சாலை, மதுரை – ராஜபாளையம் – செங்கோட்டை – கேரள எல்லை இணைப்புச் சாலை, மாமல்லபுரம் – புதுச்சேரி தேசிய நெடுஞ்சாலை உள்ளிட்ட பல்வேறு சாலை மேம்பாட்டு பணிகளுக்காகவும், இரயில்வே துறைக்காக, தூத்துக்குடி - மதுரை அகல இரயில் பாதை அமைத்தல், தூத்துக்குடி - மதுரை (அருப்புக்கோட்டை வழி) புதிய அகல இரவில் பாதை அமைத்தல், வாஞ்சிமணியாச்சி – நாகர்கோவில் அகல இரயில் பாதை அமைத்தல், திண்டிவனம் - நகரி புதிய அகல இரயில் பாதை அமைத்தல், சின்னசேலம் – கள்ளக்குறிச்சி புதிய அகல இரயில் பாதை அமைத்தல்,

கன்னியாகுமரி – திருவனந்தபுரம் அகல இரயில் பாதை அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு இருப்புப் பாதை திட்டங்களுக்காகவும், இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையத்திற்காக (இஸ்ரோ) தூத்துக்குடியில் சிறிய செயற்கைக்கோள் ஏவுதளம் அமைக்கும் திட்டத்திற்காகவும் நில எடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- மேலும், ஒன்றிய அரசின் பொதுத் துறை நிறுவனங்களான சென்னை பெட்ரோலியக் கழகத்திற்கு (சி.பி.சி.எல்.) நாகப்பட்டினத்தில் பனங்குடி எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கும் மற்றும் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் (என்.எல்.சி.) சார்பில் கடலூர் நெய்வேலியில் பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் அமைக்கவும் நில எடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நில எடுப்பு தொடர்பாக நில நிர்வாகத் துறையால் மேற்கொள்ளப்படும் பல்வேறு வகையான பணிகள்

நில நிர்வாகத் துறையானது, மூன்று நில எடுப்பு சட்டங்களின்கீழ் சட்டப்பூர்வ அதிகாரங்களைச் செயல்படுத்தும் விதமாகவும், நில எடுப்பு நடவடிக்கைகளில் பல்வேறு செயலாக்கப் பணிகளை மேற்கொள்ளும் விதமாகவும், நில எடுப்பு அலுவலர்களின் பணிகளை மேற்பார்வையிடும் வகையிலும் மற்றும் பல்வேறு நில எடுப்பு இனங்களில் அரசிற்கு உரிய ஆலோசனைகள் வழங்கும் விதமாகவும் மிக முக்கியப் பணிகளை ஆற்றி வருகிறது. உதாரணமாக,

- சட்டப்பூர்வ வகையில் – மாநில நெடுஞ்சாலைகள் சட்டம், 2001 பிரிவு 15(1) மற்றும் தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நில எடுப்புச் சட்டம், 1997 பிரிவு 3(1)-ன்கீழ் இறுதி நில எடுப்பு அறிவிப்புகளை ஒப்பளித்து அரசிதழில் வெளியிடுதல்.

- அலுவல் ரீதியான செயலாக்க வகையில் – ரூ.10 கோடிக்கு மேற்பட்ட வரைவு தீர்ப்பாணைகளை ஒப்பளித்தல், புதிய நில எடுப்பிற்கான நிர்வாக அனுமதிக்குரிய பிரேரணைகளை அரசிற்குப் பரிந்துரைத்தல் மற்றும் நில எடுப்பிற்கான சிறப்பு அலகுகளை பணி நீட்டிப்புச் செய்தலுக்கான பிரேரணைகளை அரசிற்குப் பரிந்துரைத்தல்.

2023 ஏப்ரல் 12]

- *மேற்பார்வை செய்யும் வகையில் – 2013 ஆம் ஆண்டின் நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான சரியீடு மற்றும் ஒளிவுமறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு உரிமைச் சட்டம், 1997 ஆம் ஆண்டின் தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நிலம் கையகப்படுத்துதல் சட்டம், 2001 ஆம் ஆண்டின் தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டம் மற்றும் 1956 ஆம் ஆண்டின் தேசிய நெடுஞ்சாலைகள் சட்டம் ஆகியவற்றின்கீழ் மாவட்ட ஆட்சியர்கள்/மாவட்ட வருவாய் அலுவலர்கள், சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர்கள் (நி.எ.) ஆகியோரின் பணிகளை கண்காணித்து நிலஎடுப்பு நடவடிக்கைகளை விரைவுபடுத்துதல்.*
- *ஆலோசனை வழங்கும் வகையில் – உயர்த்தப்பட்ட இழப்பீட்டுத் தொகை தொடர்பான வழக்குகள் மற்றும் சில குறிப்பிட்ட நில எடுப்பு இனங்கள்/வழக்குகள்மீது அரசிற்குக் கருத்துருக்கள்/குறிப்புகள் வழங்குதல்.*

மாநிலம் முழுவதும் பல்வேறு துறைகளின் சார்பாகச் செயல்படுத்தப்பட்டுவரும் உட்கட்டமைப்பு திட்டங்களுக்குத் தேவையான நிலங்களை நில எடுப்பு செய்யும் பணிக்கென 55 சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர்கள் உட்பட மொத்தம் 4575 சிறப்பு நில எடுப்புப் பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவை தவிர, சம்பந்தப்பட்ட மாவட்டங்களின் மாவட்ட வருவாய் அலுவலர்களும், வருவாய்த் துறையினைச் சார்ந்த பணியாளர்களும் நில எடுப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

1.4.2022 முதல் 28.2.2023 வரையிலான காலத்தில் மாநிலம் முழுவதும் பல்வேறு நில எடுப்புச் சட்டங்களின்கீழ் 1486 ஹெக்டேர் பரப்புள்ள நிலங்களுக்கு நில எடுப்பிற்கான முதல் நிலை அறிவிக்கையும், 3363 ஹெக்டேர் பரப்புள்ள நிலங்களுக்கு நில எடுப்பிற்கான இறுதி அறிவிக்கையும் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், 3866 ஹெக்டேர் பரப்புள்ள நிலங்களுக்கு இறுதித் தீர்வாணைகள் பிறப்பிக்கப்பட்டு, இழப்பீட்டுத் தொகையாக நில உரிமையாளர்களுக்கு ரூ.5,194 கோடி வழங்கப்பட்டுள்ளது.

நில எடுப்புப் பணிகளை விரைவுபடுத்தும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள சில நடவடிக்கைகள்

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, நில எடுப்புப் பணிகளை எளிமைப்படுத்தி விரைவாக மேற்கொள்ளும் பொருட்டும், நில

[2023 ஏப்ரல் 12

உரிமையாளர்களுக்கு உரிய காலத்திற்குள் நியாயமான இழப்பீட்டுத் தொகையினை வழங்கும்பொருட்டும் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- நில எடுப்பிற்கான நிதி ஒதுக்கீடு பெறுதல் மற்றும் சிறப்பு நில எடுப்புப் பணியிடங்களை தோற்றுவித்தல்/ நீட்டிப்புச் செய்தல் உள்ளிட்ட பணிகளைத் திறம்பட மேலாண்மைச் செய்யவும், நில எடுப்புப் பணிகளை மாநில அளவில் ஒருங்கிணைக்கவும் நில நிர்வாக ஆணையரின்கீழ் தமிழ்நாடு நில எடுப்பு முகமை (LAATAN) என்ற சிறப்பு அமைப்பானது அரசாணை (நிலை) எண் 90, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 25.2.2022-ன்படி 40 பணியிடங்களை உள்ளடக்கியவாறு ஏற்படுத்தப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

- தேசிய நெடுஞ்சாலைத் துறை மற்றும் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின்மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் புதிய சாலைகள் அமைக்கும் பணிகளுக்கான நில எடுப்புப் பணிகளை கண்காணிக்கவும், விரைவுபடுத்தவும் அரசாணை (நிலை) எண் 222, நெடுஞ்சாலைகள் (ம) சிறுதுறைமுகங்கள் துறை, நாள் 24.11.2022-ன்படி 23 பணியிடங்களை உள்ளடக்கிய ஒரு சிறப்பு அலகானது ஏற்படுத்தப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

- பல்வேறு துறைகளிடமிருந்து நில எடுப்புப் பணிகளுக்குத் தேவையான நிதியினை ஒதுக்கீடு செய்வதில் ஏற்படும் காலதாமதத்தினைத் தவிர்க்கும் வகையில் விரைந்து நில எடுப்புப் பணிகளுக்கான நிதியினை ஒப்பளிக்கும்பொருட்டு அரசாணை (நிலை) எண் 457, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 20.9.2022-ன்படி துறைச் செயலாளர்களை உள்ளடக்கிய அதிகாரமளிக்கப்பட்ட குழு அமைக்கப்பட்டு, நில எடுப்புப் பணிகளுக்கான இழப்பீட்டுத் தொகையினை ஒப்பளிக்கும் நடைமுறை எளிமைப்படுத்தப்பட்டுள்ளது.

- நில எடுப்புத் தீர்வாணைகளை எதிர்த்து உயர் இழப்பீட்டுத் தொகைக் கோரி தொடரப்படும் மனுக்கள்மீது நீதிமன்றங்களால் பிறப்பிக்கப்படும் ஆணைகளுக்கேற்ப நிதி ஒதுக்கீட்டினை விரைந்து ஒப்பளிப்பு செய்யவும், சமரச தீர்ப்பாயம் (லோக் அதாலத்) மூலமாக நிலுவையிலுள்ள வழக்குகளை விரைந்து முடிவு செய்யவும், அரசாணை

2023 ஏப்ரல் 12]

(நிலை) எண் 346, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 26.7.2022-ன்படி, தலைமைச் செயலாளர் தலைமையில் பல்துறை செயலாளர்களை உள்ளடக்கிய அதிகாரமளிக்கப்பட்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

- *மாநில நெடுஞ்சாலைத் துறைமூலம் மேற்கொள்ளப்படும் நில எடுப்புப் பணிகளை விரைவுபடுத்தும் நோக்கில் மண்டல வாரியாக பிரத்யேகமாக மாவட்ட வருவாய் அலுவலர் (நில எடுப்பு & மேலாண்மை) பணியிடங்கள் உருவாக்கப்பட்டு தற்போது 14 மாவட்ட வருவாய் அலுவலர்கள் நெடுஞ்சாலைத் துறைக்கான நில எடுப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.*
- *தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நில எடுப்பு சட்டம், 1997-ன்கீழ் நில எடுப்புப் பணிகளை துரிதப்படுத்தும் நோக்கில் அச்சட்டத்தின் பிரிவு 3(1) கீழான அறிவிக்கையினைத் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடும் அதிகாரத்தினை நில நிர்வாக ஆணையருக்கு வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.*
- *நில எடுப்புப் பணிகளை கணினிமயமாக்கும்பொருட்டு, நிலம் கையகப்படுத்துதல் மேலாண்மை அமைப்பு (*Land Acquisition Management System*) உருவாக்கப்பட்டு, அனைத்துச் சட்டங்களின் கீழான நில எடுப்புப் பணிகள் யாவும் தற்போது படிப்படியாகக் கணினிமயமாக்கப்பட்டு வருகின்றன.*
- *நில எடுப்புப் பணிகளை மேற்கொள்ளும் பல்வேறு துறைகளின் கள அலுவலர்களுக்குப் புத்தாக்கப் பயிற்சி வழங்கும் விதமாக பிரத்யேகக் கையேடுகள் தயார் செய்யப்பட்டு, 1,276 அலுவலர்களுக்குக் கடந்த டிசம்பர் 2021 முதல் மார்ச் 2022 முடிய முதற்கட்டப் பயிற்சி வழங்கப்பட்டதுடன், பிப்ரவரி 2023 முதல் ஏப்ரல் 2023 முடிய 650 பணியாளர்களுக்குத் தற்போது இரண்டாம் கட்டப் பயிற்சியானது வழங்கப்பட்டு வருகிறது.*

3.9 வருவாய் நில உடைமை ஆவணங்களை மேம்படுத்துதல்

வருவாய்த் துறையால் பராமரிக்கப்பட்டுவரும் நில ஆவணங்கள் ஏற்கெனவே கணினிப்படுத்தப்பட்டுள்ளன. நில ஆவணங்களின் தரத்தை உயர்த்தவும், நில உரிமைகளை உறுதி

செய்யும்பொருட்டும், கடந்த பல தசாப்தங்களாக வருவாய், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைகள் மற்றும் பிற்படுத்தப்பட்டோர்/மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை ஆகியவற்றால் வழங்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான வீட்டுமனைகளுக்கான பயனாளிகளின் பெயர்களை நில ஆவணங்களில் (இணையம் சார்ந்த தமிழ் நிலம் மற்றும் கொலாப் லேண்ட் ஆகியவற்றில்) சேர்த்து நிகழ்நிலைப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.


மேலும், கடந்த காலங்களில் கிராம வருவாய் ஆவணங்களைக் கணினிமயமாக்கலின்போது பல்வேறு வகையான எழுத்துப் பிழைகள் மற்றும் தனி நபர்களின் நில உடைமைகளில் தவறான பதிவுகள் ஏற்பட்டுள்ள நிலையில், அவற்றைக் களையும் விதமாக அரசாணை (நிலை) எண் 644, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 1.10.2021-ன்படி ஊரகப் பகுதிகளிலும் அரசாணை (நிலை) எண் 612, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 1.10.2021-ன்படி நகர்ப்புறப் பகுதிகளிலும் தமிழ் நில இணையதளத்தில் மாவட்ட ஆட்சியர்களின் நேரடி கண்காணிப்பின்கீழ் மாவட்ட வருவாய் அலுவலர்கள் மற்றும் வருவாய் கோட்டாட்சியர்கள் மூலமாக மேற்கண்ட பிழைகளை சரிசெய்யும்பொருட்டு சிறப்பு நடவடிக்கைகள் மேற்க்கொள்ளப்பட்டு வருகின்றன. நில மாற்றம் மற்றும் நில உரிமை மாற்றம் செய்யப்பட்ட நிலங்களை சம்பந்தப்பட்ட கேட்புத் துறைகள்/அமைப்புகளின் பெயரில் தமிழ் நில இணைய ஆவணங்களில் பதிவு செய்யும்பொருட்டு சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4. நிலச் சீர்திருத்தம்

வேளாண்மை நில உடைமைகளில் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வுகளை நீக்கும்பொருட்டு 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தம் (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டம் இயற்றப்பட்டது. இந்நோக்கத்தின் அடிப்படையில் விவசாய நிலங்களுக்கான நில உச்சவரம்புச் சட்டம், குத்தகைச் சட்டங்கள், விவசாயத் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியச் சட்டம், பூமிதான சட்டம் மற்றும் வேளாண்மை வருமான வரி தொடர்பான பணிகள் நிலச் சீர்திருத்த ஆணையரகத்தின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

4.1 நிலச் சீர்திருத்தத் துறையின் நிருவாகக் கட்டமைப்பு:-



4.2 நிலச் சீர்திருத்த சட்டத்தின்கீழ் உள்ள உச்சவரம்பு

*1961 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தமிழ்நாடு நிலச் சீர்திருத்தச் (நில உச்சவரம்பு நிர்ணய) சட்டம் 58/1961-ன்படி ஐந்து உறுப்பினர்கள் கொண்ட ஒரு குடும்பத்திற்கு 30 தர ஏக்கர் (*Standard Acre*) நிலமும், கூடுதலாக உள்ள நபர்கள் ஒவ்வொருவருக்கும் 5 தர ஏக்கர் நிலமும், ஒரு குடும்பத்திற்கு அதிகபட்ச உச்சவரம்பாக 60 தர ஏக்கர் நிர்ணயம் செய்யப்பட்டது. பின்னர் அதிகபட்ச உச்சவரம்பு 40 தர ஏக்கராகக் குறைக்கப்பட்டது.*

சட்டம் நடைமுறைக்கு வந்த நாளன்று, குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு பெண் உறுப்பினர் பெயரில் நிலம் இருப்பின், தலா 10 தர ஏக்கர் சீதன நிலமாக அனுமதிக்கப்படுகிறது.

[2023 ஏப்ரல் 12

இச்சட்டத்தில் 1970 ஆம் ஆண்டு திருத்தம் மேற்கொள்ளப்பட்டு ஐந்து நபர்கள் கொண்ட ஒரு குடும்பத்திற்கான உச்சவரம்பு 30 தர ஏக்கரிலிருந்து 15 தர ஏக்கராகக் குறைக்கப்பட்டது. மேலும், குடும்பத்தின் அதிகபட்ச உச்சவரம்பு 40 தர ஏக்கரிலிருந்து 30 தர ஏக்கராகக் குறைக்கப்பட்டது.

4.2.1. தற்போது நடைமுறையிலுள்ள நில உச்சவரம்பு

வ. எண்	வகைபாடு	அனுமதிக்கப்பட்ட பரப்பு
1.	தனி நபர், வர்த்தக நிறுவனம், சொசைட்டி, தனியார் அறக்கட்டளை, நிறுவனம்	15 தர ஏக்கர்
2.	5 நபர்கள் கொண்ட ஒரு குடும்பம் (ஐந்து நபருக்கு மேல் உள்ள ஒவ்வொரு கூடுதல் உறுப்பினருக்கு 5 தர ஏக்கர் கூடுதலாக அனுமதிக்கப்படுகிறது. ஒரு குடும்பத்திற்கான அதிகபட்ச உச்சவரம்பு	15 தர ஏக்கர் 30 தர ஏக்கர்
3.	ஒவ்வொரு பெண் உறுப்பினருக்கும் 15.2.1970 அன்று நிலங்கள் அவர்களது பெயரில் இருந்தால், சீதனமாக அனுமதிக்கப்படும் பரப்பு	10 தர ஏக்கர்
4.	1.3.1972 தேதியில் இருந்த மதசார்பான பொது அறக்கட்டளை (Public Trust of Religious Nature)	சட்டத்திற்குள் வராது
5.	1.3.1972 தேதியில் இருந்த தர்மஸ்தாபன பொது அறக்கட்டளை (Public Trust of Charitable Nature)	5 தர ஏக்கர்
6.	1.3.1972 தேதிக்குப் பிறகு தோற்றுவிக்கப்பட்ட பொது அறக்கட்டளைகளுக்கான உச்சவரம்பு	இல்லை (ஆனால் திருத்தப்பட்ட சட்டம் 29/87- சட்டத்தின்படி ஒரு பொது அறக்கட்டளை கல்வி மற்றும் மருத்துவ பயன்பாட்டிற்கு நிலங்கள் வைத்துக்கொள்ள அரசால் அனுமதிக்கப்படுகிறது)

2023 ஏப்ரல் 12]

4.2.2 தொழில்/வணிக நிறுவனங்களுக்கு அனுமதி

- *தொழில் மற்றும் வணிக நிறுவனங்கள், 15 தர ஏக்கர் உச்சவரம்பிற்கு மிகையாக உள்ள நிலங்களை, தொழில் மற்றும் வணிக நோக்கங்களுக்காக வாங்குவதற்கு அல்லது வாங்கிய நிலங்களை வைத்துக்கொள்வதற்கு நிலச் சீர்திருத்தச் சட்டப் பிரிவு 37-A மற்றும் விதிகளின்படி அரசால் அனுமதி வழங்கப்படுகிறது.*

- *திருத்திய சட்டம் 24/2018-ன்படி, புஞ்சை நிலம் மட்டும் வைத்திருந்து ரூபாய் 20 கோடிக்கு மேல் முதலீடு செய்யும் தொழில் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு உச்சவரம்பு 30 தர ஏக்கராக உயர்த்தப்பட்டுள்ளது.*

- *தொழில் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு வேளாண் சார்ந்த தொழில், ஆட்டோமொபைல், சூரிய மின் சக்தி, காற்றாலை மற்றும் பல தொழில் புரியும் நிறுவனங்களுக்குத் தமிழ்நாடு நிலச் சீர்திருத்தச் சட்டப் பிரிவு 37-A-ன்கீழ் அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.*

- *தொழில் மற்றும் வணிக நிறுவனங்கள், திருத்தப்பட்ட விதிகள் அமலுக்கு வந்த நாளிலிருந்து 180 நாட்களுக்குள் அல்லது நிறுவனம் நிலத்தை வாங்கிய நாளிலிருந்து 180 நாட்களுக்குள் அரசுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.*

- *தற்போது 37-A-ன்கீழ் அனுமதி பெறும் நடைமுறை எளிமையாக்கப்பட்டு, நிறுவனங்கள் இணையவழிமூலம் விண்ணப்பிக்கும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் அனுமதி வழங்கும் நடைமுறையில் காலவிரயம் குறைக்கப்பட்டுள்ளது.*

4.2.3 பொது அறக்கட்டளைகளுக்கு அனுமதி

- *பொது அறக்கட்டளைகள், கல்வி அல்லது மருத்துவமனைப் பயன்பாட்டிற்காக நிலங்களை வாங்குவதற்கு அல்லது வாங்கிய நிலங்களை வைத்துக் கொள்வதற்கு நிலச் சீர்திருத்தச் சட்டப் பிரிவு 37-B மற்றும் விதிகளின்படி அரசால் அனுமதி வழங்கப்படுகிறது.*

- *இதற்கு, பொது அறக்கட்டளைகள், திருத்தப்பட்ட விதிகள் அமலுக்கு வந்த நாளிலிருந்து 180 நாட்களுக்குள்*

அல்லது நிறுவனம் நிலத்தை வாங்கிய நாளிலிருந்து 180 நாட்களுக்குள் அரசுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

- 37-B-ன்கீழ் அனுமதி பெறும் நடைமுறையை எளிமையாக்கும் நோக்கில் இணையவழிமூலம் விண்ணப்பிக்கும் முறை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

4.3 வருவாய் நீதிமன்றங்கள்

நில உடைமையாளர்கள் மற்றும் குத்தகைதாரர்களுக்கும் இடையே ஏற்படும் வழக்குகளைக் குத்தகைச் சட்டங்களின்கீழ் முடிவு செய்வதற்காக, தற்போது மாநிலத்தில் பத்து வருவாய் நீதிமன்றங்கள் கடலூர், மயிலாடுதுறை, திருவாரூர், தஞ்சாவூர், மன்னார்குடி, திருச்சிராப்பள்ளி, லால்குடி, நாகப்பட்டினம், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் நீதிமுறைச் சார்புடைய அதிகாரத்துடன் தனித் துணை ஆட்சியரின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றன.

4.3.1 குத்தகைச் சட்டங்கள்

இச்சட்டங்கள் பின்வரும் வருவாய் நீதிமன்றங்களால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:—

i. தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம், 1955 (தமிழ்நாடு சட்டம் 25/55)

நில உடைமையாளருக்குக் குத்தகைத் தொகை கொடுக்காமல் இருத்தல், குத்தகை நிலத்திற்கோ அல்லது அந்நிலத்தில் விளையும் பயிர்களுக்கோ பாதிப்பு ஏற்படும் வகையில் செயல்படுதல், வேளாண்மை அல்லது தோட்டப் பயிர் அல்லாத பிற காரணத்திற்கான நிலத்தினை உபயோகித்தல், நில உரிமையாளரின் உரிமையை மறுத்தல் தவிர, வேறு காரணங்களுக்காக குத்தகைதாரர்கள் குத்தகை சாகுபடி செய்யும் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவதிலிருந்து இச்சட்டம் பாதுகாப்பு அளிக்கின்றது. இது தொடர்பாக நில உடைமைதாரர் மற்றும் குத்தகைதாரர்களுக்கு இடையே ஏற்படும் வழக்குகளை வருவாய் நீதிமன்றங்கள் முடிவு செய்கின்றன.

ii. தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய குத்தகை செலுத்துதல்) சட்டம், 1956 (தமிழ்நாடு சட்டம் 24/56)

இச்சட்டம், மொத்த விளைச்சலில் 25 விழுக்காடு மட்டும் நில உரிமைதாரருக்குப் பயிரிடும் குத்தகைதாரர்களால் செலுத்ததப்பட வேண்டிய குத்தகைத் தொகையை நிர்ணயிக்க

2023 ஏப்ரல் 12]

வகை செய்கிறது. குத்தகைத் தொகையை பணமாகவோ அல்லது விளை பொருள்களாகவோ செலுத்தலாம். பயிரிடும் செலவுகள் அனைத்தையும் குத்தகைதாரர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும். அந்த நிலத்திற்கான அரசுக்குச் செலுத்த வேண்டிய அனைத்து நிலுவைகளுக்கும் நில உரிமையாளர்கள் பொறுப்பாவர்கள்.

iii. தமிழ்நாடு பொது அறக்கட்டளை (வேளாண்மை நிலங்கள் நிருவாகம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1961 (தமிழ்நாடு சட்டம் 57/61)

இச்சட்டம், பொது அறக்கட்டளைகள் வேளாண் நிலங்களைச் சொந்தமாக சாகுபடி செய்தல் அல்லது குத்தகைக்கு விடுதல் முதலியவற்றிற்கு வகை செய்கிறது. மேலும், பொது அறக்கட்டளைக்கும் அவற்றின் பயிரிடு குத்தகைதாரர்களுக்கும் இடையேயான உறவை ஒழுங்குபடுத்தவும் வகை செய்கிறது. பொது அறக்கட்டளைகள் தங்களுடைய சொந்த சாகுபடிக்கு அதிகபட்சமாக 20 தர ஏக்கர் நிலம் மட்டும் வைத்துக்கொள்ளலாம். மீதமுள்ள நிலத்தைப் பிறருக்கு குத்தகைக்கு விடவேண்டும். இதில் ஏற்படும் வழக்குகள் வருவாய் நீதிமன்றங்களால் தீர்வு செய்யப்படுகின்றன.

iv. தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் (குத்தகை உரிமை ஆவணம்) சட்டம், 1969 (தமிழ்நாடு சட்டம் 10/69)

இச்சட்டத்தின்கீழ், பயிரிடும் குத்தகைதாரர்கள் தங்களைக் குத்தகைதாரர்களாகப் பதிவு செய்துகொள்வதன்மூலம் அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன. இச்சட்டத்தின்கீழ் வட்டாட்சியர் குத்தகை உரிமையை பதிவு செய்யும் பதிவு அலுவலர் ஆவார்.

v. தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமை வழங்குதல்) சட்டம், 1971 மற்றும் திருத்திய சட்டம் 39/90

இச்சட்டத்தின்படி, குத்தகைதாரராகவோ அல்லது உரிமம் பெற்றவராகவோ குடியிருப்பு அமைத்து 1.4.1990 தேதியில் குடியிருந்து வரும் விவசாயி அல்லது விவசாயத் தொழிலாளருக்கு குடியிருப்பு உரிமை வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. சொந்த வீட்டுமனை இல்லாத கிராமப்புறக் கைவினைஞர்களும் இந்தக் குடியிருப்பு உரிமை பெற இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

[*2023 ஏப்ரல் 12*

4.3.2 வருவாய் நீதிமன்றங்களில் முடிவு செய்யப்பட்ட மற்றும் நிலுவையில் உள்ள வழக்குகளின் விவரம்

1.4.2022 முதல் 28.2.2023 வரை

1	*31.3.2022 அன்று நிலுவையில் இருந்த வழக்குகள்*	*3,054*
2	*1.4.2022 முதல் 28.2.2023 வரை வரப்பெற்ற வழக்குகள்*	*2,819*
3	*முடிவு செய்யப்பட்டவை*	*3,486*
4	*28.2.2023 அன்று நிலுவையில் உள்ள வழக்குகள்*	*2,387*

4.4 விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயித்தல்

மாநிலம் முழுவதும், (நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்கள் தவிர) விவசாயத் தொழிலாளர்களுக்குப் பல்வேறு விவசாயப் பணிகளுக்காகக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்ய குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்கீழ் வழிவகை செய்யப்பட்டுள்ளது. நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களைப் பொறுத்தவரை தமிழ்நாடு வேளாண்மைத் தொழிலாளர்கள் நியாய ஊதியங்கள் சட்டம், 1969-ன்படி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

4.5 பூமிதான வாரியம்

ஸ்ரீ ஆச்சார்ய வினோபாபாவே அவர்களால் தொடங்கப்பட்ட பூமிதான இயக்கத்தின்மூலம் மாநிலத்தில் 28,050 ஏக்கர் நிலங்கள் பூமிதான இயக்கத்திற்குத் தானமாக பெறப்பட்டன. அவ்வாறு தானமாகப் பெறப்பட்ட நிலங்கள் தமிழ்நாடு பூமிதான யக்ஞச் சட்டம், 1958-ன்படி வரன்முறை செய்யப்பட்டு நிலமற்ற ஏழைகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இந்த பூமிதான நிலங்கள் பூமிதான வாரியத்தால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. பூமிதான நிலங்களை முறைகேடான முறையில் விற்பனை செய்வதைத் தடுக்கும்பொருட்டு தமிழகத்தில்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 12]

உள்ள பூமிதான நிலங்களின் நிலமதிப்பு '0' மதிப்பீடாக மாற்றம் செய்யப்பட்டு வருகிறது.

பூமிதான நிலங்களைப் பூமிதான யக்ஞச் சட்டப் பிரிவு 19(1) மற்றும் 19(3)-ன்கீழ் வரையறுக்கப்பட்டுள்ள வழிமுறைகளின்படி மாவட்ட நிர்வாகத்தின்மூலம் கருத்துருக்கள் பெறப்பட்டு பூமிதான வாரிய தீர்மானத்தின் பேரில் நிலமற்ற ஏழைகளுக்கு விவசாயத்திற்காகவோ, வீட்டுமனைகளுக்காகவோ அல்லது பொது நோக்கத்திற்காகவோ வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நடப்பு நிதியாண்டில் 11.72 ஏக்கர் பூமிதான நிலங்கள் தகுதியின் அடிப்படையில் 224 பயனாளிகளுக்கு விவசாயம் மற்றும் வீட்டுமனைகளுக்காகவும் பூமிதான வாரியத்தின் ஒப்புதலின் பேரில் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. மேலும், பொது நோக்கங்களுக்காக 3 அரசு துறைகளின் பயன்பாட்டிற்காக 111.27 ஏக்கர் பூமிதான நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பூமிதான நிலங்களைத் தகுதியற்ற நபர்கள் ஆக்கிரமிப்பு செய்த நிலையில் அதனை அகற்றுவதற்கான துரித நடவடிக்கை அரசால் மேற்கொள்ளப்பட்டு 1.4.2022 முதல் 28.2.2023 வரை சுமார் 128.28 ஏக்கர் நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளன.

4.6 நீடித்த வளர்ச்சி இலக்கு 2030 - நிலச் சீர்திருத்தத் துறையின் பங்கு

நீடித்த வளர்ச்சிக்கான திட்டம் 2030-ன் நோக்கம் 17 இலக்குகள் உள்ளடக்கப்பட்டது. அதில் முக்கியமானது வறுமை ஒழிப்பையும், நலவாழ்வு மற்றும் கல்வியறிதலை மேம்படுத்துவதையும், சமமற்றத் தன்மையைக் களைவதையும், பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதையும் மட்டுமல்லாது காலநிலை மாற்றங்களை எதிர்கொள்வதையும், காடுகள் மற்றும் கடல்களைப் பாதுகாப்பதையும் முக்கியக் குறிக்கோளாகக் கொண்டது.

நீடித்த வளர்ச்சி இலக்கு 1	:	*அனைத்து இடங்களிலும் அனைத்து வகையிலான ஏழ்மையை ஒழித்தல்.*

நீடித்த வளர்ச்சி குறிக்கோள் 1.4	:	2030 ஆம் ஆண்டிற்குள், குறிப்பாக ஏழைகள் மற்றும் எளிதில் சுரண்டலுக்குள்ளாகும் மக்கள் உட்பட அனைத்து ஆண்களுக்கும், பெண்களுக்கும் பொருளாதார வளங்கள், அடிப்படை வசதிகளைப் பயன்படுத்துதல், நிலத்தின் மீதான உரிமை, பாரம்பரியம், இயற்கை வளங்கள், உரிய புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் சிறு மூதலீடுகளை உள்ளடக்கிய நிதியுதவிகள் வழங்குவதை உறுதிசெய்தல்.


நிலச் சீர்திருத்தத் துறை, துறை சார்ந்த திட்டங்களின் வாயிலாக ஏழை, எளிய மக்களுக்கு சமூகப் பாதுகாப்பினை வழங்குவதில் முக்கியப் பங்காற்றுகிறது. நில உச்சவரம்புச் சட்டத்தின் வாயிலாக நிலமற்ற கிராமப்புற ஏழை மக்களுக்கு நிலங்கள் வழங்கப்படுகின்றன. இத்தகைய நடவடிக்கைகள் வாயிலாக வேளாண் நில உரிமையின்பாலுள்ள வேறுபாடுகள் களையப்பட்டு ஏழை கிராம மக்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படுகிறது. மேலும், நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குப் பூமிதான நிலங்கள் வினியோகத்தின் வாயிலாக வேளாண் வளர்ச்சியையும், வறுமை ஒழிப்பையும் அடைய ஆவன செய்கிறது.

இதுவே, மேற்காணும் நீடித்த வளர்ச்சி இலக்கு 1 மற்றும் நீடித்த வளர்ச்சி குறிக்கோள் 1.4-ல் கூறப்பட்டுள்ள குறிக்கோளை அடைவதற்கான வழி வகையாகும். இந்த இலக்கு மற்றும் குறிக்கோளின் அடிப்படையில் இத்துறைமூலம் செயல்படுத்தப்படும் குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்கீழ் வேளாண்மைச் சார்ந்த பல்வேறு பணிகளில் ஈடுபடும் வேளாண்மைத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச கூலியை நிர்ணயிப்பதன் வாயிலாக, ஏழைத் தொழிலாளர்களைப் பாதுகாத்து, நியாயமான கூலியை வழங்க வழிவகை செய்யப்படுகிறது.

2023 ஏப்ரல் 12]

5. நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நில வரி

இத்துறை தமிழ்நாடு நகர்ப்புற நில வரிச் சட்டம் 1966/ திருத்தச் சட்டம் 1991 மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1978 ஆகிய இரு சட்டக் கூறுகள் தொடர்பான பொருளைக் கையாளும் பணிகளைச் செய்து வருகிறது. தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1978, 16.6.1999 முதல் நீக்கறவு செய்யப்பட்டுவிட்டது.



[2023 ஏப்ரல் 12

5.1 தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978

நகர்ப்புற கூட்டுப் பகுதிகளில் நகர்ப்புற நிலம் ஒரு சிலரிடம் குவிந்து கிடந்து, அவர்கள் இலாப நோக்கத்துடன் வாங்குவது மற்றும் விற்பதைத் தடுத்து நிறுத்தும் வகையில் நகர்ப்புற வெற்று நிலங்களுக்கான உச்சவரம்பு நிர்ணயிக்கும் நோக்குடன் (ஒன்றிய அரசு சட்டம் 24/1976-ன் அடிப்படையில்) தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978 இயற்றப்பட்டது. பிறகு 1978-ல் திருத்தியமைக்கப்பட்டு 3.8.1976 முதல் இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது .

இச்சட்டம் சென்னை, மதுரை, கோவை, திருச்சி, சேலம் மற்றும் திருநெல்வேலி நகர்ப்புற கூட்டுப் பகுதிகளுக்கும் நீட்டிக்கப்பட்டது.

1999 ஆம் ஆண்டு, முதன்மைச் சட்டம் 1978, தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) நீக்கறவுச் சட்டம் 1999 (தமிழ்நாடு சட்டம் 20/99)-ன் மூலமாக, 16.6.1999 முதல் நீக்கறவு செய்யப்பட்டது. முதன்மைச் சட்டத்தின்கீழ் ஏற்கெனவே கையகப்படுத்தப்பட்டு, 16.6.1999-க்கு முன்னர் அரசு வசம் சுவாதீனம் பெறப்பட்ட நிலங்களுக்கு இந்நீக்கறவுச் சட்டம் பொருந்தாது.

ஒதுக்கீட்டு கோரிக்கையின் பேரில் கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் அரசுத் துறை, அரசுக் கழகங்கள், பொதுத் துறை நிறுவனம், வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியம் மற்றும் இதர நிறுவனங்களுக்கு அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

5.2 அறியாக் கிரயம் பெற்றோர் திட்டம்

இதுபோன்ற நகர்ப்புற மிகை வெற்று நிலங்களை நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழான நடவடிக்கைகள் பற்றிய விவரம் அறியாது கிரையம் வாங்கியிருப்போரின் துயர்துடைப்பதற்காக 1998 ஆம் ஆண்டு இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு அளிக்க அரசு முடிவு செய்து அரசாணை எண் 649, வருவாய்த் துறை, நாள் 29.7.2008 வாயிலாக “அறியாக் கிரயம் பெற்றோர்” திட்டத்தை அறிமுகப்படுத்தியது. மேற்காணும் அரசாணைக்குப் பதிலாக திருத்திய விதிகள்/ நெறிமுறைகளுடன்கூடிய அரசாணை எண் 565, வருவாய்த் துறை, நாள் 26.9.2008 பிறப்பிக்கப்பட்டது.

இதுவரை 5321 இனங்களில், அறியாக் கிரயதாரர்களால் ரூ.41.97 கோடி நிலமதிப்புத் தொகை அரசு கணக்கில் செலுத்தியதின் பெயரில் 12.11 இலட்சம் சதுர மீட்டர் விஸ்தீரண நிலம் வரன்முறை செய்யப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 12]

5.3 தமிழ்நாடு நகர்ப்புற நில வரிச் சட்டம் 1966

அரசுக்கு வருவாயை அதிகப்படுத்தும் நோக்கத்துடனும், மக்கள் அதிக நிலங்களை வாங்கி வைத்திருப்பதைத் தவிர்க்கும்பொருட்டும் தமிழ்நாடு நகர்ப்புற நில வரிச் சட்டம் முதன்முதலில் 1.7.1963 முதல் சென்னை நகரில் அறிமுகம் செய்யப்பட்டது. இச்சட்டத்தின்கீழ் எல்லா நகர்ப்புற நிலங்களுக்கும் சந்தை மதிப்பில் 0.4 சதவிகிதம் நகர்ப்புற நில வரியாக விதிக்கப்பட்டது.

மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களுக்கு 1.7.1971 முதல் இச்சட்டம் விரிவுபடுத்தப்பட்டது. மேலும் இச்சட்டம் 1975-ல் திருத்தப்பட்டு, சென்னை நகர எல்லையிலிருந்து 16 கி.மீட்டருக்குட்பட்ட புறநகர்ப் பகுதிக்கு 1.7.1975 முதலும் பின்னர் திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதிக்கு 1.7.1981 முதலும் இச்சட்டம் நீட்டிக்கப்பட்டது.

1991 ஆம் ஆண்டு இச்சட்டம் கடைசியாகத் திருத்தம் செய்யப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற நில வரி திருத்தச் சட்டம் 1991-ன்படி மேலும், 21 நகராட்சிகளுக்கும், 2 நகரியங்களுக்கும் 1.7.1991 முதல் விரிவுபடுத்தப்பட்டது. இச்சட்டத்தின்கீழ் அறிவிக்கை செய்யப்பட்ட அனைத்து நகர்ப்புறப் பகுதிகளிலும் 1.7.1981 நாளைய சந்தை மதிப்பை அடிப்படையாகக் கொண்டு 1.7.1991 முதல் வரி விதிப்பு செய்யப்படுகிறது.

வரிவிதிப்பு வீதங்கள்

சென்னை புறநகர்ப்பகுதி தவிர்த்த ஏனைய நகர்ப்புற நிலங்கள்			சென்னை புறநகர்ப் பகுதியில் உள்ள நிலங்கள்		
1.	முதல் இரண்டு மனைகள்	வரி இல்லை	1.	முதல் மூன்று மனைகள்	வரி இல்லை
2.	இரண்டு மனைக்கு மேல் ஐந்து மனைக்குள்	சந்தை மதிப்பில் 0.7 சதவிகிதம்	2.	மூன்று மனைக்கு மேல் ஏழு மனைக்குள்	சந்தை மதிப்பில் 0.7 சதவிகிதம்
3	ஐந்து மனைக்கு மேல் பத்து மனைக்குள்	சந்தை மதிப்பில் 1 சதவிகிதம்	3.	ஏழு மனைக்கு மேல் பத்து மனைக்குள்	சந்தை மதிப்பில் 1 சதவிகிதம்

[2023 ஏப்ரல் 12

4.	பத்து மனைக்கு மேல் இருபது மனைக்குள்	சந்தை மதிப்பில் 1.5 சதவிகிதம்	4.	பத்து மனைக்கு மேல் இருபது மனைக்குள்	சந்தை மதிப்பில் 1.5 சதவிகிதம்
5.	இருபது மனைக்கு மேல்	சந்தை மதிப்பில் 2 சதவிகிதம்	5.	இருபது மனைக்கு மேல்	சந்தை மதிப்பில் 2 சதவிகிதம்

இந்த சட்டத்தின் பிரிவு 29-ன்கீழ் ஒன்றிய மாநில அரசு நிலங்கள், மாநில அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனை நிலங்கள், மயான பூமி நிலங்கள், சாலைகளாகப் பயன்படும் நிலங்கள், பொது பூங்காக்கள் ஆகியன சட்ட முறையாக விலக்கு பெறுகின்றன. மேலும், பொது வழிபாட்டிற்கு மட்டுமே பயன்படுத்தப்படும் நிலங்கள், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் அறிவிக்கை செய்யப்பட்ட நிலங்கள் மற்றும் தமிழக அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளி, கல்லூரி மற்றும் பல்கலைக்கழக நிலங்கள் ஆகியவையும் சட்ட முறையாக விலக்கு பெறுகின்றன.

கல்வி அறக்கட்டளைகள், ஆன்மீக நிறுவனங்கள் மற்றும் இன்ன பிற தொண்டு நிறுவனங்கள் தங்கள் நிலங்களுக்கு நகர்ப்புற நில வரி செலுத்துவதில் 'இடர்ப்பாடு இருப்பின்,' அரசுக்கு மனு செய்து கொண்டால், பிரிவு 27(1)-இன்கீழ் தகுதி அடிப்படையில் வரி விலக்களிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும்,

i. சொந்த குடியிருப்பு வீடுகள் உள்ள நிலங்களுக்கும், இசை அரங்குகள், பொழுதுபோக்கு கூடங்கள் மற்றும் திரைப்படப் பிடிப்பு அரங்குகள் ஆகியவற்றுக்கு 50% வரிச் சலுகையும்;

ii. திரை அரங்குகளுக்கு 10% வரிச்சலுகையும்

iii. தொழில் மற்றும் வணிகத் துறை அளிக்கும் சான்றின் பேரில் சிறு தொழில் நிறுவனங்களுக்கு 25%, பிற நிறுவனங்களுக்கு 10% என வரிச் சலுகை அளிக்கப்பட்டுள்ளது.

நகர்ப்புற நில வரி உதவி ஆணையர்களால் நிர்ணயிக்கப்படும் சந்தை மதிப்பை எதிர்த்து தாக்கல் செய்யப்படும் மேல்முறையீட்டு

2023 ஏப்ரல் 12]

மனுக்களை விரைவாகத் தீர்வு செய்யும்பொருட்டு அந்தந்த மாவட்ட வருவாய் அலுவலர்களையே நகர்ப்புற நில வரி தீர்ப்பாயமாக அரசு நியமித்துள்ளது.

5.4 நகர்ப்புற நிலவரி வசூல் பணி

இதுவரை 1.90 இலட்சம் வரி விதிப்புதாரர்கள் பெயரில் வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளன. நடப்புப் பசலி ஆண்டான 1432-ல் நகர்ப்புற நிலவரி நடப்புக் கேட்புத் தொகையாக ரூ.18.36 கோடி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

i. *சென்னை நகரில், 10 தனி வட்டாட்சியர்கள் மற்றும் கோவையில் 1 தனி வட்டாட்சியராலும் வரி வசூல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வரி வசூல் பணி குறித்த முன்னேற்றம் ஆணையரால் (ந.பு.நி.உ. (ம) ந.பு.நி.வ) கால முறையாக ஆய்வு செய்யப்படுகிறது.*

ii. *பிற மாவட்டங்களில் நகர்ப்புற நில வரி வசூல், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களின் கண்காணிப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட வருவாய் வட்டாட்சியர்கள் நகர்ப்புற நில வரி அதிகாரிகளாகச் செயல்பட்டு வரி வசூல் பணியை மேற்கொண்டு வருகின்றனர்.*

5.5 நிலச் சீர்திருத்த ஆணையரின் சீராய்வு மற்றும் விலக்களிப்பு அதிகாரம்

இச்சட்டப் பிரிவு 30-ன்கீழ் நிலச் சீர்திருத்த ஆணையருக்கு வரி விதிப்புதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டும் சீராய்வு மனுக்களை விசாரணை செய்து ஆணை பிறப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண் 1672, வருவாய்த் துறை, நாள் 19.12.1985–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கையின்படி இந்து சமய அறநிலையத் துறை, வக்ஃபு வாரியம், ஆர்ச் டயசிஸ் மற்றும் தென்னிந்திய திருச்சபை ஆகியவற்றின் கட்டுப்பாட்டில் உள்ள ஆன்மிக அறக்கட்டளை மற்றும் தொண்டு நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களுக்கும் ஒன்றிய, மாநில அரசால், பல்கலைக்கழகத்தால் அங்கீகாரம் பெற்ற கல்வி நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களுக்கும் சட்டப் பிரிவு 27(1)-ன்கீழ் வரிவிலக்களிக்க நிலச் சீர்திருத்த ஆணையருக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

[2023 ஏப்ரல் 12

6. நில அளவை மற்றும் நில வரித் திட்டம்

நில அளவை மற்றும் நில வரித் திட்டத் துறை இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது (i) நில அளவீடு மற்றும் நிலப் பதிவேடுகளைப் பராமரித்தல் (ii) நில வரித் திட்டம் – பல்வேறு சட்டங்களின்கீழ் நிலப் பதிவேடுகளைத் தயாரித்தல்.

இத்துறை 1858 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு மாநிலம் முழுவதும் உள்ள அனைத்துப் புலங்களுக்குமான நில ஆவணங்களை சங்கிலி, நேர்கோணக்கட்டை மற்றும் தியோடலைட் ஆகிய கருவிகளைக் கொண்டு பல்வேறு முறைகளைக் கடைபிடித்து உருவாக்கியுள்ளது. கடந்த சில ஆண்டுகளாகத் தினந்தோறும் ஏற்படும் நில உரிமை மாற்றங்களுக்கேற்ப நில ஆவணங்களில் மாற்றங்கள் செய்து பராமரிப்பது மட்டுமல்லாமல், இத்துறை கையினால் தயாரிக்கப்பட்ட நில ஆவணங்கள், புலப்படங்கள், வரைபடங்கள் ஆகியவற்றைக் கணினிப்படுத்தி, பொதுமக்கள் எளிதாக உபயோகிக்கும் வகையில் இணையவழி சேவைக்குக் கொண்டு வந்துள்ளது. நடப்பாண்டில் (2023–24), விடுபட்ட நில ஆவணங்கள் மற்றும் வரைபடங்களைக் கணினிப்படுத்தி இணையவழி சேவைக்குக் கொண்டு வரவும் மற்றும் நவீன நில அளவைக் கருவிகளான வகையீட்டுப் பூகோள நிலைக்கலன் கருவி (DGPS) மற்றும் மின்னணு நில அளவைக் கருவி (ETS) ஆகியவற்றைப் பயன்படுத்தி படிப்படியாக மாநிலம் முழுவதும் நில அளவை மேற்கொள்ளவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

6.1 சேவை விநியோகம்

i. இணையவழி பட்டா மாறுதல்

கிராம மற்றும் நகர்ப்புற நில ஆவணங்கள் கணினிப்படுத்தப்பட்டு, தமிழ் நிலம் எனும் இணையம் சார்ந்த மென்பொருள் மூலமாக, இணையவழிப் பட்டா மாறுதல் திட்டம் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், 28.2.2023 வரையில் 37.88 இலட்சம் உட்பிரிவுடன்கூடிய பட்டா மாறுதல்கள் (கிராம மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில்) செய்யப்பட்டுள்ளன. 2021 ஆம் ஆண்டில் 12,36,555 பட்டா மாறுதல் மனுக்கள் தீர்வு செய்யப்பட்ட நிலையில், 2022 ஆம் ஆண்டில் 53% கூடுதலாக

2023 ஏப்ரல் 12]

18,90,983 மனுக்கள் தீர்வு செய்யப்பட்டுள்ளன. தள்ளுபடி விகிதம் முந்தைய ஆண்டுகளிலிருந்த 50 சதவிகிதத்திலிருந்து 35 சதவிகிதத்திற்கும் குறைவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

ii. ஆதி திராவிடர் நலத் துறை/பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின்கீழ் ஒதுக்கப்பட்ட மனைகள்

ஆதி திராவிடர் நலத் துறை/பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின்கீழ் ஒதுக்கப்பட்ட 981 மனைகள் நில அளவை மற்றும் நில வரித் திட்டத் துறையினால் அளவை செய்யப்பட்டு 1,45,645 உட்பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன.

பழமையான ஆவணங்களை ஒளிபிம்ப நகலெடுத்து பராமரிக்கும் பணி சென்னையில் உள்ள ஆவணக் காப்பகம் மற்றும் நில அளவை மற்றும் நில வரித் திட்ட ஆணையரகத்தில் நடைபெற்று வருகிறது. 24.5.2022 முதல் 2.3.2023 வரையில் 4,95,775 தாட்கள் ஒளிபிம்ப நகலெடுத்து பாதுகாக்கப்பட்டுள்ளன.

6.2 நவீன அளவை/மறு அளவை

i. *வகையீட்டு பூகோள நிலைக்கலன் கருவி மற்றும் மின்னணு நில அளவைக் கருவி ஆகிய நவீன நில அளவைக் கருவிகளைப் பயன்படுத்தி கிருஷ்ணகிரி, நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் மறு நில அளவைப் பணி நடைபெற்று வருகிறது. மொத்தப் பரப்பளவான 8,185 ச.கி.மீ-ல், இது வரையில் 920.89 ச.கி.மீ பரப்பளவிற்கு மறு நில அளவைப் பணி முடிவு பெற்றுள்ளது. இதில், 7.5.2021 முதல் 2.3.2023 வரையான காலத்தில் மட்டும் 710.50 ச.கி.மீ. பரப்பளவிற்கு மறு நில அளவைப் பணி முடிவு பெற்றுள்ளது.*

ii. *வகையீட்டு பூகோள நிலைக்கலன் கருவியைப் பயன்படுத்தி நீர்நிலைகளை நில அளவை செய்யும் பணி அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்று வருகிறது, இது வரையில் 7,016 நீர்நிலைகளின் எல்லைகள் அளவை செய்யப்பட்டு, அவற்றில் 1,747 நீர்நிலைகளின் வரைபடங்கள் அரசுத் துறைகள் மற்றும் பொதுமக்கள்*

பதிவிறக்கம் செய்துகொள்ளும் பொருட்டு https://tngis.tn.gov.in/waterbodies/ எனும் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

iii. வகையீட்டு பூகோள நிலைக்கலன் கருவி மற்றும் மின்னணு நில அளவைக் கருவிகளைப் பயன்படுத்தி, வேலூர் நகரில் நவீன நகரளவைப் பணி நடைபெற்று வருகிறது. மொத்த பரப்பளவான 87.90 ச.கி.மீ.-ல் இதுவரையில் 70.3 ச.கி.மீ. அளவிற்கு நில அளவைப் பணி நிறைவு பெற்றுள்ளது. 7.5.2021 முதல் 2.3.2023 வரையில் 23.21 ச.கி.மீ. பரப்பளவிற்கு நில அளவைப் பணி செய்யப்பட்டுள்ளது.

6.3 நிருவாகச் சீர்திருத்தங்கள்

i. இ-அலுவலக நடைமுறை மற்றும் கோப்புகளின் எண்ணிக்கை குறைப்பு

கோப்புகளின் எண்ணிக்கைக் குறைப்பு: இ-அலுவலகச் செயலாக்கத்திற்குப் பின் இவ்வாணையரகத்தில் மொத்த கோப்புகளின் எண்ணிக்கை 5,348-லிருந்து 2,567 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

ii. இணையவழியில் மனுக்களைப் பெற்று நடவடிக்கை எடுத்தல்

பொதுமக்களிடமிருந்து குறை தீர்ப்பு மனுக்களை அரசின் https://gdp.tn.gov.in எனும் இணையதளம் வழியாகப் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளும் நடைமுறை இத்துறையில் அறிமுகம் செய்யப்பட்டு, இதுவரை 1,651 மனுக்கள் தீர்வு செய்யப்பட்டுள்ளன.

6.4 பயிற்சி

i. 7.5.2021 முதல் 28.2.2023 வரையில் 730 வருவாய்த் துறை அலுவலர்களுக்கு, உதவி இயக்குநர்களால் 26 சிறப்பு மையங்களில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

ii. இதுதவிர, கட்டுமானப் பொறியியல் பட்டயதாரர்களுக்கு, நில அளவை செய்வதற்கான உரிமம் வழங்குவதற்கான, மூன்று மாதக் கால நில அளவைப் பயிற்சி இரண்டு பயிற்சி நிலையங்களிலும், இதுவரையில் 863 பேருக்கு அளிக்கப்பட்டுள்ளது. இவர்களில் 350 உரிமம் பெற்ற நில அளவர்கள் இணையவழி பட்டா மாறுதல் பணியில்

2023 ஏப்ரல் 12]

ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் மற்றும் 210 பேர் பல்வேறு அரசுத் துறைகளில் பலதரப்பட்ட நில அளவைப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

6.5 நில ஆவணங்களில் பிழைகளைக் களைவதற்கான சிறப்பு செயலாக்க நடவடிக்கைகள்

i. *அனைத்து கிராமங்களிலும், நில ஆவணங்களில் உள்ள பிழைகளைக் களையக் கோரி, நில உரிமையாளர்கள் அளிக்கும் விண்ணப்பங்களைத் தீர்வு செய்வதற்கான சிறப்பு முகாம்கள், ஒவ்வொரு செவ்வாய் மற்றும் வெள்ளிக் கிழமைகளிலும் நடத்தப் பெற்று 46,387 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, நில உரிமையாளர்களின் குறைகள் களையப்பட்டுள்ளன.*

ii. *நகர்ப்புற நில ஆவணங்களைப் பொறுத்தவரையில், கணினிப்படுத்தப்பட்ட நில ஆவணத் தரவுகள் நில ஆவணங்களுடன் ஒப்பிடப்பட்டு, பிழைகள் கண்டறியப்பட்டு, நீக்கம் செய்யப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 33.12 இலட்சம் நகரப் புல எண்களில், 32.61 இலட்சம் நகரப் புல எண்கள் ஒப்பிடல் செய்யப்பட்டு, இதுவரையில் 7.04 இலட்சம் பிழைகள் கண்டறியப்பட்டு அவற்றில் 6.92 இலட்சம் பிழைகள் நீக்கப்பட்டுள்ளன.*

6.6 நில வரித் திட்டம்

வரலாற்று ரீதியாக நிலத்தின் விளைச்சலில் ஒரு பங்கு பொருளாக வசூலிக்கப்பட்டு வந்த நிலையில், அவ்வாறு வசூலிப்பது அரசாங்கத்திற்குச் சிரமமாக இருந்ததால், மாற்றியமைக்கப்பட்ட பணமதிப்பு மதிப்பிடப்பட்டு, மதிப்பீடு மற்றும் உரிமையை நிர்ணயிக்கும் செயல்முறை வருவாய் நில வரித் திட்டம் எனப்படுகிறது.

ஆரம்பத்தில், மண் வகைபாடு செய்யப்படாமல் பாசன ஆதாரங்களைக் கணக்கில் கொள்ளாமல் நிலவரி வசூலிக்கப்பட்டு வந்தது. இந்த முறை 'நிலையான நில வரித் திட்டம்' என அழைக்கப்பட்டது. இந்த முறையை இரத்து செய்து நீர் ஆதாரத்தினை அடிப்படையாகக் கொண்ட மண் விளைச்சல் மற்றும் மண் வகைபாடு ஆகியவற்றின் அடிப்படையில் நில வரி நிர்ணயம் செய்யும் முறையான 'இரயத்துவாரி நில வரித் திட்டம்'

1879-80 ஆம் ஆண்டிலிருந்து அசல் நில வரித் திட்டம் (Original Settlement) என அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறையில், நில வரி நிர்ணயிப்பதற்காக முதன் முதலாக அரசினால் நில அளவை செய்யப்பட்டு, புலவாரியாக வகைப்பாடுகள், மண் வயனம், பாசன ஆதார வகுப்புகள் நிர்ணயிக்கப்பட்டு தரம், தீர்வை நிர்ணயிக்கப்பட்டது. மேலும், புலங்களின் உரிமை தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு பட்டா பதிவுகள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன. இம்முறை முப்பதாண்டுகள் வரை நீடிக்கத்தக்கது.

எனவே, மறு நில வரித் திட்டம் 30 ஆண்டுகளுக்கு பிறகு அசல் நில வரித் திட்டம் கிராமங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது. அரசால் தீர்வை வசூலிக்கப்படும் கிராமங்கள் மற்றும் நில உடைமைதாரர்களான ஜமீன்தாரர்கள் மற்றும் இனாம்தாரர்களால் தீர்வை வசூலிக்கப்படும் கிராமங்கள் எனத் தீர்வை வசூலிக்கப்படும் முறையைப் பொறுத்து கிராமங்கள் இரு வகைகளாகப் பிரிக்கப்பட்டன. எனவே, அசல் நில வரித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட கிராமங்களில், மறு நில வரித் திட்டம் (Re-Settlement) அறிமுகப்படுத்தப்பட்டது.

ஜமீன்தாரர்கள்/இனாம்தாரர்கள் ஆகியோரிடமிருந்து நில உடமைகளில் அசல் நில வரித் திட்டம் மற்றும் மறு நில வரித் திட்டம் அறிமுகப்படுத்தப்படாமல், அவ்வுடமைகளில் நிலையான நில வரித் திட்டம் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. சுதந்திரத்தின்போது ஜமீன் எஸ்டேட், இனாம் மற்றும் மைனர் இனாம் போன்ற சில பகுதிகளைத் தவிர அந்நாளைய மெட்ராஸ் மாகாணத்தின் பெரும்பாலான பகுதிகளில் இரயத்துவாரி நில வரித் திட்ட முறை நடைமுறைப்படுத்தப்பட்டது.

6.6.1 பல்வேறு ஒழிப்புச் சட்டங்களின்கீழ் ரயத்துவாரி நில வரித் திட்டம்

சுதந்திரத்திற்குப் பிறகு ஜமீன்/இனாம் மற்றும் இதுபோன்ற பகுதிகளிலிருந்த, சாகுபடி மீதான மதிப்பீட்டு வரியைக் குறைப்பதற்காகவும் அத்தகைய நில உடமையாளர்கள் என்ற பிரிவினை நீக்கி அக்கிராமங்களை அரசின் நேரடி கட்டுப்பாட்டில் கொண்டு வர பல்வேறு நில உடமையாளர்கள் ஒழிப்பு சட்டங்கள் இயற்றப்பட்டன.

i. *தமிழ்நாடு எஸ்டேட்ஸ் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1948, (தமிழ்நாடு சட்டம் 26/1948)-ன்படி அனைத்து எஸ்டேட்டுகளிலும் அரசால் ரயத்துவாரி நில வரித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, பட்டாக்கள் வழங்கப்பட்டன. எனினும், வகைபாடு மாற்றம் மற்றும் பட்டா வழங்கப்பட்டது தொடர்பாக சில நீதிமன்ற வழக்குகள் நிலுவையில் உள்ளன.*

ii. *1802 ஆம் ஆண்டுக்கு முன்பு வரை படைவீரர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும், மத ஸ்தாபனங்களுக்கும், தர்ம ஸ்தாபனங்களுக்கும், ஊழியர்களுக்கும், துறவிகளுக்கும் மற்றும் அறிஞர்களுக்கும் நில வருவாய் இல்லாமலோ அல்லது குறைந்த அளவில் நில வரி நிர்ணயித்தோ, இனாமுக்கான உரிமை பத்திரங்கள் வழங்கப்பட்டவர்களுக்கு இனாம் எஸ்டேட்டுகளில் ரயத்துவாரி நில வரித் திட்டம் அறிமுகப்படுத்தும்பொருட்டு தமிழ்நாடு இனாம் எஸ்டேட்ஸ் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1963 (தமிழ்நாடு சட்டம் 26/1963) இயற்றப்பட்டு, 4 கிராமங்களைத் தவிர அனைத்துக் கிராமங்களிலும் பட்டா வழங்கப்பட்டது.*

iii. *ஓர் இனாமுக்கான உரிமை பட்டயத்தில் கிராமத்தின் ஒரு பகுதியைப் பிராந்திய நில அளவுகளான காணி, ஏக்கர், செண்ட் போன்ற நில அளவுகளிலோ அல்லது மத/தர்ம நிறுவனங்களுக்கு முழு கிராமங்களாகவோ அளிக்கப்பட்ட இனாம் கிராமங்களில், இனாம்தாரர்களின் உரிமையை நீக்கவும் அவற்றில் இரயத்துவாரி நில வரித் திட்டத்தினை அறிமுகப்படுத்தவும் தமிழ்நாடு சிறு இனாம்கள் (ஒழிப்பும் மற்றும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1963 (தமிழ்நாடு சட்டம் 30/1963) இயற்றப்பட்டு 8 கிராமங்கள் தவிர்த்து ஏனைய அனைத்து கிராமங்களிலும் பட்டா வழங்கப்பட்டது. அவற்றில் 1 கிராமத்தில் நீதிமன்ற வழக்கு உள்ளது. மேற்படி இரு சட்டங்களின்படி கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள அரசாணைகளின்படி, நில வரித் திட்டப் பணி நடைபெற்று வருகிறது.*

வ. எண்	கிராமத்தின் பெயர்	அரசாணைகளின் விவரம்	பொருந்தும் சட்டம்
1.	*அரையபுரம் தட்டிமால் படுகை, பாபநாசம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்*	*அரசாணை (நிலை) எண் 265, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 14.6.2022*	*தமிழ்நாடு இனாம் எஸ்டேட்ஸ் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1963 (தமிழ்நாடு சட்டம் 26/1963)*
2.	*சென்னசந்திரம், ஒசூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்*	*அரசாணை (நிலை) எண் 317, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 14.7.2022*	
3.	*உளியாளம், ஒசூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்*		
4.	*திம்மசந்திரம், ஒசூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்*		
5.	*சூரியநாராயணபுரம், பட்டுக்கோட்டை வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்*	*அரசாணை (நிலை) எண் 265, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 14.6.2022*	*தமிழ்நாடு சிறு கனிமங்கள் (ஒழிப்பும் மற்றும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1963 (தமிழ்நாடு சட்டம் 30/1963)*
6.	*மாரசந்திரம், ஒசூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்*	*அரசாணை (நிலை) எண் 317, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 14.7.2022*	
7.	*இளையசந்திரம், ஒசூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்*		
8.	*பைரசந்திரம், ஒசூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்*		

2023 ஏப்ரல் 12]

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டம், காரணப்பட்டி கிராமத்தில் நில வரித் திட்டப் பணி முடியும் தருவாயிலும் மற்றும் புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டம், நிலையப்பட்டி கிராமத்திலும், புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், கழனிவாய்ப்பட்டி கிராமத்திலும் நில வரித் திட்டப் பணி துவங்கப்பட்டுள்ளது.

அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் மற்றும் பந்தலூர் வட்டங்களில் ஜென்மம் எஸ்டேட்களில் ஜென்மிகளுக்கு இருந்த உரிமையை நீக்கவும் இரயத்துவாரி நில வரித் திட்ட முறையை அறிமுகப்படுத்தவும் தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் எஸ்டேட்கள் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1969 (தமிழ்நாடு சட்டம் 24/1969) இயற்றப்பட்டது. சென்னை உயர் நீதிமன்றத்திலும் அதன் பின் உச்ச நீதிமன்றத்திலும் சில குத்தகைதாரர்கள் மற்றும் ஜென்மிகளால் இச்சட்டத்தை முழுமையாக இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 9-வது அட்டவணையில் சேர்க்கப்பட்டதை எதிர்த்து பல வழக்குகள் தொடரப்பட்டிருந்தன. கடைசியாக இச்சட்டத்தினை இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 9-வது அட்டவணையில் முழுமையாகச் சேர்க்கப்பட்டதை ஏற்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதால், நில வரித் திட்டப் பணிகளை முடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஜென்மம் நிலங்களில் நில வரித் திட்டப் பணி முடிக்கப்பட்ட விவரம் பின்வருமாறு:-

வ. எண்	விவரங்கள்	விஸ்தீரணம் (ஏக்கரில்)
1.	மொத்த ஜென்மம் நிலங்கள்	80,087.74
2.	நில வரித் திட்டம் முடிக்கப்பட்ட மொத்த பரப்பு	45,101.46
3.	நில வரித் திட்டம் முடிக்கப்பட்ட பரப்பில் வனத் துறைக்கு ஒப்படைக்கப்பட்ட பரப்பு	17,014.43
4.	நில வரித் திட்டப் பணி முடிக்கப்பட வேண்டிய பரப்பு [(1)-(2)]	34,986.28

ஆ) இதற்கிடையில் மேற்படி சட்டம் பிரிவு 8, 9, 10-களின்கீழ் பெறப்பட்ட மனுக்களை முடிவு செய்யுமாறு நில வரித் திட்ட அலுவலர்/மாவட்ட வருவாய் அலுவலரை உயர் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. அதன்படி பெரும்பாலான மனுக்கள் நில வரித் திட்ட அலுவலரால் முடிவு செய்யப்பட்டுவிட்டன. முடிவு செய்யப்பட்ட இனங்களில் நில வரித் திட்ட அலுவலரின் உத்தரவுகளுக்கு எதிராக ஜென்மம் ஒழிப்பு தீர்ப்பாயம்/ உதகை மாவட்ட நீதிமன்றத்தில் பல மேல்முறையீடு வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. கூடலூர் ஜென்மம் நிலங்களில் நில வரித் திட்ட அலுவலர் நிலப் பிரச்சினை முடிவு செய்யப்பட்ட இனங்களில் குத்தகைக் காலம் முடிவுற்ற நிலங்களை மீட்க உத்தரவிட்டுள்ளார்.

கூடலூர் ஜென்மம் நிலங்களில் நில வரித் திட்டப் பணிகள் நிலுவையிலுள்ள 34,986.28 ஏக்கர் பரப்பில் குத்தகைக் காலம் முடிவுற்ற நிலங்களைத் திரும்ப எடுத்தல் மற்றும் அப்புலங்களில் நில வரித் திட்டம் அறிமுகப்படுத்துதல் தொடர்பாக அரசாணை (D) எண் 73, சுற்றுச்சூழல் மற்றும் வனம் (F.R.14) துறை, நாள் 19.3.2018-ல் 3 நபர்கள் அடங்கிய குழு ஒன்றினை அரசு அமைத்துள்ளது. இக்குழுவின் பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

இ) தீர்வு செய்யப்படாத கிராமங்களில் வருவாய் நில வரித் திட்டப் பணி

i. *அரசாணை (நிலை) எண் 199, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் [நி.அ.-2(2)] துறை நாள் 6.5.2022-ன்படி 1500 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் அசல் நில வரித் திட்ட பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள நாரைக்கிணறு கிராமத்திலுள்ள 5 சிறிய பகுதி (bit) நிலங்கள் 1000.46.0 ஹெக்டேர் பரப்பளவு உள்ளடக்கியது. இதில், 583.05.50 ஹெக்டேர் விவசாய நிலமும், 417.40.50 ஹெக்டேர் நிலம் விவசாயமற்ற நிலத்தினையும் மற்றும் புறம்போக்கு நிலத்தினையும் உள்ளடக்கியுள்ளது.*

ii. *கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டம், விஜயமாநகரம் மற்றும் புதுக்கூரைப்பேட்டை கிராமங்களில் 1240.88 ஹெக்டேர் பரப்புடைய நிலத்திற்கும் மற்றும் 320.58 ஹெக்டேர் நிலத்திற்கும் நெய்வேலி நிலக்கரி சுரங்கத்திற்கு (NLC) நில எடுப்பிற்கு வழங்கப்பட்ட 15 கிராமங்களிலுள்ள*

2023 ஏப்ரல் 12]

3000 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் அரசாணை (நிலை) எண் 239, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் [நி.அ.-2(1)] துறை நாள் 26.5.2022-ன்படி நில வரித் திட்டப் பணி நடைபெற்று வருகிறது.

6.6.2 மற்ற திட்டங்கள்

i. நத்தம் நில வரித் திட்டம்

அசல் நில வரித் திட்டம் மற்றும் மறு நில வரித் திட்டப் பணிகளின்போது கிராமங்களிலுள்ள குடியிருப்புப் பகுதி 'நத்தம்' என வகைபாடு செய்யப்பட்டிருந்தது. நத்தம் புலங்களில் வீட்டு மனைகள் உட்பிரிவு செய்யப்படாமல் மனைப் பட்டா வழங்கப்படாமல் இருந்து வந்தது. எனவே, மாநிலத்திலுள்ள அனைத்து கிராமங்களிலும் இருந்த நத்தம் புலங்களிலுள்ள வீட்டு மனைகளிலும், விவசாயமில்லாத பிற பயன்பாட்டில் இருந்து வந்த விவசாய நிலங்களிலும், நத்தம் நில வரித் திட்டப் பணி மேற்கொள்ளப்பட்டு, பட்டா வழங்கப்பட்டது. இத்திட்டத்தின்படி, மாநிலத்திலுள்ள அனைத்து கிராமப் பகுதிகளிலும் நத்தம் நில வரித் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு, மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

ii. மலைக் கிராமங்களில் நில வரித் திட்டப் பணி

நத்தம் நில வரித் திட்டப் பணியோ அல்லது நில உடமை மேம்பாட்டு பணியோ மேற்கொள்ளப்படாத மலைக் கிராமங்களில், மறு நில அளவைப் பணிகள் முடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, நில வரித் திட்டப் பணி முடிக்கப்பட்டு, பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இப்பணி வழக்கு நடைபெறும் 1 கிராமத்தைத் தவிர மற்ற 3 (மூன்று) கிராமங்களில் மட்டும் தற்போது நடைபெற்று வருகிறது.

iii. மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் வருவாய் பின்தொடர் பணி

மாநிலத்திலுள்ள அனைத்து நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளிலும் (பழைய சென்னை நகரம் நீங்கலாக) வருவாய்ப் பதிவேடுகளிலுள்ள பதிவுகளை இன்றைய நிலையில் மேம்படுத்தவும், நில உரிமையாளர்களுக்குப் பட்டா வழங்கவும் மாவட்ட வருவாய் நிர்வாகப் பராமரிப்பிற்கென நில

ஆவணங்களைத் தயாரித்து அளிக்கவும் நகர நில வரித் திட்டப் பணி தொடங்கப்பட்டது.

இதன்படி, மாநிலத்திலுள்ள அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் நகர நில வரித் திட்டப் பணி அரசாணை (டி) எண் 103, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 1.3.2007-ன்படி மேற்கொள்ளப்படவேண்டும். இவற்றுள் 3 மாநகராட்சிகள், 52 நகராட்சிகளில் முழுவதுமாக இப்பணி முடிக்கப்பட்டு, பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது நகர நில வரித் திட்டப் பணி 13 மாநகராட்சிகளிலும் (21 அலகுகள்), 28 நகராட்சிகளிலும் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள நகராட்சிகள்/மாநகராட்சிகளைப் பொறுத்தவரையில், தற்போது பணி நடைபெற்று வரும் அலகுகளின் பணிகள் முடிக்கப்பட்டவுடன், அவ்வலகின் பணியிடங்கள் பணி தொடங்க வேண்டிய புதிய நகரத்தில் மறு அமர்வு செய்யப்பட்டு, இப்பணி மேற்கொள்ளப்படும். இதுவரையிலும் 17,30,249 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

6.6.3 வக்ஃபு சொத்து கணக்கெடுப்புப் பணி

வக்ஃபு சட்டம் 1995 பிரிவு 4-ன்படி, மாநிலம் முழுவதும் வக்ஃபு சொத்து கணக்கெடுப்பு பணி தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. வக்ஃபு சொத்து கணக்கெடுப்பு ஆணையாளராக நில அளவை மற்றும் நில வரித் திட்ட இயக்குநரும் அவரது கட்டுப்பாட்டில், வக்ஃபு கூடுதல் ஆணையர்களாக மாவட்ட வருவாய் அலுவலர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இப்பணி இதுவரை 32 மாவட்டங்களில் முடிக்கப்பட்டு, மீதமுள்ள மாவட்டங்களில் நடைபெற்று வருகிறது.

7. தகவல் தொழில்நுட்ப முன்னெடுப்புகள்

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையானது அனைத்துத் துறைகளின் தாய்த் துறையாக பழங்காலம் தொட்டு திகழ்கிறது. மாவட்ட நிருவாகத்தின்மூலம், அனைத்துப் பிரிவினருக்கும் அத்தியாவசியச் சேவைகளை வழங்கி வருகிறது.

இத்துறை, பல்வேறு பிரிவுகளின் சேவைகளைத் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வழங்கும் பொருட்டு பரிணாம வளர்ச்சி அடைந்துள்ளது. பொதுமக்கள் அரசின் சேவைகளைப் பெற அலுவலகத்தை நாடிவரும் நிலையை மாற்றி, எங்கிருந்தும்

2023 ஏப்ரல் 12]

எந்நேரத்திலும் தடையற்ற சேவைகளை வழங்குவதே இத்துறையின் முக்கிய நோக்கமாகும்.

7.1 வழி காட்டும் குழு

அரசாணை (டி) எண் 521, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 10.8.2022-ன்படி வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் அனைத்து மின் ஆளுகைத் திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்துவதைக் கண்காணித்து வழி நடத்திட நில நிர்வாக ஆணையர் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது.

7.2. வருவாய்த் துறை சார்ந்த சான்றிதழ்கள் மற்றும் உரிமச் சான்றிதழ்கள்

மின் ஆளுமை முகமையால் உருவாக்கப்பட்ட வலைதளம் வழியாகப் பெறப்படும் விண்ணப்பங்களுக்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையால் பின்வரும் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன:-

1. *சாதிச் சான்றிதழ்*
2. *வருமானச் சான்றிதழ்*
3. *இருப்பிடச் சான்றிதழ்*
4. *முதல் தலைமுறை பட்டதாரி சான்றிதழ்*
5. *கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் சான்றிதழ்*
6. *விவசாய வருமானச் சான்றிதழ்*
7. *கலப்புத் திருமணச் சான்றிதழ்*
8. *விதவைச் சான்றிதழ்*
9. *வேலையில்லாதவர் என்பதற்கான சான்றிதழ்*
10. *குடிபெயர்வு சான்றிதழ்*
11. *குறு, சிறு விவசாயி சான்றிதழ்*
12. *இயற்கை இடர்பாடுகளினால் மாணவர்கள் பள்ளி (ம) கல்லூரி சான்றிதழ்களை இழந்தமையை உறுதி செய்யும் சான்றிதழ்*
13. *திருமணம் ஆகாதவர் என்பதற்கான சான்றிதழ்*
14. *ஆண் குழந்தை இல்லை என்பதற்கான சான்றிதழ்*

15. வாரிசு சான்றிதழ்
16. வசிப்பிடச் சான்றிதழ்
17. சொத்து மதிப்பு சான்றிதழ்
18. அடகு வணிகர் உரிமம் சான்றிதழ்
19. கடன் கொடுப்போர் உரிமம்
20. இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் வகுப்புச் சான்றிதழ்
21. பொருளாதாரத்தில் பின்தங்கியவர் என்பதற்கான சான்றிதழ் (வருமானம் மற்றும் சொத்துகள்)
22. ஆதரவற்ற விதவை சான்றிதழ்
23. ஜெயின் மதத்தினருக்கான சிறுபான்மையினருக்கான சான்றிதழ்
24. பொது கட்டடங்கள் உரிமம் குறித்த சான்றிதழ்
25. தற்காலிக பட்டாசு உரிமம் குறித்த சான்றிதழ்
26. நிரந்தர பட்டாசு உரிமம் குறித்த சான்றிதழ்
27. எரிபொருள் நிலையங்களுக்கான தடையில்லா சான்றிதழ்

1.4.2022 முதல் 31.3.2023 வரையிலான காலங்களில் 1,68,18,044 வருவாய்த் துறை சான்றிதழ்கள் இ-சேவைமூலம் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. தற்போது இணையவழி அல்லாது வழங்கப்படும் பிற சான்றிதழ்கள் அனைத்தும் 2023-2024 நிதியாண்டில் இணையவழியில் வழங்க வழிவகை செய்யப்படும்.

7.3 சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்

முதல்வரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்ட ஓய்வூதியங்களுக்கான விண்ணப்பங்கள் மற்றும் அதன்மீது மேற்கொள்ளும் நடவடிக்கைகள் கணினிமயமாக்கப்பட்டுள்ளது. கருவூலம் மற்றும் பயனாளிகளுக்குப் பணம் வழங்குவது தொடர்பான அனைத்துப் பணிகளும் கணினிமயமாக்கப்பட்டுள்ளது. விபத்து நிவாரணத் திட்டம் மற்றும் பேரிடர் நிவாரணத் திட்டம் போன்ற மீதமுள்ள சேவைகளும் நடப்பு ஆண்டில் கணினிமயமாக்கப்படவுள்ளது.

7.4 நில ஆவணங்கள் தொடர்பான சேவைகள்

மாநிலத்தின் சமூக-பொருளாதார வளர்ச்சிக்கு மேம்படுத்தப்பட்ட, வெளிப்படையான மற்றும் எளிதில் அணுகக்கூடிய நிலப் பதிவுகள் அவசியமானதாகும்.

2023 ஏப்ரல் 12]

7.4.1 நில ஆவணங்களைக் கணினிப்படுத்துதல்

பல்வேறு காலக்கட்டங்களில் நிலப் பதிவுகள் பல வகைகளில் தீர்வு செய்யப்பட்டு மற்றும் நில ஆவணங்களாகப் பராமரிக்கப்பட்டு காகித வடிவில் இருந்து வந்துள்ளன. குடிமக்களுக்குப் பலவித சேவைகளை வழங்கிடுவதற்கும், நில நிர்வாக செயல்முறைகளைக் கணினிமயமாக்குவதற்கும் உரை மற்றும் இடம்சார்ந்த பதிவுகளைக் கணினிமயமாக்குவது மிக அவசியமானதாகும். அவற்றின் கணினிமயமாக்கலின் நிலை பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது:–

i. நில ஆவணங்களைக் கணினிப்படுத்துதல் எழுத்துருவிலான நில ஆவணங்களைக் கணினிப்படுத்துதல் (மாற்றியமைக்கத்தக்கது)

ஆவண வகை	ஆவணத்தின் பெயர்	கணினிப் படுத்துதல்	இணையவழி சேவைக்கு கொண்டு வரப்பட்டவை (மின்சேவை மற்றும் அலைபேசி செயலி மூலமாக பொது மக்கள் பார்வையிடும் வசதி உள்ளவை)
கிராமம்	அ-பதிவேடு மற்றும் சிட்டா	311*/ 313 வட்டங்கள் 4.03 கோடி (வால்பாறை* (ம) கொல்லிமலை ** வட்டங்கள் மற்றும் இதர விடுபட்ட புல எண்கள் தவிர்த்து)	ஆம் (அனைத்து மாவட்டங்களும்)
நகர்ப்புறம்	நகரநிலப் பதிவேடு/ நிலையான நில ஆவணம்	14/14 வட்டங்கள் 90/90 நகராட்சிகள் 21 /21 மாநகராட்சிகள் (37.87 இலட்சம்)	ஆம் (அனைத்து மாவட்டங்களும்)
நத்தம்	அடங்கல்	1.44 கோடி/1.44கோடி ஆவணங்கள் (2018 வரை நிகழ்நிலைப் படுத்தப்பட்டவை)	இல்லை (மென்பொருள் தேசிய தகவலியல் மையத்தினால் உருவாக்கப்பட உள்ளது)

[2023 ஏப்ரல் 12

*– வால்பாறை—நீதிமன்ற வழக்கின் காரணமாக நில வரித் திட்டப் பணி நிலுவையிலுள்ளது

** கொல்லிமலை – 10/16 கிராமங்களில் நில வரித் திட்டப் பணி நிறைவு பெற்று தரவினை சரிபார்க்கும் பணி நடைபெற்று வருகிறது. 6/16 கிராமங்களில் நில வரித் திட்டப் பணி நடைபெற்று வருகிறது.

ii. கையினால் தயாரிக்கப்பட்ட நிலப் பதிவுருக்கள் (ஒளிபிம்ப நகலெடுக்கப்பட்டவை — மாற்றியமைக்கத் தக்கதல்ல)

ஆவண வகை	ஆவணத்தின் பெயர்	ஒளிபிம்ப நகலெடுக்கப் பட்டவை	இணையவழி சேவைக்கு கொண்டு வரப்பட்டவை
கிராமம்	அ-பதிவேடு	15,356/16,721 (கிராமங்கள்)	இல்லை (மென்பொருள் உருவாக்கப்பட்டு வருகிறது)
நகர்ப்புறம்	நகரநில ஆவணம்	அலுவலக பயன் பாட்டிற்காகத் தொடங்கப்படவுள்ளது	இல்லை
	நிலையான நில ஆவணம்		
நத்தம்	அடங்கல்	அலுவலக பயன்பாட்டிற்காகத் தொடங்கப்படவுள்ளது	இல்லை

iii. நில ஆவணங்களைக் கணினிப்படுத்துதல் - வரைபடங்கள் கணினிப்படுத்தப்பட்டவை (மாற்றியமைக்கத்தக்கவை)

ஆவண வகை	ஆவணத்தின் பெயர்	கணினிப்படுத்தப் பட்டவை	இணையவழி சேவைக்கு கொண்டு வரப்பட்டவை
கிராமப்புறம்	புலப்பட புத்தகம் (நத்தம் உள்ளிட்டவை)	55.20 இலட்சம்/ 55.20 இலட்சம் (100%)	ஆம் (100 %) மின்சேவையில் உள்ளது
	கிராம வரைபடம்	16,524/16,721 கிராமங்கள்(98.8%)	இல்லை

2023 ஏப்ரல் 12]

நகர்ப்புறம்	பிளாக் வரைபடம்	32.04 இலட்சம்/34.74 இலட்சம் நகரப்புல எண்கள் (92%)	இல்லை
	நகர புல வரைபடம்	கணினிப் படுத்தப்பட்ட பிளாக் வரை படங்களிலிருந்து உருவாக்கப்பட்டு வருகிறது	142 நகரங்களுக்கான நகரப் புல வரைபடங்கள் இணையவழி சேவைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

iv. கையினால் தயாரிக்கப்பட்ட வரைபடங்கள் — ஒளிபிம்ப நகலெடுக்கப்பட்டவை (மாற்றி அமைக்கத் தக்கதல்ல)

ஆவண வகை	ஆவணத்தின் பெயர்	ஒளிபிம்ப நகலெடுக்கப் பட்டவை	இணையவழி சேவைக்கு கொண்டு வரப்பட்டவை
கிராமம்	புலப்பட புத்தகம் (நிலப் பதிவுருக்கள் மேம்பாட்டுத் திட்டம்)	9,783/16,721 கிராமங்கள்	இல்லை
	கிராம வரைபடம் (நிலப் பதிவுருக்கள் மேம்பாட்டுத் திட்டம்)	16,721 கிராமங்கள் (100%)	ஆம்
நகர்ப்புறம்	பிளாக் வரைபடம் (மூலநகரளவை)	19,401 /27,959 பிளாக்குகள் (69.4%)	ஆம்

7.4.2 குடிமக்கள் சேவைகள் - பட்டா மாறுதல்

கிராமப்புறம் மற்றும் நகர்ப்புற பகுதிகளுக்குப் பட்டா மாறுதல் தொடர்பான சேவைகள் முழுமையாகக் கணினிமயமாக்கப்பட்டுள்ளது. 2023-24 ஆம் ஆண்டில் நத்தம் பகுதிகளில் பட்டா மாறுதல் தொடர்பான சேவைகள் முழுமையாகக் கணினிமயமாக்கப்படவுள்ளன.

பொதுமக்கள் எங்கிருந்து வேண்டுமானாலும் இணையதளம் வாயிலாக மற்றும் பொது சேவை மையம் மூலமாக பட்டா மாற்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

7.4.3. இணையவழிசேவைகள் தொடங்கப்பட்டவை

i. பொதுமக்கள் இணையம் வாயிலாக எங்கிருந்து வேண்டுமானாலும் பட்டா மாறுதல் கோரி

விண்ணப்பிப்பதற்கான சேவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 23.9.2022 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

ii. உட்பிரிவு இல்லாத பட்டா மாறுதல் பரிவர்த்தனைகளில், பத்திரப் பதிவு முடிவடைந்ததும், வருவாய்த் துறையில் குறுக்கீடு ஏதுமின்றி, நில உரிமை மாற்றங்கள் தானியங்கி பட்டா மாறுதல் முறையில் மேற்கொள்ளப்படுவது ஒரு புதுமையான முனைவு ஆகும். முறைகேடான செயல்களை ஒழிப்பதில் இந்நடைமுறை பெருமளவில் உதவிகரமாக உள்ளது. 7.5.2021 முதல் 2.3.2023 வரை, 3,04,230 பட்டா மாறுதல்கள் தானியங்கி முறையில் செய்யப்பட்டுள்ளன.

iii. மாநிலத்தில், மொத்தமுள்ள 183 நகரங்களில் 142 நகரங்களுக்கான புலப்படங்கள் இணையவழிப்படுத்தப் பட்டுள்ளன. எஞ்சிய 41 நகரங்களுக்கான புலப்படங்களை இணையவழிப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

iv. பொதுமக்கள் கிராம வரைபடங்களை https://tnlandsurvey.tn.gov.in/ இணையதளம் வாயிலாகப் பதிவிறக்கம் செய்துகொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

v. ‘அ’ பதிவேடு சிட்டா, புலப்படம் மற்றும் அடங்கல் ஆவணங்களின் விவரங்களை உள்ளடக்கிய ‘ஒருங்கிணைந்த நில ஆவணம்’ இணையவழிப்படுத்தப்படத் தயார் நிலையில் உள்ளது.

7.4.4 இணையவழி சேவைகள் – நடைமுறையில் உள்ளவை

பின்வரும் மின் ஆளுமை முயற்சிகள் நடைபெற்று வருகின்றன:-

'அ' பதிவேடு, சிட்டா, புல வரைபடம் மற்றும் அடங்கல் அடங்கிய ஒருங்கிணைந்த நிலப் பதிவு உருவாக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டிற்குத் தயாராக உள்ளது.

நிலங்களை அளவீடு செய்வதற்கு (அதாவது, சர்வே எல்லைகளை சுட்டிக்காட்டுவதற்கு) ஆன்லைன் முறையில் விண்ணப்பம் செய்யும் வசதி உருவாக்கப்பட்டு, விரைவில் தொடங்கப்படவுள்ளது,

நத்தம் நிலப் பதிவேடுகளை ஆன்லைனில் செயலாக்குவதற்கும், பராமரிப்பதற்கும் இணைய அடிப்படையிலான மென்பொருள் உருவாக்கத்தில் உள்ளது.

திட்டமிடல் நோக்கங்களுக்காகத் தேவைப்படும் துறைகளுடன் பகிர்ந்து கொள்வதற்காக, டிஜிட்டல்மயமாக்கப்பட்ட கிராம வரைபடங்களின் புவி-குறிப்பு, வேளாண்மைத் துறையுடன்

2023 ஏப்ரல் 12]

இணைந்து பின்பற்றப்படுகிறது.

பட்டா மாறுதல் மேல்முறையீட்டு மேலாண்மை மென்பொருளை மாற்றுவதற்கு, தமிழ்நாடு மின்ஆளுமை முகமையால் ஒரு முழுமையான மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது, இதன் பின்னர், மேல்முறையீடுகள் இணையவழியில் தாக்கல் செய்யலாம்.

7.5 நில நிருவாகம்

7.5.1. நிலம் கையகப்படுத்துதல் மேலாண்மை அமைப்பு

தேசிய தகவல் மையத்தால் உருவாக்கப்பட்டு, சில தொகுதிகள் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இது பணியாளரின் பணி மற்றும் பணி நேரத்தை கணிசமாகக் குறைக்க வழிவகுத்துள்ளது. இழப்பீடு கணக்கிடுவதற்கான வழிமுறைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

7.5.2 பட்டா மேல்முறையீட்டிற்கான புதிய மென்பொருள்

வருவாய் பின்தொடர் பணியில் மேல்முறையீட்டு மனுக்களை இ-சேவை மையங்கள் மூலமாக குடிமக்கள் விண்ணப்பித்து பயன்பெறும் வகையில் புதிய மென்பொருள் TNeGA மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. இதனால், விசாரணை நிலையையும், உத்தரவினையும் இணையதளம் மூலமாகத் தெரிந்துகொள்ளலாம். இந்த மென்பொருள் வெளியீட்டிற்கு தயாராகவுள்ளது.

7.6 நிலச் சீர்திருத்தம்

நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் 37-A பிரிவுகளின்கீழ் விண்ணப்பங்களுக்கான முழுமையான செயல்முறை உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. பிரிவு 37-B பிரிவுக்கான இதேபோன்ற மென்பொருள் உருவாக்கப்பட்டு விரைவில் நடைமுறைக்குக் கொண்டு வரப்படவுள்ளது.

7.7 மின்-அலுவலகம்

தலைமைச் செயலக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, ஆணையர் அலுவலகங்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் மின்-அலுவலகத்தை செயல்படுத்துவதில் முன்னணியில் உள்ளன. இதனால் அலுவலகப் பணிகள் நெறிமுறைபடுத்தப்பட்டு, விரைவாக முடிக்கப்படுகிறது.

இனிவரும் காலங்களில், மின்-ஆளுமைமூலம் பொது மக்களுக்கான சேவைகளை முழுமையாக வழங்க வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை தயாராகவுள்ளது.

இணைப்பு II

(251 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 14-எரிசக்தி துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

தொலைநோக்குப் பார்வை

தமிழ்நாடு அகில இந்திய அளவில் மின் உற்பத்தியிலும், தொழில் வளர்ச்சியிலும் அதி வேகமாக முன்னேற்றம் அடைந்து வரும் ஒரு மாநிலமாகும். ஒரு மாநிலத்தின் வளர்ச்சிக்கு மின்சாரம் மிகவும் அத்தியாவசியமானது மட்டுமின்றி மனிதனின் அன்றாட வாழ்க்கைக்கு முக்கியமானதாகும். நமது நவீன வாழ்க்கை மின்சாரத்தையே சார்ந்திருக்கிறது. மின்சாரம் இல்லா வாழ்க்கையை நம்மால் நினைத்துகூட பார்க்க இயலாது. கல்வி, மருத்துவம், விவசாயம், தொழில், சமையல், ஒளியமைப்பு, கைபேசி மின்னூக்கி மற்றும் பொழுதுபோக்கு அம்சங்கள் உட்பட அனைத்துமே மின்சாரத்தையே சார்ந்திருக்கின்றன. வருங்காலத்தில் போக்குவரத்து முற்றிலுமே மின்சாரத்தையே சார்ந்திருக்கும். இதனால், மனிதனின் தேவைகள் கூட, கூட மின்சாரத்தின் தேவை நித்தமும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

இந்தியாவிலேயே தமிழ்நாடு, தொழில்மயமாக்கப்பட்ட மற்றும் நகரமயமாக்கப்பட்ட முன்னோடி மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்வதால், நாட்டிலேயே அதிகபட்ச மின் தேவை உள்ள மாநிலங்களில் நம் தமிழ்நாடு 4-வது இடத்தில் உள்ளது. தென் மாநிலங்களைப் பொறுத்தவரை, தமிழ்நாடே அதிக மின் நுகர்வு கொண்ட மாநிலமாகும்.

1.4.2023 அன்றுள்ளபடி, தமிழ்நாட்டின் மொத்த மின் நிறுவு திறன் 34,706.16 மெகாவாட் ஆகும். இதில் 8,739.01 மெகாவாட், அதாவது 25.18% காற்றாலைகளிலிருந்தும், 6,539.23 மெகாவாட் அதாவது, 18.84% சூரிய ஒளியிலிருந்தும், 164.84 மெகாவாட் அதாவது, 0.47% உயிரி ஆற்றலிலிருந்தும், மற்றும் 523.80 மெகாவாட் அதாவது, 1.51% இணை மின் உற்பத்தி நிலையங்களிலிருந்தும் புதுப்பிக்கத்தக்க மின்சாரமாகக் கிடைக்கப்பெறுகிறது.

தமிழ்நாடு, இந்தியாவிலேயே புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களை அபரிமிதமாகக் கொண்டுள்ள மாநிலமாகும். தமிழ்நாடு, வருடத்தில் 300 நாட்கள் அதிக அளவில் சூரிய

2023 ஏப்ரல் 12]

ஒளியினையும், மேலும், தமிழ்நாடு வினாடிக்கு 9 மீட்டர் முதல் 11 மீட்டர் வரையிலான வேகத்துடன்கூடிய கடலோரக் காற்றின் சக்தியினையும் கொண்டுள்ளது.

தமிழ்நாட்டின் மொத்த மின் தேவையானது, 6.4.2023 அன்று உச்சபட்சமாக 18,252 மெகாவாட்டாக நண்பகல் 10:30 மணியளவில் பதிவானது. இது, கடந்த 26.3.2021 அன்று பதிவான உச்சபட்ச மின் தேவையான 16,481 மெகாவாட்டைவிட 1,771 மெகாவாட் கூடுதலாகும். தமிழ்நாட்டின் தினசரி மின் நுகர்வு சராசரியாக சுமார் 360 மில்லியன் யூனிட் அளவில் உள்ளது. 29.4.2022 அன்று தமிழ்நாட்டின் அதிகபட்ச தினசரி மின் நுகர்வு 388.078 மில்லியன் யூனிட்டாகப் பதிவானது.

இந்த வருட ஏப்ரல் மற்றும் மே மாதங்களில், தமிழ்நாட்டின் அதிகபட்ச மின் தேவை 18,300 மெகாவாட் முதல் 18,500 மெகாவாட் வரை உயரும் எனவும், தினசரி மின் நுகர்வு 390 முதல் 395 மில்லியன் யூனிட் வரை அதிகரிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடானது, நிறுவப்பட்டுள்ள காற்றாலைகளின் மொத்த நிறுவு திறனில் அகில இந்திய அளவில் முதல் இடத்தில் உள்ளது. 1.4.2023 அன்று தமிழ்நாட்டில் அமைந்துள்ள மொத்த காற்றாலைகளின் நிறுவு திறன் 10,067.20 (மாநில நிறுவு திறன் 8,739.01 மற்றும் மத்திய தொகுப்பின் நிறுவு திறன் 1,328.19) மெகாவாட் ஆகும். இது, இந்தியாவில் உள்ள மொத்த காற்றாலைகளின் நிறுவு திறனில் 24 சதவிகிதம் ஆகும். காற்றாலைகளின்மூலம் மிக அதிக அளவு மின்சார உற்பத்தி, 3.7.2022 அன்று 5,689 மெகாவாட்ப் பெறப்பட்டது. 9.7.2022 அன்று அதிக அளவாக காற்றாலைகளின்மூலம் பெறப்பட்ட மின் சக்தி 120.25 மில்லியன் யூனிட்டுகளாகப் பதிவானது.

தமிழ்நாடானது, சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையங்களின் மொத்த நிறுவு திறனில், இந்தியாவிலேயே நான்காவது இடத்தில் உள்ளது. 1.4.2023 அன்றுள்ளபடி தமிழ்நாட்டில் உள்ள சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையங்களின் நிறுவு திறன் 6,689.23 மெகாவாட் (மாநில நிறுவு திறன் 6,539.23 மற்றும் மத்திய தொகுப்பின் நிறுவு திறன் 150 மெகாவாட்) ஆகும். சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து, 26.2.2023 அன்று, அதிகபட்சமாக மின் உற்பத்தி 4,866 மெகாவாட்டாகப் பதிவானது, அதேபோல், சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையங்கள்மூலம் 25.02.2023 அன்று அதிக அளவில் 36.0 மில்லியன் யூனிட்டுகள் கிடைக்கப்பெற்றது.

கடந்த 11.9.2022 அன்று, தமிழ்நாட்டின் மொத்த மின் நுகர்வில் 74% புதுப்பிக்கத்தக்க எரிசக்திமூலம் பூர்த்தி செய்யப்பட்டு வரலாறு படைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் மின் தேவையானது ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து கொண்டே செல்வதால் அதனை ஈடு செய்யும் பொருட்டு, மின் தொடரமைப்பு மற்றும் பகிர்மானக் கட்டமைப்பை நவீனப்படுத்துவதற்காக, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் மின் நிறுவு திறனை இரட்டிப்பாக்கும் நோக்கில் தமிழ்நாடு அரசு 'TNEB 2.0' என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தத் திட்டத்தின்மூலம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களை மேம்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தப்படும். தமிழ்நாட்டின் மொத்த மின் உற்பத்தியில், 20.88% ஆக உள்ள புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் பங்கினை 2030 ஆம் ஆண்டிற்குள் 50 சதவிகிதமாக அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

உலகளவில், மின் சேமக்கலன் (Battery) மூலம் மின்சாரத்தைச் சேமிக்கும் முறையானது இன்று வரை பரிட்சார்த்த முறையிலேயே இருந்து வருகிறது. காற்றாலை மற்றும் சூரிய ஒளி மின் உற்பத்தி சக்தியை அதிக அளவில் மின் கட்டமைப்பில் ஒருங்கிணைக்கவும், ஈடுகட்டவும், நீரேற்றுப் புனல் மின் திட்டங்களே இயற்கையான தீர்வாகும். குந்தாவில் தற்போது கட்டப்பட்டு வரும் 500 மெகாவாட் திறன் கொண்ட நீரேற்று புனல் மின் திட்டம் 2024-25 ஆம் ஆண்டிற்குள் செயல்பாட்டுக்குக் கொண்டு வரப்படும். மேலும், தமிழ்நாட்டில், 14,500 மெகாவாட் திறன் கொண்ட நீரேற்றுப் புனல் மின் திட்டங்களை நிறுவுவதற்கு, 15 இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இத்திட்டங்கள் உச்ச மின் தேவையை எதிர்கொள்ளவும் உதவும். மேலும், மேற்படி புனல் நீரேற்று மின் திட்டங்கள் ரூ.77,000 கோடி செலவில் அரசு-தனியார் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும்.

தற்போது, நடைபெற்று கொண்டிருக்கும் 4,100 மெகாவாட் அனல் மின் திட்டப் பணிகள், அதாவது வடசென்னை அனல் மின் திட்டம் நிலை III-800 மெகாவாட், உடன்குடி மிக உய்ய அனல் மின் திட்டம் நிலை 1–1,320 மெகாவாட், எண்ணூர்

2023 ஏப்ரல் 12]

சிறப்புப் பொருளாதார மண்டல அனல் மின் திட்டம் – 1,320 மெகாவாட், எண்ணூர் அனல் மின் நிலைய விரிவாக்கத் திட்டம்– 660 மெகாவாட் ஆகியவற்றின் பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதற்கு தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டின் மின் தொடரமைப்புக் கட்டமைப்பை உறுதி செய்வதற்காகவும், பல்வேறு துறைகளில் அதிகரித்து வரும் மின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகவும், தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம், தற்போதுள்ள மின் தொடரமைப்புக் கட்டமைப்புகளை மேம்படுத்தியும் மற்றும் தரம் உயர்த்தியும் வருவதோடு, மாநிலம் முழுவதும் புதிய மின் தொடரமைப்புக் கட்டமைப்புகளையும் தொடர்ந்து நிறுவுவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

மேலும், தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம், சமீபத்திய தொழில்நுட்ப வளர்ச்சிகள் மற்றும் மிகவும் பயனுள்ள நவீன போக்குவரத்துத் திட்டங்களான மெட்ரோ இரயில் திட்டங்கள், இரயில் பாதைகளை மின்மயமாக்கும் பணிகள், மின்சார வாகனப் பயன்பாடு மற்றும் தகவல் தொழில்நுட்ப மையங்களுக்கான மின் கட்டமைப்பு மேம்பாடு போன்ற பணிகளிலும் தனி கவனம் செலுத்தி வருகிறது.

அனைத்துத் துறை நுகர்வோர்களுக்கும் தடையில்லா, தரமான மற்றும் நம்பகமான மின்சாரத்தை அனைவருக்கும் ஏற்கத்தக்க விலையில் வழங்குவதை உறுதி செய்வதற்கு தமிழ்நாடு அரசு அனைத்து முயற்சிகளையும் தொடர்ந்து எடுத்து வருகிறது.

தமிழ்நாட்டில், கிராமங்களில் வசிப்போரில் மூன்றில் இரண்டு பங்கினர் விவசாயத்தை மட்டுமே தங்கள் வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர். தமிழ்நாட்டின் விளை நிலங்களின் பரப்பை அதிகரித்து, விவசாய உற்பத்தியினைப் பெருக்கும் நோக்குடன், விவசாயிகளின் வாழ்வில் மலர்ச்சியை ஏற்படுத்தும் விதமாக, இந்த அரசு பதவியேற்ற 17 மாத காலத்திற்குள் 1,50,000 உழவர்களுக்கு இலவச விவசாய மின் இணைப்புகளை வழங்கி சாதனை படைத்துள்ளது.

தமிழ்நாட்டில், விவசாயத் தொழிலுக்கு அடுத்தபடியாக, ஏராளமானோர் நெசவுத் தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர். எனவே, நெசவுத் தொழிலை ஊக்குவிக்கும் வகையில், கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் இலவச மின்சாரத்தை இரு மாதங்களுக்கு ஒரு முறை ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த 200 யூனிட்டுகளை 300 யூனிட்டுகளாக உயர்த்தியும், விசைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த இலவச மின்சாரத்தினை 750 யூனிட்டுகளிலிருந்து 1,000 யூனிட்டுகளாக உயர்த்தியும் இந்த அரசு ஆணை பிறப்பித்தது. இதனால், தமிழ்நாட்டில் 73,642 கைத்தறி நெசவாளர்களும் மற்றும் 1,68,000 விசைத்தறி நெசவாளர்களும் பயனடைந்துள்ளனர்.

மின் கம்பி அறுந்து விழுவதினால் ஏற்படும் உயிர் இழப்புகளைத் தடுப்பதற்காகவும், பகிர்மான மின்மாற்றிகளில் ஏற்படக்கூடிய பழுதுகளைக் குறைப்பதற்காகவும், தற்போதுள்ள 3,88,982 எண்ணிக்கை மின்மாற்றிகளிலும், வழக்கமாக நிறுவப்படும் புதிய விநியோக மின்மாற்றிகளிலும், மறு சீரமைப்பு மின் விநியோகத் திட்டத்தின்கீழ் (RDSS) நிறுவப்படவுள்ள புதிய விநியோக மின் மாற்றிகளிலும், மின்மாற்றி கண்காணிப்பு மற்றும் மேலாண்மை அமைப்பை (Transformer Monitoring and Management System) நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், மின் இழப்பைக் குறைப்பதற்காக, 1,685 மின்னூட்டிகளை விவசாயம் மற்றும் விவசாயம் அல்லாத மின்னூட்டிகளாகப் பிரிப்பதற்கும், 273 மின்னூட்டிகளில் உயர் அழுத்த மின் பகிர்மான அமைப்பு (HVDS) நிறுவுவதற்கும், ஒரே இடத்தில் இருக்கும் 13,892 இரு மின் விநியோக மின்மாற்றிகளைக் குறைந்த திறன் கொண்ட விநியோக மின்மாற்றிகளாக நிறுவி, உயர் அழுத்த மின் விநியோக அமைப்பின்மூலம் பிரிப்பதற்கும் மற்றும் இயக்கத்திலுள்ள 33 கி.வோ. மின்னூட்டிகளில் உள்ள மேல்நிலை மின் கம்பிகளை 542.08 கி.மீ. அளவிற்கு புதுப்பிப்பதற்கும் மறு சீரமைக்கப்பட்ட மின் விநியோகத் திட்டத்தின்கீழ் (RDSS) மேற்கொள்வதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

நவீனமயமாக்கலை மேலும் ஊக்குவிக்கும் வகையில், தற்போது கணக்கீட்டாளர்கள்மூலம் கணக்கீடு செய்யப்படும் 3 கோடி மின் நுகர்வோர்களின் மின் அளவிகளையும் திறன் மிகு (Smart Meter) மின்னளவிகளாக மாற்றும் பணியை தமிழ்நாடு மின் உற்பத்தி

2023 ஏப்ரல் 12]

மற்றும் பகிர்மானக் கழகம் மேற்கொள்ளும். இதனால், மனித தலையீடு இல்லாமல் மின் பயன்பாட்டினைத் துல்லியமாகக் கணக்கிடவும், தானியங்கி கணக்கீடு வசதிக்காகவும் மற்றும் தொலை தூரத்திலிருந்தும் மின் துண்டிப்பு/மறு மின் இணைப்பு செய்திடவும் முடியும். இவ்வாறு, திறன் மிகு மின் அளவிகளை பொருத்துவதால் வருவாய் இழப்பு குறைவதோடு மட்டுமன்றி மின் பயன்பாட்டினை சரியாகக் கணக்கிடவும் மற்றும் மின் திருட்டைத் தடுக்கவும் முடியும். மின் நுகர்வோர்களின் மின் கணக்கீடு சம்பந்தமான புகார்களையும் தவிர்க்க இயலும்.

இத்தகைய காலத்திற்கேற்ற திட்டங்களைச் செவ்வனே செயல்படுத்துவதன்மூலம் தமிழ்நாடானது இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் முன்னுதாரணமாகத் திகழும்.

எரிசக்தித் துறை

எரிசக்தி, பொருளாதார வளர்ச்சியின் முக்கிய உந்து சக்திகளில் ஒன்றாகும். இது ஒரு மாநிலத்தின் நிலையான வளர்ச்சிக்கு முக்கியப் பங்கு வகிக்கிறது. பொருளாதார வளர்ச்சி, சமூகப் பாதுகாப்பு மற்றும் மக்கள் நலனுக்கு நிலையான, பாதுகாப்பான, நம்பகமான மற்றும் நியாயமான விலையில் மின்சார விநியோகம் ஒரு முன் நிபந்தனையாகும்.

காலநிலை மாற்றம் மற்றும் புதைபடிவ எரிபொருட்களின் வீழ்ச்சியை எதிர்கொள்ளும் முயற்சியாகப் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியிலிருந்து முடிந்தவரை மின் உற்பத்தி செய்வது அவசியமாகிறது. 2030 ஆம் ஆண்டுக்குள் புதுப்பிக்கத்தக்க எரிசக்திமூலம் செய்யப்படும் மின் உற்பத்தியை மொத்த உற்பத்தியில் 50 சதவிகிதமாக உயர்த்த அரசு குறிக்கோள் மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பாக, மாநிலத்தின் புதுப்பிக்கத்தக்க ஆற்றலை வெளிக்கொணர்ந்து, தூய எரிசக்தி இலக்கை அடையவும் மேலும் மின் விநியோகச் செலவைக் குறைக்கவும் அரசு தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு மின்சார வாகனக் கொள்கை 2023-ஐ வெளியிட்டுள்ளது. இது, பொது மற்றும் வணிக போக்குவரத்தை மின்மயமாக்குதல் மற்றும் மின்சார வாகன நகரங்களை உருவாக்குதல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

[2023 ஏப்ரல் 12

எரிசக்தி பயன்பாடு மற்றும் உற்பத்தியில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், நவீனமயமாக்கல் மற்றும் புதிய துறைகளின் மின்மயமாக்கல், பகிர்ந்தளிக்கப்பட்ட எரிசக்தி வளங்களின் விரைவான விரிவாக்கம் மற்றும் புதிய கொள்கை முன்முயற்சிகள் ஆகியவற்றுக்கு ஏற்ப வசதிகள் செய்ய மின் கட்டமைப்பு ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்த அமைப்பிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் இந்த மாற்றத்தை எதிர்கொள்ளும் வகையில், மின் தொடரமைப்பு மற்றும் பகிர்மான உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான பல்வேறு முன்முயற்சிகளை அரசு மேற்கொண்டுள்ளது.

எரிசக்தித் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் கீழ்க்கண்ட அமைப்புகள் செயல்படுகின்றன:

I. தமிழ்நாடு மின்சார வாரிய நிறுவனம் (TNEB Ltd) பின்வரும் துணை நிறுவனங்களுடன்:

அ) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் (TANGEDCO) மற்றும்

ஆ) தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் (TANTRANSCO)

II. தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை (TEDA)

III. மின் ஆய்வுத் துறை (TNEI)

IV. தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (TNPFIDCL)

1.1 மின் உற்பத்தி

மின் நிறுவு திறன்

வ எண்	உற்பத்தி வகை	நிறுவு திறன் (மெகாவாட்டில்)
I	மரபுசார் எரிசக்தி ஆதாரங்கள்	
1	அனல் மின் நிலையங்கள்	4,320.00
2	எரிவாயு மின் நிலையங்கள்	516.08
3	ஒன்றிய அரசின் மின் நிலையங்கள் (CGS)	7,170.00

வ எண்	உற்பத்தி வகை	நிறுவு திறன் (மெகாவாட்டில்)
4	தனியார் – மின் உற்பத்தி	
	தற்சார்பு மின் திட்டங்கள் (IPP)	1,105.50
	நீண்டகால மின் கொள்முதல் (LTOA)	2,830.00
	நடுத்தர கால மின் கொள்முதல் (MTOA)	252.00
	மொத்த தனியார்-மின் உற்பத்தி	4,187.50
5	தன் பயன் மின் திட்டங்கள் *	223.80
	மொத்த மரபுசார் எரிசக்தி ஆதாரங்கள்	16,417.38
II	மரபுசாரா எரிசக்தி ஆதாரங்கள்	
1	நீர் மின் நிலையங்கள்	
	நீர் பாசனம் அல்லாத புனல் மின் நிலையங்கள்	1,030.65
	நீரேற்ற தேக்க மின் நிலையம்	400.00
	நீர் பாசன அடிப்படையிலான புனல் மின் நிலையங்கள்	891.25
	நீர் மின் நிலையங்கள் மொத்தம்	2,321.90
2	காற்றாலை **	8,739.01
3	சூரிய ஒளி ***	6,539.23
4	உயிரி ஆற்றல் #	164.84
5	இணை மின் உற்பத்தி நிலையங்கள் ##	523.80
	மரபுசாரா எரிசக்தி ஆதாரங்களின் மொத்தம்	18,288.78
	அனைத்து மொத்தம்	34,706.16

* புதைபடிவ எரிபொருள் அடிப்படையிலான தன்பயன்/

மூன்றாம் தரப்பு வகையின மின் உற்பத்தியாளர்களுக்கு, திறந்த நுழைவுரிமையின் வாயிலாக, தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகத்தின், (TANTRANSCO–வின்) மின் தொடரமைப்பு மூலம், TANGEDCO-வின் மிக உயர்மின் அழுத்த/உயர் மின் அழுத்த நுகர்வோருக்கு மின்சாரம் கடத்த அனுமதிக்கப்பட்ட அளவு.

** மத்திய மின் தொடரமைப்புடன் (CTU) இணைக்கப்பட்டுள்ள காற்றாலை மின் உற்பத்தி நிலையங்கள் 1,328.19 மெகாவாட், நீங்கலாக.

*** மத்திய மின் தொடரமைப்புடன் (CTU) இணைக்கப்பட்டுள்ள சூரிய மின் உற்பத்தி நிலையங்கள் 150 மெகாவாட், நீங்கலாக.

உயிரி ஆற்றல் – 97.75 மெகாவாட் நிரந்தரமாக துண்டிக்கப்பட்டது.

இணை மின் உற்பத்தி நிலையங்கள் – 198.1 மெகாவாட் நிரந்தரமாக துண்டிக்கப்பட்டது.

I அனல் மின் நிலையங்களின் உற்பத்தி:

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்துக்குச் சொந்தமான 5 அனல் மின் நிலையங்களின் மொத்த மின் நிறுவு திறன் 4,320 மெகாவாட் ஆகும்.

2022-2023 ஆம் ஆண்டில் அனல் மின் நிலையங்களின் செயல்திறன்களான உற்பத்தி, நிலைய இருப்பு காரணி மற்றும் சுமை காரணி விவரங்கள்

வ. எண்	நிலையங்களின் பெயர்	உற்பத்தி (MU)		இருப்பு காரணி (PAF)		சுமை காரணி (PLF)	
		2021-22	2022-23	2021-22	2022-23	2021-22	2022-23
1	தூத்துக்குடி அனல் மின் நிலையம் (5X210 மெகாவாட்)	4,962.57	5,717.92	62.89	85.88	53.95	62.16
2	மேட்டூர் அனல் மின் நிலையம்-I (4X210 மெகாவாட்)	4,795.57	5,395.74	71.42	88.57	65.18	73.33

2023 ஏப்ரல் 12]

3	மேட்டூர் அனல் மின் நிலையம்-II *(1X600 மெகாவாட்)*	*2,763.78*	*3,000.69*	*78.01*	*72.92*	*52.28*	*57.09*
4	வட சென்னை அனல் மின் நிலையம்-I *(3X210 மெகாவாட்)*	*3,356.50*	*3,134.38*	*81.23*	*58.64*	*60.82*	*56.79*
5	வட சென்னை அனல் மின் நிலையம்-II *(2X600 மெகாவாட்)*	*4,512.33*	*5,440.44*	*68.96*	*62.41*	*42.93*	*51.75*
	மொத்தம்	*20,391.11*	*22,689.18*	*72.5*	*73.68*	*53.88*	*59.96*

மேட்டூர் அனல் மின் நிலையம் – I (4 x 210 மெகாவாட்)

சேலம் மாவட்டம், மேட்டூர் அணையில் அமைந்துள்ள மேட்டூர் அனல் மின் நிலையம் – I (மே.அ.மி.நி-I), தலா 210 மெகாவாட் திறன் கொண்ட 4 அலகுகள் மொத்தம் 840 மெகாவாட் திறன் கொண்டவை.

குறிப்பிடத்தக்க சாதனைகள்:-

- *2022-23 ஆம் ஆண்டில் மே.அ.மி.நி-I–ன் மின் உற்பத்திக்கான செலவு – ரூபாய் 5.25/யூனிட். இது தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்ட இலக்கான ரூபாய் 6.79/யூனிட் என்பதைவிட குறைவு ஆகும்.*

- *மேட்டூர் அனல் மின் நிலைய அலகு-1, 2022-2023 ஆம் நிதி ஆண்டில், 22.12.2021 முதல் 24.6.2022 வரை 184 நாட்கள் தொடர்ந்து செயல்பாட்டில் இருந்தது. ஏப்ரல் 2022, மே 2022 மற்றும் அக்டோபர் 2022 ஆகிய மாதங்களில் 90%-க்கும் அதிகமான நிலைய சுமை காரணியோடு (PLF) இயக்கப்பட்டுள்ளது.*

[*2023 ஏப்ரல் 12*

❖ *மேட்டூர் அனல் மின் நிலையம்–I-ல், இரண்டு சாம்பல் நீர் மீட்பு அமைப்புகள் உள்ளன. இவை, முதன்மைக் குளத்தில் உள்ள சாம்பல் நீரினை, மறுசுழற்சி முறையில் சாம்பல் குழம்பு தயாரிக்க, சாம்பல் கலவையை வெளியேற்றும் பம்ப்ஹவுஸ் நிலை–I&II-க்கு குழாய்மூலம் வெளியேற்றுகின்றன. இந்த அமைப்பின் முக்கிய நோக்கம், நீர் நுகர்வைக் குறைப்பதும், சாம்பல் நீர் காவிரி ஆற்றில் கலப்பதைத் தவிர்ப்பதும் ஆகும். மேட்டூர் அனல் மின் நிலையம்–I-ல் நிறுவப்பட்டிருக்கும் சாம்பல் நீர் மீட்பு அமைப்புகள், வடிகுழாய் (Syphon) முறையில் வேலை செய்கின்றன. இதனால், இந்த அமைப்பின்மூலம், மின் மோட்டார் பம்பின் உதவி இல்லாமலேயே, ஒரு நாளில் சுமார் 22,300 M3 அளவு நீரானது, குளத்திலிருந்து சாம்பல் கலவையை வெளியேற்றும் பம்ப்ஹவுஸ் நிலை–I & II வரை கையாளப்படுகிறது. எனவே, 2022–23 ஆம் ஆண்டில், இதுவரை சேமிக்கப்பட்ட மின் சக்தியின் அளவானது தோராயமாக 3,21,856 யூனிட்டுகள் மற்றும் தோராயமாக சேமிக்கப்பட்ட தொகையானது ரூ.16,89,744/- ஆகும்.*

மேட்டூர் அனல் மின் நிலையம்–II (1 x 600 மெகாவாட்)

சேலம் மாவட்டத்தின் மேட்டூர் அணையில் அமைந்துள்ள மேட்டூர் அனல் மின் நிலையம்–II (மே.அ.மி.நி-II), 600 மெகாவாட் நிறுவு திறன் கொண்ட ஒரு அலகினைக் கொண்டது.

குறிப்பிடத்தக்க சாதனைகள்:-

❖ *மேட்டூர் அனல் மின் நிலையம்-II, ஏப்ரல் 2022, ஜூன் 2022 மற்றும் நவம்பர் 2022 ஆகிய மாதங்களில் தடையின்றி தொடர்ந்து இயங்கியுள்ளது. 2022-23 ஆம் ஆண்டில், மாதாந்திர உச்சபட்ச மின் சக்தி உற்பத்தியாக 320.59 மி.யூ. நவம்பர் 2022-ல் எட்டப்பட்டது.*

❖ *மின் சாம்பல் பிரிப்பானில் சேதமடைந்த A, B, C & D கணவாய்களின் 23 மின் நிலை விரைவிகள், ஜூலை 2022 முதல் டிசம்பர் 2022 வரையிலான காலகட்டத்தில் புதுப்பிக்கப்பட்டன. சாம்பல் பிரிப்பான் புதுப்பிக்கப்பட்டமையால் முழு மின் உற்பத்தியளவை எட்டுவதற்கும், சுற்றுச்சூழல் காரணிகளை மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தால் நியமிக்கப்பட்ட அளவுகளுக்குள் கட்டுப்படுத்தவும் முடிகிறது.*

2023 ஏப்ரல் 12]

செயல்திறனை மேம்படுத்துதல்:

100% இந்திய நிலக்கரியை பயன்படுத்தும்போது சுற்றுச்சூழலைத் தூய்மையாகப் பேணவும், அதிகபட்ச மின் உற்பத்தியளவை எட்டவும், இந்திய நிலக்கரியில் உள்ள அதிக அளவு சாம்பலைக் கையாளுவதற்கு ஏதுவாக, கூடுதல் உயர் அழுத்த அடர் சாம்பல் எடுத்து செல்லும் அமைப்பை ரூ.51.33 கோடி மதிப்பீட்டில் 2023-24 ஆம் ஆண்டு நிறுவும் திட்டத்திற்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

தூத்துக்குடி அனல் மின் நிலையம் (5x210 மெகாவாட்)

தூத்துக்குடி மாவட்டத்தில் அமைந்துள்ள தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் தலா 210 மெகாவாட் திறன் கொண்ட 5 அலகுகள் மொத்தம் 1,050 மெகாவாட் நிறுவு திறன் கொண்டவை.

குறிப்பிடத்தக்க சாதனைகள்:-

- ❖ *தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்குட்பட்ட மின் நிலையங்களிலேயே, தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில், இந்த நிதியாண்டில் ஜூலை 2022-ல், குறைந்த மாறுபடும் செலவில் (ரூ.3.91/kWhr) மின் உற்பத்தி செய்யப்பட்டது.*
- ❖ *தூத்துக்குடி அனல் மின் நிலைய அலகு-1, 2022–2023 ஆம் நிதியாண்டில் 23.5.2022 முதல் 7.8.2022 வரை 75 நாட்கள் தொடர்ந்து செயல்பாட்டில் இருந்தது.*

வடசென்னை அனல் மின் நிலையம் I (3x210 மெகாவாட்)

திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்துள்ள வடசென்னை அனல் மின் நிலையம்-I, தலா 210 மெகாவாட் திறன் கொண்ட 3 அலகுகள், மொத்தம் 630 மெகாவாட் நிறுவு திறன் கொண்டவை.

குறிப்பிடத்தக்க சாதனைகள்:-

- ❖ *2022 ஆம் ஆண்டிலிருந்து கரி அரவை இயந்திரத்தின் தேவையான உதிரி பாகங்களைக் கொள்முதல் செய்தல் மற்றும் கரி அரவை இயந்திரத்தின் உதிரி பாகங்களை மறுசீரமைப்பு செய்ததன் மூலமாகவும், கொதிகலனிலிருந்து வெளியேற்றப்படும் எரிபொருள் புகைவாயு செல்லும்*

குழாய்களில் தேய்மானம் அடைந்த பகுதிகளை மாற்றி அமைத்ததன் மூலமாகவும், ஒற்றை அடைப்பு காற்று முன் சூடாக்கியை இரட்டை அடைப்பு காற்று முன் சூடாக்கியாக மாற்றம் செய்ததன் மூலமாகவும், மின் நிலையத்தின் அதிகபட்ச மின் உற்பத்தியான 620 மெகாவாட்டானது 22.12.2022 அன்று எட்டப்பட்டது.

- ❖ 2023 பிப்ரவரி மாதத்தில், நிலைய சுமை காரணி 81.94% ஆக அதிகரித்தது. மேலும், 25 ஆண்டுகளாக இயங்கி வரும் இந்த மின் நிலையத்தில், வரவிருக்கும் கோடைக்கால மின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் நிலையான மின் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது,

- ❖ கட்டுப்பாட்டு அமைப்பின் மேம்படுத்தப்பட்ட வடிவத்தைக் கொண்ட, பகிர்ந்தளிக்கப்பட்ட கட்டுப்பாட்டு அமைப்பு (Distributed Control System), அலகு-III மற்றும் அலகு-II-ல் முறையே 10.8.2022 மற்றும் 05.11.2022 அன்று ரூபாய் 16.29 கோடி செலவில் நிறுவப்பட்டது. இதன்மூலம், 24 மணி நேரமும், மின் உற்பத்தி இயக்கக் குழுவினர் எளிதாகச் செயல்படுதலும், உபகரணங்கள் மற்றும் அமைப்புகளில் ஏற்படும் பழுதுகளை கண்டறிந்து விரைவாகச் சரி செய்தலும் ஏதுவாகிறது.

- ❖ அலகு-II-ன் ஒற்றை அடைப்பு காற்று முன் சூடாக்கி (Single Seal Air Pre Heater), ரூபாய் 12.21 கோடி செலவில், இரட்டை அடைப்பு காற்று முன் சூடாக்கியாக மாற்றப்பட்டு, கொதிகலனின் உலை அழுத்தம் (Boiler Furnace Pressure) எதிர்மறையில் (Negative side) பராமரிக்கப்பட்டதால், அலகு-II முழுத் திறனில் இயக்கப்படுகிறது.

- ❖ 11,590 மரக்கன்றுகள் வடசென்னை அனல் மின் நிலையம்–I வளாகத்திற்குள்ளும் மற்றும் சாம்பல் ஏரி பகுதியிலும் நடப்பட்டு, பசுமை வளைய உருவாக்கம் தொடங்கப்பட்டுள்ளது. மேலும், இயற்கைச் சூழலைப் பாதுகாக்க, 2,000 மரக்கன்றுகள் நடவும் திட்டமிடப்பட்டுள்ளது,

2023 ஏப்ரல் 12]

வடசென்னை அனல் மின் நிலையம்-II (2 x 600 மெகாவாட்)

திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்துள்ள வடசென்னை அனல் மின் நிலையம்-II (வ.செ.அ.மி.நி-II), தலா 600 மெகாவாட் திறன் கொண்ட 2 அலகுகள் மொத்தம் 1,200 மெகாவாட் நிறுவு திறன் கொண்டவை.

குறிப்பிடத்தக்க சாதனைகள்:-

- *வ.செ.அ.மி.நி II-ன் அலகு II, 2022–2023 ஆம் நிதியாண்டில் 11.1.2023 முதல் 13.3.2023 வரை 61 நாட்கள் தொடர்ந்து செயல்பாட்டில் இருந்தது.*

- *நிலையம் நிறுவப்பட்ட காலத்திலிருந்து 2022 வரை செயல்பாட்டில் இல்லாமல் இருந்த நீராவி நீர் பகுப்பாய்வு (SWAS) அமைப்பு முற்றிலும் பழுது பார்க்கப்பட்டு, பிப்ரவரி 2023-ல் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டது. முக்கிய காரணிகளான pH value, Dissolved oxygen, Cation conductivity ஆகியவைமூலம் நீராவி மற்றும் நீர் தன்மைகள் வரையறைக்குள் இருக்குமாறு தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது.*

2019 ஆம் ஆண்டு முதல் செயல்பாட்டில் இல்லாமல் இருந்த நீர் மெருகூட்டப்பட்ட அமைப்பு (CPU) இரண்டு அலகுகளிலும் சேவைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இதன்மூலம், உலோகத் துகள்கள், குளோரைடு போன்றவை நீக்கப்பட்டு, நீரின் தரம் மேம்படுத்தப்பட்டுள்ளது. இதனால், கொதிகலன் குழாய் வெடிப்புகள்மூலம் ஏற்படக்கூடிய மின் உற்பத்தி பாதிப்புகள் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளன.

- *அலகு 2-ல், உயர் அழுத்த சூடேற்றிகளின் (HP Heaters) இரண்டு நிலைகளும் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டு, வெப்ப விகித பரிமாற்றம் (Heat Rate) மேம்படுத்தப்பட்டு, அதன்மூலம் நிலக்கரி நுகர்வு குறைக்கப்பட்டுள்ளது.*

- *அலகு 1-ல், உயர் அழுத்த சூடேற்றிகளில் (HP Heaters) ஒரு நிலை செயல்பாட்டில் உள்ளது. 2018 முதல் செயல்பாட்டில் இல்லாத மற்றொரு நிலை சூடேற்றியை மாற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

[2023 ஏப்ரல் 12

- ❖ மூன்றாம் நிலை செயல்முறைப்படுத்தப்பட்ட தலைகீழ் சவ்வூடு பரவல் (Tertiary Treated Reverse Osmosis) நீரை பயன்படுத்தியதன்மூலம், அனல் மின் நிலையத்திற்கு உபயோகப்படுத்தப்படும் நீரின் செலவுகளை 45 சதவிகிதம் குறைத்ததோடு, இயக்கம் மற்றும் பராமரிப்பு செலவுகளைக் குறைத்து, ஆண்டிற்கு ரூ.18.72 கோடி வரை சேமிக்கப்படுகிறது.

- ❖ அலகு 1-ல் கொதிகலன் குழாய்களில் இரசாயன சுத்திகரிப்புப் பணி செய்து முடிக்கப்பட்டது. இப்பணி நிறைவு பெற்ற பின், அலகு 1-ல் மின் உற்பத்தி 450 மெகாவாட்டுக்கு உயர்த்தப்பட்டது. இதன்மூலம், கொதிகலன் குழாய் பாதிப்புகள் குறையத் தொடங்கியதால், குழாயின் நீர் சுவர் பகுதியில் வெப்ப பரிமாற்றம் அதிகமாகி, அதன் செயல்திறன் மேம்படுத்தப்பட்டுள்ளது.

- ❖ அழுத்தப்பட்ட அடர்த்தியான உலர் சாம்பல் அனுப்பும் அமைப்பு (PDFAC) இரண்டு அலகுகளிலும் நிறுவப்பட்டு, அலகு 1-ல் செயல்பாட்டுக்கு வந்துள்ளதால், தினமும் கூடுதலாக 700 டன் சாம்பல் கையாளப்பட்டு, முந்தைய ஆண்டை விடவும் கூடுதல் வருவாய் கிடைக்கப் பெறுவதோடு, கைமுறையாக சாம்பல் அகற்றும் பணி முற்றிலும் நிறுத்தப்பட்டு, சுற்றுச்சூழலையும் தூய்மையாக வைத்திருக்க முடிகிறது. அழுத்தப்பட்ட அடர்த்தியான உலர் சாம்பல் அனுப்பும் முறை (PDFAC) மூலம் முழுவதுமாக உலர் சாம்பல் கடத்தப்படுவதால், புகைபோக்கியில் சாம்பல் எதுவும் சுமந்து செல்லாமல், உமிழ்வு நிலை குறைந்து கட்டுக்குள் பராமரிக்க முடிகிறது.

செயல்திறனை மேம்படுத்துவதற்கான வழி:

மாசு கட்டுப்பாட்டு வாரிய விதிமுறைகளுக்கேற்ப சுற்றுச்சூழல் காரணிகளை மேம்படுத்தும் வகையில், தூசி பிரித்தெடுத்தல் மற்றும் தூசி ஒடுக்க அமைப்பை நிறுவும் பணிகள், ரூ.30.77 இலட்சம் செலவில் நடைபெற்று வருகின்றன.

அனைத்து அனல் மின் நிலையங்களிலும், நிலக்கரியின் தரக்கணிப்புக்காக தானியங்கி ஐசோபெரிபால் பாம் கலோரி மீட்டர் (Automatic Isoperibol Bomb Calorimeters) சுமார் ரூ.1.68 கோடி மதிப்பீட்டில் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டது.

2023 ஏப்ரல் 12]

உலர் சாம்பல் விற்பனைமூலம் வருவாய் பெருக்கம்

மின் வாரியம் பல ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் எடுத்து, உலர் சாம்பலை அதன் பயனீட்டாளர்களான சிமெண்ட் ஆலைகள், கட்டுமான கற்கள் ஆலைகள், கல் நார் தகடு (ஆஸ்பெஸ்டாஸ் ஷீட்) தயாரிப்பு ஆலைகள், தயார் நிலை கான்கிரீட் உற்பத்தி ஆலைகள் ஆகியவற்றிற்கு மின் ஏல அடிப்படையில் நீண்ட கால ஒப்பந்தங்களை வழங்கியது. அதன் வாயிலாக, 2022-23 ஆம் நிதியாண்டில் ரூ.190.80 கோடி அளவு வருவாய் ஈட்டியுள்ளது. இது 2020-21 ஆம் நிதியாண்டைவிட 105 சதவிகிதம் அதிகமாகும்.

வ.எண்	நிதியாண்டு	மார்ச் மாதம் இறுதி வரை வருவாய் (கோடியில்)
1	2011-12	93.30
2	2012-13	87.64
3	2013-14	112.37
4	2014-15	117.07
5	2015-16	101.29
6	2016-17	91.05
7	2017-18	84.92
8	2018-19	93.66
9	2019-20	92.81
10	2020-21	92.90
11	2021-22	122.13
12	2022-23	190.80

II. எரிவாயு சுழலி மின் நிலையங்கள்

எரிவாயு சுழலி மின் நிலையங்களில், இயற்கை எரிவாயுவை எரிபொருளாகப் பயன்படுத்தி எரிவாயு சுழலிகளால் இயக்கப்படும் மின்னாக்கிமூலம் மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் 516.08 மெகாவாட் திறன் கொண்ட எரிவாயு சுழலி நிலையங்களிலிருந்து, இந்திய எரிவாயு கழகத்தின்மூலம் (M/s. GAIL) வழங்கப்படும் இயற்கை எரிவாயுவின் அளவிற்கு ஏற்ப மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றன.

[2023 ஏப்ரல் 12

வழுதூர் எரிவாயு சுழலி மின் நிலையம் (187.2 மெகாவாட்): அலகு – I (95 மெகாவாட்) & அலகு – II (92.2 மெகாவாட்)

இந்திய எரிவாயுக் கழகம் (M/s. GAIL) ஒதுக்கீடு செய்யப்பட்ட அளவான நாளொன்றுக்கு 8,88,000 கன மீட்டர் எரிவாயுவிற்குப் பதிலாக 7,50,000 கன மீட்டர் எரிவாயுவை மட்டுமே வழங்கி வருவதால், இந்த நிலையம் 155-160 மெகாவாட் அளவே மின் உற்பத்தி செய்து வருகின்றது.

குத்தாலம் எரிவாயு சுழலி மின் நிலையம் (101 மெகாவாட்)

ஒப்புக்கொள்ளப்பட்ட அளவான நாளொன்றுக்கு 4,50,000 கன மீட்டர் என்ற அளவிற்குப் பதிலாக நாளொன்றுக்கு 3,75,000 கன மீட்டர் எரிவாயு அளவே குத்தாலம் எரிவாயு சுழலி மின் நிலையத்திற்கு இந்திய எரிவாயுக் கழகத்தால் வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிலையம் 70 மெகாவாட் அளவே மின் உற்பத்தி செய்து வருகின்றது.

திருமாக்கோட்டை (கோவில்களப்பால்) எரிவாயு சுழலி மின் நிலையம் (107.88 மெகாவாட்)

இந்திய எரிவாயுக் கழகம், ஒதுக்கீடு செய்யப்பட்ட அளவான நாளொன்றுக்கு 4,50,000 கன மீட்டர் எரிவாயுவுக்குப் பதிலாக, சுமார் 1,75,000 கன மீட்டர் எரிவாயுவை மட்டுமே அளித்து வருவதால், இந்த நிலையம் சுமார் 20 மெகாவாட் அளவிற்கே உற்பத்தி செய்து வருகின்றது.

பேசின்பாலம் எரிவாயு சுழலி மின் நிலையம் (120 மெகாவாட் (4x30))

பொதுவாக, சென்னை மின் கட்டமைப்பின் மின்னழுத்தத்தை (110 கிலோ வோல்ட்) மேம்படுத்த 2-3 அலகுகள் மின்தேக்கி முறையில் இயக்கப்படுகின்றன. அவசரக் காலங்களில்/ மின்வலையமைப்பில் இயக்கத் தேவையான மின்சாரம் இல்லாத நிலையில் வலையமைப்புக்கு மின்சாரம் வழங்கிடத் தேவையான காலங்களிலும், இம்மின் நிலையத்தை, அதிவேக டீசல் கொண்டு இயக்கி மின் உற்பத்தி செய்ய இயலும்.

இரண்டு எரிவாயு சுழலிகளை நாப்தாவிற்குப் பதில் மறுவாயுவாக்கிய திரவநிலை எரிவாயுவைக் கொண்டு இயக்கிடத் தேவையான மாற்றங்களைச் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. இதனால் நாப்தா/அதிவேக

2023 ஏப்ரல் 12]

டீசல் எரிபொருளாகச் செயல்படுவதைவிட குறைவான செலவில் யூனிட்டுகளை இயக்க முடியும்.

III. புனல் மின் உற்பத்தி நிலையங்கள்

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்குச் சொந்தமான 47 புனல் மின் நிலையங்கள் (2321.90 மெகாவாட் மொத்த திறன் கொண்ட 107 இயந்திரங்கள்) ஈரோடு, காடம்பாறை, குந்தா மற்றும் திருநெல்வேலி ஆகிய புனல் மின் உற்பத்தி வட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. பெரும்பாலான புனல் மின் நிலையங்கள் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் அமைந்துள்ளன.

நீர்பாசனம் அடிப்படையில் அமைந்த மின் உற்பத்தி நிலையங்கள் (29)	891.25 மெகாவாட்
நீர்பாசனம் அல்லாத மின் உற்பத்தி நிலையங்கள் (17)	1030.65 மெகாவாட்
நீரேற்று புனல் மின் நிலையம் (1)	400.00 மெகாவாட்

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்குச் சொந்தமான 76 அணைகள், சிற்றணைகள், நீர்த்தேக்கம் மற்றும் தடுப்பணைகள் புனல் பிரிவினால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

2022-23 ஆண்டுகளில் குறிப்பிடும்படியான சாதனைகள்:

கடந்த 10 வருட புனல் மின் உற்பத்தியைவிட நடப்பு (2022-23) ஆண்டில் மிக அதிக புனல் மின் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

கடந்த 10 வருடக் காலங்களில் புனல் மின் உற்பத்தி நிலையங்கள்மூலம் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தின் அளவு கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. நடப்பு (2022-23) ஆண்டில் கடந்த 10 வருட புனல் மின் உற்பத்தியை விட மிக அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

ஆண்டு	புனல் மின் உற்பத்தி மில்லியன் யூனிட்டில்
2012-13	2,896.32
2013-14	5,098.68

[2023 ஏப்ரல் 12

ஆண்டு	புனல் மின் உற்பத்தி மில்லியன் யூனிட்டில்
2014-15	5,187.59
2015-16	4,641.15
2016-17	2,505.23
2017-18	3,062.65
2018-19	5,472.15
2019-20	4,964.32
2020-21	5,386.58
2021-22	5,514.10
2022-23	6,174.08

மத்திய மின்சார ஆணையத்தின் (CEA) இலக்கை விஞ்சிய சாதனை:

2022-23 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், மத்திய மின்சார ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்ட புனல் மின் உற்பத்திக்கான இலக்கை விஞ்சியது. நடப்பு (2022-23) ஆண்டில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் 6174.08 மில்லியன் யூனிட் புனல் மின் உற்பத்தி செய்துள்ளது. இது மத்திய மின்சார ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்ட இலக்கைவிட 2261.08 மில்லியன் யூனிட் அதிகமாகும். புனல் மின் நிலையங்களின் 2022-23 ஆம் ஆண்டிற்கான செயல்திறன் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

ஆண்டு	மத்திய மின்சார ஆணையத்தின் இலக்கு மில்லியன் யூனிட்டில்	மின் உற்பத்தி மில்லியன் யூனிட்டில்	நிலைய சுமை காரணி %	நிலைய இருப்பு காரணி %	மின் உற்பத்திக்கான செலவு பைசாவில்
2022-23	3913.00	6174.08	30.35	82.71	65.57

2023 ஏப்ரல் 12]

2022-23 ஆண்டின் புனல் மின் உற்பத்தி, கடந்த வருட புனல் மின் உற்பத்தியை விஞ்சியது

கடந்த வருட (2021-2022) புனல் மின் உற்பத்தியைவிட, நடப்பு (2022-23) ஆண்டில் பாசன புனல் மின் நிலையங்களின் மின் உற்பத்தி மற்றும் பாசனமல்லாத புனல் மின் நிலையங்களின் மின் உற்பத்தி முறையே 281.10 மில்லியன் யூனிட் மற்றும் 378.88 மில்லியன் யூனிட்டுகள் அதிகமாக உள்ளது. எனவே, கடந்த வருடத்தைவிட இந்த வருடம் புனல் மின் நிலையங்களின் மொத்த மின் உற்பத்தி 659.98 மில்லியன் யூனிட்டுகள் கூடுதலாகும்.

2022-23 ஆம் ஆண்டில் முந்தைய அதிகபட்ச மின் உற்பத்தியை விஞ்சிய புனல் மின் நிலையங்கள்

2022-23 ஆம் ஆண்டில், புனல் மின் நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட முறையான காலமுறை பராமரிப்பு மற்றும் முன்தடுப்பு பராமரிப்பு நடவடிக்கைகளினால் மின் இயந்திரங்களின் இயக்கக்கூடிய நேரம் அதிகரித்தது. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்குச் சொந்தமான, கீழ்க்கண்ட புனல் மின் நிலையங்களின் மின் உற்பத்தி, முந்தைய அதிகபட்ச மின் உற்பத்தியை விஞ்சியது.

வ. எண்	புனல் மின் நிலையத்தின் பெயர்	முந்தைய அதிகபட்ச மின் உற்பத்தி (மில்லியன் யூனிட்டில்)	2022-23 ஆம் ஆண்டில் அதிகபட்ச மின் உற்பத்தி (மில்லியன் யூனிட்டில்)	கூடுதல் மின் உற்பத்தி சதவிகிதத்தில் (%)
1.	மேட்டூர் சுரங்க மி.நி. (4X50 மெகாவாட்)	759.86 (1994-95)	797.05	4.89
2.	மேட்டூர் அணை மி.நி. (4X12.5 மெகாவாட்)	209.71 (1964-65)	226.84	8.17
3.	பவானி கட்டளை கதவணை மி.நி.–II (2X15 மெகாவாட்)	84.75 (2021-22)	94.53	11.54

4.	பவானி கட்டளை கதவணை மி.நி.–III (2X15 மெகாவாட்)	68.59 (2021-22)	76.34	11.30
5.	வைகை சிறு புனல் மி.நி. (2 X 3 மெகாவாட்)	29.83 (2021-22)	31.15	4.43
6.	அமராவதி மி.நி. (2X2 மெகாவாட்.)	10.30 (2009-10)	10.45	1.46
7.	சாத்தூர் அணை மி.நி. (1X7.5 மெகாவாட்.)	23.36 (2005-2006)	27.45	17.51
8.	பெருஞ்சாணி சிறு புனல் மின் நிலையம் (2X 0.65 மெகாவாட்)	6.00 (2021-22)	6.08	1.33

வலதுகரை கால்வாய்/பவானி சாகர் புனல் மின் நிலையத்தில் ஸ்டப் தண்டு மாற்றி அமைக்கும் பணி

வலதுகரை கால்வாய்/பவானிசாகர் புனல் மின் நிலையத்தில், அலகு-1-ல் ஸ்டப் தண்டு இரண்டு முறை உடைந்தது. 2015-லிருந்து தொடர்ச்சியாகப் பழுதடைந்ததால் ஸ்டப் தண்டு ரூ.7.67 கோடி செலவில் மாற்றி அமைக்கப்பட்டு 11.11.2022 அன்று அலகு-1 இயக்கப்பட்டது. இன்று வரை அதன் நிறுவு திறனான 4 மெகாவாட் மின் உற்பத்தியை வெற்றிகரமாக உற்பத்தி செய்து வருகிறது.

கீழ் மேட்டூர் கதவணை மி.நி.– IV, ஊராட்சிக்கோட்டை புனல் மின் நிலையத்தில் பழுதடைந்த கதவணைகளைப் பழுதுநீக்கம்/ மாற்றும் பணி

கீழ் மேட்டூர் கதவணை மி.நி.–IV, ஊராட்சிக்கோட்டை புனல் மின் நிலையத்தில் 18 எண்ணிக்கையிலான கதவணைகள் 30 வருடங்களுக்கு முன்னர் நிறுவப்பட்டது. 4.9.2019-லிருந்து பழுதடைந்த கதவணை எண் 17 பழுதுநீக்கம் செய்யப்படாமல்

2023 ஏப்ரல் 12]

இருந்தது. பழுதுநீக்கும் பணிகள் ரூ.1.78 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு பிப்ரவரி 2023-ல் பணிகள் முடிக்கப்பட்டன.

கதவணைகள் அனைத்தும் பரிசோதிக்கப்பட்டு, 17 எண்ணிக்கையிலான கதவணைகள் மிக அதிகமாகப் பழுதடைந்துள்ளதாகக் கண்டறியப்பட்டது. ஆகவே, முதற்கட்டமாக 7 எண்ணிக்கையிலான கதவணைகளை மாற்றி அமைக்க ரூ.10.89 கோடிக்கான பணி ஆணை வழங்கப்பட்டது. 4 கதவணைகள் மாற்றி அமைக்கும் பணி முடிக்கப்பட்டு, 1 கதவணை நிறுவும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மீதமுள்ள 10 கதவணைகள் 2023-24 ஆம் ஆண்டில் மாற்றப்படவுள்ளன.

சுருளியாறு புனல் மின் நிலையத்தில் உயர் நீர் அழுத்த குழாய் மாற்றி அமைக்கும் பணி

சுருளியாறு புனல் மின் நிலையம், பெரியார் வட்டத்தில் 27.08.1978 ஆம் வருடம் நிறுவப்பட்டு, அதன் முழு நிறுவுத் திறனான 35 மெகாவாட்டை உற்பத்தி செய்து வருகிறது. இப்புனல் மின் நிலையம், கடந்த 43 வருடங்களாக அதன் ஆயுட்காலமான 35 வருடங்களையும் கடந்து செயல்பாட்டில் இருந்து வந்தது.

இப்புனல் மின் நிலையத்தின் உயர் நீர் அழுத்தக் குழாயின் மொத்த நீளம் 2885.17 மீட்டர். இக்குழாயில் சுமார் 220 மீட்டர் நீளத்திற்கு வெடிப்பு ஏற்பட்டதால், மின் உற்பத்தி செய்ய இயலவில்லை. ஆகவே, இதனை சரி செய்ய ரூ.14.45 கோடிக்கான பணி ஆணை வழங்கப்பட்டு, வனத் துறையினரின் ஒப்புதல் பெறப்பட்டு, 4.1.2023 முதல் பணிகள் நடைபெற்று வருகிறது.

கோதையார் புனல் மின் நிலையம்–II-ல் பழுதடைந்த ஸ்டேட்டர் சுருளினை (Stator coils) பழுதுநீக்கம் செய்யும் பணி

2.12.2022 அன்று பெய்த இடியுடன்கூடிய மிக பலத்த மழையின் போது, கோதையார் புனல் மின் நிலையம் II-ல் மின்னாக்கியின் (Generator) ஸ்டேட்டர் சுருளில் ஏற்பட்ட குறுகிய மின்சுற்று பழுதின் காரணமாக தீப்பொறி மற்றும் புகை மண்டலம் ஏற்பட்டது. இதனால் ஸ்டேட்டர் சுருள் (Stator coils) பழுதடைந்து, மின் உற்பத்தி செய்ய இயலவில்லை. ஸ்டேட்டர் சுருளினை பழுது நீக்கம் செய்ய ரூ.93.13 இலட்சத்திற்கான பணி ஆணை 25.1.2023 அன்று வழங்கப்பட்டு, அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குந்தா புனல் மின் நிலையங்கள் 2, 3, 5 & 6-ல் உள்ள 11 எண்ணிக்கை எஃகு உயர் நீர் அழுத்த குழாய்களுக்கு (Penstock Pipe) காப்பு பூச்சு வேலை செய்யும் (Protective coating) பணி

குந்தா புனல் மின் நிலையங்கள் 2, 3, 5 & 6 ஆகியவை 1960 ஆம் ஆண்டுகளில் நிறுவப்பட்டன. இப்புனல் மின் நிலையங்களில் உள்ள 11 எண்ணிக்கை எஃகு உயர் நீர் அழுத்த குழாய்களுக்கு (Penstock Pipe) காப்பு பூச்சு வேலை செய்ய (Protective coating), 18.6.2022 அன்று நிர்வாக அனுமதி எண் 131 வாயிலாக, ரூபாய் 24.89 கோடி திட்ட மதிப்பீட்டில் பணிகளை மேற்கொள்ள ஒப்புதல் பெறப்பட்டு, அதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

காடம்பாறை நிலத்தடி மின் உற்பத்தி நிலையத்தின் அழுத்தக் குடைவங்கள் (Pressure shaft) I & II-ல் ஏற்பட்டுள்ள நீர்க்கசிவுகள் மற்றும் சேதங்களை சீரமைக்கும் பணிகள்

காடம்பாறை மின் உற்பத்தி வட்டத்தில், காடம்பாறை நிலத்தடி மின் உற்பத்தி நிலையத்தின் அழுத்தக் குடைவங்கள் (Pressure shaft) I & II-ல் ஏற்பட்டுள்ள நீர்க்கசிவுகள் மற்றும் சேதங்களைச் சீரமைக்க, 29.9.2022 தேதியிட்ட நிர்வாக அனுமதி எண் 17 வாயிலாக ரூபாய் 6.93 கோடி திட்ட மதிப்பீட்டில் பணிகளை மேற்கொள்ள ஒப்புதல் பெறப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

காடம்பாறை புனல் மின் நிலையத்தில் உள்ள 100 மெகாவாட் திறன் கொண்ட அலகு 4-ல் உள்ள குறைபாடுள்ள மின்னாக்கி சுருள்களைச் (Stator coils) சீரமைக்கும் பணி

காடம்பாறை புனல் மின் நிலையத்தில் உள்ள 100 மெகாவாட் திறன் கொண்ட அலகு 4-ல், குறைபாடுள்ள மின்னாக்கி சுருள்களை (Stator coils) வெற்றிட அழுத்தம் செறிவூட்டப்பட்ட தொழில்நுட்ப (Vaccum pressure Impregnated) முறையில், மறுகாப்பு செய்து சரிசெய்வதன் மூலமாக, இயக்கத்திற்குக் கொண்டு வருவதற்கான பணிகளை மேற்கொள்ள ரூபாய் 2.75 கோடி மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

காடம்பாறை புனல் மின் நிலையத்தில் உள்ள 100 மெகாவாட் திறன் கொண்ட அலகு 1-ல் புதிய சுழலி தண்டு (Turbine Shaft) கொள்முதல் செய்யும் பணி

காடம்பாறை புனல் மின் நிலையத்தில் உள்ள 100 மெகாவாட் திறன் கொண்ட அலகு 1-க்காக, 8 மெட்ரிக் டன் எடை கொண்ட

2023 ஏப்ரல் 12]

சுழலி தண்டை (Turbine Shaft) புனைந்து வழங்கும் பணிக்காக 13.10.2022 தேதியிட்ட நிர்வாக அனுமதி எண் 209 வாயிலாகப் பெறப்பட்டு ரூபாய் 1.76 கோடி திட்ட மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

உமைப்பாளையம் பவானி தடுப்பணை மின் நிலையம்-2-ல் தீ விபத்தால் ஏற்பட்ட பழுதுகளைச் சீரமைக்கும் பணிகள்

14.7.2020 அன்று உமைப்பாளையம், பவானி தடுப்பணை மின் நிலையம் 2-ல், அலகு 2 மற்றும் கட்டுப்பாட்டு அறையில் தீ விபத்து ஏற்பட்டது. இதனால் ஏற்பட்ட பழுதுகளைச் சீரமைக்க பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கீழ் மேட்டூர் கதவணை மின் நிலையம்-2, நெருஞ்சிப்பேட்டையில் பழுதடைந்த நிலையில் உள்ள கதவணை எண் 11-ஐ மாற்றி அமைக்கும் பணி

கீழ்மேட்டூர் கதவணை மின் நிலையம்-2, நெருஞ்சிப்பேட்டையில் பழுதடைந்த நிலையில் உள்ள கதவணை எண் 11-ஐ மாற்றி அமைக்க, 3.1.2023 தேதியிட்ட நிர்வாக அனுமதி எண் 01 வாயிலாக ரூபாய் 1.87 கோடி திட்ட மதிப்பீட்டில் பணிகளை மேற்கொள்ள ஒப்புதல் பெறப்பட்டது. பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சுரங்க மின் நிலையம்/மேட்டூரில் அலகு 3-ல் ரன்னர் அசெம்பிலி (Runner Assembly)-ல் ஏற்பட்டுள்ள எண்ணெய் கசிவைச் சரி செய்து செயல்பாட்டிற்குக் கொண்டு வரும் பணி

சுரங்க மின் நிலையம்/மேட்டூரில் அலகு 3-ல் ரன்னர் அசெம்பிளி (Runner Assembly)-ல் ஏற்பட்டுள்ள எண்ணெய் கசிவைச் சரி செய்து செயல்பாட்டிற்குக் கொண்டு வர ரூபாய் 1.57 கோடி மதிப்பீட்டில் 18.3.2023 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு, பழுதுநீக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சோலையாறு புனல் மின் நிலையம்-I அலகு 1 மற்றும் 2-களில் உயர்நீர் அழுத்த குழாயின் விரிவாக்க இணைப்பை சீர் செய்வதற்கான பணிகள்

சோலையாறு புனல் மின் நிலையம் I-ன் அலகு 1-ல் உயர்நீர் அழுத்த குழாயின் நங்கூரம் எண் 3,4,5 மற்றும் அலகு 2-ல் நங்கூரம்

எண் 2-ல் உள்ள அரித்த மற்றும் விரிவாக்க இணைப்பைச் சீர் செய்வதற்கான பணிகளை மேற்கொள்ள ரூபாய் 1.40 கோடி மதிப்பீட்டில் பணி ஆணை வழங்க, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது.

புனல் மின் நிலையங்களில் புதுப்பித்தல், நவீனமயமாக்குதல் மற்றும் செயல்திறன் உயர்த்த (பு.ந.செ.உ) செயல்பாட்டில் உள்ள பணிகள்

தமிழ்நாட்டில் உள்ள சில புனல் மின் நிலையங்கள் மிகவும் பழமையானவை. இப்புனல் மின் நிலையங்கள், தன் சராசரி ஆயுட்காலமான 30-35 வருடங்களுக்கும் மேலாக செயல்பாட்டில் இருந்து வருகின்றன.

சில புனல் மின் நிலையங்கள் நீண்ட ஆயுட்காலம் ஆனதால், தனது முழு நிறுவு திறனில் செயல்பட இயலவில்லை. புனல் மின் நிலையங்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்தும் வகையில் புதுப்பித்தல், நவீனமயமாக்குதல் மற்றும் செயல்திறன் உயர்த்துவதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தற்பொழுது, மோயாறு மற்றும் கோதையாறு ஆகிய புனல் மின் நிலையங்களில், புதுப்பித்தல், நவீனமயமாக்குதல் மற்றும் செயல்திறன் உயர்த்துவதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்கான விவரங்கள் கீழ்க்கண்டவாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன:—

திட்டம்	புனல் மின் நிலையங்களின் ஆயுட்காலம் (வருடங்களில்)	தற்போதைய நிறுவுதிறன் (மெகாவாட்டில்)	பு.ந.செ. உயர்வுக்குப் பின் நிறுவுதிறன் (மெகாவாட்டில்)	திட்ட மதிப்பீடு (கோடியில்)	சராசரி ஆண்டு மின் உற்பத்தி (மில்லியன் யூனிட்டில்)
மோயாறு புனல் மின் நிலையம்	70	3 X 12	3 X 14	ரூ.121.13	133.91
கோதையாறு புனல் மின் நிலையம்- I	52	1 X 60	1 X 70	ரூ.88.48	157.81

2023 ஏப்ரல் 12]

அணைகள் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம்-2

*தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்குச் சொந்தமான 27 அணைகளை ரூ.461 கோடி செலவில் உலக வங்கி நிதியுதவியுடன் அணைகள் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் புனரமைக்க அனுமதி வழங்கப்பட்டது. இத்திட்டமானது இந்தியா முழுவதும் மத்திய நீர்வள ஆணையத்தின் பொறுப்பின்கீழ் (*Nodal agency*) பல்வேறு மாநில அரசுகள்/மாநில அரசின் நிறுவனங்கள்/மத்திய அரசின் நிறுவனங்கள் செயல்படுத்தி வருகின்றன.*

27 அணைகளின் பட்டியல்

(i) நீலகிரி மாவட்டம்-16 அணைகள்

பைக்காரா அணை, மரவகண்டி அணை, மோயார் முன் அணை, நிராலப்பள்ளம் திருப்பு அணை, பார்சன்ஸ் பள்ளத்தாக்கு அணை, கிழக்கு வராஹப்பள்ளம் சிற்றணை, பைக்காரா புதிய முன் அணை, சாண்டிநல்லா அணை, மேல் பவானி நீரேற்றம் சிற்றணை, மேற்கு நீர்பிடிப்பு சிற்றணை-1, மேற்கு நீர்பிடிப்பு சிற்றணை-2, மேற்கு நீர்பிடிப்பு சிற்றணை-3, மேற்கு வராஹப்பள்ளம் சிற்றணை, அவலாஞ்சி அணை, முக்குர்த்தி அணை, குந்தா பாலம் அணை.

(ii) கோயம்புத்தூர் மாவட்டம்-2 அணைகள்

காடம்பாறை அணை, பில்லூர் அணை.

(iii) திருநெல்வேலி மாவட்டம்-3 அணைகள்

பாபநாசம் திருப்பு அணை, சேர்வலார் அணை, தாமிரபரணி அணை.

(iv) கன்னியாகுமரி மாவட்டம்-3 அணைகள்

கோதையார் முதல் அணை, கோதையார் இரண்டாம் அணை, சின்ன குட்டியார் அணை.

(v) தேனி மாவட்டம்-3 அணைகள்

மணலார் அணை, வெண்ணிரார் அணை, பெரியாறு முன் அணை.

மேற்கண்ட அணைகளின் புனரமைப்புப் பணியானது, நீர்க்கசிவு தடுத்தல், கரைகளை வலுப்படுத்துதல், தூர்வாருதல், அணை குறித்த தகவல்களைக் கருவிமயமாக்குதல், அணைகளின் கதவுகளைச் சீரமைத்தல் மற்றும் மின்னாக்கப் பணிகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இந்த பணிகளைச் செய்து முடிப்பதன்மூலம் அணையின் ஆயுட்காலம் அதிகரிக்கப்பட்டு, நீண்ட காலம் மற்றும் தொடர்ச்சியான நீர் மின் உற்பத்தி உறுதி செய்யப்படும்.

இதுவரை 13 அணைகளில், பல்வேறு துறை சார்ந்த (நீரியல், வடிவமைப்பு, புவியியல், நீர் இயக்கவியல்) நிபுணர்கள் உள்ளடங்கிய "அணை பாதுகாப்பு ஆய்வுக் குழுவினால் (DSRP)" பரிந்துரைக்கப்பட்ட புனரமைப்புப் பணிகளுக்கு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டு, பணிகள் தற்போது நடைப்பெற்று வருகின்றன.

மீதமுள்ள 10 அணைகளான மேல் பவானி நீரேற்று அணை, கிழக்கு வராஹபள்ளம் சிற்றணை, மேற்கு நீர்பிடிப்பு சிற்றணை – 1, மேற்கு நீர்பிடிப்பு சிற்றணை – 2, மேற்கு நீர்பிடிப்பு சிற்றணை – 3, மேற்கு வராஹபள்ளம் சிற்றணை, குந்தாபாலம் அணை, காடம்பாறை அணை, சின்னகுட்டியார் அணை மற்றும் கோதையார் முதல் அணை ஆகியவற்றின் புனரமைப்புப் பணிகளுக்கு உலக வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டவுடன் அதற்கான ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டு புனரமைப்புப் பணிகள் இத்திட்டத்தின் கால அளவான 6 ஆண்டுகளுக்குள் (2021-2027) செய்து முடிக்கப்படும்.

IV. மத்திய தொகுப்பிலிருந்து 1.4.2023 முதல் கிடைக்கும் மின்சாரம்

மின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக மின் அமைச்சகத்தால் மத்திய மின் உற்பத்தி நிலையங்களின் பங்கை ஒதுக்கீடு செய்வதன் அடிப்படையில் நீண்ட கால மின் கொள்முதல் ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இவற்றின்மூலம் 7,170 மெகாவாட் அளவிற்கு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இருப்பினும், தற்போது 5,900 மெகாவாட் மட்டுமே கிடைக்கிறது.

V. மின் கொள்முதல்

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், மரபு வழி ஆதாரங்கள் மூலமாக 16,417.38 மெகாவாட் நிறுவு திறனும் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆதாரங்கள் மூலமாக 18,288.78 மெகாவாட் நிறுவு

TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 12]

திறனும் கொண்டு, மாநிலத்தின் மின் தேவையை 24X7 நேரமும் நிறைவு செய்கிறது.

i) நீண்ட கால மின் கொள்முதல்

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், 2830 மெகாவாட் முழு நேர மின்சாரத்தை (RTC), 2013 முதல் 15 ஆண்டுகளுக்கு நிறைவேற்றப்பட்டுள்ள நீண்டகால மின் கொள்முதல் ஒப்பந்தங்கள்மூலம் பெற்று வருகிறது.

ii) நடுத்தர கால மின் கொள்முதல்

இதேபோல், நடுத்தரக் கால மின் கொள்முதல் ஒப்பந்தங்கள்மூலம், மூன்று/ஐந்து ஆண்டுகளுக்கு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், 252 மெகாவாட் முழு நேர மின்சாரத்தைப் பெறுகிறது.

iii) குறுகிய கால மின் கொள்முதல்

இவற்றைத் தவிர தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், 2023 ஆம் ஆண்டின் பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களின் மின் தேவைக்காக, குறுகிய கால ஒப்பந்தங்களின்கீழ், 1,562 மெகாவாட் முழுநேர மின்சாரத்தை, உள் மாநில மற்றும் வெளி மாநில உற்பத்தியாளர்களிடமிருந்து, ஒரு யூனிட் மின்சாரம் ரூ.8.50 அளவில் கொள்முதல் செய்வதற்கு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மின் தேவையை சமாளிக்கும் வகையில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், பிப்ரவரி 2023 முதல் மே 2023 வரைக்கான மின் தேவையைப் பூர்த்தி செய்யும்பொருட்டு, 1,562 மெகாவாட் முழு நேர மின்சாரத்தை, ஒரு யூனிட்டின் விலை ரூ.8.50-க்கு, டிசம்பர் 2022-லேயே இணைத்துள்ளது. இதன்மூலம், மின் கொள்முதலில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு ரூ.1312 கோடி சேமிப்பு ஏற்பட்டிருக்கிறது.

iv) மின் பரிமாற்ற ஏற்பாடு (SWAP)

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், இரண்டு மின் பகிர்மான நிறுவனங்கள்/மாநிலங்களுக்கிடையே, மின் உபரி மற்றும் பற்றாக்குறை சூழ்நிலைகளில், பருவகால மாறுபாடுகளைப் பொருத்து மின்சாரத்தைப் பரிமாறிக்கொள்ளும் ஸ்வாப் (SWAP)

ஏற்பாட்டை செய்துள்ளது. மேலும், இது பணப்பரிவர்த்தனைகள் இல்லாத மின் பரிமாற்றங்கள் மட்டுமேயாகும்.

பிற மாநிலங்களில் உள்ள உபரி மின்சாரம், தேவையான காலத்தில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு வழங்கப்பட்டு, ஒவ்வோர் ஆண்டும் ஜூன் முதல் செப்டம்பர் வரை உபரி மின்சாரம் கிடைக்கும்போது, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால் திருப்பி அளிக்கப்படும். இது புதுமையான மின் பரிமாற்றம் ஆகும்.

மேற்கண்ட ஏற்பாட்டின்மூலம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் 2023 ஆம் ஆண்டின் கோடை மாதங்களில், முழு நேர (RTC)/காலை மற்றும் மாலை உச்ச நேரங்கள் அடிப்படையில், கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி மின்சாரத்தை இணைத்துள்ளது. இதன்மூலம், ஒரு யூனிட்டு ரூ.10/- என்ற மாலை உச்ச நேர கொள்முதல் செலவைத் தவிர்க்கிறது. இந்த உபரி மின்சாரம் மத்திய பிரதேசம் மற்றும் ராஜஸ்தான் மாநில பகிர்மான நிறுவனங்களிடமிருந்து காலை மற்றும் மாலை உச்ச மின் தேவையின்போது பெற்றுக்கொண்டு ஜனவரி 23 முதல் மார்ச் 23 மாதங்களில் அன்றன்று காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரையிலான காலத்தில் திருப்பி அளிக்கப்படுகிறது.

மீதமுள்ள உச்ச நேர மின் தேவைக்காக, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், மின் பரிமாற்றத்தில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நீண்டகால ஒப்பந்த முறையின்மூலம் கீழ்க்கண்டவாறு இணைத்துள்ளது:

வ. எண்	மாதம்	மெகாவாட்	நேரம்
1.	*மார்ச் 2023*	*1355*	*18.00 மணி முதல் 23.00 மணி வரை*
2.	*ஏப்ரல் 2023*	*1293*	
3.	*மே 2023*	*565*	

மேற்குறிப்பிட்ட ஏற்பாடுகளின்மூலம், தமிழகத்தில் 2023 ஆம் ஆண்டின் கோடை கால மின் தேவை தடையின்றி நிர்வகிக்கப்படும்.

2023 ஏப்ரல் 12]

VI. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி:

தமிழ்நாடு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிறுவு திறனில், 17,445.07 மெகாவாட் (மத்திய தொகுப்பு உட்பட, நீர் மின் சக்தி இல்லாமல்) அதிகபட்ச நிறுவுத் திறனுடன், இந்தியாவிலேயே மூன்றாவது இடத்தில் உள்ளது. சூரிய மின் சக்தியின் நிறுவப்பட்ட திறன் (மேற்கூரை மற்றும் மத்தியத் தொகுப்பு உட்பட) 6689.23 மெகாவாட்டாகவும், காற்றாலை மின் திறன் (மத்தியத் தொகுப்பு உட்பட) 10,067.20 மெகாவாட்டாகவும் இருக்கின்றது. மேலும், இணை மின் உற்பத்தித் திட்டங்களின் திறன் 523.8 மெகாவாட்டாகவும் மற்றும் உயிரி வளி மின் உற்பத்தி ஆலைகளின் திறன் 164.84 மெகாவாட்டாகவும் உள்ளது.

i) காற்றாலை மின் சக்தி

தமிழ்நாடு, 10,067.20 மெகாவாட் (மத்திய தொகுப்பு உட்பட) காற்றாலை நிறுவு திறனுடன், அகில இந்திய அளவில் தொடர்ந்து முன்னிலை வகித்து வருகிறது. இது, நாட்டின் காற்றாலை மின் நிறுவு திறனில் 24% பங்களிப்பாகும். மேலும், 2022–23 ஆம் ஆண்டில், 131.85 மெகாவாட் காற்றாலைகள் கூடுதலாக நிறுவப்பட்டுள்ளன.

இதில், கடந்த 3.7.2022 அன்று, காற்றாலை மின் உற்பத்தித் திறன் அதிகபட்சமாக 5,689 மெகாவாட்டாக எட்டியதுடன், 9-7-2022 அன்று, அதிகபட்சமாக 120.25 மில்லியன் யூனிட் காற்றாலை மின் சக்தி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்கள், குறிப்பாக காற்று மற்றும் சூரியசக்தி ஆகியவை ஏராளமாக உள்ளன. மேலும், தமிழகத்தின் நிலப்பரப்பு, மற்ற மாநிலங்களைக் காட்டிலும், அதிக சூரிய கதிர்வீச்சையும் மற்றும் தீவிர காற்று சக்தியையும் கொண்டதாகவும், தொழில் வளர்ச்சியில் நட்புரீதியான கொள்கைகளைக் கொண்டதாகவும் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியினை பயன்படுத்த போதிய உள்கட்டமைப்பு வசதியினைக் கொண்டதாகவும் இருப்பதால், புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் மிகப் பெரிய வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது.

2022-23 ஆம் ஆண்டில் பிப்ரவரி வரை காற்றலை மின் சக்தி நிலையங்களிலிருந்து 12,368 மில்லியன் யூனிட்டுகள் மின் உற்பத்தி செய்யப்பட்டது. இதில் தனியார் காற்றாலை மின் உற்பத்தியாளர்கள் 2022-2023 ஆம் ஆண்டில் பிப்ரவரி வரை உற்பத்தி செய்த, 8,746

[2023 ஏப்ரல் 12

மில்லியன் யூனிட்டுகள் மின் சக்தியினைத் தங்கள் சொந்த மற்றும் மூன்றாம் நபர் பயன்பாட்டிற்குப் பயன்படுத்தியுள்ளனர்.

காற்றாலை மின் உற்பத்தியில் காற்றாலை வளங்களை ஆராய்ந்ததில், சுமார் 31 ஜிகாவாட் அளவிற்குத் தமிழ்நாடு கடற்கரை ஓரங்களில் காற்றாலை வளங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இதில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், 2 ஜிகாவாட் திறன் அளவிற்கு, கடலோர காற்றாலைகளிலிருந்து ரூ.4.00/யூனிட் என்ற விலைக்கு, மாநில மின் கட்டமைப்பின் வழியே கொள்முதல் செய்ய ஒப்புதல் அளித்துள்ளது.

ii) சூரிய மின் சக்தி

தமிழ்நாடு, சூரிய மின் சக்தி நிறுவு திறனில் (மேற்கூரை மற்றும் மத்தியத் தொகுப்பு உட்பட), 6,689.23 மெகாவாட் நிறுவு திறனுடன், இந்தியாவிலேயே, நான்காவது இடத்தில் உள்ளது. கடந்த 26.2.2023 அன்று, சூரிய மின் சக்தித் திறன் அதிகபட்சமாக 4,866 மெகாவாட் என்ற உச்சத்தையும் மற்றும் 25.2.2023 அன்று, அதிகபட்சமாக 36 மில்லியன் யூனிட் சூரிய சக்தி மின் உற்பத்தியையும் எட்டியுள்ளது. மேலும், 2022-23 ஆம் ஆண்டு பிப்ரவரி வரை, தனியார் சூரிய மின் சக்தி நிலையங்களிலிருந்து, 8,334 மில்லியன் யூனிட்டுகள் உற்பத்தி செய்யப்பட்டு அதிலிருந்து 3090 மில்லியன் யூனிட்டுகள் அவர்களின் சொந்த மற்றும் மூன்றாம் நபர் பயன்பாட்டிற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

iii) புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கட்டாய கொள்முதல் (2030 வரை)

புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் வழிகாட்டுதல்கள் மற்றும் 22.7.2022 தேதியிட்ட புதிய அறிவிப்பின்படி, 2029-30 வரையிலான திருத்தப்பட்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கட்டாய கொள்முதல் (RPO) இலக்கு பின்வருமாறு:

காற்றாலை	: 6.94%
நீர் மின் சக்தி	: 2.82%
மற்றவை (சூரிய மின் சக்தி உட்பட)	: 33.57%
மொத்தம்	: 43.33%

2023 ஏப்ரல் 12]

மேலே உள்ள புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கட்டாய கொள்முதல் இலக்கை 2029-30-ல் அடைய, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு பின்வரும் கூடுதல் நிறுவு திறன்கள் தேவையாகயிருக்கிறது:

காற்றாலை	*3,368 மெகாவாட் (26.15% திறன் பயன்பாட்டு காரணி (CUF) அனுமானத்தில்)*
மற்றவை (சூரிய மின் சக்தி உட்பட)	*20,568 மெகாவாட் (19% திறன் பயன்பாட்டு காரணி (சூரிய மின் சக்தி) அனுமானத்தில்)*
நீர் மின் சக்தி	*2,273 மெகாவாட் (25% திறன் பயன்பாட்டு காரணி அனுமானத்தில்)*

செயல் திட்டம்:

காற்றாலை மின் சக்தி:

- *புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்திற்கு, 2,000 மெகாவாட் மின் சக்தியுள்ள 25 வருடத்திற்கு ஒரு யூனிட்டிற்கு ரூ.4.00 வீதம் கடலோரத் திட்டங்கள் வழியே வாங்க தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் தயாராக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*
- *தமிழகத்தில் உள்ள தனியார் மின் உற்பத்தியாளர்களிடமிருந்து கூடுதலாக 1,100 மெகாவாட் காற்றாலை மின் சக்தி நிறுவு திறனில் வரும் ஆண்டு சேர்க்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

சூரிய மின் சக்தி:

- *தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகம், சூரிய மின்சக்தி கழகத்துடன் ஒரு யூனிட்டுக்கு ரூ.2.78 என்ற விகிதத்தில் 500 மெகாவாட் மின்சாரக் கொள்முதல் ஒப்பந்தம் செய்துள்ளது. இதில் ஏற்கெனவே 330 மெகாவாட் ஏப்ரல் 2022-லிருந்து பெறப்பட்டு வருகிறது. மீதமுள்ள 170 மெகாவாட் சூரிய மின் சக்தி வரும் டிசம்பர் 2023-ல் பெறப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

- ❖ இதன் தொடர்ச்சியாக மற்றுமொரு மின்சாரக் கொள்முதல் ஒப்பந்தமானது சூரிய மின்சக்தி கழகத்துடன் யூனிட் ஒன்றிற்கு ரூ.2.61 என்ற விகிதத்தில் 1,000 மெகாவாட் சூரிய மின் சக்தி கொள்முதல் செய்வதற்கு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் கையெழுத்திட்டுள்ளது. இந்த மின்சாரம் வரும் 2023-2024 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- ❖ 20,000 மெகாவாட் சூரிய மின் சக்தி நிலையங்கள் மற்றும் 10,000 மெகாவாட் ஹவர் (MWhr) மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்புகளை (Battery Energy Storage Systems) 10 வருடங்களுக்குள் நிறுவுவதற்கான திட்டம் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்படவுள்ளது.

- ❖ முதற்கட்டமாக நிலை I-ன்கீழ் 6,000 மெகாவாட் சூரிய மின் சக்தி நிலையங்கள் மற்றும் 2,000 மெகாவாட் ஹவர் மின் கல ஆற்றல் சேமிப்பு அமைப்புகளை நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டு, இதற்காக, 4,014.69 ஏக்கர் நிலங்கள், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் கண்டறியப்பட்டு நில ஆர்ஜிதம் செய்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

விவசாய பயன்பாட்டிற்கான மின்னூட்டிகளை சூரியமயமாக்கல்

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் அடுத்த மூன்று ஆண்டுகளில் 1685 தனி வழி விவசாய மின்னூட்டிகளை சூரியமயமாக்க திட்டமிட்டுள்ளது. விவசாய மின்னூட்டிகளை மலிவு விலையில் கிடைக்கும் சூரிய சக்திமூலம் இயங்கச் செய்வதால், விவசாயத் துறைக்கான மானிய செலவு கட்டுப்படுவதுடன், விநியோக மட்டத்தில் சூரிய மின் சக்தி நிலையங்கள் உருவாக்கப்படுவதால், மின்னழுத்தம் (Voltage) மேம்படுதல், மின்பாதை இழப்பு குறைதல் ஆகிய நன்மைகள் ஏற்படும்.

2023 ஏப்ரல் 12]

செயல் திட்டம்:

வ.எண்	நிதியாண்டு	சூரியமயமாக்கப்பட வேண்டிய மின்னூட்டிகள்
1	2023-24	579
2	2024-25	560
3	2025-26	546
மொத்தம்		1,685

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்குச் சொந்தமான காற்றாலைகளைப் புதுப்பித்தல்

மாண்புமிகு தமிழ்நாடு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் அமைச்சர் அவர்களால், 2022–2023 ஆம் ஆண்டில் நடைபெற்ற சட்டமன்ற கூட்டத் தொடரில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்குச் சொந்தமான பழைய காற்றாலைகளை அகற்றிவிட்டு புதிய காற்றாலைகளை அமைக்க அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அறிவிப்பின் தொடர்ச்சியாக, இன்றுள்ள வாரியத்திற்குச் சொந்தமான காலாவதியான 110 காற்றாலைகளைப் புதுப்பித்து 41.575 மெகாவாட் திறனுள்ள புதிய காற்றாலைகளுடன் 40.500 மெகாவாட் திறன் கொண்ட சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையங்களும் சேர்த்து அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான விரிவான திட்ட அறிக்கையின் வரைவு, தேசிய காற்று சக்தி நிறுவனத்திடமிருந்து (NIWE) பெறப்பட்டுள்ளது.

iv) கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் உள்ள இணை மின் உற்பத்தி நிலையங்கள்

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், தமிழ்நாட்டில் 10 எண்ணிக்கை கூட்டுறவு மற்றும் 2 எண்ணிக்கை பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில், 12 எண்ணிக்கை இணை மின் உற்பத்தி திட்டங்களை, சர்க்கரை ஆலைகளை நவீனமயமாக்கும் திட்டத்துடன் இணைந்து செயல்படுத்தி வருகிறது.

அவற்றில், 93 மெகாவாட் மின்திறன் கொண்ட 6 இணை மின் உற்பத்தி நிலையங்கள் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள 6 இணை மின் உற்பத்தி நிலையங்களில் 90 மெகாவாட்

மின்திறன் நிறுவுவதற்கான பணிகளும் விரைவில் முடிப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

VII. நிலக்கரி

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கான நிலக்கரி கொள்முதல்

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரி, ஒடிசா மாநிலத்திலுள்ள மகாநதி நிலக்கரி நிறுவனத்தின் தால்சர், IB பள்ளத்தாக்குப் பகுதி சுரங்கங்களிலிருந்தும் மற்றும் தெலுங்கானா மாநில சிங்கரேணி நிலக்கரி (SCCL) சுரங்கத்திலிருந்தும் பெறப்படுகிறது.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், தனது 4,320 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையங்களில் 85 சதவிகித நிலைய சுமை காரணியுடன் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு, வருடம் ஒன்றிற்கு 223.4 இலட்சம் டன்கள் நிலக்கரி தேவைப்படுகிறது. இத்தேவைக்கான உள்நாட்டு நிலக்கரியை, மகாநதி நிலக்கரி நிறுவனத்துடன் (MCL) நிலக்கரி எரிபொருள் வழங்கும் ஒப்பந்தங்கள் மூலமாக வருடத்திற்கு (Fuel Supply Agreements - FSAs) 195.63 இலட்சம் டன்கள் மற்றும் சிங்கரேணி நிலக்கரி நிறுவனத்துடன் (SCCL) புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) மூலமாக வருடத்திற்கு 40 இலட்சம் டன்கள் பெறவும், மொத்தமாக வருடத்திற்கு 235.63 இலட்சம் டன் நிலக்கரி பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2022-2023 ஆம் ஆண்டில் மகாநதி நிலக்கரி சுரங்கங்களிலிருந்து பெறப்பட்ட நிலக்கரியின் அளவு 178.64 இலட்சம் டன்கள் ஆகும். இது அந்நிறுவனத்துடனான நிலக்கரி இணைப்புடன் ஒப்பிடும்பொழுது 91% ஆக உள்ளது. மேலும், சிங்கரேணி நிலக்கரி சுரங்கங்களிலிருந்து பெறப்பட்ட நிலக்கரியின் அளவு 14.03 இலட்சம் டன்கள் ஆகும். மொத்தமாக பெறப்பட்ட நிலக்கரியின் அளவு 192.67 இலட்சம் டன்கள் ஆகும்.

நடப்பாண்டில் பெறப்பட்ட நிலக்கரியின் மொத்த அளவான 192.67 இலட்சம் டன்கள் என்பது, கடந்த 10 ஆண்டுகளில் பெறப்பட்ட வருடாந்திர நிலக்கரியின் அளவை விட அதிகமாகும்.

2023 ஏப்ரல் 12]

வ. எண்	வருடம்	CIL– இடமிருந்து பெறப்பட்ட நிலக்கரியின் அளவு (இலட்சம் டன்கள்)	SCCL – இடமிருந்து பெறப்பட்ட நிலக்கரியின் அளவு (இலட்சம் டன்கள்)	மொத்தமாக பெறப்பட்ட நிலக்கரியின் அளவு (இலட்சம் டன்கள்)
1	2013-14	125.69	-	125.69
2	2014-15	136.81	-	136.81
3	2015-16	155.01	-	155.01
4	2016-17	120.59	4.89	125.48
5	2017-18	132.08	2.06	134.14
6	2018-19	150.55	-	150.55
7	2019-20	117.96	-	117.96
8	2020-21	101.49	6.13	107.62
9	2021-22	146.92	25.47	172.39
10	2022-23	178.64	14.03	192.67

இறக்குமதி நிலக்கரி

கடந்த 2021-22 ஆம் ஆண்டில், வெளிநாட்டு நிலக்கரியை வாங்குவதற்காக, கொள்முதல் ஆணைகள் எதுவும் வழங்கப்படவில்லை. ஒன்றிய அரசின் மின் அமைச்சகம், 2022-23-ன் ஒன்பது மாதங்களில் உபயோகப்படுத்த, 21.94 இலட்சம் டன்கள் (ஒவ்வொரு காலாண்டிற்கும் 7.3 இலட்சம் டன்கள்) வெளிநாட்டு நிலக்கரியை வாங்குவதற்கான அறிவுரைகளை வழங்கியது.ஒன்றிய அரசு மின் அமைச்சகத்தின் வழிகாட்டுதலின்படி, 6.0 இலட்சம் டன்கள் கொள்முதல் செய்யப்பட்டது, மேலும், ஒன்றிய அரசு வெளியிட்ட அறிவுறுத்தலின்படி, 1.3 இலட்சம் டன்கள் வெளிநாட்டு நிலக்கரியை, M/s.Coal India Ltd., (CIL) இடமிருந்து பெறுவதற்காக, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் CIL இடையே ஒப்பந்தம் முடிவானது. அதன்படி 0.7 இலட்சம் டன்கள் வெளிநாட்டு நிலக்கரி M/s. CIL இடமிருந்து பெறப்பட்டது. எனவே 2022-23-ல் ஒன்றிய அரசு மின் அமைச்சகம்

21.94 இலட்சம் டன்கள் வெளிநாட்டு நிலக்கரியை கொள்முதல் செய்ய அறிவுறுத்திய போதும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் 6.7 இலட்சம் டன்கள் மட்டுமே கொள்முதல் செய்தது.

வெளிநாட்டு நிலக்கரியின் கொள்முதல் விலையினைக் கருத்தில் கொண்டு, வெளிநாட்டு நிலக்கரியின் உபயோகத்தைக் குறைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் எடுத்து வருகிறது.

நிலக்கரி தர உறுதிப்படுத்தும் தனி பிரிவு

*தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், நிலக்கரி தர உறுதிப்படுத்தும் தனி பிரிவை உருவாக்கியுள்ளது. தால்ச்சர் மற்றும் ஐபி பள்ளதாக்கு பகுதிகளிலிருந்து பெறப்படும் நிலக்கரி மாதிரிகளைப் பரிசோதிப்பதற்காக, ஒடிசாவிலுள்ள அங்குலில், புதிய நிலக்கரி பகுப்பாய்வகம் நிறுவப்பட்டுள்ளது. அங்குல், ஒடிசாவில் அமைந்துள்ள புதிய நிலக்கரி ஆய்வகத்தின் செயல்பாட்டினால், நிலக்கரி மாதிரிகள் சுரங்கங்களின் அருகிலேயே சோதனை செய்யப்படுகிறது. எனவே, மகாநதி நிலக்கரி நிறுவனத்திலிருந்து (*MCL*) பெறப்படும் நிலக்கரி மாதிரிகளை, அனல் மின் நிலையங்களுக்கு அனுப்பி சோதனை செய்வது தவிர்க்கப்பட்டுள்ளது. அதனால், அறிவியல் மற்றும் தொழில் துறை ஆராய்ச்சி கவுன்சிலின்கீழ் செயல்படும், மத்திய சுரங்க மற்றும் எரிபொருள் ஆராய்ச்சிக்கான நிறுவனத்தின் (*CSIR-CIMFR*) முடிவுகளைப் பெறுவதற்கு முன்பே, சோதனை முடிவுகளைத் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தினால் அறிய முடிகிறது. இவ்வாறு, தரமாறுபாடுகள் இச்சோதனைகளில் கண்டறியப்பட்டால்,* CSIR-CIMFR *முடிவுகளை எதிர்த்து குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் முறையிட, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. இந்த செயல்முறையின்மூலம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், நிலக்கரிக்காகச் செலவிடும் தொகையில் கணிசமான சேமிப்பை அடைய முடிவதுடன், தரமான நிலக்கரியைத் தொடர்ந்து பெற முடிகிறது. மேலும், நிலக்கரி மின் நிலையங்களுக்கு வந்த பிறகு, மாதிரிகள் தயாரிக்கப்பட்டு, மின் நிலைய ஆய்வுக்கூடங்களில் பகுப்பாய்வு செய்யப்படுகிறது.*

2023 ஏப்ரல் 12]

நிலக்கரியின் தரத்தை நேரலையில் கண்காணித்தல்

சுரங்க முனையிலிருந்து தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் அனல் மின் நிலையங்கள் வரை, நிலக்கரி தரத்தினை நேரலையில் பகுப்பாய்வு செய்வதற்கான ஒருங்கிணைந்த அறிவிப்புப் பலகை (Dash board) உருவாக்குவதற்கு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இது, நிலக்கரி இறக்கும் துறைமுகத்தில் பெறப்படும் நிலக்கரியின் தரத்தைக் கண்காணிக்கவும், உறுதி செய்யவும் உதவும். மேலும், நிலக்கரியின் தர மாறுபாட்டிற்கு ஏற்ற தொகையை நிலக்கரி நிறுவனங்களிடம் வேண்டி பெற உதவியாக இருக்கும். இதற்கு தெலுங்கானா மாநில மின் உற்பத்தி கழகத்தின் ஆதரவு கோரப்பட்டுள்ளது. இதனைச் செயல்படுத்தும்பொழுது, பல்வேறு இடங்களில் பெறப்படும் நிலக்கரியில் உள்ள தர மாறுபாட்டிற்கான சரியான காரணத்தைத் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் கண்டறிந்து, சரியான தரத்தில் நிலக்கரி பெறுவதற்கான சூழல் ஏற்படும்.

ஏற்றுமதி மற்றும் இறக்குமதி துறைமுகங்களில் நிலக்கரிக் கையாளுதல்

பாரதீப் துறைமுகம்

- *பாரதீப் துறைமுகத்தில் MCHP மற்றும் JSW (PEQCTPL) தளத்தைப் பயன்படுத்தி கையாளப்பட்ட நிலக்கரியின் அளவு கடந்த ஆண்டு 2021–22-ல் 109.03 இலட்சம் டன், இது மேலும், இந்த நிதியாண்டில் (2022-23) 152.45 இலட்சம் டன்களாக அதிகரித்துள்ளது. பாரதீப் துறைமுகத்தில் இந்த நிதியாண்டில் (2022-23) கையாளப்பட்ட நிலக்கரியின் அளவு, முந்தைய நிதியாண்டை விட 39.82% அதிகம்.*

- *பாரதீப் துறைமுகத்தில் ஏற்கெனவே 80% போகி ஓபன் பாட்டம் ரேபிட் டிஸ்சார்ஜ் ஹாப்பர் வேகன்கள் (BOBRN) மற்றும் 20% பெட்டி (BOXN) வகை வேகன்கள்மூலம் நிலக்கரியானது பெறப்பட்டது. பாரதீப் துறைமுகத்தில் நிலக்கரி கையாளும் நேரத்தைக் குறைக்கும் வகையில், BOXN ரேக்குகளுக்குப் பதிலாக அதிக BOBRN ரேக்குகளை வழங்க இந்திய இரயில்வேயிடம் கோரப்பட்டது. கோரிக்கையின் அடிப்படையில், 2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டுகளில், முறையே 85% மற்றும் 95% BOBRN ரேக்குகள் பெறப்பட்டுள்ளன, இதன்மூலம் பாரதீப் துறைமுகத்தில் நிலக்கரி கையாளும் நேரம் குறைந்துள்ளது.*

[2023 ஏப்ரல் 12

❖ பாரதீப் துறைமுகத்தில், கப்பல்கள் நிறுத்தப்படுவதற்கு முன், ஏற்படும் தாமதத்தைத் தவிர்ப்பதற்காக, 2022-23 ஆம் ஆண்டில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தினால் பெறப்பட்ட முன்னுரிமை தள திட்டம், 2023-24 ஆண்டிற்குப் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

பாரதீப் ஈஸ்ட் குவே கோல் டெர்மினல் பிரைவேட் லிமிடெட் (PEQCTPL)

❖ MCHP-ல் நிலக்கரியை கப்பல்களில் ஏற்றுவதற்கு இரண்டு நிலக்கரி தளங்கள் மட்டுமே இருந்ததால், பாரதீப் துறைமுகத்தில் (PEQCTPL) நிலக்கரி ஏற்றுவதற்கான புதிய தளம் தொடங்கப்பட்டு, 2022 ஆம் ஆண்டு முதல் உபயோகிக்கப்படுகிறது, புதிய நிலக்கரி தளத்தை உபயோகப்படுத்துவதன்மூலம் பாரதீப் துறைமுகத்தில் சராசரி கப்பல் நிறுத்தப்படும் தாமதம் குறைக்கப்பட்டுள்ளது. இதனால், நிதியாண்டு 2022-23-ல் 51.38 இலட்சம் டன் நிலக்கரி கையாளப்பட்டு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், அதிக அளவு நிலக்கரியை நமது அனல் மின் நிலையங்களுக்கு அனுப்ப ஏதுவாகிறது.

கங்காவரம் துறைமுகம்

2022 ஆம் ஆண்டில் கங்காவரம் துறைமுகம் வழியாக MCL/IB பள்ளத்தாக்கிலிருந்து, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் அனல் மின் நிலையத்திற்கு நிலக்கரியை கையாளுவதற்கு ஓர் ஆணை வழங்கப்பட்டது. முந்தைய விசாகப்பட்டினம் துறைமுக நிறுவனத்துடனான ஒப்பந்தத்துடன், இந்தத் துறைமுகத்தின் கட்டணத்தை ஒப்பிடும்போது, செலுத்தப்பட்ட கையாளுதல் கட்டணம் ஒரு டன்னிற்கு ரூ.21.06 குறைவாக உள்ளது. இதனால் 15.65 இலட்சம் டன் நிலக்கரியை கையாண்டதன்மூலம் ரூ.3.29 கோடி, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்குச் சேமிப்பு ஏற்பட்டுள்ளது.

பிற ஏற்றுதல் துறைமுகங்களிலிருந்து நிலக்கரியை ஏற்றுவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்தல்:

MCL/தால்ச்சர் சுரங்கங்கள் மற்றும் பாரதீப் துறைமுகம் இடையே இரயில் வழித்தடங்களில் நெரிசல் ஏற்பட்டுள்ளதால், பல ஏற்றுதல் துறைமுகங்களுடன் தமிழ்நாடு மின் உற்பத்தி

2023 ஏப்ரல் 12]

மற்றும் பகிர்மானக் கழகம் ஒப்பந்தம் செய்ய சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து வருகிறது. MCL/*தால்ச்சர் மற்றும்* IB *பள்ளத்தாக்கு சுரங்கங்களிலிருந்து, கோபால்பூர் துறைமுகத்திற்கும் மற்றும்* MCL/ *தால்ச்சர் மற்றும்* IB *பள்ளத்தாக்கு சுரங்கங்களிலிருந்து தாம்ரா துறைமுகத்திற்கும் நிலக்கரி கையாளுவதற்கான வாய்ப்புகளை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் ஆராய்ந்து வருகிறது.*

கோபால்பூர் துறைமுகத்தில் 3 தள வசதியும், ஒரு நாளைக்கு சுமார் 18,000 முதல் 20,000 டன் நிலக்கரியைக் கையாளும் திறனும் உள்ளது. தாம்ரா துறைமுகத்தில் 3 தள வசதியும், ஒரு நாளைக்கு சுமார் 35,000 டன் நிலக்கரியைக் கையாளும் திறனும் உள்ளது. பொருளாதார சாத்தியக்கூறுகளின் அடிப்படையில், மேற்கண்ட துறைமுகங்களிலிருந்து நிலக்கரி கொண்டு செல்வது குறித்து பரிசீலிக்கப்படும்.

*காரைக்கால் துறைமுகத்தில் நிலக்கரியை கையாளுவதற்கும் மற்றும் அங்கிருந்து நிலக்கரியை வெளியேற்றி, மேட்டூர் அனல் மின் நிலையம்-*I *மற்றும்* II-*க்கு கொண்டு செல்வதற்குமான ஆணை, காரைக்கால் போர்ட் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இத்துறைமுகத்தில் 2022-23 வரையான காலகட்டத்தில் கையாளப்பட்ட நிலக்கரியின் அளவு 50.92 இலட்சம் டன்கள் ஆகும். மேலும், இத்துறைமுகத்தின்மூலம் தினமும் 4-5 தொடர்வண்டிகள்மூலம் நிலக்கரி பெறப்பட்டு, மேட்டூர்* I & II *அனல் மின் நிலையங்களுக்கு அனுப்பப்பட்டு மேட்டூரில் சீரான மின் உற்பத்தி செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.*

வ.உ.சி. துறைமுகத்திலுள்ள CJ*1 தளத்தில், இரண்டு ஷோர் அன்லோடர் இயந்திரங்கள், தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்காகச் செயலாக்கத்திற்குக் கொண்டு வரப்பட்டு, தற்போது செயல்பாட்டில் உள்ளது. இதனால், பெரிய கொள்ளளவு கொண்ட கப்பல்களிலிருந்து நிலக்கரி விரைவாக இறக்கப்படுகிறது. இதனால் தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் நிலக்கரி கையிருப்பு போதுமானதாக உள்ளது.*

நிலக்கரி கப்பல் போக்குவரத்து

உள்நாட்டு நிலக்கரி, ஏற்று துறைமுகங்களான பாரதீப் மற்றும் கங்காவரத்திலிருந்து, நிலக்கரி இறக்கு துறைமுகங்களான எண்ணூர், தூத்துக்குடி மற்றும் காரைக்காலுக்கு கொண்டு செல்லப்படுகிறது. ஏற்றும் துறைமுகங்களிலிருந்து தேவையான

அளவு நிலக்கரியை திறம்பட கொண்டு செல்வதற்காக, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், பாரதீப் துறைமுகத்தில் முன்னுரிமையுடன்கூடிய (CB-1, CB-2) பெர்த்துகள், PEQCTPL பெர்த் ஆகிய வசதியை ஏற்படுத்தியிருக்கிறது.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான உள்நாட்டு நிலக்கரி போக்குவரத்திற்காக, தற்போது 12 கப்பல்களை நேரடியாக வாடகைக்கு அமர்த்தியுள்ளது. கப்பல்களை, குறைந்த மதிப்பிலான வாடகையில் நீண்ட காலத்திற்கு ஒப்பந்தம் செய்ததன்மூலம் ஒரு நாளைக்கு சுமார் ரூ.56 இலட்சங்கள் அதாவது ஒரு மாதத்திற்கு ரூபாய் 16.8 கோடி சேமிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நிலக்கரியினை சுரங்கங்களிலிருந்து பல்வேறு இறக்குமதி துறைமுகங்களுக்கு நேரடியாக கொண்டு செல்வதற்கு, சுரங்கம் முதல் ஏற்றுதல் துறைமுகங்களுக்கு சாலை மற்றும் இரயில் மார்க்கமாகவும், மேலும் ஏற்றுதல் துறைமுகம் முதல் இறக்குதல் துறைமுகம் வரை கடல் மார்க்கமாகவும், ஒரே ஒப்பந்தத்தில் (End to End) செயல்படுத்துவதன்மூலம், செலவு குறைக்கப்பட்டு, தரமான முறையில் நிலக்கரி பெறுவதற்கான வழிமுறைகளை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் ஆராய்ந்து வருகிறது.

தூத்துக்குடி, வ.உ.சி. துறைமுகத்தில் (இறக்கு துறைமுகம்), தற்போது நிலக்கரி ஜெட்டி-1 (CJ-1) தளத்தில் நிலக்கரியை இறக்கும் இயந்திரங்களை நிறுவி இயக்குவதன்மூலம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் ஒரு நாளைக்கு இறக்கும் நிலக்கரியின் அளவை 20000 மெட்ரிக் டன் கூடுதலாக உயர்த்தியுள்ளது. CJ-1 பெர்த்தில் கூடுதல் கொள்ளளவு கப்பல்களை இயக்குவதன்மூலம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் ஜனவரி 2023 முதல் ஒரு மெட்ரிக் டன்னுக்கு சுமார் ரூபாய் 160/- சேமிப்பை ஈட்டியுள்ளது. இதன்மூலம் ஒரு வருடத்திற்கு மொத்தம் ரூ.80 கோடி சேமிக்கப்படும்.

அனல் மின் உற்பத்திக்கான நிலக்கரியை, ஏற்று துறைமுகத்திலிருந்து, இறக்கு துறைமுகத்திற்குக் கடல் வழியாகக் கொண்டு செல்ல, மாதத்திற்கு சுமார் ரூ.100 கோடி செலவாகும். கப்பல் இயக்கம் மற்றும் பில்லிங் செயல்முறை மிக்க கண்காணிப்புடன் செயல்படுத்தப்பட வேண்டும். எனவே,

2023 ஏப்ரல் 12]

கப்பலின் செயல்முறையைக் கண்காணிக்க, மென்பொருளை உருவாக்கும் அவசியம் கருதி கருத்துரு முன்மொழியப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், ஏற்று துறைமுகம் முதல் இறக்கு துறைமுகம் வரையிலான, கப்பல் செயல்முறைக்கான இணைய அடிப்படையிலான, பயன்பாட்டு மென்பொருளின் உருவாக்கத்திற்கான ஆணை, IT Wing மூலம் M/s.BONTON மென்பொருள் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு 9.1.2023 அன்று வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக கப்பல் குழுவினரோடு மென்பொருள் குழுவினர், மேற்கூறிய மென்பொருளின் செயல்பாடு, உருவாக்கம் பற்றி விவாதித்தனர். மென்பொருள் தேவைகள் விவரக்குறிப்பு (SRS) தயாரிப்பது செயல்முறையில் உள்ளது.

கப்பலின் இயக்கத்தின் நிகழ்நேர கண்காணிப்பு, நிலக்கரி கொண்டு செல்லப்படும் அளவு மற்றும் துறைமுகங்கள், ஏஜென்சிகள், காப்பீடு, கப்பலின் எரிபொருள் நிரப்பும் ஐஓசிஎல் நிறுவனம் போன்றவற்றுக்குச் செலுத்தப்படும் தொகை, ஒரு டன் விலைக்கான குறிப்பிட்ட கால அறிக்கைகளுடன் தன்னியக்கமாக்குதல் போன்ற பல்வேறு அளவுருக்களை உள்ளடக்கியதாக, இம்மென்பொருள் இருக்கும். ஒவ்வொரு கப்பல் பயணத்தின் மூலமாகவும் கொண்டு செல்லப்படும் நிலக்கரி செலவை கட்டுபடுத்துவதன்மூலம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு அதிக அளவு சேமிப்பு கிடைக்கும். இந்தப் பயன்பாட்டை வெற்றிகரமாகச் செயல்படுத்தினால் மற்றும் பெறப்படும் அறிக்கைகளை மென்பொருள் தரவுகளோடு ஒப்பிட்டு கப்பலின் தேவையற்ற முன் நிறுத்த தாமதத்தைத் தவிர்ப்பதன்மூலம் கடல் சரக்கு கட்டணங்களைக் குறைக்க இயலும்.

VIII. சுரங்கங்கள்

ஏல முறையில் நிலக்கரி சுரங்கம் பெறுவது

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்குச் சொந்தமான, செயல்பாட்டிற்கு வரவிருக்கும் அனல் மின் திட்டங்களுக்கும் மற்றும் இயக்கத்தில் உள்ள அனல் மின் உற்பத்தி நிலையங்களுக்கும் தேவையான உள்நாட்டு நிலக்கரியை சொந்த ஆதாரத்திலிருந்து பூர்த்தி செய்ய, ஒன்றிய நிலக்கரித் துறை அமைச்சகத்தின் நிலக்கரி சுரங்கத்திற்கான ஏலத்தில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் பங்கு பெற்று வருகிறது.

[*2023 ஏப்ரல் 12*

சந்திரபிலா நிலக்கரி சுரங்கம்

ஒன்றிய நிலக்கரி அமைச்சகம், ஒடிசா மாநிலத்தில் உள்ள 896 மில்லியன் டன் நிலக்கரி இருப்பு கொண்ட சந்திரபிலா நிலக்கரி சுரங்கத்தை, 24.2.2016 அன்று தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின், எண்ணூர் சிறப்பு பொருளாதார மண்டல அனல் மின் திட்டம் (2X660 மெகாவாட்), எண்ணூர் அனல் மின் நிலைய விரிவாக்கத் திட்டம் (1X660 மெகாவாட்) மற்றும் உடன்குடி அனல் மின் திட்டம் நிலை-1 (2X660 மெகாவாட்) ஆகிய மொத்த நிறுவு திறன் 3,300 மெகாவாட் கொண்டு செயல்பாட்டிற்கு வரவிருக்கும் அனல் மின் திட்டங்களுக்கான உள்நாட்டு நிலக்கரி தேவையைப் பூர்த்தி செய்வதற்காக ஒதுக்கீடு செய்தது.

சந்திரபிலா நிலக்கரி சுரங்கத்தின் (வனமல்லாத பகுதியில் மட்டும்) வளர்ச்சி மற்றும் செயல்பாட்டு நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள, சுரங்க மேம்பாட்டாளர் மற்றும் இயக்குபவர் (MDO) தேர்வு செய்ய, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

உள்நாட்டு நிலக்கரி இணைப்புக்கான ஏற்பாடுகள்

வடசென்னை அனல் மின் திட்டம் நிலை III *(1X800 மெகாவாட்) மற்றும் உப்பூர் அனல் மின் திட்டம் (2X800 மெகாவாட்) ஆகிய திட்டங்களுக்கான வருடாந்திர தேவைக்கான மொத்த நிலக்கரி தேவையில், 50% உள்நாட்டு நிலக்கரி அளவான 5.913 வருடத்திற்கு மில்லியன் டன் (*MTPA*) நிலக்கரியை, சிங்கரேணி நிலக்கரி நிறுவனத்திடமிருந்து பெறுவதற்காக, 1.7.2022 முதல் நீண்ட கால (25 வருடம்) எரிபொருள் வழங்கல் ஒப்பந்தம் (*FSA*) செய்யப்பட்டுள்ளது.*

*ஒன்றிய நிலக்கரித் துறை அமைச்சகத்தின் நிலக்கரி இணைப்புக் குழு (*Standing Linkage Committee*), சந்திரபிலா நிலக்கரி சுரங்கத்திலிருந்து நிலக்கரி உற்பத்தி செய்யப்படும் வரை, சிங்கரேணி நிலக்கரி நிறுவனத்திடமிருந்து, எண்ணூர் சிறப்பு பொருளாதார மண்டல அனல் மின் திட்டம் (2X660 மெகாவாட்), எண்ணூர் அனல் மின் நிலைய விரிவாக்கத் திட்டம் (1X660 மெகாவாட்) மற்றும் உடன்குடி அனல் மின் திட்டம் நிலை-1 (2X660 மெகாவாட்) ஆகிய மொத்த நிறுவு திறன் 3,300 மெகாவாட் கொண்டு செயல்பாட்டிற்கு வரவிருக்கும் அனல் மின்*

2023 ஏப்ரல் 12]

திட்டங்களுக்கான, தற்காலிக/குறுகிய கால நிலக்கரி இணைப்பு வழங்கிட பரிந்துரை செய்துள்ளது.

சுரங்கப் பிரிவை நிலக்கரி பிரிவுடன் இணைப்பு

செயல்பாட்டிற்கு வரவிருக்கும் அனல் மின் திட்டங்களுக்காக, நிலக்கரி நிறுவனத்திடமிருந்து நிலக்கரி இணைப்புக்கான ஒப்பந்தங்களை, தற்போதுள்ள சுரங்கப் பிரிவு கவனித்து வருகிறது. செலவினங்களைக் குறைத்திடவும், மேலும், தற்போதுள்ள அனல் மின் நிலையங்களுக்கும், செயல்பாட்டிற்கு வரவிருக்கும் அனல் மின் திட்டங்களுக்கும் தேவையான நிலக்கரியை சிறந்த முறையில் கையாளவும், தற்போதுள்ள அனல் மின் நிலையங்களுக்கான நிலக்கரியை கொள்முதல் செய்யும் நிலக்கரி பிரிவுடன், சுரங்கப் பிரிவை இணைக்க முன்மொழியப்பட்டுள்ளது. மேலும், சுரங்க மேம்பாடு தொடர்பான பணிகளை, நிலக்கரி பிரிவு கூடுதலாகத் தொடர்ந்து மேற்கொள்ளும்.

1.2 மின் உற்பத்தித் திட்டங்கள்

தமிழ்நாட்டின் அதிகபட்ச மின் தேவை, தற்பொழுது வரை 18,252 மெகாவாட்டாக உள்ளது. மாநிலத்தில் அதிகரித்து வரும் மின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் சட்டசபையில் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் அறிவிப்பிற்கிணங்க, தற்போது நடைபெற்று வரும் அனைத்து திட்டங்களையும் விரைவாக செயல்படுத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. மேலும் வரவிருக்கும் மின் திட்டங்களை துரிதப்படுத்துவதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. இது தவிர தமிழ்நாட்டின் தேவைக்கு போதுமான மின் சக்தியை, சொந்த மின் உற்பத்தியின்மூலம் பெறுவதற்கு, புதிய மின் திட்டங்களை கொண்டு வருவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றியும் ஆராயப்பட்டு வருகின்றது.

கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி, அடுத்த இரண்டு ஆண்டுகளில் 4,620 மெகாவாட் அனல் மின் உற்பத்தித் திறன் தமிழ்நாடு மின் கட்டமைப்பில் சேர்க்கப்படவுள்ளது.

வ. எண்	மின் உற்பத்தித் திட்டங்கள்	மொத்த மதிப்பீடு (ரூபாய் கோடி)	பணி மதிப்பீடு (ரூபாய் கோடி)	இது வரையிலான செலவு (ரூபாய் கோடி)	பணி நிறைவு எதிர்பார்க்கப்படும் நாள்
1	வடசென்னை அனல் மின் திட்டம் நிலை –III 1 X 800 மெகாவாட்	8723	5702	4793	2023-24
2	எண்ணூர் சிறப்பு பொருளாதார மண்டல அனல் மின் திட்டம் 2 X 660 மெகாவாட்	9800	7984.82	5121.30	2024-25
3	உடன்குடி அனல் மின் திட்டம் நிலை-I 2 X 660 மெகாவாட்	13077	9752	6111.28	2024-25
4	எண்ணூர் விரிவாக்கம் 1X660 மெகாவாட்	6381	4443	—	2024-25
மொத்தம்—4100 மெகாவாட்					
5	குந்தா நீரேற்று மின் திட்டம் 4 X 125 மெகாவாட்	2863.73	2444.48	1105.26	2024-25
6	கொல்லிமலை புனல் மின் திட்டம் 1 X20 மெகாவாட்	339	307	163.60	2024-25
	மொத்தம் 520 மெகாவாட்				
	அனைத்தும் சேர்த்து மொத்தம் 4620 மெகாவாட்				

2023 ஏப்ரல் 12]

I. நடைபெற்று வரும் அனல் மின் திட்டங்கள்

i. வடசென்னை அனல் மின் திட்டம் (நிலை- III) 1x800 மெகாவாட்

இந்தத் திட்டமானது திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பொன்னேரி சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ளது. 1X800 மெகாவாட் மிக உய்ய திட்டத்திற்கான மதிப்பீடு கட்டமைப்பு வட்டி உட்பட ரூபாய் 8,723 கோடியாகும்.

இத்திட்டப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

பணி முன்னேற்றம்: 93.80%, நிதி முன்னேற்றம்: 84.0%

இந்தத் திட்ட முக்கிய நிகழ்வுகளான (i) கொதிகலன் நீர் அழுத்த சோதனை (ii) கண்டென்சர் நீரழுத்த சோதனை மற்றும் (iii) துணை கொதிகலன் நீர் அழுத்த சோதனை (iV) துணை கொதிகலன் எரியூட்டும் நிகழ்வு மற்றும் (V) கொதிகலன் நீர் வெளியேற்ற முடியாத பகுதியின் நீர் அழுத்த சோதனை நிகழ்வு ஆகியவை நிறைவு பெற்றிருக்கிறது.

இத்திட்டத்தினை விரைவுபடுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன மற்றும் இத்திட்டமானது ஆகஸ்ட் 2023-ல் செயல்பாட்டுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ii. எண்ணூர் சிறப்பு பொருளாதார மண்டல அனல் மின் திட்டம் (2 X 660 மெகாவாட்)

2X660 மெகாவாட் எண்ணூர் சிறப்பு பொருளாதார மண்டல அனல் மின் திட்டமானது 394.5 ஏக்கர் நில விஸ்தரிப்பில் திருவள்ளூர் மாவட்டத்தில், எண்ணூரில் உள்ள வயலூர் கிராமத்தில் அமைந்துள்ளது. இந்தத் திட்டப் பகுதியானது அத்திப்பட்டு புதுநகர் இரயில் நிலையத்திலிருந்து சுமார் 5 கி.மீ தொலைவில் உள்ளது. இத்திட்டத்தின் மொத்த திட்ட மதிப்பீடு கட்டுமானத்தின்போதான வட்டியுடன் ரூ.9,800 கோடியாகும். இத்திட்டப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

பணி முன்னேற்றம்: 64.13%, நிதி முன்னேற்றம்: 64.37%

[2023 ஏப்ரல் 12

தேசிய பசுமை தீர்ப்பாயம் விவரங்கள்

நிலக்கரி வழித்தடம் மற்றும் மணல் நிரப்பும் பணி போன்ற காரணங்களால் கொசஸ்தலை ஆற்றில் உள்ள நீர்நிலைகள் ஆக்கிரமிப்புக்கு எதிராக தேசிய பசுமைத் தீர்ப்பாயம், தென் மண்டலம் தானாக முன்வந்து செய்தித்தாளில் வந்த கட்டுரைகளின் அடிப்படையில் வழக்குப் பதிவு செய்துள்ளது. 26.7.21 முதல் TH-1 முதல் PR 30 வரையிலான வெளிப்புற நிலக்கரி கையாளும் பணிகளில் கட்டுமானப் பணிகள் நிறுத்தப்பட்டன, தற்போதைய பாதைக்கான நிலக்கரி வழித்தடத்திற்குத் தேவையான திருத்தப்பட்ட ஒப்புதல் திருத்தத்திற்காக மாவட்ட கடலோர மண்டல மேலாண்மை அதிகாரக் குழு (Coastal Zone Management Authority) குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினை விரைந்து பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு, 2024-25-ல் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

iii. உடன்குடி அனல் மின் திட்டம் நிலை-I (2 x 660 மெகாவாட்)

இத்திட்டம் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ளது. 2X660 மெகாவாட் மிக உய்ய திட்டத்திற்கான மதிப்பீடு கட்டமைப்பு வட்டி உட்பட ரூபாய் 13,077 கோடியாகும். திட்டம் செயலாக்கத்தில் உள்ளது. தற்போதைய முன்னேற்றம் வருமாறு:

பணி முன்னேற்றம்: 74%, நிதி முன்னேற்றம்: 65.6%

உடன்குடி அனல் மின் திட்டம் நிலை-I (2 X 660 மெகாவாட்) பணிகளுக்கான ஆணை டிசம்பர் 2017-ல் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டு திட்டமிடப்பட்ட பணி நிறைவு காலமான ஜூன் 2021 வரை 45.75% பணிகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டிருந்தது. தொடர் கண்காணிப்பின் காரணமாக கடந்த இரண்டு ஆண்டுகளில் பணி முன்னேற்றம் 45.75%-லிருந்து 74% ஆக உயர்ந்துள்ளது.

இத்திட்டம் 2023-24-ல் செயல்பாட்டிற்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது அலகு-I ஜூலை 24-லும், அலகு-II செப்டம்பர் 24-லும் செயல்பாட்டிற்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2023 ஏப்ரல் 12]

iv. எண்ணூர் அனல் மின் நிலைய விரிவாக்கத் திட்டம் (1 x 660 மெகாவாட்)

இத்திட்டம் சென்னை மாவட்டத்திலுள்ள திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ளது. பொறியியல்-கொள்முதல்-கட்டுமான (இபிசி) அடிப்படையில் லேன்கோ இன்பராடெக் லிட். நிறுவனத்திற்கு ரூ.3,921.55 கோடி செலவில் பணி ஆணை வழங்கப்பட்டது. பின்னர் திட்டப் பணிகளில் ஒப்பந்ததாரரின் செயல் திறன் குறைபாடு காரணமாக லேன்கோ இன்பராடெக் லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட ஒப்பந்தம் 9.4.2018 தேதியிட்ட கடிதம்மூலம் இரத்து செய்யப்பட்டது.

பணி முன்னேற்றம்: 18% ஒப்பந்தம் முடிவடைந்த நேரத்தில்

நிதி முன்னேற்றம: 18% ஒப்பந்தம் முடிவடைந்த நேரத்தில்

இத்திட்டத்தில் முடிக்கப்பட வேண்டிய மீதமுள்ள பணிகளுக்கு “உள்ளது உள்ளபடியே" என்ற அடிப்படையில் ரூ.4,442.75 கோடி மதிப்பிலான பணி அளிப்புக்கான இசைவுக் கடிதம் 9.3.2022 அன்று வழங்கப்பட்டது.

v. குந்தா நீரேற்றுப் புனல் மின் திட்டம் (4 x 125 மெகாவாட்)

இத்திட்டம் நீலகிரி மாவட்டத்திலுள்ள நீலகிரி சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ளது. இத்திட்டம் தமிழ்நாட்டின் உச்ச மின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக நடைபெற்று வருகின்றது.

பணி முன்னேற்றம்: 48%, நிதி முன்னேற்றம்: 46.36%.

எலக்ட்ரோ-மெக்கானிக்கல் உபகரணங்கள் கொள்முதல் மற்றும் கட்டுமான ஒப்பந்தம் ஒன்றரை வருடங்கள் தாமதமாக வழங்கப்படுவதால் இந்தத் திட்டப் பணிகள் தாமதமானது. எனவே, எலெக்ட்ரோ-மெக்கானிக்கல் இன்புட் விவரங்கள் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டதால், பிரஷர் ஷாஃப்ட் ஸ்டீல் லைனர் டிசைன் போன்ற சில சிவில் கூறுகளை இறுதி செய்ய முடியவில்லை. 2019, 2021 & 2022 ஆம் ஆண்டுகளில் பெய்த இடைவிடாத மற்றும் கனமழையால் மேல் மற்றும் கீழ் உட்செலுத்துதல் கட்டமைப்புகளில் உள்ள காஃபர் அணைகளுக்கு கடுமையான சேதம் ஏற்பட்டது. எமரால்ட் நீர்த்தேக்கத்தில் உள்ள நீர்மட்டத்தைக் குறைக்க முடியாததால், பணிகள் மேற்கொள்ள இயலவில்லை. மேல் நீர்த்தேக்கத்தில் உள்ள நீர் மட்டத்தை மட்டுமே குறைக்க முடிந்தது. எனவே, மேல்நிலை நீர்த்தேக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

[2023 ஏப்ரல் 12

குந்தா நீரேற்று புனல் மின் திட்டத்திற்கான (4X125 MW) பணி ஆணைகள் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டு மே 2021 வரை 12% பணிகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டிருந்தது. தொடர் கண்காணிப்பின் காரணமாக கடந்த இரண்டு ஆண்டுகளில் பணி முன்னேற்றம் 12%-லிருந்து 48% ஆக உயர்ந்துள்ளது.

இத்திட்டத்தினை மார்ச் 2024–ல் செயலாக்கத்திற்குக் கொண்டு வர திட்டமிடப்பட்டது, இத்திட்டமானது அக்டோபர் 2024-ல் செயல்பாட்டிற்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

vi. கொல்லிமலை நீர் மின் திட்டம் (1 X 20 மெகாவாட்)

இத்திட்டம் நாமக்கல் மாவட்டத்திலுள்ள சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ளது. கொல்லிமலை நீர் மின் திட்டம் 1 X 20 மெகாவாட் ரூ.338.79 கோடி செலவில் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. கொல்லிமலை தொடர்களில் ஐந்து எண்ணிக்கையிலான முகப்பு சிறு அணை/திசை திருப்புதல் சிறு அணை, சுரங்கம் நிர்மாணிப்பதற்கும், திருச்சி மாவட்டத்தின் புளியன்சோலை கிராமத்தில் 1 X20 மெகாவாட் திறன் கொண்ட நீர் மின் நிலையம் நிறுவுவதற்கும் திட்டமிடப்பட்டு, ரூ.307.19 கோடி மதிப்பீட்டில் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் பணி மற்றும் நிதி முன்னேற்றம் முறையே 55.50% மற்றும் 55.37% ஆகும். தற்பொழுது நீர் மின் திட்டத்தில் உள்ளடங்கிய பல்வேறு கூறுகளான நீர் மின் நிலையம், நீர் மின் திறன் சுரங்கம், சிறு அணை (1, 3 & 5), செயற்கை கால்வாய் சிறு அணை – 2 முதல் சிறு அணை– 3 வரை, செயற்கை கால்வாய் சிறு அணை – 3 முதல் சிறு அணை– 4 வரை, நீர் மின் நிலையத்திற்கு நீர் செல்லும் குழாய் பொருத்தும் பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

கொல்லிமலை புனல் மின் உற்பத்தித் திட்டத்திற்கான (1 X 20 MW) பணி ஆணைகள் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டு மே 2021 வரை 23% பணிகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டிருந்தது. தொடர் கண்காணிப்பின் காரணமாக கடந்த இரண்டு ஆண்டுகளில் பணி முன்னேற்றம் 23%-லிருந்து 55.50% ஆக உயர்ந்துள்ளது. இத்திட்டமானது அக்டோபர் 2024-ல் செயல்பாட்டிற்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2023 ஏப்ரல் 12]

II. வரவிருக்கும் திட்டங்கள்

i. உடன்குடி விரிவாக்கத் திட்டம் நிலை–II (2x660 மெகாவாட்), உடன்குடி விரிவாக்கத் திட்டம் நிலை–III (2x660 மெகாவாட்) ஆகிய அனல் மின் உற்பத்தித் திட்டங்கள்

உடன்குடி விரிவாக்க மின் திட்டம் நிலை II (2X660 மெகாவாட்) & நிலை III (2X660 மெகாவாட்) செயல்படுத்துவதற்குத் தமிழ்நாடு அரசால் ஒப்புதல் அரசாணை வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து திட்டம் செயல்படுத்துவதற்கு ஏதுவாக உடன்குடி அனல் மின் நிலையம் நிலை I-க்கு அருகாமையில் 1,500 ஏக்கர் நிலம் அடையாளம் காணப்பட்டு நிலம் கையகப்படுத்துவதற்காகத் தமிழக அரசால் (MS), அரசாணை எண் 11, நாள் 23.2.2022-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மத்திய சுற்றுச்சூழல், வனத் துறை மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் குறிப்பு விதிமுறைகள் (ToR) பெறுவதற்காக, சாத்தியக்கூறு அறிக்கை தயாரிப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

ii. உப்பூர் மிக உய்ய அனல் மின் திட்டம் (2 X 800 மெகாவாட்)

இத்திட்டத்திற்கான மதிப்பீடு மற்றும் கட்டமைப்பு காலத்திற்கான வட்டி உட்பட ரூபாய் 12,778 கோடியாகும்.

தேசிய பசுமைத் தீர்ப்பாயம் (NGT) பொது நல வழக்கு ஒன்றில், 17.3.2021 அன்று வழங்கிய தீர்ப்பில் ஆறு மாத காலத்திற்கு வேலையை நிறுத்தி வைக்க உத்தரவிட்டது. அதன் அடிப்படையில் 18.3.2021 முதல் திட்டப் பணிகள் நிறுத்த உத்தரவிடப்பட்டது. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் 29.4.2021 தேதியிட்ட வாரிய கூட்டத்தில் உப்பூர் திட்டத்தை உடன்குடி இடத்திற்கு மாற்ற உத்தரவிடப்பட்டது. இதற்கிடையில், தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் உத்தரவை 1.7.2021 அன்று உச்ச நீதிமன்றம் தடை செய்துள்ளது.

தமிழ்நாடு அரசு, அதிகரித்து வரும் மின் தேவையைப் பூர்த்தி செய்ய உப்பூர் திட்டப் பணியை இடமாற்றியமைப்பதை மறு ஆய்வு செய்ய உத்தரவிட்டது. இதன் அடிப்படையில் உப்பூர் அனல் மின் திட்டத்தை உடன்குடிக்கு மாற்றுவதை மறு ஆய்வு

செய்ய உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது. உயர்மட்டக் குழு உப்பூர் திட்டத்தை உப்பூரில் செயல்படுத்த வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது.

உப்பூர் திட்டத்தின் நம்பகத்தன்மை மற்றும் சாத்தியக்கூறுகள் குறித்து வாரியத்தின் செயல் திற நுட்ப ஆலோசகர்மூலம் கருத்துகளைப் பெற தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த அறிக்கை நிலக்கரி அடிப்படையிலான திட்டங்களின் தேவை என்கின்ற பரந்த கண்ணோட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

III. புதிய நீரேற்று மின் திட்டங்கள்

❖ **கன்னியாகுமரி மாவட்டம், கோதையாரில் (6x250 மெகாவாட்) மற்றும் தேனி மாவட்டம், மணலாற்றில் (6x200 மெகாவாட்) நீரேற்று சேமிப்பு புனல் மின் திட்டம் & ஆழியாறு நீரேற்று புனல் மின் திட்டம் (4x175 மெகாவாட்), கோயம்புத்தூர் மாவட்டம் அமைத்தல்**

கோதையார், மணலார் மற்றும் ஆழியார் ஆகிய 3 எண்ணிக்கை நீரேற்றுப் புனல் நீர் மின் திட்டங்களுக்கான நிதி மாதிரி, தகுதிக்கான கோரிக்கை, முன் மொழிவுக்கான கோரிக்கை குறித்த ஆவணங்கள் தயாரித்தல். ஒப்பந்தச் செயல்முறைகளில் உதவுதல் மற்றும் பொது தனியார் கூட்டு முறையில் சலுகை ஒப்பந்தம் நிறைவேறும் வரையிலான பரிவர்த்தனை ஆலோசனை வழங்குவதற்கான பணி ஆணை M/s. Ernst Young LLP-க்கு 13.3.2023 அன்று வழங்கப்பட்டுள்ளது.

❖ **பல்வேறு மாவட்டங்களில் 11,100 மெகாவாட் மொத்த நிறுவு திறன் கொண்ட 12 புதிய நீரேற்று திட்டங்கள் சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் அமைத்தல்**

11,100 மெகாவாட் மொத்த நிறுவு திறன் கொண்ட புதிய நீரேற்றுப் புனல் மின் திட்டங்களை முன் சாத்தியக்கூறு அறிக்கையின் அடிப்படையில் நிறுவுவதற்காகத் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் 12 இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 12]

வரவிருக்கும் நீரேற்றுத் திட்டங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

வ. எண்	திட்டங்களின் பெயர்கள்	அறிவிப்புகளின்படி நிறுவு திறன் (மெகாவாட்)	முன் சாத்தியக்கூறு அறிக்கையின்படி நிறுவு திறன் (மெகாவாட்)
i)	மேல் பவானி நீரேற்று புனல் மின் திட்டம் நீலகிரி மாவட்டம்	1000	1000
ii)	வெள்ளிமலை நீரேற்று புனல் மின் திட்டம் கன்னியாகுமரி மாவட்டம்	500	1100
iii)	சில்லஹல்லா நீரேற்று புனல் மின் திட்டம் நிலை-I நீலகிரி மாவட்டம்	1000	1000
iv)	சில்லஹல்லா நீரேற்று புனல் மின் திட்டம் நிலை-II நீலகிரி மாவட்டம்	1000	1000
v)	சாண்டிநல்லா நீரேற்று புனல் மின் திட்டம் நீலகிரி மாவட்டம்	1000	1200
vi)	மேட்டூர் நீரேற்று புனல் மின் திட்டம் சேலம் மாவட்டம்	500	1000
vii)	பாலார்-பொரந்தலார் நீரேற்று புனல் மின் திட்டம் திண்டுக்கல் மாவட்டம்	1000	1100
viii)	காரையார் நீரேற்று புனல் மின் திட்டம் திருநெல்வேலி மாவட்டம்	500	1000

[2023 ஏப்ரல் 12

வ. எண்	திட்டங்களின் பெயர்கள்	அறிவிப்புகளின்படி நிறுவு திறன் (மெகாவாட்)	முன் சாத்தியக்கூறு அறிக்கையின்படி நிறுவு திறன் (மெகாவாட்)
ix)	மஞ்சளார் நீரேற்று புனல் மின் திட்டம் தேனி மாவட்டம்	500	500
x)	சாத்தார் நீரேற்று புனல் மின் திட்டம் கன்னியாகுமரி மாவட்டம்	500	1100
xi)	சிகூர் நீரேற்று புனல் மின் திட்டம் நீலகிரி மாவட்டம்	500	800
xii)	ஆத்தூர் நீரேற்று புனல் மின் திட்டம் திண்டுக்கல் மாவட்டம்	500	300
	மொத்தம்	8,500	11,100

❖ முன் சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

❖ நீரேற்று புனல் மின் திட்டங்கள் அமைக்க அரசு தனியார் பங்களிப்பின்கீழ் (PPP), செயல்படுத்தப்படயிருக்கும் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கான ஏல ஆவணங்களைத் தயாரிப்பதற்காகப் பரிவர்த்தனை ஆலோசகரை நியமிப்பதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

எண்ணூர் சிறப்பு பொருளாதார மண்டல அனல் மின் திட்டத்தில் புகைபோக்கி வளிமக் கந்தக நீக்கும் அமைப்பை (Flue Gas Desulphurisation (FGD)) நிறுவுதல்

❖ M/s.Desein Pvt Ltd, New Delhi மூலம் FGD-க்கான முன் பணி ஆலோசனை சேவைகளை வழங்குவதற்கு P.0.no.03/24.2.2012-படி 18.6.2022 திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 12]

- ❖ *வரைவு விவரக்குறிப்புகள்* M/s. Desein Pvt Ltd *நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட விவரக்குறிப்புகள் ஆய்வு செய்யப்பட்டு கருத்துகள்* (Remarks) M/s. Desein Pvt Ltd *நிறுவனத்திற்கு 2.9.2022 அன்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் கருத்துகளின் அடிப்படையில்* M/s. Desein Pvt Ltd *நிறுவனத்தினால் இறுதி விவரக்குறிப்புகள் தயார் செய்யும் பணி நடைபெற்று வருகிறது.*

“எண்ணூரில் 2,000 மெகாவாட் அளவிற்கு சிறிய அளவிலான திறன் கொண்ட (18 முதல் 20 மெகாவாட்) அதிக எண்ணிக்கையிலான எரிவாயு இயந்திர மின் திட்டங்கள் சாத்தியக்கூறின் அடிப்படையில் அமைத்தல்.”

திட்ட ஆலோசகரின் சாத்தியக்கூறு அறிக்கையின்படி, நிறுவப்படவுள்ள 18 மெகாவாட் முதல் 20 மெகாவாட் வரையிலான அலகுகள் கொண்ட 2,000 மெகாவாட் அளவிலான எரிவாயு மின் திட்டத்தை, எண்ணூரில் நிறுவப்படவுள்ளது. விரிவான வரைவுத் திட்ட அறிக்கையை (டிபிஆர்) 27.3.2023 அன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

IV. சாதனைகள்

- ❖ **தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்காக தூத்துக்குடி /வ.உ.சி துறைமுகம் தளம் 1-ல் அதிக திறன் கொண்ட நிலக்கரி இறக்கும் இயந்திரங்களின்மூலம் நிலக்கரியை இறக்கும் திட்டம்:**

தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்காக, தூத்துக்குடி துறைமுகம் தளம் 1 மற்றும் தளம் 2-ல் நிலக்கரியை கையாளுவதற்கு சுமார் 50,000 மெட்ரிக் டன் முதல் 55,000 மெட்ரிக் டன் கொள்ளளவுக் கொண்ட கிரேனுடன்கூடிய சிறிய கப்பல்கள் மாதம் ஒன்றிற்கு 10 முதல் 12 வரை பயன்படுத்தப்பட்டு வந்தன.

அதிக அளவு நிலக்கரியை குறுகிய காலத்தில் கையாள்வதற்காகவும், தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் உள்ள 5 அலகுகளிலும் (5 x 210 மெகாவாட்) முழு அளவில் மின் உற்பத்தி தங்குதடையின்றி நடைபெறுவதற்காகவும், தமிழ்நாட்டின் மின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகவும் 70,000 மெட்ரிக் டன்

[*2023 ஏப்ரல் 12*

முதல் 75,000 மெட்ரிக் டன் கொள்ளளவுக் கொண்ட பெரிய கப்பல்களிலிருந்து நிலக்கரியை விரைவாக இறக்குவதற்காகத் திட்டம் தயாரிக்கப்பட்டு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தினால் ரூபாய் 325 கோடி செலவில் தூத்துக்குடி துறைமுகம் தளம் 1-ல் நிறுவப்பட்டுள்ள அதிக திறன் கொண்ட புதிய இரண்டு நிலக்கரி கையாளும் இயந்திரங்களின் செயல்பாடுகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 31.1.2023 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

இப்புதிய இயந்திரங்கள் வாயிலாகக் குறுகிய காலத்தில் 6 முதல் 8 பெரிய கப்பல்கள்மூலம், கப்பல் ஒன்றிற்கு 70,000 டன் முதல் 75,000 டன் வரை அதிக கொள்ளளவு நிலக்கரியை இறக்க முடிவதால் நிலக்கரியைக் கையாளும் சரக்குக் கட்டணம் டன் ஒன்றிற்கு ரூ.700-லிருந்து ரூ.540 ஆக குறையும். இதனால் ஆண்டொன்றிற்கு சுமார் ரூபாய் 80 கோடி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு சேமிப்பாகக் கிடைக்கும்.

❖ **1x800 மெகாவாட் திறன் கொண்ட வட சென்னை அனல் மின் திட்டம், நிலை 3-ல், மத்திய அமைச்சகம் சுற்றுசூழல், வனம் மற்றும் பருவ நிலை மாற்ற விதிகளை பின்பற்றி, தூசித்திரை அமைத்தல்**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் 2021-22-ல் அறிவிக்கப்பட்ட அறிவிப்பு "1X800 மெகாவாட் திறன் கொண்ட வட சென்னை அனல் மின் திட்டம், நிலை 3-ல், காற்றில் பரவும் நிலக்கரி துகள்களினால் வட சென்னை அனல் மின் திட்டம், நிலை 3-ல் உள்ள அதிநவீன மின் உபகரணங்களுக்கு ஏற்படும் பாதிப்பைத் தவிர்க்கவும் மற்றும் மத்திய அமைச்சகம் சுற்றுசூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற விதிகளைப் பின்பற்றியும் வட சென்னை அனல் மின் நிலையம் நிலை-1 மற்றும் வட சென்னை அனல் மின் நிலையம், நிலை 3-க்கும் இடையே 1 கி.மீ. நீளம் மற்றும் 14 மீ. உயரத்தில் தூசித்திரை சுமார் 38 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்க உத்தேசிக்கப்பட்டது".

மேற்கூறிய பணிகள் ஏப்ரல் 22-ல் தொடங்கப்பட்டு ஜனவரி 23-ல் ரூ.38.42 கோடி செலவில் முடிக்கப்பட்டன. இது காற்றுத் தடைகளாகச் செயல்பட்டு, வட சென்னை அனல் மின் நிலையம், நிலை I-லிருந்து வட சென்னை அனல் மின் திட்ட நிலை III-ல் உள்ள உபகரணங்களில் நிலக்கரி தூசி படிவதைத் தவிர்க்கும்.

2023 ஏப்ரல் 12]

1.3 மின் தொடரமைப்பு

மாநிலத்தின் பல்வேறு துறைகளில் அதிகரித்து வரும் மின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகத் தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் தற்போதுள்ள மின் தொடரமைப்புக் கட்டமைப்புகளை மேம்படுத்தியும் மற்றும் தரம் உயர்த்தியும் வருகிறது. மேலும், மாநிலம் முழுவதும் புதிய மின் தொடரமைப்புக் கட்டமைப்புக்களைச் சீராக தொடர்ந்து நிறுவி வருகிறது.

மேலும், கட்டமைப்பு வளர்ச்சிக்குத் தேவையான நிலப் பற்றாக்குறை நிலவும் சூழலைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு மின்தொடரமைப்பு கழகம் நவீன தொழில்நுட்பத்தில் வளிமகாப்பு துணை மின் நிலையங்கள் மற்றும் 765 கி.வோ அதி உயர் அழுத்த கட்டமைப்புகள் ஆகியவற்றை மிகக் குறைந்த நிலப்பரப்பில் அமைப்பதன்மூலம் கூடுதல் உயர் மின் அழுத்தத்தில் அதிக மின் சக்தியைக் கடத்தவும், விநியோகிக்கவும் இயலும்.

மேலும், மிகவும் பயனுள்ள மற்றும் நவீன போக்குவரத்துத் திட்டங்களான மெட்ரோ இரயில் திட்டங்கள், இரயில் பாதை மின்மயமாக்கும் பணிகள், மின்சார வாகனப் பயன்பாடு மற்றும் தகவல் தொழில்நுட்ப மையங்களுக்கான மின் கட்டமைப்பு மேம்பாடு போன்ற பணிகளையும் தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் மேற்கொண்டு வருகிறது.

மேற்கண்ட புதிய வளர்ச்சியினால் ஏற்படும் மின் தேவைகளைப் பூர்த்தி செய்யும்பொருட்டு, தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் தேவைக்கேற்ற மின்னழுத்த நிலைகளில் பல்வேறு மின் தொடரமைப்பு திட்டங்களைச் செயலாக்கி வருகிறது.

I. 2022-2023 ஆம் நிதியாண்டில் மின் தொடரமைப்புக் கட்டமைப்புகளின் மேம்பாடு

i. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரால் திறந்து வைக்கப்பட்ட திட்டங்கள்

தமிழ்நாட்டின் 13 மாவட்டங்களில் 15 எண்ணிக்கையிலான துணை மின் நிலையங்கள் மற்றும் 31 மாவட்டங்களில் 105 எண்ணிக்கையிலான கூடுதல்/திறன் மேம்படுத்தப்பட்ட மின் மாற்றிகள் துவக்கி வைத்தல், மேலும் 4 மாவட்டங்களில் 8 புதிய துணை மின் நிலையங்களுக்கு அடிக்கல் நாட்டுதல் போன்ற

பல்வேறு திட்டங்கள் ரூ.588.78 கோடி திட்ட மதிப்பீட்டில் 16.8.2022 மற்றும் 7.11.2022 ஆகிய தேதிகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவங்கி வைக்கப்பட்டன.

ii. 2022-2023 ஆம் நிதியாண்டில் சாதனைகள்:

தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தால் 2022-2023 ஆம் நிதியாண்டில் கீழ்க்கண்ட மின் தொடரமைப்புத் திட்டங்கள் இயக்கத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன:

❖ 2 எண்ணிக்கை 400/230-110 கி.வோ. துணை மின் நிலையங்கள் (புளியந்தோப்பு மற்றும் ஒட்டப்பிடாரம்) மற்றும் ஈரோட்டில் ஒரு 230/110 கி.வோ. வளிமகாப்பு துணை மின் நிலையம், 13 எண்ணிக்கை 110 கி.வோ. துணை மின் நிலையங்கள்மூலம் 2,739 எம்.வி.ஏ. மின் கட்டமைப்புத் திறன் அதிகரிக்கப்பட்டுள்ளது.

❖ 596.51 சுற்று கி.மீ. நீளத்திற்கு மிக உயர் அழுத்த மின் பாதை.

மாநில அளவில், 150 எண்ணிக்கைக் கூடுதல் மின் மாற்றி மற்றும் திறன் உயர்த்தப்பட்ட மின் மாற்றிகள் நிறுவியதன்மூலம் 2,174 எம்.வி.ஏ. அளவிற்கு, மின் தொடரமைப்புக் கட்டமைப்பு திறன் அதிகரிக்கப்பட்டதன்மூலம், எதிர்கால மின் சுமையினை எதிர்கொள்ளவும், தரமான மற்றும் நம்பகமான 24X7 மணி நேரமும் மின்சாரம் வழங்குவதன் மூலமும் பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருக்கும்.

துணை மின் நிலையங்களில், 583 எம்.வி.ஆர். அளவிற்கு மொத்த திறன் கொண்ட மின் தேக்கி வைப்பகம் (Reactor & Capacitor) இயக்கத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இதன்மூலம் மின் தொடரமைப்பு மற்றும் மின் பகிர்மானத்தில் சீரான மின் அழுத்தத்தில் மின்சாரம் வழங்க வழிவகுக்கும்.

II. மாநிலத்தில் உள்ள மின் தொடரமைப்பு கட்டமைப்புகள்:
1.4.2023 அன்று வரை, தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட மின் தொடரமைப்புக் கட்டமைப்புகள் தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தால் அமைக்கப்பட்டுள்ளன:

2023 ஏப்ரல் 12]

வ. எண்	மின் அழுத்த அளவு	மொத்த துணை மின் நிலையங்களின் எண்ணிக்கை	மொத்த மின் பாதையின் நீளம் சுற்று கி.மீ.
1	400 கி.வோ	18	4,752.02
2	230 கி.வோ	114	11,495.61
3	110 கி.வோ	941	20,725.80
4	66 கி.வோ	03	83
மொத்தம்		1,076	37,056.43

i. 765 கி.வோ. மின் தொடரமைப்புக் கட்டமைப்பு

இந்தியாவில் உள்ள அனைத்து மாநில மின் தொடரமைப்புக் கழகங்களில், தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் முதன் முதலாக 765 கி.வோ. மின் கட்டமைப்பை அமைத்து வருகிறது.

தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டு வருகின்ற வட சென்னை 765 கி.வோ. வளிமகாப்பு தொகுப்பு துணை மின் நிலையம் மற்றும் அரியலூர் 765 கி.வோ. துணை மின் நிலையம் ஆகிய இரண்டு துணை மின் நிலையங்களை இந்த ஆண்டுக்குள் இயக்கத்திற்குக் கொண்டு வருவதற்கான பணிகளைத் தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் துரிதப்படுத்தி வருகிறது.

வடசென்னை 765 கி.வோ. வளிமகாப்பு தொகுப்பு துணை மின் நிலையத்தில் பெரும் பகுதி பணிகள் முடிவடைந்துள்ளன. அரியலூர் 765 கி.வோ. துணை மின் நிலையத்தில் பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளன. மேலும், துணை மின் நிலையங்களுக்குத் தொடர்புடைய 765 கி.வோ. மின் பாதைகள் அமைக்கும் பணிகள் நிறைவு பெற்று இயக்குவதற்குத் தயார் நிலையில் உள்ளன.

மேலும், விருதுநகரை சுற்றியுள்ள பகுதியில் உள்ள மின் உற்பத்தித் திட்டங்களிலிருந்து பெறப்படும் மின்சாரத்தை வெளிகொணர்வதற்காகவும், தமிழ்நாட்டில் தென் பகுதியில் இயக்கத்தில் உள்ள மற்றும் வரவிருக்கின்ற புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து பெறப்படும் மின்சாரத்தை மின்

தேவையுள்ள பகுதிகளுக்குக் கொண்டு செல்வதற்கும், விருதுநகரில் ஒரு 765 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. விருதுநகர் 765 கி.வோ. துணை மின் நிலையம் மற்றும் அதன் தொடர்புடைய விருதுநகரிலிருந்து கோயம்புத்தூர் வரையிலான 765 கி.வோ. மின் பாதை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. விருதுநகர் 765 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து கயத்தாறு–தென்னம்பட்டி 400 கி.வோ. மின் பாதையின் பொது முனை வரையிலான 400 கி.வோ. மின் பாதை பணி நிறைவுபெறும் நிலையில் உள்ளது. மேற்கண்ட 400 கி.வோ. மின் பாதையை பொது முனையிலிருந்து உடன்குடி சுவிட்ச் யார்டு வரை அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இப்பணிகள் அனைத்தும் 2023–2024-ல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கோவை, சேலம் மற்றும் மேட்டூர் பகுதிகளின் மின் கட்டமைப்பை வலுப்படுத்துவதன்பொருட்டு கோயம்புத்தூரில் முன்மொழியப்பட்டுள்ள மற்றொரு 765 கி.வோ. துணை மின் நிலையமானது, அரியலூர் 765 கி.வோ. துணை மின் நிலையம், விருதுநகர் 765 கி.வோ. துணை மின் நிலையம் மற்றும் பாலவாடி, இடையார்பாளையம் மற்றும் ராசிபாளையம் ஆகிய மூன்று 400 கி.வோ. துணை மின் நிலையங்களுடன் இணைக்கப்படவுள்ளது. கோயம்புத்தூர் 765 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கத் தேவைப்படும் மொத்த நிலப்பரப்பான 99.15 ஏக்கரில் 67.78 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டு, மீதம் தேவையுள்ள 31.37 ஏக்கர் நிலத்தை அத்தியாவசிய கையகப்படுத்தலுக்கான அரசு அனுமதி வழங்கப்பட்டு, கையகப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வடசென்னை 765 கி.வோ. வளிமகாப்பு தொகுப்பு துணை மின் நிலையம், அரியலூர் 765 கி.வோ. துணை மின் நிலையம், விருதுநகர் 765 கி.வோ. துணை மின் நிலையம் மற்றும் கோயம்புத்தூர் 765 கி.வோ. துணை மின் நிலையம் ஆகியவற்றை உள்ளடக்கிய 765 கி.வோ. மின் கட்டமைப்பை முடிப்பதன்மூலம் மின் தொடர் செயலாக்கத் திறனை மேம்படுத்துவதுடன் மாநிலத்திற்குள்ளும் மற்றும் மாநிலங்களுக்கு இடையேயும் மின் பரிமாற்ற செயல்திறனை அதிகரிக்கவும் இயலும்.

2023 ஏப்ரல் 12]

ii. 400 கி.வோ. மின் தொடரமைப்புக் கட்டமைப்பு

அ. சென்னை பெருநகர் மற்றும் சுற்றியுள்ள பகுதிகள்

சென்னை பெருநகர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள ஆவடி, தாம்பரம் மாநகராட்சிகளில், தொழில் துறை/வணிகம்/கட்டுமானம்/நகரமயமாக்கல்/சென்னை மெட்ரோ இரயில் கட்டம்-2/ தகவல் தொழில்நுட்ப மையங்கள்/மின்சார வாகனங்கள் போன்ற பன்முக வளர்ச்சியால் அதிகரித்து வரும் மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்ய குறைவான நிலப் பரப்பளவில் வலுவான, நம்பகமான, துணை மின் நிலையங்கள் மற்றும் தொடர்புடைய மிக உயர் மின்னழுத்தப் பாதைகள் அவசியமாகிறது.

அதன்படி, சென்னையின் மின் கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக 5 எண்ணம் 400 கி.வோ. வளிமகாப்பு துணை மின் நிலையங்கள் மற்றும் 1 எண்ணம் 400 கி.வோ. துணை மின் நிலையம் என மொத்தம் 6 எண்ணம் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

கும்மிடிப்பூண்டி மற்றும் வட சென்னையில் உற்பத்தி செய்யப்படவிருக்கும் மின்சாரத்தை வெளிகொணர்வதற்காக தேர்வாய்கண்டிகையிலும், சென்னை மாநகரின் மின் கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக கிண்டியிலும் என மொத்தம் இரண்டு புதிய 400 கி.வோ. துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டு 230 கி.வோ. அளவில் மின்னூட்டப்பட்டுள்ளது. இத்துணை மின் நிலையங்களுக்குத் தொடர்புடைய 400 கி.வோ. உயர் அழுத்த மின் பாதை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் விரைந்து முடிக்கப்பட்டு இத்துணை மின் நிலையங்கள் விரைவில் 400 கி.வோ. நிலையில் இயக்கத்திற்குக் கொண்டு வரப்படும். புளியந்தோப்பு 400 கி.வோ. வளிமகாப்பு துணை மின் நிலையத்தின் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு, 24.3.2023 அன்று சோதனை மின்னூட்டம் செய்யப்பட்டது.

தரமணி 400 கி.வோ. (வளிமகாப்பு) துணை மின் நிலையத்தில் 230 கி.வோ. வளிமகாப்பு களம் 17.3.2023 அன்று சோதனை மின்னூட்டம் செய்யப்பட்டது. தரமணி 400 கி.வோ. (வளிமகாப்பு) துணை மின் நிலையத்திற்கான 400 கி.வோ. புதைவடத்திற்கான பணி ஆணை சமீபத்தில் வழங்கப்பட்டுள்ளது. கொரட்டூர் 400 கி.வோ. (வளிமகாப்பு) துணை மின் நிலையத்தின் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. இத்துணை மின் நிலையம் 2023-2024 ஆம் ஆண்டில் இயக்கத்திற்குக் கொண்டு வரப்படும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

[2023 ஏப்ரல் 12

கோயம்பேடு 400/230 கி.வோ. வளிமகாப்பு துணை மின் நிலையம்

சென்னை மாநகர் மற்றும் அதனைச் சுற்றிலும் தற்போது வெகு வேகமாக வளர்ந்து வரும் தகவல் தரவு மையங்களின் (DATA CENTRES) மின் பளுவினைக் கருத்திற்கொண்டு கோயம்பேட்டில் புதிய 400/230 கி.வோ. வளிமகாப்பு துணை மின் நிலையம், 2X500 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின் மாற்றிகளுடன் நிறுவுவதற்கான நிலம் கண்டறியப்பட்டு, ஆர்ஜிதமும் செய்யப்பட்டுவிட்டது. நடப்பு நிதியாண்டில் துணை மின் நிலையம் அமைப்பதற்கான பணிகளைத் துவக்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

ஆ. சென்னை தவிர தமிழ்நாட்டின் பிற பகுதிகள்

மின் தொடர் கட்டமைப்பை மேம்படுத்துவதற்காகவும், மாநிலம் முழுவதும் உள்ள மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து மின் சக்தியை வெளிகொணர்வதற்காகவும், சென்னை பகுதியைத் தவிர்த்து, வெள்ளாளவிடுதி, இடையர்பாளையம், ஒட்டப்பிடாரம், சமூகரெங்கபுரம் மற்றும் பரளி ஆகிய 5 இடங்களில் 400 கி.வோ. துணை மின் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

வெள்ளாளவிடுதி துணை மின் நிலையத்திற்கான பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன, இத்துணை மின் நிலையம் விரைவில் இயக்கத்திற்குக் கொண்டு வரப்படும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

ஒட்டப்பிடாரம் துணை மின் நிலையத்திற்கான பணிகள் முடிவடைந்து, 22.3.2023 அன்று சோதனை மின்னூட்டம் செய்யப்பட்டது.

இடையர்பாளையம் 400 கி.வோ. துணை மின் நிலையத்திற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

பரளி 400 கி.வோ. துணை மின் நிலையம் அமைப்பதற்கு உச்ச நீதிமன்றம் ஈடுசெய்யும் காடு வளர்ப்பு அடிப்படையில் அனுமதி வழங்கியுள்ளது. துணை மின் நிலையம் அமைக்கும் பணிகளுக்கான ஆணைகள் வழங்கும் பணி சம்பந்தப்பட்ட துறைகளில் கருத்துரு நிலையில் உள்ளன.

பசுமை வழித்தடம் 2-ன் தொகுப்பில் அடங்கியுள்ள சமூகரெங்கபுரம் 400 கி.வோ. துணை மின் நிலையத்திற்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்படவுள்ளது.

2023 ஏப்ரல் 12]

மின் கட்டமைப்பை வலுப்படுத்துதல், பசுமை எரிசக்தியை வெளியேற்றுதல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு மேற்கூறிய திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன.

iii. 230 கி.வோ. மின் தொடரமைப்புக் கட்டமைப்பு

அ. சென்னை பெருநகர் மற்றும் சுற்றியுள்ள பகுதிகள்

சென்னை பெருநகரில் திருவான்மியூர் (வளிமகாப்பு), எண்ணூர் (வளிமகாப்பு), கணேஷ்நகர் (வளிமகாப்பு), கே.கே. நகர் (வளிமகாப்பு), பஞ்செட்டி, ஆவடி, மறைமலைநகர் மற்றும் மாம்பாக்கம் ஆகிய 8 இடங்களில் 230 கி.வோ. துணை மின் நிலையங்கள்அமைக்கப்படவிருக்கின்றன.

இவற்றில் திருவான்மியூர் (வளிமகாப்பு), மறைமலைநகர், மாம்பாக்கம், பஞ்செட்டி மற்றும் ஆவடி ஆகிய துணை மின் நிலைய பணிகள் நடைபெற்று வருகின்றன.

3.3.2023 அன்று கணேஷ்நகர் வளிமகாப்பு துணை மின் நிலையத்திற்கான பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. எண்ணூர் (வளிமகாப்பு) மற்றும் கே.கே. நகர் (வளிமகாப்பு) ஆகிய துணை மின் நிலையங்களுக்கான ஒப்பந்தப்புள்ளி பணிகள் நடைப்பெற்று வருகின்றன.

ஆ. சென்னை தவிர தமிழ்நாட்டின் பிற பகுதிகள்

*தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் மின் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காகவும் செயலாக்க மேம்பாட்டிற்காகவும் (*Flexibility of operation*) சென்னையை தவிர மாநிலத்தின் பிற பகுதிகளில் 16 இடங்களில் 230 கி.வோ துணை மின் நிலையங்களை அமைக்க திட்டமிட்டுள்ளது.*

இவற்றில், கருப்பூர், செல்வபுரம், கலிவேலம்பட்டி, வெம்பாக்கம், நல்லூர், சாத்துமதுரை மற்றும் நாங்குநேரி ஆகிய 7 துணை மின் நிலையப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், நரிமணம், முப்பந்தல், பூலவாடி, கீழக்குப்பம் மற்றும் தும்பலப்பட்டி ஆகிய 5 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான ஒப்பந்தப்புள்ளி பணிகள் ஆரம்பகட்ட நிலையில் உள்ளன.

கே.புதூர், இராஜகோபாலபுரம், தக்கலை மற்றும் சரவணம்பட்டி ஆகிய 4 எண்ணிக்கை 230 கி.வோ. துணை மின் நிலையங்கள், வளிமகாப்பு துணை மின் நிலையங்களுக்குப் பதிலாக சிக்கன நடவடிக்கையாக வெளிப்புற துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான நிலம் கண்டறியப்பட்டு வருகிறது. நிலம் கையகப்படுத்திய பிறகு இத்துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான ஒப்பந்தப்புள்ளி பணிகள் மேற்கொள்ளப்படும்.

III. நிதி நிறுவன மற்றும் பன்னாட்டு நிதியுதவி பெறும் மின் தொடர் திட்டங்கள்

i. ஜப்பானிய பன்னாட்டுக் கூட்டுறவு நிறுவன நிதியுதவி (JICA)

மின் தொடர் கட்டமைப்பை உருவாக்குவதற்காக ரூபாய் 3572.93 கோடி கடன் உதவி JICA-வின் அதிகாரப்பூர்வ மேம்பாட்டு கடன் உதவியின்கீழ் (ODA) அனுமதிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக ஐந்து 400 கி.வோ. துணை மின் நிலையங்கள், பன்னிரெண்டு 230 கி.வோ. துணை மின் நிலையங்கள் மற்றும் அதன் தொடர்புடைய மின் பாதைகளும் ரூ.2494.67 கோடி மதிப்பீட்டில் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இந்த ஐந்து 400 கி.வோ. துணை மின் நிலையங்களில், காரமடை, மணலி (வளிமகாப்பு) மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய துணை மின் நிலையங்கள் இயக்கத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. கிண்டி (வளிமகாப்பு) துணை மின் நிலையம் 230 கி.வோ. மின் அழுத்தத்தில் மின்னூட்டம் செய்யப்பட்டுள்ளது. இதற்கான 400 கி.வோ. மின் பாதைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. பணிகள் நிறைவு பெற்றவுடன் கிண்டி துணை மின் நிலையம் 400 கி.வோ. மின் அழுத்தத்தில் 2023–2024 ஆம் ஆண்டில் இயக்கத்திற்குக் கொண்டு வரப்படும். கொரட்டூர் 400 கி.வோ. (வளிமகாப்பு) துணை மின் நிலையப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிதியுதவியின்கீழ் உள்ள பன்னிரெண்டு 230 கி.வோ. துணை மின் நிலையங்களும் இயக்கத்திற்குக் கொண்டு வரப்பட்டுவிட்டன.

கூடுதல் மின் தொடரமைப்பை நிறுவுவதற்காக ரூ.634.85 கோடி JICA நிதியுதவியிலான 15 தொகுப்புகள் கொண்ட கூடுதல் திட்டங்களுக்குப் பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

2023 ஏப்ரல் 12]

ஜப்பானிய பன்னாட்டுக் கூட்டுறவு நிறுவனத்தின் நிதியுதவி பெறும் தொகுப்பில் உள்ள அனைத்து திட்டங்களும் 2023-2024 ஆம் ஆண்டிற்குள் இயக்கத்திற்குக் கொண்டு வரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ii. பசுமைவழித்தடம்-முதல் பகுதிகீழ் (GEC-I) அமைக்கப்படும் திட்டங்கள் – (KFW) ஜெர்மன் நிதியுதவி

புதுப்பிக்கத்தக்க எரிசக்திமூலம் பெறக்கூடிய அதிக அளவு மின்சாரத்தை வெளிக்கொணர்வதற்காக தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தால் ரூபாய் 2,049.392 கோடி திட்ட மதிப்பீட்டில் (GST உட்பட) மின் தொடர் கட்டமைப்பை அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ரூபாய் 529.31 கோடி தேசிய மாசற்ற எரிசக்தி நிதியின்கீழ் (NCEF) மானியமாகவும், 76 மில்லியன் யூரோ (ரூபாய் 573.26 கோடி) இந்தோ ஜெர்மன் இருதரப்பு ஒத்துழைப்பின்கீழ் KfW நிதியுதவியின்மூலம் மிதவட்டிக் கடனாகவும், இதர நிதி, மின் தொடரமைப்புக் கழக பங்கு மூலதனத் தொகை மூலமாகவும் இத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தென்னம்பட்டி 400 கி.வோ. துணை மின் நிலையம், தென்னம்பட்டி முதல் கயத்தாறு வரை 400 கி.வோ. இரட்டை சுற்று மின் பாதை, இராசிபாளையம் முதல் பாலவாடி வரை 400 கி.வோ. இரட்டை சுற்று மின் பாதை, 6 எண்ணிக்கையில் 230 கி.வோ. மின் பாதை மற்றும் ஐந்து 230 கி.வோ. துணை மின் நிலையங்களில் 230/110 கி.வோ. மின் மாற்றிகளின் மின் திறனை 100 எம்.வி.ஏ.—விலிருந்து 160 எம்.வி.ஏ. ஆக அதிகப்படுத்துதல் ஆகிய அனைத்துப் பணிகளும் நிறைவு பெற்றுள்ளன.

iii. பசுமை வழித்தடம்—இரண்டாவது பகுதிகீழ் அமைக்கப்படும் திட்டங்கள் – GEC-II

மாநிலத்தில் புதுப்பிக்கத்தக்க ஆற்றலை உபயோகப்படுத்தவும், புதுப்பிக்கத்தக்க ஆற்றலை மாநிலங்களுக்கு இடையே திறம்பட கடத்துவதற்குப் புதிய கூடுதல் மற்றும் அதிக திறன் கொண்ட துணை மின் நிலையங்கள் மற்றும் மின் பாதைகள் நிறுவுதல் ஆகிய திட்டங்கள் கண்டறியப்பட்டு பசுமை வழித்தடத்தின் இரண்டாவது பகுதியில் (GEC-II) இணைக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் 400 கி.வோ. துணை மின் நிலையமும், திருப்பூர்

மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் 230 கி.வோ. துணை மின் நிலையங்களையும் பசுமை வழித்தடத்தின் இரண்டாவது பகுதியின்கீழ் (GEC-II) அமைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

இந்த பசுமை வழித்தடம் II-ல் திருநெல்வேலி மாவட்டம்- சமூகரெங்கபுரத்தில் ஒரு 400 கி.வோ. துணை மின் நிலையம், கன்னியாகுமரி மாவட்டத்தில் முப்பந்தல், மேலும் திருப்பூர் மாவட்டத்தில் பூலவாடி மற்றும் கொங்கல் நகரம் ஆகிய இடங்களில், 3 எண்ணிக்கை 230 கி.வோ. துணை மின் நிலையங்கள் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திருத்தப்பட்ட திட்டச் செலவு ரூ.1,006.64 கோடி கீழ்க்கண்டவாறு நிதியளிக்கப்பட்டுள்ளது:

MNRE மானியம்–ரூ.237.52 கோடி

KfW-லிருந்து கடன்-ரூ.473.12 கோடி (47% திட்ட மதிப்பில்)

பங்கு மூலதனம்–ரூ.296 கோடி

மேற்கண்ட முன்மொழிவுக்குப் பொருளாதார விவகாரங்கள் துறை (DEA), புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை (MNRE), இந்திய அரசின் நிதி அமைச்சகம் (MoF)ஆகியவை அனுமதி வழங்கியுள்ளன. ஜெர்மானிய நிதியுதவி வங்கியுடன் (KfW) கடனுதவி ஒப்பந்தம் 24.11.2022 அன்று கையெழுத்தாகியுள்ளது. பசுமை வழித்தடத்தின் இரண்டாவது பகுதி (GEC-II) திட்டங்களுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் ஏப்ரல் 2023-ல் கோரப்படும்.

iv. ஆசிய வளர்ச்சி வங்கியால் (ADB) நிதியளிக்கப்பட்ட சென்னை – கன்னியாகுமரி தொழில் பெரு வழித்தட (CKIC) திட்டங்கள்

அ. துணை மின் நிலையம் மற்றும் அதன் தொடர்பான மின் பாதைகள்

தென் மாவட்டங்களில் புதியதாக உற்பத்தி செய்யப்படும் கூடுதல் மின்சாரத்தையும் புதுப்பிக்கத்தக்க எரிசக்திமூலம் பெறக்கூடிய மின்சாரத்தையும் வெளிகொணர்வதற்காகவும், சென்னை-கன்னியாகுமரி தொழில் பெரு வழித்தடத்தின் வடக்கு மற்றும் தெற்கு முனைகளுக்கு இடையிலான மின் கட்டமைப்பை மேம்படுத்துவதற்காகவும், விருதுநகரில் 765 கி.வோ. துணை மின் நிலையம், ஒட்டப்பிடாரத்தில் 400 கி.வோ. துணை மின்

2023 ஏப்ரல் 12]

*நிலையம் மற்றும் அதன் தொடர்பான மின் பாதைகளும் ரூபாய் 4,332.57 கோடி செலவில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக ஆசிய வளர்ச்சி வங்கி (*Asian Development Bank*) 451 மில்லியன் யு.எஸ். டாலர் நிதியுதவியும், தமிழ்நாடு அரசு ரூபாய் 1,000 கோடி நிதியுதவியும் வழங்குகிறது.*

ஒட்டப்பிடாரம் துணை மின் நிலையத்திற்கான பணிகள் முடிவடைந்து, இத்துணை மின் நிலையம் 22.3.2023 அன்று சோதனை மின்னூட்டம் செய்யப்பட்டது.

விருதுநகர் 765 கி.வோ. துணை மின் நிலையம் மற்றும் அதன் தொடர்பான மின் பாதை ஆகியவை அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தில் கூடுதல் பணியாகக் கயத்தாறு-தென்னம்பட்டி 400 கி.வோ. இரட்டை சுற்று மின் பாதையின் பொது முனையிலிருந்து உடன்குடியை இணைக்க, தேவையான நிதியுதவி பெறுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஆ. ஆசிய வளர்ச்சி வங்கி (Asian Development Bank) நிதியுதவியுடன் தமிழ்நாடு மின் வாரிய துறையில் நிறுவன சீராய்வுப் பணி

*தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் (*TANGEDCO*) மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் (*TANTRANSCO*) ஆகிய இரு நிறுவனங்களின் ஒட்டுமொத்த திறனை மேம்படுத்த, ஆசிய வளர்ச்சி வங்கி (*Asian Development Bank*) நிதியுதவியுடன் விரிவான மேலாண்மை ஆய்வு செய்திட,* M/s. Ernst& Young LLP, *என்ற டெல்லியைச் சேர்ந்த நிறுவனம் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளது.*

இந்த ஆலோசனைக் குழு மின் உற்பத்தித் திட்டமிடல், மின் தொடரமைப்பு வடிவமைத்தல், மின் பகிர்மான திறன் மேம்பாடு மற்றும் நிறுவனக் கட்டமைப்பு குறித்த பல்முனைத் தீர்வுகளோடு இணைந்த நிதி மேலாண்மைச் சீராய்வு ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. இந்நிறுவனம், சில பணிகளை ஆராய்ந்த பிறகு, அதற்குண்டான ஆய்வறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளது. அந்த அறிக்கைகள் சம்பந்தப்பட்ட பணி மையக் குழுவின் வாயிலாக ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

v. தமிழ்நாடு முதலீட்டு ஊக்குவிப்புத் திட்டம்

i. திட்டம்-1

6 எண்ணிக்கையிலான மின் தொடரமைப்புத் திட்டங்கள் தமிழ்நாடு முதலீட்டு ஊக்குவிப்புத் திட்டம்-1ன்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களின் மொத்த மதிப்பீடான ரூ.216.39 கோடியில் தமிழ்நாடு அரசிடம் ரூ.195.23 கோடி நிதியுதவியாகவும், மீதமுள்ள ரூ.21.26 கோடி தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தின் பங்கு மூலதனத் தொகையாகவும் பெறப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்மூலம் செயலாக்கத்திற்கு உட்பட்ட 6 திட்டங்களில் 5 திட்டங்களின் அனைத்துப் பணிகளும் நிறைவு பெற்றுள்ளன மற்றும் மீதமுள்ள முனுசாமி சாலை 110 கி.வோ. வளிமகாப்பு துணை மின் நிலையப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ii. தமிழ்நாடு முதலீட்டு ஊக்குவிப்புத் திட்டம்-2:

ரூ.481.65 கோடி திட்ட மதிப்பிலான 15 எண்ணிக்கை மின் தொடரமைப்புத் திட்டங்கள் முழு திட்ட மதிப்பீடும் தமிழ்நாடு அரசிடம் நிதியுதவியாகப் பெற்று, தமிழ்நாடு முதலீட்டு ஊக்குவிப்பு திட்டம்-2-ன்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அனைத்து 15 திட்டங்களுக்கும் பணி ஆணை வழங்கப்பட்டு, 9 திட்டங்களில் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. மீதமுள்ள ஆறு (6) திட்டப் பணிகள் முறையே குஞ்சலம் 110 கி.வோ. துணை மின் நிலையம், திருவான்மியூர் 230 கி.வோ. வளிமகாப்பு துணை மின் நிலையம், ஆவடி 230 கி.வோ. துணை மின் நிலையம், பஞ்செட்டி 230 கி.வோ. துணை மின் நிலையம், மதுரவாயல் வளிமகாப்பு 110 கி.வோ. துணை மின் நிலையம் மற்றும் துவாக்குடி 230 கி.வோ. துணை மின் நிலையம் சார்ந்த மின் பாதை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

IV. செயல்பாட்டிற்கு வரவிருக்கும் மின் உற்பத்தி நிலையங்களை மின்கட்டமைப்புடன் இணைக்கும் மின் பாதைத் திட்டங்கள்

செயல்பாட்டிற்கு வரவிருக்கும் மின் உற்பத்தி நிலையங்களை மின் கட்டமைப்புடன் இணைக்கும்பொருட்டு பின்வரும் மின் பாதைப் பணிகளைத் தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் செயல்படுத்தியும், திட்டமிட்டும் வருகிறது.

வ. எண்	மின் உற்பத்தித் திட்டத்தின் பெயர்	மின் பாதை இணைப்பு
1	வடசென்னை அனல் மின் திட்டம் நிலை – III	765 கிலோ வோல்ட் இரட்டை சுற்று மின்பாதைமூலம் வடசென்னை அனல் மின் திட்டம் III-ஐ 765/400 கிலோ வோல்ட் வடசென்னை தொகுப்பு துணை மின் நிலையத்துடன் இணைத்தல்
2	எண்ணூர் சிறப்பு பொருளாதார மண்டல அனல் மின் திட்டம்	400 கிலோ வோல்ட் இரட்டை சுற்று மின்பாதைமூலம் எண்ணூர் சிறப்பு பொருளாதார மண்டல அனல் மின் திட்டத்தை 765/400 கிலோ வோல்ட் வடசென்னை தொகுப்பு துணை மின் நிலையத்துடன் இணைத்தல்
3	எண்ணூர் அனல் மின் நிலைய விரிவாக்கத் திட்டம்	400 கிலோ வோல்ட் இரட்டை சுற்று மின்பாதைமூலம் எண்ணூர் அனல் மின் நிலைய விரிவாக்கத் திட்டத்தை 765/400 கிலோ வோல்ட் வட சென்னை தொகுப்பு துணை மின் நிலையத்துடன் இணைத்தல்.
4	உடன்குடி அனல் மின் திட்டம் நிலை–I	400 கிலோ வோல்ட் இரட்டை சுற்று மின் பாதைகள்மூலம் உடன்குடி அனல் மின் திட்டத்தை ஒட்டப்பிடாரம் 400/230 கிலோ வோல்ட் மற்றும் விருதுநகர் 765/400 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்களுடன் இணைத்தல்
5	குந்தா நீரேற்று புனல் மின் திட்டம்	மூன்று 230 கிலோ வோல்ட் மின் பாதைகள்மூலம் குந்தா நீரேற்றுப் புனல் மின் உற்பத்தித் திட்டத்தைப் பரளி 400/230 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்துடன் இணைத்தல்
6	சில்லஹல்லா நீரேற்று புனல் மின் திட்டம் நிலை–I	400 கிலோ வோல்ட் இரட்டை சுற்று மின் பாதைமூலம் சில்லஹல்லா நீரேற்றுப் புனல் மின் திட்டத்தைப் பரளி 400 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்துடன் இணைத்தல்

வடசென்னை அனல் மின் திட்டம் III-க்கான 765 கிலோ வோல்ட் மின் பாதைப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன. எண்ணூர் சிறப்பு பொருளாதார மண்டலம் மற்றும் எண்ணூர் விரிவாக்கம் அனல் மின் நிலைய விரிவாக்கத் திட்டங்களுக்கான 400 கிலோ வோல்ட் மின் பாதைகள் மற்றும் குந்தா நீரேற்றுப் புனல் மின் திட்டத்திற்கான 230 கிலோ வோல்ட் மின் பாதை பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் உடன்குடி அனல் மின் திட்டத்திற்கான 400 கிலோ வோல்ட் மின் பாதையை விருதுநகர் மற்றும் ஒட்டப்பிடாரம் துணை மின் நிலையங்களுடன் இணைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. சில்லஹல்லா நீரேற்றுப் புனல் மின் திட்டத்திற்கான 400 கிலோ வோல்ட் மின் பாதைப் பணிகள் நிர்வாக ஒப்புதல் பெற்றவுடன் தொடங்கப்படும்.

V. மின்தொடர் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான திட்டங்கள்

மின் தொடர் கட்டமைப்பை மேலும் மேம்படுத்துவதற்காகவும், பொதுமக்களின் மின் தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்வதற்காகவும் தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் கடந்த 2021-2022 ஆம் ஆண்டில் 102 மிக உயரழுத்த துணை மின் நிலையங்களை ரூ.10,994 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் ரூ.125 கோடி மதிப்பீட்டில் 12 எண்ணிக்கை 33 கி.வோ. துணை மின் நிலையங்களை 110 கி.வோ. துணை மின் நிலையங்களாக மேம்படுத்துவதற்கும், ரூபாய் 601 கோடி மதிப்பீட்டில் 245 மிக உயரழுத்த துணை மின் நிலையங்களில் திறன் உயர்த்தப்பட்ட மின் மாற்றிகள் நிறுவுவதற்கும், 2022-2023-ல் 52 மிக உயரழுத்த துணை மின் நிலையங்களை ரூ.1,198 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் ரூபாய் 154 கோடி மதிப்பீட்டில் 33 எண்ணிக்கை மிக உயரழுத்த துணை மின் நிலையங்களில் திறன் உயர்த்தப்பட்ட மின் மாற்றிகள் நிறுவுவதற்கும், சட்டமன்றத்தில் அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. அவற்றுள், 89 புதிய மிக உயரழுத்த துணை மின் நிலையங்களுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, அவற்றுள் 18 துணை மின் நிலையங்களுக்கான பணி ஆணைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இதேபோல், 246 (245 + 33 என்பதில்) மிக உயரழுத்த துணை மின் நிலையங்களில் கூடுதல் மின்மாற்றிகள் நிறுவுதல் மற்றும் திறன் உயர்த்துவதற்கான நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு அவற்றுள் 145 திட்டங்களுக்கு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 12]

VI. தமிழகத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேலாண்மை மையம்

i. தமிழ்நாட்டில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி

காற்று மற்றும் சூரிய சக்தியின் (RE power) மின் உற்பத்தியில் வளமான மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தூய்மையான, வற்றாத எரிசக்தியை அளிக்கிறது. காற்று மற்றும் சூரிய சக்தியின் ஆற்றல் மூலமாக பசுமை சுற்றுச்சூழலை உருவாக்குவதிலும், கார்பன் வெளியேற்றத்தைக் குறைப்பதிலும், புதை படிவ எரிபொருளைச் சார்ந்திருப்பதை எளிதாக்குவதிலும் உதவி புரிந்து ஆற்றல் பாதுகாப்பிற்கு வழிவகுக்கிறது.

மேலும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் மின் திறனை மாநில மின் பகிர்ந்தளிப்பு மையத்தில் ஒருங்கிணைக்கவும், சிறந்த மின் கட்ட இயக்கத்தைச் செயல்படுத்தவும், மத்திய மின் அமைச்சகம், PGCILமூலம் தென் பிராந்தியத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேலாண்மை மையங்களை (REMCs) செயல்படுத்த மானியமாக ரூ.49 கோடி நிதி வழங்கியுள்ளது.

தமிழ்நாட்டில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேலாண்மை மையம் 9,860 எண்ணிக்கை காற்றாலை மின் இணைப்புகள் (12,525 காற்றாலைகள்) மற்றும் 960 எண்ணிக்கை சூரிய சக்தி மின் இணைப்புகள்மூலம் பெறப்படும் மின் உற்பத்தி திறன்களின் அளவுகளை வார கணிப்பு, மறு நாள் மற்றும் நிகழ்கால முன்னறிவித்தல் மற்றும் திட்டமிடல் ஆகியவற்றை வழங்குவதன்மூலம், தமிழ்நாட்டின் முந்தைய நாளே மின் தேவையைத் திட்டமிட்டு வழிவகுத்து நிகழ்கால மின் கட்டமைப்பு இயக்கத்திற்கும் உதவி புரிகிறது.

VII. கட்டமைப்பு ஒழுக்கத்திற்கான உள் – மாநில மின் கணிப்பு விலகல் தீர்வுமுறை

தடையற்ற மின் விநியோக இலக்கை நோக்கி மின் கட்டமைப்பின் ஸ்திரத்தன்மை மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, அனைத்து மின் உற்பத்தியாளர்களும் மார்ச் 2019-ல் மாண்புமிகு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் வகுக்கப்பட்ட, மின் கணிப்பு விலகல் தீர்வு முறை மற்றும் அதன் சம்பந்தமான ஒழுங்குமுறைகளின் தொகுப்பின் வரம்பிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளன.

[*2023 ஏப்ரல் 12*

இந்த விதிமுறைகளின்படி, அனைத்து மின் உற்பத்தியாளர்களும் (புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மின் உற்பத்தியாளர்கள் உட்பட அரசுக்கு சொந்தமான மற்றும் தனியார் மின் உற்பத்தியாளர்கள்) கட்டமைப்பு செயல்பாட்டிற்குப் பயனுள்ள வகையில் மின் திட்டமிடலுக்கான அடிப்படையில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தைத் திட்டமிட்டு முன் அறிவிப்பு செய்ய வேண்டும். திட்டமிட்டதிலிருந்து ஏதேனும் விலகல் ஏற்பட்டால், விலகல் தீர்வு முறை (Deviation Settlement Mechanism) செயல்படுத்தப்படும். அவ்வாறு அந்தந்த மின் உற்பத்தியாளர்களால் விலகல் தீர்வு முறை கட்டணங்கள், மாநில மின் பகிர்மான மையத்தால் (State Load Despatch Centre) பராமரிக்கப்படும் மாநில பொது விலகல் தீர்வு முறை கணக்கில் செலுத்தப்படும்/பெறப்படும்.

மரபுசார்ந்த மின் உற்பத்தியாளர்களுக்கு இந்த விதி முறைகளின் செயல்பாட்டின் சோதனை முறை நடப்பில் உள்ளது. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மின் உற்பத்தியாளர்களைப் பொறுத்தவரை, மாண்புமிகு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் ஒழுங்குமுறை விதிகளில் திருத்தம் செய்த பிறகு இந்த சோதனை தொடங்கப்பட உள்ளது.

இந்த செயல் முறையின் முழுமையான செயலாக்கம் இந்திய அரசின் மத்திய எரிசக்தி அமைச்சகத்தால் நிதியளிக்கப்பட்டு, தொடங்கப்பட்ட திட்டமிடல், கணக்கில் அளவீட்டு மற்றும் மின்சார பரிவர்த்தனைத் தீர்வு (SAMAST) என்ற மென் பொருள் பொறிமுறைமூலம் மேற்கொள்ளப்படும்.

VIII. இணையப் பாதுகாப்பு

தமிழ்நாடு மாநில மின் பகிர்ந்தளிப்பு மையமும், தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தின் உட்கட்டமைப்பு வசதிகளும் இணையப் பாதுகாப்பு அச்சுறுத்தல் மற்றும் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்யும்பொருட்டு, இது தொடர்பாக மின்னாற்றல் அமைச்சகம் (MoP) மற்றும் மத்திய மின்சார அதிகார அமைப்பு (CEA) வெளியிட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளைச் செயல்படுத்த தமிழ்நாடு அரசு முழு வீச்சில் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இணையப் பாதுகாப்பு நிகழ்வுக் குழு – கட்டமைப்பு இயக்கம் (CERT-GO) செயல்பாட்டின்கீழ் வரும் மாநில மின் பகிர்ந்தளிப்பு மையம் (SLDC), இணையத் தாக்குதல்களிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டிய முக்கியமான தகவல் உட்கட்டமைப்பை அடையாளம்

2023 ஏப்ரல் 12]

*கண்டுள்ளது. அது தமிழ்நாடு அரசால் வெளியிடப்படும். எந்தவொரு சாத்தியமான இணைய தாக்குதல்களையும் தணிப்பதற்கான நெருக்கடி மேலாண்மைத் திட்ட ஆவணம் தயாரிக்கப்பட்டு, நாட்டில் இணைய பாதுகாப்பு தொடர்பான அனைத்தையும் ஒருங்கிணைப்பதற்கான இந்திய இணையப் பாதுகாப்பு நிகழ்வுக் குழுவிடம் (*CERT-In*) ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.*

*24 மணி நேரமும் இணைய அச்சுறுத்தல்களைக் கண்காணித்தல், கண்டறிதல், விசாரணை செய்தல், தடுத்தல் மற்றும் பதிலளிப்பதற்காக, தகவல் பாதுகாப்புப் பிரிவு (*Information Security Division-ISD*) மற்றும் பாதுகாப்பு செயல்பாட்டு மையம் (*Security Operating Centre–SOC*) அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.*

இணைய (சைபர்) தாக்குதல்கள் குறித்த ஆலோசனைகள் CERT-In *நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டவுடன், மாநில மின் பகிர்ந்தளிப்பு மையம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தால் உடனடியாகக் கவனிக்கப்பட்டு அத்தாக்குதல்களை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.*

மின் கட்டமைப்பின் பாதுகாப்பான செயல்பாடு மற்றும் தமிழ்நாடு மின் நுகர்வோருக்குத் தடையில்லா மின்சாரம் வழங்குவதை உறுதி செய்வதற்காக இணையப் பாதுகாப்பு நடவடிக்கைகளை செயல்படுத்துவதை அரசு உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது.

IX. மின் தடங்கல் இல்லா உயர் மின் அழுத்த பராமரிப்புப் பணிகள்

கூடுதல் உயர் மின் தொடர் வழித்தடங்களில் மின்னோட்டம் உள்ளபோதே இன்றியமையாத பராமரிப்புப் பணிகள் சிறப்பு பயிற்சி பணியாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த பணிகளை மேற்கொள்ள உபகோட்டங்கள் தற்பொழுது சென்னை, திருவலம், கோவை, திருச்சி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் சிறப்புடன் செயல்பட்டு வருகின்றன.

மேலும் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றத்தில் 26.4.2022-ல் அறிவிக்கப்பட்டதன்படி புதிய ஹாட்லைன் கோட்டம் ஒன்று சென்னை கொரட்டூரில் 11.1.2023 அன்று உருவாக்கப்பட்டுள்ளது.

கடந்த நிதியாண்டில் 92 உயர் மின் அழுத்த கோபுரங்களில் எவ்வித மின்னோட்ட தடையுமின்றி பழுதடைந்த மின் காப்பு வட்டுகள் (strain disc) மற்றும் மின் கடத்தி இணைப்புகள் (Jumpering), 124 பழுதடைந்த உலோக இணைப்புகள் மாற்றப்பட்டுள்ளது.

ஹாட்லைனில் பராமரிப்புப் பணிகள் கடந்த ஆண்டில் (2022-2023) செவ்வனே மேற்கொள்ளப்பட்டு அதிகமாக 149.44 மில்லியன் யூனிட்டுகள் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

X. கூடுதல் உயரழுத்த துணை மின் நிலையங்கள்

தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தில் மொத்தம் 1,076 கூடுதல் உயர் அழுத்த துணை மின் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. கொரட்டூர், விண்ணமங்கலம் மற்றும் திருச்சியில் செயல்பட்டு வரும் SF6 உபகோட்டங்களில், சிறப்பான பராமரிப்புப் பணிகளின் காரணமாக கடந்த 2022-2023-ல் மொத்தமுள்ள 1,076 துணை மின் நிலையங்களில், 126 துணை மின் நிலையங்களில் அனைத்து உபகரணங்களும் எவ்வித பழுதுமின்றி தொடர் பயன்பாட்டில் இருந்துள்ளன.

துணை மின் நிலையங்களில் உள்ள அனைத்து உபகரணங்களும் எவ்வித பழுதுமின்றி தொடர் பயன்பாட்டில் செயல்படுவதற்காக, மேலும் 3 SF6 உபகோட்டங்கள் கோவை, நெய்வேலி மற்றும் விருதுநகரில் உருவாக்குவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

765 கிலோ வோல்ட், 400 கிலோ வோல்ட், 230 கிலோ வோல்ட் மற்றும் 110 கிலோ வோல்ட் மின்னழுத்தங்களில் மொத்தம் 941 எண்ணிக்கையிலான உயர் மின் தொடர் வழித்தடங்களில் எவ்வித தடையுமின்றி மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

இயற்கைப் பேரிடர் காலங்களில் மின் கோபுரங்களுக்குச் சேதம் ஏற்படும்பட்சத்தில் அதிவிரைவாக மின் வழித்தடத்தைப் பயன்பாட்டிற்கு கொண்டுவர அவசர புனரமைப்புத் திட்டம் (Emergency Restoration System) மாநிலத்தில் பல்வேறு இடங்களில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

498 உயர் மின்னழுத்த மின்னூட்டிகளில் முறையான பராமரிப்பு நடவடிக்கைகளின் காரணமாக தொடர்ச்சியாக ஆறு மாதங்களுக்கும் மேலாக தடையில்லா மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

2023 ஏப்ரல் 12]

XI. நம்பகமான தகவல் தொடர்புத் திட்டம்

தற்போது தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தில் சுமார் 5,000 கி.மீ. அளவிற்கு மாநிலத்தின் பல்வேறு வழித்தடங்களில் 12/24 இழைகள் ஃபைபர் கொண்ட ஃபைபர் ஆப்டிக் கட்டமைப்பு செயலில் உள்ளது. ஃபைபர் தொழில்நுட்பத்தின் பல்வேறு நன்மைகளான விரைவான தகவல் பரிமாற்றம், தகவல் நம்பகத்தன்மை மற்றும் மொத்த தகவல் பரிமாற்றத்திற்கான வசதி ஆகியவற்றைப் பெற, நம்பகமான தகவல் தொடர்புத் திட்டம் நிறுவப்படுவதற்கு முடிவு செய்யப்பட்டு புதிதாக 10,770 கி.மீ. ஃபைபர் ஆப்டிக் நெட்வொர்க் 48 இழைகள் கொண்ட பாதை உயர் அழுத்த மின் கோபுரங்கள் வழியாக 620 எண்ணிக்கை 110 கி.வோ. துணை மின் நிலையங்களை இணைப்பதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் நோக்கம், தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள 110 கி.வோ. மற்றும் அதற்கு மேல் உள்ள துணை மின் நிலையங்களுக்கு நம்பகமான ஆப்டிகல் பவர் கிரவுண்ட் வயர்மூலம் (OPGW) தகவல் தொடர்பு மற்றும் தரவு பரிமாற்றம் ரூ.479.84 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

தமிழ்நாட்டில் மேற்கண்ட திட்டத்தைச் செயல்படுத்த மத்திய மின் அமைச்சகம் மின் சக்தி அமைப்பு மேம்பாட்டு நிதியிலிருந்து (பிஎஸ்டிஎஃப்) ரூ.155.48 கோடி மானியம் வழங்க அனுமதி அளித்துள்ளது.

இத்திட்டத்தில், ஒப்பந்தப்படி மொத்தமுள்ள 10,770 கி.மீ.-ல், 7296 கி.மீ. ஃபைபர் ஆப்டிக் இழைகள் (OPGW) பெறப்பட்டு, அதில் 6187 கி.மீ. நிறுவப்பட்டு, 1,360 கி.மீ. 23.3.2023 அன்று செயலாக்கத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இதுவரை இத்திட்டத்திற்காக ரூபாய் 94.49 கோடி செலவிடப்பட்டுள்ளது.

மேலும், விடுபட்ட 400 எண்ணிக்கையிலான 110 கி.வோ. துணை மின் நிலையங்களுக்கு ஃபைபர் ஆப்டிக் நெட்வொர்க் இணைப்பை ஏற்படுத்துவதற்காக, சுமார் 7,000 கி.மீ. தூரத்திற்கு ஃபைபர் ஆப்டிக் இழைகள் (OPGW) அமைத்து மற்றும் ஃபைபர் ஆப்டிக் டெர்மினல் கருவிகள் நிறுவப்படவுள்ளது.

[2023 ஏப்ரல் 12

XII. சாதனைகள்

அதிநவீன சோதனை தொழில்நுட்பத்தின்மூலம், கூடுதல் உயர் மின்னழுத்த உபகரணங்களில் தடுப்பு பராமரிப்பு சோதனைகள், அனைத்து கூடுதல் உயர் மின்னழுத்த துணை மின் நிலையங்களிலும் துல்லியமாக மேற்கொள்ளப்பட்டன. இதன் காரணமாக, 400 கி.வோ. அலமாதி, 400 கி.வோ. சுங்குவார்சத்திரம், 230 கி.வோ. மயிலாப்பூர், 230 கி.வோ. மோசூர் போன்ற துணை மின் நிலையங்களில் திறனிழக்கும் நிலையிலிருந்த முக்கிய உபகரணங்கள் கண்டறியப்பட்டன. இது எதிர்பாராத மின்மாற்றி செயலிழப்பு மற்றும் மின்சார விநியோகத் தடைகளைத் தவிர்க்க உதவியது. இதனால், ரூபாய் 80 கோடி மதிப்பிலான வருவாய் இழப்பு மற்றும் உபகரண இழப்புகள் தவிர்க்கப்பட்டன.

எதிர்காலத்தில், அதிக எண்ணிக்கையிலான மின் மாற்றிகள் பரிசோதிக்கப்பட்டு,மின் மாற்றிகளின் செயலிழப்புக் குறைக்கப்படும். இதனால் மின் விநியோகத் தடங்கல் குறைக்கப்படும்.

1.4 மின் விநியோகம்

முன்னுரை

தமிழ்நாட்டின் மின் விநியோக உட்கட்டமைப்பு மின் நுகர்வோர்களுக்குத் தடையில்லா, நம்பகத்தன்மையுடன்கூடிய தரமான மின்சாரம் வழங்குவதில் பெரும்பங்கினை வகிக்கிறது. மின் நுகர்வோர்களுக்கான மின்சாரம் மேல்நிலை மின்கடத்திகள் மூலமாகவோ பூமிக்கடியில் செல்லும் புதைவடங்கள் மூலமாகவோ, விநியோகிக்கப்படுகிறது. மின் விநியோகக் கட்டமைப்பு, 33/11 கி.வோ. துணை மின் நிலையங்கள், திறன் மின்மாற்றிகள், உயர் அழுத்த 33 கி.வோ., 22 கி.வோ., 11 கி.வோ. மற்றும் தாழ்வழுத்த மேல்நிலை மின் கம்பிகள் மற்றும் புதைவடங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

அனைத்து மின் நுகர்வோர்களுக்கும் 24X7 மணி நேரமும் தடையில்லா தரமான மின்சாரம் வழங்குவதற்கென, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் தேவைப்படும் அனைத்து மின் விநியோக உட்கட்டமைப்புகளையும் நிறுவியுள்ளது, மேலும், அனைத்து மின் நுகர்வோர்களுக்கும் மின்சாரத்தை ஒரே

2023 ஏப்ரல் 12]

சீரான மின்னழுத்தத்தில் வழங்குவதற்குண்டான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், தற்போதுள்ள மின் பகிர்மானத் தொடரமைப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய உட்கட்டமைப்பை வலுப்படுத்துவதில் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. புதிய 33/11 கி.வோ. துணை மின் நிலையங்களை நிறுவுதல், தற்போதுள்ள மின் மாற்றிகளின் திறனை மேம்படுத்துதல், உயர் மின்னழுத்த விநியோக அமைப்பை (HVDS) செயல்படுத்துதல், சென்னை போன்ற புயல் பாதிப்புக்குள்ளான பகுதிகளில் செல்லும் மேல்நிலை மின் கம்பிகளை புதைவடங்களாக மாற்றுதல் போன்ற பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அனைத்து மின் நுகர்வோர்களும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் இணையதள சேவைகளைப் பெறுவதும் எளிமையாக்கப்பட்டிருக்கிறது. இதன்மூலம் மின் நுகர்வோர்கள் அனைத்து வகையான விண்ணப்பங்கள், புகார்கள் ஆகியவற்றைப் பதிவேற்றம் செய்ய முடிவதோடு இணையதளத்தில் பணம் செலுத்துவதும் எளிதாகிறது.

கடந்த ஆண்டில், மாநிலம் முழுவதிலும் அதிக மின் சுமையுள்ள மின்மாற்றிகள் மற்றும் குறைந்த மின்னழுத்தம் உள்ள பகுதிகளைக் கண்டறிந்து, 8,905 புதிய விநியோக மின்மாற்றிகள் நிறுவப்பட்டதன்மூலம் அதற்கான தீர்வு காணப்பட்டது. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் அனைத்து மின் நுகர்வோர்களுக்கும் தடையில்லா மின்சாரம் வழங்குவதற்காக மாநிலம் முழுவதும் சிறப்பு பராமரிப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

I. முக்கிய அம்சங்கள்

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் மின் உட்கட்டமைப்பை வலுபடுத்துவதற்காகவும், பொதுமக்களுக்குத் தடையில்லா மின்சாரம் வழங்குவதற்காகவும் மற்றும் மின் தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்வதற்காகவும், கடந்த

2021-2022 ஆம் ஆண்டில் 102 எண்ணம் 33/11 கி.வோ. புதிய துணை மின் நிலையங்களை ரூ.700 கோடி மதிப்பீட்டில் அமைப்பதற்கும், 44 எண்ணம் 33/11 கி.வோ. துணை மின் நிலையங்களில் ரூ.78 கோடி மதிப்பீட்டில் திறன் உயர்த்தப்பட்ட மின் மாற்றிகள் நிறுவுவதற்கும், 2022-2023-ல் 48 எண்ணம் 33/11 கி.வோ. புதிய துணை மின் நிலையங்களை ரூ.451 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் ரூபாய் 12 கோடி மதிப்பீட்டில் 6 எண்ணம் 33/11 கி.வோ. துணை மின் நிலையங்களில் திறன் உயர்த்தப்பட்ட மின் மாற்றிகள் நிறுவுவதற்கும் சட்டமன்றத்தில் அறிவிப்புகள் வெளியிடப்பட்டன.

புதிய துணை மின் நிலையங்கள் அனைத்தும் மறுசீரமைப்பு மின் விநியோகத் திட்டத்தில் இணைக்கப்பட்டு அதற்கான ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

2022-2023 ஆம் ஆண்டில், 10 எண்ணம் புதிய துணை மின் நிலையங்கள், 4 எண்ணம் துணை மின் நிலையங்களில் மின்மாற்றிகளின் திறன் உயர்த்துதல், 5,094 கி.மீ. உயரழுத்த மின் பாதைகள் அமைத்தல், 15,984 புதிய விநியோக மின் மாற்றிகள் அமைத்தல் மற்றும் 9,555 கி.மீ. தாழ்வழுத்த மின் பாதைகள் அமைத்தல் ஆகிய பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், புதிய மின் இணைப்புகள் 8.88 இலட்சம் நுகர்வோர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

1.4.2023 அன்றுள்ள தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் விநியோகக் கட்டமைப்பு விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

மின் விநியோகக் கட்டமைப்பு	
33/11 கி.வோ. துணை மின் நிலையங்கள்	779 எண்ணம்
உயர் மின் அழுத்த மேல்நிலை பாதைகள் 33, 22 மற்றும் 11 கி.வோ. (HT-OH)	1,89,582 கி.மீ.
தாழ்வழுத்த மின் அழுத்த மேல்நிலை பாதைகள் (LT-OH)	6,19,319 கி.மீ.
மின் மாற்றிகள்	3,88,982 எண்ணம்

2023 ஏப்ரல் 12]

உயர் மின் அழுத்த புதைவட மின் பாதைகள் (HT-UG)	7,285 கி.மீ.
தாழ்வழுத்த புதைவட மின் பாதைகள் (LT-UG)	11,824 கி.மீ.
மொத்த மின் நுகர்வோர்கள்	**3,31,15,958**

1.4.2023 அன்று நிலவரப்படி வகைப்படுத்தப்பட்ட (Category wise) மின் பயனீட்டாளர்களின் விவரம்

வ. எண்	வகையினம் (Category)	மொத்த எண்ணிக்கை (இலட்சத்தில்)	
		2021-2022	2022-2023
அ	**உயர் அழுத்த மின் பயனீட்டாளர்கள்**	0.1 (10,417 எண்ணம்)	0.11 (10,983 எண்ணம்)
ஆ	**தாழ்வழுத்த மின் பயனீட்டாளர்கள் (இலட்சங்களில்)**		
1	வீடுகள்	233.51	235.55
2	வணிகம்	36.27	37.04
3	தொழிற்சாலைகள்	7.55	7.70
4	விவசாயம்	22.87	23.36
5	குடிசைகள்	9.75	9.45
6	இதர இனம்	14.49	17.95
	தாழ்வழுத்த மின் பயனீட்டாளர்கள் மொத்தம்	324.44	331.05
	மொத்தம்	**324.54**	**331.16**

[2023 ஏப்ரல் 12

II. தமிழகத்தில் 2022-2023 ஆம் ஆண்டில் 50,000 புதிய விவசாய மின் இணைப்புகள் வழங்கும் திட்டம்

"உழுவார் உலகத்தார்கு ஆணிஅஃது ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து"

\- திருவள்ளுவர்

பல்வேறு தொழில் புரிகின்ற மக்களின் பசிபோக்கிடும் தொழிலாக உழவுத் தொழில் இருப்பதால் அதுவே உலகத்தாரைத் தாங்கிநிற்கும் அச்சாணி ஆகும்

– கலைஞர் உரை

உழவுத் தொழிலின் பெருமை அறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களின் ஆணைப்படி விவசாயிகளின் நலனை மேம்படுத்தும் நோக்குடன் மாநிலத்தில் விவசாய உற்பத்தியினை அதிகரித்து, விவசாய நிலப் பரப்பினை அதிகரிக்கவும் 1,00,000 புதிய விவசாய மின் இணைப்புகள் 2021-22 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி 50,000 புதிய இலவச விவசாய மின் இணைப்புகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என 2022-23 ஆம் ஆண்டிற்கான எரிசக்தித் துறையின் மானியக் கோரிக்கையில் தமிழ்நாடு சட்டப் பேரவையில் மாண்புமிகு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

புதிய விவசாய மின் இணைப்புகள் வழங்கும் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் 11.11.2022 அன்று அரவக்குறிச்சி, கரூரில் தொடங்கி வைத்தார். மேலும், அத்தொடக்க விழாவில் பயனாளிகளுக்குப் புதிய விவசாய மின் இணைப்பு அளிப்பதற்கான ஒப்புதல் ஆணையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார். இந்த திட்டம் வெகு விரைவில் முடிக்கப்பட்டு அதற்கான நிறைவு விழா 11.1.2023 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அந்த விழாவின்போது 50,000 பயனாளிகளில், கடைசி 5 பயனாளிகளுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மின் இணைப்பு ஆணை வழங்கப்பட்டது.

2023 ஏப்ரல் 12]

31.3.2022 அன்று நிலுவையில் உள்ள தயார்நிலை பதிவு செய்தோர் அடிப்படையில் 50,000 விவசாய மின் இணைப்புகள் வழங்கப்பட்டன. மக்களுக்கான இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து, தமிழ்நாடு மின்சார வாரிய வரலாற்றிலேயே முதல் முறையாக 2021-22 ஆம் ஆண்டில் 1,00,000 விவசாய மின் இணைப்புகள் மற்றும் 2022-23 ஆம் ஆண்டில் 50,000 விவசாய மின் இணைப்புகள் என 17 மாதங்களில் ஒன்றரை இலட்சம் விவசாய மின் இணைப்புகளை வழங்கி புதிய சாதனை படைத்துள்ளது.

புதிதாக வழங்கப்பட்ட 50,000 விவசாய மின் இணைப்புகள்மூலம் 86,384 ஏக்கர் விவசாய நிலங்கள் ரூபாய் 816 கோடி செலவில் கூடுதலாகப் பாசன வசதி பெற்றுள்ளன. மேலும், கூடுதலாக 229 மெகாவாட் திறனுக்கு விவசாய பம்ப் செட்டுகள் மின் கட்டமைப்பில் இணைக்கப்பட்டுள்ளன.

மாவட்ட வாரியாக 01-04-21 முதல் 31-3-2023 வரை வழங்கப்பட்ட விவசாய மின் இணைப்புகளின் விவரம் வருமாறு:

வ எண்.	**மாவட்டத்தின் பெயர்**	**2021-22**	**2022-23**	**மொத்தம்**
1	அரியலூர்	1894	851	2745
2	செங்கல்பட்டு	667	562	1229
3	கோயம்புத்தூர்	5627	2457	8084
4	கடலூர்	1553	865	2418
5	தருமபுரி	6785	5325	12110
6	திண்டுக்கல்	5916	1819	7735
7	ஈரோடு	3669	2659	6328
8	கள்ளக்குறிச்சி	5380	2207	7587
9	காஞ்சிபுரம்	662	222	884
10	கன்னியாகுமரி	301	26	327
11	கரூர்	2807	631	3438
12	கிருஷ்ணகிரி	6906	4704	11610
13	மதுரை	2484	839	3323
14	மயிலாடுதுறை	753	597	1350

வ எண்.	மாவட்டத்தின் பெயர்	2021-22	2022-23	மொத்தம்
15	நாகப்பட்டினம்	121	65	186
16	நாமக்கல்	2829	2584	5413
17	பெரம்பலூர்	1685	332	2017
18	புதுக்கோட்டை	2575	1788	4363
19	இராமநாதபுரம்	366	213	579
20	ராணிப்பேட்டை	2147	747	2894
21	சேலம்	3613	2623	6236
22	சிவகங்கை	2363	869	3232
23	தென்காசி	2172	272	2444
24	தஞ்சாவூர்	3398	2408	5806
25	நீலகிரி	259	90	349
26	தேனி	1728	1068	2796
27	திருப்பத்தூர்	1185	1287	2472
28	திருச்சிராப்பள்ளி	3115	1809	4924
29	திருநெல்வேலி	1249	188	1437
30	திருப்பூர்	7572	4345	11917
31	திருவள்ளூர்	2811	928	3739
32	திருவண்ணாமலை	6527	1082	7609
33	திருவாரூர்	1324	610	1934
34	தூத்துக்குடி	750	255	1005
35	வேலூர்	1567	605	2172
36	விழுப்புரம்	4366	1621	5987
37	விருதுநகர்	874	447	1321
38	சென்னை	0	0	0
மொத்தம்		**1,00,000**	**50000**	**150000**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 12]

விவசாய மின் இணைப்புகளுக்கான மானியமாக மாண்பமை தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயித்த தொகையான ஒரு குதிரைத்திறனுக்கு ஒரு வருடத்திற்கு ரூபாய் 3,550 என்ற அடிப்படையில் அரசு வழங்கி வருகிறது. தற்போது உள்ள விவசாய மின் இணைப்புகள் மற்றும் புதிதாக வழங்கப்பட்ட 1,50,000 விவசாய மின் இணைப்புகளுக்கும் சேர்த்து மானியமாக தமிழ்நாடு அரசு ஒவ்வோர் ஆண்டும் ரூபாய் 6,036.10 கோடியை ஏற்கெனவே தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு வழங்கும்.

மேலும், 2022-23-ல் சிறப்பு முன்னுரிமைத் திட்டங்களான மாற்றுத் திறனாளிகள், கைம்பெண், மலைவாழ் மக்கள், கலப்புத் திருமணம் செய்தோர், முன்னாள், இன்னாள் இராணுவத்தினர், முன்னாள், இன்னாள் துணை இராணுவத்தினர் வகையில் 1.4.2014 முதல் பதிவு செய்த 589 விண்ணப்பதாரர்களுக்கு மின் இணைப்புகள் வழங்கப்பட்டன.

மேலும், மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் "கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்" என்ற புதிய திட்டத்தை 2021-2022-ல் அறிவித்தார். இத்திட்டத்தின்மூலம் மாநிலம் முழுவதும் உள்ள தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றி விவசாய உற்பத்தியை அதிகரித்து விவசாயிகளின் பொருளாதாரத்தை உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின்கீழ், இது நாள் வரை 324 விவசாய மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

III. மின்னகம்

மின்னகம், மாநில அளவிலான ஒரு மையப்படுத்தப்பட்ட மின் நுகர்வோர் சேவை மையம், மின் நுகர்வோர் புகார்களைத் தீர்ப்பதற்காக, 20.6.2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

மின்னகம்: 94987 94987 என்ற எண்ணில் செயல்பட்டு வருகிறது. மின்னகத்தில் இணையதளம்மூலம் மின் நுகர்வோர்கள் 37 வகையான புகார்களைப் பதிவு செய்ய முடியும். மின்னகம், தமிழ்நாடு முழுவதும் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்று இன்று வரை வெற்றிகரமாகச் செய்பட்டு வருகிறது.

மின்னகம்மூலம் 20.6.2021 முதல் 31.3.2023 வரை 15,04,970 புகார்கள் பெறப்பட்டு 14,97,782 புகார்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. தீர்வு காணப்பெற்ற சதவிகிதம் 99.5% ஆகும்.

IV. அனைத்து சட்டமன்றத் தொகுதிகளுக்கும் பொறுப்பு அலுவலர்கள் நியமித்தல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, 234 சட்டமன்றத் தொகுதிகளில் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தினால் முடிக்கப்பட்ட பணிகளின் விவரங்கள் மற்றும் முடிக்கவிருக்கும் பணிகளின் விவரங்களைச் சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்துவதற்கென ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் பொறுப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு பொறுப்பு அதிகாரியும் பாராளுமன்ற/சட்டமன்றத் தொகுதி சார்ந்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களைத் தொடர்ந்து சந்தித்து முடிக்கப்பட்ட பணிகள், முடிக்கப்பட வேண்டிய பணிகள் குறித்து தெரிவிக்கும் நடைமுறை செயல்படுத்தப்பட்டிருக்கிறது.

V. நிறுவன மறுசீரமைப்பு

மின் ஊழியர்களுக்கிடையேயான பணிச் சுமையிலும் நிர்வாகச் செயல்பாட்டிலும் சம நிலையைக் கொண்டு வரவும், அரசின் திட்டங்களையும், பணிகளையும் விரைந்து செயல்படுத்துவதற்காகவும், மக்களுக்குச் சீரான மின் விநியோகம் வழங்குவதை உறுதி செய்வதற்காகவும், பொதுமக்களின் புகார்களின்மீது உடனடி நடவடிக்கை எடுப்பதற்காகவும், 2022-23 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்ததன்பொருட்டு கரூர், தஞ்சாவூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய இடங்களைத் தலைமையிடங்களாகக் கொண்டு மூன்று புதிய விநியோக மண்டலங்கள் உருவாக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 16.4.2022 அன்று தொடங்கி வைக்கப்பட்டன.

2023 ஏப்ரல் 12]

இதன் தொடர்ச்சியாக, சேப்பாக்கம், சோழிங்கநல்லூர், பல்லாவரம், தேன்கனிக்கோட்டை, பெண்ணாகரம், திருவெண்ணெய்நல்லூர், ஊத்துக்குளி, வேடசந்தூர், ஜெயங்கொண்டம், சாத்தூர், கங்கவல்லி ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு 11 புதிய மின் பகிர்மானக் கோட்ட அலுவலகங்கள் உருவாக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கடந்த 15.12.2022 அன்று துவக்கி வைக்கப்பட்டன.

VI. வடகிழக்குப் பருவ மழை 2022 மற்றும் மாண்டஸ் புயல்

வடகிழக்குப் பருவ காலத்தில் கன மழையின் காரணமாக மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவள்ளூர், வேலூர், விழுப்புரம், கடலூர், செங்கல்பட்டு, திண்டுக்கல் மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்கள் பெரும் மழைப்பொழிவை சந்தித்து, கடுமையாக பாதிக்கப்பட்டன.

மாண்டஸ் புயல் 2022, டிசம்பர் 9 ஆம் தேதி இரவு சென்னை அருகே மாமல்லபுரத்தில் கரையைக் கடந்தது. சென்னை, காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, வேலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, நீலகிரி, செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்கள் இப்புயலினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டன.

இந்தப் பெரும் மழைப்பொழிவு மற்றும் புயலின் காரணமாக துணை தொடரமைப்பு மற்றும் விநியோக உள்கட்டமைப்புகள் கடுமையாக சேதமடைந்தன. சேதமடைந்த மின் விநியோக உள்கட்டமைப்புகளின் விவரங்கள் பின்வருமாறு:

வ. எண்	சேதமடைந்தவை	வடகிழக்கு பருவ மழை 2022	மாண்டஸ் புயல்
1.	மின் கம்பங்கள்	768 எண்ணம்	1,134 எண்ணம்
2.	பகிர்மான மின் மாற்றிகள்	204 எண்ணம்	73 எண்ணம்
3.	மின் கடத்திகள்	59.30 கி.மீ.	28.44 கி.மீ.
4.	துணை மின் நிலையங்கள்	1 எண்ணம்	10 எண்ணம்

[2023 ஏப்ரல் 12

சீர்காழியில் 11.11.2022 பெய்த கடும் மழையினால் ஏற்கெனவே எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்மூலம் மின் விநியோக உள்கட்டமைப்புகளில் மறுசீரமைப்புப் பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டு, துரித கதியில் மாண்புமிகு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் நேரடி வழிகாட்டுதலின் பேரில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பொறியாளர்கள் மற்றும் ஊழியர்களின் கடின உழைப்பு மற்றும் முயற்சிகளின் மூலமாக சீர்காழியில் வடகிழக்குப் பருவமழையில் (2022-ல்) பழுதடைந்த 324 மின்கம்பங்கள், 47 மின்மாற்றிகள், 43.91 கி.மீ. மின் கம்பிகள் மற்றும் 671 இடங்களில் பழுதடைந்த இன்சூலேட்டர்கள் இரண்டு நாட்களுக்குள் மாற்றப்பட்டன.

VII. சென்னையில் மின்பெட்டிகள் உயர்த்தும் பணிகள்

சென்னை மாநகராட்சியின் சில தாழ்வான பகுதிகளில் மழைக் காலங்களின்போது தண்ணீர் தேங்குவதால் மின்சாரம் தடைபடுவது வழக்கமான ஒரு செயலாக இருந்தது. பொதுவாக, மின் விநியோகப் பெட்டிகள் தரை மட்டத்தில் நிறுவப்படுகின்றன. மழைக் காலங்களின்போது தாழ்வான பகுதிகளில், மின் விநியோகப் பெட்டிகளின் அடிப்பகுதி வரை மழைநீர் தேங்கும் நிலை ஏற்படுவதால், மின் கசிவு ஏற்படவும், விபத்துகள் நடப்பதற்கும் ஏதுவாகிறது.

மழைக் காலங்களின்போது ஏற்படும் இத்தகைய பிரச்சினைகளைத் தீர்க்கும்பொருட்டு மழையினால் பாதிக்கப்படும் பகுதிகளிலிருந்து மின் விநியோகப் பெட்டிகளைத் தரைத்தளத்திலிருந்து சுமார் ஒரு மீட்டர் உயரத்திற்கு உயர்த்தத் திட்டமிடப்பட்டு, அதன் முதற்கட்டமாக 1,420 மின் விநியோகப் பெட்டிகள் கண்டறியப்பட்டு, அனைத்து மின் பெட்டிகளும் ஒரு மீட்டர் உயர்த்தி வைக்கப்பட்டு அதற்கான பணிகள் முடிக்கப்பட்டன.

இரண்டாம் கட்டமாக 4,375 மின் விநியோகப் பெட்டிகள் அடையாளம் காணப்பட்டு, அவற்றில் இதுவரை 2,950 மின் பெட்டிகள் உயர்த்தி வைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள மின் பெட்டிகள் யாவும், வரவிருக்கும் பருவமழைக்கு முன்பாக உயர்த்தி வைக்கப்படும். இதேபோல், 19 துணை மின் நிலையங்களில் உள்ள 41 எண்ணிக்கை திறன் மின்மாற்றிகளின் அடித்தளம் தரையிலிருந்து ஒரு மீட்டர் உயரத்திற்கு உயர்த்தி வைக்கப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 12]

இதனால் மழைக் காலங்களின்போது மின் நுகர்வோர்களுக்கு ஏற்படும் மின் தடங்கல் குறைவதோடு மற்றும் மின் விநியோக சீரமைப்பு பணிகளையும் எளிதாக மேற்கொள்ள இயலும்.

VIII. ஒருங்கிணைந்த மின் பராமரிப்புத் திட்டம் 2022-23

ஜூன் 15, 2022 அன்று தமிழ்நாடு முழுவதும் ஒருங்கிணைந்த மின் பராமரிப்புத் திட்டத்தின்கீழ் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்வதற்கான சிறப்புமிகு திட்டம் அறிவிக்கப்பட்டது, 15.6.2022 முதல் 31.7.2022 வரை மாநிலத்தில் உள்ள அனைத்து மின் விநியோகப் பிரிவுகளிலும் 19 வகையான ஒருங்கிணைந்த 10,77,910 பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து வழக்கமான பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 31.3.2023 வரை மொத்தம் 11,23,280 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு, ஒருங்கிணைந்த மின் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக, மின் விநியோகத்தில் ஏற்படும் தடங்கல்கள் குறைந்து, மின் தடைகளின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது.

IX. ஒருங்கிணைந்த மின் மேம்பாட்டுத் திட்டம் (கூடுதல்) (IPDS) தானியங்கி 33/11 kv வளிமகாப்பு துணை மின் நிலையங்கள்

சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் முதன் முறையாக, 7 தானியங்கி 33/11 கி.வோ. வளிமகாப்பு துணை மின் நிலையங்கள், மேற்பார்வை கட்டுப்பாட்டு மற்றும் தரவு கையகப்படுத்துதல் (SCADA) மையத்திலிருந்து தொலைவு இயக்கம் (ரிமோட் ஆபரேஷன்) வசதியுடன் இயக்கி வைக்கப்பட்டன. இத்துணை மின் நிலையங்கள் சென்னையில், கண்ணம்மாபேட்டை, தாமோதரன் தெரு, மில்லர்ஸ் சாலை, கார்ப்பரேஷன் காலனி, கோடம்பாக்கம், வடபழனி மற்றும் அனகாபுத்தூர் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளன.

X. மேல்நிலை மின் கம்பிகளைப் புதைவடங்களாக மாற்றுதல்

i. சென்னை

சென்னை மாநகரம் மற்றும் விரிவுபடுத்தப்பட்ட சென்னை மாநகரப் பகுதிகளில் மின் கசிவு மற்றும் மின் கம்பிகள் அறுந்து

விழுவதால் ஏற்படும் மின் விபத்துகளைத் தடுப்பதற்காகவும், பாதுகாப்பான மின் கட்டமைப்பை அமைப்பதற்காகவும், மின்விசை நிதி நிறுவனத்தின் நிதியுதவியுடன், மேல்நிலை மின் கம்பிகளைப் புதைவடங்களாக மாற்றும் பணிகளை மேற்கொள்வதற்கு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால் முடிவு செய்யப்பட்டு, பெரம்பூர், தாம்பரம், ஆவடி, அடையாறு, ஐடி காரிடார், கே.கே. நகர், போரூர், கிண்டி, அண்ணா நகர், அம்பத்தூர், வியாசர்பாடி, தண்டையார்பேட்டை ஆகிய 12 கோட்டங்களில் உள்ள உயரழுத்த மேல்நிலை மின் கம்பிகள் மற்றும் தாழ்வழுத்த மின் கம்பிகளைப் புதைவடங்களாக மாற்றும் பணிகள் துவங்கப்பட்டன.

பெரம்பூர் கோட்டத்தில் 48.69 கி.மீ. உயரழுத்த மின் புதைவடங்கள், 626.63 கி.மீ. தாழ்வழுத்த மின் புதைவடங்கள் மற்றும் ஆவடி கோட்டத்தில் 90.47 கி.மீ. உயரழுத்த மின் புதைவடங்கள், 449.35 கி.மீ. தாழ்வழுத்த மின் புதைவடங்கள் அமைக்கப்பட்டு 26.6.2022 மற்றும் 22.8.2022 ஆகிய தேதிகளில் பெரம்பூர் மற்றும் ஆவடி கோட்டங்களில் மேலே செல்லும் மின் கம்பிகளைப் புதைவடங்களாக மாற்றும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. தாம்பரம், அடையாறு மற்றும் ஐடி காரிடார் ஆகிய கோட்டங்களில் பணிகள் முடிவுறும் தருவாயில் இருக்கின்றன.

ii. நீலகிரி

ஊட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக இயற்கை இடர்பாடுகளின்போது தடையில்லா மின்சாரம் வழங்கி பொது மக்களுக்குக் குடிநீர் தங்குதடையின்றி கிடைப்பதற்குப் பார்சன் வேலியிலிருந்து ஊட்டிவரை 13.125 கி.மீ. மேல் நிலை மின் கம்பிகள் புதைவடமாக மாற்றி அமைக்கும் பணி ரூ.6.61 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

iii. தேரோடும் நான்கு மாட வீதிகளில் உள்ள மேல்நிலை மின் கம்பிகளைப் புதைவடங்களாக மாற்றுதல்

சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, திருவாரூர் அருள்மிகு தியாகராஜர் திருக்கோயில், ஸ்ரீவில்லிபுத்தூர் அருள்மிகு ஆண்டாள் திருக்கோயில் மற்றும் சுசீந்திரம் அருள்மிகு தாணுமாலயன் திருக்கோயில் ஆகிய கோயில்களின் தேரோடும் நான்கு மாட வீதிகளில் மேலே செல்லும் மின் கம்பிகளைப் புதைவடங்களாக மாற்றியமைப்பதற்கான

2023 ஏப்ரல் 12]

ஒப்பந்தம் கோரப்பட்டு, பணிகளை விரைந்து முடிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

மேலும், அருள்மிகு மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோயிலின் தேரோடும் நான்கு மாட வீதிகளில் மேலே செல்லும் மின் கம்பிகளைப் புதைவடங்களாக மாற்றியமைப்பதற்காக ரூபாய் 10.82 கோடிக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

XI. சென்னை பகுதிகளில் வளையச் சுற்றுத்தர அமைப்புகள் (Ring Main Unit) நிறுவுதல்

*மின் விநியோகத்தில் ஏற்படும் தடைகளைக் குறைக்கவும், ஒரு மின் சுற்றில் மின்தடை ஏற்படும்பொழுது சில வினாடிகளிலேயே ஒரு மின்சுற்றிலிருந்து மற்றொரு மின்சுற்றின்மூலம் தடையில்லா மின்சாரம் வழங்குவதற்காகத் தற்போது வழக்கத்தில் உள்ள மின்மாற்றி கட்டமைப்புகளை வளையச் சுற்றுத்தர அமைப்புகளாக (*Ring Main Unit*) மாற்றுவதற்காக, 5,692 எண்ணம் மின்மாற்றிகள் கண்டறியப்பட்டு அவற்றுள் 4,654 வளையச் சுற்றுத்தர அமைப்பு நிறுவப்பட்டு, 2,704 எண்ணம் இயக்கத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 28.9.2022 அன்று ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற விழாவின்மூலம் சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் நிறுவப்பட்ட 2,488 வளையச் சுற்றுத்தர அமைப்புகள் மின் விநியோகக் கட்டமைப்பில் இணைக்கப்பட்டன.*

XII. மின் விபத்துகளிலிருந்து வன விலங்குகளைக் காப்பதற்கான சிறப்பு செயல் திட்டம்

தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களில் திருப்பூர், மதுரை, இராமநாதபுரம், திருவாரூர், சென்னை மற்றும் தென்காசி ஆகிய ஆறு மாவட்டங்கள் தவிர்த்து ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் உள்ள காடுகளில் ஊடே செல்லும் உயரழுத்த மற்றும் தாழ்வழுத்த மேல்நிலை மின் பாதைகள் உள்ளன.

*மொத்தம் 1,509 கி.மீ. உயரழுத்த மற்றும் 1,255 கி.மீ. தாழ்வழுத்த மேல்நிலை மின் கம்பிகளும், 19.9 கி.மீ. மேல்நிலை காப்பிடப்பட்ட மின் கம்பிகளும் (*Insulated*) காடுகளில் அமைக்கப்பட்டுள்ளன.*

மேற்கண்ட மேல்நிலை மின் கம்பிகள் அனைத்தும் வனத் துறையால் அனுமதிக்கப்பட்ட இடங்களில் பல வருடங்களுக்கு முன்பே நிறுவப்பட்டவையாகும். கடந்த சில வருடங்களாக யானைகள் வனப் பகுதியிலிருந்து அருகில் உள்ள கிராமம்/ தொலைவில் தனியாக அமைந்துள்ள கிராமப் பகுதிகளுக்கு (Rural/Remote Villages) பல்வேறு காரணங்களுக்காக இடம் பெயரும்போது மின் கம்பிகளில்பட்டோ, மின் கம்பங்களில் மோதியோ அல்லது அனுமதியில்லாமல் அமைக்கப்பட்ட மின் வேலியில் சிக்கியோ இறக்கும் சம்பவம் தொடர்ந்து நடந்து வருகிறது. சமீபக் காலங்களில் இத்தகைய விபத்துகள் அதிகரித்திருக்கின்றன.

தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பகுதிகளுக்கும் மின்சாரம் வழங்கும் பொறுப்பை ஏற்றுள்ளது. வனப் பகுதியை ஒட்டியுள்ள கிராமம்/தொலைவில் தனியாக அமைந்துள்ள பகுதிகளுக்குத் தமிழ்நாடு மின்சார வாரியம் அதிக தொகை செலவு செய்து மின் கட்டமைப்பை ஏற்படுத்தி, மின் விநியோகம் செய்து வருகிறது. கிராமப்புற பகுதிகளில் உள்ள மக்களின் அடிப்படைத் தேவை மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக இந்த மின் கட்டமைப்பை தமிழ்நாடு மின்சார வாரியம் ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கெனவே, தமிழ்நாடு மின்சார வாரியம், சம்பந்தப்பட்ட வனத் துறை அலுவலர்களுடன் கூட்டாகச் சேர்ந்து, தொடர்ச்சியாக கூட்டு ஆய்வினைச் செய்து வருகிறது. இதன் அடிப்படையில் தேவைப்படும் மாற்றங்களை மின்சார வாரியம் அவ்வப்போது செய்து வருகிறது.

வன விலங்குகள் உயிரிழப்பதைத் தடுப்பதற்காக உரிய அறிவிப்புகளைப் பத்திரிகை, ஊடகம், தண்டோரா மற்றும் துண்டு பிரசுரங்கள்மூலம் சம்பந்தப்பட்ட பிரிவு அலுவலகங்கள்மூலம் தெரிவிக்கப்படுகிறது. மேலும், மின்வேலி அமைப்பது என்பது கிரிமினல் குற்றம் என்றும் அவ்வாறு மின்வேலி அமைப்பதை உடனடியாக அருகில் உள்ள பிரிவு அலுவலகத்திற்குத் தெரிவிக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலர்கள் மற்றும் வனத் துறையினருடன் மேற்கொண்ட கூட்டு ஆய்வின்மூலம் கண்டறியப்பட்ட பகுதிகளில் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன:

2023 ஏப்ரல் 12]

அ. தாழ்வாகத் தொங்கும் கம்பிகளைச் சரிசெய்தல் 838 இடங்கள்.

ஆ. புதிதாக மின் கம்பங்களை இடைச்செருகல் செய்து நீண்ட இடைவெளி உள்ள தாழ்வாக செல்லும் மின் கம்பிகளைச் சரிசெய்தல் – 295 இடங்கள்.

இ. மின் கம்பங்களின் உயரத்தினைக் கூட்டுதல்-244 இடங்கள்.

ஈ. பழுதடைந்த மின் கம்பங்களை மாற்றுதல்–128 இடங்கள்.

உ. சாய்ந்த மின் கம்பங்களைச் சரி செய்தல் – 6 இடங்கள்.

ஊ. மேட்டுப்பாளையம் பகுதி, சிறுமுகை கிராமத்தில் உள்ள உளியூர் குக்கிராமத்தில் மின் கம்பிகளை 3.5 கி.மீ. தூரத்திற்கு வேறு பாதையில் மாற்றி அமைத்தல்.

இருந்தபோதிலும், தற்போது வனப் பகுதியிலிருந்து சுமார் 60 கி.மீ. தூரத்திற்கும் மேலாக இடம் பெயர்ந்து கிராமப்புறம் மற்றும் வயல்வெளியில் அனுமதியில்லாமல் அமைக்கும் மின்வேலியில் சிக்கி யானைகள் இறக்கின்றன.

கடந்த பத்தாண்டுகளில், ஏற்பட்ட 79 மின் விபத்துகளில் தவறான முறையில் அமைத்த மின்சார வேலியில் சிக்கி 48 (61 சதவிகிதம்) யானைகள் இறந்துள்ளன. யானைகள் மற்ற விபத்துகளான மரக்கிளைகளை இழுக்கும்போதோ அல்லது மின் கம்பத்தின்மீது மோதும்போதோ மின்கம்பிகளில் அடிபட்டு இறந்துள்ளன.

இது தொடர்பாக, தமிழ்நாடு அரசு உயர்மட்ட அளவிலான கூட்டத்தை நடத்தியது. இதில் மின் விபத்துகள்மூலம் வன விலங்குகள் குறிப்பாக யானைகளைக் காப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

மின் விபத்துகளிலிருந்து யானைகளைக் காப்பதற்கு 10 செயல்திட்ட வழிமுறைகளைத் தமிழ்நாடு மின்சார வாரியம் வகுத்து கீழ்க்கண்ட பணிகளை ஓராண்டில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு.

அ. யானைகளின் வழித்தடத்தைக் கண்டறிதல்

ஆ. வனப் அலுவலர்களுடன் கூட்டு நடவடிக்கையைத் தீவிரப்படுத்தி, பாதிக்கப்படக்கூடிய இடங்களைக் கண்டறிதல்.

[2023 ஏப்ரல் 12

இ. மின் கம்பங்களை உயர்த்துதல்.

ஈ. தாழ்வாகத் தொங்கும் மின் கம்பிகளைச் சரி செய்தல் மற்றும் புதிதாக மின் கம்பங்களை நிறுவி மின் கம்பிகளைச் சரியான உயரத்தில் அமைத்தல்.

உ. கூர்முனைக் கம்பிகளை அமைத்தல் அல்லது மின் கம்பங்களைச் சுற்றி முள் கம்பிவேலி அமைத்தல்.

ஊ. பழுதடைந்த மின் கம்பங்களை மாற்றுதல்/சாய்ந்த மின் கம்பங்களைச் சரிசெய்தல்.

எ. திறந்தவெளி கம்பிகளை காப்பிடப்பட்ட மின் கம்பிகளாக மாற்றுதல்.

ஏ. மின் கம்பி அறுந்து விழுந்தால் உடனடியாக அம்மின்மாற்றியின் மின்னூட்டத்தை தானியங்கி முறையில் துண்டித்தல்.

ஐ. வருவாய்த் துறை, வனத் துறை மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் சேர்ந்து சிறப்பு கூட்டுக் குழு அமைத்து திடீர் சோதனைமூலம் முறையற்ற முறையில் அமைக்கப்பட்ட மின் வேலிகளைக் கண்டறிதல்.

ஒ. மின் ஆய்வாளர், வனத் துறை, விவசாயத் துறைமூலம் சூரிய ஒளி மின்சாரம்/மின்சாரத்தை பயன்படுத்தி மின்வேலி அமைத்தலை நெறிப்படுத்துவதன்மூலம் வன விலங்குகளைப் பாதுகாத்தல் மற்றும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்தல்.

XIII. மறுசீரமைக்கப்பட்ட விநியோகத் திட்டம் (Revamped Distribution Sector Scheme)

மின் இழப்பினைக் குறைப்பதற்கும், மொத்த விலைக்கும், விற்பனை விலைக்குள்ள இடைவெளியைக் குறைத்து, நிதி ரீதியாக நிலையான மற்றும் செயல்பாட்டுத் திறனுள்ள விநியோகத் துறையின்மூலம் நுகர்வோர்களுக்கு மின்சாரம் வழங்குவதன் தரம் மற்றும் அதன் மீதான நம்பகத்தன்மையை மேம்படுத்தும் நோக்குடன் மறுசீரமைக்கப்பட்ட விநியோகத் திட்டம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தினால் மேற்கொள்ளப்படவுள்ளது. இத்திட்டம் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

2023 ஏப்ரல் 12]

அ. திறன் மிகு மின் அளவிகளை பொருத்துதல் (Smart Meters)

மின் கணக்கீடு மற்றும் அதன் மீதான தணிக்கை ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்கத்திற்காக திறன் மிகு மின் அளவி பொருத்துதல், மின்னூட்டிகள் மற்றும் மின் மாற்றிகளில் மின் அளவி பொருத்துதல் தொலைத்தொடர்பு வசதிகளை அமைத்தல் ஆகிய அனைத்து அளவீட்டு வேலைகளும் TOTEX *முறையில் செய்யப்பட வேண்டும்.*

ஆ. விநியோக உள்கட்டமைப்புப் பணிகள்:

விநியோக உள்கட்டமைப்பு பணிகளான மின் இழப்பு குறைப்புப் பணிகள் மற்றும் மின் கட்டமைப்பை நவீனமயமாக்கல் பணிகள் ஆகிய இரண்டு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. மின் இழப்பு குறைப்பு பணிகளான விவசாய மின்னூட்டிகளைத் தனியாகப் பிரித்தல், HVDS *விநியோக அமைப்பை நிறுவுதல், ஒரே இடத்தில் இருக்கும் இரண்டு மின் மாற்றிகளை* HVDS *முறையில் பிரித்து அமைத்தல் போன்ற பணிகளும், மின் அளவீட்டுப் பணிகளான ஸ்மார்ட் மீட்டர், விநியோக மின் மாற்றிகளுக்கு மின் அளவிடுதல், மின்னூட்டிகளில் மின் அளவிடுதல், மின் பகிர்மான வட்டங்களின் எல்லைகளில் மின் அளவிடுதல் ஆகிய பணிகளும் செயல்படுத்தப்படவுள்ளன.*

மறுசீரமைக்கப்பட்ட விநியோகத் திட்டத்தின் இரண்டாம் கட்ட பணிகளான நவீனமயமாக்கல் பணிகளை அனுமதிப்பதற்கான அனைத்து முன் அளவுகோல்களையும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் பூர்த்தி செய்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் புதிய துணை மின் நிலையங்களை அமைத்தல், துணை மின் நிலையங்களை மேம்படுத்துதல், புதிய மின் பாதைகளை அமைத்தல் போன்ற பணிகள் செயல்படுத்தவுள்ளன.

XIV. சிறப்பு முன்னெடுப்புகள்

i) ஆதார் எண்ணை மின் இணைப்பு எண்ணுடன் இணைத்தல்

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் உள்ள மின் நுகர்வோர்கள் தங்களது மின் இணைப்பு எண்ணுடன் ஆதார் எண் இணைக்கும் பணி 15.11.2022 முதல் ஆன்லைன் மூலமாகவும், 18.11.2022 முதல் பிரிவு அலுவலகக் கவுன்டர்கள் மூலமாகவும் மற்றும் சிறப்பு கவுன்டர்கள் மூலமாகவும் மேற்கொள்ளப்பட்டன. இந்த மாபெரும் பணி மிகக் குறுகிய காலத்தில் வெற்றிகரமாக

முடிக்கப்பட்டது. 2.67 கோடி தகுதியான மின் நுகர்வோரில் 2.66 கோடி நுகர்வோர்கள் மின் இணைப்பு எண்ணை ஆதார் எண்ணுடன் இணைத்திருக்கின்றனர்.

ii) மின் கட்டண விகித மாற்றம்

*மின் நுகர்வோர் தங்களது மின் கட்டண விகிதத்தை மாற்ற ஏதுவாக ஆன்லைன் விண்ணப்ப இணைய முகப்பு (*Portal*) உருவாக்கப்பட்டு 10.6.2022 முதல் பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டது. இதன்மூலம் பொது மக்கள் பிரிவு அலுவலகத்திற்குச் செல்ல வேண்டிய அவசியமின்றி ஆன்லைனில் விண்ணப்பிக்க இது வழிவகை செய்கிறது.*

iii) ஆன்லைன்மூலம் பணம் திரும்பப்பெறுதல்

1.12.2022 முதல் ஆன்லைன் வங்கி பரிமாற்றத்தின்மூலம் இரத்து செய்யப்பட்ட விண்ணப்பங்களுக்கான தொகையை தானாகவே திரும்பப் பெறுவது எளிதாக்கப்பட்டுள்ளது. முன்னதாக, விண்ணப்பதாரர்கள் முறையாக விண்ணப்பித்து, காசோலைமூலம் தொகையைப் பெற வேண்டும். இனிமேல், விண்ணப்பதாரர் மிகக் குறுகிய காலத்தில் எந்த அலுவலகத்திற்கும் செல்லாமலேயே அவரது கணக்கில் தானாகவே அவரது தொகையைத் திரும்பப் பெறுவர்.

iv) MRT சோதனை செயல்முறை மற்றும் மென்பொருள்மூலம் விடுபட்ட மின் கட்டணத்தை தானியங்கி முறைமூலம் பெறுதல்

MRT *சோதனை செயல்முறையை மேம்படுத்துதல் மற்றும் மென்பொருள்மூலம் விடுபட்ட மின் கட்டணத்தை வசூலித்தல் – இது பிழைகள்/உண்மையான இறுதி மின் கணக்கீடைக் கைப்பற்றாததன் காரணமாக விடுபட்ட மின் கணக்கீட்டுத் தொகையை வசூலிக்க உதவுகிறது. இதன் விளைவாக கடந்த 2 மாதங்களில் கிட்டத்தட்ட 2 கோடி ரூபாய் விடுபட்ட வகையில் வருமானம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு கிடைத்திருக்கிறது.*

v) நிறுவன வளத் திட்டமிடல்

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தில் SAP *நிறுவன வளத் திட்டமிடல் (*ERP*) 5.5.2021 முதல் செயல்படுத்தப்பட்டுள்ளது. இது தமிழ்நாடு மின்சார வாரியத்தின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க*

2023 ஏப்ரல் 12]

மைல்கல் ஆகும். பொருட்கள் மேலாண்மை, நிதி & கட்டுப்பாடு, மனித வளம், திட்ட அமைப்புகள், நிலைய பராமரிப்பு & விற்பனை மற்றும் விநியோகம் ஆகியவை உள்ளடக்கிய முக்கியத் தொகுதிகள் ஆகும்.

i. *31.3.2021 வரையிலானபடி தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தின் நிலையான சொத்துப் பதிவு முழுமையாக* ERP-*ல் பதிவு செய்யப்பட்டு உள்ளது.*

ii. *31.3.2021 வரை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் நிலையான சொத்துப் பதிவு* ERP-*ல் பதிவு செய்யப்பட்டு வருகிறது.*

iii. ERP *செயல்படுத்தலுக்காக சக்தி மற்றும் ஆற்றல் பிரிவின்கீழ் 2022-ல்* SKOCH *தங்க விருது பெறப்பட்டுள்ளது.*

iv. *தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தில் உள்ள அனைத்து உபகரணங்களும் அதாவது பவர் டிரான்ஸ்பார்மர் மற்றும் துணை மின் நிலைய உபகரணங்கள் பராமரிப்பு* ERP *அமைப்புமூலம் கண்காணிக்கப்படுகிறது. இது முறையான கால பராமரிப்பை மேற்கொள்வதற்கும் மற்றும் கால அட்டவணையின் தாமதத்தைத் தவிர்க்கவும் உதவுவதால் உபகரணங்களின் செயல்திறனை மேம்படுத்துகிறது.*

vi) திறன்மிகு மின்னளவிகள்

மின்னளவி சம்பந்தமான தரவுகளில் மனித தலையீட்டைத் தவிர்க்கவும், தானியங்கி முறையில் மின் கணக்கீடு செய்யவும், மின் துண்டிப்பு மற்றும் மறு இணைப்பு கொடுக்கவும், சீர்மிகு மின்னளவி முன்னோடித் திட்டம், சென்னை தியாகராய நகரில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மனித தவறுகள் இல்லாமல் துல்லியமாக மின் கணக்கீடு செய்வதினால் தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்திற்கு ஏற்படும் வருவாய் இழப்பீடு தவிர்க்கப்படுவதோடு, மின் நுகர்வோர்களுக்கு ஏற்படும் மின் கணக்கீடு சம்பந்தமான புகார்களும் தவிர்க்கப்படுகிறது.

நுகர்வோர்கள் மின்னளவி கைபேசி செயலி மூலமாக தங்களின் மின்சார பயன்பாட்டை 24X7 அறிந்துகொள்ளவும், மின் கட்டணத்தைக் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் செலுத்தவும் முடிவதினால் மின் துண்டிப்பைத் தவிர்க்க இயலும்.

சீர்மிகு மின்னளவி நிறுவுதல் திட்டத்திற்கு ரேடியோ அலைவரிசை, செல்லுலார் போன்ற தொலைத் தொடர்பு தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுகிறது.

vii) ஆன்லைன் போர்ட்டலிலிருந்து மின் இரசீது பதிவிறக்கம்

பிப்ரவரி 2023 முதல் ஆன்லைன் போர்ட்டல்/ஒருங்கிணைந்த பரிவர்த்தனை தரவு (UPI) செயலிமூலம், சமீபத்தில் அல்லது முன்னர் செலுத்தப்பட்ட கட்டணங்களுக்கான மின் இரசீதை ஆன்லைனில் பதிவிறக்கம் செய்யும் வசதி நுகர்வோருக்கு வழங்கப்பட்டுள்ளது.

viii) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக இணையதளம்

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக இணையதளம், இந்திய அரசு இணையதளங்களுக்கான வழிகாட்டுதல்கள் (Guidelines for Indian Government Websites) தரநிலையை பின்பற்றி புதுப்பிக்கப்பட்டு 23.2.2023 முதல் பயன்பாட்டில் உள்ளது.

ix) சோலார் இணைப்பிலிருந்து சோலார் அல்லாத இணைப்பிற்கான விண்ணப்பங்கள்

சோலார் மின் இணைப்பிலிருந்து சோலார் அல்லாத மின் இணைப்பிற்கு மாறுவதற்கும் சாதாரண மின் கட்டணத்திற்கு திரும்புவதற்கும் புதிய வெப்போர்ட்டல் உருவாக்கப்பட்டு, பிப்ரவரி 2023 முதல் பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது.

x) நுகர்வோருக்கான மறுவடிவமைப்பு செய்யப்பட்ட மொபைல் பயன்பாடு

இதுவரை செயல்பாட்டிலிருந்த கைபேசி செயலி கணிசமாக மேம்படுத்தப்பட்டு OTP அடிப்படையிலான உள்நுழைவுமூலம் பில் விவரங்களை பார்வையிடல், இரசீது பதிவிறக்கம் மற்றும் இடைதளம் மாற்றங்கள் செய்யப்பட்டு 14.12.2022 அன்று முதல் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

xi) மின் திருட்டு பற்றி ஆன்லைன்மூலம் பதிவு செய்யும் வசதி

மின் திருட்டு மற்றும் தவறான மின் பயன்பாடு குறித்து (பெயர் குறிப்பிடாமலும்) ஆன்லைன்மூலம் புகார் அளிக்கும் வசதி

2023 ஏப்ரல் 12]

ஏப்ரல் 2022 முதல் செயல்படுத்தப்பட்டுள்ளது. பெறப்பட்ட புகார் மின் துறை அமலாக்கப் பிரிவிற்கு உடனடி நடவடிக்கைக்காகப் பட்டியலிடப்பட்டு அனுப்பப்படுகிறது.

XV. மின் சேமிப்பு மற்றும் தேவை குறித்து எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள்

i. மாநில அரசால் நியமிக்கப்பட்ட முகமையாக (State Designated Agency) செயல்பட்டு வரும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் கீழ்க்காணும் பணிகளைச் செய்து வருகிறது

- *அரசு பள்ளிகள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் மின் சக்தியை சேமிக்கத் தற்போதுள்ள செயல் திறன் குன்றிய மின் சாதனங்களுக்குப் பதிலாக செயல் மிகுந்த திறன் கொண்ட LED குழல் விளக்குகள் மற்றும் 103 எண்ணிக்கை BEE-ன் நட்சத்திர மதிப்பீடு செய்யப்பட்ட மின் விசிறிகளை தருமபுரி, சிவகங்கை, கன்னியாகுமரி கல்வி மாவட்டங்களில் உள்ள அரசுப் பள்ளிகளில் மாற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், கோவில்பட்டி, நாகர்கோவில், தருமபுரி மற்றும் அரியலூர் மாவட்டங்களில் இயங்கிவரும் 159 அரசாங்க ஆரம்ப சுகாதார நிலையங்களில் இத்தகைய மாற்றங்களைச் செய்வதினால் ஆண்டுக்கு முறையே 5.3 இலட்சம் யூனிட்டுகள் மற்றும் 5.75 இலட்சம் யூனிட்டுகள் சேமிக்கப்படும்.*

- *ஊரகப் பகுதிகளில் உள்ள கிராமங்களில் மின் சிக்கனத்தைச் சேமிக்கும் விதமாக, இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் உள்ள இரண்டு கிராமங்களை (ஒத்தையால் & காரேந்தல்) தேர்ந்தெடுத்து திட்டத்தினைச் செயல்படுத்துவதன்மூலம் வருடத்திற்குச் சுமார் 43,000 யூனிட்டுகள் சேமிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

- *விவசாயத்தில் மின் சிக்கனம் குறித்த விழிப்புணர்வு தமிழகம் முழுவதும் ஏற்படுத்துவதற்காக, 25 மாவட்டங்களில், 1,913 விவசாயிகளுக்கு மின் சிக்கன விழிப்புணர்வுப் பயிற்சி நடத்தப்பட்டது. மற்ற மாவட்டங்களில் உள்ள*

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 12

விவசாயிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த மின் சிக்கன விழிப்புணர்வுப் பயிற்சி நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

❖ வணிக கட்டடங்களின் மின் நுகர்வைக் குறைப்பதற்காகவும், வணிக கட்டடங்களை ஆற்றல் திறன்மிக்கதாக மாற்றுவதற்கும், தமிழ்நாடு எரிசக்தி சிக்கனக் கட்டட விதிக்கோவை (TNECBC) விதிகள், 2022-ஐ அரசாணைமூலம் அறிவிப்பதற்காக தமிழ்நாடு மாநில முகமையாக (TNSDA) நியமிக்கப்பட்ட தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் இவ்விதிக்கோவையை தமிழ்நாடு அரசிடம் சமர்ப்பித்ததைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசு 27.12.2022 அன்று TNECBC விதிகளை அரசாணை எண் 71-ல் வெளியிட்டது.

❖ மின்சார வாகனங்கள் (Electric Vehicles): தமிழகம் முழுவதிலும் மின்சார வாகனங்களுக்கான பொது மின்னூட்ட நிலையங்களை நிறுவுவதற்கான மாநில முதன்மை முகமையாக (State Nodal Agency) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், தமிழ்நாடு அரசால் நியமிக்கப்பட்டுள்ளது.

❖ செயல்படுத்து, இலக்கினை அடை மற்றும் வர்த்தகம் செய் திட்டம் (PAT):

ஒன்றிய அரசின் எரிசக்தித் திறனூக்கச் செயலகத்தின்மூலம் தொழில் நிறுவனங்களில் செயல்படுத்துதல், இலக்கினை அடைதல் மற்றும் வர்த்தகம் செய் திட்டமானது (PAT) பல்வேறு சுழற்சிகளின்கீழ் (PATசுழற்சி–I முதல் VII(A) வரை) மத்திய எரிசக்தித் திறனூக்கச் செயலகம்மூலம் (BEE) 81 எண்ணிக்கையிலான தொழில் நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டு ஆற்றல் நுகர்வு அளவைக் குறைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில், தொழில் நிறுவனங்கள் தங்கள் இலக்கின்படி அவற்றின் ஆற்றல் நுகர்வு அளவைக் குறைக்க வேண்டும். PAT சுழற்சியின் இறுதியில், கண்காணிப்பு மற்றும் சரிபார்ப்பு முறையின்கீழ் குறைக்கப்பட்ட அளவு உறுதி செய்யப்படுகிறது. இதன் தொடர்ச்சியாக, வரவிருக்கும் PAT சுழற்சியில் சேர்ப்பதற்கான அடிப்படை தணிக்கை சரிபார்ப்பை

2023 ஏப்ரல் 12]

மேற்கொள்வதற்காகத் தமிழ்நாடு மாநில முகமை (TNSDA) உடன் BEE புதிய தொழில் நிறுவனங்களைத் தேர்ந்தெடுக்கிறது.

- ❖ 28 மாவட்டங்களில் உள்ள அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் (30 EDCs) 29,538 மாணவர்களின் சேர்க்கையுடன் 31.1.2023 வரை 937 ஆற்றல் மன்றங்கள் நிறுவப்பட்டன. மேலும் 8 மாவட்டங்களில் (14 EDCs) உள்ள அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சுமார் 100 புதிய ஆற்றல் மன்றங்கள் உருவாக்கம் செய்யப்பட்டு மாணவர்களிடையே ஆற்றல் சேமிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- ❖ சென்னை மற்றும் திருச்சி பகுதிகளில் உள்ள 565 விற்பனையாளர்கள்/விநியோகஸ்தர்களுக்கும், பொது மக்களுக்கும் வீட்டு உபயோகப் பொருட்களின் நட்சத்திரக் குறியீடு குறித்து ஒரு நாள் விழிப்புணர்வு பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன. மேலும் 28 இடங்களில் சில்லறை விற்பனையாளர் பயிற்சி திட்டங்கள் BEE-ன் நிதியுதவியுடன் மதுரை, சேலம், ஈரோடு மற்றும் சென்னை பகுதிகளில் முன்மொழியப்பட்டுள்ளன.
- ❖ மின் சாதனங்களில் எரிசக்தி சேமிப்பு மற்றும் ஆற்றல் திறன் குறித்த விழிப்புணர்வை அரசு அலுவலர்கள் மத்தியில் ஏற்படுத்த 38 ஒரு நாள் விழிப்புணர்வுப் பயிற்சிகள் தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம், நகராட்சி நிர்வாகம், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரிய அதிகாரிகளுக்கு (901 பங்கேற்பாளர்கள்) BEE நிதியுதவியுடன் நடத்தப்பட்டுள்ளன.

ii. எரிசக்தி சேமிப்பு நடவடிக்கைகள்

மின் திருட்டு தடுப்பு

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகமானது, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான ஊழியர்களை உள்ளடக்கிய 21 அமலாக்கக் குழுக்கள், ஒரு புலனாய்வுக் குழு மற்றும் ஒரு பறக்கும் படை மற்றும் முன்னாள் இராணுவ வீரர்களைக் கொண்ட 43 குழுக்கள் அமைத்து மின் பகிர்மான வட்டங்களில் மின் இணைப்புகளைத் திடீர் ஆய்வு செய்து மின் திருட்டுகளைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

[2023 ஏப்ரல் 12

2022-23 ஆம் ஆண்டில் மின் திருட்டுகளில் ஈடுபட்டோர்மீது இழப்பீட்டுத் தொகை மற்றும் சமரசத் தொகையாக ரூ.63.81 கோடி விதிக்கப்பட்டுள்ளது.

XVI. மனித வள மேம்பாடு

மனித வள மேம்பாட்டுப் பிரிவு (HRD) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்/தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தில் உள்ள அனைத்து அலுவலர்கள், பணியாளர்களுக்கு அவர்களின் தொழில்நுட்பம், செயல்பாடு மற்றும் நிர்வாக திறன்களை மேம்படுத்துவதற்காக ஆண்டு முழுவதும் தொடர்ந்து பலவித பயிற்சிகளை அளித்து வருகிறது. மனிதவள மேம்பாட்டுப் பிரிவின்கீழ் உள்ள 4 பயிற்சி நிறுவனங்கள் மற்றும் 11 பயிற்சி மையங்கள் மூலமாக தமிழ்நாடு மின்சார வாரியத்தில் உள்ள பொறியாளர்கள், அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்குத் தொடர்ந்து பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

2022-2023 வரை பயிற்சித் திட்டத்தின்கீழ் 44,852 பணியாளர்களுக்கு 1,185 குழுக்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. வழக்கமான வருடாந்திரப் பயிற்சித் திட்டங்களைத் தவிர REC மின் மேலாண்மை மற்றும் பயிற்சி நிறுவனம் (RECIPMT) மற்றும் தேசிய மின்சார பயிற்சி நிறுவனம் (NPTI) போன்ற மத்திய அரசு நிறுவனங்களின் நிதியுதவியுடன்கூடிய பயிற்சி, வாரியப் பணியாளர்களுக்கு 15 குழுக்களாக 474 பணியாளர்களுக்கு வழங்கப்பட்டது.

மின் செயல்திறன் மற்றும் அதன் சேமிப்பு நடவடிக்கைகள் குறித்த பயிற்சி, நகராட்சி நிர்வாகம், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை பெருநகரக் குடிநீர் வழங்கல் கழிவுநீர் அகற்று வாரிய அதிகாரிகளுக்கும், தொழில்நுட்ப வல்லுநர்களுக்கும் வழங்கப்பட்டது.

XVII. ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால் சுமார் 12 கோடி செலவில் சென்னையில் நிலையான ஆய்வகமும் திருநெல்வேலி மற்றும் உடுமலைப்பேட்டையில் நடமாடும் ஆய்வகங்கள் மின் அளவி பரிசோதனைக்காக ஆய்வகங்களும் நிறுவப்பட்டு, அவற்றில் சென்னை மற்றும் திருநெல்வேலி ஆய்வகங்களுக்கு முதன் முறையாக தேசிய ஆய்வகங்களின் அங்கீகார வாரியத்தின் (NABL) சான்றிதழ் மின் அளவிகள்

2023 ஏப்ரல் 12]

சோதனைகளுக்கும் மற்றும் அளவுதிருத்தம் மேற்கொள்வதற்கும் 2022-23 ஆம் ஆண்டில் பெறப்பட்டுள்ளது என்பது மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இதன்மூலம் மின் வாரியத்தின் அனைத்து வகை மின் அளவிகளை மிகத் துல்லியமாகச் சோதனை மற்றும் அளவுதிருத்தம் மேற்கொள்வதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மின்மாற்றி எண்ணெய்யை பரிசோதனை செய்வதற்காக மதுரையில் சுமார் ரூபாய் 3.13 கோடி மதிப்பீட்டில் மதுரை தலைமைப் பொறியாளர்/ பகிர்மானம்/ மதுரை அலுவலக வளாகத்தில் அமையவுள்ள புதிய ஆய்வகத்திற்கான கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டு, ஆய்வக உபகரணங்கள் கொள்முதல் பணி நடைபெற்று வருகின்றன.

XVIII. ஊதிய உயர்வு

தமிழ்நாடு மின்சார வாரியம் 1957 ஆம் ஆண்டு (1.7.1957) மின்சாரம் வழங்கல் சட்டம் 1948-ன்கீழ் உருவாக்கப்பட்டது.

தமிழ்நாடு மின்சார வாரியம் அமைக்கப்பட்ட பிறகு, தொழிற்சங்கங்கள் விரிவான கலந்தாய்வு நடத்தி, தொழில் தகராறு சட்டம், 1947, கீழுள்ள விதிகளின் அடிப்படையில் 5/4 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஊதிய உயர்வு நிர்ணயம் செய்யப்பட்டு வருகிறது. அதன்படி, கடந்த ஆண்டுகளில், தமிழ்நாடு மின்சார வாரியத்தில் (தற்போது TANGEDCO/TANTRANSCO) *2015 ஆம் ஆண்டு வரை பணிச்சுமை மற்றும் ஊதிய திருத்தம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.*

மேலும், 1969 முதல் 2015 வரை அதிகாரிகள்/ஊழியர்களுக்கான ஊதியத்தை மாற்றியமைப்பதற்காகத் தொழிற்சங்கங்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையே கலந்தாய்வுகள் நடத்தி இதுவரை 11 ஊதிய உயர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

தற்போது, 1.12.2019 முதல் தமிழ்நாடு மின் வாரிய ஊழியர்களுக்கும் மற்றும் அலுவலர்களுக்கும் (TANGEDCO/ TANTRANSCO) *ஊதிய உயர்வு அளிப்பதற்கு (நிலை) முழு வாரிய நடைமுறைகள் எண் 224, (செ.கி), நாள் 7.12.2019 அன்று ஊதியக் குழு அமைக்கப்பட்டு, ஊதியக் குழு உறுப்பினர்கள்,*

தொழிற்சங்கங்களுடன் 15.9.2022, 16.9.2022, 21.9.2022 மற்றும் 9.1.2023 அன்று நடத்திய கலந்தாய்வுக் கூட்டத்தில் வாரியத்தின் முன்மொழிவினைத் தரக்கோரியதால் 10.1.2023 நாளிட்ட வாரிய முன்மொழிவு தொழிற்சங்கங்களுக்கு வழங்கப்பட்டது. அதன்பின், 24.1.2023, 25.1.2023 மற்றும் 24.3.2023 ஆகிய தேதிகளில் கலந்தாய்வுக் கூட்டங்கள் நடைபெற்றன. மேலும், 24.3.2023 அன்று நடந்த கலந்தாய்வுக் கூட்டத்தில் ஊதிய உயர்வு மற்றும் பிற கோரிக்கைகள் தொடர்பான வாரிய முன்மொழிவுகளை வழங்குமாறு தொழிற்சங்கங்கள் வலியுறுத்தின. அதன்படி, வாரிய முன்மொழிவு 27.3.2023 அன்று தொழிற்சங்கங்களுக்கு வழங்கப்பட்டு, அவர்களின் கருத்துகளை 7 தினங்களுக்குள் சமர்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது. சில தொழிற்சங்கங்கள் தங்களது கருத்துகளைச் சமர்ப்பித்துள்ளன. அவற்றின் கருத்துகளை பரிசீலித்து, தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி விரைவில் முடிவெடுக்கப்படும்.

XIX. நீடித்த வளர்ச்சி இலட்சியங்கள் (SDG)

நீடித்த வளர்ச்சி இலட்சியங்கள் என்பது 17 இலட்சியங்கள் மற்றும் அதற்குத் தொடர்புடைய 169 இலக்குகளை 2030-க்குள் அடைய வேண்டும். 17 இலக்குகளில், இலக்கு 7. எரிசக்தித் துறைக்கு தொடர்பான இலக்கு ஆகும். இலக்கு 7 என்பது "அனைவருக்கும் ஏற்கத்தக்க, நம்பகமான, நிலையான மற்றும் நவீன எரிசக்திக்கான அணுகலை உறுதி செய்வதாகும்". இலக்கு 7 பணிக் குழு 5-ன் "புதுமை, தொழில்மயமாக்கல் மற்றும் நீடித்த மேம்பாடு"கீழ் வருகிறது. அரசுச் செயலாளர், தொழில் துறை அவர்கள் இக்குழுவிற்குத் தலைவர் ஆவார்.

முக்கிய இலக்குகள் மற்றும் குறியீடுகள்:

நம்பகமான, நிலையான மற்றும் நவீன எரிசக்தி சேவைகளுக்கான அணுகல்

- ❖ மின்சாரம் வழங்கப்பட்ட வீடுகளின் சதவிகிதம் மேற்சொன்ன குறியீட்டிற்கு (indicators), தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் அதன் 100% குறியீட்டை அடைந்துள்ளது. யாரும் விடுபடக் கூடாது (Leaving No One Behind) என்ற கொள்கையுடன், வழக்கமான முறையில் மின்சாரம் வழங்க சாத்தியமில்லாத தொலைதூர/வனப் பகுதிகளில் அமைந்துள்ள வீடுகளுக்குத் தமிழ்நாடு மின்

2023 ஏப்ரல் 12]

உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், கூரைமேல் சூரிய ஒளி தகடுகள் அமைத்து மின்சாரம் வழங்கியுள்ளது.

❖ புதுப்பிக்கத்தக்க ஆற்றல் கலவையின் பங்கை கணிசமாக அதிகரித்தல்

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கட்டாய கொள்முதல் (RPO) வரையறை அடையப்பட்டது (%).

2021-22 ஆம் ஆண்டிற்கான இந்த குறியீட்டின் மதிப்பு 20.88% ஆகும். இலக்கை அடைவதற்காக, 20,000 மெகாவாட் சூரிய மின் சக்தி பூங்கா நிறுவுதல், 14,500 மெகாவாட் நிறுவுதிறன் கொண்ட நீரேற்றுப் புனல் மின் திட்டங்களை நிறுவுதல் போன்ற பல்வேறு திட்டங்கள் முன்மொழியப்பட்டு, அவற்றைச் செயல்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

❖ ஆற்றல் திறனில் உலகளாவிய முன்னேற்ற விகிதத்தை இரட்டிப்பாக்குதல். இந்தக் குறியீடு தொடர்பாகச் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களின் முன்னேற்றத்தைக் கண்காணிக்க, ஒன்றிய அரசு, வெளியீட்டு விளைவு கண்காணிப்புக் கட்டமைப்பு (Output Outcome Monitoring Framework) என்கிற கட்டமைப்பை வரைபடப்படுத்தப்பட்ட திட்டங்களின் செயல்திறனைக் கண்காணிக்க அறிமுகப்படுத்தியுள்ளது.

1.5 நிதி

I. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்

❖ சராசரி வருவாய் ஈட்டலுக்கும் சராசரி விநியோகச் செலவுக்கும் இடையே உள்ள இடைவெளி காரணமாக, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் தொடர்ந்து வருவாய் இழப்பைச் சந்தித்து வருகிறது, மின் கொள்முதல் செலவு, எரிபொருள் செலவு, வட்டிச் செலவுகள், ஊழியர்களின் பலன்கள் போன்றவற்றின் உயர்வினை, நுகர்வோருக்கு மின்சாரத்தை விற்பனை செய்யும் கட்டணத்தின்மூலம் வசூலிக்கப்படவில்லை.

❖ முந்தைய நான்கு ஆண்டுகளில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின்மூலம் ஏற்பட்ட மொத்த

வருவாய், மொத்த செலவு மற்றும் வருவாய் இழப்பு ஆகியவை கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன:

ரூ. கோடிகளில்

கூறுகள்	2018-19	2019-20	2020-21	2021-22	2022-23 (B.E)
மொத்த வருவாய்	61,666.73	65,177.10	63,388.52	70,447.44	70,097.08
மொத்த செலவு	74,290.14	77,142.03	76,795.84	82,402.08	77,683.37
வருவாய் இழப்பு	-12,623.41	-11,964.93	-13,407.32	-11,954.64	7,586.29

- தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 2022-23 ஆம் நிதியாண்டிற்கான வருவாய் இழப்பு ரூபாய் 7,825 கோடி என்ற அளவில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- பல்வேறு நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகளிலிருந்து தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் பெறப்பட்டுள்ள கடன்களின் நிலுவைத் தொகை 31.3.2023 அன்றின்படி ரூ.1,44,000 கோடி என்ற அளவில் உள்ளது.

- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் நிதி நிலையை மேம்படுத்தும் வகையில், தமிழக அரசு பங்கு மூலதனம், மின் கட்டண மானியம், இழப்புகளை ஈடுசெய்வதற்கான மானியம் போன்ற வகைகளில் தொடர்ந்து நிதியுதவி அளித்து வருகிறது.

- தமிழக அரசு 2022-23 ஆம் நிதியாண்டில் மின் கட்டண மானியமாக ரூ.13783.68 கோடியும், வருவாய் இழப்பினை ஈடு செய்வதற்கான மானியமாக ரூ.12315.36 கோடியும், இதர நிதியுதவிக்காக ரூ.437.00 கோடியும் நிதி உதவி வழங்கியுள்ளது.

- பட்டியலிடல் மற்றும் வசூல் திறனை மேலும் மேம்படுத்தும் வகையில், ஸ்மார்ட் மீட்டர்களை நிறுவுதல், பழுதடைந்த மீட்டர்களை மாற்றுதல், 100% மதிப்பீட்டை உறுதி செய்தல், செயலிழந்த சேவைகளைத் துண்டித்தல், முறையற்ற ஆற்றல் பயன்பாடு, மேம்படுத்தப்பட்ட இணையவழி மின் கட்டண பயன்பாடு போன்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2023 ஏப்ரல் 12]

- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் அதன் வாடிக்கையாளர்களுக்கு நெட் பேங்கிங், பாரத் பில் பேமென்ட் சிஸ்டம், இ-சேவா மையம், தபால் அலுவலகம், கட்டண நுழைவாயில்கள், டெபிட் கார்டு/ கிரெடிட் கார்டு, வங்கி கவுன்டர், தானியங்கி வங்கி இயந்திரங்கள் போன்ற பல்வேறு முறைகள்மூலம் மின் கட்டணங்களைச் செலுத்துவதற்கு வசதி செய்துள்ளது. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மொத்த வருவாயில் 74% இணையவழி முறையில் வசூலித்துள்ளது. நுகர்வோருக்கு விரிவுபடுத்தப்பட்ட மேற்கூறிய வசதிகளின் காரணமாக, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் கட்டண வசூலிக்கும் திறன் 99%-க்கும் அதிகமாக உள்ளது, இது நாட்டிலேயே அதிகமான அளவீடாக உள்ளது.

- உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் அரசு துறைகளின் மின் கட்டணத் தொகையை தெரிந்து கொள்ளவும் மற்றும் மின் கட்டணத்தை எளிதான முறையில் செலுத்தவும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் முகப்பு பலகை (Dashboard) வசதியை ஏற்படுத்தியுள்ளது. மேலும், மின்சாரம் வழங்குவதற்கான செலவைச் சீரமைக்கும்பொருட்டு, மின் கொள்முதலில் குறைந்த விலை கொண்ட மின் ஆதாரங்களை அதிகம் வாங்குவது (Merit order Despatch) (MoD), அதிக வட்டி கொண்ட கடன்களை மாற்றிக் கொள்வது, நிறுவனத்தின் செயல்பாடு மதிப்பீடுகளை மேம்படுத்துதல்மூலம் வட்டி விகிதத்தைக் குறைத்தல் போன்ற பல செலவுக் குறைப்பு நடவடிக்கைகள் மற்றும் திட்டப்பணிகளை உரிய காலத்தில் முடிப்பதற்காகத் தொடர் கண்காணிப்பு உள்ளிட்டவை மேற்கொள்ளப்படுகின்றன.

- மேலும், குறைந்த வட்டி விகிதத்தில் ரூ.7605 கோடிக்கு நிதிச் சந்தையில் பத்திரங்களை வெளியிடுவதன்மூலம் நிதி திரட்டி, அதிக வட்டி கொண்ட கடன்களைத் திருப்பிச் செலுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது.

- நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் வசதியைப் பெறுவதற்கு ரூ.6000 கோடிக்கான அரசு உத்தரவாதத்தையும் தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது.

[2023 ஏப்ரல் 12

II. புதிய மின் கட்டணத் திருத்தத்தின் சிறப்பம்சங்கள்

- *10.9.2022 முதல் மின் கட்டணம் திருத்தப்பட்டதால் தமிழ்நாடு அரசிற்கு மானியங்களுக்காக ஆண்டிற்கு ரூ.4000 கோடி கூடுதல் செலவு ஆகும். அனைத்து வீட்டு மின் நுகர்வோர்களுக்கும் 100 யூனிட் வரை விலையில்லா மின்சாரமும், குடிசை மற்றும் விவசாய மின் இணைப்புகளுக்கு இலவச மின்சாரமும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. மின் கட்டண மானியமானது, வீட்டு மின் உபயோகம், கைத்தறி, விசைத்தறி மற்றும் பொது வழிபாட்டு தலங்கள் முதலான வகைகளுக்குக் குறைக்கப்பட்ட கட்டணத்தில் தொடர்ந்து வழங்கப்படும்.*

- *வீட்டு மின் நுகர்வோர்களுக்கு நிலைக் கட்டணம் செலுத்துவதிலிருந்து முழு விலக்கு அளிக்கப்பட்டு, நுகர்வோர்களுக்கு ஒரு பகுதி மின் கட்டணம் மட்டுமே வசூலிக்கப்படுகிறது.*

- *கைத்தறி நெசவாளர்களுக்குத் தற்போது இரு மாதங்களுக்கு வழங்கப்பட்டு வரும் 200 யூனிட் இலவச மின்சாரம் 300 யூனிட்டுகளாக உயர்த்தப்பட்டதால், தமிழ்நாடு அரசிற்கு ஆண்டிற்கு ரூ.8.41 கோடி மின் மானியம் கூடுதலாகச் செலவாகும். இதனால் தமிழ்நாட்டில் உள்ள 73,642 கைத்தறி நுகர்வோர்கள் பயனடைவார்கள்.*

- *விசைத்தறி நெசவாளர்களுக்குத் தற்போது இரு மாதங்களுக்கு வழங்கப்பட்டு வரும் 750 யூனிட் இலவச மின்சாரம் 1000 யூனிட்டுகளாக உயர்த்தப்பட்டும், இரு மாதங்களுக்கு 1001 யூனிட் முதல் 1500 யூனிட் வரை மின் நுகர்வுக்கு மின் கட்டணத்தில் 35 பைசா/யூனிட் குறைக்கப்பட்டுள்ளது, மேலும், இரு மாதங்களுக்கு 1500 யூனிட்டுகளுக்கு மேல் உள்ள மின் நுகர்வுக்கு மின் கட்டண உயர்வு 70 பைசா/யூனிட்டும் எனக் குறைக்கப்பட்டுள்ளது. இந்த மின் கட்டணக் குறைப்பினால், தமிழ்நாடு அரசிற்கு ஆண்டிற்கு ரூ.53.62 கோடி மின் மானியம் கூடுதலாகச் செலவாகும். இதனால் தமிழ்நாட்டில் உள்ள 1,68,000 விசைத்தறி நுகர்வோர்கள் பயனடைவார்கள்.*

2023 ஏப்ரல் 12]

- *தாழ்வழுத்த குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகளுக்கு உச்ச நேர மின் நுகர்விற்கான நாளின் நேர கட்டணமானது (ToD Charges) 25 சதவிகிதத்திலிருந்து 15 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இந்த குறைக்கப்பட்ட நாளின் நேர மின் கட்டணத்திற்கான கட்டணங்களைத் தமிழ்நாடு அரசு மானியமாக வழங்குவதால் ஆண்டிற்கு ரூ.145 கோடி கூடுதல் செலவாகும். இதனால் சுமார் 3.37 இலட்சம் தாழ்வழுத்த தொழிற்சாலை நுகர்வோர்கள் பயனடைவார்கள்.*

III. தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம்

தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தின் முக்கியச் செயல்பாடு மின்சாரத்தினை அதன் உற்பத்தி செய்யும் இடத்திலிருந்து மின் கடத்திகள்மூலம் மின் பகிர்மானக் கட்டமைப்பு வரை கொண்டு சேர்ப்பதாகும். தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தின் மொத்த வருவாயில் 80% பங்களிக்கும் முக்கிய வாடிக்கையாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகமாகும்.

தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் கடந்த 10 வருடங்களில் 7 ஆண்டுகள் இழப்பைச் சந்தித்ததன்மூலம் இதன் மொத்த இழப்புகள் (Accumulated Losses) 31.3.2021 நிலவரப்படி ரூ.6,796.34 கோடியாக அதிகரித்துள்ளது, நிதியாண்டு 2021-22-ல் திருத்தப்பட்ட வரவு-செலவு மதிப்பீடுபடி வருவாய் இழப்புகள் ரூ.1,871.16 கோடி ஆகும். கடந்த 4 ஆண்டுகளுக்கான வருடாந்திர வருவாய் கணக்கு பின்வருமாறு:

(ரூ.கோடிகளில்)

நிதியாண்டு	வருவாய் ரசீதுகள்	வருவாய் செலவுகள்	வருவாய் இடைவெளி
2018-19	3,224.63	3,859.54	-634.91
2019-20	3,366.22	4,440.70	-1,074.48
2020-21	3,391.06	5,141.62	-1,750.56
2021-22 (திருத்தப்பட்ட வரவு செலவு மதிப்பீடு)	3336.69	5207.84	-1871.16

2022-23 (திருத்தப்பட்ட வரவு செலவு மதிப்பீடு)	4,489.33	5,352.74	863.41

தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தின் நிதி நிலைமையை மேம்படுத்தும் வகையில் கடனுக்கான வட்டியைக் குறைத்தல், கட்டுப்படுத்தக்கூடிய செலவுகளைக் குறைத்தல் போன்ற பல நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

IV. சேமிப்பில் சாதித்தது

தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தின் தொடரமைப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு பல்வேறு நிதி நிறுவனங்களிலிருந்து அதாவது ஊரக மின்மயமாக்கல் கழகம் (REC), மின்விசை நிதி நிறுவனம் (PFC), இந்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு முகமை (IREDA) மற்றும் பல்வேறு நிதி நிறுவனங்களிலிருந்து கடன் பெறப்படுகிறது, 31.3.2023 அன்று கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களிடம் நிலுவையில் உள்ள கடன் தொகை ரூ.24211.64 கோடியாகும்

தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தின் தொடர் முயற்சி காரணமாக மேற்கூறிய நிதி நிறுவனங்கள் வட்டி விகிதத்தைக் குறைத்ததினால் தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் ஒரு வருடக் காலத்திற்குக் கடனுக்கான வட்டியை ரூ.148 கோடி வரை சேமிப்பதற்கு வழிவகை செய்கிறது.

V. இந்திய கணக்கு தரநிலை (IND AS)

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் ஆகியவற்றின் ஆண்டுக் கணக்கு அறிக்கைகள் நிறுவனச் சட்டத்தின் விதிகளின்படி, 2017-18 ஆம் நிதி ஆண்டு முதல் இந்திய கணக்கு தரநிலை (INDIAN Accounting Standards) விதிகளின்படி தயாரிக்கப்பட வேண்டும். இந்திய கணக்கியல் தர நிலைகளை (IND AS) செயல்படுத்துவதற்கு ஆலோசகர் நியமிக்கப்பட்டு, தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்திற்கான பணிகள் முடிவடைந்துள்ளன. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு 97% பணிகள் முடிவடைந்துள்ளன.

2023 ஏப்ரல் 12]

IND AS-ஐ செயல்படுத்துவதன்மூலம், ஊரக மின்மயமாக்கல் கழகம் (REC) மற்றும் மின் விசை நிதி நிறுவனம் (PFC) போன்ற நிதி நிறுவனங்களால் வசூலிக்கப்படும் வட்டி விகிதம் குறைக்கப்படும்.

1.6 சிக்கன நடவடிக்கைகள்

செலவினங்களைக் குறைப்பதற்கான தொடர்ச்சியான முயற்சிகள், அதாவது, அனல் மின் நிலையத்தின் இயக்கம் மற்றும் பராமரிப்புச் செலவுகளைக் குறைத்தல், நிலக்கரி கையாளும் கட்டணத்தில் சேமிப்பு, நிலக்கரி போக்குவரத்து கப்பல்களைக் குறைந்த மதிப்பிலான வாடகையில் நீண்ட காலத்திற்கு ஒப்பந்தம் செய்தல், கூடுதல் கொள்ளளவு கப்பல்களை இயக்குதல், கடன்களுக்கான வட்டி விகிதங்கள் குறைப்பு, மத்திய மின் தொடரமைப்புக் கட்டண குறைப்பு, உலர் சாம்பல் விற்பனைமூலம் வருவாய் பெருக்கம், மின் பரிமாற்ற ஏற்பாடு ஆகியவற்றின்மூலம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம், 2022-2023 ஆம் ஆண்டில் செலவினங்களில் ரூ.1,090 கோடி சேமிப்பு செய்துள்ளது.

2. தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை

முன்னுரை

மாநிலத்தின் வளர்ச்சிக்கு இணையாக எரிசக்தி தேவை படிப்படியாக அதிகரித்து வருகிறது. மரபுசார் ஆற்றல் வளங்கள் குறைவாக இருப்பதாலும், அவற்றின் கட்டுப்படுத்தப்பட்ட பயன்பாட்டின் காரணங்களாலும் அதனால் சுற்றுச்சூழலில் மாசுகள் அதிகரிப்பதாலும் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களின்மூலம் எரிசக்தி உற்பத்திக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு தமிழ்நாடு அரசு ஊக்குவித்து வருகிறது.

மரபுசாரா எரிசக்தி ஆதாரங்களைப் பயன்படுத்துவதில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, மரபு சார்ந்த புதை படிவ எரிபொருளைப் பயன்படுத்துவதிலிருந்து புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பயன்பாட்டிற்கு மாநிலத்தை மாற்ற வேண்டும் என்ற ஒரு குறிப்பிட்ட நோக்கத்துடன் தமிழ்நாடு அரசால் ஒரு சுயாட்சி நிறுவனமாகத் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை தோற்றுவிக்கப்பட்டது. புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் மாநில ஒருங்கிணைப்பு நிறுவனமாகத் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை செயல்பட்டு வருவதோடு, எரிசக்தி தொடர்பான மாநில

மற்றும் ஒன்றிய அரசுகளின் திட்டங்களைச் செயல்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

தமிழ்நாட்டின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டிற்கான பங்களிப்பில் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை, 76.28 மெ.வாட் அளவிலான நடுத்தர மற்றும் சிறிய சூரிய மின்சக்தித் திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்தியுள்ளது. இதில் 59.28 மெ.வாட் திறன் கொண்ட வீடுகளுக்கான சூரிய மேற்கூரைத் திட்டங்களுடன், 17 மெ.வாட் திறன் கொண்ட சோதனைக் காற்றாலைத் திட்டங்களைத் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை நிறுவியுள்ளது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆற்றலைப் பயன்படுத்துவது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி தமிழ்நாட்டில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி மற்றும் பயன்பாட்டில் தொடர்புடைய அனைவருக்கும் ஒரு ஒருங்கிணைப்புத் தளமாக தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை செயல்படுகிறது.

தமிழ்நாட்டில் மின் ஆற்றலின் தற்போதைய நிலை

இந்தியாவின் தூய்மையான ஆற்றல் மாற்றத்திற்கான முதன்மை ஆதாரங்களில் ஒன்றாக இருந்து தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை முன்னணியில் உள்ளது. எரிசக்தித் தேவையில் தன்னிறைவு அடைய, சூரிய மேற்கூரை பெரிய அளவிலான சூரியசக்தி பூங்காக்கள், காற்று-சூரிய கலப்பினத் திட்டங்களின்மூலம் சூரிய ஆற்றல் உற்பத்திக்குச் சிறந்த வாய்ப்புள்ளது.

அனைவருக்கும் 24X7 தடையில்லா மின்சாரம் வழங்குவதில் தமிழ்நாடு மகத்தான வெற்றியைப் பெற்றுள்ளது. உருமாறும் கால நிலை மாற்றத்திலும் (Transformative Climate Action) தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது.

தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் முக்கிய திட்டங்கள்

மாநிலத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை முன்னணியில் உள்ளது. அரசாங்கத்தின் வழிகாட்டுதலின்படி,

2023 ஏப்ரல் 12]

தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையால் பல முன்முயற்சி திட்டங்கள், முதன்மைத் திட்டங்கள் மற்றும் சமூக பொருளாதார நன்மைத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையால் மேற்கொள்ளப்பட்டு வரும் முக்கியத் திட்டங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்ட சூரிய மேற்கூரைத் திட்டம்— இரண்டாம் கட்டம் (குடியிருப்பு நுகர்வோருக்காக)

குடியிருப்பு நுகர்வோர்களுக்கான மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்ட சூரிய மேற்கூரைத் திட்டங்களைத் (இரண்டாம் கட்டம்) தமிழகத்தில் செயல்படுத்த தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தை புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம், மாநில செயல்படுத்தும் நிறுவனமாக அறிவித்துள்ளது. 12 மெ.வாட் திறன் கொண்ட சூரிய மேற்கூரைகளை நிறுவுவதற்காக சூரிய ஆற்றல் ஒருங்கிணைப்பாளர்களைப் பட்டியலிடும் பணியைத் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமைக்குத் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் வழங்கியுள்ளது.

இதனடிப்படையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு சூரிய ஆற்றல் ஒருங்கிணைப்பாளர்களைப் பட்டியலிடும் பணி நிறைவடைந்துள்ளது. இதன்மூலம் 6066 கி. வாட் திறனுக்கு 1714 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, 1978 கி.வாட் திறனுக்கு 505 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் வழங்கும் 40 சதவிகித மானியத்துடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தைச் செயல்படுத்த 19.1.2024 வரை காலக்கெடு நிர்ணயித்துள்ளபோதிலும், இத்திட்டம் ஜுலை 2023-க்குள் நிறைவேற்றப்பட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இத்திட்டத்தின்மூலம் சுமார் 4000 நுகர்வோர்கள் பயனடைவார்கள். இத்திட்டம் முடிவடைந்ததும், கூடுதலாக, 2023-24 ஆம் நிதியாண்டில் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் வழங்கும் மானிய உதவியுடன் 50 மெ.வாட் திறன் கொண்ட சூரிய மேற்கூரைகள் நிறுவப்படும். இதன்மூலம் சுமார் 20,000 குடியிருப்பு நுகர்வோர்கள் பயனடைவார்கள்.

அரசு அலுவலகங்கள், கல்வி நிறுவனங்கள், அரசு நடத்தும் தொழிற்சாலைகள் ஆகியவற்றின் மேற்கூரைகளில் சூரிய

மின்சக்தி அமைப்புகள் நிறுவப்பட்டு மின்சாரம் தயாரிக்கப்படும். இந்த பயனாளிகள் அதிக கட்டணம் செலுத்தும் நுகர்வோர் என்பதால், சூரிய சக்தியை ஏற்றுக்கொள்வது பொருளாதார ரீதியாக இவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். மேலும், சூரிய மேற்கூரைத் திட்டங்கள்மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம், மின் கட்டணத்தைக் கணிசமாகக் குறைக்கும்.

2023-24 ஆம் நிதியாண்டில் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக கட்டடங்கள், நீதிமன்ற வளாகங்கள், கல்வி நிறுவனங்கள் (பல்கலைக்கழகங்கள், பள்ளிகள்) அரசு நடத்தும் தொழில் துறை அலகுகள், வழிபாட்டுத் தலங்கள் போன்ற அரசு அலுவலகங்களின் கட்டடக் கூரைகளில் 20 மெ.வாட் திறன் கொண்ட சூரிய மேற்கூரைத் திட்டங்கள் நிறுவிட திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை, 10.8 மெ.வாட் திறன் கொண்ட சூரிய மேற்கூரைகள் அமைத்திட பல்வேறு அரசு அலுவலகக் கட்டடங்கள் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையால் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த திட்டம் (CAPEX) (மூலதனச் செலவு) வணிக மாதிரியின்கீழ் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தில் சூரிய மேற்கூரை நிறுவுவதற்கான முழு மூலதன முதலீட்டையும் பயனாளிகளே பங்களித்து அந்த சூரிய மேற்கூரை அமைப்பை சொந்தமாக்கிக் கொள்வர். சூரிய மேற்கூரை அமைப்புகளை நிறுவி அதன் பின்னர், ஐந்து (5) ஆண்டுகளுக்கான விரிவான பராமரிப்புப் பணிகளை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை மேற்கொள்ளும். இந்த சூரிய மேற்கூரை அமைப்புகள் நிகர பில்லிங் ஃபீட் இன் (Net Billing Feed-in tariff) கட்டண முறையின்கீழ் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் மின் கட்டமைப்புடன் இணைக்கப்படும்.

இதுவரை, பெரியார் பல்கலைக்கழகம், மண்டல போக்குவரத்து அலுவலகம், சென்னை வ.உ.சி. துறைமுக பொறுப்புக் கழகம் போன்ற அலுவலகக் கட்டடங்களில் சூரிய மேற்கூரை அமைப்புகளை நிறுவி விரிவான பராமரிப்புப் பணிகளைத் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை மேற்கொண்டு வருகின்றது.

2023 ஏப்ரல் 12]

சூரிய சக்தியில் இயங்கும் தெரு விளக்குகள்

அரசு அலுவலக வளாகங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு நடத்தும் தொழில் நிறுவனங்களில் சூரிய சக்தியில் இயங்கும் தெரு விளக்குகள் அமைக்க ஏற்பாடு செய்யப்படும். பல்வேறு துறைகளின் கோரிக்கைளின் அடிப்படையில் பின்வரும் இடங்களில் சூரிய சக்தியில் இயங்கும் தெரு விளக்குகளைத் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை நிறுவியுள்ளது.

தமிழ்நாடு மருத்துவ தாவரப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருத்துவக் கழகம்	50 எண்ணம்
மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு (Prohibition Enforcement wing)	40 எண்ணம்

சூரிய சக்தியில் இயங்கும் மின்சார வாகன மின்னூட்டல் நிலையம்

தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை, மாநிலத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களை ஊக்குவித்து செயல்படுத்தும் நிறுவனமாக இருந்து (State Nodal Agency), பொதுமக்கள் தங்கள் மின்சார வாகனங்களை மின்னூட்டல் செய்ய ஏதுவாக 25 கி.வாட் திறன் கொண்ட சூரியசக்தியில் இயங்கும் ஒரு மின்னூட்டல் நிலையத்தை சோதனை அடிப்படையில் (Pilot) பள்ளிக் கல்வி இயக்குநரகம் வளாகத்தில் நிறுவியுள்ளது.

காற்று சூரிய சக்தி மின்கல கலப்பின அமைப்பு

(Wind Solar –Battery Energy Storage Hybrid System)

சூரிய மற்றும் காற்றாலை ஆற்றல் இரண்டையும் பயன்படுத்தவும், உச்ச ஆற்றல் தேவையைப் பூர்த்தி செய்ய உதவவும், தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறு கிராமத்தில் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் நிலத்தில் ஒரு காற்று –சூரியசக்தி – மின்கல கலப்பின அமைப்பை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி, முதல் கட்டமாக, தற்போதுள்ள காற்றாலைகளுக்கு இடையே 2 மெ.வாட் திறன் கொண்ட நிலத்தில் பொருத்தப்பட்ட சூரிய மின் நிலையம் அமைக்கப்படும். இரண்டாம் கட்டமாக பழைய காற்றாலைகள் புதுப்பிக்கப்படும். மூன்றாம் கட்டமாக, 1 மெ. வாட் திறன் கொண்ட மின்கல சேமிப்பு அமைப்பு இணைக்கப்படும்.

[*2023 ஏப்ரல் 12*

3. மின் ஆய்வுத் துறை

3.1 அறிமுகம்

மின் ஆய்வுத் துறையானது மின்சாரம் தொடர்பான முதன்மையான சட்டமாகிய 1903 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இந்திய மின்சாரச் சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும். தமிழ்நாடு மின்சார வாரியம் நிறுவப்பட்டதைத் தொடர்ந்து, மின் ஆய்வுத் துறை மறுசீரமைக்கப்பட்டு, தனித் துறையாக 1961 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 7 ஆம் நாள் முதல் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பகுதிகள் உட்பட தமிழ்நாடு முழுவதும் மின் ஆய்வாளராக அரசு தலைமை மின் ஆய்வாளர் நியமிக்கப்பட்டார். அரசு தலைமை மின் ஆய்வாளரை துறைத் தலைவராகக் கொண்ட மின் ஆய்வுத் துறை, 1993 ஆம் ஆண்டு ஜூலை 31 வரை பொதுப் பணித் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் இருந்தது. 1993-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 1 ஆம் தேதி எரிசக்தித் துறை உருவாக்கப்பட்ட பின்னர், மின் ஆய்வுத் துறை எரிசக்தித் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் வந்தது. அரசு தலைமை மின் ஆய்வாளர், மின் ஆய்வுத் துறையின் தலைவராகவும், மண்டல அளவில் முதுநிலை மின் ஆய்வாளர்களும், மாவட்ட அளவில் மின் ஆய்வாளர்களும் அவருக்கு உதவியாகப் பணிபுரிகின்றனர். 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டம், பிரிவு 53 மற்றும் அதன்கீழ் உருவாக்கப்பட்ட ஒழுங்குமுறை விதிகளின்படி மின்னமைப்புகளின் பாதுகாப்பை உறுதி செய்வதும், அதன்மூலம் மனிதர்கள், விலங்குகள் மற்றும் சொத்துகளுக்கு ஏற்படும் சேதத்தைக் குறைப்பதும் மின் ஆய்வுத் துறையின் முதன்மைப் பொறுப்பாகும்.

மின்னமைப்புகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான பொறுப்பு மட்டுமன்றி, மாநில சட்டங்களின்கீழ் மின்தூக்கிகள் மற்றும் இயங்கும்படிக்கட்டுகள் மற்றும் திரையரங்குகள் தொடர்பான பாதுகாப்பு விதிகளைச் செயல்படுத்தும் பொறுப்பும் மின் ஆய்வுத் துறைக்கு உள்ளது. மேலும், தமிழ்நாடு மின்சார நுகர்வு அல்லது விற்பனை மீதான வரிச் சட்டத்தின்கீழ் மின் வரி விதிப்பதும் மற்றும் வசூலிப்பதும் மின் ஆய்வுத் துறையின் பொறுப்பாகும்.

2023 ஏப்ரல் 12]

3.2 மின் ஆய்வுத் துறையால் வழங்கப்படும் சேவைகள்



3.3 மின் ஆய்வுத் துறையின் சட்டரீதியான பணிகள், கடமைகள் மற்றும் பொறுப்புகள்

3.3.1. மின்னமைப்புகள்

2010 ஆம் ஆண்டு மத்திய மின்சார ஆணைய (பாதுகாப்பு மற்றும் மின்சார வழங்கல் தொடர்பான நடவடிக்கைகள்) ஒழுங்குமுறை விதிகளின்படி, மின்னமைப்புகள் பாதுகாப்பாக உள்ளனவா என்பதனை உறுதி செய்வதற்காக மின் ஆய்வுத் துறைக்கு பல முக்கியமான கடமைகள் மற்றும் பணிகள் வழங்கப்பட்டுள்ளன. அதன் கடமைகள் மற்றும் செயல்பாடுகள் பின்வருமாறு:

i. அதி உயர்/உயர் மின் அழுத்த இணைப்புகள், காற்றாலை மின் உற்பத்தி நிலையங்கள், வரம்பிற்குட்பட்ட மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் தனியார் மின் உற்பத்தி நிலையங்களில் ஆய்வுகளை மேற்கொள்ளுதல் மற்றும் அனுமதி வழங்குதல்.

ii. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் மின் உற்பத்தி நிலையங்கள், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தின் துணை மின் நிலையங்கள், மின்மாற்றிகள், மின் தொடரமைப்பு மற்றும் மின் பகிர்மானப் பாதைகள் ஆகியவற்றிற்கான ஆய்வுகளை மேற்கொள்ளுதல் மற்றும் ஒப்புதல் அளித்தல்.

iii. அடுக்குமாடிக் கட்டடங்களை ஆய்வு செய்து அனுமதி வழங்குதல்.

iv. மின்னமைப்புகளின் திருப்திகரமான பராமரிப்பைச் சரிபார்க்க காலமுறை ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.

v. மின்சார விபத்துகளை புலனாய்வு செய்து எதிர்காலத்தில் அவ்வாறான விபத்துகளைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் பரிந்துரைத்தல்.

இப்பொறுப்புகள்மூலம், மின்னமைப்புகளை பாதுகாப்பாகவும், நம்பகமானதாகவும் மாற்றுவதோடு, மின் விபத்துகளைத் தடுப்பதையும், மின் ஆய்வுத் துறை நோக்கமாகக் கொண்டுள்ளது.

3.3.2. மிக, மிக முக்கியப் பிரமுகர்கள் வருகை மற்றும் பொது நிகழ்ச்சிகள்

மாண்புமிகு குடியரசுத் தலைவர், மாண்புமிகு குடியரசுத் துணைத் தலைவர், மாண்புமிகு பிரதமர், மாண்புமிகு ஆளுநர், மாண்புமிகு முதலமைச்சர் போன்ற மிக, மிக முக்கியப் பிரமுகர்கள் பங்கேற்கும் நிகழ்வுகளுக்காக அமைக்கப்படும் தற்காலிக மின்னமைப்புகளையும், மக்கள் அதிக எண்ணிக்கையில் கூடக்கூடிய பிற பொது நிகழ்ச்சிகளுக்கான மின்னமைப்புகளையும் ஆய்வு செய்து சான்றளிக்கும் பொறுப்பு மின் ஆய்வுத் துறைக்கு உள்ளது. தற்காலிக மின்னமைப்புகளின் பாதுகாப்பை உறுதி செய்வதையும் மற்றும் சாத்தியமான மின் விபத்துகளைத் தடுப்பதையும் மின் ஆய்வுத் துறை நோக்கமாகக் கொண்டுள்ளது.

2023 ஏப்ரல் 12]

3.3.3 திரையரங்குகள்

திரையரங்குகளுக்கு செல்வோரின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டம், 1955 மற்றும் விதிகள், 1957 ஆகியவை திரையரங்குகளுக்குக் குறிப்பிட்ட பாதுகாப்பு ஒழுங்குமுறைகளை நிர்ணயித்துள்ளன. இந்த விதிகளின்கீழ் பின்வரும் கடமைகளை நிறைவேற்றுவது மின் ஆய்வுத் துறையின் பொறுப்பாகும்:

அ) திரையரங்க மின்னமைப்புகளுக்கு மின்வரைபட அனுமதி வழங்குதல்.

ஆ) திரையரங்குகளை ஆய்வு செய்து மின்சான்றிதழ் வழங்குதல்.

இ) திரையரங்குகளில் வருடாந்திர ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.

இப்பணிகள்மூலம், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சினிமா திரையரங்குகளும் பாதுகாப்பு விதிமுறைகளுக்குட்பட்டு இருப்பதையும், திரையரங்கப் பார்வையாளர்களுக்குப் பாதுகாப்பாகவும், நம்பகமானதாகவும் இருப்பதை உறுதி செய்வதையும் மின் ஆய்வுத் துறை நோக்கமாகக் கொண்டுள்ளது.

3.3.4 மின்தூக்கிகள் மற்றும் இயங்கும் படிக்கட்டுகள்

மின்தூக்கிகளைப் பாதுகாப்பாக நிறுவுவதையும், பராமரிப்பதையும் மற்றும் இயக்குவதையும் உறுதி செய்யும்பொருட்டு, 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்தூக்கிகள் சட்டம், தமிழ்நாடு அரசால் இயற்றப்பட்டது. 2017 ஆம் ஆண்டில், இயங்கும் படிக்கட்டுகளையும் உள்ளடக்கும் வகையில் இந்த சட்டம் திருத்தப்பட்டது. தமிழ்நாடு மின்தூக்கிகள் மற்றும் இயங்கும் படிக்கட்டுகள் சட்டம், 1997 மற்றும் தொடர்புடைய விதிகளின்கீழ், மின்தூக்கிகள் மற்றும் இயங்கும் படிக்கட்டுகள் பயன்படுத்துவோரைப் பாதுகாக்க மின் ஆய்வுத் துறை பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்கிறது:

i. மின்தூக்கிகள் மற்றும் இயங்கும் படிக்கட்டுகள் நிறுவுவதற்கான அனுமதிகளை வழங்குதல்.

ii. மின்தூக்கிகள் மற்றும் இயங்கும் படிக்கட்டுகள் இயக்குவதற்கான உரிமங்களை ஆய்வு செய்து வழங்குதல்.

iii. மின்தூக்கிகள் மற்றும் இயங்கும் படிக்கட்டுகளின் பாதுகாப்பான செயல்பாட்டை உறுதி செய்வதற்காகக்

காலமுறையில் ஆய்வுகளை மேற்கொள்ளுதல் மற்றும் உரிமங்களைப் புதுப்பித்தல்.

iv. மின்தூக்கிகள் மற்றும் இயங்கும் படிக்கட்டுகளை அமைத்தல், பராமரித்தல், ஆய்வு மற்றும் சோதனைக்குப் பொறுப்பான நிறுவனங்களுக்கு அங்கீகாரங்களை வழங்குதல்.

இந்த நடவடிக்கைகளின்மூலம், மின்தூக்கிகள் மற்றும் இயங்கும் படிக்கட்டுகள் பயன்படுத்துவோரின் பாதுகாப்பை மேம்படுத்துவதையும், அனைத்து செயல்பாடுகளும் தமிழ்நாடு மின்தூக்கிகள் மற்றும் இயங்கும் படிக்கட்டுகள் சட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்ட விதிகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதையும் மின் ஆய்வுத் துறை நோக்கமாகக் கொண்டுள்ளது.

3.3.5 மின்சார வரி

2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வு அல்லது விற்பனை மீதான வரிச் சட்டம் (2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் எண் 12) தமிழ்நாட்டில் மின்சார நுகர்வு அல்லது விற்பனை மீதான வரி விதிப்பு தொடர்பான சட்டங்களை ஒருங்கிணைக்கும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இச்சட்டம் தமிழ்நாடு மின் தீர்வை சட்டம், 1939 மற்றும் தமிழ்நாடு மின்சார (நுகர்வு மீதான வரி விதிப்பு) சட்டம், 1962 ஆகியவற்றை நீக்கம் செய்தது. மேலும், இச்சட்டம் 2003 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 16 ஆம் நாள் முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

இச்சட்டத்தின்கீழ், வரம்பிற்குட்பட்ட மின் உற்பத்தியாளர்கள் மற்றும் ஐ.இ.எக்ஸ். (IEX) கொள்முதல்மூலம் நுகரப்படும் மின்சாரத்திற்கான வரியினை வசூலிக்கும் பொறுப்பு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், அனைத்து வரம்பிற்குட்பட்ட மின் உற்பத்தியாளர்களும், மின் நுகர்வோர்களும் சட்டத்தில் வரையறுக்கப்பட்ட விதிமுறைகளுக்கு இணங்குவதை உறுதி செய்யும் அதே வேளையில், வரி விதிப்பு செயல்முறை ஒழுங்குபடுத்தப்பட்டு எளிமைப்படுத்தப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 12]

3.3.5.அ. மின்சார விற்பனை அல்லது நுகர்வுக்கான கீழ்க்கண்ட மின் வரி விகிதங்களை அரசு அறிவித்துள்ளது:

வ. எண்	வகையினம்	வரி வீதம்	மின் வரி வசூலிக்கும் துறை/நிறுவனம்
1	*உரிமதாரர் (TANGEDCO) நுகர்வோருக்கு விற்பனை செய்யும் மின்சாரம்*	*விற்பனை செய்யப்படும் மின்சாரத்திற்கான நுகர்வுக் கட்டணத்தில் 5 சதவிகிதம்*	*தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்*
2	*வரம்பிற்குட்பட்ட மின் உற்பத்தி நிலையங்கள் (CPP) மூலம் நுகர்வோருக்கு விற்கப்படும் மின்சாரம்*	*விற்பனை செய்யப்படும் மின்சாரத்திற்கான நுகர்வுக் கட்டணத்தில் 5 சதவிகிதம்*	*மின் ஆய்வுத் துறை*
3	*மின்னாக்கிகள் உள்பட வரம்பிற்குட்பட்ட மின் உற்பத்தி நிலையங்கள் (CPP)மூலம் சொந்த உபயோகம் மற்றும் IEX கொள்முதல்மூலம் நுகரப்படும் மின்சாரம்*	*நுகரப்படும் ஒவ்வொரு அலகு மின்சாரத்திற்கும் 10 பைசா வீதம்*	*தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்*

3.3.5. ஆ. விதிவிலக்கு வகைகள்

பின்வரும் பிரிவினருக்கு மின்சார வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது:

1) *அரசு, உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் இரயில்வேக்கு விற்கப்படும் மின்சாரம்.*

2) *விவசாய மற்றும் குடிசை மின் இணைப்புகளுக்கான மின்சாரம்.*

3) *வீட்டு உபயோகிப்பாளர்களுக்கு (Domestic Consumers) விற்பனை செய்யப்படும் மின்சாரம்.*

4) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு விற்கப்படும் மின்சாரம்.

5) சிறப்பு பொருளாதார மண்டல கொள்கை (SEZ), தொழில் கொள்கை, சூரிய எரிசக்தி கொள்கை, தரவு மையக் கொள்கை, மின்சார வாகன கொள்கை போன்ற பல்வேறு கொள்கைகளின்கீழ் அமைக்கப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்கப்படும் மின்சாரம்.

3.3.6 அரசு மின்னியல் தர நிர்ணய ஆய்வுக்கூடம்

அரசு மின்னியல் தர நிர்ணய ஆய்வுக்கூடமானது, மின்சார அளவிகள் மற்றும் கருவிகளின் அளவுத் திருத்தம் மற்றும் பரிசோதனைகளை மேற்கொள்ளும் மதிப்புமிக்க ஆய்வகமாகும். இது அரசு தலைமை மின் ஆய்வாளர் அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வுக்கூடமானது மின் நுகர்வோர், மின் வழங்குவோர், மின் உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் மின் ஒப்பந்ததாரர்கள் உட்பட பரந்த அளவிலான வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்கிறது.

அரசு மின்னியல் தர நிர்ணய ஆய்வுக்கூடமானது தொடர்ந்து உலகத் தரம் வாய்ந்த அளவுத் திருத்த சேவைகளை வழங்குவதை உறுதி செய்வதற்கும், முடிவுகள் மற்றும் அளவீட்டுத் தரவுகளை பரஸ்பரம் ஏற்றுக்கொள்வதற்கு வசதியாகவும், சோதனை மற்றும் அளவுத் திருத்த ஆய்வகங்களுக்கான தேசிய அங்கீகார வாரியத்திடமிருந்து (NABL) அங்கீகாரம் பெறவும், துல்லியமான அளவுத் திருத்த உபகரணங்களை வாங்கவும் அரசு ரூ.1.5 கோடியை ஒதுக்கியுள்ளது. பெரும்பாலான உபகரணங்கள் ஏற்கெனவே கொள்முதல் செய்யப்பட்டு, நிறுவப்பட்டு, 2020-2021 ஆம் ஆண்டில் செயல்பாட்டுக்கு வந்துள்ளன. மேலும், 2021-2022 ஆம் ஆண்டில் செலவழிக்கப்படாத ரூ.10 இலட்சமும், 2022-2023 ஆம் ஆண்டில் ரூ.5.46 இலட்சமும் NABL தரச் சான்று பெற அரசு மீண்டும் நிதி ஒதுக்கியுள்ளது.

மேற்படி ஐ.எஸ்.ஓ.-17025 (ISO- சர்வதேச தரச் சான்றிதழ்) தரச் சான்று பெறுவதற்கான தணிக்கை 17-12-2022 மற்றும் 18-12-2022 ஆகிய நாட்களில் NABL நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு, NABL அங்கீகாரச் சான்றிதழ் பெறப்பட்டுள்ளது. (சான்றிதழ் எண் CC-3520, 31.1.2023 முதல் 30.1.2025 வரை செல்லுபடியாகும்)

2023 ஏப்ரல் 12]

3.3.7 மின் உரிமம் வழங்கும் வாரியம்

2010 ஆம் ஆண்டு, மத்திய மின்சார ஆணைய (பாதுகாப்பு மற்றும் மின்சார வழங்கல் தொடர்பான நடவடிக்கைகள்) ஒழுங்குமுறைகள், விதி எண் 29-ன்கீழ் அனைத்து மின் நிறுவல் பணிகளையும் உரிமம் பெற்ற மின் ஒப்பந்ததாரர்கள் மற்றும் தகுதி சான்றிதழ் பெற்ற மின் மேற்பார்வையாளர்களால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கட்டாயப்படுத்துகிறது. தமிழ்நாட்டில், மின் ஒப்பந்ததாரர்களுக்கு உரிமம் வழங்கவும், மின் கம்பியாளர் மற்றும் மேற்பார்வையாளர்களுக்குத் தகுதி சான்றிதழ் வழங்கவும், மின் உரிமம் வழங்கும் வாரியம் நியமிக்கப்பட்டுள்ளது. இது அனைத்து மின் பணிகளையும் உரிமம் பெற்ற ஒப்பந்ததாரர்கள் மற்றும் சான்றளிக்கப்பட்ட பணியாளர்கள் மேற்கொள்வதை உறுதி செய்கிறது.

மின்னழுத்தத் திறனின் அடிப்படையில், ஈ.எஸ்.ஏ(ESA), ஈ.ஏ(EA), ஈ.எஸ்.பி (ESB) மற்றும் ஈ.பி (EB) என நான்கு தரங்களாக வகைப்படுத்தப்பட்ட மின் ஒப்பந்ததாரர் உரிமங்களைத் தமிழ்நாடு மின் உரிமம் வழங்கும் வாரியம் வழங்குகிறது.

3.3.8. மார்ச் 2023 வரை வழங்கப்பட்ட மின் ஒப்பந்ததாரர்களின் உரிமங்கள் மற்றும் தகுதிச் சான்றிதழ்களின் எண்ணிக்கைகள்

வ. எண்	உரிமம்/தகுதிச் சான்றிதழ்	எண்கள்
1.	*மின் ஒப்பந்ததாரர் சூப்பர் "ஏ" தர உரிமம் (ESA)*	*472*
2.	*மின் ஒப்பந்ததாரர் "ஏ" தர உரிமம் (EA)*	*2562*
3.	*மின் ஒப்பந்ததாரர் சூப்பர் "பி" தர உரிமம் (ESB)*	*2709*
4.	*மின் ஒப்பந்ததாரர் "பி" தர உரிமம் (EB)*	*22198*
5.	*மேற்பார்வையாளர் தகுதி சான்றிதழ் (SCC)*	*60573*
6.	*மின்கம்பியாளர் தகுதி சான்றிதழ் (WCC)*	*150975*

வ. எண்	உரிமம்/தகுதிச் சான்றிதழ்	எண்கள்
7.	மின்கம்பி உதவியாளர் தகுதி சான்றிதழ் (WHCC)	28252
8.	மின் உற்பத்தி நிலைய ஆபரேட்டர் உரிமம் (PGO&MCC)	377

3.4 செயலாக்கம்


3.4.1. 2021-22 மற்றும் 2022-23 நிதியாண்டுகளில் இத்துறையின் செயல்திறன் சுருக்கம் பின்வருமாறு

வ. எண்	தமிழ்நாடு மின் ஆய்வுத் துறை வழங்கும் சேவைகள்	2021-2022	2022-2023
1)	மின் தூக்கிகள்		
	(i) புதிய மின் தூக்கிகளுக்கான உரிமங்கள் வழங்குதல்	2,153	2,877
	(ii) புதிய இயங்கும் படிக்கட்டுகளுக்கான உரிமங்கள் வழங்குதல்	247	164
	(i) இயக்கத்திலுள்ள மின்தூக்கிகளுக்கான உரிமங்களைப் புதுப்பித்தல்	5,589	11,626
	(ii) இயக்கத்திலுள்ள இயங்கும் படிக்கட்டுகளுக்கான உரிமங்களைப் புதுப்பித்தல்	-	4
2)	ஒழுங்குமுறை விதி 43-ன்கீழ் மின் நிறுவல்களுக்கான அனுமதிகளை வழங்குதல்	2,025	2,760

வ. எண்	தமிழ்நாடு மின் ஆய்வுத் துறை வழங்கும் சேவைகள்	2021-2022	2022-2023
3)	ஒழுங்குமுறை விதி 30-ன்கீழ் அதி உயர்/ உயர் மின் அழுத்த மின்னமைப்புகளின் சட்டரீதியான காலமுறை ஆய்வுகள்	4,496	4,603
4)	புதிய/கூடுதல் மற்றும் மாறுதல் மின்னமைப்புகளுக்கான வரைபடங்களைக் கூர்ந்தாய்வு செய்தல்	1,522	2,142
5)	ஒழுங்குமுறை விதி 32-ன்கீழ் மின்னாக்கிகளுக்கான அனுமதிகளை வழங்குதல்	1,298	1,454
6)	ஒழுங்குமுறை விதி 36-ன்கீழ் அடுக்கு மாடிக் கட்டடங்களுக்கு அனுமதி வழங்குதல்	173	216
7)	சினிமா திரையரங்குகள்		
	(i) இயக்கத்திலுள்ள திரையரங்குகள்	856	902
	(ii) புதிய திரையரங்கு கட்டடங்களுக்கு மின் தகுதிச் சான்றிதழ்	32	66
	(iii) இயக்கத்திலுள்ள திரையரங்கக் கட்டடங்களுக்கு மின் தகுதிச் சான்றிதழைப் புதுப்பித்தல்	313	302
8)	மின் அளவிகளின் சோதனை மற்றும் அளவுத்திருத்தங்கள்	3,787	5,862

3.4.2 வருவாய்

I. மின் ஆய்வுத் துறை வசூலித்த வரி



II. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் வசூலித்த வரி

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் வசூலித்த வரி	வசூலிக்கப்பட்ட மொத்த தொகை (ரூபாய் கோடிகளில்)	அரசு கணக்கில் செலுத்தப்பட்ட தொகை (ரூபாய் கோடிகளில்)
2018-2019	*1279.29*	*522.82*
2019-2020	*1266.04*	*479.96*
2020-2021	*1102.09*	*400.00*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 12]


தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் வசூலித்த வரி	வசூலிக்கப்பட்ட மொத்த தொகை (ரூபாய் கோடிகளில்)	அரசு கணக்கில் செலுத்தப்பட்ட தொகை (ரூபாய் கோடிகளில்)
2021-2022	1387.73	400.00
2022-2023 (ஜனவரி 2023 வரை)	1704. 28	இல்லை

தமிழ்நாடு மின் நுகர்வு அல்லது விற்பனை மீதான வரிச் சட்டம், 2003-ல் பிரிவு 3(1)(பி)-ன்படி வரம்பிற்குட்பட்ட மின் உற்பத்தி நிலையங்களிடமிருந்து சொந்த பயன்பாட்டிற்கான மின் வரியை வசூலிக்கும் பொறுப்பை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திடம், அரசாணை (நிலை) எண் 121, எரிசக்தித் (பி1) துறை, நாள் 23.12.2010 மூலம் அரசு ஒப்படைத்துள்ளது.


இதனைத் தொடர்ந்து, அரசாணை (நிலை) எண் 55, எரிசக்தித் (டி2) துறை, நாள் 20.10.2021-ன்படி, இந்தியன் எனர்ஜி எக்ஸ்சேஞ்ச் (IEX) மற்றும் பவர் எக்ஸ்சேஞ்ச் இந்தியா லிமிடெட் (PXIL) ஆகியவற்றிடமிருந்து மின்கொள்முதல் செய்து, நுகரப்படும் மின்சாரத்திற்கான மின் வரியினை தமிழ்நாடு மின் நுகர்வு அல்லது விற்பனை மீதான வரிச் சட்டம், 2003-ன் பிரிவு 3 (1) (சி)-ன்கீழ் வசூலிக்க, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் கண்காணிப்புப் பொறியாளர் வட்டங்கள் தற்போது மேற்கண்ட இரண்டு வகைகளிலும் மின் வரி வசூலிக்கின்றன. மேற்படி மின் வரி வருவாய் ஈட்டுவது அரசு சார்பாக, அரசு தலைமை மின் ஆய்வாளரால் கண்காணிக்கப்படுகிறது.

3.4.3. 2022-2023 ஆம் ஆண்டில் நிகழ்ந்த மின்விபத்துகளின் பகுப்பாய்வு



மொத்த விபத்துகளின் எண்ணிக்கை - 399



மொத்த விபத்துக்களின் எண்ணிக்கை - 399

2023 ஏப்ரல் 12]

3.5 மின் ஆளுமை

மின் ஆய்வுத் துறையின் வலைத்தளம், https://www.tnei.tn.gov.in *குடிமக்களுக்குத் தேவையான அனைத்து தகவல்களையும் பயனாளர்கள் பயன்படுத்துவதற்கு எளிதான, உள்ளடக்க மேலாண்மை அமைப்பைக் கொண்டுள்ளது. இந்த அமைப்பானது பயனாளர்களுக்கு புதுப்பிக்கப்பட்ட தகவல்களை அவ்வப்போது விரைவாகத் தெரிவிக்க அனுமதிக்கிறது. மேலும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கு இணங்க மின் ஆய்வுத் துறையின் வலைத்தளம் தானாக முன்வந்து தகவல்களை வழங்குகிறது.*

*மின் ஆய்வுத் துறை அலுவலகங்களில் இணைய வசதி மற்றும் துறை சார்ந்த அனைத்து சேவைகளையும் இணையதளத்தில் வழங்குவதற்குத் தேவையான தகவல் மற்றும் தொலைத் தொடர்பு தொழில்நுட்ப உள்கட்டமைப்பு வசதிகள் உள்ளன. நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மையை ஊக்குவிப்பதற்காக, "ஆன்லைன் மின்தூக்கி மற்றும் இயங்கும் படிக்கட்டுகள் உரிம மேலாண்மை (*Online Lifts and Escalators Licensing Management System*)" முறையை இத்துறை செயல்படுத்தி வருகிறது. மின்தூக்கி மற்றும் இயங்கும் படிக்கட்டுகளுக்கான புதிய அல்லது உரிமங்களைப் புதுப்பிக்கக் கோரும் விண்ணப்பதாரர்கள் இணையதளத்தில் விண்ணப்பிக்கவும், அவர்களின் விண்ணப்ப நிலையைக் கண்காணிக்கவும், தடையற்ற செயல்முறையில் இணையதளத்தில் தங்கள் உரிமத்தைப் பெறவும் இந்த அமைப்பு உதவுகிறது, இதன்மூலம் விண்ணப்பங்களை நிரப்பி அலுவலகத்திற்கு அனுப்பி காகிதத்தில் உரிமங்கள் பெறும் பழைய நடைமுறை நீக்கப்பட்டு இணையதளத்தில் (*Online*) அவர்களின் இல்லத்திலேயே சேவைகளைப் பெற முடியும்.*

3.6 வணிகம் புரிவதை எளிதாக்குதல், வாழ்க்கை முறையினை எளிதாக்குதல் மற்றும் வணிக சீர்திருத்தச் செயல் திட்டம்

*முதலீட்டாளர்களுக்கு உகந்த மற்றும் சிக்கல்கள் இல்லாத சூழலை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட சீர்திருத்தங்களின் ஒரு பகுதியாக, (*i*) மின் வரைபடங்களுக்கு ஒப்புதல் அளித்தல், (*ii*) பாதுகாப்பு சான்றிதழ்கள் வழங்குதல், (*iii*) மின்தூக்கி நிறுவ அனுமதி, (*iv*) புதிய மின்தூக்கிகளுக்கு உரிமம் வழங்குதல், (*v*) இயக்கத்திலுள்ள மின்தூக்கிகளுக்கான உரிமங்களைப் புதுப்பித்தல் மற்றும் (*vi*) இயக்கத்திலுள்ள மின்தூக்கிகளின் கூடுதல் மற்றும் மாறுதல்*

செய்ய அனுமதி உள்ளிட்ட மின்சார பாதுகாப்பு தொடர்பான ஆறு சேவைகளை, தொழில் வழிகாட்டி நிறுவன ஒற்றை சாளர இணைய முகப்பின்மூலம் இத்துறை அறிமுகப்படுத்தியுள்ளது.

3.7 எதிர்காலத் திட்ட நடவடிக்கைகள்

பொதுமக்களின் மேம்பாட்டிற்காக அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட முற்போக்கு சிந்தனை மற்றும் சீர்திருத்த நடவடிக்கைகளுடன் அதன் செயல்பாடுகள் மற்றும் பொறுப்புகளை ஒருங்கிணைக்கும் அதேவேளையில், தொழில்நுட்ப முன்னேற்றங்களை ஏற்றுக்கொள்வதற்கும், சரியான நேரத்தில் சேவைகளை வழங்குவதற்கும் மின் ஆய்வுத் துறை உறுதிபூண்டுள்ளது.

4. தமிழ்நாடு மின் விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்


தமிழ்நாடு மின் விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் தமிழக அரசின் முழு மூலதனத்துடன் 1991 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. மேலும், இந்நிறுவனம் வங்கிசாரா நிதி நிறுவனமாக (வைப்பீடுகளை ஏற்றுக்கொள்வதற்கு), இந்திய ரிசர்வ் வங்கியில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.3,767 கோடியாகும். இந்நிறுவனம், பல உள்கட்டமைப்புத் திட்டங்களுக்குத் தேவையான நிதியை பொதுமக்களிடமிருந்து வைப்பீடுகளாகப் பெற்று தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு வழங்கி வருகிறது. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தற்போதைய கடன் நிலுவைத் தொகை ரூ.45,859.62 கோடியாக உள்ளது.

நிதி செயலாக்கம்

தமிழ்நாடு மின் விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் வலுவான நிதி நிலைமையாலும் மற்றும் தொழில் முறை மேலாண்மையாலும், தொடங்கப்பட்ட நாள் முதல் தொடர்ந்து இலாபம் ஈட்டி வருகிறது. 2022-2023 ஆம் நிதியாண்டின் மொத்த வருவாய் தற்காலிகமாக ரூ.4,800.18 கோடியாகும். இந்த நிறுவனம், 2022-2023 ஆம் ஆண்டில் தற்காலிகமாக நிகர இலாபம் ரூ.761.71 கோடி ஈட்டியுள்ளது. இந்திய ரிசர்வ் வங்கியின் வங்கிசாரா நிதி நிறுவனத்திற்கான வழிகாட்டுதலின்படி மூலதன

2023 ஏப்ரல் 12]

போதுமான விகிதத்தை பராமரிப்பதற்காக (CRAR), *2020-21 மற்றும் 2021-22 ஆம் ஆண்டிற்கான அரசுக்குச் செலுத்த வேண்டிய ஈவுத்தொகை வழங்கப்படவில்லை.*



தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு நிதியுதவி நேரிடுவது

தமிழ்நாடு மின் விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் தொடங்கிய நாள் முதல் திரட்டும் நிதியை, தமிழ்நாடு மின் உற்பத்திக் கழக உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு நீண்டகால மற்றும் குறுகியகாலக் கடனாக 31.03.2023 வரை ரூ.2,15,362.99 கோடி வழங்கியுள்ளது. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் நிகர கடன் நிலுவைத் தொகை 31.3.2023 வரை ரூ.45,859.62 கோடியாக உள்ளது.

[2023 ஏப்ரல் 12

நிலையான வைப்பீடுகள்

இந்த நிறுவனம், வைப்பீடுகளைப் பொதுமக்கள், அரசுத் துறை, அரசுத் துறை நிறுவனங்கள், இதர தனியார் நிறுவனங்கள் மற்றும் அரசு நலத் திட்டங்களான, பள்ளி இடைநிற்றலைத் தவிர்க்க ஊக்குவிப்புத் தொகை, வருவாய் ஈட்டும் தாய் அல்லது தந்தை விபத்தில் இறந்துவிட்டாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ பாதிக்கப்படுகின்ற மாணவ, மாணவியருக்கு நிதியுதவி, முதலமைச்சர் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம், ஒரு கால பூஜை மற்றும் கோவிட் 19 திட்டங்களின்மூலம் திரட்டி வருகிறது. தமிழ்நாடு மின் விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் அளிக்கும் வட்டி விகிதம் பொதுத் துறை வங்கிகள் அளிக்கும் வட்டி விகிதத்திலிருந்து 200 அடிப்படைப் புள்ளிகள் அதிகமாகும். பேரிடர் காலத்திலும், இந்நிறுவனத்தின் மையப்படுத்தப்பட்ட கொள்கைகளாலும் மற்றும் கவர்ச்சிகரமான வட்டி விகிதத்தாலும் தொடர் ஏறுமுகமாக வைப்பீடுகளை 2022-23 நிதியாண்டில் பெற்றுள்ளது. தமிழ்நாடு மின் விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் செலுத்தப்படும் வைப்பீடுகளுக்கு கவர்ச்சிகரமான வட்டி விகிதமாக ஓராண்டிற்கு 6.75%, 2 ஆண்டுகளுக்கு 7%, 3 மற்றும் 4 ஆண்டுகளுக்கு 7.50% மற்றும் 5 ஆண்டுகளுக்கு 7.75% வரை வழங்கப்படுகிறது. இந்நிறுவனம் 58 வயது மற்றும் அதற்கு மேல் உள்ள மூத்த குடிமக்களுக்கு 12 மற்றும் 24 மாதங்களுக்கு செய்யும் வைப்பீடுகளுக்கு 0.25%, 36, 48 மற்றும் 60 மாதங்களுக்கு செய்யும் வைப்பீடுகளுக்கு 0.50%, கூடுதல் வட்டியாக வழங்குகிறது. 2022-23 ஆம் ஆண்டில், இந்நிறுவனம், ரூ.38,368.35 கோடியை வைப்பீடுகளாகத் திரட்டியுள்ளது.

நிறுவன சமூகப் பொறுப்பு

நிறுவனங்கள் சட்டம் 2013, பிரிவு 135-ல் படிக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் (கணக்கு) விதிகள் 2014, விதி எண் 9-ன்படியும், நிறுவன சமூகப் பொறுப்பு கொள்கைபடியும், ஒவ்வோர் ஆண்டும்

2023 ஏப்ரல் 12]

குறைந்தபட்சம் சராசரி மூன்றாண்டுகளுக்கான நிகர இலாபத்தில் 2% தொகை சமூகப் பொறுப்புகளுக்கு செலவிடப்பட வேண்டும். 2022-23 நிதியாண்டில், இந்நிறுவனம் ரூ.14.43 கோடியை சுகாதாரப் பணிகளுக்காக அரசு பள்ளிகளுக்கும், சுகாதார மையத்திற்கும் செலவிட்டுள்ளது.

மென்பொருள்நிலை உயர்த்துதல்

தமிழ்நாடு மின் விசை நிதி நிறுவனம், இந்திய ரிசர்வ் வங்கி பின்பற்றுகின்ற தொழில்நுட்பக் கொள்கையினை பின்பற்றி, 2020-21 ஆம் ஆண்டு முதல் மேம்படுத்தப்பட்ட பண பரிவர்த்தனை வலைதளத்தை உருவாக்கியுள்ளது. அதன்மூலம் 24 மணி நேரமும், வாரத்தின் ஏழு நாட்களிலும் பரிவர்த்தனையை மேம்படுத்தப்பட்ட வலைதளம் மற்றும் கைபேசி செயலி மூலமாக வைப்பீட்டாளர்களுக்குச் சேவை அளித்து வருகிறது. இந்நிறுவனம், வலுவான தகவல் தொழில்நுட்பத்திற்கு அடித்தளமிட்டு வருகிறது.

மேலும், தமிழ்நாடு மின் விசை நிதி நிறுவனம் புதிய தொழில்நுட்பச் சாதனமான குறுந்தகவல், மின் அஞ்சல், அரட்டைபோட், புலனம் மற்றும் வாடிக்கையாளர் சேவை மூலமாக நிகழ்நிலை வழியாக விண்ணப்பம் சமர்ப்பித்தல், வாடிக்கையாளர்களின் விவரங்களை ஏற்றுதல், வாரிசுதாரர்களை நியமித்தல், தொடர்பு தகவல்கள் மற்றும் புதுப்பித்தல் முதலியன செயல்படுத்தப்பட்டு, வாடிக்கையாளர்களுக்கு மேம்பட்ட சேவைகளை செய்ய வழிவகை செய்து வருகிறது.

முன்னோக்கிய பாதை

தமிழ்நாடு மின் விசை நிதி நிறுவனம் இதர அரசு துறை நிறுவனங்களுக்குக் கடன் ஒருங்கிணைப்பு அல்லது இணை கடன் வழங்க மற்றும் வர்த்தக வரவுகளுக்கு நிதியளிப்பது போன்ற சில்லரைக் கடன் வழங்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து வருகிறது. இந்த வகையான மாற்று வழி முதலீட்டினால் தமிழ்நாடு மின் விசை நிதி நிறுவனத்தின் கடன் மதிப்பீட்டு நிலையான குறியீட்டினை BBB (—) மேம்படுத்தவும், ஒற்றைக் கடன் வழங்கும் அபாயத்தைக் குறைத்து, அதிக இலாபகரமான வழிகளின் சாத்தியத்தை உயர்த்த உத்தேசித்து வருகிறது.

இணைப்பு III

(251 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 37-மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

முன்னுரை

மக்களின் சுகாதார மற்றும் சமூகப் பொருளாதார நலனை மேம்படுத்துவதில் அக்கறை கொண்ட மக்கள் நல அரசாக விளங்குவதாலும் மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களைக் கள்ளச்சாராயத்தின் பிடியிலிருந்து பாதுகாக்கவும், இவ்வரசானது மதுபானங்கள் தொடர்பாக ஒரு சீரிய கொள்கையினை மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின்மூலம் செயல்படுத்தி வருகிறது.

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை அலகானது, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகின்றது.

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரகம், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு ஆகிய மூன்று துறைகள் மற்றும் ஒரு பொதுத் துறை நிறுவனமான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் ஆகியவை மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை அலகின்கீழ் இயங்கி வருகின்றன.

2. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரகம்

2.1 தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம், 1937 (தமிழ்நாடு சட்டம் X/1937) மற்றும் இச்சட்டத்தின்கீழ் இயற்றப்பட்டுள்ள விதிகளைச் செயல்படுத்தும் அதிகாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையருக்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன சட்டம் மற்றும் விதிகள் பின்வரும் பரந்த குறிக்கோள்களின் அடிப்படையில் செயல்படுத்தப்படுகின்றன:-

2023 ஏப்ரல் 12]

- சிறந்த ஆயத்தீர்வை நிர்வாகத்தின்மூலம் அரசுக்கு அதிகபட்ச வருவாய் கிடைப்பதை உறுதி செய்தல்.
- மது அருந்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
- கள்ளச்சாராயம் காய்ச்சுதல் மற்றும் கள்ளச்சாராயம் விற்பனை மற்றும் மாநில எல்லை வழியாகப் போலி மற்றும் ஆயத்தீர்வைக்கு உட்படாத மதுபானம் வருவதைத் தடுப்பது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

2.2 மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் 2 இணை ஆணையர்களும், அரசின் இணைச் செயலாளர் (நிதித் துறை) நிலையில் 1 நிதிக் கட்டுப்பாட்டு அலுவலரும் மற்றும் துணை ஆட்சியர் நிலையில் 5 உதவி ஆணையர்களும் மதுவிலக்குக் கொள்கையை நடைமுறைப்படுத்த மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையருக்கு உதவி வருகின்றனர். மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியருக்கு உதவியாக துணை/உதவி ஆணையர்கள் (கலால்) பணிபுரிந்து வருகின்றனர்.

2.3 1937 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் சாராவி/இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம்/பீர்/ஒயின் உற்பத்தியினைக் கட்டுப்படுத்தவும், அவற்றைத் தவறான நோக்கத்திற்காகப் பயன்படுத்துவதைத் தடுக்கவும், ஆயத்தீர்வை விதிக்கப்படவேண்டிய பொருட்களுக்கு ஆயத்தீர்வை விதிப்பதைக் கண்காணிக்கவும் இவற்றை உற்பத்தி செய்யும் நிறுவனங்களில் துணை ஆட்சியர் நிலையிலுள்ள அலுவலர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இரசாயனத் தொழிற்சாலைகள் மற்றும் பிணைமுறி கிடங்குகள் ஆகியவற்றில் மேற்காணும் பணிகள் முறையே ஆயத்தீர்வை மேற்பார்வை அலுவலர்களாகவும், பிணைமுறி அலுவலர்களாகவும் பணியமர்த்தப்பட்டுள்ள வருவாய்த் துறையைச் சேர்ந்த வட்டாட்சியர் மற்றும் துணை வட்டாட்சியர் நிலையிலுள்ள அலுவலர்களால் செயல்படுத்தப்படுகின்றன.

கருப்பஞ்சாற்றுக் கசண்டு (Molasses)

2.4 தமிழ்நாட்டில் சாராவி (Spirit) உற்பத்தி செய்ய மூலப்பொருளாகக் கருப்பஞ்சாற்றுக் கசண்டு (Molasses)

பயன்படுத்தப்படுகிறது. சர்க்கரை ஆலையில் சர்க்கரை தயாரிப்பின்போது துணைப் பொருளாகக் கருப்பஞ்சாற்றுக் கசண்டு உற்பத்தி செய்யப்படுகிறது. கருப்பஞ்சாற்றுக் கசண்டினை வைத்திருத்தல், பயன்படுத்துதல், விற்பனை செய்தல், கொண்டு செல்லுதல் மற்றும் இறக்குமதி அல்லது ஏற்றுமதி செய்வதற்கான உரிமங்களை வழங்குவதற்கு மாவட்ட ஆட்சியர்/மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோர் அதிகாரம் படைத்த அலுவலர்கள் ஆவர். கருப்பஞ்சாற்றுக் கசண்டை வைத்திருத்தல் மற்றும் பயன்படுத்துதல் மற்றும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஆகியவற்றிற்கான உரிமம் மற்றும் அனுமதி ஆணைகள் வழங்கிட மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரால், மாவட்ட ஆட்சியர்/மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கு முன் அனுமதி வழங்கப்படுகிறது. உரிமையாளர்கள் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரால் நிர்ணயம் செய்யும் அளவில் கருப்பஞ்சாற்றுக் கசண்டினை இருப்பு வைத்து பயன்படுத்த இயலும்.

வடிப்பாலைகள் மற்றும் சாராவி

2.5 தமிழ்நாட்டில் 17 வடிப்பாலைகள் உள்ளன. இவற்றில் 15 வடிப்பாலைகள் தனியார் துறையிலும், 2 வடிப்பாலைகள் கூட்டுறவுத் துறையிலும் உள்ளன. இவ்வடிப்பாலைகள் மதுபானம் உற்பத்தி செய்யப் பயன்படும் மூலப்பொருளான சாராவியை உற்பத்தி செய்கின்றன. சாராவி, இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான வகைகள் தயாரிப்பதற்கும் மற்றும் கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள், இதர ஆய்வுக் கூடங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களில் குறைந்த அளவிலும் பயன்படுத்தப்படுகிறது. வார்னிஷ் (Varnish) மற்றும் வண்ணப் பூச்சுகள் (Paint) உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில் இயல்பு மாற்றப்பட்ட சாராவி, கரைப்பானாக (Solvent) பயன்படுத்தப்படுகிறது.

சுத்திகரிக்கப்பட்ட சாராவி (Extra Neutral Alcohol)

2.6 சுத்திகரிக்கப்பட்ட சாராவி இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபான நிறுவனங்களில் பயன்படுத்தப்படுகிறது. இந்த மாநிலத்தில் மொத்தம் 17 வடிப்பாலைகள் இந்த சாராவியை உற்பத்தி செய்கின்றன. மேற்கண்ட வடிசாலைகளில் 2022-2023 வரையில் சாராவி தயாரிப்பு 12.17 கோடி லிட்டர் ஆகும். 2022-2023 ஆம்

2023 ஏப்ரல் 12]

ஆண்டின் நான்கு காலாண்டிற்கும் 5.28 கோடி லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட சாராவியை பிற மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்ய இந்திய தயாரிப்பு அயல் நாட்டு மதுபான நிறுவனங்களுக்குஅனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தானியங்களை அடிப்படையாகக் கொண்ட சாராவி (GENA)

2.7 இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான உற்பத்தி நிறுவனங்கள் உயர்தர மதுபான வகைகளைத் தயாரிப்பதற்கு தானியங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் சாராவியைப் பயன்படுத்துகின்றன. தமிழ்நாட்டில் தானியங்கள்மூலம் தயாரிக்கப்படும் சாராவி உற்பத்தி நிறுவனங்கள் இல்லை என்பதால் பிற மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படுகிறது. இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபான நிறுவனங்களுக்கு 2022-2023 ஆம் ஆண்டில் நான்கு காலாண்டிற்கும் 6.33 கோடி லிட்டர் மற்ற மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எத்தனால் (Ethanol)

2.8 எத்தனால் என்பது தாவர அடிப்படையிலான எரிபொருளாகும். எத்தனால் பசுமை எதிர்வினை வாயுக் கசிவை வெகுவாகக் குறைத்து, அதன்மூலம் சுற்றுச்சூழலை மாசு இடர்களிலிருந்து பாதுகாக்கிறது. எத்தனால் பெட்ரோலுடன் கலந்து பயன்படுத்தப்படும்போது கச்சா எண்ணெய் இறக்குமதியினைக் குறைத்து அந்நியச் செலாவணியைச் சேமிப்பதற்கு உதவுகிறது. தமிழ்நாட்டில், 12 வடிப்பாலைகளில் எத்தனால் உற்பத்தி செய்யப்படுகிறது. 2022-2023 ஆம் ஆண்டில் எத்தனால் உற்பத்தி 2.14 கோடி லிட்டர் ஆகும்.

இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம், பீர் மற்றும் ஒயின் உற்பத்தி நிறுவனங்கள்

2.9 தற்பொழுது தமிழ்நாட்டில் 11 இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபான உற்பத்தி நிறுவனங்கள், 7 பீர் தயாரிக்கும் நிறுவனங்கள் மற்றும் 1 ஒயின் தயாரிக்கும் நிறுவனம் ஆகியவை இயங்கி வருகின்றன.

[*2023 ஏப்ரல் 12*

பீர் ஏற்றுமதி

2.10 தமிழ்நாட்டிலிருந்து வெளி மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் மற்றும் வெளிநாடுகளுக்குப் பீரினை ஏற்றுமதி செய்ய அரசு அனுமதி அளித்துள்ளது. வெளி மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு ஏற்றுமதி செய்ய இணையம்மூலம் அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

அயல்நாட்டு மதுபானங்கள் இறக்குமதி

*2.11 அயல்நாட்டு மதுபான வகைகளை இறக்குமதி செய்வதற்கு, 1981 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுபானம் (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளின்படி உரிய சிறப்புக் கட்டணம் வசூலிக்கப்பட்ட பின்னர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரால் அனுமதி ஆணைகள் வழங்கப்படுகின்றன. அயல்நாட்டு மதுபானங்களின் இறக்குமதியை எளிதாக்கும் வகையில் 2.3.2012 முதல் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் முகமை நிறுவனமாக (*Nodal Agency*) நியமிக்கப்பட்டு, எப்.எல்.2 உரிமதாரர்கள் (மனமகிழ் மன்றங்கள்), எப்.எல்.3 உரிமதாரர்கள் (மூன்று நட்சத்திர மற்றும் அவற்றிற்குக் குறைவான நட்சத்திர தகுதி பெற்ற உணவு விடுதிகள்) எப்.எல்.3ஏ மற்றும் எப்.எல்.3ஏஏ உரிமதாரர்கள் அயல்நாட்டு மதுபான வகைகளை இறக்குமதி செய்ய ஏதுவாக சிறப்புக் கட்டணத் தொகையில் 3 விழுக்காடு சேவைக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.*

*2.12 எப்.எல்.3 உரிமதாரர்கள் (நான்கு நட்சத்திர மற்றும் அவற்றிற்கு அதிகமான நட்சத்திர தகுதி பெற்ற உணவு விடுதிகள்) பிற மாநிலங்களில் அமைந்துள்ள அயல்நாட்டு மதுபானங்களை விநியோகிப்பவர்களின் ஆயத்தீர்வைப் பிணைமுறி கிடங்குகளில் (*Excise Bonded Warehouses*) இருந்து இறக்குமதி செய்யப்படும் அயல்நாட்டு மதுபானங்களை நேரடியாகக் கொள்முதல் செய்யலாம்.*

2.13 அயல்நாட்டு மதுபானங்களை இறக்குமதி செய்ததன் மூலமாக 2022-2023 ஆம் ஆண்டில் சிறப்புக் கட்டணமாக அரசுக்கு ரூ.44.79 கோடியும் சேவைக் கட்டணமாக தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு ரூ.12.23 இலட்சமும் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 12]

நீரா

*2.14 தென்னை மரங்களின் பூம்பாளையிலிருந்து வரும் சாற்றிலிருந்து நொதிப்பு உதிர்ப்பு தொழில்நுட்பத்தினைப் (*Anti Fermentation Technology*) பயன்படுத்தி தயாரிக்கப்படும் ஆல்கஹால் இல்லாத ஊட்டச்சத்து பானமே நீரா ஆகும். தென்னை மரங்களிலிருந்து நீரா சேகரிப்பதற்கும், நீராவிலிருந்து இதர பொருட்கள் தயாரிப்பதற்கும் உரிமங்கள் வழங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.*

*2.15 2013 ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் (*Companies Act, *2013) பதிவு செய்யப்பட்ட தென்னை உற்பத்தியாளர் நிறுவனங்கள் அல்லது 1983 ஆம் ஆண்டின் தமிழ்நாடு கூட்டுறவு நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் நீராவை சேகரிக்கவும், விநியோகிக்கவும், விற்பனை செய்யவும் மற்றும் நீராவிலிருந்து பொருட்கள் தயாரிப்பதற்குமான உரிமங்கள் பெற தகுதி பெற்றவை ஆகும். உரிமம் கோரி விண்ணப்பிக்கும் நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் அந்தந்த மாவட்டத்திலுள்ள மாவட்ட ஆட்சியரிடம் விண்ணப்பிக்க வேண்டும் மற்றும் தென்னை வளர்ச்சி வாரியத்திலும் பதிவு செய்திருக்க வேண்டும்.*

பதநீர்

2.16 பனை மரம், ஈச்ச மரம் மற்றும் அவை போன்ற மரங்களின் பூம்பாளையிலிருந்து, நொதிக்க விடாமல் சேகரிக்கப்படும் பிரபலமான ஊட்டச்சத்து பானமே பதநீர் ஆகும். பதநீரை சேகரித்தல், இருப்பு வைத்தல், கொண்டு செல்லுதல், விற்பனை செய்தல், விநியோகம் செய்தல் மற்றும் பதநீரிலிருந்து பொருட்களைத் தயாரித்தல் ஆகியவற்றை முறைப்படுத்தும் பொருட்டு உரிமம் வழங்கப்படுகிறது.

மாநில ஆயவில்லைகள்

2.17 போலி மதுபான விற்பனையை ஒழிக்கவும், பிற மாநிலங்களிலிருந்து மதுபானக் கடத்தலைத் தடுக்கவும், மதுபான தயாரிப்பு நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படும் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்கள், பீர் மற்றும் ஒயின் பாட்டில்களுக்குச் செலுத்தப்படும் ஆயத்தீர்வையினை உறுதி செய்யவும், காகித ஆயவில்லைகளுக்குப் பதிலாக

[2023 ஏப்ரல் 12

நகலெடுக்க முடியாத, செயற்கை இழை ஒளிரும் ஆயவில்லைகள் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வில்லைகளின் பாதுகாப்பு அம்சங்கள் அவ்வப்போது தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. தற்போது, மாதமொன்றுக்கு சராசரியாகத் தேவைப்படும் ஆயவில்லைகள் 27.00 கோடி ஆகும். 2022-2023 ஆம் ஆண்டில் ஆயவில்லைகளின் விற்பனைமூலம் அரசு ஈட்டியுள்ள நிகர வருவாய் ரூ.24.42 கோடியாகும்.

மின் ஆளுமை நடவடிக்கைகள்

2.18 உரிமங்களைப் புதுப்பித்தல், ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கான அனுமதி ஆணைகள் வழங்குவதற்குரிய கால அவகாசத்தினை வெகுவாகக் குறைக்கும் நோக்கில், இணையதள செயலிகள் மூலமாக கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:-

அ) வெளி மாநிலங்கள் மற்றும் வெளி நாடுகளுக்கு பீர் ஏற்றுமதி செய்வதற்கான அனுமதி ஆணை வழங்குதல்.

ஆ) எப்.எல்.2, எப்.எல்.3, எப்.எல்.3ஏ மற்றும் எப்.எல்.3ஏஏ உரிமங்களைப் புதுப்பித்தல்.

இ) அயல்நாட்டு மதுபானங்களை எப்.எல்.2, எப்.எல்.3, எப்.எல்.3ஏ மற்றும் எப்.எல்.3ஏஏ உரிமதாரர்கள் இறக்குமதி செய்ய அனுமதி ஆணை வழங்குதல்.

2.19 மின் ஆளுமை நடவடிக்கைகளின்கீழ் 74 சேவைகளை இணையதள செயலிகள்மூலம் வழங்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதற்கான பணிகளைத் தேசிய தகவல் மையம்மூலம் (NIC) செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மனந்திருந்திய மதுவிலக்குக் குற்றவாளிகளுக்கான மறுவாழ்வு நிதி

2.20 முன்னாள் மதுவிலக்குக் குற்றவாளிகளின் சமூக மற்றும் பொருளாதார மறுவாழ்விற்கான நிதியுதவியாக அரசு ஒவ்வோர் ஆண்டும் ரூ.5.00 கோடியினை மானியமாக வழங்கி வருகிறது.

2.21 இந்தத் திட்டத்தின்கீழ் தகுதியான பயனாளிகளைத் தெரிவு செய்து அவர்களின் பொருளாதார மறுவாழ்விற்காக

2023 ஏப்ரல் 12]

மானியம் வழங்கும்பொருட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகவும், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், முதுநிலை மண்டல மேலாளர் (தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்) மற்றும் துணை ஆணையர் (கலால்)/உதவி ஆணையர் (கலால்) ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்டு மறுவாழ்வுக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

2.22 அடையாளம் கண்டறியப்பட்ட பயனாளிகள் ஆடுகள் மற்றும் கறவை மாடுகள் வளர்க்கவும், ஊதுவத்தி, கற்பூரம், உடனடி சாம்பிராணி, மெழுகுவர்த்தி, காகிதக்குவளை, சலவை சோப்பு, சலவைத் தூள் ஆகியவற்றைத் தயாரிக்கவும் மற்றும் சிறு வியாபாரங்களை மேற்கொண்டு நிரந்தர வருவாய் ஈட்டுவதற்காகவும் ஒவ்வொரு பயனாளிக்கும் அதிகபட்சமாக ரூ.30,000/- வரை மானியமாக வழங்கப்படுகிறது.

2.23 இத்திட்டத்தின்மூலம் 2022-2023 ஆம் ஆண்டில் ரூ.5.00 கோடி மானியமாக வழங்க ஆணையிடப்பட்டு, முதல் தவணையாக ரூ.2.50 கோடி ஒதுக்கப்பட்டு, அதில் ரூ.1.44 கோடி, 14 மாவட்டங்களைச் சார்ந்த 483 மதுவிலக்கு குற்றவாளிகளின் மறுவாழ்விற்காக வழங்கப்பட்டுள்ளது.

மது அருந்துதல் மற்றும் மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவதால் ஏற்படக்கூடிய தீமைகள் குறித்த விழிப்புணர்வு

2.24 மது அருந்துதல் மற்றும் மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவதால் ஏற்படக்கூடிய தீமைகள் மற்றும் போதைப் பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வுப் பிரச்சாரம் ஆகியவற்றை மாவட்டங்களில் மேற்கொள்ளும் வகையில் ரூ.4.00 கோடி நிதியானது அரசால் ஒப்பளிக்கப்பட்டு, அனைத்து மாவட்டங்களுக்கும், காவல் துறையின் அமலாக்கப் பிரிவிற்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

2.25 ஒவ்வொரு மாவட்டத்திலும், மது அருந்துதல் மற்றும் மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுதலுக்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்கு மாவட்ட ஆட்சியரைத் தலைவராகவும், கீழ்க்கண்ட அலுவலர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட மாவட்ட அளவிலான குழு அமைக்கப்பட்டுள்ளது:-

1.	மாவட்ட ஆட்சியர்	தலைவர்
2.	மண்டல காவல் கண்காணிப்பாளர் (அமலாக்கம்)	உறுப்பினர்
3.	மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்	உறுப்பினர்
4.	முதன்மை கல்வி அலுவலர்	உறுப்பினர்
5.	துணை ஆணையர் (கலால்)/உதவி ஆணையர் (கலால்)	உறுப்பினர்-அமைப்பாளர்
6.	மக்கள் தொடர்பு அலுவலர்	உறுப்பினர்

2.26 மது அருந்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும்பொருட்டு, அனைத்து மாவட்டங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் மாதந்தோறும் விழிப்புணர்வுப் பேரணிகள், முகாம்கள், கருத்தரங்குகள், தெரு நாடகங்கள், சிறு நகைச்சுவை நாடகங்கள், பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி, பொது இடங்களில் விளம்பரம் மற்றும் துண்டுப் பிரசுரம் விநியோகித்தல், மனித சங்கிலிப் பேரணி போன்றவைமூலம் மாணவ, மாணவிகள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகளின் துணை கொண்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் மது அருந்துவதால் பாதிக்கப்படக்கூடிய மக்களை உள்ளடக்கிய வாழ்விடங்களை இலக்காகக் கொண்டு மாவட்ட நிர்வாகத்தால் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், பள்ளி/கல்லூரி மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த, குழுக் கலந்துரையாடல், சுவரொட்டி தயாரித்தல் மற்றும் கட்டுரைப் போட்டிகள் ஆகியவை பள்ளி மற்றும் கல்லூரிகளில் நடத்தப்பட்டு வருகின்றன. இவைதவிர டி-சர்ட், பயணப் பை மற்றும் நாட்காட்டிகள் ஆகியவை விழிப்புணர்வை ஏற்படுத்த பொது மக்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன. கிராமப்புறங்களில் தெரு நாடகங்கள், பள்ளி மற்றும் கல்லூரிகளில் கருத்தரங்குகள் நடத்தப்படுவதுடன், மாவட்ட வாரியாக பெரிய அளவிலான விழிப்புணர்வுப் பேரணி நடத்தப்பட்டு, பேரணியின்போது, மது அருந்துவதற்கு எதிராக விழிப்புணர்வை ஏற்படுத்தும்பொருட்டு பொதுமக்களுக்கு துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்படுகின்றன. பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக

2023 ஏப்ரல் 12]

அனைத்து மாவட்டங்களிலும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. போக்குவரத்துக் கழகங்களுக்கு மதுவிலக்கு விழிப்புணர்வு குறித்த ஒட்டும் வில்லைகள் அளிக்கப்பட்டு, பேருந்துகளில் ஒட்டப்படுகின்றன. மதுவிலக்கு விழிப்புணர்வு தொடர்பாக கவிதை எழுதுதல், சிறுகதை எழுதுதல் மற்றும் குறும்படம் தயாரித்தல் போன்ற பிரிவுகளில் மாநிலம் தழுவிய போட்டிகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

2.27 மதுவிலக்கு விழிப்புணர்வு தொடர்பாக கவிதை எழுதுதல், சிறுகதை எழுதுதல் மற்றும் குறும்படம் தயாரித்தல் போன்ற பிரிவுகளில் போட்டிகள் நடத்தவும் மற்றும் மாநிலம் முழுவதும் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விழிப்புணர்வு ஏற்படுத்திடவும் மேற்காணும் ரூ.4.00 கோடியில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தலா ரூ.8.94 இலட்சமும், காவல் துறை கூடுதல் இயக்குநர், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, சென்னை அவர்களுக்கு ரூ.15.00 இலட்சமும், காவல் கண்காணிப்பாளர், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, சென்னை மற்றும் மதுரை மண்டலங்களுக்கு தலா ரூ.10.00 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

போதை மீட்பு மையங்கள்

2.28 மது மற்றும் போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களுக்கு ஒருங்கிணைந்த சிகிச்சை மற்றும் மறுவாழ்வு சேவைகள் வழங்கும் நோக்கத்துடன் போதை மீட்பு மையங்கள் அரசால் நிறுவப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் 20 போதை மீட்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

3. மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு

3.1 கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கொண்டு செல்லுதல், வைத்திருத்தல் மற்றும் விற்பனை செய்வதை ஒழிப்பதற்காகவும், போலி மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்கள் அண்டை மாநிலங்களிலிருந்து கடத்தி வரப்படுவதைத் தடுப்பதற்காகவும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது.

3.2 காவல் துறை கூடுதல் இயக்குநர் (அமலாக்கம்) அவர்கள் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவின் தலைவராக உள்ளார். அவருக்கு உதவியாக சென்னையில் ஒரு காவல் துறைத் தலைவர் மற்றும்

[*2023 ஏப்ரல் 12*

ஒரு காவல் கண்காணிப்பாளர் ஆகியோரின்கீழ் ஒரு மத்திய நுண்ணறிவுப் பிரிவு செயல்படுகிறது. மேலும், சென்னை மற்றும் மதுரை ஆகிய மண்டலங்களில் தலா ஒரு காவல் கண்காணிப்பாளரின்கீழ் (அமலாக்கம்) இப்பிரிவு இயங்கி வருகின்றது. சென்னையில் உள்ள மத்திய நுண்ணறிவுப் பிரிவில் காவல் கண்காணிப்பாளருக்கு உதவியாக 2 காவல் துணை கண்காணிப்பாளர்களும், 6 காவல் ஆய்வாளர்களும், 8 உதவி ஆய்வாளர்களும், ஒரு தலைமைக் காவலரும் மற்றும் ஒரு இரண்டாம் நிலைக் காவலரும் பணிபுரிந்து வருகின்றனர்.

3.3 மாநிலத்தில் 101 அமலாக்கப் பிரிவுகள் இயங்குகின்றன. காவல் ஆய்வாளர்களின் தலைமையில் இயங்கும் இந்தப் பிரிவுகள் அனைத்தும் 1937 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தை அமல்படுத்துவதற்காகக் காவல் நிலையங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் மாவட்டம்/ நகரங்களில் உள்ள துணைக் காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர்களால் மேற்பார்வை செய்யப்படுகின்றன. மதுவிலக்கை அமல்படுத்துவதில் முதன்மைப் பொறுப்புடைய காவல் ஆணையாளர்கள் மற்றும் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்களின் நிர்வாக மற்றும் செயல்பாட்டுக் கட்டுப்பாட்டின்கீழ் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுகள் மற்றும் அதனைச் சார்ந்த அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள் பணியாற்றுகின்றனர்.

3.4 அண்டை மாநிலங்களிலிருந்து போலி மதுபானம் மற்றும் எரிசாராயம் கடத்துவதைத் தடுக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்

(i) பொதுமக்களிடமிருந்து பெறப்படும் நுண்ணறிவுத் தகவல்கள் மற்றும் அலைபேசி அழைப்புத் தகவல்கள் (CDR Analysis) *ஆகியவற்றின்மூலம் எரிசாராயக் கடத்தல், போலி மதுபானக் கடத்தல் மற்றும் அண்டை மாநிலங்களிலிருந்து மதுபானக் கடத்தல் ஆகிய குற்றங்களில் ஈடுபடும் கொடுங்குற்றவாளிகளைக் கைது செய்து நடவடிக்கை எடுக்க சிறப்புக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன.*

(ii) திருவிழாக்கள் மற்றும் மது விற்பனை இல்லாத தினங்கள் ஆகியவற்றைப் பொறுத்து தேவைப்படும் காலங்களில்

2023 ஏப்ரல் 12]

தற்காலிக சோதனைச் சாவடிகள் உருவாக்கப்பட்டு அண்டை மாநிலங்களிலிருந்து தீர்வை செலுத்தப்படாத/போலி இந்தியத் தயாரிப்பு அயல் நாட்டு மதுபானம், எரிசாராயம் மற்றும் சாராய உரைகள் ஆகியவை தமிழ்நாட்டிற்குள் கள்ளத்தனமாகக் கடத்தப்படுவதைக் கண்காணித்துத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மேலும் நாகப்பட்டினம் (5), கன்னியாகுமரி (1), தேனி (1), திருவள்ளூர் (5), வேலூர் (5), கடலூர் (4), விழுப்புரம் (9), கிருஷ்ணகிரி (7), ஈரோடு (1), சேலம் (2), நீலகிரி (1), திருவாரூர் (1), திருப்பூர் (1) மற்றும் கோயம்புத்தூர் (1) ஆகிய மாவட்டங்களிலும் மற்றும் சென்னை மாநகரில் (1) ஆக மொத்தம் 45 நிரந்தர மதுவிலக்குச் சோதனைச் சாவடிகள் தமிழ்நாட்டில் உள்ளன. இவை தவிர நாகப்பட்டினம் (2), கடலூர் (1), விழுப்புரம் (1), கிருஷ்ணகிரி (1), திருவள்ளூர் (1) மற்றும் திருவாரூர் (1) ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 7 நடமாடும் சோதனைச் சாவடிகள் இயங்கி வருகின்றன.

(iii) கள்ளச் சாராயம் காய்ச்சுவதைத் தடுக்கவும், அண்டை மாநிலங்களிலிருந்து மதுபானம் தமிழ்நாட்டிற்குள் கடத்தி வரப்படுவதைக் கண்காணித்து தடுக்கவும் பாதிக்கப்பட்ட இடங்களில் அடிக்கடி சிறப்புச் சோதனைகள் நடத்தப்படுகின்றன.

(iv) தெளிந்த சாராவி என்பது செறிவு மிகுந்த ஆல்கஹால் ஆகும். இது போலி மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத மலிவு விலை மதுபானமாக விற்பதற்காகக் கடத்தப்படுகிறது. அநேக சமயங்களில் இத்தகைய சாராய விற்பனையால் சோக நிகழ்வுகளும் (இறப்புகள்) நிகழ்கின்றன. இந்நிகழ்வுகளைத் தடுப்பதற்கு மாநிலம் முழுவதும் மத்திய நுண்ணறிவுப் பிரிவு மற்றும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுகளில் ஆளிநர்களால் சேகரிக்கப்படும் நுண்ணறிவுத் தகவல்களின் அடிப்படையில் திடீர் வாகனத் தணிக்கைகள் முறைப்படி நடத்தப்பட்டு வருகின்றன.

இரகசிய தகவலாளர்களுக்கு வெகுமதிகள்

3.5 ஒவ்வோர் ஆண்டும் எரிசாராயம், போலி மதுபானம், பிற மாநிலங்களிலிருந்து மதுபானம் கடத்துதல் மற்றும் கடத்தலுக்குப் பயன்படுத்தப்படும் வாகனங்கள் குறித்து தகவல்கள் தரும் உளவாளிகளுக்குப் பண வெகுமதி வழங்க தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் சொந்த நிதியிலிருந்து ரூ.15 இலட்சம் தொகையினை வழங்க அரசு அனுமதி அளித்துள்ளது.

[2023 ஏப்ரல் 12

வெகுமதி

3.6 ஒவ்வோர் ஆண்டும் எரிசாராயம், போலி மதுபானம் மற்றும் பிற மாநிலங்களிலிருந்து கடத்தப்படும் மதுபான பாட்டில்கள் ஆகியவற்றைக் கைப்பற்றுவதற்குப் பெரும் பங்கு வகிக்கும் மதுவிலக்குப் பிரிவு மற்றும் மாவட்ட, நகர சட்டம் மற்றும் ஒழுங்கு காவல் ஆளிநர்களை ஊக்குவிக்கும் பொருட்டு ஊக்கத் தொகையாக ரூ.15 இலட்சம் வழங்க அரசால் அனுமதி அளிக்கப்பட்டு வருகிறது.

3.7 2022 ஆம் ஆண்டிற்கான சாதனைகள்

1. மாநிலத்தில் மதுவிலக்குத் தொடர்பான குற்றங்களை முழுமையாகத் தடுக்க அனைத்து விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. மத்திய நுண்ணறிவுப் பிரிவு மற்றும் அமலாக்கப் பிரிவு எடுத்த நடவடிக்கைகளின் விளைவாக சாராயம் காய்ச்சுதல், கடத்துதல் மற்றும் விற்பது தொடர்பான குற்றங்கள் பெருமளவில் தடுக்கப்பட்டுள்ளன.

2. மொத்தம் 1,40,649 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 11,828 பெண் குற்றவாளிகள் உட்பட 1,39,697 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

3. ரூ.1,77,99,900 மதிப்புள்ள 8,89,995 லிட்டர் சாராய ஊறல் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது.

4. ரூ.2,07,20,760 மதிப்புடைய 5,18,019 லிட்டர் கள்ளச் சாராயம் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது.

5. ரூ.37,21,700 மதிப்புடைய 37,217 லிட்டர் எரிசாராயம் கைப்பற்றப்பட்டது.

6. ரூ.6,05,260 மதிப்புடைய 30,263 லிட்டர் கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது.

7. ரூ.20,13,52,560 மதிப்பிலான 16,77,938 இந்திய தயாரிப்பு வெளிநாட்டு மதுபானப் பாட்டில்கள் கைப்பற்றப்பட்டன.

2023 ஏப்ரல் 12]

8. *வாகனத் தணிக்கையின்மூலம் மதுவிலக்குக் குற்றங்களில் தொடர்புடைய 8 லாரிகள், 7 வேன்கள், 231 கார்கள், 65 ஆட்டோக்கள் மற்றும் 2,646 இரு சக்கர வாகனங்கள் உட்பட மொத்தம் 2,957 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.*

9. *மதுவிலக்குக் குற்றங்களில் தொடர்புடைய 162 கொடுங்குற்றவாளிகள் தமிழ்நாடு சட்டம் 14/1982-ன்கீழ் (*B.L. Act*) கைது செய்யப்பட்டனர்.*

10. *மாநிலத்தில் கள்ளச் சாராய மரணங்கள் எதுவும் இக்காலத்தில் நடைபெறவில்லை.*

எல்லையோர சோதனைச் சாவடிகளில் மின்கலத்துடன்கூடிய சூரியசக்திமூலம் மின் உற்பத்தி செய்யும் கருவிகளைப் பொருத்துதல்

3.8 மாநிலம் முழுவதும் இயங்கி வரும் 45 மதுவிலக்கு சோதனைச் சாவடிகளில், 20 சோதனைச் சாவடிகள் அண்டை மாநிலங்களின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள மாவட்டங்களில் இயங்கி வருகின்றன. 2022-2023 ஆம் ஆண்டிற்கான இத்துறையின் மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்பட்டவாறு, மேற்கண்ட 20 சோதனைச் சாவடிகளில், மதுவிலக்குக் குற்றவாளிகளின் இரவு நேர சட்ட விரோத நடவடிக்கைகளைத் தடுக்கும்பொருட்டு மின்கலத்துடன்கூடிய சூரியசக்திமூலம் மின் உற்பத்தி செய்யும் கருவிகளைப் பொருத்த ரூ.0.13 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிட்டுள்ளது.

கள்ளச்சாராய இறப்புச் சம்பவங்களைத் தடுக்க மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள்

3.9 கடந்த 14 வருடங்களாக மதுவிலக்கு அமலாக்கத் துறையின் சிறப்பான நடவடிக்கையின் காரணமாக மாநிலத்தில் கள்ளச்சாராய இறப்பு ஏதும் நிகழவில்லை. கள்ளச்சாராயத்தில் முக்கியமாக 'மெத்தனால்' என்ற இரசாயனப் பொருளின் பயன்பாட்டால் உயிரிழப்புகள் நிகழ்ந்தன. ஆதலால் 'மெத்தனால்' எளிதாகக் கிடைப்பதைத் தடுக்கும் பொருட்டு அதனை 2002 ஆம் ஆண்டு முதல் 1937 ஆம் ஆண்டைய தமிழ்நாடு

[2023 ஏப்ரல் 12

மதுவிலக்குச் சட்டத்தின் வரம்புக்குள் அரசு கொண்டு வந்தது. மேலும், மெத்தனால் வைத்திருத்தல், பயன்படுத்துதல், எடுத்துச் செல்லுதல், வெளியிடங்களிலிருந்து கொண்டு வருதல், விற்பனை செய்தல் போன்றவற்றைக் கவனமாகக் கட்டுப்படுத்தும்பொருட்டு, 2002 ஆம் ஆண்டில் தமிழ்நாடு இயல்பு மாற்றப்பட்ட சாராவி மெத்தில் ஆல்கஹால் மற்றும் வார்னிஷ் (பிரெஞ்ச் பாலிஷ்) விதிகள், 1959 இல் உரிய திருத்தங்கள் செய்யப்பட்டன.

3.10 மெத்தனால் தயாரிக்கும் தொழிற்சாலைகள், அப்பொருளைப் பயன்படுத்த மற்றும் வைத்திருக்க உரிமம் பெற்ற பிரிவுகள் முதலியவற்றைச் சோதனையிட மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அவர்களால் அனுப்பப்படும் மாதாந்திர அறிக்கையானது அமலாக்கத் தலைமையிடத்தில் ஆய்வு செய்யப்படுகிறது.

மதுவிலக்கு உதவி மையம் - 10581

3.11 கட்டணமில்லா மதுவிலக்கு உதவி எண் 10581 ஒன்று ஏற்படுத்த அரசால் அனுமதிக்கப்பட்டு, அது மதுவிலக்குத் தலைமையக மத்திய விசாரணைப் பிரிவு கட்டுப்பாட்டு அறையில் நிறுவப்பட்டுள்ளது. கள்ளச்சாராயம் காய்ச்சுதல், எரிசாராயம் கடத்துதல், போலி மதுபானம், கள்ளச்சாராயம் விற்பனை ஆகிய மதுவிலக்குக் குற்றங்கள் தொடர்பாக பொதுமக்கள் மற்றும் தகவலாளர்கள் இலவசமாகத் தகவல் அளிப்பதற்கு ஏதுவாக இருப்பது இச்சேவை மையத்தின் நோக்கமாகும். இந்த உதவி எண் 24 மணி நேரமும் காவல் துறை கூடுதல் இயக்குநர் அமலாக்கம், அலுவலகக் கட்டுப்பாட்டு அறையில் இயங்கி வருகிறது. 1.1.2022 முதல் 31.12.2022 வரை 3275 தகவல்கள் பெறப்பட்டு, அதன்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

காந்தியடிகள் காவலர் பதக்கம்

3.12 மதுவிலக்கு அமலாக்கப் பிரிவில் கள்ளச்சாராய ஒழிப்பு பணியில் சிறப்பாகப் பணிபுரிந்த 2 ஆய்வாளர்கள், 2 உதவி ஆய்வாளர்கள் மற்றும் 1 தலைமைக் காவலர் ஆகியோருக்கு 2022 ஆம் ஆண்டுக்கான காந்தியடிகள் காவலர் பதக்கம் வழங்கப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 12]

4. போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு (குற்றப் புலனாய்வுத் துறை)

2022 ஆம் ஆண்டின் சாதனைகள்

4.1 சட்ட அமலாக்க நடவடிக்கைகள்

1) தமிழ்நாடு காவல் துறை எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக, மாநிலத்தில் கஞ்சா பயிரிடுவது, "பூஜ்ய சாகுபடி" நிலையில் உள்ளது.

2) 2022 ஆம் ஆண்டு 10,665 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 19 வெளிநாட்டினர் உட்பட 14,934 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். 28,383 கிலோ கஞ்சா, 63,848 மாத்திரைகள் மற்றும் 98 கிலோ இதர போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

3) மாநிலங்களுக்கிடையே போதைப் பொருட்கள் விற்பனையில் ஈடுபடும் ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, ஒடிசா மற்றும் தெலுங்கானா மாநிலங்களைச் சேர்ந்த தனிநபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

4) மாநிலம் முழுவதும் பரிந்துரையின் பேரில் விற்பனை செய்யப்பட வேண்டிய மருந்துகளை, உரிய ஆவணங்கள் இல்லாமல் சிறார்களுக்கு விற்பனை செய்யும் மருந்தகங்களுக்கு எதிராக மருந்து ஆய்வாளர்களுடன் இணைந்து கூட்டுச் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

5) 6.12.2021 முதல் 5.1.2022 வரை நடத்தப்பட்ட கஞ்சா மற்றும் குட்கா தடுப்பு நடவடிக்கை 1.0-ன்போது போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டத்தின்கீழ் மொத்தம் 1,272 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 1,221 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, 2,299 கிலோ கஞ்சா மற்றும் 23 கிலோ ஹெராயின் ஆகியவை கைப்பற்றப்பட்டன.

6) 28.3.2022 முதல் 27.4.2022 வரை நடத்தப்பட்ட கஞ்சா மற்றும் குட்கா தடுப்பு நடவடிக்கை 2.0-ன்போது போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப்

பொருட்கள் சட்டத்தின்கீழ் மொத்தம் 2,023 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 2,423 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, 3,562.5 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டது.

7) பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு அருகில் கஞ்சா விற்பனை செய்வதை நிறுத்தும்பொருட்டு, கல்வி நிறுவனங்களின் அருகில் உள்ள கடைகளில் சிறப்புச் சோதனைகள் நடத்தப்பட்டன. அவற்றுடன் கஞ்சா மற்றும் இதர போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்களின் தீமைகள் குறித்து இளைஞர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகப் பள்ளி மற்றும் கல்லூரிகளில் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டன.

8) விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், தமிழ்நாடு காவல் துறையினரால் போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் தடுப்புச் சட்டத்தின்கீழ் தீவிர தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் காரணமாக, கடந்த ஆண்டுகளைக் காட்டிலும் 2022 ஆம் ஆண்டு அதிக அளவிலான போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

9) போதைப் பொருள் குற்றவாளிகள்மீது பதிவு செய்யப்பட்ட 72 வழக்குகளில் குற்றவாளிகளின் சொத்துகள் தொடர்பாகப் புலனாய்வு மேற்கொள்ளப்பட்டு, ரூ.17.87 கோடி மதிப்புள்ள 151 அசையும் மற்றும் அசையா சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

10) போதைப் பொருள் வழக்குகளில் தொடர்புடைய குற்றவாளிகள் மற்றும் அவர்களின் உறவினர்கள்/ நண்பர்களுக்குச் சொந்தமான 4,994 வங்கிக் கணக்குகளில் இருந்த ரூ.2.00 கோடி தொகை குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 102-ன்கீழ் முடக்கப்பட்டன.

11) போதைப் பொருள் வழக்குகளில் ஈடுபட்ட முன்னாள் குற்றவாளிகளின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் பொருட்டு, 2019 ஆம் ஆண்டு முதல் வழக்குகளில் தொடர்புடைய 24,880 குற்றவாளிகள் பட்டியலிடப்பட்டு அவர்களுள் 12,000

குற்றவாளிகள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். 5,495 குற்றவாளிகளிடம் பிணைமுறைகள் பெறப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டு, அவர்களுள் பிணை நிபந்தனைகளை மீறிய 195 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

12) போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவில், காவல் துறைத் தலைவரின் விருப்புரிமை நிதியின்கீழ் வழங்கப்பட்ட 3 கணினிகள் மற்றும் மென்பொருளுடன்கூடிய சைபர் செல் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

4.2 விழிப்புணர்வு நடவடிக்கைகள்

1) இளைஞர்களிடையே குறிப்பாக மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அமலாக்கப் பணியகமானது 11.8.2022 அன்று மாநிலம் முழுவதும் மிகப்பெரும் அளவில் போதைப் பொருளுக்கு எதிரான உறுதிமொழியினை ஏற்பாடு செய்திருந்தது. மாநில அளவிலான இவ்விழா மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையின்கீழ் நடத்தப்பட்டது. இவ்விழாவில் தமிழ்நாடு முழுவதிலுமிருந்து பள்ளி, கல்லூரிகளைச் சேர்ந்த 74 இலட்சம் மாணவர்கள் ஒரே நாளில், ஒரே நேரத்தில் உறுதிமொழி ஏற்றனர். இம்முயற்சியானது உலக சாதனையாக, உலக சாதனை ஒன்றியத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

2) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செய்தி மற்றும் போதைப் பொருட்களின் தீய விளைவுகள் குறித்த 20 நிமிட விழிப்புணர்வு காணொளி ஒன்று தயாரிக்கப்பட்டு அதனை மாணவர்களுக்கு காண்பிக்கும்பொருட்டு அனைத்து பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்குப் பகிரப்பட்டுள்ளன.

3) மாணவர்கள் போதைக்கு அடிமையாவதைத் தடுக்கும் நோக்கத்துடன் 14,000 கல்வி நிறுவனங்களில் மாணவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட போதை எதிர்ப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

4) போதைப் பொருட்களுக்கு எதிரான இயக்கத்தில் தன்னார்வத் தொண்டு புரிவதற்கு நாட்டுநலப் பணித் திட்ட (NSS) தன்னார்வத் தொண்டு திட்டத்தின்மூலம் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

5) விழிப்புணர்வுப் பிரச்சாரத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியைக் கொண்டு சமூக ஊடகங்கள்மூலம் விழிப்புணர்வுப் பிரச்சாரம் தொடங்கப்பட்டுள்ளது.

6) போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறைக்கான ஒரு வலைதளம் மற்றும் போதைப் பொருட்களுக்கு எதிரான ஒரு விழிப்புணர்வு திரைப்படம் ஆகியவை தயாரிக்கப்பட்டு வருகின்றன.

7) 3 மோப்ப நாய்கள் வாங்கப்பட்டு, அவற்றிற்கு போதைப் பொருட்களைக் கண்டறியும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில், போதைப் பொருட்களுக்கு எதிரான நடவடிக்கையில் 10 மோப்ப நாய்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

அமலாக்கப் பணியக குற்றப் புலனாய்வு பிரிவு உருவாக்கப்படுதல்

4.3 போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்களுக்கு எதிராக பயனுள்ள நடவடிக்கை எடுக்கும் பொருட்டு மதுவிலக்கு அமலாக்கப் பிரிவானது போதைப் பொருள் தடுப்புப் பிரிவோடு இணைக்கப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார். அவ்வறிவிப்பின்படி தமிழ்நாடு அமலாக்கப் பணியகக் குற்றப் புலனாய்வுத் துறை உருவாக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4.4 புதிதாக உருவாக்கப்பட்ட அமலாக்கப் பணியகக் குற்றப் புலனாய்வுத் துறைக்கு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம், போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டம், சட்ட விரோத போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் கடத்தல் தடுப்புச் சட்டம் மற்றும் அறிவுசார் சொத்துரிமைச் சட்டம் ஆகியவற்றை அமல்படுத்தும் பொறுப்புள்ளது.

4.5 ஒவ்வொரு மாவட்டத்திலும், அமலாக்கப் பணியகப் பிரிவு அமைக்கப்படும். மதுவிலக்கு அமலாக்கப் பிரிவின்

2023 ஏப்ரல் 12]

தற்போதுள்ள அலகுகள் முறைப்படுத்தப்பட்டு, கூடுதல் பொறுப்பாக போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் பணி மாவட்டங்களில் உள்ள அமலாக்கப் பணியக அலகுகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

5. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்

5.1 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக்), 1956 ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் (Companies Act, 1956) மாநில பொதுத் துறை நிறுவனமாக 23.5.1983 அன்று நிறுவப்பட்டது.

தனிச் சிறப்புரிமை

5.2 1937 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் X/1937), பிரிவு 17-C (1-A) (a)-ன்படி இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபான வகைகள் மற்றும் அயல்நாட்டு மதுபான வகைகளைத் தமிழ்நாடு முழுவதும் மொத்த விற்பனை செய்யும் தனித்த சிறப்புரிமை இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு, 23.5.1983 முதல் மதுபான மொத்த விற்பனையை இந்நிறுவனம் செய்து வருகிறது. மேலும், 1937 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் X/1937), பிரிவு 17-C (1—B) (a)-ன்படி இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபான வகைகளை சில்லறை விற்பனை செய்யும் தனித்த சிறப்புரிமை இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு, 29.11.2003 முதல் மதுபான சில்லறை விற்பனையை இந்நிறுவனம் செய்து வருகிறது. இவை மட்டும் இல்லாமல், இறக்குமதி செய்யப்படும் அயல்நாட்டு மதுபானம், பீர் மற்றும் ஒயின் வகைகளையும் இந்நிறுவனம் சந்தைப்படுத்தி வருகிறது.

இயக்குநர் குழுமம்

5.3 இந்நிறுவனத்தின் செயல்பாடுகளை இயக்குநர் குழுமம் கண்காணிக்கவும், கட்டுப்படுத்தவும் செய்கிறது. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அவர்கள் இந்நிறுவனத்தின் தலைவர் ஆவார். அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித் துறை, அரசுச் செயலாளர், வணிக வரிகள் மற்றும் பதிவுத் துறை, ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு

மாநில வாணிபக் கழகம் ஆகியோர் இந்நிறுவனத்தின் இயக்குநர் குழுமத்தின் உறுப்பினர்கள் ஆவர்.

பங்கு மூலதனம்

5.4 இந்நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனமான ரூ.15.00 கோடி முழுவதும் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் அமைப்பு

5.5 மேலாண்மை இயக்குநருக்கு உதவியாக, பொது மேலாளர் (நிதி), மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் பொது மேலாளர் (மொத்த விற்பனை மற்றும் நிர்வாகம்), பொது மேலாளர் (சில்லறை விற்பனை), தொழிலாளர் இணை ஆணையர் நிலையில் பொது மேலாளர் (பணியாளர் நலன்), துணைப் பொது மேலாளர் (கொள்முதல் மற்றும் விற்பனை), நிறுவனச் செயலர், முதன்மைக் கணக்கு அலுவலர், சட்ட அலுவலர் மற்றும் பிற அலுவலர்கள் பணிபுரிகிறார்கள்.

பதிவு அலுவலகம் மற்றும் மண்டல அலுவலகங்கள்

5.6 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் பதிவு அலுவலகம் சென்னையில் அமைந்துள்ளது. இந்நிறுவனத்திற்கு சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய ஐந்து இடங்களில் மண்டல அலுவலகங்கள் உள்ளன. இந்த அலுவலகங்களை மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் உள்ள முதுநிலை மண்டல மேலாளர்கள் நிர்வகிக்கின்றனர்.

சிறப்பு பறக்கும் படைகள்

5.7 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் முறையாக செயல்படுகின்றனவா என்பதை ஆய்வு செய்யும் பொருட்டு சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 5 மண்டல அலுவலகங்களில் சிறப்பு பறக்கும் படைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த பறக்கும் படைகளுக்குத் துணை ஆட்சியர் நிலையில் உள்ள அலுவலர்கள் தலைமை வகிக்கின்றனர்.

2023 ஏப்ரல் 12]

மாவட்ட மேலாளர் அலுவலகங்கள், மதுபானக் கிடங்குகள், மதுபான சில்லறை விற்பனைக் கடைகள்

5.8 இந்நிறுவனத்திற்கு 31.3.2023 அன்றுள்ளவாறு, 38 மாவட்ட மேலாளர் அலுவலகங்கள், 43 இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபானக் கிடங்குகள், 5,329 மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் உள்ளன.

5.9 இந்நிறுவனம் 43 மதுபானக் கிடங்குகளில் மதுபானங்களை இருப்பு வைக்கிறது. இந்த 43 மதுபானக் கிடங்குகளில் 31 மதுபானக் கிடங்குகள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன.

மதுபான சில்லறை விற்பனைக் கடை பணியாளர்கள்

5.10 மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில் 31.3.2023 அன்றுள்ளவாறு, 6,648 கடை மேற்பார்வையாளர்களும், 14,794 விற்பனையாளர்களும் மற்றும் 2,876 உதவி விற்பனையாளர்களும் ஒப்பந்த/தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரிந்து வருகின்றனர்.

மதுபான சில்லறை விற்பனைக் கடை பணியாளர் நலத் திட்டங்கள்

5.11 மதுபான சில்லறை விற்பனைக் கடை பணியாளர்களுக்கு மாதத் தொகுப்பூதியம் மட்டுமல்லாமல் ஒவ்வோர் ஆண்டும் ஊக்கத்தொகை (போனஸ்) மற்றும் கருணைத் தொகையானது அரசின் உத்தரவிற்கேற்ப வழங்கப்பட்டு வருகிறது. இந்தப் பணியாளர்களின் நலனுக்காக பல்வேறு மருத்துவத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதுடன், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டம், தொழிலாளர் வைப்பு நிதியுடன் இணைந்த காப்புறுதித் திட்டம், பணிக்கொடை, குடும்ப சேமநல நிதித் திட்டம், ஆண்டு கூடுதல் ஊக்கத் தொகை ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மதுபான வகைகள் கொள்முதல்

5.12 இந்நிறுவனம், மாநிலத்தில் இயங்கி வருகின்ற 11 இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபான உற்பத்தி நிறுவனங்கள், 7 பீர் உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் 1 ஒயின் உற்பத்தி நிறுவனம் ஆகியவற்றிடமிருந்து இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம், பீர் மற்றும் ஒயின் வகைகளைக் கொள்முதல் செய்கிறது.

இறக்குமதி செய்யப்படும் அயல்நாட்டு மதுபான வகைகளைத் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் கடைகள்மூலம் விற்பனை செய்தல்

5.13 இந்நிறுவனம் 553 வகையான வெளிநாட்டு மதுபானம், பீர் மற்றும் ஒயின் வகைகளை எப்.எல்.11 உரிமம் பெற்ற 238 மதுபான சில்லறை விற்பனைக் கடைகள்மூலம் விற்பனை செய்கிறது.

கண்காணிப்புக் கேமராக்கள் நிறுவுதல்

5.14 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில் திருட்டு நடப்பதைத் தடுப்பதற்காகவும், அவற்றின் பாதுகாப்பை மேம்படுத்தவும் அதிகம் பாதிக்கப்படக்கூடிய 3,000 கடைகளில் இரவுப் பார்வை கொண்ட கண்காணிப்புக் கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன இந்த கண்காணிப்புக் கேமராக்கள் திருட்டுகளைக் குறைப்பதற்கு மட்டுமல்லாமல் கொள்ளை மற்றும் திருட்டில் ஈடுபடக்கூடிய தனி நபர்களைக் கண்டுபிடிக்கவும், மதுபானக் கடைகளின் அருகில் சந்தேகத்திற்குரிய நடவடிக்கைகள் ஏதேனும் நடந்தால் அவற்றை அடையாளம் காணவும் வழிவகை செய்கிறது. இந்த கண்காணிப்புக் கேமராக்களில் பதிவாகும் நிகழ்வுகள் சம்பந்தப்பட்ட மாவட்ட மேலாளர் அலுவலகம் மற்றும் தலைமை அலுவலகத்தோடு இணைக்கப்பட்டுள்ளன.

இந்திய உணவு மற்றும் தரப்படுத்துதல் ஆணைய உரிமம்

5.15 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் அனைத்து மதுபானக் கிடங்குகளும் மற்றும் மதுபான சில்லறை விற்பனைக் கடைகளும், 2006 ஆம் ஆண்டின் இந்திய உணவு மற்றும் தரப்படுத்துதல் சட்டம் மற்றும் அதன்கீழ் இயற்றப்பட்ட விதிகளின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்திய உணவு மற்றும் தரப்படுத்துதல் ஆணையம் வழங்கியுள்ள உரிமம் உரிய காலத்திற்குள் புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

2023 ஏப்ரல் 12]

பணப் பாதுகாப்புப் பெட்டகம் நிறுவுதல்

5.16 திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் அதிகமாக நடைபெறுவதற்கு வாய்ப்புள்ள நகர மற்றும் கிராம பஞ்சாயத்துப் பகுதிகளில் செயல்படும் 2,825 மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில், பணப் பாதுகாப்புப் பெட்டகங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்தப் பணப் பாதுகாப்புப் பெட்டகங்கள் ஒவ்வொன்றும் 300 கிலோவிற்கு மேல் எடை கொண்டவை மற்றும் பிற கருவிகளால் பழுது ஏற்படுத்த இயலாதவை ஆகும். பணப் பாதுகாப்புப் பெட்டகங்கள் மதுபானக் கடைகளின் தரையில் பதிக்கப்பட்டுள்ளதுடன், அவற்றின் பின்புறமும், மேல் பகுதியிலும், வலது மற்றும் இடது என இரண்டு பக்கங்களிலும் பாதுகாப்புச் சுவர் கட்டப்பட்டுள்ளது. கடை பணியாளர்கள் விற்பனை செய்த தொகையினை விற்பனை நேரம் முடிந்த பிறகு பாதுகாப்பாக வைத்துக்கொள்ள இந்த பணப் பாதுகாப்புப் பெட்டகம் உதவுகிறது.

மின்னணு விற்பனைக் கருவிகள் நிறுவுதல்

5.17 நுகர்வோர்கள் மின்னணு தொழில்நுட்பம் வாயிலாக விற்பனைத் தொகையைச் செலுத்துவதற்கு ஏதுவாக, அனைத்து மதுபான சில்லறை விற்பனைக் கடைகளிலும் மின்னணு விற்பனைக் கருவிகள் நிறுவப்பட்டுள்ளன.

மது விற்பனை இல்லாத நாட்கள்

5.18 தமிழ்நாட்டில் காந்தி ஜெயந்தி தினம், திருவள்ளுவர் தினம், மகாவீர் ஜெயந்தி தினம், நபிகள் நாயகம் பிறந்த நாள், வடலூர் இராமலிங்கர் நினைவு நாள், சுதந்திர தினம், குடியரசு தினம் மற்றும் மே தினம் ஆகிய எட்டு நாட்கள் மது விற்பனை இல்லாத நாட்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இவை தவிர, முக்கிய நிகழ்வுகளின் நாட்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற மற்றும் உள்ளாட்சித் தேர்தல் தொடர்புடைய நாட்கள் ஆகியவையும் மது விற்பனையில்லாத நாட்களாக அவ்வப்போது அறிவிக்கப்படுகின்றன.

அரசு வருவாய்

5.19 அரசின் வருவாய் பற்றிய விவரம் கீழே தரப்பட்டுள்ளது:-

வரிசை எண்	ஆண்டு	ஆயத்தீர்வை வருவாய்	மதிப்புக் கூட்டு வரி (விற்பனை வரி)	மொத்தம்
		(ரூபாய் கோடியில்)		
1	2003-04	1657.10	1982.83	3639.93
2	2004-05	2549.00	2323.03	4872.03
3	2005-06	3176.65	2854.12	6030.77
4	2006-07	3986.41	3487.20	7473.61
5	2007-08	4764.05	4057.11	8821.16
6	2008-09	5755.42	4846.08	10601.50
7	2009-10	6740.59	5757.63	12498.22
8	2010-11	8115.90	6849.52	14965.42
9	2011-12	9956.06	8125.10	18081.16
10	2012-13	12125.31	9555.36	21680.67
11	2013-14	5034.82	16640.07	21674.89
12	2014-15	5731.18	18433.77	24164.95
13	2015-16	5836.01	20009.57	25845.58
14	2016-17	6248.17	20747.08	26995.25
15	2017-18	6009.25	20788.71	26797.96
16	2018-19	6863.11	24294.72	31157.83
17	2019-20	7205.97	25927.27	33133.24
18	2020-21	7821.69	25989.46	33811.15
19	2021-22	8236.60	27814.05	36050.65
20	2022-23	10401.56	33697.00	44098.56

முடிவுரை

கள்ளச் சாராயம் காய்ச்சுதல், கள்ள மற்றும் போலி மது வகைகளின் விற்பனை மற்றும் கடத்தல், போதை

2023 ஏப்ரல் 12]

மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்களின் விற்பனை ஆகியவற்றைத் தடுப்பதற்கு அரசு உறுதியான மற்றும் கடுமையான நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளும். மாநிலத்தின் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைக் கொள்கையைத் திறம்பட செயல்படுத்துவதில் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவும் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. கள்ளச் சாராயம் காய்ச்சுதல் மற்றும் போலி மதுபான விற்பனையில் முன்னர் ஈடுபட்டிருந்த நபர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கான ஒருமுகப்பட்ட முயற்சிகளை அரசு மேற்கொண்டு வருகிறது. மது மற்றும் போதைப் பொருட்களுக்கு அடிமையான நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கும்பொருட்டு அரசு மருத்துவமனைகளில் போதை மீட்பு மையங்களையும் அரசு ஏற்படுத்தியுள்ளது. மது அருந்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த மாநிலம் தழுவிய விழிப்புணர்வு முகாம்களை அரசு நடத்தி வருகிறது. மதுபானம் மற்றும் போதைப் பொருட்களின் தீமைகளுக்கு எதிரான தீவிர விழிப்புணர்வுப் பிரச்சாரம் மற்றும் மதுவிலக்குக் குற்றவாளிகள் மற்றும் மதுப் பழக்கத்திற்கு அடிமையானவர்களுக்கான மறுவாழ்வு நடவடிக்கைகள் மேலும் வலுப்படுத்தப்படும்.

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Commissioner of Stationery and Printing, Chennai-600 002.